# ஹலோ Mr .எதிர்க்கட்சி

"தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கணம் தரும் பூங் குழலாள் அபிராமி கடைக்கண்களே"

அபிராமி அந்தாதியில் வரும் அறுபத்திஒன்பதாம் ஸ்லோகத்தை தொடர்ந்து "அவ்வோ தாப்பா, நானும் அக்கில் அண்ணாவும் நல்லாப் பாடினோமா?" என்ற மழலைக் குரல் சி.டி பிளேயர் வாயிலாக பறந்தோடி தன் செவியை எட்டிய போது, எல்லா நாட்களையும் போல பரவசத்தில் மிதந்தான் நல்லானந்த்!

உள்ளத்தின் பரவசம் உதட்டில் புக, மெல்லிய புன்னகை கோடாய் உதட்டை எட்டியது! அலுவலகம் செல்லும் வழியாவும் தன் செல்வக்குழந்தைகள் பாடிய ஸ்லோகத்தை மீண்டும் மீண்டும் ஓடவிட்டுக் கேட்டுக் கொண்டே, வான்கூவர் மாநகரில் இருக்கும் தன் வேலையிடத்தை அடைந்தான் அவன்.

பேசும் போது உச்சரிப்பில் சரிவர வராத வார்த்தைகள் / எழுத்துகள் சில அவர்கள் பாடிய போது அச்சர சுத்தமாய் வடிவம் பெற்றது வேறு அவனை ஆச்சிரியத்தில் ஆழ்த்தி, அவர்களது மழலை அழகை ரசிக்க வைத்தது.  அப்போதும் கடைசியில் வந்த கடைக்கண்களே என்ற உச்சரிப்பை கதைக்கண்களே என மலர் பாடியது மூளையை எட்டி, என் சுட்டி சீக்கிரமே சரி செய்துவிடுவாள் எனவும் எண்ணவைத்தது.

மனதில் தோன்றிய ரசனை மக்களுடன் பேசும் ஆவல் தூண்டிவிடவே, வண்டியை அலுவலக வளாகத்தில் நிறுத்திய மறுநிமிடம் இந்தியாவிற்கு அழைப்பு விடுத்தான்!

முதல் மணியிலேயே அழைப்பு எடுக்கப்பட்டுவிட, "நல்லாப்பா! அக்கில் அண்ணா, நல்லாப்பா பேசுறாங்க! வா வா" என்ற ஆரவாரக் கூச்சல் அவனது காதைப் பிளந்தது.

"மலர் குட்டி, என்னடா செல்லம் பண்றீங்க?" என அவன் விசாரிக்க,

"உங்ககித்த பேசுறேன்... அச்சோ இது கூத தெரியாதா" என கிளிக்கிச் சிரித்தாள் அவனது தங்கமகள், மதிமலர்.

Property of Bhuvana

"அப்படியா? அப்பா பேசுறதுக்கு முன்னாடி என்ன பண்ணிட்டு இருந்தீங்க?" என அவனது கேள்விக்கு மலர் போன்ற அவனது மகள் பதிலளிக்கும் முன்னர் கைப்பேசி அவளிடமிருந்து பறிக்கப்பட்டு, "நல்லாப்பா!" என தான் அங்கிருப்பதை அகிலன் பறைசாற்றினான்.

"அகில் சார், என்ன சார் பண்றீங்க?" - இதே கேள்வியை மகளிடம் கேட்டு ஒரு அழகான பதிலைப் பெற்றிருந்தாலும் மீண்டும் அதை மகனிடம் கேட்க நல்லானந்த் தயங்கவில்லை.

மகளைப் போல் அவனிடம் வம்பு பேசாமல், "நா இப்போ தா சாப்பிட்டேன். நீங்க சாப்பிட்டாச்சா?" என தான் மலருக்கு "அண்ணன்" என்ற பெருமையைத் தக்கவைத்துக் கொண்டான்.

"ஹோ, எஸ்! fruits பத்தி நீ செஞ்சு எடுத்துட்டு போன சார்ட்டை உங்க மேம்கிட்ட காட்டினியா?" என்று அவனது பள்ளியில் நடக்கும் நிகழ்ச்சிக்கு அவனை இட்டுச் சென்று, அவனது ஆசிரியர் கூறிய பாராட்டுகளையும், உடன் பயில்வோர் செய்திருந்தவற்றையும் பற்றி அவனைப் பேச வைத்தான்.

இதை சொல்லி முடிக்கும் முன்னர், "இரு மலர்..." "ஹே பேசிட்டுத் தரேன், இழுக்காத", "இருன்னு சொல்றேன்ல, அடிச்சிருவேன்" என பலமுறை அகிலன் கத்தியபோது, அந்தப் பக்கம் தன்னிடம் பேசுவதற்காக மதிமலர் துடித்துக் கொண்டிருக்கிறாள் எனப் புரிந்தது.

"இருங்க நல்லாப்பா, இந்த குட்டி ரங்கா படுத்தி எடுக்கிறா அவ கிட்ட தரேன்" என்ற அகில், "வா ரங்காவே, வந்து பேசித் தொலை" என வெத்திலை பாக்கு வைத்துத் தன் தங்கையை அழைத்தான்.

"நா ரங்காவா?...அப்போ நீ தா பெத்த பெத்த ரங்கா" என அவனிடம் சண்டையிட்டவாறே, தொலைப்பேசிக் கருவியைத் தன் கைக்கு இடமாற்றிய மலர்

"அப்பாபாபாபா, கேர்ள் ரங்கா எல்லாம் இல்ல தானே... ரங்கால பாய் தானே இருக்கு" என அவனிடம் வேறு கேள்வி கேட்டு இக்கட்டில் மாட்டி வைத்தாள்.

"என்னோட மலர் குட்டி என்ன மம்மம் சாப்பிட்டீங்க?" என நல்லானந்த் பேச்சை மாற்ற முயல, அதற்குப் பயன் தான் இல்லாமல் போய் "நீங்க சொல்லுங்க... கேர்ள் ரங்கா கிடையாது தானே?" என அதிலேயே நின்றாள் பெண்.

அவளிடம் பெண் குரங்கு இல்லையென்றால் எப்படி குட்டிம்மா குட்டிக் குரங்கு வரும் என்றா சொல்ல முடியும்? சொன்னால் அத்தோடு விடுபவளும் இல்லையே அவனது பெண்! அதற்கு மேல் பல்லாயிரம் கேள்விக்கனைகள் காற்றைவிட வேகமாய் அவனைத் தாக்கிவிடாது?

"சொல்றேன், சொல்றேன். முதல தாத்தாக்கு மாத்திரை கொடுத்தீங்களா இல்லையா?" எனக் கேட்டு, அவள் "ஹய்யோ... மறந்து போய்த்தேன்... தாத்தா மாத்திரை சாப்பித வாங்க... அதம் பண்ணாம வாங்க..." எனக் குரல் கொடுத்தவாறே தன் தந்தையின் தந்தையை நாடிச் சென்றாள் சிறுமி.

மகளின் கேள்வி அம்புகளிலிருந்து தப்பிவிட்ட நிம்மதி வந்தாலும், தொலைப்பேசியையும் அதில் பேசிக்கொண்டிருந்த தன்னையும் அம்போ என விட்டுச் சென்ற மகளிடம் பேச்சுத் தடைபட்டதில் லேசாக ஒரு வருத்தமும் வந்தது. அவன் கூப்பிட்ட "மலர், டேய் அப்பாகிட்ட பேசி முடிச்ச அப்புறம் கொடுக்கலாம்டா" என்ற சமாதானத்தை கேட்க அவனது மகள் அங்கிருக்கவில்லை.

மகளிடம் பேச நல்லானந்த் காத்துக் கொண்டிருக்கும் போது, மகளுக்குப் பதிலாக அவனது தாய் ஃபோனை எடுத்தார். "நல்லா எப்படிடா இருக்கே?" என தினம் கேட்கும் அதே கேள்வியை சலிக்காமல் கேட்டு, "நல்லாவையே நல்லா இருக்கியா என்று கேட்கும் வளர் மேடம் சுகமா?" என அவனது வழக்கமான கேள்வி பதிலையும் பெற்று கொண்டபின்னரே மற்ற விஷயங்களுக்குத் தாவினார்.

"அப்பாவை நாளைக்கு மாதாந்தர செக்அப் கூட்டிட்டுப் போகணும். நியாபகம் இருக்கா? நீங்க கூட போகாதீங்க, திலோவோ இல்லை தேவ்வோ போகட்டும்" என்றவன், அவரது "ஏன் நான் போனா என்னவாம்?" என்ற கேள்விக்கு, "வளர் மேடம் பேருக்கு ஏற்ற மாதிரி வளர்ந்திருந்தா பரவாயில்லை. அப்படியில்லை எனும் போது, நாம தானே ஜாக்கிரதையா இருக்கணும்" எனப் பதிலுரைத்து, "உங்க ரெண்டு பேருக்கும் ரொம்ப கொழுப்புடா .

Property of Buvana

அம்மாகிட்ட பேசுற மாதிரியா பேசுறீங்க? திலோ வரட்டும். அவகிட்ட தான் கொஞ்சம் அடக்கி வாசிப்பீங்க" என அவரது அர்ச்சனையை வாங்கிக் கொண்டதும்தான் அன்றைய தினம் பிரகாசமாக விடிந்தது, நல்லானந்திற்கு!

"தூங்கப் போகும் போது எதுக்கு இந்த கொலைவெறி? என்னைப் பார்த்த பாவமா இல்லை! உங்கச் செல்லப் பையன் தானே நான்! திலோகிட்ட சொல்லாதீங்க வளர் ப்ளீஸ்" என வேண்டுமென்றே கெஞ்சி, தாயை "போடா போடா, கண்டிப்பா சொல்லுவேன். என்னை வளரலைன்னு சொன்னே இல்ல. அதனாலேயே சொல்லுவேன்" என அவனது பெண்ணிற்கும் மேலாக பிடிவாதம் பிடித்தார் தாயார்.

"வளராதவங்களை வளரலைன்னு சொல்லாம வளர்ந்துட்டங்கன்னு சொன்னா சாமி குத்தம் ஆகிடும் வளர். உங்க ச்சிச்சின்ன பையன் கண்ணை சாமி குத்திடுச்சுன்னா என்ன வளர் செய்றது?" என தன் மேல் உள்ள பரிதாபத்தை வளர்த்துக் கொள்ளும் எண்ணத்தில் மகன் பேச, அதில் (செல்லக்) கோபம் குறையாமல் எகிரவே செய்தது தாயிற்கு!

"இதோ வருது சாமி!" என்ற அபாய மணியுடன் தொலைப்பேசி மீண்டும் கை மாறியது.

"ஹய்யோ" என பயந்தவன் போல் நல்லானந்த் நடிக்க,

"ரொம்ப நடிக்காதே மேன்" என்ற அதட்டலுடன் தொடங்கியது, அன்றைய தினத்தின் அரங்கேற்றம்.

ஆனால் அரங்கேற்றம் முழுதாய் முடிவதற்கு முன்னாலேயே "ம்மா, நா நல்லாப்பாகித்த பேசணும்.... தா" எனத் தொலைப்பேசியை தனக்கு இடம் மாற்றிக் கொண்டாள் மலர்.
"நல்லாப்பா, தாத்தாக்கு மருந்து கொடுத்தாச்சுது. ஒழுங்கா சாப்பித்தாங்க" - சற்று முன் தந்தை சொன்ன வேலையை செய்துமுடித்த திருப்தியுடன் குதூகலித்தாள் மகள்.

"குட் ஜாப்-டா குட்டி" என அவளைத் தட்டிக் கொடுத்தவனை அவனது அலைப்பேசியில் வந்த மற்றொரு அழைப்பு ஈர்த்தது.

"மலர், ஒரு நிமிஷம் லைன்லேயே இரு. அப்பா வரேன்" என மகளிடம் கூறியவன், "ஓகே, நல்லாப்பா" என்ற அவளது பதிலைப் பெறும் வரை அடுத்த அழைப்பிற்குச் செல்லவில்லை.

அடுத்த அழைப்பிற்குச் சென்றாலோ, அங்கே காத்திருந்த அவனது மேலதிகாரி "நல்லா, நான் கிளைன்ட் கூட மானேஜ்மென்ட் கால்-ல இருக்கேன். ப்ராஜெக்ட் பத்தி கொஞ்சம் விரிவான விவரங்கள் தேவைப்படுது. உன்னால அந்த மீட்டிங்கிற்கு வர முடியுமா? டெலி-கான் நம்பர் உன்னோட ஈமெயில்க்கு அனுப்பி இருக்கேன்" என்றார்.

"கண்டிப்பா ராம்கி. இன்னும் அஞ்சு நிமிஷத்தில் கால்-ல இருப்பேன்" என்றவன் அந்த அழைப்பைத் துண்டித்துவிட்டு, மகளிடம் வந்தான்.

"மலர் குட்டி, அப்பாக்கு ஒரு முக்கியமான வேலை வந்துடுச்சு. நாம நாளைக்குப் பேசுவோமா? மலர் குட்டி, இப்போ போய் சமத்தா படுத்துக்கோங்க என்னடா?" என்றான் தயவாக.

"ம்ஹூம்ம்" என அழுத்தமாக மறுத்தவள், "போ கூதாது. பேசுங்க" என்றாள் பிடிவாதமாக.

"என்னோட செல்லக் குட்டி தானே மலர்! அப்பா சொல்றதை கேட்கணும் குட்டிம்மா" என அவன் மீண்டும் தழைய, மகளோ மிஞ்சினாள்.

கெஞ்சலும், மிஞ்சலும் மாறி மாறி நடந்து கொண்டே இருக்க, நல்லா-வின் மேலதிகாரி மீண்டும் அழைத்துவிட்டார்.

அவரது அழைப்பைக் கண்டதும் வேலையின் முக்கியத்துவம் புரிந்து, மகளின் அடத்தைப் பின்னுக்குத் தள்ளி அழைப்பைத் துண்டித்துவிட்டு அலுவலகத்திற்குள் ஓடினான்.

அலுவலகம் சென்று, மேலதிகாரியின் உத்தரவு படி அவர் அளித்த வேலையை முடித்தப் போது மணி பத்தரையை நெருங்கியிருந்தது. இந்தியாவில் நள்ளிரவிற்கு ஒரு மணி நேரமே இருந்த நிலையில், வீட்டிற்கு அழைப்பது தப்பாகப்பட்டது. ஆனால் முந்தைய அழைப்பின் முடிவில் மகளின் அழுத குரல் மனதைக் கசக்க, தயக்கத்தைப் பாசம் வென்றது.

ஆனால் அவன் விடுத்த அழைப்போ மனதிற்கு நிம்மதியை அளிக்காமல் பெரும் திட்டை வாங்கிப் பரிசளித்தது தான் பரிதாபம்!!

அழைப்பை எடுத்த அவனது தந்தை பெத்தபெருமாள், "என்ன நல்லா இது? உனக்கு வேலை வரும்ன்னு தெரியும் போது எதுக்கு வீட்டிற்குக் கூப்பிடுற? அதையும் மீறி கூப்பிட்டாலும் நடுல ஏன்டா பட்டுன்னு வைக்கிற? சின்னக் குழந்தைங்க நல்லா! மனசு கஷ்டப்படும் இல்லையா?" என்றார் அவனுக்குத் தந்தையாக.

"சாரிப்பா, வேணும்னே செய்யலப்பா" என்றவனை முழுதாய் குற்றம் சொல்ல முடியாமல்,

"நீ வேணும்னே செய்யலைடா. எனக்குத் தெரியும். தேவ்க்கும், திலோக்கும் கூட! சொல்லப்போனா உங்க அம்மாக்குக் கூட அப்பப்ப புரிஞ்சுக்க முடியும். ஆனா குழந்தைங்க நம்ம அளவு முதிர்ந்தவங்க இல்லையே கண்ணா? நாம தான் அவங்க மனசை புரிஞ்சு நடந்துக்கணும். ஒரு சின்ன நிராகரிப்பு கூட அவங்களை அழவச்சுடும் நல்லா" என்று நிலைமையைப் பொறுமையாக எடுத்துக் கூற முயன்றார்.

"புரியுதுப்பா, மலர் ரொம்ப அழுதாளா? அகிலுமா?" என மகன் மக்களைப் பற்றி வினவ,

"ஹ்ம்ம், ஒரே ஆர்ப்பாட்டம்! இப்போ தான் திலோ அவளைச் சமாதானப்படுத்தி படுக்க வச்சிருக்கா" என்றார் அவர் பதிலாய்.

"ஹோ, தூங்கிட்டாளா?" என்ற மகனின் குரலில் சுரம் குறைஞ்சிருக்க, "குழந்தைடா அவ, நாளைக்குக் காலையில சரி ஆகிடுவா" என அவனைத் தேற்றினார், பெரியவர்.

"ஹ்ம்ம், ஆமா... சரியாகிடுவா! அகில் என்ன பண்றான்? அவனும் அழுதானா? தூங்கிட்டானா?" என மகனைப் பற்றி விசாரித்து,

"அகில் அழலைடா! அழாதது மட்டுமில்லாம பெரிய மனுஷன் மாதிரி மலரை சமாதானப்படுத்தினான் தெரியுமா?" என்றார் பெருமாள் பெருமையாக.

அவர் கூறிய வார்த்தைகளை உள்வாங்கிய நல்லானந்த், அந்த இடத்தில் மகன் பேசிய பேச்சுக்களை கேட்க தான் இல்லையே என்ற ஏக்கத்தை "ஹோ, சமத்து பையன்! உங்க எல்லாரையும் நான் ரொம்ப மிஸ் பண்றேன்ப்பா" என்ற வாக்கியத்தில் வெளியிட்டான்.

"ஹ்ம்ம், நாங்களும் தான்! இந்தியா வரதைப் பத்தி உங்க ஆபீஸ்ல பேசினியா? என்ன சொன்னாங்க?" என மகனின் வருகையைப் பற்றி அறிந்து கொள்ள முயன்றார் தந்தை.

ஆனால், அவனோ "ஒன்னும் சொல்லல மாட்டேன்றாங்கப்பா, பார்க்கலாம்!" என்றான் எப்போதும் போல்!

தாயைப் போல் "என்னடா, எப்போ தான் வருவ? எப்போ கேட்டாலும் இதையே சொல்றீயே? இங்க வர ஐடியா இருக்கா இல்லையா?" என அவன் கையில் இல்லாத விஷயத்திற்கு அவனைக் கேள்வி கேட்டுத் துளைக்காமல் "ஹ்ம்ம் சரி, சீக்கிரம் வரப்பாரு" என்றார் தந்தையாக.

"ஓகேப்பா, நீங்க போய் படுங்க.ரொம்ப லேட் ஆகிடுச்சு! நாளைக்கு செக்அப் போறீங்க தானே?" என அவரது உடல் நிலையை விசாரித்துக் கொண்டு, அழைப்பை வைத்தான்.

மகள் அழுதாள் என்பது மிதமான வருத்தத்தை உண்டாக்கினாலும், கோபமோ அழுகையோ அவளிடம் நிலைத்திருக்காது என்பது புரிந்ததால் வருத்தத்தை ஒதுக்கி வேலையை முன்னிறுத்தினான் நல்லானந்த்!

ஒரு கப் கருப்பு காப்பியை கலந்து எடுத்துக் கொண்டு தனக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தவன், தனது மின்னஞ்சல் பெட்டியைத் திறந்து இந்தியாவில் இருக்கும் குழுவிடமிருந்து வந்திருந்த மின்னஞ்சல்களை கண்ணுற்றான்.

ஒவ்வொன்றாய் பார்த்துக் கொண்டே வந்தவன், உடனடியாக பதில் அளிக்கப்படவேண்டிய மின்னஞ்சல்களை சிகப்பு வண்ணத்தில் குறித்து வைத்தான். சற்று தாமதப்படலாம் எனக் கணித்த சிலவற்றை மஞ்சளிலும், மானேஜ்மென்ட் தொடர்பான அஞ்சல்களை பச்சையிலும் குறித்து வைத்துக் கொண்டிருக்கும் போது, இந்தியாவிலிருக்கும் அவனது இணைஅதிகாரி அவர்களது ப்ராஜெக்ட்டில் புதிதாய் சேரும் ஒருவருக்கு "NDA Form" வாங்கி அனுப்பும்படி கூறியிருந்த மின்னஞ்சல் கண்ணில்பட்டது.

NDA form தொடர்பாக வரும் எந்த ஒரு மின்னஞ்சலும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்திருந்தமையால், வாடிக்கையாளர் நிறுவனத்திலிருக்கும் மனிதவள அதிகாரிக்கு அது குறித்து மின்னஞ்சல் அனுப்ப விழைந்தான் அவன்.

ப்ராஜெக்ட்டில் புதிதாய் சேரும் நபரின் முழு பெயரை அறியும் பொருட்டு முந்தைய மின்னஞ்சலை திறந்தவனை, "அன்பரசி ஈசக்கியப்பன்" என்ற பெயர் ஈர்த்தது!

Property of Ebhuvana

"அன்பரசி ஈசக்கியப்பன்" என்ற பெயர் நல்லானந்தின் மனதில் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது நிஜம்!

மனதில் எழுந்த குறுகுறுப்பின் தூண்டுதலால் "அன்பரசி" என்பவரின் பணியாளர் எண்ணை வேகமாய் ஆராய்ந்தவன், லட்சத்திப்பத்தில் தொடங்கிய எண்ணைக் கண்டதுமே இரண்டு அல்லது மூன்று மாதங்கள் முன்னர் தான் அந்தப் பெண் வேலையில் சேர்ந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தான்.

இரண்டு அல்லது மூன்று மாதங்கள் முன்பென்றால் கண்டிப்பாக கல்லூரி முடிந்த கையோடு வேலையில் சேர்ந்திருப்பாள் போலவே என அவனது எண்ண ஓட்டத்தின் வேகத்தை, இரண்டு மாதம் முன்பு சேர்ந்தால் புதிய முகமாக மட்டும் தான் இருக்க முடியுமா என்ன? வேறொரு நிறுவனத்திலிருந்து மாற்றம் தேடிக்கூட இந்த வேலைக்கு வந்திருக்கலாமே? இரண்டு மாதங்கள் சரியான ப்ராஜெக்ட் கிடைக்காமல் போய் இப்போது அவர்களது ப்ராஜெக்ட்க்கு நியமிக்கப் பட்டிருக்கலாமே? என்ற யோசனை சற்றே குறைத்தது.

அவனது ஆராய்ச்சியை முடிவிற்கு எடுத்துச் செல்லவிடாமல், இந்தியாவிலிருந்து வந்த மென்பொருள் தொகுப்புகளில் ஏதோ பெரிய பிரச்சனை என்ற செய்தியைத் தாங்கிய மின்னஞ்சல் பறந்தோடி வந்து அவனைத் தாக்கித் தடுக்கிட்டு, அதற்குள் தலையை நுழைக்க வைத்தது.

அடுத்த ஒரு மணி நேரத்தில், பிரச்சனை என்று அவர்கள் குறிப்பிட்டது பிரச்சனையே இல்லை என்பதைக் கண்டுபிடித்து, அதை அவர்கள் உபயோகிக்கும் விதம் தவறு என்பதை மிகுந்த பொறுமையுடன் அவர்களுக்குப் புரியவைத்துவிட்டு எழுந்தபோது தனக்கு இத்தனை பொறுமையா என்று அவனுக்கே வியப்பாக இருந்தது.

ஆனால் அவன் வாழ்க்கைக்குள் மலர் குறிஞ்சி
மலராய் மலர்ந்ததிளிருந்தே பொறுமை தான்! நிதானம் தான்! சொல்லப் போனால் திலோ அவனது வாழ்க்கையில் வந்ததிலிருந்தே என எண்ணியவன், அந்த சந்தோஷ நிகழ்வுகளில் மூழ்கினால் வேலையில் முத்தெடுக்க முடியாது, மொத்து தான் வாங்க நேரும் என்ற அபாய மணி சரியான நேரத்தில் மூளைக்குள் அடிக்கவே, அன்றைய வேலைகளை வேகமாக பட்டியலிட துவங்கினான்.

Property of Bhuva

எப்போதும் போல் வேலைகளின் பட்டியல் இருக்கும் நேரத்தை விட நீண்டு கொண்டே சென்ற போதிலும், தன்னால் இயன்றவற்றை முடிக்கலாம் என்ற எண்ணத்துடன் செயல்பட்ட நல்லா, மாலை ஐந்து மணியளவில் முக்கால்வாசி வேலைகளை செவ்வனே முடித்திருந்தான்.

நிறைவேற்றி முடித்த கடமையின் களிப்பில் நெட்டி முரித்தவனின் கண்களில், வாடிக்கையாளர் அலுவலகத்தில் வேலை செய்யும் பலர் கிளம்பிப் போயிருந்தது கண்ணில் பட்டு அவனையும் சீக்கிரமே வீட்டிற்கு மூட்டைக் கட்ட வைத்தது.

இந்தியாவிற்கு அனுப்பவேண்டிய மின்னஞ்சல்களை அனுப்பிய கையோடு, தன் லாப்டாப்பை எடுத்துக் கொண்டு அலுவலக வளாகத்தை விட்டிறங்கி கார் நிறுத்தும் இடத்திற்கு நடக்கும் வழியில், வீட்டிற்கு அழைப்பு பறந்தது. அன்று காலை அவன் அழைத்தபோது ஒரே மணியில் எடுத்த மகளும், மற்ற அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றனர் என்பது ஐந்தாறு மணிகள் சென்றபின்னர் கூட எடுக்க ஆள் இன்றி ஓயாமல் அடித்த தொலைப்பேசியின் மூலம் தெரிந்தது!

சற்று நேரம் கழித்து அழைப்போம் என அழைப்பைத் துண்டிக்கப் போன நல்லாவை, "ஹே என்னடா இந்த நேரத்தில" என்ற குரல் தடுத்தது.

"குட் மார்னிங்டா தேவ்! இன்னும் படுக்கையை விட்டு எழுந்துக்கலையா சார்?" என்ற விசாரிப்பில்

"அது தான் எழுப்பி விட்டுட்டியே! குட் மார்னிங்!" என்றான் தேவ் என்ற தேவநந்தன்!

தொடர்ந்து, "உனக்கு வரவர நேரங்காலமே தெரிய மாட்டேன்கிறது நல்லா, அசந்து தூங்கிட்டு இருக்கும் போது ஏன்டா உயிரை வாங்குற?" என தன் தூக்கம் கேட்டதில் தேவ் எரிந்துவிழ,

"ஆறு மணிக்கு என்ன அசந்து தூக்கம்? நான் கனடா வந்ததிலிருந்து ஜாக்கிங், பாஸ்கட் பால் ப்ராக்டிஸ் எல்லாம் விட்டாச்சா?" என நல்லா அவனுக்கு மேல் கடிந்து கொள்ள, "அப்படின்னு யாரு சொன்னா? திலோவா? அவளுக்கு வேற வேலையில்லை. என்னைப் பத்தி உன்கிட்ட கோள் மூட்றதே வேலையா திரியுறா!" என்றவன், நல்லா மேலும் பேசுவதற்கு முன்னர்

""திலோ ஒன்னும் சொல்லலை, நானா தான் சொந்ததத மூளையை உபயோகப் படுத்தினேன்"ன்னு தயவு செஞ்சு என்னை ரம்பம் போடாதே!" என்ற எச்சரிக்கையையும் முன்னே வைத்தான்.

"இப்போ திலோ சொன்ன சொல்லலை-அது பேச்சில்லை. நீ வொர்க் அவுட்க்கு போறதில்லை என்பது தான் பேச்சு" என பேசிக்கொண்டிருந்த விஷயத்தை சிரிப்புடன் எடுத்துக் கொடுத்தப்போதிலும் நல்லாவின் குரலில் அக்கறையே பிரதானமாய் இருந்தது.

"ஜாக் பண்றேன்டா நல்லா! என்ன கொஞ்சம் நேரம் கழிச்சுப் போறேன். நீ இருக்கும் போது போறதை விட சில பல மணித் துளிகள் தாமதம். அவ்வளவு தான்... இதுக்குப் போய் ஆளாளுக்கு என்னை வாட்டி எடுக்கிறீங்க!" என தேவ் சலித்துக் கொள்ள,

"மிஸ்டர். தேவநந்தன்,அந்த சில பல மணித் துளிகள் என்பதற்கு ஒரு சின்ன உதாரணம் ப்ளீஸ்!" என நல்லா சரியான கேள்வியை தப்பான நேரத்தில் உதிர்க்க,

"ஆயிரம், ரெண்டாயிரம் எல்லமில்ல! நூறே நிமிஷங்கள் தான் நல்லா!!" என தேவ் ஆனந்தமாய் சிரிக்க,

"தேவ், ஹெல்த் விஷயத்தில் நோ ஜோக்ஸ்!" என்றான் மற்றவன் கறாராக!

"ஓகே, ஓகே!! இனிமேல் நேரத்திற்கு உடற்பயிற்சி, நேரத்திற்கு வேலை, நேரத்திற்கு சாப்பாடு, நேரத்திற்கு தூக்கம்! சரியா?" - தேவின் அடிபணிதலில் இளகினான், இளையவன்.

அவன் இளகிவிட்டது லேசாய் வெளிப்பட்ட சிரிப்பில் தெரிய, "செய்யாமலே இருக்கிறதுக்கு நேரம் கழிச்சு அட்லீஸ்ட் செய்றேன் தானே! அதைப் பாராட்டாம என்னடா நீ?" என மேலும் தான் செய்ததை தப்பென்று ஒத்துக்கொள்ளாமல் வாதாடினான் மறு முனையில் இருந்தவன்.

"உனக்கில்லாத பாராட்டா?! இதோ பாராட்ட ஆரம்பிக்கிறேன் நல்லா கேட்டுக்கோ! ஸ்டார்ட் மியூசிக்" என தொண்டையைக் கனைத்துக் கொண்டு நல்லா ஆயத்தமாக,

"அப்பா சாமி, உன் அகராதியிலும் திலோ அகராதியிலும் பாராட்டு எப்படி இருக்கும்ன்னு தெரிஞ்சிருந்தும் அதை உன்கிட்ட கேட்டது என்னோட தப்பு தான். தெரியாம கேட்டுட்டேன். மன்னிச்சிக்கோ! உன் பாராட்டுக்கு ஜாக்கிங் தேவலை" என்றவன், நல்லா "அது... அந்த பயம் இருக்கட்டும்" என அட்டகாசமாய் சிரிக்கவும், "வளராத வளர் வந்தாச்சு. அவங்ககிட்ட கொடுக்கிறேன்" என அங்கே வந்த தாயின் கையில் தொலைப்பேசியைக் கொடுத்தான்.

ஆனால் கொடுத்த வேகத்தில், அவர் கையிலிருந்து கருவியை உருவியவன் "வளர், அதிகாலை வேலையில் உங்களுக்கு ஒரு பெரிய உதவி பண்ணலாம்ன்னு இருக்கேன். வெயிட்டீஸ் ப்ளீஸ்" என தாயிடம் உரைத்துவிட்டு,

"நல்லா, எப்படிடா இருக்கே!" என்ற கேள்வியை அவரது குரலிலேயே தம்பியிடம் கேட்ட தேவானந்தன், அதற்கு ஒரு விளக்கமும் கூறினான்.

"நேற்று இரவு தான் உனது நலத்தைப் பற்றி விசாரித்திருந்தாலும், நம் தாய்க்கு தொலைப்பேசிக் கருவியை எடுத்ததும்... மீண்டும் அதே கேள்வி தான் வரும் என்பதால் என்னாலான சிறு உதவியை அவருக்காக செய்தேன் என் சகோதரனே! உனக்கு இதிலேதும் வருத்தமில்லையே" எனத் தூய தமிழில் விளக்கம் கொடுத்து, கேட்டு, தொலைவிலிருந்த நல்லாவிடமிருந்து "மிக்க நன்றி தேவ்!" என்ற பாராட்டையும், அருகிலிருந்த தாயிடமிருந்து "கொழுப்புடா உங்க ரெண்டு பேருக்கும்" என்ற திட்டையும் பெற்று கொண்ட பின்னரும், தாயை இறுக அணைத்து கன்னத்தில் ஒரு முத்தம் வைத்துவிட்டே வெளியே ஓடினான்.

முத்தத்தின் சத்தம் துல்லியமாக காதில் விழ, அதை ரசித்தப்படியே நல்லா காத்திருந்தபோது "நல்லா, எப்படிடா இருக்கே?" என்ற கேள்வியையே தாயார் கேட்க, அங்கே மீண்டும் ஒரு காலாய்க்கும் படலம் இனிதே நடந்தேறியது!

தாயின் காலை நேரத்தை வம்பிளுப்போடு ஆரம்பித்து வைத்த நல்லானந்த், அவர் திலோவிடம் தொலைப்பேசியை கொடுக்கவா எனக் கேட்டப் போது, பள்ளி கிளம்பும் நேரத்தில் பேசினால் அவளுக்குக் கோபமும் வரும். அதே நேரம் பள்ளிக்கு நேரமாகிவிடும். அதனால் மாலையில் அழைக்கிறேன் எனக் கூறி அழைப்பைத் துண்டித்த நல்லானந்த், சந்தோஷமான மனநிலையுடன் வீடு நோக்கிப் பயணப்பட்டான்.

Property of Bhuvana

அவனது வீடிருக்கும் குடியிருப்பில் வண்டியை நிறுத்தியபின்னர் தனது லாப்டாப்பை வீட்டில் வைத்துவிட்டு, ஜிம் சென்றவன் அங்கே ஒரு மணி நேரத்தைக் கழித்துக் களைத்தப் பின்னரே வீடு திரும்பி ஒரு குளியல் போட்டான்.

குளியல், சமையல் என நேரம் விரைய, தட்டில் சாம்பார் பிசைந்த சாதம், கூடவே காரட் பேரியல் சகிதம் தொலைக்காட்சியின் முன் அமர்ந்தவனை அலுவலகத்திலிருந்து வந்த அழைப்பு ஆச்சிரியம் கூடவே எரிச்சல் என சமபங்கை அனுபவிக்க வைத்தது!

"ஆஹா, நம்ம பசங்க எட்டு மணிக்கெல்லாம் ஆபீஸ் வராங்களா? திருந்திட்டாங்க போலவே" என்பது தான் ஆச்சிரியத்தின் காரணம் என்றால் எரிச்சலின் மூலதனம் "ஒரு வேளை சாப்பாடைக் கூட நிம்மதியா சாப்பிட விட மாட்டீங்களாடா" என்ற எண்ணம் தான்!

அடுத்த வந்த "ஹலோ"வில் அவனது ஆச்சிரியம் வெளிப்படையாய் தெரிந்ததோ இல்லையோ எரிச்சல் சட்டென வெளிப்பட்டது!

"நல்லா, சுடர் பேசுறேன்" என்றான் இந்தியாவிலிருக்கும் குழுவில் முக்கிய பங்கு வகிக்கும் சுடர்வணன்

"சொல்லு சுடர், சென்னைல பயங்கர மழையாடா?" என நல்லா விசாரிக்கவும்,

"கடுப்பைக் கிளப்பாதீங்க! ஏழு மணிக்கெல்லாம் வெயில் மண்டையை பிளக்கிறது. இடி, மின்னல், மழைன்னு வெறுப்பேத்தாதீங்க!" என சுடர் பல்லைக் கடிக்க,
"'கோல்ட்லைன்'-ல போய் ஒரு பொங்கல் சாப்பிடு கண்ணா! சரியாகிடும்" என நல்லானந்த், அவர்களது நிறுவனத்தின் food court-இல் பல தரப்பட்ட விமர்சனங்களுக்கு ஆளாகி இருந்த கேட்டரிங் நிறுவனம் ஒன்றை குறிப்பிடவும், சுடர் கடுப்பின் உச்சிக்கே சென்றான்!

"வேணாம் நல்லா, அழுதுடுவேன்!" என அவன் கடுப்பைக் கைவிடவும், "சரி, சரி! பொங்கல் வேண்டாம் என்றால் கிச்சடி! இதுக்கு எதுக்குடா இந்த இழுவை இழுக்கிற?" என மேலும் அவனை வம்பு செய்துவிட்டு,

" என்ன விடி காலையில ஆபீஸ் வந்திருக்கீங்க? என்ன விஷயம்?" எனத் தன் ஆச்சிரியத்தை வெளியிட்டான்.

"அந்தக் கொடுமையை ஏன் கேட்கிறீங்க!" என சுடர் மீண்டும் இழுக்க,

"உன்னைக் கேட்கக் கூடாதா? விஜயைக் கேட்கவா?" என அவர்களது மேலாளர் விஜய் அரவாமுதனை ஆட்டத்திற்கு இழுத்தான் நல்லானந்த்!

"ஹய்யோ, என்னைப் பேச விடுங்க நல்லா" என்ற வாக்கியத்தில் அவனது பொறுமை போவதை உணர்ந்த நல்லா,

"நீ முதல என்னை சாப்பிட விடு" என்றான் சிரிப்புடன்!

"ஹோ, டின்னரா? ஓகே! ஓகே! பத்து நிமிஷம் கழிச்சு கால் பண்ணவா?" என்ற சுடரின் கேள்விக்கு, "நீயும் பிரேக்ஃபாஸ்ட் சாப்பிடலை தானே. சாப்பிட்டு வந்து, ஒரு முப்பது நிமிஷத்தில் கூப்பிடு" எனக் கூறித் தன் உணவை நிம்மதியாக உண்ணத் தொடங்கினான்.

அடுத்த முப்பது நிமிடத்தில் சுடரின் அழைப்பு நல்லாவின் அலைப்பேசியில் கிணுகிணுத்தப்போது நல்லா தன் இரவு உணவை முடித்து, கையில் பழத் தட்டுடன் அமர்ந்திருந்தான்.

எடுத்ததும் நடக்கும் கால் வாரல்களும் சகஜ பேச்சு வார்த்தைகளும் இனிதே நடந்தேற, அதன் முடிவில் "நல்லா, நம்ம ப்ராஜெக்ட்-ல புதுசா நாலு பிரெஷ்ஷர்ஸ் சேர்ந்திருக்காங்க. நேத்திக்கு NDA form கூட அனுப்பினோமே? அவங்க எல்லாருக்கும் business KT கொடுக்கச் சொல்லி விஜய் சொன்னார். நீங்க ஒரு brief overview தர முடியுமா? அதுக்கு அப்புறம் நான் பார்த்துக்கிறேன்" என சுடர் விஷயத்திற்கு வந்து சேர்ந்தான்!

காலையில் தான் செய்த ஆராய்ச்சி நூறு சதவீதமாய் வெற்றி கண்டதில் மிதந்த நல்லா, "ஹோ, நாலு பேரா? நாலு பேருமே பிரெஷ்ஷர்ஸா?" என்றான் வாய் விட்டு!
"ஆமா நல்லா! ஆனா சூப்பர் CGPA தெரியுமா? அதிலையும் ஒரு பொண்ணு five on five" என்றான் சுடர், பொறாமை கலந்த பெருமையுடன்!

அவர்களது நிறுவனத்தில் கல்லூரி முடித்தக் கையோடு, முன்அனுபவம் ஏதுமின்றி வேலையில் சேரும் ஆட்களைப் பல வகையில் பயிற்சிக்கு உள்ளாக்கி, அந்த பயிற்சியின் முடிவிலும் நடுவிலும் பல தேர்வுகள் நடத்தி, அந்த தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களுடன்

தேர்வாகும் நபர்களை மட்டுமே வேலைக்கு அனுப்புவர். தேர்வுகளின் கடினத்துவத்தால் பயிற்சி காலத்திலேயே வெளியேற்றப் பட்ட பல பேருக்கு நடுவே, முழு மதிப்பெண் பெற்று தேர்வாகி வந்திருக்கும் நபரைக் கண்டபோது அதே பயிற்சியை அனுபவித்த சுடருக்கு எத்தனை வியப்போ அதே அளவு அவர்களது தேர்வுத் தாள்களைத் தயாரிக்கும் குழுவில் முக்கிய பங்குவகிக்கும் நல்லாவிற்கும் எழுந்தது!

"யாருடா, அன்பரசியா?" என நல்லா ஆர்வமிகுதியில் கேட்டுவிட, "ஆஹா, நல்லா! என்ன நடக்குது இங்க?" என உஷாரானான் சுடர்.

"டேய், டேய், நீ வேற உன்னோட சின்னக் கண்ணை வச்சு பெரிய கனவா காணாதே! அவங்களைக் கூப்பிடு, overview ஆரம்பிக்கலாம்" என்றான் மற்றவன், தன் தவறை எண்ணித் தன் தலையிலேயே ஓங்கிக் கொட்டிக் கொண்டு!

"ஓகே! அஞ்சு நிமிஷத்தில் கான்ஃபிரன்ஸ் ரூம்ல போய் கூப்பிடுறோம்" என்றவன், இரண்டே நிமிஷத்தில் அழைத்துவிட்டான்.

உரையாடல் துவங்கியதுமே, தன்னை "I am Nallanand, senior technical architect, your onsite coordinator" என அறிமுகப்படுத்திக் கொண்ட நல்லானந்த் அவர்களைப் பற்றிய முன்னோட்டதைக் கேட்க, ஒவ்வொருவராக தத்தம் பெயரைச் சொல்லி அறிமுகப்படுத்திக் கொண்டே வந்தனர்.

வரிசையில் கடைசியாக இருந்தவர், "ஹலோ சார், என் பெயர் அன்பரசி" என்ற போது அங்கே பெரும் சிரிப்பலை எழுந்தது!

அவளது பதவிசான குரலில், சார் என்ற அழைப்பில் தான் வாய் விட்டுச் சிரித்துவிட, அவளுடன் இருக்கும் மற்ற நபர்களும் அதையே செய்வார்கள் என நல்லானந்த் நினைக்கவில்லை.
வளர்ந்து வரும் கார்பரேட் கலாச்சாரத்தில் நிறுவனத்தின் நிறுவனரையே பெயரிட்டு அழைப்பது மிக சகஜம் என்ற நிலையில், அவளது சார் என்ற அழைப்பு அவனை மிதமாய் ஆச்சிரியம் கொள்ளவைத்து, அந்த ஆச்சிரியத்தை வெளிப்படையான சிரிப்பினால் வெளியிடவும் வைத்தது என்ற போதிலும் அனைவரும் ஒரே சமயத்தில் நகைத்ததில் அவள் மனம் நொந்திருக்குமோ? தன்னைத் தவறாக எண்ணியிருப்பாளோ? என்ற எண்ணம் சட்டென தலைதூக்கியது.

அந்த எண்ணம் தலை தூக்கிய வேகத்தில் சிரிப்பும் நின்றுவிட, "சாரி மிஸ்.அன்பரசி, உங்களைக் கிண்டல் பண்ற எண்ணத்தில் சிரிக்கல! நீங்க சார்-ன்னு கூப்பிட்டதும் யோசிக்காம சிரிப்பு வந்துடுச்சு" என்றான் நல்லானந்த் மறுநொடியே.

அவன் மன்னிப்பு கோரியதும் தான், தொலைப்பேசியின் மறுபக்கம் நின்றவர்களின் சிரிப்பு நின்றது. அது நிற்கக் காத்திருந்தார் போல் அன்பரசியும் பேசத் தொடங்கினாள், "பரவாயில்லங்க சார், நேற்றிலிருந்து எல்லாரும் சொல்லிட்டாங்க. என்னால தான் மாத்திக்க முடியலீங்க" என்றாள் சிறு வருத்தம், சிறு புன்னகை, சிறு நன்றி என எல்லாம் கலந்து.

"ச்சோ ஸ்வீட்" என மனதிற்குள் சொல்லியது எப்போதும் போல் வார்த்தையாய் வெளிவராமல், மனதிற்குள்ளேயே இருந்தது பெரிய விஷயம் தான் என நல்லானந்திற்குத் தோன்றியது.

"இதுக்கு எதுக்கு வருத்தப்படுறீங்க? சீக்கிரமே மாறிடும், நாங்க மாத்திடுவோம்" என நம்பிக்கையூட்டும் வண்ணம் நல்லா பேச,

"உங்க நம்பிக்கை சீக்கிரம் பலிக்கட்டும்" என்ற சுடரின் குரலில் ஒரு அவசரம் தென்படவே,

"என்னடா, ஏன் இவ்வளவு அவசரம்?" எனக் கேள்வி கேட்டுத் திணறடித்தான் நல்லானந்த்.

"நேத்திலிருந்து சொல்றேன் நல்லா, இந்த சாரை விடுற மாதிரியே இல்லை. எல்லார் முன்னாடியும் என்னை சார்ன்னு கூப்பிட்டு வயசை ஏத்திட்டே இருக்காங்க! உள்ளதே நமக்கு இங்க ரொம்ப நல்ல பேரு!" என தனது கவலையையே பிரதானமாய் முன்வைத்து சுடர் உரைக்கவும், அங்கே மீண்டும் ஒரு சிரிப்பலை எழுந்தது. நல்லாவைத் தவிர்த்து!

அந்த சிரிப்பலையின் ஊடேயே "என்னை சார்ன்னு கூப்பிடுறது கூட பரவாயில்லை நல்லா, நம்ம அனந்தா-வைக் கூட சார்ன்னு கூப்பிடுறாங்க. இவங்களை என்ன செய்றது?" என்றான் சுடர் மீண்டும். அவன் தனியாக அனந்தா என்பவரைப் பற்றி கூறுவதற்குக் காரணம் - அவரது உயரம் நல்லாவின் இடுப்பிற்கு ஒரு இன்ச் அதிகம்.

ஆனால் மேலும் மேலும் அன்பரசியை அவர்கள் கேலிக்கு உண்டாக்குவதை ஏனோ நல்லாவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

"ஹ்ம்ம், சுடர். overview ஆரம்பிக்கலாமா?" எனக் கேட்டு, அனைவரையும் ஒரு நிலைக்குக் கொண்டு வந்தவன், வேலையில் இறங்கினான்.

அவர்கள் செய்யும் வேலையைப் பற்றி ஆதியோடு அந்தமாய் தொடங்கி, அவர்களது வாடிக்கையாளர், அவரது தேவை, அந்த தேவையை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் நலன்கள், அவரது நலனில் தங்கள் நிறுவனத்திற்குக் கிடைக்கும் நற்பெயர், வாடிக்கையாளரின் தேவையைப் பூர்த்தி செய்ய அவர்கள் செய்யும் பணிகள், அந்தப் பணியை மேற்கொள்ள அவர்கள் கையாளும் தொழில்நுட்பங்கள், அதில் பலவேறு தொழில்நுட்பங்கள் உள்ளடங்கி இருப்பதால் ஒரொரு தொழில்நுட்பத்திற்கும் அமைத்திருக்கும் ஒரு தனி குழு, அதன் தலைவர்கள், கடைசியாக அவர்கள் அனைவரும் தன் கீழ் இயங்குவது என்பது வரை சொல்லிமுடித்தான்.

ஒவ்வொன்றாய் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, நடுநடுவே இடைவெளிவிட்டு ஏதும் கேள்விகள், சந்தேகம் இருக்கிறதா? எனக் கேட்டு, அன்பரசி தவிர்த்து மற்றவர்கள் "இல்லை"யென கூறிவிட, அவள் மட்டும் தேவையான கேள்விகளைத் தெளிவாய் கேட்டப்போது நல்லாவிற்கு வியப்பாக இருந்தது.

தனக்கு மேலதிகாரி என்பதால் தயக்கமோ, பயமோ இல்லாமல் "எனக்கு இதில் ஒரு சந்தேகம், கேட்கலாமா சார்?" எனக் கேட்டுக் கொண்ட பின்னரே அவள் தன் நியாயமான சந்தேகங்களை முன்வைத்தப் போது அவள் மேல் ஒரு மரியாதை வந்தது.

அவனது குழுவிலிருக்கும் பலர் வேலையில் சிறந்தவர்கள் தான் என்றாலும், தான் கேட்க நினைப்பதை மனம் விட்டுப் பலமுறை கேட்க மாட்டார்கள். எப்போது மீட்டிங் நடந்தாலும், "ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?" என நல்லா கேட்கும் போது பாதி நேரம் பதிலே வராது.

தொடர்ந்து ஐந்து நிமிடம் அமைதி நிலவிய பின்னர், நல்லா கேட்கும் கேள்விகளில் திணறிப் போய்விடுவர்! அவர்களது திணறலைப் பார்த்து முக்கியமான தகவல்களை மீண்டும் ஒரு முறை எடுத்துக் கூறும்படியும் நடந்திருக்கிறது.

Property of Buvana

என்றும் செய்வது போல் இன்றும் கேள்விகள் கேட்க தோணாமல், அவளது கேள்விகளுக்கு மட்டும் பதில் கூறிவிட்டு தன் உரையை முடித்துக் கொள்ள விரும்பியவனை, "அங்கே உனது உரையாடலைக் கேட்டிருப்பது அவள் மட்டுமல்ல, கூடவே நாலு பேர் இருக்காங்க" என மூளையின் அபாயமணி செக்சன் சரியாக வேலை செய்து முழிக்கச் செய்தது.

விழித்துக் கொண்ட நல்லானந்த், சில மணித் துளிகளாக தான் கூறிய தகவல்களிலிருந்து பல கேள்விகளை முன்வைத்து, அதில் எண்பது சதவீதக் கேள்விகளுக்கு அன்பரசியிடமிருந்தே பதிலைப் பெற்று கொண்டு, அவர்களது பணிக்கு வாழ்த்துத் தெரிவித்தப்பின்னர் அழைப்பைத் துண்டித்தான்.

அழைப்பை வைக்கும் போது அனைவரும் "தேங்க்ஸ் நல்லா" என நன்றி நவில, "தேங்க்ஸ் சார்" என்ற அன்பரசியின் குரல் மட்டும் தனித்து, சுவைத்துத் தெரிந்தது நல்லாவிற்கு.

அழைப்பை வைத்து சில வினாடிகள் கழிந்த பின்னரும், "ஹலோ சார், என் பெயர் அன்பரசி" என்ற அவளது அறிமுகமே நெஞ்சம் வரை இனித்தது.

தனிமையில் அவன் கண்ட இனிமையை களைத்த பெருமை அவனது எண்ணங்களுக்கே சேரும். "ஹலோ சார், என் பெயர் அன்பரசி" என்ற வாக்கியத்திலிருந்து ஆரம்பித்து, இது போல் இனிமை யாருக்கு இருக்கிறதென எண்ணத் தொடங்கி, மகளின் "ஹலோ ஆன்டி, என் பேர் மதிமலர் நல்லானந்த்" என்ற மகளின் அறிமுகப்படலங்களில் வந்து நின்றபோது, நல்லாவின் இனிமை கலைந்து முகம் கடினமானது.

எண்ணங்களுக்கு எண்ணங்களால் ஏற்பட்ட தடையை வெல்லும் பொருட்டு, தனது கணினியை உயிர்ப்பித்து அதில் மகனும் மகளும் அவனுடம் வீடியோ சாட்டில் உரையாடும் போது பதிவு செய்த படத்தை நூறாவது முறையாக ஓடவிட்டான்.

இருவரும் வெப் கமெராவில் முகத்தைக் காண்பிக்கும் ஆர்வத்தில் ஒருவர் தோளில் ஒருவர் இடித்துக் கொண்டு "நல்லாப்பா" எனக் கொஞ்சிய அழகைக் காண கண்கள் ஆயிரமல்ல, கோடியன்றோ தேவை! ஆனால் கோடிக் கண்கள் வைத்துக் கொள்ளும் பாக்கியம் அவனுக்கில்லாமல் போகவே இருக்கும் இருக்கும் இரு கண்களில் கோடி கூர் பார்வைகளை இடம் பெயர்த்து அதை கண்டு மகிழ்ந்தவனின் மனது சமநிலை அடைந்தது போலிருந்தது!

சற்று முன் இருபது வயது இளைஞனின் மனநிலையுடன் இருந்தவன், தான் ஒரு பொறுப்பான தந்தை என்ற எண்ணத்தில் சட்டென முதிர்ந்து விடவே அடுத்து வந்த அலுவலகப் பேச்சு வார்த்தைகளை செவ்வனே நடத்த முடிந்தது.

புதிதாக வந்திருக்கும் நபர்களை (அதாவது அன்பரசி உட்பட) எந்த பிரிவில் அமர்த்துவது என்பதை அவனது இந்திய மேலாளர் முடிவு செய்தபோது, தன்னை மீறித் துடித்த மனதின் தவிப்பு அவனை சத்தியமாக பயத்தில் ஆழ்த்தியது.

தான் என்ன வேண்டுகிறோம் என்பதில் குழம்பி அவர் கூறிய விஷயத்தில் கவனத்தைத் தொலைத்தவனை, "நல்லா, இருக்கியா?" "யு தேர் நல்லா?" என ஐந்து முறைக்கு மேல் கேட்டுத் தெளிவு படுத்திக் கொண்டார் அவனது மேலாளர் விஜய்!

"எஸ் விஜய்" என அவனது குரலிலேயே அவன் அங்கே இல்லை என்பது அவருக்கு விளங்கிவிட்டது. பின்னே, ஐந்து வருடங்களாய் அவனுடன் வேலை செய்பவர் ஆயிற்றே! தான் முக்கிய பங்கு வகிக்கும் கலந்தாய்வில் நல்லா அமைதியாக இருந்தால், ஒன்று அவனுக்கு பேசும் விஷயத்தில் உடன்பாடில்லை அல்லது அவனது கவனம் அங்கே இல்லை என்பதை அவனிடம் வேலை வாங்கிய அனுபவத்தில் அவர் கணித்திருக்க, ஆறாம் முறை அவனை விழிக்கச் செய்வதற்குப் பதிலாக "உடம்பு ஏதும் சரியில்லையா நல்லா?" என்றார் அவர்!

"சாரி விஜய், ஒரு பத்து நிமிஷம் கழிச்சு பேசலாமா?" என்றவன் அவர் சரியென்றதும், தனது வீட்டின் முற்றத்திற்குச் சென்று நின்றான்.

சில்லென்ற ஊதல் காற்று முகத்தில் மோத, ஆழ மூச்செடுத்து தன்னை மீண்டும் நிதானப்படுத்த முயன்றான். கண்ணால் பார்த்திராத ஒரு பெண்ணை, அவளைப் பற்றி ஒன்றும் அறியாத நிலையில் அவளைப் பற்றி தான் என்ன நினைக்கிறோம் என்பதே அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

அவளது பெயரோ, அவளது படிப்போ, அவளது பதிவிசோ, அவளது நிதானமோ, அவளது குரலின் நிதானமோ அவனைப் புரட்டிப் போட்டது உண்மை தான் என்றாலும் அதிலிருந்து இவ்வளவு நேரத்திற்கு மீளாமல் இருக்கும் தன்னைப் பார்த்து அவனுக்கே வியப்பாக இருந்தது. இரு குழந்தைகளின் தந்தையாக இருந்து கொண்டு, மீள முடியவில்லை... கீழே விழுகிறேன் என ஒத்துக் கொள்ளவும் மனசு இடம் தரவேயில்லை.

மனம் இடம் தரவில்லை என்பதை மூளை உணர்ந்த வேளையில், வீட்டின் முற்றத்தில் சம்மணமிட்டு அமர்ந்தவன் தியானத்தில் ஆழ்ந்து அதில் வெற்றியும் கண்டு, சற்று நேரத்தில் வந்த விஜயின் அழைப்பை தடுமாற்றமின்றி எடுத்தான். அவருடன் நடத்தப்போகும் உரையாடல் தன்னை மீண்டும் சந்தோஷத் தடுமாற்றத்தில் ஆழ்த்தப் போவதை அறியாமல்!

அவர்களது உரையாடலின் முடிவில் புதிதாய் சேர்ந்த நால்வரில், இருவர் மென்பொருளின் உள் இயக்கங்களைக் கவனிக்கும் குழுவில் வேலை செய்வர் என்றும், மற்றும் ஒருவர் வாடிக்கையாளர்கள் நேரடியாக காணும் இடைமுகத்தில் வேலைசெய்யட்டும் என்றும் முடிவு செய்தவர்கள், கடைசியாக அன்பரசி வேலை செய்யும் பிரிவிற்கு வந்தனர். அன்பரசியின் பயிற்சி, அவர்கள் உபயோகிக்கும் தொழில்நுட்பத்தில் அவளுக்கிருக்கும் புலமை இவையணைத்தையும் முன்னிறுத்தி, மென்பொருளின் செயல்திறனை பரிசோதிக்கும் performance testing and tuning எனப்படும் கடினமான வேலையில், நல்லாவிற்கு நேர்கீழ் வேலை செய்யும்படி அமர்த்தினர்.

"என்னதான் பயிற்சியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், அதை நிஜ உலகில் உபோயோகப்படுத்தும் நிலைக்கு அவங்க இன்னும் வரல. அவங்க புதுமுகம் என்பதை நினைவில் வச்சுக்கிட்டு வேலை கொடு. நான் சொல்ல வேண்டியதில்லை, நீயே அவங்களை ஒரு அளவு தயார் படுத்திய அப்புறம் தான் வேலை கொடுப்பேன்னு தெரியும். பார்த்துக்கோ! இன்னும் ஐந்தே நாளில் she is all yours" என்ற மேலாளார், அத்துடன் தன் வேலை முடிந்தது என்பது போல் அழைப்பை வைத்துவிட்டார்.

அதன்பின்னர், வழக்கமாக வரும் அழைப்புகளில் அங்கிருப்போரின் சந்தேகங்களைத் தீர்த்தவன் கடைசி அழைப்பை முடித்தப் போது மணி பன்னிரெண்டை எட்டியிருந்தது.

படுக்கையில் விழும் முன்னர், இன்று நடந்ததைப் பற்றி திலோவிடம் பேசவேண்டும் எனக் குறித்துக் கொண்டான் நல்லா! ஆனால் அவனைப் பேச விடாத வண்ணம் அங்கே ஒரு பெரும் அதிர்ச்சி காத்திருப்பது அவனுக்குத் தெரியவில்லை!

நல்லாவின் எண்ணங்களை சற்றே அடக்கிவிட்டு, அவனது எண்ணங்களில் பிரதானமாய் வீற்றிருந்த அன்பரசியிடம் வருவோம்!

Property of Bhuvana

உலகளவில் புகழ் பெற்ற இந்திய மென்பொருள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்ததையே பெரும் பாக்கியமாக எண்ணிய அன்பரசிக்கு, நிறுவனத்தில் சேர்ந்ததும் அவர்கள் எடுக்கச் சொன்ன பயிற்சியே கடினமாக இல்லை என்றபோது, இப்போது இன்னதென்றே அறியாத ஒரு நிறுவனத்தின் அலுவலர்கள் உபயோகிக்கப் போகும் மென்பொருளை உருவாக்குவதில் தானும் பங்கு கொள்ளப் போகிறோம் என்பது ஒரு பரவசநிலையை உண்டு பண்ணியது!

அவளுடன் அந்த ப்ராஜெக்ட்டில் இணைந்த ரகு, கிருத்திகா, அருண் ஆகியோர் நல்லா கொடுத்த overview-இல் வரவிருக்கும்வேலையைக் கண்டு சற்றே பயந்திருந்தபோது, "பிறக்கும் போதே எல்லாத்தையும் கத்துக்கிட்டா ரகு பிறக்கிறோம்? புதுசா ஒன்றை பார்க்கும் போது, பழகும் போது தானாய் தெரிந்துவிடப் போகிறது. இதுக்குப் போய் எதுக்கு புலம்புறீங்க? முக்கியமா, இங்க இருக்க எல்லார்கிட்டயும் பேசியதில் நல்லமாதிரியா தான் தெரியுது. கண்டிப்பா நமக்கு சொல்லித் தருவாங்க. பயப்படாதீங்க!!" எனக் கூறித் தேற்றியவள், தனக்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வந்தபோது அவளுள்ளும் சிறு பயம் தலை தூக்கியது.

"மனசில பயம் இருக்கவேண்டியது தான் கண்ணு, ஆனா அது அதிகமானால் செய்ற வேலை தடுமாறிவிடும். அதனால் பயத்தின் கட்டுப்பட்டுக்குள் நீ போகாம, அதை உன்னோட கட்டுப்பட்டுக்குள் வச்சுக்கோ" என்ற தாயின் வார்த்தைகள் நினைவு வர, கண்கள் பனித்தன.

"அம்மா" என மெல்ல அழைத்தவள், "நான் கஷ்டப்பட்ட போதெல்லாம் என்னோட இருந்தியேம்மா, இப்போ நான் சந்தோஷமா இருக்கவேண்டிய நேரத்தில் ஏன் என்னைத் தனியா விட்டுட்டு போயிட்டே! எனக்கு நீ வேணும்மா" என மனதிற்குள் தாயிற்காக ஏங்கியவளின் ஏக்கத்தைப் போக்கும் வண்ணம் அவளது தாயார் பேசினார்.

"நான் எங்கேயும் போகலை அன்பம்மா, உன் கூடவே தான் இருக்கேன். கூடிய சீக்கிரமே உன் கண் முன்னாடி வந்து நிற்பேன்" என்ற தாயாரின் வார்த்தைகள் காதில் ரீங்காரமிட, அன்பரசியின் மனக்கண்ணீர் மெதுவாய் நின்றது.

என்றைக்கும் போல் எந்த வேலையைத் தொடங்கும் முன்னரும் தன் இஷ்டத் தெய்வமான பிள்ளையாரின் துதியை மனதிற்குள் பாடிவிட்டு, வேலையில் மூழ்கினாள்.

மதிய உணவிற்கு நண்பர்களுடன் கீழிறங்கி உணவகத்திற்கு சென்றபோதிலும், தான் கையில் கொண்டுவந்திருந்த தயிர்சாதத்தை கைகாட்டி "உனக்கு ஏதும் வேணுமா அன்பு?" எனக் கேட்ட அருணிடம் மறுத்தவள், ஓரமாய் அமர்ந்தாள். வீட்டிலிருந்து உணவு எடுத்து வராமல், அங்கிருக்கும் பலதரப்பட்ட உணவகங்களில் ஒவ்வொருவரும் புது வித உணவுகளை வாங்கிக் கொண்டு அவளுடன் அமர்ந்த வினாடி, புதிதாய் சேர்ந்த ப்ராஜெக்ட் மற்றும் அதன் முக்கிய அங்கத்தினர் பற்றிய பேச்சு வார்த்தை ஆரம்பமாகியது.

விஜயிடம் தொடங்கி, "அவரைப் பார்த்தா எனக்குப் பயமா இருக்கு அருண், அவர் பேசுறதே மிரட்டுற மாதிரி இருக்கு" என கிருத்திகா ஆரம்பிக்க,
"ஆமா, என்கிட்டே வந்து 'system setup' இன்னைக்கு முடிச்சிடுங்க, நாளைக்கு ஒரு ஸ்க்ரீன்க்கு கோட் அடிக்கணும்ன்னு சொல்றார். ஆனா, ப்ராஜெக்ட்ல இருக்க மத்தவங்ககிட்ட கேட்டா ஒரு நாளில் system செட்டப்பான்னு சிரிக்கிறாங்க" என்றான் அருணும் பரிதாபமாக.

"உன்னை எந்த டீம்ல போட்டிருக்காங்க அன்பு" என ரகு வினவ,

"எந்த டீம்ன்னு சொல்லல ரகு, நேரடியா நல்லாகிட்ட ரிப்போர்ட் பண்ணச் சொல்லியிருக்காங்க. ப்ராஜெக்ட்டோட பேசிக்ஸ் தெரிஞ்சப்பிறகு அவர்கிட்ட பேசச் சொன்னார் விஜய்" என்றாள் அன்பரசி.

"ஹே சூப்பர்" என அருண் வியக்க, "ஏன்டா" என்றாள் கிருத்திகா, அன்பரசிக்குப் பதிலாக.
"நல்லா, technically செம ஸ்ட்ராங் ஆளாம்! எந்த ஒரு விஷயம் என்றாலும் முடியாதுன்னே சொல்லமாட்டாராம், he is very down to earth" என நல்லாவின் புகழ் பாடினான் அவன்.

"ஆமா, இன்னைக்குக் கூட லேசா சிரிச்சதுக்கே சட்டுன்னு சாரி கேட்டாரே!" என அவனுடன் ஒத்து ஊதியது அன்பரசி அம்மையாரே தான்!

"ஹே அன்பு, தயவு செஞ்சு "சார்"ன்னு கூப்பிடறதை விடுடி" என கிருத்திகா, மீண்டும் பழைய பஞ்சாங்கதிற்குத் தாவிய போது, அருணும் ரகுவும் டார்வின் தியரியைப் பின்பற்றி அவளுடன் இணைந்தனர்.

"வயசில பெரியவங்களை எப்படி கீர்த்தி, பேர் சொல்லிக் கூப்பிடறது" என அன்பு நெளிய, அவளை ஒரு ஜந்துவைப் பார்ப்பது போல் பார்த்தனர் மற்ற மூவரும்.

Property of Shuvana

"உன்கிட்ட ட்ரைனிங் முடிச்சு வரும்போதே சொல்லித் தானே கூப்பிட்டு வந்தோம்" என ரகு நினைவுபடுத்த, "ம்ம் சரி, நான் "சார்"ன்னு கூப்பிட்டா என்னை ரெண்டு மூணு தடவை சொல்லாதே சொல்லாதே சொல்லுங்க, நான் மாத்திக்கிறேன்" என்று கூறிய அன்பரசியை, வாய் வரை கொண்டு சென்ற உணவைத் தட்டில் போட்டுவிட்டு முறைத்தாள் கிருத்திகா.

"இந்த மாதிரி நீ வாக்குக் கொடுத்து, நாங்களும் அதை செயல் படுத்தி இன்றைக்கோட மூணு மாசம், மூணு நாள்,மூணு மணிநேரம், மூணு நிமிஷம், மூணு நாழிகை ஆச்சு மேடம்" என முறைப்பை மட்டும் கிருத்திகாவிடம் விட்டு, அதற்கான விளக்கத்தைக் கூறினான் ரகு.

"கணக்குப் புலின்னு நினைப்பு. நாம ட்ரைனிங்ல சேர்ந்தே ரெண்டு மாசம், இருபத்திஎட்டு நாள், நாலு மணிநேரம் தான் ஆகுது" என்றாள் அன்பு சிறு சிரிப்புடன்.

"ஹே, தோ பாருடா, அன்பு கூட கேலி பேசுறா! அவ கேலி பண்ற நிலைமையில இருக்கிறியேடா மாஃபி" என அருண் வியக்க,

"மாஃபி-ன்னா என்ன அருண்?" என வாழ்க்கைக்கு அத்தியாவசியமான கேள்வியை முன் வைத்து,

"அதுவா, அதுக்கு ஒரு பெரிய புராணமே இருக்கே! ஆரம்பிச்சா புளிச்சுப் போயிருக்க உன் தயிர் சாதம் இனிக்க ஆரம்பிச்சுடும்மேன்னு தான் பார்க்கிறேன்" என்ற அருணின் பில்ட்-அப்பில், இவனிடம் போய் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என நொந்து போனாள் அன்பரசி. அவளது நொந்த பாவனையில் அனைவரும் சிரிக்க, அதை மேலும் கூட்டும் வண்ணம் அரும் தொடர்ந்தான்.

"ரொம்ப பீல் பண்ணாதே, அய்யா சொல்றேன், நல்லா கேட்டுக்கோ! திரும்பச் சொல்லமாட்டேன்" என்றவன், அனைவரும் அவன் மேல் பாயத் தயாராகி இருப்பதைப் பார்த்து, தானே அடங்கி "மாப்பிள்ளை என்ற உறவுமுறையில் தொடங்கிய அழைப்பு, மாப்ள என அழைப்பதற்கு எதுவாக மாறியது அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் மேலும் செல்லமாக அழைக்கும் எண்ணத்தில் மாப்பி என அதை நாங்கள் சுருக்க, சுருக்கத்திற்கு அழகும் ஸ்டைலும் சேர்க்கும் வண்ணம் மாஃபி என மறுவியது" என்றான் சொற்பொழிவாளனின் நேர்த்தியுடன்.

"சூப்பர்டா மாஃபி" என ரகு அவனைத் தோளோடு அணைக்க, "தூ" எனத் துப்பினாள் கிருத்திகா. "எதெல்லாம் ஒரு பொழப்பு" என மாப்பிள்ளைகளிடம் உரைத்தவள், "அவங்ககிட்ட போய் இதுக்கு விளக்கம் கேட்ட உன்னை சொல்லணும்" என சிரித்துக் கொண்டிருந்த அன்பரசியிடம் சண்டைக்கு வந்தாள்.

"சாந்தி, சாந்தி, ஓம் சாந்தி கிருத்திகா!" என நண்பியை சாந்தப்படுத்தியவர்களிடம், "நான் கூல் ஆகணும்ன்னா எனக்கு கூலா ஒரு ஜூஸ் வேணும். போய் வாங்கிட்டு வாங்க" என கிருத்திகா, கிடைத்த சந்தர்ப்பத்தில் சாமர்த்தியமாய் சிந்து படிக்க,

"எதிலடா நமக்குக் காரியம் ஆகும்ன்னு நோட்டம் விட்டுட்டே இருப்பியாக்கும். சரியான ரத்தக்காட்டேரி" என அவளைச் சரியாக புரிந்து கொண்டதற்கு ஏதுவாக ரகு உரைத்தப்போதிலும் "என்ன ஜூஸ் வேணும்? சொல்லித் தொலை" என அவளது விருப்பத்தைக் கேட்டான்.

தன் செலவில்லை என்றது முடிவான நிலையில் இருப்பதிலேயே சற்று உயர்வான பழரசம் ஒன்றை கிருத்திகா சொல்ல, அன்பரசியிடம் திரும்பிய ரகு "உனக்கு அன்பு?" என அவளது விருப்பத்தையும் கேட்டான்.

"இல்ல எனக்கு வேண்டாம். உங்களுக்கு வாங்கிக்கோங்க" என எப்போதும் போல் அன்பரசி மறுக்க, "ஹே, ரகு தான்டி வாங்கித் தரப் போறான். நீ காசு கொடுக்க வேண்டாம். காசு போகுதேன்னு அழவேண்டிய அவசியமே இல்லை!" என்றாள் கிருத்திகா.

அவள் கூறியதில் மிதமாக எரிச்சல்பட்டாலும் "இல்லை, எனக்கு ஜூஸ் குடிக்கணும் போல இல்லை. வேண்டாம்" என்றாள் அன்பரசி பிடிவாதமாக.

"நான் வாங்கிட்டு வரேன் அன்பு, நீ பணம் தரவேண்டாம்" என்றான் ரகு அவன் பங்கிற்கு.

அவர்கள் இருவரும் "பணம் தரவேண்டாம்" என்பதையே அழுத்திக் கூறியதில் அவளது தன்மானம் சிலிர்த்தெழுந்தது.

"என்கிட்டே பணம் தேவைக்கு மீறி இல்லை என்பதை நான் மறுக்கல. அதுக்காக அதை காரணம் காட்டி யாரும் என்னைத் தாழ்வா பேசுறது எனக்குப் பிடிக்கலை" என்றாள் முகத்திற்கு நேராக!

அன்பரசியின் நேரடி தாக்குதலில் அருணும் ரகுவும் விழிக்க, கிருத்திகாவின் தலை அலட்சியமாய் சிலும்பியது. பண விஷயத்தில் அன்பரசியை சீண்டினால் அடுத்தநொடி அவள் அங்கிருந்து நகர்ந்துவிடுவாள் என்பதை அறிந்திருந்த அருண், அதற்கு மேல் வார்த்தையை வளர்க்காமல் பழரசம் விற்கும் கடையில் கிருத்திகாவிற்கு மட்டும் பணம் கொடுத்துவிட்டு, அவர்கள் கொடுத்த வரிசைஎண்ணை வாங்கிக் கொண்டு நண்பர்கள் அமர்ந்திருக்கும் மேஜைக்கு வந்தான்.

அவன் கையிலிருந்த எண்ணை பழரசக்கடையில் கூவி அழைக்கும் வரை நண்பர்களின் நடுவில் சங்கடமான அமைதி நிலவியது. அதை கலைக்கும் வண்ணம் கிருத்திகாவை அவளது பழரசத்தை வாங்கிவருமாறு அங்கிருந்து கிளப்பிய அருண், அன்பரசியின் புறம் திரும்பினான்.

அவன் பேச்செடுப்பதற்கு முன்னரே, "சாரி அருண்" என்றாள் சிறு குரலில்.

அவர்கள் இருவரும் அவளது மன்னிப்பை எதிர்பார்க்கவில்லை மாறாக அவளது கோபத்திற்கான காரணத்தை எதிர்பார்க்கின்றனர் என்பதை, "ஏன் அன்பு? கிருத்திகா பண விஷயத்தில் ஏதாவது குத்தி காட்டினாளா?" என ரகு விஷயத்தின் ஆணி வேரைப் பிடித்தான்.

ஒன்றும் சொல்லாமல் அன்பரசி தன் கையிலிருந்த உணவை வெறிக்க, "அவளைப் பத்தி உனக்குத் தெரியாததா அன்பு? சில நேரம் கொஞ்சம் சில்லியா நடந்துக்கிறவ தானே! அவ சொல்ற ஒரொரு வார்த்தைக்கும் ஆணி வேர் வரை அர்த்தம் பார்த்தால்..ப்ச் எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல" என்ற அருணின் வாதத்தில், அன்பரசியின் மனதிலிருந்த உண்மை வெளிவந்தது.

"பணத்திற்குக் கொடுக்கிற மதிப்பை சில சமயம் மனதிற்குக் கொடுக்க மாட்டேங்கிறா அருண்! நேத்திக்கு தி.நகருக்கு டிரஸ் வாங்கப் போறேன்… நீயும் வரியான்னு கேட்டா…. நான் பதில் சொல்றதுக்கு முன்னாடி அவளே "ஹப்பா சாமி, நீ வந்தா செலவு பண்ற ஒரொரு பைசாவிற்கு அங்கே கணக்குப் பார்த்திட்டு இருப்பே. கூட வர எனக்கு embrassing –ஆ இருக்கும், அதனால நானே போயிக்கிறேன்"ன்னு சொல்றா. என்னை

Property of Kavya

எதுக்குக் கூப்பிடனும்.... அப்புறம் எதுக்கு இப்படி பேசணும். ப்ச்...எனக்கு ரொம்ப கஷ்டமாகிடுச்சு அருண். நேத்திக்கு அதில் ஆரம்பிச்ச வேதனை, இன்னைக்கும் அவ அப்படி பேசியதும் கோபமா மாறி உங்களையும் அப்படி பேசிட்டேன். சாரி அருண், அவ செஞ்சதுக்கு உங்ககிட்ட என் கோபத்தைக் காட்டிட்டேன். சாரி" என்றாள் விளக்கமும் மன்னிப்புமாய்!!

"நினைச்சேன், அந்த லூசு தான் ஏதோ பண்ணியிருக்குன்னு. ஹ்ம்ம் அந்த லூசு பேசுறதை லூசுல விடத் தெரியாத உன்னை கடைந்தெடுத்த லூசு என அறிவிக்கிறேன்" என அருண் மீண்டும் தன் சொற்பொழிவு பாணிக்குத் தாவ, அன்பரசி சட்டென சிரித்தாள்.

"இப்படி சிரிச்சிட்டே இருக்கிறதுக்கு என்ன?" என்றான் ரகு என்ற ராகவன், தன் கடின பாவத்திலிருந்து வெளிவராமலே.

"எப்பவும் சிரிச்சிட்டே இருந்தா கடைந்தெடுத்த லூசு - மிகத் தெளிந்த, தூய்மையான லூசு ஆகிடாது? தெளிவும் தூய்மையும் அறிவிற்கு அழகு... லூசுத்தனதிற்கு அல்ல என்பது என் வாதம், உனது எப்படி என் தோழனே!" என அருணின் அடுத்த வசனத்தில், ரகு மேசைக்குக் கீழே நுழைந்து அவன் காலைத் தொட்டிருந்தான்.

"ஹே நீ கொஞ்ச நேரம் சும்மா இருடா" என ரகு நண்பனை அடக்க, "சரி மாஃபி" என்றவன் கைகட்டி, வாய் பொத்தி பழுத்த பழமாக காட்சி கொடுக்க, பழத்தை நசுக்கும் எண்ணம் தோன்றினாலும் அதை செயல்படுத்துவதை விட அன்பரசியிடம் ஒரு முக்கிய ஆலோசனை ஒன்றை நிகழ்த்துவதில் தன் நேரத்தை செலவிட்டான்.

"அன்பு, நாங்க ரெண்டு பெரும் என்னைக்குமே உன்னை பணவிஷயத்தில் மட்டுமில்ல எந்த விஷயத்திலும் தாழ்வா நினைக்க மாட்டோம். கிருத்திகாவை விட, எங்களை விட, ஏன் எனக்குத் தெரிஞ்ச நிறைய பேரை விட நீ உயர்வு தான், உன் நல்ல மனசில் உயர்வு தான்" என்றவன், அருணின் "ஷப்பா" என்ற வார்த்தையில், இல்லாத புழுக்கத்தைக் கையால் விரட்டிவிட்டப் பாங்கில் ஆலோசனை வழங்கும் படலத்திற்கு முற்றுபுள்ளி வைக்காமல் "இன்னும் ஒன்னு, எங்களை ஃபிரிண்ட்ஸ்ன்னு நீ உண்மையிலேயே நினைக்கிறன்னா உனக்கு என்ன கஷ்டம் என்றாலும் எங்ககிட்ட பகிர்ந்துக்கோ. இன்னைக்கு மாதிரி உள்ளுக்குள்ளேயே வச்சுக் குமையாதே!" என அறிவுறுத்திய பின்னரே முற்றுபுள்ளி வைத்தான்.

"மாஃபி சொல்றது கரெக்ட். வேதனைத் தீயை உள்ளுக்குள்ளேயே  வச்சு கருக்கி, இப்படி புகையா வெளிவிடாம ஃபிரெஷா டெலிவர் பண்ணிடு சரியா" என்ற அருணை ஒரு விரல் நீட்டி மிரட்டிய அன்பரசி, "தேங்க்ஸ் ரகு, தேங்க்ஸ் அருண்" என்றாள் நெகிழ்வுடன். அவளுக்குத் தன்னிடம் அக்கறை காட்டவென்று தனது தோழி நித்யாவைத் தவிர்த்து இன்னும் சிலரும் இருக்கின்றனர் என்பதே அவளுக்குத் தெம்பை அளித்தது.

அன்பரசியின் நன்றியை பெரிய மனிதத் தோரணையில் பெற்று கொண்ட அருணுடன் சேர்ந்து இருவரும் சிரித்துக் கொண்டிருந்த போது, எள்ளைப் போட்டால் நிமிஷமாய் வெடித்துவிடும் என்பதுபோல் அங்கு வந்து சேர்ந்தாள் கிருத்திகா.

அன்பரசி கூறிய விஷயத்தின் தொடர்ச்சியாக "ஏன் இப்படி குரங்கு மாதிரி வர?" என ரகு அவளிடம் பாயத் தயாராக, அவனை இறைஞ்சுவது போல் பார்த்து, கண்களால் அடக்கினாள் அன்பரசி.

"நான் ஒன்னும் குரங்கில்ல, அந்த ஜூஸ் கடையில இருக்கான் பாரு அவன் குரங்கு, அவங்க அப்பா குரங்கு, அம்மா குரங்கு, அவங்க குடும்பமே குரங்கு!" என கிருத்திகா பேசிக் கொண்டே போக,

"கிருத்திகா, தேவையில்லாம அவங்க குடும்பத்தை எதுக்கு இழுக்கிற? என்ன பிரச்னை?" என்ற அன்பரசியின் அழுத்தத்தில் பேச்சை நிறுத்தி, "பின்ன என்னவாம், மேங்கோ மில்க்ஷேக் சொன்னதுக்கு மேங்கோ ஜூஸ் கொடுத்துட்டான், ஏன்னு  கேட்டா அது தான் மேடம் ஆர்டர், அது தான் மேடம் ஆர்டர்ன்னு சொன்னதையே திரும்பச் சொல்றான்" என்ற கிருத்திகாவை இடைமறித்து,

"நீ பில்லை வாங்கிப் பார்த்தியா என்ன?" என்ற அருணின் கேள்விக்கு, "கேட்டேனே! அவனும் கொடுத்தானே!" என்றவள் அருணின் மிரண்டப் பார்வையை கவனிக்காமல் தன் கர்மமே கண்ணாய் இருந்து, "ஆனா அந்த பில்-ல பாதி ஜூஸ் ஊத்தி அழிஞ்சு போச்சு" என்றாள் பரிதாபமாக.

அவள் சொல்லி முடிக்கக் காத்திருந்தார் போல் "முருகா, ஞானபண்டிதா என்னைக் காப்பிற்றியதற்கு ரொம்ப நன்றி" என அருண் கையெடுத்துக் கும்பிட, "அடப்பாவி, நீ ஆர்டர் கொடுத்ததே மேங்கோ ஜூஸ் தான் கொடுத்தியா?" என கிருத்திகா அவன் மேல் பாய, "உனக்கு அதுவே பெரிய விஷயம். போடி" என்றவனின் முதுகில் சுளீரென அடி ஒன்று விழுந்தது.

"ச்சே பாவம் அருண், வாங்கிக் கொடுக்கிறதுன்னு ஆச்சு... மில்க்ஷேக்கும், ஜூஸ்க்கும் என்ன வித்தியாசம். ஏன் இப்படி பண்ற?" என அன்பரசி, முந்தைய நாள் கிருத்திகா பேசியதை முற்றிலுமாய் மறந்துவிட்டு நண்பனிடம் அவளுக்காக பாவப்பட,

"வெறுமனே லைம் ஜூஸ் சொல்லியிருப்பேன். ரொம்ப வெளிப்படையா வேற சொன்னமாதிரி தெரியுமேன்னு தான் அவ கேட்டதிலேயே ஜூஸ் சொன்னேன். ஒரு நாள் மில்க்ஷேக் குடிக்கலைன்னா அவ உடம்பு ஷேக் ஆகிடாது. நீ கவலைப்படாதே!" என அருண் விளக்கம் கொடுக்க, லேசான சிரிப்பும், மிதமான கோபமுமாய் அவர்களது உணவு நேரம் முடிந்தது.

அதன் பின்னர் புது வேலையின் ஆதிமூலத்தைப் படிக்க முயன்று, முயற்சியில் தோல்வியைத் தழுவி, தழுவியது வெற்றியாக இருக்க வேண்டுமே ஒழிய தோல்வியாக இருக்கக் கூடாது என முடிவெடுத்து, எடுத்து முடிவை செயல் படுத்த மீண்டும் முயன்றனர்!

முயற்சியும் தோல்வியும் வெற்றியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்க சூர்யனும் சந்திரனை நோக்கித் தன் பயணத்தைத் துவங்கியிருந்தான். அவர்களது பயணம் வெற்றியைத் தழுவாத நிலையில் சூர்யனின் பயணம் அதன் வெற்றியைத் தழுவியிருக்க, அன்பரசி அன்றைய வேலையை முடித்துக் கொண்டு மின்சாரரயிலில் தன் விடுதிக்குப் பயணப்பட்டாள்.

---

காலையில் ஆறு மணிக்குத் துயிலெழுந்த நல்லானந்தின் மனம் தெளிவாய் இருந்தது! ஆனால் தெளிவு பிறந்தபோதிலும் நேற்றிரவு உறங்குவதற்கு முன்னர் திலோவிடம் பேசவேண்டும் என முடிவு செய்ததை அவன் மாற்றவில்லை.

அந்த தெளிவின் வெளிப்பாடாய் கறுப்புக் காப்பி ஒன்றை போட்டுக் குடித்தவன், லாப்டாப்பின் முன்னர் அமர்ந்து தன் சொந்த மின்னஞ்சல்களை பார்க்கலானான். கல்லூரியில் உடன் பயின்றவர்களை இணையதளத்தில் இணைக்கும் பாலமாய் இருந்த groups முகவரியிலிருந்து வந்த சில மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்பியவன், திலோவின் மின்னஞ்சலுக்கும் சென்று அங்கிருந்தும் பதில் அனுப்பிவைத்தான்.

அதன் பின்னர் குளியல், காலைவேளையின் சீரியல் உணவு என நேரம் பறக்க வீட்டிற்கு அழைக்கும் நேரமும் நெருங்கியது.

வீட்டு எண்ணை அழுத்திவிட்டு, மகனின் "நல்லாப்பா" என்ற அழைப்பிற்காக அவன் தவமிருக்க, அவனது தவத்தின் வலிமையை ஆட்டம் காண வைக்கும் வண்ணம் "ஹலோ" என்ற குரல் பதட்டத்துடன் வெளிவந்தது.

தாயின் குரல் மகன் அறியாததா என்பதற்கிணங்க, “ஹலோ” என்ற குரலின் சொந்தக்காரர் தாய் என்பதோடு மட்டுமில்லாமல், அதிலிருந்த பதட்டத்தையும் உணர்ந்த மகன் "என்னம்மா? ஏன் இவ்வளவு பதட்டமா இருக்கீங்க? அப்பா... அப்பா நல்லா இருக்காங்க தானே" என்றான் வேகமாக

அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல், "ஹய்யோ நல்லா பேசுறான். இப்ப என்ன செய்றது? போச்சு.... ஆயிரம் கேள்வி கேட்பானே…ஹய்யோ என்னங்க அவனுக்குப் பதில் சொல்லி எனக்கு மாளாது நீங்க வாங்க" என மகனின் கேள்விக்கு அவனிடம் பதில் கூறாமல், வீட்டிலிருக்கும் மற்றவர்களுக்கு அவன் பேசுவதை அறிவித்ததோடு நில்லாமல் கணவரையும் அழைத்தார்! இவையணைத்தையும் தொலைப்பேசியை வைத்துவிட்டோ அல்லது அதைக் கையால் மூடிக் கொண்டோ பேசியிருந்தால் அவர் வளராத வளர்மதி அல்லவே!

அவர் பேசியதில் நல்லா பதறிய அதே அளவு வீட்டிலிருந்தோரும் பதறிப் போயினர்.

"என்ன நந்தா இது? அம்மாவை ஃபோனை எடுக்கவிடாதேன்னு சொல்லிட்டே இருந்தேனில்ல" எனப் பெரிய மகனைக் கடிந்து கொண்டே தந்தை தொலைப்பேசி அருகே வரும்வரை நல்லாவின் இதயம் மிக வேகமாய் துடித்தபோதும், தந்தையின் குரலில் சோர்வோ, தளர்வோ இல்லாமல் ஒரு கவனமே இருப்பது புரிந்ததும் முன்பிருந்த பதட்டம் சற்றே மட்டுப்பட்டிருந்தது.

தாயே அழைப்பை எடுத்ததாலும், கூடுதலாய் அவரது குரலிலும் பதட்டமே மேலோங்கியிருக்கவும் தாய்க்கும் ஒன்றுமில்லை என்ற கணக்கிற்கு அவன் வந்திருக்க, இப்போது தந்தையின் குரலில் தேவிற்கு அதட்டல் விழ அவனும் நன்றாக இருக்கிறான் என்பதை முப்பதே வினாடிகளில் கணக்கிட்டு முடித்தான், நல்லா!.

இவர்களைத் தவிர திலோ, குழந்தைகள்... கடவுளே என மனமும் உடலும் உலுக்கிப் போட்டது!

"நல்லா" என்ற தந்தையின் அழைப்பைத் தொடர்ந்து அவர் மேலே பேசும் முன்னர், "திலோ, குழந்தைங்க ....எதுவும் பிரச்சனையா?" என நல்லா துடிக்க,

"ஒன்னுமில்லபா, எல்லாரும் நல்லா இருக்கோம். நீ இன்னும் அரை மணிநேரம் கழிச்சுக் கூப்பிடேன்" என அவனை சமாதானப்படுத்தினார் பெத்தபெருமாள்.

"என்னாச்சு? மூணு பேரும் இன்னும் வீட்டிற்கு வரலையா? எங்க போயிருக்காங்க?" என பதில் சொல்லி மாளமுடியாத கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனான்.

"ஒன்னுமில்லைன்னு சொல்றேனே நல்லா, நீ அரை மணி... இல்லை முக்கால் மணி நேரம் கழிச்சு ஃபோன் பண்ணுடா" என அவர் அழுத்த, "அப்பா" என அவருக்கு மேல் பிடிவாதம் பிடித்தான் மகன்.

"எங்க போயிருக்காங்க? பீச்சுக்கா? திலோ கையில மொபைல் இல்லையா? ஒரு செல்ஃபோன் வச்சுக்கோன்னா கேட்டா தானே? பெரிய புதுமை புரட்சி பண்றதா நினைப்பு.... சரி, எதில போயிருக்காங்க? கார்லையா? இல்லை ஆட்டோவா? கார்ன்னா தர்மராஜ் தாத்தாக்கு ஃபோன் பண்ணிப் பாருங்க" என நல்லா பேசிக் கொண்டே போக,

"ஹய்யோ நல்லா, எல்லாரும் வீட்டில தான் இருக்கோம். நீ பதறாதே" என்றவர், "இரு தேவ் பேசுறான்" என இளையவனின் கேள்விகளில் திணறிப் போய் மூத்தவனிடம் பொறுப்பைத் தள்ளினார்.

"ஹே, நீ கொஞ்சம் மெதுவா கேள்வி கேளு? எதுக்கு இப்படி பறக்கிற? யாரும் எங்கேயும் போகலை. எல்லாரும் வீட்டில தான் இருக்காங்க" என்ற தேவின் குரலில் உண்மை சிலபல சதவீதங்கள் குறைவது போல் நல்லாவிற்குத் தோன்றியது!

"தேவ், நீ பொய் சொல்றது குரலிலேயே தெரியுது. எல்லாரும் வீட்டில இருக்காங்க... ஆனா யாரோ இல்லை. யாரு? திலோவா?" என நல்லா மேலும் குடைய,

"அம்மா சொல்றமாதிரி உனக்குப் பதில் சொல்லி மாளமுடியல. நான் பதில் யோசிச்சு வைக்கிறேன். நீ அப்புறம் பேசு" என்ற தேவ், அவனது பதிலை எதிர்பார்க்காமல் அழைப்பைத் துண்டித்துவிட்டான்.

நான் உனக்குத் தம்பி என்பதை எடுத்துக்கூறும் வகையில் அடுத்த இரண்டாவது நிமிடம் தொலைப்பேசி அலறியது.

"படுத்தாதே நல்லா, நான் வீட்டில தான் இருக்கேன்" என்ற திலோவின் அதட்டலில் தான் பாதி உயிர் அவன் உடலுக்கு மீண்டு வந்தது.

தொலைந்திருந்த மீதி உயிர் திகிலைக் கிளப்ப "அகில்?" என்றான் கேள்வியாய்

"இதோ இருக்கான். ஹே அகில்...இங்க வா, நல்லாப்பான்னு ஒரு தடவை கூப்பிடுடா. அவசரம் புரியாம இவன் தொல்லை தாங்கமுடியல" என்றாள் திலோ

"நல்லாப்பா, நான் இங்க தான் இருக்கே. மலர்...." என அவன் முழுதாய் பேசிமுடிக்கும் முன்னர், தொலைப்பேசி பறிக்கப்படவே.

"மலர் எங்க?" எனக் கூர்மையாக விழுந்தது அடுத்த கேள்வி

"மலர்... மலர் குட்டி தூங்கிட்டா... நீ நாளைக்குப் பேசேன்" என யோசித்து வைத்தப் பதிலையே சற்று தடுமாற்றத்துடன் வெளியிட்டாள் திலோ!

"திலோ, listen to me. எனக்குச் சரியான பதில் வரவரைக்கும் என்னால நிம்மதியா இருக்கமுடியாது. தயவு செஞ்சு என்ன பிரச்சனைன்னு சொல்லு. எல்லார் மாதிரியும் நீயும் மழுப்பிடலாம்ன்னு நினைக்காதே! மலருக்கு என்னாச்சு? உடம்பு ஏதும் சரியில்லையா?" என்ற நல்லாவின் குரல் உயரவில்லை என்றபோதிலும், போதுமான அழுத்தம் நிறைந்து காரியத்தில் கண்ணாய், கறாராய் இருந்தது.

"மலரைக் காணோம்" என்ற திலோவின் குரல் அதற்கு நேர்மாறாய் தடுமாறி, உண்மை நிலையை முழக்கமிட்டது!

"மலரைக் காணோம்" என திலோ உண்மை நிலையை முழக்கமிட, அதை கேட்டிருந்த நல்லானந்த் பயத்தில் உறைந்து போவதற்குப் பதிலாக நிம்மதி பெருமூச்சு விட்டான்.

"மலர்குட்டியைத் தேடிட்டு இருக்கோம் நல்லா, கொஞ்ச நேரம் கழிச்சு கூப்பிடேன்" என திலோ மீண்டும் வலியுறுத்த, அதை ஏற்றுக் கொண்டு அழைப்பைத் துண்டிக்காமல்

property

"ஹால்-ல இடது பக்கமிருக்க ஒத்தை சோபாக்குக் கீழ பார்த்தியா? மலர்குட்டிக்கு கோபம் வந்தா அதுக்குக் கீழ தானே வாசம் பண்ணுவாங்க மேடம்" என்றான் நல்லா.

"அங்க தான் முதல பார்த்தேன். ஆனா மேடத்தை அங்க காணோம். எனக்கும் என் பெண்ணைத் தெரியும் நல்லா சார்" என எதிர்பக்கமிருந்து பல் கடிபட,

"தெரிஞ்சு தான் அவளைத் திட்டின்னியாக்கும்" - மகள் காணாமல் போனதின் மூலகாரணத்தை துப்பறிந்து நல்லா பேச,

"ஆமா எனக்கு வேற வேலையில்லை பாரு. உன் பெண்ணைத் திட்டிறது தான் எனக்கு முழுநேர வேலையாக்கும் போடா" என அவன் மேல் பாய்ந்தவள், "அவளைத் திட்டுட்டு என்னால ஒரு வாய் சோறு சாப்பிட முடியுமா என்ன? எல்லாரும் என்னைக் கடிச்சு குதறிட மாட்டீங்க? " எனக் கூட சேர்த்துக் கொண்டாள்.

"யாரோ கொஞ்ச நேரம் முன்னாடி "எனக்கும் என் பெண்ணைத் தெரியும்"ன்னு என்கிட்டே சரிக்கு சரி பேசினாங்க. அது உன் தங்கச்சியா திலோ?" என நல்லா சிரிக்க,

"ஹே விளையாடதே நல்லா, நேரம் காலம் தெரியாம கெக்கே பிக்கேன்னு என்ன சிரிப்பு. நானே அவளைக் காணலைன்னு பதறிப் போயிருக்கேன்" என அவனது கிண்டலுக்குப் பதில் சொல்லாமல் நிலைமையின் திவீரத்தை எடுத்துரைக்க முயன்றாள், எதிர் புறம் இருந்தவள்.

ஆனால் சுனாமியே வந்தாலும் நாங்க அசரமாட்டோம் என்பது போல் "நான் அவளுக்கு உடம்புக்கு ஏதோன்னு பயந்து போயிட்டேன். முன்னாடியே மலரைக் காணோம்ன்னு சொல்லியிருந்தா இந்நேரம் கண்டு பிடிச்சிருக்கலாம்" என நல்லா மீண்டும் சிரிக்க,

"இப்ப கண்டு பிடிக்கிறது தானே! பேச்சு மட்டும் தான்டா நீ"- திலோவிடமிருந்து கட்டளையும் கிண்டலும் கூடவே ஜோடி போட்டு வந்தன.

"ஹால்-ல போய் நின்னுட்டு “டாடி, டென் கிட்-காட் வாங்கிட்டு வந்திருக்காங்க. அம்மா, அகில், பாட்டி மூணு பேரும் எல்லாத்தையும் சாப்பிடப் போறோம். மலருக்கு கிட்-காட் பிடிக்கும்... ஆனா அவளைக் காணோமே! என்னடா அகில் செய்றது? நாமளே சாப்பிடுவோம் வா” - அப்படின்னு சிரிக்காம சொல்லிப் பாரு, பத்தே நிமிஷத்தில பூனை குட்டி மாதிரி நடந்துவருவாங்க" என நல்லா சொல்லிக் கொண்டிருக்கும் போதே

"ஹே திலோ, மலர் இங்க இருக்கா" என்ற தேவின் குரல் உரக்கக் கேட்க, அதைத் தொடர்ந்து "அச்சோ உள்ளேயே தாச்சுப் போய்ட்டாமா மலர்" என வருத்தம் கொண்டான் மலரின் தமையன்.

"எங்க இருந்தா?" என நல்லா கேட்க, "உன் ரூம்ல இருந்திருப்பா போல, நந்தா அங்கிருந்து தான் வெளிய வராங்க. வரவர உன்னோட பொண்ணு டிசைன் டிசைனா ஒளிஞ்சு என்னைப் படுத்தி எடுக்கிறாடா" என்றாள் திலோத்தமை.

"பின்னே, அப்பாக்குத் தப்பாம பிறந்த அப்புக்குட்டி இல்ல" என நல்லா பெருமை பேச, "போதும், நீ அடங்கு! குழந்தை தூக்கம் களைந்து சிணுங்க ஆரம்பிக்கிறா. அவளை சமாதானம் பண்ணிட்டு உன்கிட்ட பேசுறேன். அப்பாக்கிட்ட தரேன் பேசிட்டு இரு" என்றவள் பெத்தபெருமாளிடம் தொலைப்பேசியைக் கொடுத்துவிட்டு சிணுங்கலின் அளவை கொஞ்சம் கொஞ்சமாய் உயர்த்திக் கொண்டிருந்த செல்வச் சீமாட்டியிடம் விரைந்தாள்.

தேவின் கையிலிருந்து அவளை வாங்கியவாறே, "சரிடா, சரிடா, என் அப்புக்குட்டி எதுக்கு அழறீங்க! வேணாம்மா, வேணாம்டா ராஜாத்தி. நல்லாப்பா பேசுறாங்க, மலர் குட்டிப் பேசுறீங்களா?" என சமாதானம் செய்ய ஆரம்பித்தவள், ஐந்தே நிமிடத்தில் குழந்தையின் அழுகையை கரைத்திருந்தாள்.

தனது கொடியிடையில் கனமில்லாத மெல்லிய பூப்பந்தாய் அமர்ந்திருந்த மதி மயக்கும் மழலையை மலரின் மென்மையுடன் வருடி, "ஹப்பாடா, அழுகையை நிறுத்தியாச்சா? சமத்து குட்டி!" என திலோ கொஞ்ச,

"மலர் சமத்து தானே… அப்புறம் ஏன் அம்மா "ஆஆ" அச்சே?" என அவளிடம் கேள்வி கேட்டாள் மகள்.

"மலர் இப்போ சமத்தா தான் இருக்கா… ஆனா கொஞ்ச முன்னாடி சமத்தில்லையே! சமத்தா இருந்தா அம்மா கொஞ்சுவேன். அடம் பண்ணினா அடி தான். எல்லா நேரமும் சமத்தா இருந்தா அடியே இல்லை, ஒரே கொஞ்சல்ஸ் தான், கிஸ் தான், சாக்கி தான்" என அசராமல் பதில் கொடுத்தாள் தாய்.

"ம்ம்ம்" என யோசனை பாதி, எதிர்ப்பு பாதியாக மலர் யோசித்துக் கொண்டிருக்கும் போதே "ஹே சின்னராணி, வாங்க வாங்க நல்லாப்பாகிட்டப் பேசுங்க" என அவளது காதில் தொலைப்பேசிக் கருவியை வைத்த அவளது பாட்டனார், அவள் பேசுவதற்கு ஏதுவாக அதைப் பிடித்துக் கொண்டு திலோவின் அருகே நின்றார்.

தேன் குழைத்து வந்த "நல்லாப்பா" என்ற குரல், அழைப்பிற்குரியவனை மட்டும் சந்தோஷத்தில் மூழ்கடித்தது மட்டுமில்லாமல், மற்ற அனைவரையுமே புன்னகை கொள்ள வைத்தது.

"குட்டிம்மா, என்ன செய்றீங்க? எதுக்காக நல்லாப்பா ரூம்ல ஒளிஞ்சிருந்தீங்க?" என நல்லா மகளிடம் விசாரணையைத் துவக்க, தந்தையிடம் பேசுவதற்கு ஏதுவாக தாயின் இடுப்பை இன்னும் இறுகக் கட்டிக் கொண்டு, கையை அவளது கழுத்தைச் சுற்றியிட்டு, தன் முகத்தை தாயின் தோளில் சாய்த்து வசதியாக அமர்ந்துகொண்டாள் மகள்.

இப்படி செய்ததில் பாட்டனார் பிடித்திருந்த தொலைப்பேசிக் கருவி சற்றே இடமாறிவிட "ஒழுங்கா பிதிங்க தத்தா" என்ற கட்டளை வேறு வேகமாக வெளிவந்தது.

"சரிங்க ராணியம்மா" என அடக்கிய சிரிப்புடன் பெத்தபெருமாள் பேத்தியின் கட்டளையை நிறைவேற்ற, நல்லா சிரிப்புடன் காத்திருந்தான்.

"நல்லாப்பா, மலர் ஒண்ணுமே செய்ல. அம்மா மம்மம் செஞ்சா...மலர் வைட் கலர் மம்மம் பூ கலர் ஆக்கிதா" என தலையும் புரியாமல் காலும் புரியாமல் தனக்குப் புரிந்த வகையில் எடுத்துரைக்க,

"அப்பாக்குப் புரியலையே குட்டிம்மா" என நல்லா பரிதாப குரலெழுப்ப, சொன்னதையே மூன்று முறை திரும்பச் சொன்னவள் "தத்தா, நல்லாப்பாக்கு ஒண்ணுமே புதியல, சரியான அபிஷ்து" என்றாள் அச்சர சுத்தமாக.

அதை கேட்ட அனைவரும் கலகலவென சிரித்ததில் நல்லாவின் முகத்தில் சிரிப்பும், ஏக்கமும் சேர்ந்தே குடிவந்தன.

“வரவர கொழுப்பு கூடி போச்சு, ஃபோனை கொண்டா இப்படி! “என்ற அதட்டலுடன் மகளிடமிருந்து தொலைப்பேசிக் கருவியைத் தன்னிடம் இடமாற்றிக் கொண்ட திலோ, "இன்னைக்கு சாயங்காலம் இட்லிக்கு மாவரைச்சுட்டு இருந்தேன்டா நல்லா. கிரைண்டர்ல அரிசியைப் போட்டுட்டு இவங்க ரெண்டு பேருக்கும் பால் சூடு பண்ணிட்டிருக்கேன்... இந்த கழுதை சத்தமில்லாமல் உள்ளே வந்து ஓடிட்டிருந்த கிரைண்டர்ல ink eraser ஒன்னை போட்டுட்டா. பெருசா ஒரு பொருள் ஓடிட்டிருந்த கிரைண்டர்ல விழுந்ததும் கட-முடன்னு ஒரே சத்தம்டா நல்லா! என்னவோ ஏதோன்னு திரும்பிப் பார்த்தா அந்த சத்தத்தில அரண்டு போய் மேடையைவிட்டிறங்கி மேடம் ஒரே ஓட்டம்" என்றாள் திலோ.

"ஹாஹாஹா" என அடக்கமுடியாமல் சிரித்த நல்லா, "இது தான் வைட் கலர் மம்மம் பூ மம்மம் ஆனா கதையாக்கும்" என்றான்.

"சிரிக்காதேடா, மாவு முழுசும் வீணாப்போய்டுச்சு... அதுமட்டுமில்லாம கிரைண்டரை சுத்தம் பண்றதுக்குள்ள பெரிய பாடாப் போச்சு." என தன் கஷ்டத்தை அவனுக்குப் புரிய வைக்க முயன்றாள்.

மனதைக் கொள்ளை கொள்ளும் மழலைச் செல்வங்களின் பெற்றோருக்கு அவர்களது மாபெரும் தவறுகளும் அரும்பெரும் பொக்கிஷங்களாய் விளங்கும் என்ற கூற்றிற்கு ஏற்ப, மகளின் செயலை ஆஸ்கார் விருதுக்குப் பரிந்துரை செய்யும் எண்ணத்திலிருக்கும் நல்லாவிற்கு திலோவின் கஷ்டம் கடுகாய் தெரிந்தது.

தாய் சொல்லிய விஷயத்தையும், தன் நல்லாப்பா அதை கேட்டு கோபப்படாமல் சிரித்த சத்தத்தையும் கேட்டிருந்த மலர், "நல்லாப்பா, நல்லாப்பா... மலர் பேசுதேன்" எனக் குதித்தாள்.

"குந்தாணி மாதிரி இருந்திட்டு குதிக்காதேடீ! என் இடுப்பு உடைந்திடப் போகுது" என திலோ கடிந்து கொள்ள, மகளைத் தன் தோளிற்கு இடமாற்றிக் கொண்டான் தேவநந்தன்.

சந்தோஷமாய் தன் தந்தையிடம் தாவியவள் அவனிடம் தன் கையையும், காலையும் காட்டி "டாடி, அம்மா தொம் தொம் அச்சா" எனக் குற்ற பத்திரிக்கை வாசித்தாள். அதே பத்திரிக்கை நல்லாப்பாவிடமும் வாசிக்கப்பட இரு தந்தையரும் மகளை ஒருங்கே சமாதானம் செய்துமுடித்தனர்.

ஒருவழியாய் சமாதானம் முடிந்தபின்னர், "நல்லா, என்ன கோபம் என்றாலும் அலமாரிக்குள்ள ஒழிய கூடாதுன்னு சொல்லுடா. யாரவது தெரியாம அலமாரியை காத்து போகாம சாத்திட்டா... எனக்கு உயிரே உறையுது" என உடல் சிலிர்த்தான் தமையன்.

மகளின் செயல்கள் ரசிக்கக் கூடியவை தான் என்றபோதிலும் அதில் அவளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பை எண்ணிய வினாடி தமையனுக்கு உறைவது போலிருந்த உயிரை அவனை விட்டுப் போவது போலிருந்தது. நிலைமையின் தீவீரம் இன்று பெரிதாய் தெரியவில்லை என்றாலும் பின்னாளில் பெரும் சேதாரங்களை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது என்பதை பகுத்தறிந்த வினாடி மகளிடம் அவளுக்குப் புரியும் வண்ணம் எடுத்துரைக்க முயன்றான் நல்லா.

"குட்டிம்மா, அம்மா அடிச்சா கப்போர்டுல ஒழியக் கூடாதுடா! தாத்தாவோட ஆபீஸ் ரூம்-ல இருக்க டேபிளுக்குக் கீழ உட்கார்ந்துக்கோங்க சரியா?" என நல்லா சொல்ல,

"ஹே, அவகிட்ட குறும்பு பண்ணக்கூடாதுன்னு சொல்லுடான்னா அலமாரி வேணாம் டேபிள்ன்னு புது இடம் சொல்லித் தர" என திலோ பல்லைக் கடிக்க,

மகளோ, "தேபிள் கீழ இருந்தா அம்மா பாத்துவா, அப்புறம் அச்சுவா நல்லாப்பா" என தன் கவலையை முன்வைத்தாள்.

மகளின் கவலை, அவளது தாயின் கோபம் அனைத்தையும் சரி செய்து அழைப்பைத் துண்டிக்க நல்லானந்திற்கு சரியாக ஒரு மணி நேரம் பிடித்தது.

மகளின் குறும்பு, குடும்பத்தினரின் கவனிப்பு மிகுந்த பாசம், தாயின் "நல்லா, நல்லா இருக்கியாடா" என்ற அன்பு வெளிப்பாடு, தேவின் "வி மிஸ் யுடா"வில் வெளிப்பட்ட பாசம் என நினைக்க நினைக்கத் தெவிட்டாத உணர்வுகளுடன் நல்லாவின் அடுத்த நாலு நாட்கள் பறந்தோடிச் சென்று அந்த வாரத்தை நிறைவு செய்தது.

இனிதே சென்ற வாரநாட்களும், வீட்டினரின் நினைப்பில் வாட்டம் நிறைந்து சென்ற வார இறுதிகளும் நல்லாவின் அடுத்த வாரத்தை வருத்தம் மற்றும் சந்தோஷத்துடன் எதிர்கொள்ள வைத்தது. ஆனால் அவனது எதிர்பார்ப்பை பொய்யாக்கும் வண்ணம் அந்த வாரம் சந்தோஷமிக்கதாகவே அமைந்தது.

திங்கட்கிழமை மாலை நல்லானந்தின் உணவு நேரமான எட்டு மணிக்கு அவனது தொலைப்பேசி கிணுகிணுக்க, வியப்பினூடே அதை எடுத்து காதில் வைத்தான் அவன்.

"நல்லா ஹியர்" என்ற அறிமுகத்திற்குப் பதிலாக, "சார், நான் அன்பரசி. இப்போ பேசலாமா?" என்ற பதவிசும், பண்பும் பொங்கி வழிந்த குரல் வெளிவந்தது.

"ஹாய் அன்பரசி, எப்படி இருக்கீங்க? நான் டின்னர் சாப்பிட்டிட்டு இருக்கேன். பத்து நிமிஷம் கழிச்சுக் கூப்பிடுறீங்களா?" என்றான் நல்லா.

"நான் சுகமா இருக்கேன்! என் நலத்தைப் பற்றி விசாரித்ததற்கு நன்றி சார்!" என அவனது விசாரிப்பிற்கு ஏற்ற பதில் கூறிவிட்டு, "சரிங்க சார், பத்து நிமிஷம் கழிச்சுப் பேசுறேன்" என்றவள், அவனது ஆமோதிப்பைப் பெற்று கொண்டபின்னர் அழைப்பைத் துண்டித்தாள். அவள் துண்டித்து சில வினாடிகள் கழிந்தபின்னரும், காது வழியே நெஞ்சில் பாய்ந்த "சுகமா இருக்கேன்" என்ற அவளது வார்த்தைகள் நெஞ்சின் ஓரம் ஒரு குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

சுமாராய் வந்திருந்த ரசத்தை சுகமான அந்த வார்த்தைகள் சுவையாக்க, நல்லாவின் உணவு நேரம் வேகமாய் கழிந்தது. சரியாக பத்து நிமிடத்தில் மீண்டும் அழைப்பு வரவே, அதுவே நல்லாவிற்கு அந்த நாளின் அடுத்த அதிசயமாகப்பட்டது.

தொடக்க அறிமுகங்களுக்குப் பின்னர், "விஜய் சார்... திங்கட்கிழமையிலிருந்து உங்ககிட்ட ரிப்போர்ட் பண்ண சொன்னாங்க. எனக்கு ஏதாவது வேலை தரீங்களா? ப்ராஜெக்ட் பத்தின அடிப்படை தகவல் எல்லாம் பார்த்திருக்கேன் சார். நீங்க என்ன வேலை கொடுத்தாலும் நானாகவோ இல்லை யாரோட உதவியை எடுத்துக்கிட்டோ முடிக்க முயற்சி பண்றேன்" என அன்பரசி தன் தெவிட்டாத ஆர்வத்தை அதன் அமுதம் குறையாமல் தன் மேலதிகாரி முன்னர் எடுத்து வைக்க, நல்லாவின் முகத்தில் புன்னகை மிதந்தது.

தனக்கே எல்லாம் தெரியும் என்ற மெத்தனமில்லாமல் பிறரது உதவியை நாடி வேலையை முடிக்கிறேன் என அவள் கூறிய பாங்கு அவளது ஆர்வத்தை ஆர்வக்கோளாறு போல் காட்டாமல் அழகாய் காட்ட, நல்லாவின் மனதில் அவளது இடம் மேலும் உயர்ந்தது.

"ஹ்ம்ம், உங்களுக்குக் கொடுக்கப் போற முதல் வேலை ரொம்ப ரொம்ப முக்கியமானது. அதை ஒழுங்கா செஞ்சா தான் அடுத்த வேலை கொடுக்க முடியும், ஏன் உங்ககிட்ட கொடுக்கிறதா வேண்டாமான்னு யோசிக்கவே முடியும்!" என நல்லா லேசாய் கடினமாக்கப்பட்ட குரலில் கட்டளையிட

"சொல்லுங்க சார், கண்டிப்பா செய்றேன்" என அன்பரசியின் பதில் சில வினாடிகள் கூட தாமதப்படாமல் வெளிவந்தாலும், அதிலிருந்த ஸ்ருதி நூலிழை அளவு குறைந்திருந்தது நல்லாவின் கூர் புத்திக்குத் தப்பவில்லை.

வேலையைக் கொடுப்பதற்கு முன்னர் "சொல்றதை ஒழுங்கா செய்வீங்களா அன்பரசி! are you confident? sure?" என அமிதாப்பச்சனை மிமிக் செய்ய முயன்று, அதில் பரிதாபமாய் தோற்று, தோற்றது வெளியே தெரியாமல் மிடுக்காய் முடித்தான் நல்லா.

அவனது தோல்வியை கண்டுகொள்ளும் நிலையில் அன்பரசி இருக்கவில்லை என்பதால் "கண்டிப்பா சார்" "எஸ் சார்" என்ற பதில்களை சளைக்காமல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"உங்களுக்குக் கொடுக்கிற முதல் வேலை "சார்"-ன்னு கூப்பிடற பழக்கத்தை விடுறது. அதை எப்போ விடுறீங்களோ அப்போ நாம அடுத்த வேலையைப் பத்தி யோசிக்கலாம். அப்ப சரி, மிஸ். அன்பரசி! இது தான் நான் உங்களுக்குக் கொடுக்கிற முதல் வேலை. இதை நீங்க எவ்வளவு நேர்த்தியா செய்து முடிக்கிறீங்களோ அப்போ எனக்குக் கால் பண்ணுங்க" என அவளது வேலையை நிர்ணயித்த நல்லானந்த், அவளது "சரிங்க சார்" என்றதில் உள்ளுக்குள் புன்னகைத்தாலும் வெளியே அதை காட்டாமல் "வேலையை முடிச்சிட்டுப் பேசுங்க" என்றதோடு அழைப்பைத் துண்டித்தான்.

அடுத்த இரண்டு மணி நேரத்தில் இந்தியாவிலிருந்து பல அழைப்புகள் வர, அவர்களது எல்லா கேள்விகளுக்கும் பொறுமையாய் பதில் கூறி முடித்தவனை அன்பரசியின் அழைப்பு எதிர்கொண்டது.

நல்லா அழைப்பை எடுத்து, பேசுவது தான் என்று கூறியதும் அங்கே சில வினாடிகள் அமைதி நிலவ, பேசுவது அன்பரசி என்பதை அறியாத நல்லா தனது "ஹலோ"வின் சாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக் கொண்டே போனான். கடைசி "ஹலோ"வில் சற்றே சலிப்புத் தட்டுப்பட்டு அவன் அழைப்பைத் துண்டிக்கப் போவதை வலியுறுத்தவும் மறுபக்கம் அவசரமாய் உயிர் பெற்றது!

"நல்லா, அன்பரசி ஹியர்!" என்ற குரலில் கம்பீரம் புக முயன்றிருக்க, அந்த முயற்சியில் தோல்வியே பிரதானமாய் வீற்றிருந்ததால், முடிவில் தயக்கம் அப்பட்டமாய் வெளிப்பட்டது!

"நல்லா, அன்பரசி ஹியர்" என்ற அன்பரசியின் குரல் கேட்ட வினாடி நல்லாவின் முகத்தில் பெரிதாய் சிரிப்பு மலர்ந்தது.

"வெரி குட். சொன்ன வேலையை ரொம்ப அழகா, நேர்த்தியா, அதுவும் சீக்கிரமே செஞ்சு முடிச்சுட்டீங்களே! என் மனமார்ந்த பாராட்டுகள்" என நல்லா தன் பாராட்டைத் தயக்கமின்றி முன்வைக்க "நன்றி சா... நல்லா" என்றாள் அன்பரசி.

"சா"விற்கும் "நல்லா"விற்கும் நடுவே கடிப்பட்ட அவளது நாக்கையும், அப்போது முகமறியாத அவளது முகத்தில் தோன்றியிருக்கும் பாவங்களையும் மனக்கண்ணில் கண்ட நல்லா தனக்குள் சிரித்துக் கொண்ட அதே வினாடி "ஹ்ம்ம், பரவாயில்லை! முன்னேறிட்டீங்க" என அடுத்த பாராட்டையும் முன் வைத்தான்.

அதன் பின்னர் நிஜமான வேலைக்குத் தாவிய நல்லா, அவளுக்கு என்ன தெரியும் என்பதை சில பல கேள்விகளை முன்வைத்து, அதற்கு அவள் அளித்த பதில்களின் மூலம் தெரிந்து கொண்டான். அவன் எதிர்பார்த்ததை விட ப்ராஜெக்ட் பற்றிய அவளது ஆராய்ச்சியும், புரிதலும் அதிகமாகவே இருக்க அவளது விஷயத்தில் எப்போதும் வியக்கும் நல்லா இப்போதும் தப்பாமல் வியந்து போனான்.

அவளுக்கு ஆர்வம் அதிகமிருக்கும் பகுதி என்று அவளது பதில்களால் அறிந்துகொண்ட பகுதியில் சில சின்ன வேலைகளை அவளுக்கு இட்டவன், அதை முடித்ததும் அவள் கண்ட முடிவுகளைத் தனக்கு மின்னஞ்சல் அனுப்பிவிட்டு வீட்டிற்குச் செல்லுமாறு கூறினான்.

வேலையை செய்யுமாறு மட்டும் பணிக்காமல் "இந்த வேலையை செய்ய உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும் அன்பரசி?" எனக் கேட்டு, அவளது "நீங்க சொல்லுங்க நல்லா, எப்போ முடிக்கணும்?" என்ற தயக்கத்துடன் கூடிய பதிலைப் பெற்றதும் லேசாக சிரித்தவன், அதை விழுங்கிக் கொண்டு "ஹ்ம்ம் ஒரு மணி நேரத்தில் முடிச்சிடலாமா? அரை மணி நேரம் சரியா இருக்கும் நினைக்கிறேன்" என்றான் யோசிப்பது போல்.

அவன் கொடுத்த வேலைநேரத்தில் திணறிப் போன அன்பரசி "முயற்சி பண்றேன் சா...நல்லா." என்று திக்கித் திணறினாள்.

Property of Bhava

முடியாது என்று கூறாமல் முயற்சி செய்கிறேன் என்ற மனப்பான்மை பாராட்டப்பட வேண்டியது தான் என்றாலும், சில சமயங்களில் அது நல்லதில்லை என்பதை அறிந்திருந்த நல்லா அதை அவளுக்கு எடுத்துரைக்க முயன்றான்.

"முடியாது என்றால் முடியாதுன்னு சொல்லிடனும் அன்பரசி. அதில எந்த தப்புமில்லை. உங்களால என்ன பத்து வருஷ அனுபவம் இருந்தாலும் நான் சொன்ன வேலையை ஆறு மணி நேரத்திற்குக் குறைஞ்சு முடிக்க முடியாது. அதனால இன்னைக்கு முழுதும் இதில வேலை பார்த்துட்டு வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி எனக்கு ஈமெயில் பண்ணிட்டுப் போங்க. சரியா?" என அவளுக்கு அறிவுறுத்திய நல்லா, "நன்றி நல்லா, நான் போய் வேலையை analyze பண்றேன். ஏதாவது சந்தேகம் இருந்தால் உங்களுக்குக் கூப்பிடலாமா?" எனக் கேட்டு அவனது "பன்னிரண்டு மணிக்கு முன்னாடி எப்ப என்றாலும் கூப்பிடுங்க" என அவனது சம்மதம் பற்ற பின்னர் தன் பணியைத் தொடரச் சென்றாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் அன்பரசி "சார்" என்ற அழைப்பைத் தொலைத்திருந்தது அவர்களது ப்ராஜெக்ட்டில் பெரும் புரபரப்பை ஏற்படுத்தியது.

"ஹே நம்ம அன்பு மேடம் சாரை தொலச்சிட்டாங்கடா மாஃபி!! ட்ரீட் ட்ரீட் ட்ரீட்" எனக் கத்தி அங்கே ஒரு பெரும் களேபரத்தை உண்டு பண்ணினான் அருண்.

"ஆமாடா, அன்பு ட்ரீட் கொடுத்ததே இல்லை. இன்னைக்கு வாங்கிடலாம்!" என கிருத்திகா கிடைத்த சந்தில் திரும்பவும் சிந்து பாட,

"ஹே கீர்த்தி, நீ உன் வீட்டு பப்பி முதமுதல குரைச்சதே அதுக்கு ட்ரீட் கொடுக்கல, அதை மதியம் கொடுத்துடு. ஈவீனிங் அன்பு தருவா" என அருண் சிரிக்காமல் கூற, ரகுவும் அன்பரசியும் சிரிப்பை உதட்டிற்குள் புதைக்க முயன்று தோற்றனர்.

கிருத்திகா அருணை வாயால் மட்டுமின்றி கையாலும் கவனித்துக் கொண்டிருக்க, "எங்களால மூணு மாசமா சாதிக்க முடியாத விஷயத்தை இரண்டே மணி நேரத்தில் சாதிச்சிட்டாரே நல்லா! நிஜமாவே கிரேட் தான்" என ரகு நல்லாவைப் பாராட்ட,

"முதல கொஞ்சம் கடுசா பேசினார் ரகு. முதல் நாளே அவர்கிட்ட கெட்ட பேர் வாங்கக்கூடாதில அதனால தான் கஷ்டப்பட்டு நல்லான்னு கூப்பிட்டேன்" என்றவள்,

"முதல தான் ரகு அப்படி இருந்தார், அதுக்கு அப்புறம் எவ்வளவு பொறுமை தெரியுமா? எனக்கு ப்ராஜெக்ட்ல என்ன தெரியும்ன்னு தெரிஞ்சுக்கிட்டு தான் வேலையே கொடுத்தார். அது மட்டுமில்லாம என்னால பண்ண முடியுமா? எவ்வளவு நேரம் வேணும்ன்னு கேட்டார்" எனத் தனக்கு நல்லாவிடம் பிடித்ததை நண்பனிடம் பகிர்ந்தாள்.

"அவர் எவ்வளவு நேரம் வேணும்ன்னு கேட்டதுக்கு நீ என்ன சொன்ன? கடமை திலகம், நேரம் தவறா சிங்கம், தலை கீழாய் நின்றேனும் வேலையை முடிக்கும் வேங்கை என்ற பெயருக்கு ஏற்ப ஒரு மணி நேரத்தில முடிச்சிடுறேன் நல்லான்னு சொன்னியா?" என அருண் கிண்டல் செய்ய, சற்று முன் நடந்த தொலைப்பேசி உரையாடலை அவனிடம் பகிர்ந்த கையோடு அவன் முதுகில் லேசாய் ஒரு அடி வைத்த அன்பரசி, "எனக்கு வேலையிருக்கு" என்ற சொல்லோடு நகர்ந்தாள். "சரியான allocation wanted கேஸ்டா இவ" என அருண் ரகுவிடம் சலித்துக் கொள்வதோடு அவர்களும் களைந்தனர்!

அன்றைய வேலை சரியாக ஐந்து மணிக்கு முடிய, நல்லானந்த் கூறிய ஆறு மணி நேரக்கணக்கு மனதில் தோன்றி மனதின் உற்சாகத்தை மென்மேலும் கூட்டியது.

தான் செய்து முடித்த வேலைகளின் சாரம்சத்தை நல்லானந்திற்கு மின்னஞ்சல் அனுப்பிய அன்பரசி, மனதின் நிறைவு முகத்தின் அழகை மெருகூட்ட ரயில் நிலையம் சென்றாள்.

மறைமலைநகரில் கிருத்திகாவும், அன்பரசியும் சேர்ந்து தங்கியிருக்கும் வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தபோது வெறிச்சோடியிருந்த அகம், அவளது அகத்தின் அழகை மெல்ல குறைத்து புறத்தின் மெருகை மங்க வைத்தது.

வெறிச்சோடியிருக்கும் இந்த வீட்டைப் போல் தனக்கும் வாழ்வில் பிடிப்பில்லாமலே போய்விடுமோ என்ற எண்ணிய அன்பின் மனத்திரையில் நித்யா வலம்வந்தாள்.

மனக்கண்ணில் கண்டவளை நேரில் காணும் ஆவல் தலைதூக்க, அது இப்போதைக்கு முடியாது என்பதால் கைப்பேசியின் உதவியை நாடிய அன்பரசி, நித்யாவின் வீட்டு எண்ணை அழுத்தினாள்.

"அன்பா" என்ற துள்ளல் நிறைந்த விளிப்பிற்கு அன்பரசி ஏங்கியிருக்க, "யாரு பேசுறது?" என்ற கடினக் குரல் அங்கிருந்து தேனாய் பாய்ந்துவந்து அன்பரசியின் செவியைப் பதம் பார்த்தது.

எதிர் முனையில் இருப்பவரை அடையாளம் கண்டுகொண்டதன் விளைவாக "நான்...நான் அன்பரசி பேசுறேன். நித்யா இருக்காளா தா...த்தா" எனத் தயக்கம் முழுதாக விலகாமல் கேட்டாள் அன்பரசி.

அவளது தயக்கத்தை வருத்தமாக்கும் தந்திரம் எதிர்புறமிருந்தவருக்கு கைவந்த கலையாக இருந்தபடியால் "நீயா? நான் என்ன உனக்கு ஒட்டா உறவா, எதுக்குடி கழுதை தாத்தான்னு கூப்பிடற, கண்ட அநாதை கழுதைக்கெல்லாம் நான் பாட்டனில்லை" என அவர் எகிறிக் கொண்டிருக்க, "நான் அநாதையில்லை" என்றாள் அன்பரசி மெல்ல.

"அநாதையில்லையாமே! அம்மையும் அய்யனும்..." அவர் மேலே பேசும் முன்னர் தொலைப்பேசிக் கருவி அவர் கையிலிருந்து பறிக்கப் பட்டது.

"அன்பு" என அதற்குப் பின்னர் வெளிவந்த குரலில் பேசுவது நித்யாவின் கணவன் சத்யசேகரன் என்பதை அறிந்து கொண்ட அன்பரசி, "அண்ணா, எப்படி இருக்கீங்க?" என்றபோது அதில் பெரும் நிம்மதியும் "காப்பாற்றி விட்டாயே என் தெய்வமே" என்ற நன்றியும் சூழ்ந்திருந்தது.

"நான் சுகம்! நீ சுகமாயிட்டு இருக்கியா?" என தமிழ் கலந்த மலையாளத்தில் சத்யசேகரன் கதைக்க, ஊர் வந்து சேர்ந்த நிம்மதி அன்பரசிக்கு வந்தது.

"சுகம் அண்ணா, நித்யா எப்படி இருக்கா? காலையில தலை சுத்தல், வாந்தி இருந்ததே!" என அவளது விசாரணைக்கு "உடம்பு கொஞ்சம் தேறி வருது. ஆனா கடைக்கு வரவேண்டாம் என்று சொன்னா கேட்பதில்லைமா" என அவன் கணவனாய் தாயாகப் போகும் தன் மனைவியைத் தாங்கியது மனதை வருடியது.

"அவளிடத்து ஃபோனை கொடுக்கிறீங்களா அண்ணா? இரண்டு நாளாச்சு" என அன்பரசி பறக்க, "தாத்தா பேசினதை மனசில் வச்சுக்காதே!" என்றான் சேகரன் மெதுவாக.

"பரவாயில்லை அண்ணா" என்ற அன்பரசியை மேலும் காக்க வைக்காமல் "மேகலை தோட்டத்தில இருக்கா! கொடுக்கிறேன்" என்றவாறே வெளியே அவன் நகர்வது அன்பரசிக்குப் புரிந்தது.

"அன்பா, எப்படிடி இருக்கே? நேத்திக்கு கூப்பிட்டப்ப என் ஃபோன் எடுக்கல? உடல் சுகம் எப்படி? ஒழுங்கா சாப்பிடிறியா இல்லை தினம் தயிர்சோறு தானா? காய் மட்டுமாவது சேர்த்துக்கோ அன்பா? வெறும் தயிர் சோறு சத்தே இல்லை" என அன்பரசியை பேசவே விடாமல் நித்யா பேசிக் கொண்டே போக, அன்பரசி சிரித்தாள்.

"இந்தக் கேள்வியெல்லாம் நான் உன்னைக் கேட்டுடுவேன்னு பயந்து போய் தானே நீயே கேட்டுட்ட? நீ தான் உடம்பை கவனமா பார்த்துக்கணும். உள்ளுக்குள்ள என் மருமகப்பிள்ளை பத்திரமா இருக்காரா?" என அன்பரசி நிதானமாய் கேட்க,

"கேட்டக் கேள்விக்குப் பதில் சொல்லாம எப்போ பார்த்தாலும் எதிர் கேள்வி... ப்ச்..நீ திருந்தவேமாட்டே மக்கா" என்ற நித்யா என்றழைக்கப்படும் நித்யமேகலை

அதன் பின்னர் பரஸ்பர நல விசாரிப்புகள் முடிய, "ஒரு நிமிஷம் காத்திரு" என்ற நித்யாவிடம் யாரோ ஏதோ பேசுவது அன்பரசிக்கு அரைகுறையாக புரிந்தது.

"அப்பச்சன் ஏதும் சொல்லிச்சா? நீ ஏன் வீட்டு எண்ணிற்கு அழைக்க? அது தான் நாக்கில பல்லு படமா பேசுமில்ல? என்னோட மொபைல்லுக்கு அழைக்கவேண்டியது தானே?" என்ற நித்யாவின் வேக வார்த்தைகளில் பாசமே பிரதானமாய் இருக்க, "நான் மனசில் ஏதும் ஏத்திக்கலை. நீ வருந்தாதே!" என அவளைத் தேற்றியவள் "அவர் ஒன்னும் இல்லாததை பேசலையே" என்ற வாக்கியத்தை சேர்க்காமல் இருந்திருக்கலாம்.

பேசிய வாக்கியத்திற்குப் பதிலாக, "ஒ, உனக்கு எங்களையெல்லாம் கண்டா உறவா தெரியலையாக்கும்? ஒதுக்கி வைக்கிறீகளோ?" என நித்யாவின் வசவை வாங்கிக் கொண்டு "மன்னிச்சிக்க மக்கா" என மன்னிப்பை பலமுறை வேண்டினாள் அன்பரசி!

"எப்போ இங்க வர?" என அவளது வருகையை உறுதி செய்து கொள்ளும் எண்ணத்தில் நித்யா கேள்வியை முன்வைக்க, "இன்னும் இரண்டு வாரம் கழிச்சு வரேன் நித்யா" எனக் கூறி அவளிடம் அதற்கும் வேண்டிய வசவை வாங்கிக் கொண்டு நிம்மதியுடன் அழைப்பைத் துண்டித்த அன்பரசி, கிருத்திகாவை அழைத்து இரவு உணவிற்கு வீட்டிற்கு வருவாளா எனக் கேட்டாள். அவளோ வேலையிடத்தில் உணவை முடித்துக் கொண்டு வருவதாக கூற, தன் இரவு உணவிற்கென ராகி தோசை வார்த்து நிதானமாக உண்டவள், தன் இரவு நேர பிரார்த்தனையை முடித்துக் கொண்டு நிம்மதியாக உறங்கிப்போனாள்.

காலையில் நல்லாவுடன் பேச்சுவார்த்தை, அவன் கொடுக்கும் வேலையை செவ்வனே முடிப்பது, மாலையில் நித்யாவுடன் அரை மணிநேரம் பேச்சு, உணவு, உறக்கம் என பத்து நாட்கள் கழிய, அந்த பத்து நாட்களின் முடிவில் "சா" என ஆரம்பித்து "நல்லா"வென முடியும் அழைப்பு முற்றிலும் மாறி "நல்லா" என கன கம்பீரமாக வெளிவந்து கேட்டிருந்த ஆடவனையும், சொல்லிய பெண்மணியையும் சில சமயமன்றி பல சமயம் சிரிப்பிலும் வியப்பிலும் ஆழ்த்தியது.

வேலை விஷயமாக நடக்கும் பேச்சுவார்த்தைகள் தவிர்த்து சொந்த விஷயங்களுக்குத் தாவும் நிலையில் இருவரும் இருக்கவில்லை என்பதால் பெரும் மாற்றங்கள் ஏதுமின்றி நாட்கள் பறந்தோடின. அன்பரசியின் பேச்சும், அவள் அனுப்பும் மின்னஞ்சலில் இருக்கும் ஆழமும் அர்த்தமும், வேளையில் அவளது நேர்த்தியும் நல்லாவை லேசாய் ஆட்டி வைத்தன என்பது தவிர விஷயங்கள் பெரிதாய் அரங்கேறவில்லை.

இப்படியாக நாட்கள் கனிய, ஒரு இனிய காலையில் வேலை பற்றிய சம்பாஷனைகள் முடிந்ததும் "நல்லா, அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை நான் லீவ் எடுத்துக்கலாமா? விஜய் உங்ககிட்ட கேட்க சொன்னார். நீங்க சரின்னு சொன்னா எடுத்துக்கலாம்ன்னு சொன்னார்" என்றாள் அன்பரசி தயக்கமும் எதிர்பார்ப்பும் சரிபாதியாய் கலந்து.

"நோ ப்ரோப்லம். எடுத்துக்கோங்க. ஊருக்கா? அம்மா-அப்பாவை பார்க்கவா?" என நல்லா பேச்சு வாக்கில் கேட்டுவிட, சில மணித்துளிகள் பெரும் அமைதி நிலவியது.

இரண்டு நிமிட அமைதியை கிழித்து "அன்பரசி" என நல்லா அவளை அழைக்க,

"அம்மா, அப்பா இல்லை" என்றாள் அன்பரசி மெதுவாக. அவளது மெல்லிய குரலின் பின்னர் மறைந்திருக்கும் வேதனையை துண்டிவிட்ட குற்ற உணர்வில் தவித்துப் போன நல்லா "உங்க வேதனையைத் துண்டிவிட்டதற்கு என்னை மன்னிச்சிடுங்க அன்பரசி" என்றான் தேறுதலாக.

"ஜனனமும் மரணமும் நம்ம கையில் இல்லையே! அதனால் நீங்க வருத்தப்படாதீங்க!" என அன்பரசி அவனுக்கே பாடம் நடத்த, அவளது கவனத்தை வேறு விஷயங்களில் திருப்பும் எண்ணத்தில் "எந்த ஊருக்குப் போறீங்க அன்பரசி?" என்றான் நல்லானந்த்.

"நாகர்கோயில்ல . என் ஃபிரண்ட் இருக்கா. அவளைப் பார்க்கப் போறேன் நல்லா" என அவனது இரண்டு கேள்விக்களுக்கும் சேர்த்து பதில் சொன்னாள் அன்பரசி.

அதன் பின்னர் சொந்த விஷயங்களில் கேள்வி கேட்டுக் குடையாமல் அவளை வேலையைப் பார்க்க விட்ட நல்லாவால் தான் அவனது வேலையைப் பார்க்க முடியவில்லை.

அன்பரசியின் பெற்றோர் இப்புவியில் இல்லை என்ற விஷயம் மலரின் நியாபகங்களை வெகுவாய் தூண்டிவிட்டது. அன்பில் தோய்ந்த மலரும், மலரினும் மெல்லிய அன்பும் அவனது இரு கண்களிலும் மாறி மாறி வர, முகமறிந்த மகளிடம் தோன்றிய அதே பரிவு முகமாறியா அன்பரசியிடமும் தோன்றி சில மணி நேரம் நெஞ்சை அலைக்கழித்தது!

மனதின் அலைப்புருதலும், தவிப்பும் அடங்குவதாய் இல்லை என்றவுடன் தமையனின் வேலை நேரம் என்று கூட பாராமல் அவனை அழைத்தான். அவனிடம் சற்று நேரம் பேசியபின்னர், "திலோ ஸ்கூல்-ல இருந்து வந்ததும் என்னைக் கூப்பிட சொல்லுடா.

எவ்வளவு நேரமானாலும் எனக்கு அவகிட்ட பேசியே ஆகணும். ப்ளீஸ் தேவ்" என்றான் தீர்மானமாக. "கண்டிப்பாடா, நீ மனசைப் போட்டுக் குழப்பிக்காதே! மலர் ரொம்ப சந்தோஷமா, எந்த கவலையுமில்லாம இருக்கா... சரியா" என்ற தேறுதலோடு அண்ணன்-தம்பிக்குள் நடந்த பேச்சு வார்த்தை முடிந்தது!

திலோவிடம் பேசி "லூசாடா நீ? சின்னக்குழந்தைடா மலர்! அவளுக்குத் தெரியவே செய்யாத விஷயத்தை நினைச்சு வருத்தப்படற உன்கிட்ட எனக்குப் பேசவே இஷ்டமில்லை. இன்னைக்கு ராத்திரி வீட்டிற்குக் கூப்பிட்டு எல்லாரையும் வருத்தப்பட வைக்காதே சொல்லிட்டேன்" எனக் கன கறாராய் அவள் கடித்துக் குதறியதை கேட்டுக் கொண்டபின்னர் கூட நல்லாவால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

திலோவின் வார்த்தையை மீறி அன்றிரவு வீட்டிற்கு அழைத்து, மகனையும் மகளையும் வீடியோ சாட் வரச் சொல்லி "நல்லாப்பா, பாத்தீயும் நானும் மாம்பம் சாப்தோம்" எனத் தன் சின்ன வாய்க்குள் பெரிய மாம்பலத் துண்டை வைத்துக் கொண்டு மகள் பேசிய அழகை ரசித்து, தன் தாயும் மகளும் ஒருவருக்கு ஒருவர் பொய் சண்டையிட்டு மாம்பழத்தை ருசித்து உண்டதை ரசித்து, சிரித்து மகிழ்ந்தவனை மேலும் தன் மழலையால் மகிழ்வித்தாள் மலர்! குடும்பத்தினருடன் நடந்த உரையாடலில் மனம் சற்றே அமைதியடைந்தாலும் தாய் தந்தையற்ற அன்பரசிக்கு உறவுகளேனும் பலமாய் அமைந்திருக்க வேண்டுமே என்ற பிரார்த்தனை விடாமல் நடந்து கொண்டே இருந்தது.

அவனது பிரார்த்தனையின் அளவை அதிகரிக்கும் பொருட்டு அன்பரசி ஊருக்குக் கிளம்பிச்சென்ற வெள்ளியை தொடர்ந்த அடுத்த வாரத்தில் பெரிய வேதனை ஒன்று வந்து சேர்ந்தது!

அன்பரசி ஊருக்குக் கிளம்பிச் சென்ற வாரஇறுதி, வேகமாக முடிவடைந்து இந்தியாவின் திங்கட்கிழமை பரபரப்பாய் விடிய, வான்கூவரின் ஞாயிறு மாலை சோம்பலாய் முடிந்து கொண்டிருந்தது!

அன்பரசி தனது நேர் மேற்பர்வைக்குக் கீழ் வந்த நாளிலிருந்து இன்று வரை சரியாக எட்டு மணிக்குக் கிணுகிணுத்த நல்லாவின் கைப்பேசி இன்று மௌனவிரதம் பூண்டிருக்க, நல்லானந்த் அதன் மௌனம் களைய காத்திருந்தான்!

அவனது செவிகளும், கண்களும் கைப்பேசியையே பார்த்திருக்க கைப்பேசியின் மௌனவிரதம் நல்லானந்தின் தவிப்பைக் கூட்டியது!

அன்பரசியின் குரலைக் கேட்டுவிட்டு இரவு உணவை உட்கொள்ளலாம் என நல்லா காத்திருக்க, வானாலியுடன் ஒட்டிக் கொண்டிருந்த ரவா உப்புமாவிற்கு நல்லாவின் வயிற்றில் சென்று ஒட்டிக் கொள்ளும் பாக்கியம் தாமதப்பட்டது.

மணி ஒன்பதை நெருங்கியபோது "வெள்ளிக்கிழமை மட்டும் தானே விடுப்பு கேட்டாள்? ஒரு வேலை திங்கட்கிழமையும் சேர்த்து கேட்டாளோ? நாம் தான் மறந்து விட்டோமோ?" என நல்லாவின் மனது ஒரு வாரம் முன்னர் அவர்களுக்குள் நடந்த முதல் மற்றும் கடைசியான சொந்த உரையாடலை அசைபோட, திங்கட்கிழமை என்ற வார்த்தை அவர்களது உரையாடலில் இடம் பெறவேயில்லை என்பதை நூறாவது முறையாக நல்லானந்த் உறுதி செய்தபோது கைப்பேசி மெல்ல இசைத்தது.

முதல் மணியிலேயே கைப்பேசியை எடுத்தவன் அதில் ஒளிர்ந்த எண்ணை கண்ணால் பார்க்காமலேயே காதிற்கு கொடுத்தான். "டேய் நல்லா" என திலோ அந்தப் பக்கமிருந்து குரல் கொடுத்தாள்.

"ச்சே நீயா" என நல்லா அலுப்பின் உச்சிக்குச் செல்ல, "அடப்பாவி! ச்சே நீயாவா? என்னடா மனசில நினைச்சிருக்க நீ?" என திலோ அவனை வறுக்கத் தொடங்க, "என்ன திலோ சீக்கிரம் சொல்லு? எனக்கு இன்னொரு கால் வரும்" என நல்லானந்த் அவசரப்படுத்தினான்.

"யாரோட ஃபோனுக்கு வெயிட் பண்றீங்க சார்?" என திலோ மர்மமாய் சிரிக்க, "விஷயத்தை சொல்லுன்னா ஏன் இப்படி சம்பந்தில்லாம பேசுற? ஆமா நீ ஸ்கூல்லுக்குப் போகலை? வீட்டில என்ன பண்ற?" என இதுவரை இருந்த தவிப்பை ஆதங்கமாக்கி அதற்குக் கோபவண்ணம் பூசினான்.

"இன்னைக்கு ஸ்கூல் லீவ்" என அவன் கேட்டதில் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லித் தான் ஒரு சிறந்த ஆசிரியை என்பதை செவ்வனே நிரூபித்தாள் திலோத்தமை.

பள்ளிக்கு விடுமுறையென்றால் தமிழ்நாட்டில் ஏதும் அரசுவிடுமுறையோ? அதனால் தான் அன்பரசி அழைக்கவில்லையோ என்றெண்ணிய நல்லா, இந்தியாவில் இயங்கும் நிறுவனத்தில் விடுமுறையென்றால் இங்கிருக்கும் கிளைண்ட்டிற்கு முன்கூட்டியே அறிவித்திருக்க வேண்டுமே? தான் அப்படி அறிவித்த நியாபகமில்லையே என யோசித்தான். பலத்த யோசனையின் முடிவில் எதுவுமே தெளிவாய் விளங்காமல் போகவே "ஏன் ஸ்கூல் லீவ்?" என திலோவிடமே கேட்டான்.

"ஸ்கூல் லீவ் இல்லை. நான் லீவ்" என திலோ ஒரொரு வார்த்தையாக எடுத்து வைக்க, "சை, சொல்றதை ஒழுங்கா சொல்றதுக்கென்ன? நான் கண்டதை நினைச்சு மறுகிப் போயிட்டேன்" எனத் தனது தவிப்பிற்கு அவளைக் குற்றவாளியாக்கி நல்லா குதற,

"ஹ்ம்ம், நீ கேட்கும் போதே ஒழுங்கா கேட்கிறதுக்கு என்ன?" என அவனிடம் பாய்ந்தாள் திலோ!

"விளையாடாதே திலோ! எதுக்கு ஸ்கூல்லுக்கு மட்டம் போட்டுட்டு வீட்டில உட்கார்ந்திருக்க? நீயே இப்படி இருந்தா உன்கிட்ட பாடம் படிக்கிற பசங்க எப்படி இருப்பாங்க? கொஞ்சம் கூட பொறுப்பே இல்லை!" என நல்லா மீண்டும் குதிக்க,

"யாருக்கு? எனக்கு பொறுப்பில்லையா? ஹ்ம்ம் இதெல்லாம் நேரக்கொடுமை" என அவனிடம் வாக்குவாதத்தை திலோ துவக்கிய வினாடி நல்லானந்தின் மொபைலில் இரண்டாவது அழைப்பு வந்தது.

திலோவிடம் இன்னொரு அழைப்பு வருகிறது என்று சொல்லும் பொறுமை கூட இல்லாமல் அவளை அப்படியே அந்தரத்தில் விட்டுவிட்டு, அடுத்த அழைப்பை ஐந்தே வினாடிகளில் எடுத்தான் நல்லா.

அங்கே "நல்லா, அன்பரசி ஹியர்" என்ற குரலை அவன் எதிர்பார்த்திருக்க, அதற்குப் பதிலாக "ஹலோ நல்லா, கிருத்திகா பேசுறேன். நீங்க ஒரு ஃபைல் லாக் பண்ணி வச்சிருக்கீங்க? அதை அன்-லாக் பண்ண முடியுமா?" என நல்லாவை "ஹலோ" கூட சொல்லவிடாமல் பேசி அவனை எரிச்சல் கொள்ள வைத்தாள், கிருத்திகா.

"ம்ம் சரி. பத்து நிமிஷத்தில் பண்றேன்" என்பதோடு அவளது பதிலை எதிர்பார்க்காமல் திலோவின் அழைப்பிற்குத் தாவியவன்,

"நீ இன்னும் ஃபோனை வைக்கலையா?" எனக் கேட்டு, "சாண்டல் டியர் ஆகிடும் படவா! தூரமா இருக்கோம் என்ற மிதப்பா?" என அவன் தன்னை அம்போ என விட்டுப் போன எரிச்சலையும் சேர்த்து, இந்தக் கேள்விக்கு அவனைத் திட்டிய திலோ "என்ன நல்லா? என்னாச்சு உனக்கு? இன்னைக்கு அப்பா-அம்மாவோட கல்யாண நாள். நேத்து நைட் யாரையும் தூங்கவிடாம பன்னிரண்டு மணிக்கே வாழ்த்து சொன்ன? இன்னைக்கு என்னாச்சு? ஆளே சரியில்லை" என்றாள் திலோ கோபத்திற்குப் பதிலாக அக்கறையை விலை பேசி!

அன்றைய பொழுதின் பின்காலை பதினோரு மணிக்கு வீட்டிற்கு அழைத்து, அனைவரையும் வீடியோ சாட் வரச் சொல்லி வாழ்த்துக் கூறியது அன்பரசியின் அழைப்பு வாராத தவிப்பில் முற்றிலுமாய் மறந்திருக்க, திலோவின் அக்கரைக்குப் பின்னர்தான் அன்று தாய்-தந்தையின் திருமண நாள் என்பதே நல்லாவிற்கு நினைவுவந்தது!

"ஆஹா, மறந்தே போயிட்டேன் திலோ! கோவிலுக்குப் போயிட்டு வந்துட்டீங்களா? குழந்தைங்க எங்க? அகிலும் ஸ்கூலுக்குப் போகலையா?" என அவள் மேலும் கேள்வி கேட்டுக் குடையாமல் இருக்கும் வண்ணம் குழந்தைகளின் விஷயத்திற்குத் தாவ முயற்சி செய்தான் நல்லானந்த். ஆம் முயற்சி மட்டும் தான் செய்தான்!

கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாமல் எதிர் கேள்விகேட்டால், எதிராளியின் பக்கம் ஏதோ தப்பிருக்கிறது என்பதை அறியாத ஆசிரியையா நம் திலோ! "டேய், no topic changing business. நழுவாம கேட்டக் கேள்விக்குப் பதில். யாரோட காலுக்கு வெயிட் பண்ணிட்டு இருக்க?" எனக் காரியத்தில் கண்ணாய் இருந்தாள் அவள்!

Tropics of B

"அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆபீஸ்ல இருந்து வர காலுக்குத் தான்! வேற ஏதுமில்லை!" என நல்லா சாமாளிக்க முயல, "ஹ்ம்ம் எப்போ சொல்லணுமோ சொல்லு! நீ ஏன்கிட்டே எதையோ மறைக்கிற என்றவரைக்கும் எனக்குத் தெரியுது. ஏதாவது பொண்ணு மேட்டராடா" எனத் திலோ நூல் விட்டுப் பார்க்க,

"ஆத்தா பரதேவதை! அப்படியெல்லாம் ஒண்ணுமில்லை! உனக்குத் தெரியாம எதையாவது செஞ்சு உன்கிட்ட பாட்டு வாங்கிக் கட்டிக்கிற சக்தி எனக்கில்ல. அதனால நம்பி ஃபோனை வை" என்றான் நல்லா, "நம்பி"யில் ஓர் அழுத்தம் கொடுத்து.

"நீ சொல்ற "நம்பி"யே நம்பிக்கை வைக்கிற மாதிரியில்லை! எப்படியோ போய் தொலை. வைக்கிறேன்" என திலோவும் அவனது "நம்பி"யை நம்பாமல் அழைப்பைத் துண்டிக்க முடிவுசெய்தாள். "ஹப்பா, வச்சுத் தொலை" என அவள் கூறியதற்கு மோனை நயத்துடன் பதில் சொன்ன நல்லா அழைப்பை வேகமாகத் துண்டித்துவிட்டு, மௌனமாய் இருந்த கைப்பேசியை உருத்து நோக்கிக் கொண்டிருந்தான்!

கைப்பேசியின் நீள அகலங்களை அளந்து கொண்டிருந்தவனின் மனம், "எதுக்கு இப்போ திலோகிட்ட எரிஞ்சு விழுந்து அவளோட சந்தேக வட்டத்தில விழுந்தோம்! ஒழுங்காவே பேசியிருக்கலாமோ? இவ வேற அதையும் இதையும் லிங்க் பண்ணி ஒரு பெரிய மெகா சீரியல்லே ஓட்டிடுவாளே! இதையெல்லாம் அவகிட்ட எரிஞ்சு விழறதுக்கு முன்னாடி யோசிச்சிருக்கணும் கண்ணா!" என பலவாறாக அவனை எச்சரித்தது.

"திலோவை எப்படினாலும் சமாளிச்சுக்கலாம்! சமாளிக்க முடியாம துப்பறிஞ்சு வச்சிருந்தான்னா டபக்குன்னு கால்-ல விழுந்திடலாம்! நம்ம திலோ தானே!" என்ற சமாதானத்திற்கு உடனே வந்தவன், அன்பரசி அலுவலகம் வராததற்குக் காரணம் தேட ஆரம்பித்தான்.

வேலை என்ற நிலையில் அன்பரசியிடம் ஒரு சிறு சரிவைக் கூட இத்தனை நாட்களில் பார்த்திராத நல்லாவால், ஒரு நாள் விடுமுறை சொல்லிவிட்டு ஒரு வாரம் விடுப்பெடுக்கும் ரகம் அவளில்லை என்ற முடிவிற்கு வெகு சீக்கிரமே வர முடிந்தது! அடுத்த காரணமாய் அவள் ஊரிலிருந்து வந்த ரயில் அல்லது பேருந்து தாமதமாய் வந்திருக்குமோ? என்ற சந்தேகம் எழ, இணையதளத்தில் நாகர்கோயில் - சென்னை ரயிலின் நேரத்தைப் பார்த்தான். அதில் ரயில் சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்ததாக குறிப்பிட்டிருக்க, அதை நம்பாமல் அதில் கொடுத்திருக்கும் தென்னகரயில்வேயின் வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு அழைத்து அதன் நேரத்தைக் கேட்டறிந்தான்!

அவர்களும் ரயில் சரியான நேரத்திற்கு வந்ததாகக் கூற, "ரயிலில் வராமல் பேருந்தில் வந்திருந்தால் என்ன செய்வது?" என்ற கேள்வி எழுந்து பதிலின்றி அவனை சோர்ந்து போக வைத்தது!

இதற்கு மேல் அவளது உடல்நிலைக்கு ஏதும் பாதிப்பு நேர்ந்திருக்குமோ என அடித்துக் கொண்ட மனதை "நல்லதே நினை! அவளுக்கு ஒன்னும் ஆகியிருக்காது" என இரு முறைக்கு இருநூறு முறை சொல்லி அமைதி படுத்திக்கொண்டான் அவன்.

அவனது சோர்வைப் பொருட்படுத்தாமல் இந்தியாவிலிருக்கும் குழுவிடமிருந்து தொடர்ந்து வந்த அழைப்புகள் அவனது எரிச்சலின் அளவைக் கூட்டிக் கொண்டே போயின! அங்கிருந்து அழைத்த யாரிடமும் அன்பரசியைப் பற்றிய விசாரணையை நடத்த முடியாமல் நல்லா தவித்துக் கொண்டிருக்க, இந்தியக்குழுவின் மேலாளர் விஜய் அவனை அழைத்தார்!

அவர் கேட்ட சில விபரங்களை சொல்லிமுடித்த நல்லா, "அன்பரசி ஆபீஸ் வரலையா விஜய்?" என்று கேட்டே விட்டான்.

"ஹோ வரலையா? எனக்குத் தெரியலையே? உனக்கு கால் பண்ணலையா என்ன?" என அவனை அவர் எதிர் கேள்வி கேட்க, "சுத்தம், உங்களைப் போய் மேனேஜரா வச்சிருக்காங்களே அவங்களைச் சொல்லணும்" என உள்ளுக்குள் கருவிய நல்லானந்த்,

"இல்ல விஜய்! இன்னைக்கு டெஸ்ட் பண்ணிட்டிருக்கும் போது memory leak ஆகுற மாதிரி தெரிஞ்சது. அது தான் அவங்களைப் பார்க்கச் சொல்லலாம்ன்னு" என செய்யாத பரிசோதனையை செய்தேன் எனக் கூறி, வாராத ஒன்றை வந்தது என எடுத்துரைத்து, தான் அன்பரசியை தேடியதற்குக் காரணம் ஜோடித்தான் நல்லானந்த்!

"அப்படியா? ரொம்ப முக்கியமான விஷயம் என்றால் வேற யாரையாவது கூப்பிடச் சொல்லட்டுமா?" என அவர் வினவ, "ஹ்ம்ம் இல்லை விஜய்! அவங்களுக்குத் தான் அதில் in and out தெரியும். அவங்க வந்ததுமே பார்க்கட்டும்" என மழுப்பி வைத்தவன், அவருடன் சில நிமிடம் பேசிவிட்டு வைத்தான்.

நல்லாவின் தவிப்பையும் தேடலையும் அதிகரிக்கும்வண்ணம் அவனது கைப்பேசி அன்பரசியின் குரலை ஒலிபரப்பவே இல்லை!

திங்கட்கிழமையைத் தொடர்ந்து வந்த இரண்டு நாட்களிலும் அன்பரசியின் அழைப்பு வராமலே இருக்க, அதை பற்றி விசாரிக்கக் கூடிய ஒரே ஆளான விஜயும் உடம்பு சரியில்லை என விடுமுறை எடுத்திருந்தார். மற்றவர்களிடம் விசாரித்து விமர்சனத்திற்கு ஆளாகவும் நல்லா விரும்பவில்லை என்பதோடு முக்கியமான விஷயம் என்ற நிலையில் எப்படியும் அவன் காதிற்கு எட்டிவிடும் என நம்பிக் காத்திருந்தான்!

செவ்வாய் இரவு வரை (அதாவது இந்தியாவின் புதன் காலை வரை) தாக்குப் பிடித்துப் பார்த்த நல்லா, அதற்கு மேல் பொறுக்கமுடியாமல் அன்பரசியுடன் வேலைக்குச் சேர்ந்த ரகுவைத் தனக்கு அழைக்கும்படி மின்னஞ்சல் அனுப்பினான்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் தன்னை அழைத்த ரகுவிடம் அன்பரசியைப் பற்றி நல்லா விசாரிக்க, அதற்குப் பதிலாய் ரகு கூறிய "நாகர்கோயில்ல இருந்து சென்னைக்கு வரும்போது அன்புக்கு ஆக்சிடன்ட் ஆகிடுச்சு நல்லா" என்ற விஷயம் அவனை நிலைகுலைய வைத்தது! அதன் பின்னர், நடந்த விபத்தில் அன்பரசியின் கைப்பேசி உடைந்து நொறுங்கிவிட்டதாகவும், நேற்றுமாலை தான் தனக்கு விவரம் தெரியும் என்றும் ரகு பகிர்ந்தது நல்லாவின் செவியில் புகவே, நிமிடங்கள் பிடித்தன!

அன்பரசிக்கு விபத்து என்ற செய்தி நல்லானந்தை தாக்கிய வினாடி, உடல் சிலிர்த்து அவளுக்காக மனம் தவித்தது. தவித்த மனத்தைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றவாறே, சில கேள்விகளை ரகுவிடம் கேட்டான் நல்லானந்த்.

"பலத்த அடியா? இப்போ எப்படி இருக்காங்க?" என்ற நல்லாவின் கேள்விக்கு, "ஆமா நல்லா! இரண்டு நாள் கண் விழிக்காமலே இருந்திருக்கா... நேத்திக்கு..." என்ற ரகுவின் பதில் முழுதாய் முடியும் முன்னரே,

"இரண்டு நாளா? உங்க யாருக்கும் விவரம் தெரியாதா?" என்ற கேள்வியில், உடனிருக்கும் தோழியின் நலனைப் பற்றின அக்கறை இவர்களுக்கு இல்லையே என்ற கோபம் தளும்பிவழிந்தது!

அவனது குரலிலிருந்த அழுத்தத்திலேயே அவன் தன்னை அடக்கிக் கொண்டிருப்பது ரகுவிற்குப் புரிய, குரல் தானாக மெலிந்து "இல்ல, திங்கட்கிழமை அவ வரலை என்றதுமே ஃபோன் பண்ணினோம். எடுக்கலை என்றதும் கூடுதலா ஒரு நாள் ஊரில இருந்துட்டுவர்றான்னு நினைச்சோம் நல்லா" என அவன் விளக்கம் கூறினான் அன்பரசியின் தோழன்.

"ம்ம், அவங்க வீட்டிற்கு ஃபோன் பண்ணிப் பேசியிருக்கலாமே? சரி அதை விடுங்க, அன்பரசி எங்க இருக்காங்க? நாகர்கோயிலையா? இல்லை சென்னை ஹாஸ்பிடல்லா?" என நடந்து முடிந்ததைப் பற்றி விவாதிக்காமல் நிகழ்வில் இருப்பதை அறிய முயன்றான்.

"விழுப்புரம் அரசு மருத்துவனை" என்ற ரகுவின் பதிலில் "வாட்? விழுப்புரமா?" என்று வியந்த நல்லா, அன்பரசியோட உறவுகள் யாரும் அங்கிருப்பார்களோ என்ற சந்தேகத்தை உடனே கேட்டு "இல்லை நல்லா, அவளுக்கு யாருமில்லை..." என ஆரம்பித்து "உறவுன்னு யாருமில்லை" என்று திருத்திய பதிலைப் பெற்ற போதுகூடநல்லானந்தின் நெஞ்சம் கனத்து, அவளை அப்போதே பார்க்க வேண்டுமென்ற ஆவல் அலையாய் எழுந்தது.

"அப்புறம் எப்படி விழுப்புரத்தில்? ஹோ, அங்க தான் விபத்து நடந்ததா? இரண்டு நாளா பார்ப்பார் யாருமில்லாமலா இருந்திருக்காங்க! சை கொடுமை!" என்றபோது குரல் நடுங்கியது நல்லாவிற்கு!

"பஸ் விழுப்புரம் கிட்ட வரும்போது பின்னாடி வந்த லாரி மோதி.... " என ரகு முடிக்கவில்லை, அதற்குள் "அடி பலமான்னு கேட்டேனே?" என நல்லா பறந்தான்.
"வலது கை-ல fracture நல்லா! அப்புறம்.... மூக்குல லேசா அடி, கண்ணில் கண்ணாடி சில் பட்டு..." என அவன் சொல்லிக் கொண்டே போக,

"கடவுளே! நீங்கெல்லாம் என்ன ஃபிரண்ட்ஸ்? இவ்வளவு அடி பட்டிருக்கு!... உறவுன்னு யாருமே இல்லாத பொண்ணை யாரும் போய் பார்க்கக்கூட இல்லையா?" என நல்லா அருவெறுத்து பேச, ரகு வெகுண்டுவிட்டான்.

"நல்லா, ப்ளீஸ்! நாங்க யாரும் போய் பார்க்கலைன்னு உங்களுக்கு எப்படி தெரியும்? நேத்திக்கு நைட் நியூஸ் கேள்வி பட்டதுமே அருண் கிளம்பிப் போய்ட்டான். எனக்கு ஒரு முக்கியமான பர்சனல் வேலை இருந்ததால நான் போகலை" என ரகு விளக்கம் தெரிவிக்க, அதை கேட்கும் அளவு பொறுமை நல்லானந்திடம் இருக்கவில்லை!
"விழுப்புரம் அரசு மருத்துவமனை தானே? இன்னும் அங்க தானே இருக்காங்க?" என அவனிடம் தனக்கு வேண்டிய தகவலை மட்டும் உறுதி செய்துகொண்டு அழைப்பை வேகமாகத் துண்டித்தான். துண்டிக்கும் முன்னர், "அன்பரசிக்குத் திருமணம் ஆகிடுச்சா? இல்லை திருமணநிச்சயம்?" என நல்லா ரகுவை கேட்க, அந்தத் திடீர் தாக்குதலில் அவன் அரண்டு போனான்.

"என்ன நல்லா திமிர்ன்னு?" என அவன் மிரள, "ப்ளீஸ், அன்பரசியோட நல்லதுக்காக தான் கேட்கிறேன். அப்படியேதாவது இருக்கா? அப்படியிருந்தா சம்பந்தப்பட்டவங்களுக்கு தகவல் சொல்லன்னுமில்லையா? அது தான்!" என ரகுவை சமாளித்தப்போதும், ரகுவின் பதில் முழுதாய் முடியும் வரை நெஞ்சம் தடதடவென்று அடித்துக் கொண்டது.

"இல்லை நல்லா! எனக்குத் தெரிஞ்சு அவளுக்கு காதல்-கல்யாணம் எதிலுமே பெருசா  ஈடுபாடு இருந்ததில்லை" என்ற ரகுவின் பதிலில் மனம் ஒரு விதமாய் நிம்மதியடைந்த போது நல்லாவிற்கே அவனது எண்ண ஓட்டங்களைக் கண்டு பயமாக இருந்தது!

தனக்குத் தேவையான தகவலை சேகரித்தப்பின்னரும் மனம் ஆறாமல், "நாகர்கோயில அவங்க ஃபிரண்ட் இருக்கிறதா சொன்னாங்களே! அவங்க கூடவா வரலை?" எனத் தன் ஆதங்கத்தை முன்வைத்தான்.

"அவளோட மொபைல் சரியில்லாம போனதால் யாராலும் போகமுடியல நல்லா! எங்களுக்கு சொன்னப்ப நித்யாவிற்கும் சொல்லியிருப்பான்னு நினைக்கிறேன்" என ரகு கூற, நல்லா அதற்கு மேல் எந்த விளக்கத்தையும் கேட்கும் நிலையில்இருக்கவில்லை.

"அன்பு, எப்படி கண்ணம்மா இருக்கே! ச்சே உனக்கு நான் இருக்கும் போது நீ இப்படி அநாதை மாதிரி இருந்து கஷ்டப்படுறியே" என்ற மனதின் குரல் வாய் வழியே வெளிவந்த போது, அவனது மனம் தெள்ளித் தெளிவாய் அவனுக்குப் புரிந்தது!

புரிந்த மனதைப் பற்றிய ஆராய்ச்சியை புறம் தள்ளிவிட்டு, வீட்டு எண்ணை கைப்பேசியில் அழுத்தினான். முதல் மணி போனதும் தான், வீட்டில் தாயும் மகளும் மட்டுமே இருப்பர், அவர்களிடம் பேசுவதால் பெரிதாய் காரியம் ஒன்றும் சாதிக்க முடியாது எனத் தோன்றியது! அந்த எண்ணத்தின் விளைவாக நல்லா, கைப்பேசியை அனைக்கும் முன்னர் "ஹல்ல்ல்லோ" என கிணுகிணுத்தாள் மலர்.

மலரின் குரலைக் கேட்ட பின்னர் அழைப்பை அணைப்பதற்கு மனம் வராமல் போகவே, "மலர் குட்டி, நல்லாப்பா பேசுறேன்டா! குட்டி ஃபோன் கிட்ட என்ன பண்றீங்க?" என மகளிடம் பேசினான். அதற்குப் பதிலாய் "ஹையா நல்லாப்பா!! பாத்தீ நல்லாப்பா பேசுதா...வா வா!" எனத் தந்தையைப் பெற்றவளைக் குதூகலமாய் அழைத்தவாறே, தனதையிடம் திரும்பி "மலர் விவாடுறேன்ப்பா" என மழலையில் மகள் மிளற்ற, அன்பரசியும் இது போல் சந்தோஷமாய் இருக்கவேண்டும்! அவளது கஷ்டங்கள் அனைத்தையும் போக்கி மகளைப் போல் அவளையும் சந்தோஷமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என மனம் தீர்மானித்து, அதை நிறைவேற்ற துடித்து தவித்தது!

சற்றுநேரம் குழந்தையுடன் பேசிவிட்டு, தாயின் "என்னடா இந்த நேரத்தில்?" என்ற கேள்விக்கு "சும்மா தான்மா கூப்பிட்டேன்! சரிம்மா வைக்கிறேன்" எனப் பதில் கூறி அவரிடமிருந்து வேகமாய் தப்பித்தான்.

தேவ்வின் கைப்பேசிக்கு அழைப்புப் பறக்க, அதை எடுக்க அவன் எடுத்துக் கொண்ட இரண்டு நிமிடமும் நல்லாவிற்கு யுகமாகத் தெரிந்தது. தேவ்வின் "சொல்லுடா" என்ற குரல் கேட்டதும், "ஃபோனை எடுக்கிறதுக்கு ஏன் இவ்வளவு நேரம்? என்ன பண்ணிட்டு இருந்தே?" என அவன் மேல் பாய்ந்தான் இளையவன்.

"ஹ்ம்ம் ஆடிட் ஆபீஸ்ல உட்கார்ந்து ஈ ஓட்டிட்டு இருந்தேன்! வான்கூவருக்கும் சென்னைக்கும் வாயால் குதிக்காம என்ன விஷயம்ன்னு சொல்லு!" என்றான் தேவ், அவனது சொந்த ஆடிட் நிறுவனத்திலிருந்து!

"நீயும் திலோவும் அவசரமா விழுப்புரம் போகணும். எனக்காக போய் ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆகியிருக்கும் ஒருத்தங்களை பார்த்துட்டு வரணும்" என்றான் நல்லானந்த்.

"இப்பவேவா?" என தேவ் தயங்க, "ஆமா" என்றான் நல்லா நிதானமாய்.

"யாருக்கு என்ன? ஏதாவது விபத்தா?" என தேவ் விவரம் கேட்க,

"ஹ்ம்ம், ஆமா என்னோட வேலை பார்க்கிறவங்களுக்கு" என நல்லா பாதி விவரம் மட்டும் கூற,

"ஹேரா சரி. ஆனா நீ என் இவ்வளவு துடிக்கிற? எதுவானாலும் கண்டிப்பா நாங்க ரெண்டு பேரும் போகணுமா? ரொம்ப முக்கியமான ஆளா? எனக்கு இங்க முக்கியமான கிளைன்ட் ஒருத்தரோட மீட்டிங் இருக்கு. திலோவும் ஸ்கூல்ல இருப்பா" என்றவன் சிறு இடைவெளிவிட்டு, "இங்க ஆபீஸ்ல வேலை பார்க்கிற பசங்க யாரையாவது விட்டுப்பார்த்துட்டு வரச் சொல்லட்டுமா?" என தேவ் மேலும் தன் நிலையை எடுத்துக் கூற முயன்றான்.

"தேவ் ப்ளீஸ், எனக்காக இதை செய்டா!" என்ற நல்லா, அண்ணன் ஏதோ பேசத் தொடங்கவும் "எனக்காக தேவ்!" என்றான் அழுத்தமாக.

"ஓகே நல்லா! நான் திலோவோட ஸ்கூல்லுக்குப் போய் அவளை அழைச்சிக்கிட்டு விழுப்புரம் போறேன். இப்போ வைக்கவா" என தேவநந்தன் தன் சம்மதத்தைக் கூறவும், "தேங்க்ஸ் தேவ். இன்னும் கால் மணிநேரத்தில் பேசுறேன்" என்ற நல்லா அழைப்பை வைத்துவிட, தான் விட்டுப் போகும் வேலைகளை ஒழுங்குபடுத்தினான் தேவ்.

தன் வேலையை தன்னிடம் வேலைக்கு இருப்பவர்களில் அதிக திறமையும் பொறுமையும் வாய்ந்த ஒருவரிடம் ஒப்படைத்த கையோடு, கிளைன்ட்டிற்கு மன்னிப்பு கோரி ஒரு அழைப்பையும் விடுத்த பின்னர் தேவ்வின் ஹயுண்டாய் i10 திலோ வேலை பார்க்கும் "The school" பள்ளிக்குப் பறந்தது.

பள்ளி நிர்வாக அலுவகத்தில் தான் வந்திருப்பதைக் கூறி, திலோவை அழைத்துவருமாறு சொல்லிவிட்டு தேவ் காத்திருக்க, நல்லாவின் எண் அவனது கைப்பேசியில் மின்னியது.

பதினைந்து நிமிடத்தில் அழைக்கிறேன் எனக் கூறியவன் ஐந்தே நிமிடம் கூட பொறுக்கமுடியாமல் தன்னை அழைத்திருப்பது தேவ்வின் வியப்பு சதவீதத்தை பன்மடங்காய் பெருக்கியது.

வியப்பினூடே கைப்பேசியை காதிற்குக் கொடுத்த தேவ்வை "தேவ், திலோ வந்தாச்சா? அங்கிருந்து கிளம்பிட்டீங்களா?" என நல்லானந்த் அவசரப்படுத்த, "இப்போ தான் திலோ ஸ்கூலுக்கே வந்திருக்கேன்! இன்னும் பத்து நிமிஷத்தில் கிளம்புறோம்" என அவனிடம் பதில் கூறிய தமையனிடம் இன்னும் பத்து நிமிடத்தில் அழைப்பதாக கூறி அப்போதைய பேச்சை முடித்தான் அவனுக்குப் பின் உலகைப் பார்த்தவன்.

திலோ வந்ததும் அவளிடம் விஷயத்தைக் கூறிய தேவநந்தனை விநோதமாய் பார்த்தாள் அவள்! பின்னே, "நல்லா அவசரமா கால் பண்ணினான். அவனுக்குத் தெரிஞ்ச ஒருத்தர் விழுப்புரம் ஹாஸ்பிடல்ல இருக்காங்களாம். நம்ம ரெண்டு பேரையும் அங்க போய் அவங்களைப் பார்த்துட்டு வரச்சொல்றான். கிளம்பலாமா? நீ உங்க ஹெட்மிஸ்கிட்ட சொல்லிட்டு உடனே வா. அவன் வேற ஈட்டிக்காரன் மாதிரி ஃபோன் மேல ஃபோன் போட்டு படுத்துறான்" என்றவனை விநோதமாய் பார்க்காமல் என்ன செய்வாள் அவளும்?

"யார்? என்ன?" என தேவ்வை திலோ குடைய, "எனக்குத் தெரிஞ்சா சொல்லமாட்டேனா? எனக்குத் தெரிஞ்ச விஷயம் எல்லாத்தையும் உன்கிட்ட சொல்லியாச்சு. சீக்கிரம் கிளம்பு. கார்ல போகும் போது அவன்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்" என அவனும் நல்லானந்திடமிருந்து அடித்த வாடையில் திலோத்தமையை விரட்டியடித்தான்.

பள்ளி நிர்வாகத்திடம் விடுப்பு வாங்கிக்கொண்டு திலோ வெளியே வருவதற்குள் நல்லாவின் அடுத்த அழைப்பு வந்து சேர்ந்தது. "கொஞ்சம் இரேன்டா! வந்துட்டே இருக்கா" என அவனை நிறுத்திவைத்தான் தேவநந்தன்.

பள்ளியை விட்டு வெளியே வந்த திலோத்தமை, "நல்லாவா பேசுறான்? கொண்டாங்க இப்படி" என ஃபோனைப் பறித்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

நடத்திக் கொண்டிருந்த பாடத்தை நடுவில் விட்டுவந்த கடுப்பில் "நீ என்ன நினைச்சிட்டு இருக்க மனசில? உன்னிஷ்டதிற்கு எங்க எல்லாரையும் ஆட்டிவச்சுக்கிட்டு இருக்க? யாரு இருக்கா விழுப்புரத்தில? அவங்களுக்கும் நமக்கும் என்ன உறவு?" எனப் பொரிய தொடங்கியவளிடம்

"சாரி திலோ! இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சிடு திலோ. எனக்காக பண்ணு திலோ ப்ளீஸ்" என அவளை முதலில் சமாதானம் செய்தான். தான் எகிறிய உடனேயே அவன் தழைந்தது திலோவின் கோபத்தைச் சற்றே குறைத்தது.கோபம் குறைந்தபோதும் குழப்பம் குறையாமலிருக்க, "இன்னும் நான் கேட்ட கடைசி ரெண்டு கேள்விக்குப் பதில் வரலை" என்றால் இளகாத குரலில்.

"இப்போ வரைக்கும் உறவில்லை. இனிமேல் உறவாகப்போறவங்க! ஆக்சிடன்ட் ஆகி ஹாஸ்பிடல்ல படுத்திருக்காங்க திலோ! எனக்கு அவங்க எப்படி இருக்காங்க? பெருசா ஏதாவது பிரச்சனையான்னு தெரியணும். அதுதான் உன்னையும் தேவ்வையும் என் சார்பில் போய் பார்க்கச் சொல்லலாம்ன்னு..." என்ற நல்லாவின் குரலில் இருந்த தவிப்பை திலோவால் உணர முடிந்தது! பின்னே, இவ்வளவு நாட்கள் அவனுடம் பழகிய ஆத்மார்த்தமான பழக்கத்திற்கு அர்த்தமின்றி போய்விடாது.

"இன்னும் அவங்க... அவங்கன்னே சொல்றியே ஒழிய பேர் சொல்ல மாட்டேங்கிற! முழு விவரமும் வரமாட்டேங்குது" என ஒரு வார்த்தைகளாக வந்த பதிலை சிறு குறிப்பாக மாற்றியவள் அந்த சிறு குறிப்பை பெரும் குறிப்பாக்கி, மேலும் அதை கட்டுரையாக்கும் முயற்சியில் ஈடுபட்டாள்.

அவளது ஆசரியை திறமைக்கு ஈடாக தன்னிடம் மாணவத் திறமை இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வண்ணம், "நேரத்தை வீணாக்காம வண்டில ஏறு திலோ! எல்லா விவரமும் போற வழில சொல்லிட்டே வரேன்" என அவளைத் தன் போக்கிற்கு கொண்டு வரமுயன்றான் நல்லானந்த்.

"ம்ம் சரி. ஏறியாச்சு!" என்றவள், வண்டி நகர ஆரம்பித்ததும் "இப்போ சொல்லு! ஸ்பீக்கர்ல போட்டிருக்கேன்!" என்றாள்.

"ஹ்ம்ம், எப்படி ஆரம்பிக்கிறது?" என சில நிமிடங்கள் யோசித்தவன், "நீங்க இப்போ பார்க்கப் போறவங்க பேர் அன்பரசி, என் டீம்ல வேலை செய்றாங்க" என்றான் மெல்ல.

"அன்பரசி" என்ற பெயரில் காரை செலுத்திக் கொண்டிருந்த தேவ்வை திலோவைத் திரும்பிப்பார்க்க, அவளும் அவன் பக்கம் திரும்பி கண் சிமிட்டிச் சிரித்தாள்!!

அவர்கள் இருவரும் மௌனப்பரிபாஷையில் பேசிக் கொண்டிருக்க, நல்லா அது தான் சாக்கென்று மௌனம் காத்தான்.

மூவரது மௌனத்தையும் "ம்ம் மேல சொல்லு" என்ற கட்டளையுடன் திலோ களைக்க, "I think I am in love with her, திலோ" என்ற நல்லாவின் திடீர் வாக்குமூலத்தில், மூச்சுத் திணறிப் போயினர் மற்ற இருவரும்!

"I think I am in love with her" என நல்லா அதிரடியாக ஒப்புக்கொள்ளவும் தேவ்வும், திலோவும் திணறித் திண்டாடிப் போயினர். எப்போதும் போல் தேவ்வை விட வேகமாக சுதாரித்துக் கொண்ட திலோ "யாரு அன்பரசி? ஈமெயில்-ல சொல்லியிருந்தியே அந்த புதுப்பொண்ணா?" என்றாள். அந்தக் குரலில் உன்னை நான் அறிவேன் என்ற பெருமிதம் கண்டிப்பாக இருந்தது!

"திலோ, தி கிரேட்! அவங்களே தான்!" என நல்லா, அந்தப் பதட்டத்திலும் தன் இனிய தோழியின் கண்டுப்பிடிப்பை மெச்ச, அதற்குப் பதிலாய் தேவ்வின் மிதமான சிரிப்பு வர, திலோத்தமையோ "டாங்க்ஸ் மிஸ்டர்.நல்லானந்த்! மீதி விவரம் சொல்லுங்க" என அதிலேயே நின்றாள்.

"சரியான விடாக்கண்டி!!" என அவளைச் செல்லமாய் கொஞ்சினாலும் மீதி விவரம் என அவள் எதிர்பார்த்ததை நல்லானந்த் சொல்லத் தயங்கவில்லை.

"ஹே இரு இரு, அதுக்கு முன்னாடி அந்தப் பொண்ணை...ச்சே ச்சே...இன்னும் என்ன அந்தப் பொண்ணு... அன்பரசியை பார்த்திருக்கியா என்ன? எனக்குத் தெரியாம இன்னும் என்ன திருட்டுத்தனம் பண்றே?" என திலோ முக்கியமான விஷயத்திற்குத் தாவ,

"முந்திரிக்கொட்டை! நான் தான் சொல்லிட்டு இருக்கேன்ல! அதுக்குள்ளே அவசரம்... இவனை எந்த விஷயத்திற்குடா காய்ச்சிஎடுக்கலாம்ன்னு இருப்பியே!" என நொந்துகொண்ட நல்லானந்த், "அவளை நான் பார்த்ததே இல்லை" என அடுத்த குண்டை அசால்ட்டாய் போட்டான்.

"என்னது?" என தேவ் மீண்டும் அதிர,

"லூசாடா நீ! பார்க்காமலே காதலிக்க இது சினிமா இல்ல" என உண்மையை எடுத்துரைத்தாள் திலோத்தமை.

"தெரியும் திலோ! எனக்கு அவளோட அறிவு, படிப்பு, குணம் என நிறைய பிடிச்சிருக்கு திலோ! எல்லாத்துக்கும் மேலா மலரை நினைக்கும் போது அவளும் நியாபகத்திற்கு வரா!

என்னால ரெண்டு பேரையும் பிரிச்சு பார்க்கமுடியல. அதுதான் காதல் என்பதற்கு முக்கியமான காரணம்! " என்றான் நல்லா விளக்கம் போல்.

அவன் கொடுத்த விளக்கத்தில் பெரிது பெரிதாய் நிறைய பொந்துகள் இருப்பதைக் கண்ட தேவ்வும் திலோவும் அவனுக்கு அதை புரிய வைக்க முயன்றனர்.

முதலாவதாய், "நல்லா, இதெல்லாம் பேசுறதுக்கு வேணும்னா நல்லா இருக்கும். ஆனா நிஜவாழ்க்கையில் சாத்தியப்படாது. அந்தப் பொண்ணுக்கு கல்யாணமாகியிருக்கலாம்" என தேவ் தொடங்க,

"கல்யாணம் ஆகலை. நிச்சயம்... காதல் அப்படி கூட ஒன்றுமில்லை" என்றான் நல்லா இடைவெட்டி.

"சரி சந்தோசம்! ஆனா நேரில் பார்க்காம காதல்... கல்யாணம் என்ற முடிவு எனக்குச் சரியா படல. ஒருத்தர் ஃபோன்ல பேசுறதை வச்சு எதையுமே கணிக்க முடியாது நல்லா. அவங்க நடிக்கக் கூடச் செய்யலாம்... இவங்க நடிக்கறாங்கன்னு சொல்லலை நல்லா! there are possibilities..." என்றான் தேவ், தன் அனுபவ அறிவைத் தமையனுக்குப் புகட்டும் முயற்சியுடன்.

"அன்பு அப்படியில்லை தேவ், நீ இப்போ பார்க்கும் போது தெரிஞ்சுப்பே" என நல்லா தீர்மானமாய் மறுக்க, திலோ திகைத்தாள்.

தன் திகைப்பை உடனே மறைத்துக் கொண்டு, நல்லாவை வேறு வகையில் அணுகினாள். "மலரை நினைச்சா அவ நினைவுக்கு வரான்னு ஏதோ சொன்னியே? அது என்ன?" என அவளது கேள்விக்கு,

"அவளுக்கும் அப்பா-அம்மா இல்லை." என நல்லா முடிக்கும் முன்னர்,

"வாயை மூடுடா, மலருக்கு அம்மா நானிருக்கும் போது என்ன பேச்சு பேசுற?" என திலோவின் கோபம் எல்லை கடந்து போய், "வண்டியைத் திருப்புங்க நந்தா, வீட்டிற்குப் போகலாம்! இவன் பாட்டிற்கு பேசிட்டே போறான். இவன் பேசுற எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு இருக்க நமக்கென தலையெழுத்தா?" என கண்கள் சிவக்கக் கத்தினாள்.

"அச்சோ, என்ன திலோ.... நான் அந்த அர்த்தத்தில சொல்லலை திலோ! ப்ளீஸ்மா... தேவ் சொல்லுடா..." என நல்லா தவித்துப்போனான்.

"கொஞ்ச நேரம் கழிச்சு கூப்பிடு" என்றதோடு அழைப்பைத் துண்டித்துவிட்டு, மனைவியைக் கவனிக்கப் போனான் தேவநந்தன்!! (இந்த இடத்தில் நீங்கெல்லாம் என்னைக் கல்லால் அடிச்சிருப்பீங்கன்னு எனக்குத் தெரியும். நன்றிகள் பல பல!)

இரண்டே நிமிடத்தில் வந்த நல்லாவின் அழைப்பை தேவ் துண்டிக்க, நல்லானந்தின் இதயம் பன்மடங்காய் துடித்தது. தாய்க்கும் மேலாய் மலரைப் பார்த்துக் கொள்ளும் திலோவிற்கு அவனது வார்த்தைகள் எவ்வளவு வலியைக் கொடுத்திருக்கும் என்பதும் அவனுக்குப் புரிந்தது! தன் வயிற்றில் உதித்த அகிலனின் மேல் வைத்திருக்கும் பாசத்தை விட மதிமலரின் மேல் அவள் வைத்திருக்கும் பிரியமும் பாசமும் ஒருபடி அதிகம் தானே!

பெண் வேண்டும், பெண் வேண்டும் எனக் கர்ப்பக் காலம் முழுதும் தவமிருந்தவள் அகிலனைப் பெற்றபோது சற்றே ஏமாற்றமடைந்தது நல்லானந்த் அறிந்தே விஷயமே! வயசிருக்கிறது... அடுத்தது பெண்ணாக இருக்கும் என குடும்பத்தினரும், அவளுமே நினைத்திருக்க அது நடக்காமலே போய்விடும் என்பதை அறிந்த நிலையில் திலோ துடித்தத்துடிப்பை பார்த்திருந்தபோதும் தான் இப்படி கூறியது தப்பல்லவா? என மிக தாமதமாக ஞானோதயம் வந்தது நல்லானந்திற்கு.

குற்ற உணர்வு மிகுந்த வேகத்தோடு தாக்கியதில் தேவ்வின் எண்ணை விடாமல் முயன்று கொண்டே இருந்தான் நல்லானந்த்! அவனது பத்து அழைப்புகளையும் முதல் மணியின் பாதியிலேயே தேவ் துண்டிக்க, பத்தாவது அழைப்பு எட்டாவது மணியில் எடுக்கப்பட்டது.

"திலோ, சாரிமா! தெரியாம சொல்லிட்டேன்மா" என எடுத்தவுடனே நல்லா ஆரம்பிக்க,

"மனசில இல்லாதது எப்படிடா வாய்ல வரும்" எனக் கொதித்தாள் திலோ.

"ஹய்யோ திலோ. மலர் குட்டியும் அன்புவும் நம்ம வீட்டிற்கு வரதுக்கு முன்னாடி எப்படி இருந்தாங்க... இருக்காங்க என்பதில் தான் திலோ சொன்னேன். ப்ளீஸ் புரிஞ்சுக்கோ" என தான் பேசிய வார்த்தைகளுக்குக் காரணம் தேடினான் நல்லானந்த்.

Property of Bhu...

"நீ பேசாதே! எனக்கு அப்படியே ஆத்திரம்... ஆத்திரமா வருது" எனப் பல்லைக் கடித்து, வார்த்தைகளைத் துப்பிய திலோத்தமையை தோளோடு அணைத்த அவளது கணவன், "ஷ், என்னடா திலோ! கண்ணைத் துடை!" என ஆறுதல்படுத்தினான்.

"என்னையே சொல்லுங்க, அவனை ஒண்ணுமே சொல்லிடாதீங்க" என அழுகையின் ஊடே திலோ திக்க, "நீ இப்படி அழும்போது மலர் பாப்பா பார்த்தா என்ன சொல்லுவா தெரியுமா? "அம்மா ஊ ஊ அழுதா... அழுமூஞ்சி... அழுக்குமூஞ்சி... அப்படின்னு கைகொட்டி சிரிப்பா" என தேவ் மலரை அவளுக்கு நினைவுபடுத்தி, மகளின் மூலம் தாயை தேற்ற முயன்றான்.

"அவ என் பொண்ணு தானே?" என திலோ கண்களில் உயிரைக் கூட்டி தேவ்விடம் கேட்டபோது, நல்லாவின் கண்களில் நீர் துளிர்த்தது.

"உனக்கு இதிலென்ன சந்தேகம்? அவன் என்ன சொன்னா என்ன? ஏதோ லூசு மாதிரி உளர்றான்னு விட்டுட்டு போவியா?" என தேவ் கூற, திலோ "ஆமா அக்மார்க் லூசு தான் உங்க தம்பி" என்றாள் வேகமாக.

அதன் பின்னர் அவளது தேம்பல் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து குரல் வெளியே வர நூறு விதமான மன்னிப்புகளும், பதிலுக்கு இருநூறு விதமான திட்டுகளும் தேவைப்பட்டன.

"இனிமேல் மலரைப் பத்தி நல்லா பேசமாட்டான் திலோமா!" என மனைவியை சமாதானம் செய்த தேவ், "என்னடா பேசமாட்டே தானே! பேசினா அப்புறம் நோ விழுப்புரம்" எனத் தம்பியை மிரட்டவும், "சரி பேசலை" என்றான் நல்லானந்த் வேகமாக.

"அவன் தான் பேசலைன்னு சொல்லிட்டானே? காரை எடுக்கவாமா? போலாமா?" என்று மனைவியின் அனுமதியை வேண்டியவன், அவளது "ம்ம்" என்ற முனங்கல் வெளிவந்த வினாடி வண்டியை இயக்கினான்.

பத்து நிமிட அமைதிக்குப் பின்னரும் திலோவிடமிருந்து சத்தமே வராமலிருக்க, நல்லாவும் அமைதி காத்தான்! இவர்களது மௌனயுத்தத்தை காண தேவ்விற்கு எப்போதும் திகட்டாது தான் என்றாலும் இன்று அதை சந்தோஷமாக அனுபவிக்கும் மனநிலை அவனுக்கு

இருக்கவில்லை. வயதில் இளையவன் தெரிந்தே ஒரு தப்பை செய்யும்போது அதை தடுக்கவேண்டும் என்ற உந்துதலே அவனுக்கு பிரதானமாய் இருந்தது.

"ம்ம் மலரை விட்டுட்டு அன்பரசிக்கு வரலாம்" என்றவன், "அவங்களுக்கு அப்பா-அம்மா இல்லைன்னு உனக்கு எப்படித் தெரியும் நல்லா?" என விட்ட இடத்திற்கு மீண்டும் வந்தான்.

"அவளே சொன்னா" என நல்லா முடிப்பதற்குள், "அந்தளவிற்கு பேசியாச்சா? அன்னைக்கு அன்பரசியோட ஃபோனுக்குத் தான் சார் வெயிட் பண்ணிட்டு இருந்தீங்களா?" என திலோ குரலின் குத்தல் குறையாமல் கேட்க,

"நாங்க ரெண்டு பேரும் பேசின ஒரே சொந்த விஷயம் இது தான் திலோ!" என நல்லா தன்னை ஒப்புக்கொடுக்க,

"அப்புறம் எப்படிடா லவ்.... ஒரே உருகல்.... மிரட்டல்...விரட்டல்...எனக்குப் புரியவே மாட்டேன்து" என இன்னும் குழம்பினாள்.

அவளது குழப்பத்தில் நல்லானந்தின் பொறுமை குறைந்துகொண்டே வந்தது. இவர்களிடமே இத்தனை விளக்கம் சொல்லவேண்டும் என்றால் அன்பை நினைக்கும் போது உள்ளுக்குள் திகில் கிளம்பியதே அதற்கு காரணம்! குறைந்து வந்த பொறுமையை நல்லவிதமாய் எடுத்துரைக்க முயன்று, "உன்னைப் பார்த்ததும் தேவ் ஒரேடியா குப்பற விழுந்தானே...அப்படித் தான்" என்றான் அவன் கிண்டலாய்.

"உங்க ரெண்டு பேருக்கும் அடிப்படையே வேறடா... தேவ் என்னைப் பார்த்து குப்பற விழுந்தாங்க... ஆனா நீ" என்ற போது திலோவின் குரல் "பார்த்து" என்ற வார்த்தையில் தேவைக்கும் அதிகமாய் அழுத்தம் கொடுத்து.

அதற்கு நேரடியாக பதில் சொல்லாமல் "எனக்குப் பிடிச்சிருக்கு திலோ" என்றான் நல்லா. குரலில் பிடிவாதம் தீயாய் ஜொலித்தது! அந்தப் பிடிவாதத்தைப் பார்க்கும் போது தான் கேட்ட குலாப் ஜாமூன் கிடைக்கவில்லை என்றால் மலர் தன் தாத்தாவின் மடியில்

முகத்தை மறைத்துக் கொண்டு, ஒரு வாய் உணவைக் கூட வாங்க மறுக்கும் அழகு நினைவு வந்து, "அப்பாவிற்குத் தப்பாமல் பிறந்த அப்புக் குட்டியில்ல" என்ற நல்லாவின் வசனத்தை நியாபகப்படுத்தியது.

தேவ் ஏதோ மறுத்தப்பேசத் துவங்க, திலோ அவனது கையை அழுத்தி அடக்கினாள். "ஹ்ம்ம் சரி, எப்படி விபத்து நடந்தது?" என வேறு விவரம் கேட்டு, அவனது காணாக்காதலைப் புறம் தள்ளினாள்.

"அதுக்கு முன்னாடி, அன்பரசியைப் பார்க்கவே இல்லைன்னு சொல்லமுடியாது. எங்களோட டீம் போட்டோல கொஞ்சமா பார்த்திருக்கேன்" என நல்லா கூற, "அதென்ன கொஞ்சமா பார்க்கிறது? கூடவா பார்க்கிறது? கண்ணை மட்டும் பார்த்தியாக்கும்?" என கணவன் - மனைவி இருவரும் ஒரு சேர வினவ,

"ம்ம் அப்படித் தான். குரூப் ஃபோட்டோல பின்னாடி வரிசையில் ஓரமா நின்னுட்டு இருந்தா, அதில் கண்ணு மட்டும் தான் தெரிஞ்சது" என நல்லா கூற, "என்னவோ போ" என தேவ் அந்தப் பேச்சை விடுத்தான்.

"ம்ம் விபத்து? விபத்து எப்படி நடந்தது?" என திலோ வினவ, விபத்தின் விவரத்தை நல்லா எடுத்துரைத்தப்போது கேட்டிருந்த இருவருமே உருகிப் போயினர்.

அவன் கூறிய விவரங்களின் பின்னர் ஐந்து நிமிட அமைதி நிலவியது. அதன் பின்னர் "நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே நல்லா! நீ எல்லா விவரமும் சொன்னப் பிறகு இது காதல் என்ற எனக்குத் தோணலை. ஒரு விதமான பரிதாபம். அவளிடம் உனக்கிருந்த ஈர்ப்போடு இந்த பரிதாபமும் சேர்ந்து காதல் என்ற போர்வை விழுந்துடுச்சுன்னு நான் நினைக்கிறேன்" என்றான் தேவ் சிறு தயக்கம் கலந்த தெளிவுடன்.

உங்களுக்கு எப்படி புரியவைக்கிறதுன்னே தெரியலை... அவளோட பேரைக் வாசித்தப்போது லேசா எழுந்த ஒரு குறுகுறுப்பு... அவளோட குரலிலிருந்த ஆர்வம், பணிவு, எதிர்பார்ப்பு இதெல்லாம் கேட்டப்போது எழுந்த பரபரப்பு... அவ வேலைக்கு வரலை என்றதும் நான் தவித்தத் தவிப்பு.... இரண்டு நாளா நான் கொஞ்சம் கூட தூங்கலை! மனசெல்லாம் ஒரே தேடல், வேதனை... புரிஞ்சுக்கோங்களேன்...." என அவர்களிடம் தன் காதலைப் புரிய வைக்க முயன்றவன்,

தேவ்வின் "இல்லைடா... அது" என்ற வாக்கியத்தை இடைமறித்து "எனக்குப் பயமா இருக்கு தேவ், நீங்க ரெண்டு பேருமே என்னைப் புரிஞ்சுக்காம இத்தனை கேள்வி கேட்கிறீங்களே! அன்பு என்ன செய்வாளோ? அப்புறம் அம்மா, அப்பா... ம்ம்" என நல்லா பெருமூச்சு விட, அதில் நீ பேசியதில் எனக்கு உடன்பாடில்லை என்ற செய்தி பொதிந்திருந்தது.

அதற்கு மேல் வார்த்தையை வளர்த்து நல்லாவின் கோபத்தைக் கிளற விரும்பாமல் "ஓகே நல்லா, நாங்க விழுப்புரம் ஹாஸ்பிடல் போயிட்டு உனக்குக் கூப்பிடுறோம்" என்ற திலோ அழைப்பைத் துண்டித்தாள், கணவனின் எதிர்ப்பையும் மீறி.

குழப்பமும், கோபமும், உருகலும், எதிர்பார்ப்பும், பரிதாபமுமாய் விழுப்புரம் அரசு மருத்துவமனையை அவர்கள் அடைந்தபோது மதியம் இரண்டு மணியானது.

அங்கிருந்த ஓர் அரசு மருத்தவ அலுவலரைப் பிடித்து அன்பரசி எங்கே அனுமதிக்கப் பட்டிருக்கிறாள் என்பதை கண்டறியவே முக்கால் மணி நேரத்திற்கும் மேலானது. பாதி பேருக்கும் அங்கு விபத்து நடந்த பேருந்தின் பிரயாணிகள் அனுமதிக்கப்பட்டிருப்பதே தெரியவில்லை என்றால், இன்னும் சிலருக்கு வந்திருப்போரின் நிலைமையையோ இடத்தையோ பற்றிய அக்கறை துளியும் இருக்கவில்லை.

அவர்களிடம் கேட்டு சலித்துப் போன தேவ்வும் திலோத்தமையும் ஒவ்வோர் வார்டாக தேட ஆரம்பிக்க, கடைசியில் முதலாவதாக கேட்ட நபர் விபத்தால் பாதிக்கப்பட்ட பிரயாணிகள் அனுமதிக்கப்பட்டிருக்கும் இடத்தை மனமுவந்து கூறினார்.

"அந்தப் பொண்ணு தான் அன்பரசி. பார்க்க ஆளில்லாம ரெண்டு நாளா தனியா கிடந்துச்சு" என அவர் கூறிய திசையில் கண்களைத் திருப்பிய திலோவிற்கு, இரண்டே வினாடிகளில் கண்ணில் நீர் கோர்த்து பார்வை மங்கியது!

அன்பரசி படுத்திருந்த படுக்கையை நோக்கி மருத்தவ அலுவலரின் கை நீள, அதை பின்பற்றி கண்களைத் திருப்பிய திலோ மற்றும் தேவ்வின் கண்களில் பட்ட காட்சி அவர்களை உயிர் உருக வைத்தது.

அன்பரசியின் படுக்கையருகில் ஒரு சிறுவன் அனுமதிக்கப் பட்டிருக்க, அவனது தாயார் அவனுக்கு உணவூட்டிக் கொண்டிருந்தார். நடுநடுவே அடிபட்ட அவனது மேனியை மெல்ல வருடிக் கொடுத்தவரின் கண்களில் வேண்டுதலும், நீரும் சரி பாதியாய் நிரம்பியிருக்க, அன்பரசியோ அவர்களது பாசப் பிணைப்பை பெரும் ஏக்கத்தோடு பார்த்திருந்தாள்!! ஏக்கத்தினால் விளைந்த கண்ணீரோ அல்லது கண்ணுள் சென்றிருந்த கண்ணாடி துகள்கள் விளைவித்த கண்ணீரோ, அவளது கண்ணோரங்கள் லேசாய் கனிந்து மெல்லிய கோடாய் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

தூரத்திலிருந்து அவளது ஏக்கப் பார்வையையும், அது பதிந்த இடத்தையும் கண்ட இருவருக்குமே உருகிப் போனது என்றபோதிலும் திலோவை அன்பரசியின் ஏக்கம் நிறைந்த தனிமை முற்று முதலாய் தாக்கி, "மலரை நினைக்கும்போது அன்பும் நினைவு வரா திலோ" என்ற நல்லானந்தின் வசனத்தின் அர்த்தம் தெள்ளத்தெளிவாய் புரிந்தது.

புரிந்த காரணம் மனதை இளக்க, கண்களில் கண்ணீர் வழிந்தோட நிராதரவாய் படுத்திருந்த அன்பரசியை நோக்கி விரைந்தாள்.

இடது பக்கம் திலோ வந்துநின்றதைக் கூட கவனிக்காமல் வலது புறமிருந்த தாய்-மகனிடமே கண்களைப் பதித்திருந்த அன்பரசியை "அன்பு..." எனத் தொடங்கி "அன்பரசி" எனத் திருத்தி அழைக்க முயன்ற திலோவின் குரலுக்கு இரு செறுமல்கள் தேவைப்பட்டன.

தன் பெயரை யாரோ அழைப்பதை உணர அன்பரசிக்கு சில வினாடிகள் பிடித்தன. அவள் அதை உணர்ந்து திரும்பிப் பார்க்கும் முன்னர், திலோவின் கண்கள் அவளது மேனியை பல முறை வலம் வந்தன என்றால் அவளது குரல் அன்பரசியின் பெயரை அதே அளவு வலம் வந்தது.

கடைசியாக வெளிவந்த "அன்பரசி"யில் அழுத்தம் சற்று கூடுதலாக இருக்கவே அன்பரசியின் தலை லேசாக இடது பக்கம் திரும்பியது. அப்போதும் தலையைத் திருப்பி, திருப்பி தாய்-மகனின் அன்பு பரிமாறலை கண்ணுற்றவாறே அன்பரசி திரும்ப, அங்கே நின்றிருந்த மங்கையைக் கண்டதும் லேசாக குழம்பினாள்.

கலங்கிய கண்களில் வலியுடன் கூடிய குழப்பம் கொஞ்சம் கொஞ்சமாக கூடுவதை உணர்ந்த திலோ "இப்போ எப்படி இருக்க அன்பரசி? கண் ரொம்ப உறுத்துதா?" என்றாள் அவள் கண்ணோரம் வழிந்த கண்ணீர் மென்மையாய் துடைத்துவிட்டவாறே!

எதிரே நின்றிருந்த முகமறியாதவளின் வருடல் மனதை வருட, "இப்போ பரவாயில்லை! நீங்க.... நீங்க யாரு?" என்றாள் சிரமத்துடன்.

"நான் திலோத்தமை. இவர் என்னோட கணவர் தேவநந்தன்" என்று மட்டும் அறிமுகம் செய்து கொண்ட திலோத்தமை, அன்பரசி மேலும் குழம்பவும் "அருண் அங்கே? உன்னைப் பார்க்க வந்ததாக சொன்னாங்களே?" என அவளிடம் வேறு விவரம் கேட்டாள்.

"அவன்... சாப்பிடறதுக்காக வெளிய போயிருக்கான்... ஆனா நீங்க..." என அன்பரசி விவரம் சொன்ன கையோடு கேள்வியையும் முன் வைத்தாள்!

"நீ சாப்பிட்டியா? டாக்டர் என்ன சாப்பிடனும்னு லிஸ்ட் ஏதாவது கொடுத்திருக்காங்களா?" என திலோ மேலும் மேலும் அவளை கேள்விகளால் குடைந்தாள்.

மனைவியின் ஆசிரியகுணம் அடங்க வெகுநேரமாகும்... அதுவரை அன்பரசி பொறுமையாக இருப்பது கடினம் என்பதை உணர்ந்த தேவநந்தன், "உன்னோட லீட் நல்லானந்தோட அண்ணனும்-அண்ணியும் தான் நாங்க. அவன் தான் உன் விபத்து விவரம் சொல்லி எங்களைப் பார்த்துட்டு வரச் சொன்னான்" என்றான்.

தேவ்வின் விளக்கம் அன்பரசியின் முகத்தில் ஆச்சிரியம், சந்தோஷம், ஒரு விதமான நிம்மதி, ஏக்கம் களைந்த உணர்வு, குறையாமல் காணப்பட்ட குழப்பம், ஏன் என்ற கேள்வி என பல விதமான உணர்வுகளும் மாறி மாறி வந்தன.

"டாக்டர் உணவு லிஸ்ட் ஏதாவது கொடுதிருக்காங்களான்னு கேட்டேனே?" என திலோ தன் விடாக்கண்டி வேலையை செவ்வனே செய்ய,

திலோவின் தொடர்கேள்விக்கு "மாத்திரையே சரியா தரதில்லை... இதில எங்க சாப்பாடு?" என முணுமுணுத்தது அன்பரசியல்ல, அவளருகே படுத்திருந்த ஒரு வயதான பெண்மணி.

அவரை ஒரு முறை திரும்பிப் பார்த்த திலோ, கணவனிடம் கண் காட்ட அவனோ "நான் போய் டாக்டரை பார்த்திட்டு வரேன்" என்றதோடு வெளியே சென்றான்.

கணவன் வெளியே நகர்ந்ததும், அன்பரசியின் அருகே அமர்ந்த திலோத்தமை அவளது முகத்தை மென்மையாக வருடி, "இவங்களுக்கு என்னடா நம்ம மேல இவ்வளவு அக்கறை என்று நீ நினைக்கிறது எனக்குப் புரியுது. ஆனா அதை பத்தி யோசிச்சு மண்டையைக் குழப்பிக்கிற நேரம் இதில்லை. சரியா? உனக்கு உடம்பு முழுசா குணமானதும் எல்லாம் புரியும்" என்றாள்.

அவளது மென்மையான வருடலும், மிதமான வார்த்தைகளும் நெஞ்சை பிசைய அன்பரசியின் தலை சரியென தாமாக ஆடியது. அதற்கு அவளது உடலின் பலவீனத்தைக் குறை சொல்வதா? அல்லது மனதின் பலவீனத்தைக் குறை சொல்வதா?

"அது நல்ல பெண்ணிற்கு அழகு" என்ற திலோவின் பார்வை, கண்ணாடி தூள் பட்டதால் வீங்கிப் போயிருந்த வலக்கண்ணில் பட்டு, துடைக்க துடைக்க  நிற்காமல் வழிந்து கொண்டிருந்த கண்ணீரைக் கண்டு மீண்டும் துடைத்தன அவள் கைகள்.

"கண் டாக்டர் பார்த்தாரா அன்பரசி?" என திலோ வினவ, அன்புவிடமிருந்து "கண்ணில் பட்டிருந்த கண்ணாடி தூள்களை எடுத்தாங்க..... மேடம், வேற டெஸ்ட் ஏதும் பண்ணல" என்றாள் பதிலாக.

"ஒ" என அவளது நிலையை உள் வாங்கியத் திலோத்தமைக்கு அவள் கைகளில் தொங்கிய மாவுக்கட்டும், முகத்தில் ஆங்காங்கே தெரிந்த பிளாஸ்டர்களும், அதற்கும் மேலாக கண்ணில் இருந்த உறுத்தலையும் மீறி பொங்கி வழிந்த வலியையும் காணக்காண அன்பரசியின் பால் பரிதாபம் அதிகமாகியது.

அவளுக்கு இப்போது தேவைப்படுவது கழிவிரக்கம் அல்ல, அது அவளைக் காயப்படுத்தும் என்பது திலோவிற்குப் புரிந்த அதே வினாடி அவளுக்குக்  கவனிப்பும் அன்பும் பராமரிப்பும் தேவைப்படுகிறது என்பது முற்று முதலாய் விளங்கியது.

தனது யோசனை அன்பரசியின் முகத்தில் குழப்பத்தையும் கேள்வியையும் உண்டு பண்ணுவதைக் கண்ட திலோ அதை மாற்றும் வண்ணம், "மேடமா? உங்க நல்லா சாருக்கு அண்ணி என்றால் நான் உனக்கு மேடமா?" என்றாள் அவளது கன்னத்தை மெல்ல தட்டி.

"நான் இப்பெல்லாம் சாரை விட்டுட்டேன். நல்லா தான்!" என்ற அன்பரசியின் குரலில் ரோஷம் நிறைந்திருந்தது.

"அவர் நல்லா-ஆன மாதிரி, நாங்களும் திலோ ஆகிடுறோமே ப்ளீஸ்" என திலோ கொஞ்ச, "ம்ஹூம்ம்" என அழகாய் தலையசைத்தாள் அன்பரசி, மறுத்து!

"ஏங்க?"' என மீண்டும் திலோ கொஞ்ச, "ஆபீஸ்ல பேர் சொல்லிக் கூப்பிடலாம். வெளியெல்லாம் மரியாதையில்லாம பேசமுடியாது... நல்லா இருக்காது அக்..அக்கா... இப்படி கூப்பிடவா?" என அன்பு கேட்க, திலோவிற்கு அவளாகவே வழிக்கு வருவது மனதில் லேசாக குதூகலம் குடியேறியது.

"தேங்க்ஸ்மா" என்ற திலோ, அவளை அந்த நிமிடமே சொந்த தங்கைக்கும் மேலாக அவள் நெஞ்சத்தருகே கொண்டுவந்தாள்.

"இரண்டு நாளா தனியா இருந்தது கஷ்டமா இருந்ததா கண்ணம்மா?" இப்படியாக வந்த திலோவின் அன்பு வெளியீட்டில், கண்ணம்மா என்ற அழைப்பில் அன்பரசியின் கலங்கிய கண்கள் மேலும் கனிந்தன.

"இல்லைங்க அக்கா" என்ற இரு வார்த்தையை உதிர்ப்பதற்குள் அன்பரசியின் குரல் பத்து முறை தடைப்பட்டு, அன்பைப் பொழிந்தது.

"இனிமேல் நான் பார்த்துக்கிறேன்" என திலோ நம்பிக்கை கொடுக்க, "நீங்க ஏன்?" என்றாள் அன்பு. அது கேள்வியாக இருந்தபோதிலும், அதில் நிம்மதியும் நன்றியும் பொதிந்திருந்தது.

"அக்கா இரண்டே நிமிஷத்தில் மக்கிப் போயிட்டேனா? ம்ம்" என திலோ வருத்தமெனும் போர்வையைப் பூசிக்கொள்ள, "அது...அது...சரிங்க அக்கா" என்றாள் அன்பரசி!

அன்பரசியிடமிருந்து சுற்றியிருந்த அறையின் மேல் பார்வையை ஓட்டிய திலோ, அன்பரசியின் தோழி என நல்லா கூறியிருந்த நித்யாவை அங்கே காணாமல், "உன் ஃபிரண்ட் நித்யாக்கு விவரம் தெரியுமா? வந்திருக்காங்களா?" என திலோ வினவ,

"அவ மசக்கையில் இருக்கா அக்கா... வரேன்னு தான் சொன்னா... நான் தான் வேண்டாம்ன்னு சொல்லிட்டேன்" என்றவள், "சத்யா அண்ணா குருவாயூருக்கு போயிருந்தாங்க. விஷயம் கேள்விப்பட்டு அங்கிருந்து வந்துட்டே இருக்காங்க. இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துடுவாங்கன்னு நினைக்கிறேன்" எனக் கூடுதல் தகவலும் கொடுத்தாள்.

அந்த பதில் "அண்ணனா? இந்த நல்லா யாருமில்லைன்னு சொன்னானே?" எனத் திலோவை யோசிக்க வைத்து, அதைக் கண்ட அன்பரசியை "நித்யாவோட கணவர் தான் சத்யா அண்ணா!" என விளக்கவும் வைத்தது.

தன் யோசனையை கண்டுகொண்டளே கெட்டிக்காரி தான் என்று மெச்சிய திலோ அதை அப்படியே வெளிக்காட்டாமல், "நித்யா -சத்யா... நல்லா பேர் பொருத்தம். அது தான் அவங்க முழு பேரா" என வேறு விஷயத்திற்குத் தாவினாள்.

"நித்யமேகலை - சத்யசேகரன். அழகா இருக்கில்ல அக்கா!!" என அன்பும் திலோவிற்கு இன்னும் சில விவரம் கூறி, தானும் மகிழ்ந்தாள்.

"ஹ்ம்ம் ரொம்ப அழகு!" என அவளுடன் ஒத்துப் பாடிய திலோ, "என்ன இந்த நந்தாவை இன்னும் காணோம்?" எனக் கணவனைத் தேடியவாறே, "ஆமா உன் ஃபிரண்ட் அருண் எங்க போனான்? இரண்டு நாளுக்கும் சேர்த்து சாப்பிடுறானா என்ன?" என்றாள்.

லேசாய் கண்ணை உருட்டி, குரலில் கேலியைத் தேக்கி திலோ பேசிய விதத்தில், அன்பரசி மறுப்பாக தலையசைத்து, அழகாக சிரித்தாள்.

"அழகா சிரிக்கிறடா ராஜாத்தி! எங்க மலர் மாதிரியே மயக்குற அழகு!!" என திலோ வளர்ப்பு மகளோடு வளர்ப்பு தங்கையை ஒத்துப்பார்த்த போது, "யாரு மலர்? உங்க பொண்ணா அக்கா?" என அன்பரசி வினவினாள்.

"ம்ம் உங்க நல்லா சாரோட பொண்ணு! பேர் மதிமலர்!!" என்ற போது அன்பரசியின் முகம், மிதமான அதிர்ச்சியை மெல்லியதாய் வெளிக்காட்டியது

நல்லானந்திற்குப் பெண் இருப்பதாக திலோத்தமை கூறியதில் அன்பரசியின் முகம் லேசான அதிர்ச்சியைக் கொடுத்ததை உள்ளூர ஓர் திருப்தியோடு கண்டுகளித்தாள் நல்லாவின் அண்ணி!

அன்பரசியின் அதிர்ச்சியையோ, திலோவின் மகிழ்ச்சியையோ தொடரவிடாமல் அருண் அங்கே வந்து சேர்ந்தது அன்பரசியின் கெட்ட நேரமா? அல்லது நல்லாவின் கெட்ட நேரமா? அல்லது இருவரையும் ஆட்டி வைக்கும் திலோவின் நல்ல நேரமா? பொறுத்திருந்து காணலாமே!

அன்பரசியுடன் இருந்த பெண்மணியை இதுவரை பார்த்திராத அருண், முகத்தில் கேள்வியுடனும், கண்களால் அதை அன்பரசியிடம் கேட்டவாறும் அங்கே வந்து சேர்ந்தபோது, "ஹாய் அருண்? சாப்பாடு எப்படி சுமாரா? சூப்பரா?" என்ற கேள்வியுடன் அவனை எதிர்கொண்டாள் திலோத்தமை.

"சுமார் தான். அன்பு தனியா இருப்பாளேன்னு பக்கத்தில இருக்க ஹோட்டல சாப்பிட்டு வந்தேன்" என அவன் பதில் கூற, பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு கேலி சிரிப்பைப் பரிமாறிக்கொண்டனர்.

"என்ன சிரிப்பு?" என்ற அருண் இருவரையும் மாறி மாறி பார்த்தான்.

"இல்லை... நீ ரொம்ப நேரமா வரலையா...அதனால இரண்டு நாளுக்கு சாப்பிடுறியோன்னு அக்கா கேட்டாங்க" என அன்பரசி விளக்க,

"அக்காவா?" என எக்கோ எப்பெக்ட் கொடுத்து அன்பரசியைப் பார்த்து வாயைப் பிளந்தான் அருண்.

"திடீர் உப்புமா, திடீர் சாம்பார் மாதிரி இதென்ன திடீர் அக்கா?" என்றவனுக்குப் பதிலாய் "அப்படித் தான்! எப்படி இருக்கேன் இந்த இன்ஸ்டன்ட் அக்கா?" என சுடிதாரில் இல்லாத காலரை தூக்கிவிட்டுக் கொண்டாள் திலோ!

pr...ic...hu

அவளது பாவனையில் சிரித்த அன்பரசியை நோக்கி "அரை மணி நேரத்தில் அக்கா, ஒரு மணி நேரத்தில் அத்தான் என்று ஏதாவது வச்சிருக்கியா அன்பு? நான் வேணா போயிட்டு ஒரு அரை மணி நேரம் கழிச்சு வரவா?" என ஆராய்தல் இழையோடிய கேலியோடு அருண் வினவ,

"இப்பவே நீ போய் ஒரு மணி நேரம் ஆச்சு.... இன்னும் அரை மணி நேரம் என்றால் அக்கா-அத்தானுக்குப் பிள்ளை குட்டியெல்லாம் வந்திட போகுது" என்றாள் திலோவே!

"ஆஹா, யாருங்க நீங்க? என்னைக் காலாய்ச்சி கொட்டறீங்க" என அருண் அதற்கும் வியக்க, "அன்பரசிக்கு அக்கா என்றாள் உனக்கும் நான் அக்காவே!" என்ற திலோத்தமையிடம் "காலில் வேணும்னா விழறேன்! ப்ளீஸ் போதும்... வலிக்குது... அழுதுடுவேன்" எனக் கைகளால் கெஞ்சினான் கேட்டிருந்தவன்.

"சூப்பர் அக்கா! எங்க அருணையே காலில் விழ வச்சுட்டீங்களே" என அன்பரசி குதூகலித்தப் போது "யு டூ ப்ருடஸ்! அடிபட்டு படுத்திருக்கவ மாதிரி கொஞ்சம் சீனாவது போடு லூசு!" என அவள் மேல் பாய்ந்தான் அருண்.

"என் தங்கையைத் திட்டினியோ தம்பின்னு கூட பார்க்காம நல்ல சாப்பாடு போட்டிருவேன்" என திலோ மேலும் வம்பு செய்ய, "ஹய்யோ, என் திடீர் அக்காவே என்னே உங்கள் பாசம்! மெய் சிலிர்த்து, மனம் திளைக்கிறது!" என அருண் கைகளை ஆட்டி ஆட்டி சொற்பொழிவு நடத்த, அங்கே மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

இவர்களது சிரிப்பைக் கண்ணுக்குள் நிறைத்தவாறே உள்ளே வந்த தேவநந்தன், "ஷ், இந்த வார்டுல நாம மட்டுமில்லை திலோ! இன்னும் நிறைய நோயாளிகள் இருக்காங்க! கொஞ்சம் மெதுவா" என மனைவியை அடக்கும் நோக்கத்தில் மற்றவர்களுக்கும் அறிவுறுத்தினான்.

"யாரு இவர்?" என உதட்டசைவில் அருண் அன்பரசியிடம் பேசிக் கொண்டிருக்க, "அக்காவோட இலவசமா வந்த அத்தான்" என்றாள் திலோ அவனுக்குப் பதிலாய்!

"முடியல.... என்னால முடியல" என அருண் வாய் விட்டு புலம்பியதும், அவனைப் பார்த்து பரிதாபப்பட்ட அவனது தோழி "நம்ம நல்லா சார் இருக்காரில்ல, அவரோட அண்ணாவும் அண்ணியும் தான் இவங்க!" என்றாள்.

"ஹோ" என்ற அருணின் கண்கள் கணவன்-மனைவியாய் அருகில் நின்றிருந்த இருவரையும் அளவெடுத்தது.

"எவ்வளவு மார்க் போட்டிருக்கே?" என திலோ அடக்கிய சிரிப்புடன் வினவ, "திலோ!" என அவளை மீண்டும் அடக்கிய தேவ், "ஹாய் அருண்... அருண் தானே! நான் தேவநந்தன், நல்லானந்தோட அண்ணன்" எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"ஹலோ சார், நான் அருண் தான்! நான் இங்க இருக்கிறது உங்களுக்கு எப்படி தெரியும்?" எனத் தன் அடுத்தக் கேள்வியை முன் வைத்தான்.

"நல்லா சொன்னான்" எனப் பதில் கூற, "எதையுமே முழுசா சொல்ல மாட்டீங்களே! இப்போ அவன் நல்லாவிற்கு எப்படி தெரியும்ன்னு கேட்பான்... அதுக்குப் பதில் சொன்னா...நீங்க ஏன் அவன் சொன்னதுக்காக இங்க வந்தீங்கன்னு கேட்பான். எல்லாத்துக்கும் ஒரே நேரத்தில் பதில் சொல்லுங்க" என்ற திலோ, "அடேங்கப்பா.... உங்ககிட்ட கேட்ட எல்லா கேள்விக்கும் "டான்... டான்"ன்னு பதில் சொன்ன மாதிரி என்னா சீன் அக்கா?" எனத் தன் பங்கிற்கு காலை வாரினான் அருண்!

"ச்சே, இப்படி ஒரு வருத்தத்தை என் தம்பி பட நான் காரணமா இருக்கலாமா? இனிமேல் எல்லா கேள்விக்கும் "டான்..டான்"ன்னு பதில் சொல்லிடுறேன்" என்ற திலோவின் வார்த்தையிலிருந்த விஷமத்தை நண்பர்கள் கவனிக்காதபோதும் கணவன் என்ற கள்வன் அறியாததா? அவளது வார்த்தை ஜாலத்திலேயே அடுத்து வரப்போகும் அவள் திருவிளையாடல்களை அறிந்துகொண்டான். நல்லாவுடன் காலகாலமாய் அவள் ஆடும் விளையாட்டு தானே!

"திடீர் அக்கா, என் கேள்விக்கு என்ன பதில்? ச்சே ச்சே என் கேள்வியென்று நீங்க சொன்ன உங்க கேள்விக்கு என்ன பதில்?" என அருண் வினவ, "டான், டான்" என்றாள் திலோ சிரிக்காமல்.

"அன்பரசிசிசிசிசிசிசிசிசிசிசிசிசி" என அருண் பல்லைக் கடித்தப்போது தேவ்விற்கே சிரிப்பு வந்தது.

"கெக்கே பிக்கே என்ன சிரிப்பு? சின்னப் பிள்ளைங்களோட சேர்ந்துகிட்டு முக்கியமான விஷயத்தையே விட்டுரீங்களே!" எனக் கணவன் தன்னை அதட்ட உபயோகப்படுத்தும் வசனத்தைத் தானே முந்திக் கொண்டு கூறிய திலோ, அதற்குப் பதிலாய் யாரையும் பேச விடாமல் "டாக்டர் என்ன சொன்னார்? அன்புவோட உடல்நிலை எப்படி இருக்காம்? எப்போ கூட்டிட்டு போகலாமாம்?" என்றாள் வரிசையாக.

"அவர் இருந்தா தானே ஏதாவது சொல்றதுக்கு? அரை மணி நேரம் என்னைக் காக்க வச்சிட்டு முக்கியமான வேலையிருக்குன்னு கிளம்பிப் போய்ட்டார்" என்றான் தேவ் சற்றே கடுப்புடன்.

"ஹோ" என திலோ தன் முகத்தில் அதிருப்தியைக் காட்ட, "அன்பரசியை சென்னை மருத்துவமனை எதுக்காவது அழைச்சிட்டுப் போய்டலாம்! இங்க இருக்கிறது அவ்வளவு உசிதமா படல" என்றான் தேவ் யோசனையாக.

"காலையிலிருந்து நான் இதைத் தான் சார் சொல்லிட்டு இருக்கேன். இவ தான் வேண்டாம் வேண்டாம்ன்னு ராகம் பாட்ற! அவளை இந்த நிலைமையில டாக்ஸில கூட்டிட்டுப் போகவும் பயமா இருந்தது..அதனால ஆம்புலன்ஸ் பத்தி விசாரிக்கப் போனேன். யாரும் பெருசா கண்டுக்கிறமாதிரியில்லை. என்ன பண்றதுன்னு தெரியலை சார்" என்றான் அருண் உண்மையான வருத்தத்துடன்.

"நாங்க கார்ல தான் வந்திருக்கோம். மெதுவா கார்லேயே போய்டலாம்" என தேவ் கூற, "வேண்டாம் சார். என்னால உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்? நான் இங்கேயே இருந்துக்கிறேன்!" என்றாள் அன்பரசி, சங்கடம் கலந்த பிடிவாதத்துடன்.

"இதெல்லென்னம்மா சிரமம்?" என தேவ் துவங்க, "உன்னை இங்க விட்டுட்டு போனா என்னோட திடீர் அக்கா பதவிக்கு இழுக்கு வந்திடும். கஷ்டப்பட்டு வாங்கின பதவிக்கு இழுக்கு ஏற்படுவதை என்னால் பொறுக்கவே முடியாது. அதனால் கிளம்புற வழியைப் பாரு" எனத் தன் கிண்டல் குரலிலேயே வழிக்குக் கொண்டுவர முயன்றாள் திலோ.

"இல்லைங்க அக்கா... நான் இங்கேயே இருக்கேன்!" என அன்பு மேலும் தயங்க, "என் மேல நம்பிக்கையில்லையா அன்பு? அரை மணி நேரம் முன்னே பார்த்த ஒருத்தியோடு எப்படி போறதுன்னு யோசிக்கிறியா?" என அவளருகே அமர்ந்து கைகளைப் பிடித்துக்கொண்டாள் திலோத்தமை.

"நம்பிக்கையில்லாம இல்லைக்கா, என் நிலைமைக்கு இந்த இடம் தான் சரி. நான் இங்கேயே இருந்துக்கிறேன்" என்ற அன்புவின் குரலில் சிறுதும் தாழ்வுணர்ச்சி இருக்கவில்லை, மாறாக இது தான் நான்! என்னுடைய நிலையை..அது தாழ்வாய் இருப்பினும், நேர்மையாய் இருப்பின் மற்றவரிடம் பகிர்ந்து கொள்வதில் எனக்கு எந்தவிதமான தயக்கமோ அவமானமோ இல்லை என்ற தன்மான உணர்வே மேலோங்கியிருந்தது!

அந்தக் குரலை மீறி அவளை அழைத்துச் சென்றால் அவளை அவமதிப்பது போலாகிவிடுமோ என்றெண்ணிய திலோ செய்வதறியாமல் கணவனைப் பார்த்தாள்.

திலோவின் கணவன் அவளது துணைக்கு வருமுன், அவளது திடீர் தம்பி உறுதுணையாய் அவளுக்கு வந்தான்! "ஹே அன்பு, நாங்க எல்லாரும் இவ்வளவு தூரம் சொல்றோமே! அப்போ கூட உன்னோட பிடிவாதத்திலிருந்து வெளிவரக் கூடாதாக்கும்! உனக்காக இல்லைன்னாலும் இந்த திடீர் அக்கா - திடீர் தம்பி பாசத்தை வளர்க்கிறதுக்கு உதவி செய்யக் கூடாதா? ராமருக்கு அணில் செய்ததே அந்த மாதிரி குட்டியூண்டு உதவி? ப்ளீஸ்! ப்ளீஸ்!" என அருண் கேலியின் போர்வையில் தோழியை நகர்த்த முயற்சிக்க, திலோ அவனுக்கு ஹை-பை கொடுத்து "ப்ளீஸ் அன்பு! ஒரு பாசமலரைப் பிரிச்ச பாவம் உனக்கு வரவேண்டாமேன்னு தான் சொல்றோம்! உதவி பண்ணுமா.... ப்ளீஸ் ப்ளீஸ்" என்றாள் பாவமாக.

இருவரது பாவனையும் அன்பரசியின் முகத்தில் சிரிப்பைக் கிளப்ப, "ஹப்பா... என் தங்கச்சி சிரிச்சிட்டாடோய்!" எனக் குதூகலித்த திலோ, "எல்லோ சிக்னல் விழுந்திருக்கும் போதே வண்டியை எடுங்க நந்தா. கிரீனுக்குப் போறதுக்குப் பதிலா சிகப்பிற்குப் போய்ட போகுது!" எனக் கணவனை விரட்டி, அங்கிருந்து கிளம்பும் வழியைப் பார்த்தாள்.

"இல்லைங்க அக்கா... நான்... இங்கேயே...நான் வரல" என அன்பு மேலும் தயங்க, அவள் வாய் மேல் விரல் வைத்து "சுப். பேசமா படு. வேற ஹாஸ்பிடல்ல போற வரைக்கும் சிரிக்கிறதுக்கு மட்டும் தான் வாயைத் திறக்கணும் சரியா?" என அடக்கினாள், பெரியவள்!

இளையவளின் மறுப்பும் பெரியவளின் அத்துமீறலும் அரங்கேறிக் கொண்டிருக்க, இளையவனின் அத்துமீறல் பெரியவனிடம் அரங்கேற ஆரம்பித்தது. ஆம், தேவ்வின் கைப்பேசிக்கு அந்த நாளில் நூறாவது முறையாக அழைத்திருந்தான், நல்லா!

மருத்துவரைப் பார்க்கவென்று தேவ் காத்திருந்த வேளையிலேயே மூன்று முறை அழைத்தவனிடம் தேவ் விவரம் கூறியிருந்தாலும், டீச்சர் அம்மாவின் வாய் வார்த்தையாக மனம் கவர்ந்தவளின் உடல்நிலையை அறிய மனம் துடித்தது அவனுக்கு.

இப்போது வந்த அழைப்பை எடுத்த தேவ், அன்பரசி கிளம்புவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த திலோவிடம், "நல்லா பேசுறான், பேசு" என்றான்.

"பேசவேண்டிய ஆள் இங்க இருக்கும் போது, எதுக்கு என்கிட்டே தரீங்க?" என்றவாறே கணவனிடமிருந்து கைப்பேசியை வாங்கிய திலோ, "உங்க நல்லா சார்கிட்ட உன் நலத்தைக் கொஞ்சம் சொல்லிடுமா" என அதை அப்படியே அன்பரசிக்கு இடமாற்றினாள்.

நல்லா தன் மேல் வைத்திருக்கும் அக்கறையை எண்ணி ஏற்கனவே வியந்து கொண்டிருந்த அன்பரசிக்கு, இப்போது படபடப்பாக இருந்தது. தினமும் அவனிடம் பேசுவது தான் என்றாலும் இன்று ஏதோ புதிதாக இருந்தது.

தன்னை இரு தினங்களாக காணவில்லை என்றதும் நண்பர்களிடம் விசாரித்து, விபத்து என்ற விவரம் கேள்விப்பட்டதும் தன் அண்ணன்-அண்ணியை அனுப்பி, தன் நலத்தை அறிந்துகொள்ளவென இத்தனை நேரம் விழித்திருந்து - என அவன் செய்த / செய்யும் காரியங்கள் யாவும் அன்பரசியை பெரும் வியப்பில் தள்ளியிருந்தது. உள்ளிருந்த எதிர்பார்ப்பை நல்லா ஒரு குழந்தையின் தகப்பன் என்ற தகவல் தகர்த்திருந்த போதும், வியப்பு மறையவில்லை!

வியப்பு குறையாமல் அன்பரசி கைப்பேசியை வாங்கிக் காதில் வைக்க, அவளைப் பேசவிட்டு மற்ற மூவரும் வேறு விஷயம் பேசத் தொடங்கினர்.

Priya Bhavani

அன்பரசி நல்லாவிடம் பேசத் தொடங்கும் முன்னர், அருண் திலோவிடம் வம்பளக்க ஆரம்பித்திருந்தான். "சான்சே இல்லை திடீர் அக்கா! நீங்க எந்த காலேஜ்?" என்று அவன் வினவ, "காலேஜா? ச்சே ஒன்னுக்கு இரண்டா பெத்து பிள்ளை வச்சிருக்கேன். அதில் ஒன்னை கூட்டிட்டு வந்திருந்தா "மம்மி" என அழகா சொல்லியிருக்குமே" எனத் திலோ வருத்தப்பட்டு, "இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவா?" என அருணை வியக்க வைத்தாள்.

தன் பதில் அன்பரசியை மீண்டும் அதிர்ச்சிக்கு ஆளாக்கும் என்பதை அறியாமல் "ஆமா ஒரு பையன் - அகிலன், ஒரு பொண்ணு - மதிமலர்" - என்று திலோவிற்குப் பதிலாக அருணுக்குப் பதில் கூறியது தேவ்!

தங்களுக்கு இரு குழந்தைகள், அதில் ஒரு பெண் - மதிமலர் என தேவ் அருணிடம் பகிர்ந்ததைக் கேட்டிருந்த அன்பரசிக்குப் பெரும் குழப்பமாய் இருந்தது!

சற்று நேரம் முன்னாடி நல்லானந்திற்கு மகள் இருப்பதாகவும், அவள் தான் மலர் என்றும் திலோத்தமை கூறியது நினைவில் வந்து அவளது கற்பனை குதிரையை படு வேகமாக தட்டி ஓடவைத்தது.

நல்லாவின் பெண் எப்படி தேவிற்கும் பெண்ணாவாள்? ஒருவேளை ஒருவரது பெண்ணை மற்றவரும் தம் பெண்ணாக போற்றி வளர்க்கின்றனரோ! அல்லது இருவரது பெண்ணிற்கும் ஒரே பெயரா? ஒரே பெயராக இருந்தால் இருவரையும் எப்படி அழைப்பர்? ஒருத்தியை மதியென்றும் , அடுத்தவளை மலரென்றும் அழைப்பார்களோ? கடவுளே இதென்ன குழப்பம்? அவர்களுக்கு எத்தனை பெண், எந்தப் பெயரில் இருந்தால் தனக்கு என்ன வந்தது? தான் ஏன் இவ்வளவு யோசிக்கிறோம்? நல்லாவிற்குப் பெண் இருப்பதைக் கேட்டப்போது இருந்த அதிர்வு ஏன் சற்றே குறைந்தது போலிருக்கிறது? என எண்ணங்கள் தறிகெட்ட ஓடியதில், அன்பரசியின் கவனம் தன்னிடம் பேசிக் கொண்டிருந்த நல்லானந்திடம் இல்லை.

அவனோ அங்கே "அன்பு, எப்படி இருக்கீங்க? உடம்பு பரவாயில்லையா? கண் உறுத்தல் குறைஞ்சிடுச்சா? கை எப்படி இருக்கு? மாவு கட்டு போட்டிருக்காங்களா? தேவ்-திலோவோட கிளம்பி சென்னை போய்டுங்க அன்பு! ப்ளீஸ்" என அவன் பாடு பேசிக் கொண்டே போக, அவனது மனம் கவர்ந்தவளோ அவன் சொல்லுவதை மனதிலேயே ஏற்காமல் தன் கற்பனையிலேயே உழன்று கொண்டிருந்தாள்.

அன்பரசியிடமிருந்து பதில் வராமல் போகவே "அன்பு... அன்பு..." என இருமுறை அழைத்தவன், "என்னாச்சு அன்பரசி? உடம்பு ஏதும் பண்ணுதா? ஆர் யு அல்ரைட்? அன்பு" என அவன் பதறித் துடிக்க, அன்பரசி அப்போதும் மலர் - மதி குழப்பத்திலேயே இருக்க, "திலோ.... தேவ்.... ஹே யாரவது அன்பரசியை பாருங்கடா... ஒண்ணுமே பேச மாட்டேன்றா" எனப் பெருங்குரலெடுத்து கத்த ஆரம்பித்தான் நல்லா!

அவனது பெருங்குரலில் கற்பனைக் குதிரை சட்டென நின்றுவிட, "சாரி நல்லா, சாரி, சாரி!

வேற ஒரு யோசனையில் இருந்தேன்." என அன்பரசி அவனிடம் மன்னிப்புக் கோர,

"ஹப்பா... ஒரு நிமிஷம் பதறிப் போயிட்டேன்" என்ற போது நல்லானந்தின் குரலில் பதட்டம் குறைந்த நிம்மதி வெகு வெளிப்படையாய் தெரிந்தது.

அவனது பதட்டம் மனதைத் தொட "ரொம்ப தேங்க்ஸ் நல்லா" என்றாள் அன்பரசி!

"எதுக்கு?" என ஒற்றை வார்த்தையாய் வந்தது நல்லாவின் கேள்வி.

"எல்லாத்துக்கும்" என்ற அன்பரசியின் பதிலில் பெரும் சந்தோஷமும், நன்றியுணர்வும் தேங்கியிருந்தது!

"எல்லாத்துக்கும் என்றால்?" என ஒரு வார்த்தை கேள்வியை இரு வார்த்தை கேள்வியாய் மாற்றிப் போட்டான் நல்லானந்த்.

"நீங்க செஞ்ச எல்லாத்துக்கும்" என அவனது இரு வார்த்தை கேள்விக்கு ஒரு வார்த்தை அதிகமாய் பதிலளித்தாள் அவனவள்.

"ம்ம்ம்" என அதை உள் வாங்கிய நல்லா, "எப்படி இருக்க அன்பு?" என்ற போது குரல் குழைந்து பெரும் அன்பை மலராய் தூவியது.

அவன் சட்டென்று ஒருமைக்குத் தாவியதும், அவனது குரலில் தெரிந்த குழைவும் அன்பரசியின் மனதைத் தொட்டது நிஜம். மனதை நகர்த்திய வார்த்தைகள் அவளை மௌனியாக்க, நல்லாவின் "அன்பு" என்ற அழைப்பு காற்றில் களைந்தது.

"இப்ப என்ன யோசனை?" என நல்லா வினவ,

"இல்ல... அது...அது... திலோ அக்கா உங்க பொண்ணு மலரைப் பத்தி சொல்லிட்டு இருந்தாங்க.... அவளைப் பத்தி நினைச்சிட்டு இருந்தேன்" என நூல் விட்டுப் பார்த்தாள் அன்பரசி.

அவள் கேட்கும் தோணி புரியாமல், மகள் என்றதும் "மலர் குட்டியைப் பத்தியா? ரொம்ப கியூட் தெரியுமா மலர்!! பார்த்தவுடனே உனக்குப் பிடிச்சிடும். அழகா இருப்பா... சமத்தா பேசுவா... அநியாயத்திற்கு குறும்பும் பண்ணுவா...அதுக்கு திலோகிட்ட அடியும் செமத்தியா வாங்குவா" என அவளது புகழைத் தந்தையாய் பாடினான் நல்லா.

"ஹோ" என்றதோடு அன்பு அதை உள்வாங்கிக் கொள்ள, மீண்டும் அங்கே அமைதி நிலவியது.

"என்ன அன்பு? சத்தமே காணோம்? ஒரு தேங்க்ஸ்... ரெண்டு எல்லாத்துக்கும்... ரெண்டு அதுன்னு அளந்து அளந்து பேசுற?" என்ற நல்லானந்த், "சரி வேண்டாம்... கண் எப்படி இருக்கு? டெஸ்ட் ஏதாவது பண்ணிப் பார்த்தாங்களா?" என அவளது நலத்திற்குத் தாவினான் நல்லா.

"இல்ல....திலோ அக்காவும் தேவ் சாரும் சென்னை ஹாஸ்பிடல்லுக்குக் கூட்டிட்டுப் போறேன்னு சொல்லியிருக்காங்க. அங்க போய் தான் பார்க்கணும்" என அன்பரசி மெது குரலில் பதிலளிக்க,

"வரே வாவ், திலோ அக்காவா? கலக்கிட்ட திலோ! கிரேட்!" என உரக்கக் குரல் கொடுத்தான் அதை கேட்டிருந்தவன்.

"என்ன இவ்வளவு சந்தோஷம்?" என அன்பு மெதுவாய் வினவ, "விஷயமா தான்!" என்ற போது நல்லாவின் குரலில் விஷமம் கூத்தாடியது.

"நான் இங்க இருக்கிறது உங்களுக்கு எப்படி தெரியும்?" என்ற அன்பரசியின் அடுத்த கேள்விக்கு, "ரெண்டு நாளா உன்னைக் காணாமல் தவிச்சுப் போயிட்டேன் அன்பு! இன்னைக்குத் தவிப்பு ரொம்பவே ஜாஸ்தியாகவும் ரகுகிட்ட பேசினேன். அவன் தான் உன்னோட விபத்து பத்தி சொன்னான். உடனே திலோவையும் தேவ்வையும் சென்னையிலிருந்து கிளம்பிவரச் சொன்னேன்" என அவளுக்குத் தகவல் கூறியவன்,

"அவங்க ரெண்டு பெரும் திடீர்ன்னு வந்ததும் பயந்துட்டியா? ஆனா எனக்கு வேற வழி தெரியல!" என்றான் சிறு தயக்கத்துடன். அவனது பதில் மனதில் பதிந்தபோது அதிலிருந்த தவிப்பு மட்டுமே பிரதானமாய் தெரிந்தது, அன்பரசிக்கு.

"ஏன் தவிக்க வேண்டும்? எனக்கு ஒன்றென்றால் தவிக்கக் கூட ஆள் இருக்கிறதா? ஆள் இருப்பது இருக்கட்டும்... நல்லானந்திற்கும் தனக்கும் என்ன சம்மந்தம்? அவன் ஏன் எனக்காக பார்த்து பார்த்து செய்ய வேண்டும்? அதுவும் அவனது நெருங்கிய குடும்பத்தினரை அவர்களது வேலையை விட்டுவிட்டு தன்னைப் பார்ப்பதற்கு ஏன் வரச் சொல்லவேண்டும்? என பற்பல கேள்விகள் எழுந்தன. அதுவும் மணமானவன்? மணமானவன் தானா? மணமாகாமல் எப்படி பெண் வருவாள்? வீட்டில் மனைவியை வைத்துக் கொண்டு வேறொரு பெண்ணைக் காணாமல் தவித்துப் போனேன் என்று ஏன் சொல்கிறான்? தான் அறிந்த நல்லா சாரா இது?

“ஏன், ஏன், ஏன்” என அவளது மூளைக்குப் பல கேள்விகள் வேலை கொடுக்க, அவளது நாவோ வேலை நிறுத்தம் செய்திருந்தது.

"பயப்படலை... கொஞ்சம் குழம்பிட்டேன். நம்மை பார்க்கிறதுக்கு யாரு இந்த நேரத்தில்ன்னு" என அன்பு சாதாரணமாய் சொன்னது அவளது ஆதரவற்ற நிலையை பறைசாற்றி, நல்லாவின் மனதை ஊசியாய் குத்தியது.

"உனக்கு நானிருக்கேன்...." என சொல்ல எண்ணி வாக்கியத்தை ஆரம்பித்தவன், நானிருக்கேன் என்ற வார்த்தையில் "ன" வந்த போது சடாரென அதை "ங்க" என மாற்றி, "உனக்கு நாங்க இருக்கோம்" என்றான் முடிவில்.

"தேங்க்ஸ்" என்ற அன்பரசியிடம், "எத்தனை தேங்க்ஸ் சொல்லுவ? போதும்மா" என்றான் நல்லா சிறு கண்டிப்புடன்.

"ம்ம். சரி... திலோ அக்காகிட்ட கொடுக்கவா?" என அன்பரசி வினவ, "ஹோ... கொடுக்கிறியா? சரி" என்றான் நல்லா ஏமாற்றத்துடன்.

சற்று தூரம் தள்ளி நின்று, அருணிடம் உரையாடிக் கொண்டிருந்த திலோவின் புறம் கைகள் நீண்டுவிட, அதை சட்டென இழுத்துக் கொண்டவள் "ஒரே ஒரு கேள்வி கேட்கவா?" என்றாள் தயக்கத்துடன்.

"ம்ம் கேளு" என நல்லா ஊக்க,

"என் மேல உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறைன்னு தெரிஞ்சுக்கலாமா?" என்றாள் அன்பரசி, தயக்கம், ஆர்வம், எதிர்பார்ப்பு என நிறைய உணர்வுகள் கலந்திருந்தது.

"ம்ம்... இந்த கேள்விக்குப் பதில் நேரில் வந்து சொல்லலாம்ன்னு பார்க்கிறேன். நீங்க என்ன நினைக்கிறீங்க?" என நல்லா கேட்க, அன்பரசிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"சரி" என சோர்ந்த குரலில் சொல்லிவிட்டு, "ஒரு நிமிஷம், அக்காகிட்ட தரேன்" என்றாள் அன்பு.

தற்செயலாக அன்பரசியின் பக்கம் திரும்பிய திலோ, அவள் நீட்டிய கைப்பேசியை வாங்கி "என்ன சார்? இப்போ நிம்மதியா இருக்கீங்களா? கொஞ்ச நேரம் தூங்குங்க. நாங்க சென்னை போனதும் உனக்குக் கூப்பிடறோம். நீ எழுந்துக்கிறதும் நாங்க சென்னை போறதுக்கும் சரியா இருக்கும்" எனக் கணவனின் தம்பியை உறங்குமாறு அறிவுறுத்தினாள்!

"ம்ம் போகணும்! அன்புவை பார்த்துக்கோ திலோ..." என்றான் சிறு கெஞ்சுதலுடன்.

"அட, இங்க பாருடா! சிபாரிசு பண்றார் சார்!" என கேலியாய் வியந்தாலும், "நீங்க சொல்லாமலே என்னோட தங்கையை நான் தங்கத் தட்டில் வச்சுத் தாங்குவேன். புரியுதா? போய் தூங்கித் தொலை. காது வலிக்குது" என்ற திலோ, ஆள் காட்டி விரலைக் காதில் விட்டுக் குடைந்தவாறே சிரித்தாள்.

"சரிங்க அண்ணி" என பவ்யமாய் வந்த நல்லாவின் குரலில் "அது... அது... கொளுந்தானாருக்கு அழகு" என்றதோடு அழைப்பைத் துண்டித்தாள் பெரியவள்.

"கிளம்பலாமா?" என தேவ் வினவ, "அன்பரசியோட அண்ணா - சத்யசேகரன் குருவாயூரிலிருந்து வந்திட்டு இருக்காராம். அவர் வந்ததும் போகலாம்" என அன்பரசி கூறியதை மனதில் வைத்துக் கொண்டு கூறிய திலோவை நன்றியுடன் பார்த்தாள் அன்பரசி.

அவளது மொழியா நன்றியில் உதட்டில் புன்னகை புக, அன்பரசியின் முகம் கனிந்து ஜொலித்தது.

"அது நல்ல தங்கைக்கு அழகு. இவ்வளவு நேரம் இந்த அழகு முகத்தில் ஒரே யோசனை, குழப்பம், கோபம்... ம்ம் ஏன்மா" என அன்புவின் முகத்தை லேசாய் வருடிக் கொடுத்தவாறே திலோ வினவவும், நல்லாவின் உரையாடலால் பலவீனப்படிருந்த மனது கண்ணில் நீரை வரவைத்தது.

"ஷ், எதுக்கு அழுகை?" எனத் திலோ மெல்ல துடைத்துக் கொண்டிருக்கும் போதே, அருணின் குரல் "சொல்லுங்க சத்யா?" என ஆரம்பித்து, "ஹோ அப்படியா?" எனப் பயணித்து, "நீங்க அங்க போங்க, இங்க அன்புக்கு இன்ஸ்டன்ட் அக்கா, அத்தான் எல்லாம் கிடைச்சாச்சு. நாங்க பார்த்துக்கிறோம்" என்பதில் முடியாமல், "ஒரு நிமிஷம் அன்புகிட்ட கொடுக்கிறேன்" என்பதில் முடிந்தது.

அருணிடமிருந்து இடது கையால் கைப்பேசியை வாங்கிய அன்பரசியிடம், பாட்டனாருக்கு உடம்பு முடியவில்லை என்ற தகவலை சத்யசேகரன் கூறியதும் "ஹோ... நீங்க போய் தாத்தாவை பாருங்க அண்ணா! நித்யாவால தனி ஆளா சாமாளிக்க முடியாது" என அவனை நாகர்கோயிலுக்கு அனுப்பிவைத்தாள் அன்பரசி.

அதன் பிறகு, அருண் கனகாரியமாய் கொளுத்திப் போட்ட அக்கா-அத்தானை பற்றி சத்யா விசாரிக்க, அன்பரசி விவரம் கூறினாள். அன்பரசி-அருண் என வரிசையாக தோன்றிய அதே வியப்பு சத்யசேகரனுக்கும் தோன்றியதில் வியப்பில்லை என்றபோதிலும் "அவர்கள் யார் உன்னை அழைத்துச் செல்ல? அவர்களோடு நீ சென்னை போக வேண்டுமா?" என சத்யசேகரன் வினவியதில் அன்பரசிக்கு வியப்பே!

"அவர்கள் யார் உன்னை அழைத்துச் செல்ல? அவர்களோடு நீ சென்னை போக வேண்டுமா?" என சத்யசேகரன் வினவியதில் அன்பரசிக்கு வியப்பே என்றபோதிலும் அவனது கேள்வியில் அக்கறையுடன் கூடிய ஆளுமை இருப்பதாக அன்பரசிக்குப் பட்டது.

அன்பு கொண்ட மனமோ ஆளுமையை ஒதுக்கிவிட்டு அக்கறையை மட்டும் பிரித்துப் பார்க்கச் சொன்னதில், "இல்லைங்க அண்ணா, திலோ அக்கா ரொம்ப நல்லவங்க! நித்யா மாதிரியே அக்கறையா அன்பா இருக்காங்க. எனக்கு வித்தியாசமா தெரியல" என்ற வாக்கியத்தில் விளக்கம் வெளிப்பட்டாலும், அவனது ஆளுமையில் தனக்கு விருப்பமில்லை என்பதை கடைசி வாக்கியம் அழுத்தமாக எடுத்துக் கூறியது.

அவளது அழுத்தம் தன் ஆளுமையை அடக்க, "இல்லமா... உனக்கு அவங்களை முன்னே பின்னே தெரியாதில்லை. உன் நல்லதுக்காக தான் சொன்னேன் அன்பரசி" என்றபோது குரல் தழைந்திருந்தது.

"ஹய்யோ, உங்களைத் தெரியாதா அண்ணா? நீங்க சொல்றது விளங்குது. ஆனா இவங்களும் நல்ல மாதிரி தான் என்று சொல்றேன்" எனப் புதிதாய் முளைத்த உறவிற்காக அவனிடம் பேசினாள் அன்பரசி.

"ம்ம் சரி அன்பு, எங்களை விட உனக்கு உலக அனுபவம் ஜாஸ்தி. பலதரப்பட்ட ஆளுங்களையும் கையாளும் திறமை உனக்கிருக்குன்னு எங்களுக்குத் தெரியும். பார்த்துக்கோ அன்பரசி!" என அவளது முடிவை அவளிடமே விட்டவன், "நித்யாகிட்ட நான் சொல்லிக்கிறேன். அவளுக்கு உன்னைக் காண வரமுடியலைன்னு ஒரே கோபம். இதில அப்பச்சன் வேற!" என்றான் சிறு இடைவேளையின் பின்னர். அதில் தன் மனைவியின் கோபத்தையும் அதன் மூலம் வெளிப்பட்ட பாசம் நிறைந்த படபடப்பையும் மறைக்காமல் எடுத்துரைத்தான்.

"அப்பச்சனைப் பாருங்க அண்ணா! எனக்குப் பெருசா ஒண்ணும்மில்லை. சீக்கிரமா நித்யாவை வந்து பார்கிறேன்னு சொல்லுங்க" என்ற அன்பரசியை "ஹ்ம்ம், வேண்டாம்மா! ஒரு தடவை எங்களைப் பார்க்க வந்துட்டு நீ படற கஷ்டமே போதும். நாங்க உன்னைப் பார்க்க வரோம்" என்றபோது குரல் கரகரத்தது.

"யாரோ ஒரு லாரிகாரன் வண்டி ஒட்டும்போது தூங்கினா அதுக்கு நீங்களும் நித்யாவும் என்ன செய்வீங்க? கண்டதையும் நினைச்சு குழம்பாம நித்யாவையும் அப்பச்சனையும் பார்த்துக்கோங்க" என்றதோடு அண்ணன்-தங்கையின் பேச்சு வார்த்தை முடிந்தது.

அடுத்த பத்து நிமிடத்தில் அன்பரசியை திலோ கைத் தாங்கலாக தங்களது வண்டிக்கு அழைத்துச் சென்றதை, ஏனென்று கேட்கும் அளவு பொறுப்போ கவனிப்போ கூட அந்த மருத்துவமனை ஊழியர்களுக்கு இருக்கவில்லை.

அன்பரசியின் உடைமைகளான ஒரு கைப்பையையும், அவளது சிறு பெட்டியையும் அருண் எடுத்துக் கொள்ள, மூவருமாக வண்டியை அடைந்தனர். தேவநந்தன் வண்டியைச் செலுத்த, அருண் அவனருகே அமர்ந்து கொண்டான். பின்னிருக்கையில் அன்பரசியை வசதியாக அமர வைத்த திலோ, தனக்கென சிறிதளவு இடத்தை எடுத்துக் கொண்டு தங்கைக்கு வசதியளித்தாள்!

"இங்கிருந்து சென்னை பயணிக்க மூணு மணிக்கூறு தானே அக்கா ஆகும்! என்னால அதை உட்கார்ந்தே பயணிக்க முடியும். நீங்களும் வசதியா உட்கார்ந்துக்கோங்க" எனக் கூறிய அன்பரசியை வாஞ்சையாய் பார்த்து புன்னகை செய்த திலோ, "எனக்கு இதில் கஷ்டம் ஒண்ணுமில்லை. பசங்களோட வரும் போது அவங்க தூங்குறதுக்காக குறுக்கி உட்கார்ந்து பழக்கம் தான்!" என விளக்கியதோடு சற்று தொலைவில் அன்பரசியை தன் மடியில் படுக்க வைத்துக் கொண்டும் வந்தாள்.

அசந்து உறங்கிய நேரத்திலும் அன்பரசியின் கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டே இருக்க, திலோவின் தாய் மனம் துடித்துப் போனது. "நந்தா, அன்புவின் கண்ணிலிருந்து தண்ணி நிற்கவே மாட்டேன்கிறதே! எனக்குப் பயமா இருக்கு. ரெண்டு நாளா யாருமே அதை கவனிச்ச மாதிரி தெரியலையே!" என வாய் விட்டு வருந்தி, அன்பரசியின் உறக்கத்திற்காக நிலவிய பெரும் அமைதியைக் களைத்தாள்.

"சென்னை போனதும் முதல் வேலையா அவளோட கண்ணை டெஸ்ட் பண்ணிடலாம் திலோ! அப்பா மூலமா பார்த்தசாரதி அங்கிள் ஹாஸ்பிடல்-ல எல்லாம் ஏற்பாடும் செஞ்சாச்சு. போனதும் பார்க்கவேண்டியது தான்" என மனைவியை சமாதானப்படுத்தியவனிடம், "பார்த்தசாரதி யாரு? உங்க குடும்ப டாக்டர்ரா?" எனக் கேட்டு தேவ்வின் தலையாட்டலைப் பெரிசாகப்

பெற்று கொண்டான் அருண்.

தேவ்வின் பதிலைத் தொடர்ந்து, "அவரோட ஹாஸ்பிடல் எங்க இருக்கு? ரகு, கிருத்திகாகிட்ட சொல்லணும். அதான் கேட்டேன்" எனக் கூறி, மருத்தவமனையின் முகவரியை அறிந்து கொண்டு ரகுவின் கைப்பேசிக்கு குறுந்தகவல் அனுப்பினான் அருண்.

"அப்பா மூலம்" என தேவ் கூறியதும், "அப்பாகிட்ட எல்லாம் சொல்லிட்டீங்களா?" என்றாள் திலோ சந்தேகமாக.

"ம்ம்" என்ற தேவ், "நல்லாவும் பேசினான் போல்" என்றான் கூடுதல் தகவலாக!

"ஹோ" என்றதோடு திலோ நிறுத்திக் கொள்ள, கேட்டிருந்த அருணிற்கு ஒன்றும் புரியாமல் போனது.

அவர்கள் மருத்துவமனையை அடைந்தபோது, வாசிலிலேயே பெத்தபெருமாள் காத்திருக்க உடனடியாக அன்பரசிக்கு சிகிச்சை தொடங்கியது.

உறங்கிக் கொண்டிருக்கிறாள் என திலோ எண்ணிக் கொண்டிருக்க, பரிசோதித்த மருத்துவர்களோ அவள் மயக்கத்தில் இருப்பதாகவும், அவளுக்கு நினைவு தப்பிவிட்டது என்றும் கூற, கேட்டிருந்த அனைவருமே பதறிப் போயினர்.

அப்போதென்று பார்த்து நல்லாவின் அழைப்பை தேவ்வின் கைப்பேசி ஒலி மற்றும் ஒளிபரப்பயதும் தமையனிடம் என்ன பதில் சொல்வதென்று தேவ் தயங்க, பெரியவனின் கைப்பேசியை வாங்கிக் கொண்டு இளையவனின் கேள்விகளுக்குப் பதிலளிக்க அன்பரசி அனுமதிக்கப் பட்டிருந்த அறையைவிட்டு விலகி நடந்தார் பெத்தபெருமாள்.

"என்ன நல்லா இந்த நேரத்தில்? தூங்கலையா நீ?" என எடுத்தவுடனே மகனை அவர் கேள்வி கேட்க, மறுபுறம் தந்தையின் குரல் கேட்டதும் ஒரு கணம் வியந்து, பின்னர் சுதாரித்தான் மகன்.

"எழுந்துட்டேன்பா, நீங்க ஹாஸ்பிடல்-லயா இருக்கீங்க?" என நல்லா வார்த்தைகளை கவனமாக கோர்க்க, அவனது தந்தையோ "ம்ம் ஆமா" என்றதோடு தன் பதிலை நிறுத்திக் கொண்டார்.

இரண்டு நிமிட அமைதிக்குப் பின்னர், "அன்பரசி எப்படி இருக்காப்பா" என்றான் நல்லானந்த் மெதுவாக.

"காலையில் ஃபோன் பண்ணி எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்கு. அவளைப் பார்த்துக்கோங்கன்னு சொல்லத் தெரிஞ்சவனுக்கு இப்ப என்னடா தயக்கம்?" என அவர் வினவ,

"இல்லைப்பா... அது வந்து... காலையில நான் பேசும்போது நீங்க கொஞ்சம் தயங்கின மாதிரி இருந்ததா! திலோ-தேவ் கூட ஒத்துக்காதமாதிரியே பேசினாங்களா.... அதான்" என்றான் நல்லா தன் தயக்கத்தின் விளக்கமாக.

"ம்ம் முதல எனக்கு இதில் சுத்தமா உடன்பாடில்லை தான்! ஆனா அந்தப் பெண் முகத்தைப் பார்த்ததும் தயக்கம் சட்டுன்னு மறைந்தமாதிரி இருக்கு" என்றவர், "கொஞ்ச நாள் போகட்டும் பார்க்கலாம்" என்றார் பட்டும்படாமல்.

அன்பரசியின் விஷயம் தேவ் மூலமாக தந்தையிடம் போய்விட்டதை அறிந்த நல்லானந்த், தந்தைக்கு அழைத்து அவரது நண்பர் பார்த்தசாரதியிடம் அன்பரசியின் சிகிச்சையை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டான். அவரும் தேவ்விற்கு மேலாக மகனைக் கேள்வி கேட்டுக் குடைந்து, தன் அதிருப்தியை நேரடியாகவே வெளியிட்டிருந்தமையால் இப்போது அவர் கூறிய வாக்கியம் நல்லாந்திற்குப் புது தெம்பை அளித்தது.

அவரது அனுபவத்தில் ஒருவரது முகவடிவையும் கண்களையும் வைத்தே மனதில் இருப்பதைக் கணிக்கக் கூடிய திறமை அவருக்கு இருப்பது நல்லானந்த் அறிந்த விஷயமே! அதனாலேயே அவர் அன்பரசியின் முகத்தைப் பார்த்ததும் தயக்கம் பறந்துபோனது எனக் கூறியது மகிழ்வை மழையாய் பொழிந்தது.

மகிழ்ச்சி மழையில் அவனை நனையவிடாமல் தடுத்து, துடிக்க வைத்தது அன்பரசியின் உடல்நிலை பற்றி அவர் கூறிய விவரம். அன்பரசிக்கு நினைவு தப்பிவிட்டது என்ற செய்தி அவனை மீண்டும் துன்பத்தில் ஆழ்த்தியது.

அருகே இருப்போரை மட்டுமின்றி, தூரே இருப்பவனையும் வாட்டி வதைத்த அன்பரசி தன் சுயநினைவிற்கு வர அன்றிரவானது.

அன்பரசி மயக்கத்திலிருந்த நேரம் முழுதும் அவளருகிலேயே இருந்த திலோவை, அன்பரசியின் கண் மலரலுக்கு அரை மணி முன்பு வந்த "மதிமலர், உணவு மேசையிலிருந்து விழுந்து தாடையிலும், உதட்டிலும் அடி பட்டிருக்கிறது" எனும் செய்தி, வீட்டிற்கு ஓடவைத்தது.

தேவ்வை மருத்துவமனையில் இருத்திவிட்டு மாமனாரும் மருமகளும் வீட்டிற்கு விரைய, வீட்டிலோ நிற்காமல் வழிந்துகொண்டிருந்த ரத்தத்துடன் மதிமலர் அழுது கொண்டிருந்தாள்.

குழந்தைகளை மட்டும் வைத்துக் கொண்டு வீட்டிலிருந்த வளர்மதிக்கு, மதிமலரின் ரத்தத்தைப் பார்த்து பதட்டம் அதிகமானதே ஒழிய அடுத்து செய்ய வேண்டிய காரியங்களில் மனம் செல்லவில்லை. அழும் குழந்தையை சமாதானம் செய்வதும், கணவருக்கும் மருமகளுக்கும் மாறிமாறி அழைப்பதுமாய் இருந்தவர், அவர்கள் இருவரையும் கண்டதும் மலரை விட அதிகமாய் அழ ஆரம்பித்தார்.

"ஹய்யோ, என்னங்க! எவ்வளவு ரத்தம் வருது பாருங்க! பிள்ளை அழறாளே! எதாவது பண்ணுங்களேன்" எனக் கதறத் தொடங்கிவிட்டார்.

"ஷ், வளர்! அழாதே! ஹாஸ்பிடல் கூட்டிட்டு போய்டலாம். சின்ன அடிதான்!" என்றவர், அடிப்பட்ட பேத்தியை மருமகள் வாரியெடுத்துக் கொண்டதும் அன்பரசி அனுமதிக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைக்குச் சென்றார்.

தானும் உடன் வருகிறேன் எனத் துடித்த வளர்மதியை, அகிலனுக்குத் துணையிருக்கும் படி கூறிவிட்டு மூவருமாய் மட்டும் கிளம்பினர்.

"அம்மா, அம்மா, மலர் டொம்... டொம்" என்ற அரற்றலுடன் மலர், திலோவை ஒண்டவும் தாய் மனம் தவித்துப் போனது.

"ஒன்னுமில்லைடா அப்புக்குட்டி, சீக்கிரம் ஆ ஆ சரியா போய்டும்" என்றும், "குட்டிமா டொம் டொம் விழுந்தீங்களா? அச்சோ...என் செல்லகுட்டியை தள்ளிவிட்ட டேபிளை நல்லா அடிச்சிடலாமா? வீட்டிற்குப் போனதும் டொம் டொம் அடிச்சிடலாம். குட்டி அழாதீங்கடா" என்றும் பெண்ணைக் கொஞ்சியவாறே மருத்துவமனை நோக்கிப் பயணம் நடந்தது.

வழிந்து கொண்டிருந்த ரத்தமும், அழுத பிள்ளையுமாய் திலோ மருத்துவமனையை அடைய, இப்போது தேவ் வாசலில் நின்றிருந்தான்.

பிள்ளையின் முகத்தில் பட்டிருந்த அடியைக் கண்ட நர்ஸ்கள், வரிசையில் காத்திருந்த பிள்ளைகளை சிறிது நேரம் காக்கச்சொல்லிவிட்டு, அந்த மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவரிடம் அவர்களைக் கூட்டிச் சென்றனர்.

குழந்தை நல மருத்துவரின் அறைக்குள் காலடி எடுத்துவைக்கும் போதே, அழுகையின் அளவை மேலும் கூட்டித் தன் விருப்பமின்மையை செவ்வனே காட்டினாள் மலர்.

காலை உதைத்துக் கொண்டு, முகத்தைத் திருப்பியவளை சமாளிக்கமுடியாமல் திலோ திணற, அவளின் உதவிக்கு தேவநந்தன் வந்தான். "டாடி, ஊச்சி போவா.... வேணாம்… ஊச்சி வேணாம் …ஊச்சி " எனப் பெருங்குரலெடுத்து அவள் கத்த, அவளது அழுகையைப் பொருட்படுத்தாமல் சிலபல அழுத்தமான பிடிகளில் அவளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த தேவ், மருத்துவரிடம் அவளைக் காட்டினான்.

அதன் பின்னர், தரையில் மோதியதால் தாடையில் பட்டிருந்த அடியையும், தாடை பலமாக மோதி வளர்ந்து கொண்டிருந்த மலரின் பற்களே அவளது மேலுதட்டைப் பதம் பார்த்திருந்ததையும் பொறுமையாக பார்த்தார் மருத்துவர்.

அவர் கை வைத்ததும் பெரிதான அழுகை, அரை மணி நேரம் அவர் செய்த சிகிச்சையில் ஆறேழு டெசிபல்கள் ஜாஸ்தியாகி, முடிவில் அழ தெம்பற்று தேம்பலில் முடிந்தது.

ஒருவழியாக மதிமலரின் சிகிச்சை முடிந்ததும், அவளைக் கையில் ஏந்திக் கொண்டே அன்பரசியைக் காணச் சென்றாள் திலோ.

அடிப்பட்ட வலியிலும், இத்தனை மணி நேரம் அழுத களைப்பிலும் இருந்த மதிமலரோ அன்பரசியின் அறைக்குள் தாய் நுழையவே மீண்டும் அழ ஆரம்பித்தாள்.

"ஊச்சி போவா.... வேணாம்.... போவாம்.... அம்ம்ம்மாமாமா போவாம்" என அவள் அழ, திலோவின் வருகைக்காக காத்திருந்த அன்பரசி சற்றே திகைத்துப் போனாள்.

கண் விழித்ததும் திலோவை அவள் தேட, மலருக்கு உடம்பு முடியாமல் போனதைக் கூறினான் தேவ். குழந்தைக்காக மனம் வருந்த, தன் வேதனையையும் மறந்து அந்த இளம்சிட்டுக்காக பிரார்த்தித்துக் கொண்டிருந்த அன்பரசியிடம் நல்லாவின் அழைப்பைக் கைமாற்றிய அவன், மலரின் விஷயம் தன் தமையனுக்குத் தெரியவேண்டாம் என்று கேட்டுக் கொண்டதால் நல்லானந்திடம் தன் நலத்தை மட்டும் கூறிவிட்டு, வேகமாக அழைப்பைத் துண்டித்துவிட்டு திலோவின் வருகைக்காக காத்திருந்தாள்.

ஆவலுடன் மலரின் வரவிற்காக அவள் காத்திருக்க, அவளோ அந்த அறைக்குள் நுழைவதையே ஏதோ குகைக்குள் நுழைவது போல் நினைத்துக் கத்தி அன்பரசியின் திகைப்பை அதிகமாக்கினாள்.

"டாக்டர் ரூம்குள்ள போறோம்ன்னு நினைச்சிட்டா போல அன்பு! அதான் அழறா" எனத் தங்கையிடம் கூறிய திலோ,

"அப்புக்குட்டி, இது ஊச்சி ரூம் இல்லடா! இங்க பாரு... ஆன்ட்டி பாரு... ஆன்ட்டிக்கும் ஆஆ-டா...அவங்களுக்கும் ஊச்சி போட்டாங்க.... ஆனா அவங்க மலர் மாதிரி ஊஊ அழலையே! சமத்தா இருந்தாங்க" என விளையாட்டாய் கூறியதும், மலரின் அழுகை அதிகமாகத் தொடங்கியது.

"பரவாயில்லைங்க அக்கா! பாப்பாவை வீட்டிற்குக் கூட்டிப்போங்க. ரொம்ப அழறா" எனக் கூறிய அன்பரசியின் முகத்தில் குழந்தையைக் காண முடியவில்லையே என்ற இயற்கை தவிப்பு லேசாய் வெளிப்பட்டது.

அதைக் காணப் பொறுக்காத திலோத்தமை, மதிமலரின் முகத்தை வலுக்கட்டாயமாய் அன்பரசியின் புறம் திருப்ப, மலரின் மதிமுகத்தைக் கண்ட அன்பரசி உறைந்து போனாள்!

திலோவின் இடுப்பிலிருந்த மலரைக் கண்ட அன்பரசியின் கண்கள் அவளது முகத்திலேயே நிலைத்திருந்தன. நிலையான, அசையாத அந்த பார்வைக்கு அர்த்தம் - மதிமலர் அன்பரசியின் தாய் இந்துமதியின் அச்சாய் இருந்தது தான்.

வட்ட விழிகளும், அதில் துள்ளி விளையாடும் கரு நீல மீன் குஞ்சுகளும், தேர்ந்த ஓவியரின் கைவண்ணத்தில் வரைந்த புருவங்களும், இடது புருவத்தின் முடிவில் விழுந்திருந்த வெட்டும், அந்த வெட்டின் ஊடே சிரித்த சின்ன மச்சமும், லேசாய் புடைத்திருக்கும் மூக்கும், வடிவான உதடுகளும் என இந்துமதியின் சிறு வயது தோற்றமாய் திகழ்ந்த மதிமலரின் தாடையில் இருந்த பிளாஸ்டர், அவளது தந்தை கண்மண் தெரியாமல் அடித்தால் தாயின் தாடையில் பதிந்திருந்த தழும்பை நினைவு படுத்த அன்பரசி உறைந்து போனாள்.

ஒரு சிறு வித்தியாசம் கூட இல்லாமல் தாயை திலோவின் மகள் நினைவு படுத்த, "நான் எங்கேயும் போகலை அன்பம்மா, உன் கூடவே தான் இருக்கேன். கூடிய சீக்கிரமே உன் கண் முன்னாடி வந்து நிற்பேன்" என்ற தாயாரின் வார்த்தைகள் காதில் ரீங்காரமிட, அன்பரசியின் மனக்கண்ணீர் மெதுமெதுவாய் அவளது கண்ணிற்கு இடம் மாறியது.

அன்பரசியின் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்ட திலோ, "ஹே அன்பு, இன்னும் கண்ணிலிருந்து தண்ணி வருதே! இரு டாக்டரை கூப்பிடுறேன்" என மகளுடன் வெளியே செல்ல முயன்றாள்.

"அழாதே மலர், சும்மா சும்மா அழுதா அம்மா அடிப்பேன்" என நடுவே அழுது வடிந்த மகளை அவள் அடக்க, மகள் அதற்கு அடங்காமல் ஓங்கி அழுதாள்.

"அச்சோ, இல்லைக்கா! எனக்கு கண்ணில் ஒன்னும் பிரச்சனையில்லை. மதியைப் பார்த்ததும்.... பார்த்ததும்..." என அன்பரசி திக்க,

"மதின்னா கூப்பிட்ட?, அழகா இருக்கு! நாங்க எல்லாரும் அவளை மலர்ன்னே கூப்பிட்டு பழகிட்டோம்!" என அன்பரசியின் திக்கலை ஒதுக்கி, அவள் அழைத்த விதத்தை மட்டுமே மனதில் பதித்தவள், "ஹே அப்புக்குட்டி, ஆன்ட்டி உன்னை மதின்னு கூப்பிட்டாங்கடா!

மலர், மதி, மதிமலர், அப்புக்குட்டி, குட்டிமா, சின்னராணி, புஜ்ஜிமா... எத்தனை பேர் என் செல்லத்துக்கு! எவ்ளோ பேர் இருக்கு... இத்தனை பேர் இருக்கும் போது யாராவது அழுவாங்களா? சிரிங்க சிரிங்க.... என் அப்புக்குட்டி சிரிங்க" என மகளை சமாதானப்படுத்தி, சிரிக்க வைப்பதிலேயே குறியாக இருந்தாள்.

தாயின் சமாதானம் மனதில் பதியாமல் மதி என்ற இருவரது அழைப்புமே மலரை அழ வைத்தது. "நல்லாப்பா...மதி சொன்னா... ஆ ஆ அச்சா...மதி வேணாம்...வேணாம்" என அவள் புரியாமல் அடம் செய்ய, திலோத்தமையும் அன்பரசியும் குழம்பிப் போயினர்.

"என்னடா! நல்லாப்பாகிட்ட பேசணுமா?" என அவளது தாய் வினவ, அன்பரசியோ "நல்லாப்பா" என்ற அழைப்பில் மேலும் மேலும் குழப்பக் குட்டையில் தன்னைத் தானே தள்ளிக் கொண்டாள்.

மகளோ சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி தாயையும், தாயாக போகும் அவளது தங்கையையும் பொறுமையின் எல்லைக்குக் கூட்டிச் சென்றாள்.

"நீங்க பாப்பாவை வீட்டிற்குக் கூட்டிட்டுப் போங்க அக்கா, அவளுக்கு வலிக்குது போல" என அன்பரசி திலோத்தமையை வீட்டிற்குக் கிளப்ப, அவளுமே மகளின் அழுகையைப் பார்த்து வீட்டிற்குச் செல்வதையே உசிதமாய் எண்ணினாள்.

"நான் அவளுக்கு சாப்பாடு கொடுத்து, தூங்க வைச்சுட்டு வரேன்மா! அது வரைக்கும் தேவ் துணைக்கு இருப்பாங்க" என மகளை எண்ணி தங்கையை விட்டுவிடாமல், திரும்ப வருவதாய் கூறினாள்.

தமக்கையின் பேச்சில் இளகி "நான் பார்த்துக்கிறேன் அக்கா, நீங்க மதியோட இருங்க! உங்களுக்கும் தான் எவ்வளவு அலைச்சல். படுத்து ஓய்வெடுங்க அக்கா!" என அன்பரசி உருக, "அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். உனக்கு சாப்பாடு எடுத்துட்டு இன்னும் ஒரு மணி நேரத்தில் வரேன்.அதுவரைக்கும் கண் மூடித் தூங்கு" என்றதோடு பேச்சை முடித்துக் கொண்ட திலோ, "நல்லாப்பா... நல்லாப்பா" என அனத்திக் கொண்டிருந்த மகளைக் கொஞ்சிக் கொண்டே வெளியே சென்றாள்.

வீட்டிற்குச் செல்லும் வழியிலேயே நல்லாவின் அழைப்பு பெத்தபெருமாளின் கைப்பேசியை தாக்க, அவரோ திலோவிடம் நீட்டினார். "இவன் வேற காலையிலிருந்து என்னைப் படுத்தி எடுக்கிறான்" என்ற எரிச்சல் வார்த்தையோடு நல்லாவின் அழைப்பை காதில் வைத்தாள்.

"சொல்லுடா" என்றதிலேயே எரிச்சல் முழுதாய் வெளிப்பட, "என்ன திலோ? இவ்வளவு கோபம்?!" என அவள் மனதைப் படித்தவன், "சாரிடா ரொம்ப படுத்துறேனா? கடல் கடந்திருக்கும் போது எனக்கு வேற வழி தெரியலைமா" என்றான் வருத்தம் தோய்ந்த குரலில்.

"சரி, சரி, ரொம்ப பாவம் மாதிரி சீன் போடாதே! நானா உன்னை அங்க போய் உட்கார்ந்துக்க சொன்னேன்?" என எரிஞ்சு விழுந்தாள் அவனது அண்ணி.

"நீ சொல்லலை, நான் தான் தப்பு பண்ணிட்டேன்!" என்றவனிடம் சமாதானமாகாமல் "ஹப்பா... ரொம்ப சீக்கிரம் ஞானோதயம் வந்துடுச்சே!" என அவனைக் கடித்துக் குதறினாள்.

"திலோ, என்னமா? என்ன பிரச்சனை? அகில், மலர் யாராவது "நைநை"ன்னு படுத்துறாங்களா?" எனத் தன் தோழியினது கோபத்தின் ஆணி வேரைப் பிடித்தான்.

"ஆமா" என்றதில் பெரிய அழுத்தமும், கூடவே "படுத்தி எடுக்காதே மலர். அம்மாக்குக் கோபம் வருது" என மதிமலரிடம் எரிச்சலுமாய் இருந்த திலோவைப் பார்க்கப் பாவமாய் இருந்தாள்.

"மலருக்கு உடம்பு சரியில்லையா? நீ அவளைப் பாரு. நான் கொஞ்ச நேரம் கழிச்சுக் கூப்பிடுறேன்! சாரி டா" என்றவன் அழைப்பைத் துண்டிக்கும் முன்னர் "ஹே நில்லு! உன் பொண்ணு அழுது ஊரைக் கூட்டுறா! அவளோடு பேசிட்டு வை" என்ற திலோ, மகளின் காதில் ஃபோனை வைத்து "உங்க நல்லாப்பா பேசுறான். பேசு" என்றாள்.

"நல்லாப்பா" என்ற அழைப்பிலேயே குரல் அழுது வடிய, "என்னடா செல்லம்" என அவளிடம் உருகிக் கரைந்தான் தந்தை.

இரு மணி நேரங்கள் நடந்த திலோவின் சமாதானத்தை ஏற்காமல் அழுதே கரைந்த மதிமலர், தந்தையின் இருபது நிமிடக் கொஞ்சலில் அழுகையை நிறுத்திய கையோடு, மெல்லிய புன்னகையை உதட்டில் புகுத்தினாள்.

"அடி கழுதை! இத்தனை நேரம் அழுத அழுகை என்ன? இப்ப ஈன்னு இளிக்கிற அழகென்ன?" என மகளின் கன்னம் வலித்த தாயார், "அழுத பிள்ளை சிரிச்சிச்சாம்... கழுதை பாலைக் குடிச்சிச்சாம்" என்றாள் நிம்மதியுடன்.

தாய் தன்னைக் கிண்டல் செய்கிறாள் என்பதை உணராத மலரோ, தந்தையின் கொஞ்சலில் உருகிக் கொண்டிருந்தாள்! அதைப் பார்த்திருந்த பெத்தபெருமாளோ, "அவளை அவ அப்பாவோட முன்னாடியே பேச வச்சிருக்கலாம்! நம்ம காது தப்பிச்சிருக்கும்" எனக் கூறிச் சிரித்தவர், "எல்லாம் இந்த நந்தாவால் வந்தது. தம்பி பயந்துடுவான்...இன்னைக்குத் தான் அன்புக்கும் அடி பட்டிருக்கு... மலருக்கும் என்றால் கஷ்டப்படுவான்ன்னு நம்மளைக் குழப்பி எடுத்துட்டான்" எனப் பெரிய மகன் மேல் செல்லமாய் குற்றம் சாட்டினார்.

"ஒருத்தர் நல்லது செஞ்சா உங்களுக்கெல்லாம் பொறுக்காதே! நந்தா சொன்னதில் என்ன தப்பு?" எனக் கணவனுக்கு மருமகள் பரிந்து வரவும், "அடேங்கப்பா, புருஷனை சொன்னதும் என் மகள் அப்பாவையே கேள்வி கேட்கிறாளே!" என மருமகளை மகளாக்கி, மகனை அவளது கணவனாக்கி மகிழ்ந்து உறவாடினார்.

மகளைக் கொஞ்சி சமாதானப்படுத்திய கையோடு அழைப்பை வைத்த நல்லாவிற்கு, அன்பரசியும் மதிமலரும் உடம்பில் அடியோடும், முகத்தில் வலியோடும் மாறி மாறி வந்து வதைத்தனர்.

பாசமும் நேசமும் தனிமையை கொடுமையாக்க, அந்தக் குளிர் நகரமும் வெய்யோனின் கையில் வாடும் நரகமானது, நல்லானந்திற்கு!

வெய்யோனின் கையில் துள்ளி விளையாடும் நகரத்தை சொர்க்கமாய் எண்ணி மனம் ஏங்க, ஒரு முடிவிற்கு வந்தவன் மேலும் சில அழைப்புகளை விடுத்தான்.

இங்கே பாசத்தில் நல்லா வாட, அங்கே குழப்பத்தில் அன்பரசி வாடிப் போனாள்.

தன் தாயின் மறுபிறவியாய் இருந்த மதிமலரின் முகமே நெஞ்சில் நிலைத்திருக்க, அதற்கும் மேலாய் நல்லாப்பா என்ற அவளது அழைப்பு மூளைக் கடைந்தெடுத்தது.

ஒரொரு வடிவழகிலும் தாயின் முகத்தை மதிமலர் நினைவுபடுத்தியது, அன்பரசியின் ஏக்கத்தைப் பெருதும் தூண்டிவிட்டது. கண்ணில் நிலைத்திருந்த வலியும், கையில் தொங்கிய கட்டும் உடம்பின் பலவீனத்தைப் பெருக்க, மனம் தாய் மடிக்காக ஏங்கித் தவித்தது. தாயின் நூல் சேலையின் ஸ்பரிசத்தில் கன்னம் வைத்து உறவாடி, அவளது மெல்லிய கொடியிடையில் கைகள் கோர்த்து கொஞ்சிப்பேசிய தருணங்களை அசைப்போட்டுக் கொண்டிருந்தவளை, திலோவின் "அன்பு" என்ற அழைப்பு களைத்தது.

அந்த அழைப்பில் வழிந்த கண்ணீரை இடது கை அவசரமாக சுண்டிவிட, "என்னக்கா? இவ்வளவு சீக்கிரம் வந்துட்டீங்க? பாப்பா தூங்கிட்டாளா?" என வாய் அதன் போக்கில் கேள்விகளை அடுக்கியது.

"அவங்க அப்பாகிட்ட பேசினதும் மேடம் க்ளோஸ் அப் பேஸ்ட் விளம்பர ஹீரோயின் ஆகிட்டாங்க. சமத்தா சாப்பிட்டாங்க... ஜம்முன்னு தாத்தா நெஞ்சில படுத்து தூங்கிட்டாங்க" எனத் திலோத்தமை கூறியதும்,

"யாருக்கா தேவ் அண்ணாவா?" என்றாள் அன்பரசி மெதுவாக.

"யாரு? தேவ் அண்ணாவா?" எனத் தன் பங்கிற்குக் குழம்பினாள் திலோ!

"அப்பான்னு சொன்னீங்களே!" என அன்பரசி எடுத்துக் கொடுக்க, "மலரோட அப்பாவா...உங்க நல்லா சார் தான்" எனத் திலோ மீண்டும் அவளைக் காலாய்க்க, "அப்புறம்... தேவ் அண்ணா... ஏன் அப்படி சொன்னாங்க?" என அன்பரசி இழுக்க, "எப்படி சொன்னாங்க?" எனத் தன் கேள்வி கேட்கும் பழக்கத்தை அமலுக்குக் கொண்டுவந்த திலோ, "என்ன பேசுறதா இருந்தாலும் சாப்பிட்டுட்டே பேசு" என உரைத்து அவளுக்கு உணவூட்டத் தொடங்கினாள்.

"நானே!" என அன்பரசி இடது கையை நீட்டியதும் "இடது கையில் எப்படி சாப்பிடுவ? நான் ஊட்டுகிறேன்" எனத் திலோ மறுத்ததில் அன்பரசிக்கு இடது கை பழக்கம் இருப்பது தெரியவந்தது. அத்தோடு "ஹே, நல்லாவும் மலரும் கூட இடது கை பழக்கம் உள்ளவங்க தான்!" என்ற வியப்பையும் திலோவுடன் சேர்த்து அன்பரசிக்கும் அளித்தது.

"எப்படியா இருந்தாலும் இன்னைக்கு என் கையால தான் சாப்பாடு" என்ற திலோ, அன்பரசியின் மறுப்பைக் குப்பையில் கொட்டிவிட்டு உணவை அவளது வயிற்றில் கொட்ட எத்தனித்தாள்!

சற்று பேசிய அப்பா-மகள் உறவை எப்படி ஆரம்பிப்பது என்று அன்பரசி தயங்கிக் கொண்டிருக்க, "தேவ் அண்ணா ஏதோ சொன்னாங்கன்னு சொன்னியே! என்னது?" என எடுத்துக் கொடுத்தாள் அவளது தமக்கை.

"அது,... அது... உங்களுக்கு ரெண்டு பசங்க... பையன் பேர் அகிலன்... பொண்ணு பேர் மதிமலர்ன்னு சொன்னாங்க" என்றாள் அன்பரசி மிகுந்த தயக்கத்துடன்.

திலோவோ அதை ரசித்தவாறே, "ம்ம் ஆமா" என்றாள் சிறு சிரிப்புடன்.

"ஹோ... ஆனா... நீங்க மதிமலர் நல்லா சாரோட பொண்ணுன்னு தானே சொன்னீங்க?" என இளையவள் தன் குழப்பத்தை முன்வைக்க,

"ஆமா சொன்னேன்" என்றாள் பெரியவள் அதற்கும் சிரிப்புடன்.

பொறுமை நிறைந்த அன்பரசியையே "ஹய்யோ...என்னக்கா?! எல்லாத்துக்கும் ஆமா சொல்றீங்க?" எனக் கேட்க வைத்தப் பின்னரும், "ஆமா சொல்றது ஒரு தப்பா! அதுவும் ஆமா சொல்லவேண்டிய விஷயத்திற்கு ஆமா சொல்லாம இல்லை சொன்னா சாமி குத்தமாகிடும் அன்பம்மா!" என மர்மமாய் சிரித்தாள் திலோ.

"எப்படி ரெண்டுக்குமே ஆமா சொல்ல முடியும்? அப்போ நல்லா சாரோட பொண்ணு மதிமலரும், உங்க பொண்ணு மதிமலரும் வேற வேறயா?" எனக் கேட்டு

"இல்லை" என்ற பதிலையும், "பார்த்தியா... இதுக்கு நான் ஆமா சொல்லலை பாரேன்!" என்ற கூடுதல் தகவலையும் கொடுத்தாள் திலோ!

"அச்சோ, என்னைக் குழப்பாதீங்க! மதி யாரு? உங்க பொண்ணா? நல்லா சார் பொண்ணா?" என அன்பரசி முற்றிலும் பொறுமையிழக்க,

"யாரு பொண்ணா இருந்தா உனக்கு சந்தோஷம்?" என திலோ நூல் விட,

"என் பொண்ணா" என வாய் வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு அடக்கிய அன்பரசி, "அக்கா...ப்ளீஸ்..." என்றாள் கெஞ்சுதலாக.

"நல்லாவோட பொண்ணு தான்" என அழுத்தமாக கூறியவள், "நாங்களும் அவளைப் பொண்ணா தான் பார்க்கிறோம்" என்றாள் அழுத்தம் மறைந்த கனிவுடன்.

"ஹ்ம்ம்" என்ற அன்பரசியின் குரல் யோசனை நிறைந்திருக்க, "அப்போ நல்லா சார் மனைவி எங்க?" என்ற கேள்வி மனதிலேயே நிற்காமல் வாய் வழி வெளியுலகிற்கு வெளிச்சமானது.

"நல்லா சாரோட மனைவி தானே! காட்டிட்டா போச்சு" என்ற திலோவை இமைக்காமல் பார்த்திருந்தாள் அன்பரசி!

நல்லானந்தின் மனைவியை திலோத்தமை காட்டுகிறேன் எனக் கூறியதும், வாயில் வைத்திருந்த உணவு அசை படாமலே நின்று போனது அன்பரசிக்கு.

"ம்ம், மென்னு சாப்பிடு! அகில் மாதிரியே சாப்பாடை மெல்லாமல் முழுங்குவாய் போலிருக்கே!" எனப் பெரியவள் அதட்ட, அன்பரசியின் மனம் அவளது அதட்டலுக்கு அடி பணியும் முன்னர், வாய் அடி பணிந்தது.
காட்டுகிறேன் எனக் கூறிய திலோத்தமை ஒன்றும் கூறாமல் உணவு ஊட்டுவதிலேயே குறியாக இருக்க, அன்பரசிக்குப் பெரும் பரபரப்பாய் இருந்தது.

உணவு முடியும் தருவாயிலும் கூட திலோ வாய் திறப்பதாக இல்லை என்று தெரிந்துவிட, அன்புவே "அக்கா.... " என இழுத்து விவாதத்தை துவக்க முயன்றாள்.

"என்னம்மா, தண்ணி வேணுமா?" எனப் பெரியவள் வினவ, "ம்ஹூம்" என மறுப்பாக தலையசைத்த இளையவளோ "நல்லா சார் மனைவியைக் காட்டிறேன்னு சொன்னீங்களே! எங்க இருக்காங்க?" எனக் கேட்டேவிட்டாள்.

"ஹ்ம்ம் நல்லா கூடவே இருக்கா" என திலோ, நல்லானந்த் அன்பரசியை மனதில் வைத்திருப்பதை எண்ணிப் பூடகமாக பேச, அன்பரசிக்கு இனம் புரியா வருத்தமும், லேசான கோபமும் தலை தூக்கின. தாலி கட்டி, ஒரு குழந்தைக்கும் தகப்பனாகி விட்டுத் தன்னிடம் எதற்கு இவ்வளவு அக்கறை காட்டுகிறார்? அவருக்கே அது அசிங்கமாக தெரியவில்லையா? என எண்ணங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போதே, "ஏன் அவர் உன்னை ஒரு தோழியாய், சகோதரியாய் கூட எண்ணி இந்த உதவியை செய்திருக்கலாம்? நீ ஏன் தப்பாகவே பார்க்கிறாய்" என மனம் குட்டியது.

"என்ன அன்பு பேச்சையே காணோம்" என திலோ ஆழம் பார்க்க,

"ஒண்ணுமில்லைக்கா, மதியை ஏன் தனியா விட்டுட்டு போய்ட்டாங்கன்னு யோசிச்சிட்டு இருந்தேன்!" என அழகாய் வேறு காரணத்தை அன்பரசி தேடியதும், திலோவின் புருவங்கள் மானசீகமாய் உயர்ந்து, கெட்டிக்காரி தான் என்ற பட்டத்தை சுலபமாய் வழங்க வைத்தது.

"ஹ்ம்ம் அவங்களைத் தான் கேட்கணும்" என திலோ கழுவும் மீனில் நழுவும் மீனாய் நழுவ, அன்பரசிக்கு மேலே என்ன பேசுவது என்றே புரியவில்லை.

"சரிக்கா, நான் தூங்குறேன்" என்றவள் கண்களை இறுக மூடி நித்திரையை தழுவ முயன்றாள். "சரிம்மா, மனசைப் போட்டு குழப்பிக்காம நிம்மதியா தூங்கு! நடுல என்ன வேணும்ன்னாலும் என்னை எழுப்பு... சரியா? எனக்குக் கஷ்டமோன்னு நினைச்சுக்கிட்டு உன்னைக் கஷ்டப்படுத்திக்காதே!" என்ற திலோ, அன்பரசியின் படுக்கை அருகே போடப்பட்டிருந்த கட்டிலில் படுத்தாள்.

இருவரும் அவரவர் எண்ணங்களில் மூழ்கிப் போயிருக்க, நித்திராதேவியோ அவர்களது எண்ணங்களுக்கு மேலாய் ஆட்சி செலுத்தி அவர்களை ஆட்கொண்டாள்.

இரவிற்கு விடை கொடுத்து, சூர்யனுக்கு அடர் சிவப்பு உடை கொடுத்து காலை வேலை ரம்மியமாய் புணர்ந்து, நித்திரா தேவியின் ஆட்சியைத் தகர்த்து கவி பாடியது!

அன்றைய தினம் - தேவ், பெத்தபெருமாள், அருண், ரகு, கிருத்திகா ஆகியோரின் வருகையும், நல்லானந்தின் அழைப்பும், நித்யா மற்றும் சத்யாவின் அழைப்புகளும், புதிதாய் முளைத்த உறவுகளுக்கு நட்பின் நன்றி நவிலல்களும், நல விசாரிப்புமாய் செல்ல, அன்பரசியின் உடல் நிலை மெல்ல மெல்ல முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைக்கத் தொடங்கியது.

கண்களுக்கான பரிசோதனை, அதை தொடர்ந்த சிகிச்சை, கைகளுக்கான எக்ஸ்ரே, முகத்தில் பட்டிருந்த காயங்களுக்கான மருந்திடல் என அன்பரசிக்கு நடந்த மருத்துவ பரிசோதனைகள் யாவற்றிலும் உறுதுணையாக இருந்த திலோ, நடுநடுவே தங்கையை மாமனாரின் துணையில் விட்டுவிட்டு குழந்தையை கவனிக்கச் சென்றாள்.

முதல் பார்வையிலேயே அன்பரசியின் புறம் லேசாக சாயத்தொடங்கிய பெத்தபெருமாள், அவளுடன் செலவு செய்த கூடுதலான நேரத்தில் அவள் பால் முக்கால் பாகம் சாய்ந்துவிட்டார் என்றே சொல்லவேண்டும்! அவளது கண்களில் தெரிந்த மெல்லிய சோகம், அதை சோகமென்றே சொல்ல முடியாத வண்ணம் அதில் தைரிய வண்ணம் பூசிய அவளது கம்பீரம், அதிகமாய் வலியெடுத்த போது "ஆ-ஊ" எனக் கத்தாமல் பல்லைக் கடித்து பொறுத்த விதம், அவரைப் பார்க்கும் போதெல்லாம் அனிச்சையாய் எழுந்த மரியாதை பார்வை, ஆண் மருத்துவர் கை வைக்கும் போது வேண்டுமென்றே கூச்சம் என்ற போர்வையில் அதிகப்பிரசங்கித் தனம் செய்யாமல் இயல்பாய் கூசிச் சிலிர்த்த மேனி, அந்த கூச்சம் தன்னைப் பட்டிக்காடாய் காட்டிவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் முகத்தில் அவள் கொண்டு வந்த வலுக்கட்டாய சிரிப்பு, "சார்" என்ற அழைப்பிலேயே "அப்பா" போன்ற பாசத்தைக் கொண்டு வந்த பாங்கு என அவரை உருக்கி வைத்த அவளது செயல்கள் ஏராளம்.

ஆனால், பெத்தபெருமாளின் மனதைக் கவர்ந்த அன்பரசியால் மதிமலரின் சிறு நெஞ்சை சிறிதும் அசைக்க முடியவில்லை என்பது அங்கே ஒரு வருத்தத்திற்குக்குரிய விஷயமானது.

மதிமலரின் சிகிச்சைக்கென அவளை மருத்துவமனைக்குக் கூட்டி வந்த திலோவை, அவளது மகள் அன்பரசியின் அரைப்பக்கம் காலடி எடுத்துவைக்கவே விடவில்லை. "ஊச்சி...ஊச்சி.... வேணாம்..." என ஒரு முறை அலறினாள் என்றால், "மதி" என்ற அன்பரசியின் அழைப்பில் "மதி சொன்னா... நல்லாபா ஆஆ அச்சா... வேணாணாணாணாணாணாணாம்" என அடுத்த முறை முகாரி பாடினாள்.

அவளது அழுகையில் மருத்துவமனையே திரும்பிப் பார்க்க, அன்பரசியே "பாப்பாவை கூட்டிப் போங்கக்கா" என வழியனுப்பி வைக்கும்படியானது.

மதிமலர் தன்னைப் பார்த்தாலே அலறுகிறாள் என்ற செய்தி, பார்த்தேயிராத நல்லாவின் மேலும், அறிந்தேயிராத அவனது மனைவியின் மேலும் பெரும் வெறுப்பையும் கோபத்தையும் உண்டு பண்ணியது. மதி அலறுவதற்கும், அவர்கள் தனியே கனடாவில் இருப்பதற்கும் சம்பந்தமில்லை எனத் தெரிந்தபோது கோபம் குறைவதாய் இல்லை! இவ்வளவு அழகான குழந்தையை இந்தியாவில் விட்டுவிட்டு வெளிநாட்டில் என்ன வெட்டி முறிக்கிறார்கள்? சிறு வயதில் குழந்தையை வேறு யாரிடமும் விட்டுவைத்தால் பின்னாளில் தன்னிடம் ஒட்டவே ஒட்டாது என்பது கூட தெரியாத ஜென்மங்கள் போலவே!? சை, நல்லா சாரா இப்படி? அவர் தான் ஆண், பாசம் நேசம் என்று ஒரு மண்ணும் கிடையாது என்றால் மதியின் அம்மாவிற்கு எங்கே போயிற்று புத்தி? என அன்பரசியின் வாயில் அவளே விழுந்து சிக்ஸரும், ஃபோரும் வாங்கிக் கொண்டிருந்தாள்.

அவளுடன் சேர்ந்து ரன் ஏதும் வாங்காமல் மட்டை தட்டியவாறே திட்டு வாங்கிக் கொண்டிருந்த நல்லாவோ, அவளைக் காணாமல் வாடி வதங்கிக் கொண்டிருந்தான்.

அன்பரசியின் திட்டும், நல்லாவின் மருகலும் ஒன்றோடொன்று ஒட்டி உறவாடாமல் தனித்து நின்றிருக்க, அன்பரசி திட்டுவதற்காக நல்லாவை நினைக்க, நல்லாவோ காரணமே இல்லாமல் அவளை எண்ணிக் கொண்டிருந்தான்.

சென்னையிலிருந்து கிளம்பிய அன்பரசியின் எண்ண அலைகளுக்கு கனடா வரை பயணம் மேற்கொள்ளும் கஷ்டத்தைக் கூட கொடுக்க விரும்பாதவன் போல் லண்டன் வழியே இந்தியா பயணப்பட்ட நல்லாவோ அதை நடு வழியிலேயே சிக்னல் போட்டுத் தன்னிடம் திருப்பிக் கொண்டான். ஆமாம், நல்லா இந்தியாவிற்குப் பயணப்பட்டிருக்கிறான்!

அன்புக்கு அடிப்பட்ட தினத்தன்று, மதிமலருக்கும் அடிபடவே காதலும் பாசமும் ஒருங்கே படை எடுத்து அவனை இந்திய பயணத்திற்கு ஏற்பாடு செய்ய வைத்தது. அன்பரசி மருத்துவமனையில் சேர்ந்த தினத்திற்கு மறுதின இரவு நல்லாவின் இந்தியப்பயணம் துவங்கிவிட, அதை பற்றிய விவரங்கள் யாருக்கும் தெரிவிக்கப்படாமல் கமுக்கமாய் வைக்கப்பட்டது.

இந்தியா வருகிறேன் என்று சொன்னால் வீட்டில் மகிழ்ச்சி கூத்தாடும் எனத் தெரிந்திருந்தாலும், அதன் பின்னர் எழும் கேள்விகளை எண்ணி அடக்கியே வாசித்த நல்லா, அவர்களுக்கு எதிர்பாரா வியப்பை அளிக்கும் எண்ணத்தில் சொல்லாமல் கொள்ளாமல் இந்தியா பயணப்பட்டான்.

நல்லானந்தின் இந்தியப்பயணம் நடந்த வேளையில் சென்னையில் பெரும் மாற்றங்கள் ஏதும் நேராமல் போகவே, அன்பரசியின் குழம்பிய குட்டை மனம் மிக தெளிவாய் நல்லாவின் மேல் கோபம் கொண்டிருந்தது! ஆனால் அவன் மேலும், மதிமலரின் தாயாரின் மேலும் கொண்டிருந்த கோபத்தை அவனது குடும்பத்தாரின் மேல் காட்டாமல் அவர்கள் மேல் பரிதாபம் கொண்டாள் அன்பரசி!

அவனது ஒரு வார்த்தைக்காக தன்னைக் கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொள்ளும் இவர்களுக்குக் கோடானு கோடி நன்றி நவில வேண்டும் என எண்ணியவாறே இரு தினங்களைக் கடத்தினாள் நல்லாவின் அன்பை ஆளக் காத்திருக்கும் அரசி!!

புதன்கிழமை இரவு தொடங்கிய கோபமும், வருத்தமும் வியாழக்கிழமை இரவும் செவ்வனே தொடர, மருத்துவமனையில் படுத்திருந்தாள் அவள்! அவளுக்குத் துணையாக திலோ அங்கேயே தங்கியிருக்க, நல்லாவின் வீட்டில் அனைவரும் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

எப்போதும் தாத்தாவின் முடி படர்ந்த மார்பை மஞ்சமாக்கித் துயில் கொள்ளும் அவரது சின்னராணி, இன்றைக்கும் அதே சலுகையுடன் தாத்தா-பாட்டி அறையில் கண்ணுறங்க, அகிலும் அவனது தந்தையும் அவர்களது அறையில் திலோ இல்லாமல் போகவே நித்திரா தேவியை அணைத்துப் படுத்திருந்தனர்.

இரவு மூன்று மணிக்கு நல்லாவின் வீட்டில் அழைப்பு மணி கிணுகிணுத்த வேளையில், இரண்டு தினங்களாய் நடந்த அலைச்சலில் சற்றும் அசையாமல் தேவ் படுத்திருந்தபோதும், முதல் மணியிலேயே கண் விழித்துவிட்டார் பெத்தபெருமாள்.

"இந்த நேரத்தில் யாராக இருக்கும்?" என்ற எண்ணத்துடன், தன் மேல் கால் போட்டு படுத்திருந்த பேத்தியை மனைவியின் புறம் திருப்பிப் படுக்கவைத்துவிட்டு, ஓசைபடாமல் வெளியே வந்தார். அந்த வீட்டின் மகாராணி மற்றும் சின்னராணியின் தூக்கம்

கலைந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் கதவை இறுக மூடிவிட்டு மாடியிலிருந்து இறங்கியவர், அந்த வீட்டின் மூத்த மகனது தூக்கத்தையும் பெரிதாய் மதித்து அவனது அறைக்கதவையும் ஒரு முறை சரிபார்த்துவிட்டே வந்தார்.

நடைபாதையில் இருந்த விளக்குகள் மற்றும் வெளிவரண்டா விளக்குகள் அனைத்தையும் போட்டுவிட்டு, தேக்கு மறக்கதவில் பாதிக்கப்பட்டிருந்த லென்ஸ் வாயிலாக வெளியாளை பார்க்க முயன்றவரின் கண்கள் விரிந்து, கனவோ என ஒரு நிமிடம் திகைக்க வைத்தது.

உள்ளிருந்து இயக்கப்படும் வெளிவிளக்கு உயிர்பெற்றதுமே, தந்தையோ தமையனோ தான் என முடிவு செய்திருந்த நல்லானந்த் " அப்பா... தேவ்... யாரு அது? நல்லா தான் வந்திருக்கேன்! கதவைத் திறங்க" என்றான் உரக்க. குரலில் உற்சாகம் கரைபுரண்டோடியது!

"நல்லா" எனப் பாசம் புரண்டோட, கதவை வேகமாய் திறந்த பெத்தபெருமாள் மகனை ஆரத் தழுவிக்கொண்டார்.

ஆத்மார்த்தமாய் வெளிப்பட்ட சில வினாடி அன்புப்பரிமாரலுக்குப் பின்னர், மகனை விட்டு விலகிய பெத்தபெருமாள் "என்னடா திடீர்ன்னு?" என்றார் வெளியே இருந்த அவனது உடமைகளை எடுக்க கை நீட்டியவாறே!

"நீங்க இருங்கப்பா! நான் எடுக்கிறேன்" எனத் தந்தையை இருத்திவிட்டு, உடமைகளை உள்ளே எடுத்துவந்த நல்லானந்த் "சும்மா தான்ப்பா, உங்களையெல்லாம் பார்க்கணும் போலிருந்தது! அதான் உடனே பறந்து வந்துட்டேன்." என்றான் சிரிப்புடன்.

"இதை உங்க அம்மாக்கிட்ட சொல்லு... நம்புவா! உன் அண்ணன் கூட ஒருவேளை நம்பலாம்! நானும் என் பெண்ணும் ஒரு காலும் உன்னை நம்பமாட்டோம்! கள்ளனடா நீ!" என்றார் பெத்தபெருமாள் அவனிடமிருந்து தோற்றி கொண்ட சிரிப்புடன்.

"எல்லா நல்லவங்களும் இந்த நல்லாவை நம்புவாங்க பெருமாள் சார்" என நல்லா கண்ணடிக்க, "நல்லவங்க மட்டுமா? அன்பானவங்களுமா?" என ஒத்த வயது நண்பனாய் மாறினார் அவனது தந்தை! தந்தையின் கிண்டலில் அன்பரசியின் பால் அவரது பிடித்தம் வெளிப்படவே, நல்லாவின் மனது நிறைந்திருந்தது.

சிரிப்பினூடே "உங்க ஆபீஸ்ல எப்படிடா லீவ் கொடுத்தாங்க? லீவ் கிடைக்கிறது கஷ்டம்ன்னு சொல்லிட்டு இருந்தியே?" என்றவர், "மொத்தமா இங்கேயே வந்துட்டியா நல்லா?!" என்றார் மிகுந்த எதிர்பார்ப்புடன்!

"மொத்தமாவா? கிழிஞ்சது போங்க! பத்து நாள் லீவ் தரதுக்கே client VP அளவுக்குப் பேச வச்சுட்டாங்க! இதுல மொத்தமா வரேன்னு சொல்லியிருந்தா என்னைக் கயிரோட சேர்த்து கட்டி வச்சிருப்பாங்க" என்றான் நல்லா விவரமாய்.

"பத்து நாள் தானா?" என மனம் சுனங்கியவர், "பத்து நாளாவது வந்தியே! அதுவே சந்தோஷம்!" என்றார் சட்டென! இதுவே தாயாக இருந்திருந்தால் "பத்து நாள் தானா? அதுக்கு எதுக்குடா வந்தே? அங்கேயே இருக்க வேண்டியது தானே? சரி வந்துட்டே இல்லை.... அப்படியே இருந்திடு! திரும்பப் போகவே வேண்டாம்... அவங்களால் என்ன செய்ய முடியும்?" என அவனைப் பேசவிடாமல் தானே எல்லா முடிவையும் எடுத்திருப்பார் என எண்ணிய நல்லானந்திற்குத் தாயைக் காணும் ஆவல் எழுந்தது.

"நான் போய் அம்மாவையும் மலர் குட்டியையும் பார்த்திட்டு வரேன்!" என மாடிப்படி பக்கம் காலடி எடுத்துவைத்தவன், "மலர் குட்டிக்கு உடம்பு எப்படி இருக்கு? இன்னைக்கு ஹாஸ்பிடல் கூட்டிப் போனீங்களா?" என்றவன், தந்தையின் பதிலைப் பெற்றதும், "நம்ம பார்த்தசாரதி அங்கிள் ஹாஸ்பிடல தானேப்பா மலருக்குக் காண்பிக்கிறோம்? அங்க தானே அன்பும் இருக்கா?" எனச் சுற்றி வளைத்தான்.

"ம்ம் ஆமா, ஏன் கேட்கிற?" என தந்தை வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்க, "அப்பா" எனக் காலை உதைத்துக் கொண்டு சிறு பிள்ளையாய் சிணுங்கினான் பிள்ளை.

"ஆஹா, காதல் வந்ததும் என் பையனுக்கும் பேரனுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்டுச்சே!" எனத் தந்தை சிரிக்க, "எனக்குத் தானே காதல் வந்திருக்கு!? உங்களுக்கு இல்லையே? அப்புறம் ஏன் வித்தியாசம் தெரியல?! அப்போ... நீங்களும்.... " எனக் கண்ணடித்தான் நல்லா!

"அடி ராஸ்கல்" என பெத்தபெருமாள் போலியாய் கை ஓங்க, "அப்போ அதே தான்!" என்ற நல்லானந்த், அத்தோடு அடங்காமல் "ஹே வளராத வளர்... உனக்கு நானிருக்கேன்! இதோ ஓடி வந்துட்டேன் உன் புருஷனை உனக்குக் காப்பாற்றி கொடுக்க!" என்றவாறே மாடியேறினான்.

"போடா போடா... உன் பொண்ணைப் போய் பாருடா! என் பொண்டாட்டியை நான் பார்த்துக்கிறேன்! வந்துட்டான் வான்கூவர்ல இருந்து!!" என்ற பெத்தபெருமாள், "சாப்பிட்டியா நல்லா? தோசை வார்க்கவா?" என மகனின் வயிற்றையும் பார்த்தார்!

"ஹ்ம்ம்..இளந்தோசை சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு! ரெண்டே ரெண்டு தோசை ஊத்துங்க! குழந்தைகளைப் பார்த்திட்டு வரேன்" என்றவன், படிகளை இரண்டு இரண்டாக கடந்து மாடியறையை அடைந்தான்.

போகும் வழியிலிருந்த தேவ்வின் அறைக்குள் நுழைந்தவன், தந்தையின் இடுப்பைச் சுற்றி கை போட்டிருந்த அகிலின் நெற்றியில் முத்தம் வைத்து, அவனது மென்கிகையை மெல்ல களைத்துவிட்டு வெளியே வந்தான்!

மகனைப் பார்த்த சந்தோஷத்துடன் தாய் மற்றும் மகளின் அறைக்குள் காலடி எடுத்து வைத்தவனின் கண்களில், தாடையில் பட்ட அடியில் தன் பிஞ்சு விரலை வைத்து அதை வருடிக் கொடுத்தவாறே கண் மூடியிருந்த மகள் பட்டு, நெஞ்சம் கரைய வைத்தாள்.

தூக்கத்தில் கூட வருடிக் கொடுத்துக் கொள்கிறாள் என்றால் வலி அதிகமாய் இருக்கிறதோ என்ற எண்ணம் தோன்றவும், கட்டுப்பாடையும் மீறி நல்லாவின் கால்கள் மகளை நோக்கி விரைந்தன. நடு கட்டிலில் ஒய்யாரமாய் படுத்திருந்த மகளை வாரி எடுத்துக் கொண்டவன், பேத்தியின் மேல் கை வைத்திருந்த வளர்மதி சற்றே அசையவும் அவரது கன்னத்தில் அழுத்தமான முத்தம் ஒன்றை பதித்து "லவ் யு வளர் மேடம்" என்றான்.

கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டு அவனது தாயார் உறங்கிவிட, மகளோ தந்தை தன்னைத் தூக்கியதும் தூக்கம் களைந்து சிணுங்கினாள்.சிணுங்கிய வினாடி "மலர் குட்டி, நல்லாப்பாடா! தாச்சுக்கோங்க!!" என முதுகை வருடியவனைத் தந்தையென இனம்கண்டு கொண்ட மகளோ "நல்லாலாப்பா" என அவனது கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு அவனிடம் தஞ்சம் புகுந்தாள்!!

கழுத்தைக் கட்டிக் கொண்டு "அப்பா" என உறவாடிய மகளை இறக்கவே மனம் வரவில்லை நல்லானந்திற்கு!

என்ன ஒரு மென்மை!? பூந்தளிர் போன்ற மேனி தன் உடம்பில் உரச, உரச அவனிற்குள் பாசம் ஊற்றெடுத்து ஓடியது! இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்த துயர் மகளின் ஸ்பரிசத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் கரைய, அது முழுதாய் கரையும் முன்னர் மகளைக் கட்டிலில் விடுவாதாய் இல்லை என்பது போல் அவளை அணைத்தவாறே நின்றிருந்தான்!

பத்து, இருபது என நிமிடங்கள் பறந்த போதும் அவளை இறக்கிவிட மனம் தான் வரவில்லை! அவள் வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த காயத்தை இப்போது அவன் வருடிக் கொடுக்க, மலரோ அவனது கழுத்தைக் கட்டியவாறே நித்திரையை மேற்கொண்டிருந்தாள்!

மகளின் மேலிருந்த அதே பாசம், நடு நிசியில் தனக்காக விழித்து, உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் தந்தையின் மேலும் இருந்தமையால் மலரை படுக்கையில் விட எண்ணிக் குனிந்தவன், படுக்கையில் அவளை படுக்க வைத்த கையோடு, உச்சியில் இதழ் பதித்து நிமிர முற்பட்டான். ஆம் அவனால் முயலத் தான் முடிந்தது. முயற்சியில் வெற்றி தான் கிட்டவில்லை! ஏனென்றால் அவனது டீ-ஷர்ட் காலரை அவனது செல்லப் புதல்வி மிக இறுக்கமாய் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தாள்.

அவளோடு அங்கேயே படுக்க முடியாமல் கீழே காத்திருக்கும் தந்தை இழுக்க, அவளைத் தூக்கிக் கொண்டே கீழிறங்கிச் சென்றான் நல்லானந்த்!

பேத்தியுடன் வந்த மகனிடம் "மகளை விட்டு நகர மனசு வரலையாக்கும்?" என வினவிய பெத்தபெருமாளின் குரலில் பெருமிதமே பிரதானமாய் இருந்தது. "ம்ம், தூக்கத்தில கூட நான் தான் வந்திருக்கேன்னு சரியா புரிஞ்சுக்கிட்டாப்பா! செம ஸ்மார்ட்" என்ற நல்லானந்தின் குரலிலும் அதே பெருமிதம் தாண்டவமாடியது!

மகனின் வாக்கை வார்த்தைகளால் ஆமோதிக்காமல் பேத்தியின் பட்டு தலையை வருடிக் கொடுத்து தன் ஒப்புதலை வெளியிட்டார் பெரியவர். "தோசைக்குத் தொட்டுக்க காரமா மிளகாய் சட்னி செஞ்சிருக்கேன்! வேகமா அது தான் கண்ணா செய்ய முடிஞ்சது... அட்ஜஸ்ட் பண்ணிக்க" என்ற தந்தையிடம், "எதுக்கு இப்போ சட்னி எல்லாம் செஞ்சீங்க? தோசைப்பொடி இருந்தாலே போதுமப்பா" என்ற மகன் உணவுண்ண அமர்ந்தான்.

மகளுடன் தான்! மகளை மடியில் போட்டுக் கொண்டு உணவுண்ண ஆரம்பித்தவன், கேட்ட இரண்டு தோசைகளுக்கும் இரு மடங்கு மேலாகவே உண்டு களித்தான்!

ஆறாவது தோசையை மகனின் தட்டில் வைத்த பெத்தபெருமாள், அடுத்த தோசை ஊற்றவென அடுப்பு பக்கம் திரும்பவே வேண்டாமென தடுத்த நல்லானந்த், "தோசை - சட்னி சூப்பர்! ரொம்ப தேங்க்ஸ்பா!" என்றான் எழுந்து கொண்டே!

அதுவரை தந்தையின் மாரில் தலை சாய்த்து, ஒரு கையை அவனைச் சுற்றிக் கொண்டு போய் முதுகில் வைத்திருந்த மகள் லேசாய் அசைந்தாள்! "சீக்கிரம் படுக்கப் போ கண்ணா! குழந்தை தூக்கம் களைந்து எழுந்தா புரியாம அழுவா!" என்ற பெத்தபெருமாள், அவன் கையில் ஒரு டம்பளர் பாலைக் கொடுத்து மேலே அனுப்பினார்.

"ம்ம், நான் பார்த்துக்கிறேன்! நடு ராத்திரியில் எழுந்தது...உங்களுக்கும் பசி எடுத்திருக்கும்! கொஞ்சமா பால் குடிச்சிட்டு படுங்க! நான் இதெல்லாம் எடுத்து வைச்சிட்டு ரூம்க்குப் போறேன். சொல்றதை கேளுங்க!" என அவருக்கும் மேலாய் பாசமும், அழுத்தமும் கொடுத்து அவரை மேலே செல்ல வைத்தான்.

இரு படிகளைக் கடந்த பெத்தபெருமாள், "மலரை தா! நான் எங்க ரூம்ல படுக்க வைச்சுக்கிறேன்" என்றார். "இல்லப்பா, என் கூட இருக்கட்டும்!" என்றதோடு அவரும் விட்டுவிட, நல்லாவும் உணவு மேஜையை சுத்தம் செய்துவிட்டு, தனக்குத் தந்தை காய்ச்சி வைத்திருந்த பாலை மகளின் மிக்கி சிப்பர்ரில் ஊற்றி எடுத்துக் கொண்டு மேலே சென்றான்.

தன்னறைக்குள் சென்றவன், தோளிலிருந்த மகளை மடிக்கு இடமாற்றி அவளுக்குப் பாலைப் புகட்டியவாறே தன் எண்ண அலைகளை அன்பரசியிடம் பறக்கவிட்டான்.

"எப்படி கண்ணம்மா இருக்கிறாய்? கண் வலி சரியாகிடுச்சா?" என அவள் உடல்நிலை விசாரித்தவன், "உன்னைப் பார்க்கப் பறந்து வந்துட்டேன்! ஏன் வந்தேன்? எதுக்கு வந்தேன்? என்பதற்கு நிறைய காரணம் சொல்ல முடிந்தாலும் உன்னைப் பார்க்கணும், உன்னோட பேசணும் என்பது தான் முக்கியக் காரணம்! அதை நீ எப்படி எடுத்துப்பே என்பது ஒரு பக்கம் இருக்க, உன்கிட்ட என்னோட மனசை, முக்கியமா அதில மலருக்கு இருக்கிற இடத்தை சொல்லியே ஆகணும்" என அவளிடம் தன் மனநிலையை விளக்கிக் கொண்டிருந்தான்! மானசீகமாக!

அவனது எண்ண அலைகள் தறிகெட்டு மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்த வேளையில், தந்தை புகட்டிக் கொண்டிருந்த பாலைக் குடித்து முடித்திருந்த கன்று, தூக்கத்திலேயே சிப்பரை ஒரு கையால் தட்டிக் கீழே விழ வைத்தது. சிறு சத்தத்தோடு விழுந்த அந்த சிப்பர் அவனது கவனத்தைக் களைக்க,

"குடிச்சு முடிச்சுட்டீங்களா! என் தங்கக்குட்டி!" என மகளைக் கொஞ்சிக் கொண்டே படுக்கைக்கு இட்டுச் சென்றான் நல்லா!

தன் நெஞ்சத்தை மகளது மஞ்சமாக்கியவனின் இதயத்தை அரசாண்டு கொண்டிருந்தாள் அன்பு!

அதிகாலை ஆறு மணியளவில் மதிமலர் தன் மலர் விழிகளை மலர்த்தி, அருகில் தன் தந்தை இருப்பதைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ அவனை எழுப்பாமல் அருகிலேயே அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். நடு நடுவே "நல்லப்பா, ஆஆ சொல்லு! பாத்தீ பப்பு மம்மம் தரா... ஆ சாப்து" என அவனது திறவாத வாய்க்குள் தன் பிஞ்சு விரல்களால் உணவு கொடுக்க முயன்றாள்! தனது விளையாட்டில் தந்தை லேசாக அசைய, அவனது கண்ணில் தட்டி "தாச்சு நல்லாப்பா.... தாச்சுக்கோ" எனத் தாலாட்டிக் கொண்டிருந்தவளின் குரல் கேட்டு நல்லாவின் அறைக்கு விரைந்தார் வளர்மதி.

நல்லா கனடாவில் இருந்த நாட்களிலும் தந்தையின் நியாபகம் அதிகமானால் அவனது அறைக்குள் சென்று அவன் உடமைகளோடு விளையாடுவது மதிமலரின் செயல்களில் ஒன்று என்பது அந்த குடும்பத்தில் இருக்கும் அனைவரும் அறிந்த விஷயமே என்ற போதிலும், வளர்மதி மகனின் அறைக்குள் பேத்தியை நாடி சென்றார்.

"மலர்" என்ற அழைப்போடு உள்ளே நுழைந்த வளர்மதி, கட்டிலில் துயில் கொண்டிருந்த மகனைக் கண்டதும் "நல்லா" எனப் பாய்ந்து சென்றார்.

பாட்டியின் குரல் கேட்டதும் தன் உதட்டில் விரல் வைத்து "ஷ்" என அடக்கினாள் பேத்தி! "அடேங்கப்பா" என்ற சொல்லோடு பேத்தியைத் தூக்கிக் கொண்ட வளர்மதி, "கண்ணா" என அவனது சிகையை வருடி, உச்சி முகர்ந்து பேத்தி உறங்க வைத்த மகனைத் தாயார் எழுப்பினார்.

property

"நல்லாப்பா தாச்சு... தாச்சு" என மகள் அவனை உறங்க வைக்க முயன்றாலும், தாயின் ஸ்பரிசத்தில் கண் விழித்த நல்லானந்த் அருகில் அமர்ந்திருந்த தாயின் மடிக்குத் தன் தலையை மாற்றி, அவரது இடுப்பைக் கட்டிக் கொண்டு "அம்மா" எனச் செல்லம் கொஞ்சினான்.

தான் அமர்ந்திருக்கும் மடிக்குத் தந்தையின் சிரம் வரவே, அதை ஒரு கையால் தள்ளி "நல்லாப்பா போ.போ.. மலர் பாப்பாவோத பாத்தி" எனத் தனது உரிமை நிலைநாட்ட முயன்று, "அப்பா கொஞ்சமா படுத்துக்கிறேன்டா செல்லம்... ப்ளீஸ்... ப்ளீஸ்" எனத் தந்தையைக் கெஞ்ச வைத்தாள்.

அதன் பின்னர் அங்கே அன்பான உறவுகளின் அழகான சங்கமம் அரங்கேறியது! இரு மகன்களும் தாயிடம் செல்லம் கொஞ்சி, தங்களது கேலியில் அவரைக் கோபம் கொள்ள வைத்து, அவர் கொண்ட கோபத்தை முத்தத்தால் துடைத்து, அவரது பாசத்தை உணவிலும் பேச்சிலும் உணர்ந்தனர்.

ஆனால், "நல்லா, மீன் வாங்கிக் குழம்பு வைக்கிறேன் கண்ணா! இன்னைக்கு ஒரு நாள் அம்மாக்காக சாப்பிடு ராஜா!" என வளர்மதி அவனிடம் கெஞ்சி, மிஞ்சி, கடைசியில் மிரட்டியபோதும் நல்லானந்த் அசைவம் உண்ணமாட்டேன் என்ற தன் கொள்கையிலிருந்து சற்றும் இறங்கி வரவில்லை.

கடைசியில் வளர்மதி, "ரொம்ப பண்றேடா, இனிமேல் உனக்குத் தயிரும் உறுகாயும் தான்! பாவம் பிள்ளை, மூணு மாசமா அவன் சமைச்சதையே சாப்பிட்டு நாக்கு செத்து போய் இருப்பானேன்னு கேட்டா... பெரிய இவன் எவன்... போடா ராஸ்கல்" எனத் தன் ஆதங்கத்தை எரிச்சலாய் வெளியிட்டார்.

"என்ன வளர் இது? நீங்க சமைச்சதை நீங்களே சாப்பிடறதால உங்க நாக்கு செத்து போச்சு. வேற யாராவது சமைச்சுப் போடுங்கன்னு கேட்க வேண்டியது தானே! அதை விட்டுட்டு என் சமையலை ஏன் குறை சொல்றீங்க?" என நல்லா சீண்ட,

"ஏய் நல்லா, ஒருவேளை இரண்டாவது மருமக கையால சாப்பிடற ஆசை வந்து வளர் அப்படி சொல்றாங்களோ?" என்ற தேவ், "முதல் மருமக கீரையும், கோதுமையுமா போட்டு அவங்களை ஓவர் கொடுமை பண்றா போல! அதனால இரண்டாவது மருமகளைத் தேடுறாங்க போல" என்றும் கூடச் சேர்த்துக் கொண்டான்.

"ஆஹா, இவனா அப்பாவி! சரியான அடப்பாவி!" என்றெண்ணிய நல்லா, "ஹய்யோ இந்த வளர் வேற இரண்டாவது மருமக புராணத்தை ஆரம்பிச்சுடுவாங்களே! அன்புகிட்ட பேசாம இவங்ககிட்ட என்னோட காதலைச் சொன்னா, அடுத்த அரை மணி நேரத்தில் தாலியோட ஹாஸ்பிடல்லுக்கே போய்டுவாங்களே! கடவுளே, என்ன பண்றது! டேய் தேவ்! துரோகி" எனப் பல்லைக் கடித்தான் நல்லானந்த்!

மகன்களின் எதிர்பார்ப்பை வீணாக்காமல் "ஆமாடா நல்லா! எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே? என் சித்தியோட நாத்தனாரோட கொழுந்தன் மகள் வயிற்று பேத்தி ஒரு பொண்ணு இருக்காளாம்! அவங்களுக்கு மலர் விஷயம் கூட தெரியும்...நான் சொல்லிட்டேன்! நாளைக்கு... ம்ம்... இன்னைக்கே கூட பொண்ணு பார்த்து, பத்து நாளைக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடலாம்" என வளர்மதி பெரிதாய் திட்டம் போட, தேவநந்தன் நல்லாவைப் பார்த்து கமுக்கமாய் சிரித்தான்.

"ஹய்யோ ஹய்யோ!காமெடி பண்ணாதீங்க வளர்! போய் எல்லாருக்கும் காபி போடுங்க! ஒரு குடும்பத் தலைவி மாதிரி நடந்துக்கோங்க... எல்லாம் ஒரு ஆள் சொல்லிக் கொடுத்துட்டே இருப்பாங்களா?" என அவர் பேசிய முக்கிய விஷயத்தை காமெடியாக்கி அவரைக் குழப்பிவிட்டான்.

"நல்லா, நான் சொல்றதை... " என அவர் மீண்டும் ஆரம்பிக்க, "பசிக்குது வளர்! ஒடுங்க ஒடுங்க!" என அவரைக் குழந்தைகளுடன் அனுப்பி வைத்தவன், சகோதரனிடம் மேல் பாய்ந்தான்.

மருத்துவமனையில் இருக்கும் திலோத்தமையை வீட்டிற்கு அனுப்பி வைப்பதற்காக தேவ் மருத்துவமனைக்குக் கிளம்பவும், தான் போவதாகக் கூறிய நல்லா, தமையன் மற்றும் தந்தை மர்மமாய் சிரித்ததை ஒதுக்கிக் கிளம்பினான்.

அவன் வெளியே கிளம்புவதைக் கண்ட மதிமலர் தானும் வருவதாய் கூறி அழ ஆரம்பித்தாள்! அவளது அழுகையைக் கண்ட தந்தையின் மனம் சட்டென இளகிவிட, அவளை அள்ளிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். நல்லானந்த் மருத்துவமனைக்குச் செல்கிறான் என்பதை வளர்மதியிடம் சொன்னால், "திலோவோட தோழியைப் பார்க்க இவன் எதற்கு செல்கிறான்?" என்ற கேள்வி உடனே எழும் என்பதால், மலர் மருத்துவமனையைப் பார்த்தால் அழுவாள் என்பதை வீட்டில் சொல்லித் தடுக்க முடியவில்லை!

மகளை முன்னே அமர வைத்துக் கொண்டு, பைக்கை அன்பரசி அனுமதிக்கப் பட்டிருக்கும் மருத்துவமனைக்கு விட்டான்! பல்லக்கில் பவனி வரும் இளவரசியின் பூரிப்போடு தந்தையுடன் பயணம் செய்த மகளோ, மருத்துவமனையைக் கண்டதும் மிரண்டு அழ ஆரம்பித்தாள்.

அவளது அழுகையை "அப்பாக்குத் தான்டா குட்டிம்மா ஊசி போடப்போறாங்க! பாப்பாக்கு இல்லை" எனக் கூறியவன், தொடர்ந்து "அப்பாக்கு ஊசி போட்டா வலிக்குமில்லை! பாப்பா தேச்சு விடுறீங்களா? பாப்பா தேச்சு விட்டு, ஒரு முத்தா கொடுத்தா அப்பாக்கு வலியெல்லாம் பறந்து போய்டும்! சரியா? செய்றீங்களா?" எனக் கரையாய் கரைத்து உள்ளே கூட்டிச் சென்றான்.

அன்பரசி அனுமதிக்கப் பட்டிருக்கும் அறையை நோக்கி நடந்த நல்லானந்திடம் "நல்லாப்பா, அங்கல்ல ஊச்சி! இதா ஊச்சி போடுவா..." என மருத்துவரின் அறையைக் கை காட்டினாள் மகள்.

"அச்சோ, என் பிள்ளைக்கு எவ்வளவு அறிவு! என் பட்டு" என அவளது கவனிப்பைப் பாராட்டிய நல்லா, "இங்கேயும் ஊசி போடுவாங்கடா! அந்த ரூம்-ல குட்டி "ஆ"க்கு மருந்து.... இந்த ரூம்ல பெரிய "ஆ"க்கு மறுத்து! அப்பாக்கு ரொம்ப அடிடா! இங்கேயே போவோமா?" எனக் கூறி உள்ளே அழைத்துச் சென்றான்.

அன்பரசியின் அறைக்கதவை லேசாக தட்டிய நல்லானந்த், அடுத்த தட்டலுக்காக கை எடுத்தப்போது, கதவு திறந்து திலோ வெளிப்பட்டாள்! கணவனை எதிர்பார்த்து கதவைத் திறந்தவளின் கண்கள் தன் நண்பனைக் கண்டதும் பெரிதாய் விரிந்தன!

"ஹே திலோ! எப்படி இருக்கே!" எனத் தோழியின் முகத்தின் முன்னால் கைகளை ஆட்டி, நல்லா நலம் விசாரிக்க, "அம்மா" என அவளிடம் தாவினாள் மதிமலர்.

மகளைக் கைகளில் வாங்கியவாறே "என்னடா இது? திடுதிப்புன்னு இந்தியா வந்து குதிச்சிருக்கே!" எனத் தன் வியப்பிலிருந்து மீண்டாள் திலோ! "சும்மா தான்! போர் அடிச்சது" என்ற நல்லானந்தின் கண்கள் தோழியின் தலையைத் தாண்டி, உள்ளிருக்கும் அறையைத் துழாவியது!

"சும்மா போர் அடிக்காம கிளம்புன்னு சொல்றீயாக்கும்! நீ வாயால சொல்றதுக்கு முன்னாடி உன் கண் சொல்லிடுச்சு!" என்ற திலோ, லேசாக சிரித்தாள்.

அவள் கூறியதை மறுக்கும் எண்ணம் கூட இல்லாமல் நல்லா சிரிக்கவும், "அடப்பாவி! ஃபிகரைப் பார்த்ததும் ஃபிரண்டை கழட்டிவிடுறியேடா" எனக் கேலி பேசினாள் திலோ!

அவளது கேலிக்குப் பதில் சொல்லாமல், "அன்பு எங்க திலோ?" என வினவினான் நல்லா. "பாத்ரூம் போயிருக்கா...சரிடா நான் கிளம்புறேன்! மலரையும் கூட்டிட்டுப் போகட்டுமா?" என்றவளிடம், "மலர் இருக்கட்டும்! இன்னைக்கு ஸ்கூல் போகாதே திலோ! உன்கிட்ட நிறைய பேசணும்! என்ன?" என அவசரமாய் உத்தரவு போட்டான் நண்பன்.

"முடியாது போ" என சிலிர்த்துக் கொண்ட தோழியை, "என் செல்ல திலோ-இல்ல! ப்ளீஸ்டா!" எனக் கெஞ்சலில் சமாதானப்படுத்தியவனிடம் "சரி... சரி வந்த வேலையை வெற்றிகரமா முடிச்சிட்டு வா, பேசலாம்" என்றாள் அவள். அன்பரசியின் அறையை விட்டு வெளியே நடந்தவாறே, "ஆல் தி பெஸ்ட்! அன்புகிட்ட உன் அருமை பெருமையெல்லாம் ஒன்னுவிடாம சொல்லியிருக்கேன்... உன் கூட இருக்கும் உன் மனைவி பத்தி கூட!!" என அவனுக்கு வாழ்த்து தெரிவிக்கும் போக்கில் ஒரு குண்டையும் போட்டுவிட்டுப் போனாள்.

"மனைவியா?! அடிப்பாவி! புருஷன்-பொண்டாட்டி ரெண்டு பெரும் சேர்ந்து என் வாழ்க்கையை ஒரு வழி பண்ணாம விடமாட்டீங்க போலவே!" என வாய் விட்டுப் புலம்பியவாறேஅறைக்குள் சென்ற நல்லா, மகளை மடியில் வைத்தவாறே நோயாளின் கட்டிலின் அருகே இருந்த மற்றொரு கட்டிலில் அமர்ந்தான்.

ஐந்தே நிமிடத்தில் குளியலறையிலிருந்து வெளியே வந்த அன்பரசி, கட்டிலில் அமர்ந்திருந்த ஆடவனைக் கண்டு ஒரு நிமிடம் திகைத்த அன்பரசி, அவன் மடியில் அமர்ந்திருந்த மதிமலரைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்!

இரண்டு நாட்களாக இந்த அறைக்குள் நுழைவதற்கே அழுது அடம் பிடித்தவள், இன்று ஓர் புதியவனின் மடியில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருப்பதை பார்ப்பதற்கு அவளுக்குள் நிம்மதி பரவியது! நிம்மதி பரவிய அதே வினாடி, அந்த ஆடவன் யார்? என்ற எண்ணமும் தோன்றி, ஒரு வேளை நல்லானந்தோ என்ற கேள்வியுடன் அவர்களை நோக்கி நடந்தாள்.

அவளது சில வினாடி நேர நிம்மதியையும், கேள்வியையும் சிற்சில வினாடி தாமதத்திற்குப் பின்னர் கண்ட நல்லானந்த், மகளுடன் எழுந்தான்! தூங்கி எழுந்ததில் கலைந்திருந்த கூந்தல் நவீன ஓவியத்தின் மென் சாரலாய் தெளித்திருக்க, சிவந்திருந்த கண்கள் பழுக்கக் காத்திருக்கும் கோவைப் பழத்தை நினைவு படுத்த, உதட்டின் மேலிருந்த தண்ணீர் படிமம் பனி காலை புது மலராய் விரிந்திருக்க, குளியலறை கதவைப் பிடித்திருந்த இடது கை தேர்ந்த ஓவியனின் துரிகையாக மாறியிருக்க, அதைப் பார்த்திருந்த நல்லானந்தின் நெஞ்சம் ஒரு நிமிடம் நின்று, பின்னர் துடித்தது.

"அன்பு..." எனக் குழைய ஆரம்பித்த குரல், சிறு செருமலின் பின்னர் "அன்பரசி" என மெல்லிதாய் வெளிவந்தது.

அவனது அழைப்பில், குழந்தை அவனிடம் பொருந்தியிருந்த பாங்கில், அவனுக்கும் தேவ்விற்கும் இருந்த ஜாடை ஒற்றுமையில் "நல்லா சார்?" என்றாள் அன்பரசி கேள்வியாக!

"ம்ம் நல்லானந்த் தான்! கால் மீ நல்லா அன்பரசி!" என்றவன், "எப்படி இருக்கே அன்பு?" என்றான் அக்கறை நிறைந்த குரலில்.

இரண்டாம் முறையாக "அன்பு" என அவன் அழைத்ததில் ஒருவிதமான உரிமை வெளிப்படவும், அவனது அக்கறையும் குழைவும் சற்றே உள்ளே சென்றிருந்த கோபத்தைக் கிளப்பிவிட்டது! கல்யாணம் முடிந்து, ஒரு குழந்தைக்கும் தந்தையாகிவிட்ட நிலையில் என்ன குழைவு வேண்டிக் கிடைக்கிறது? இவனும் ஒரு சராசரி ஆண்மகன் தான் போலவே! என்ற எண்ணம் அவளை மேலும் எரிச்சலடைய வைத்தது.

"ம்ம் இருக்கேன்!" என்றதில் அவள் குரல் அடக்கிய கோபத்தைக் காட்டவே, நல்லானந்த் திகைத்தான்! "ஏன் கோபம்? இளகியிருந்த முகம் கடுத்துவிட்டதே! இந்த திலோ மனைவி... கினைவி என்றாளே அந்தக் கோபத்தில் இருக்கிறாளோ?" என அவனது திகைப்பை உறுதிப்படுத்துவது போல் வந்தன அடுத்த கேள்விகள்!

அவனிடமிருந்த கோபத்தில் அவன் பக்கமே திரும்பாமல் "மதி பாப்பா, என்கிட்டே வரியா?" எனக் குழந்தையைக் கேட்டாள் அன்பரசி.

"மதி சொல்லக் கூதாது.... நல்லாப்பா ஆ அச்சுவா" என மதிமலர் சிணுங்க ஆரம்பிக்க, "ஹோ! மலர் அடம் பண்ணும் போது, நான் "மதி"ன்னு சொல்லி அதட்டுவேன்! அது தான் அழறா" என நல்லா விளக்கம் கொடுத்தான்.

"ஓ, இவ்வளவு தூரம் அவளைத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க... அப்புறம் எதுக்கு அவளை விட்டுட்டு ரெண்டு பெரும் கனடா போனீங்க?" என உள்ளிருந்த கோபத்தை வார்த்தையாக வெளியிட்டே விட்டாள் அன்பரசி!

"யாரு ரெண்டு பெரும்?" என நல்லா குழம்ப, "நீங்களும் உங்க மனைவியும்" என்ற போது அன்பரசியின் பார்வையிலிருந்த எரிச்சலில் மதிமலரின் மேல் அவள் கொண்டிருந்த அக்கறை தெரிந்தது.

அவளது பதிலில் இறுக்கம் தளர்ந்து, குழப்பம் மறைந்து, சிரிப்புப் பீறிட்டது நல்லானந்திற்கு!

"ஏன் சிரிக்கிறீங்க?" என அன்பு குழம்ப, நல்லானந்திற்கு மேலும் சிரிப்புப் பொங்கியது! தந்தை முகமலர்ந்து சிரிப்பதைப் பார்த்த மதிமலரோ அவனுடன் சேர்ந்து தானும் சிரித்து, தாயாகப் போகும் அன்பரசியைக் குழப்பத்திலும் சிறு புன்னகை பூக்க வைத்தாள்!!

கழுத்தைக் கட்டிக் கொண்டு "அப்பா" என உறவாடிய மகளை இறக்கவே மனம் வரவில்லை நல்லானந்திற்கு!

என்ன ஒரு மென்மை!? பூந்தளிர் போன்ற மேனி தன் உடம்பில் உரச, உரச அவனிற்குள் பாசம் ஊற்றெடுத்து ஓடியது! இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்த துயர் மகளின் ஸ்பரிசத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் கரைய, அது முழுதாய் கரையும் முன்னர் மகளைக் கட்டிலில் விடுவாதாய் இல்லை என்பது போல் அவளை அணைத்தவாறே நின்றிருந்தான்!

பத்து, இருபது என நிமிடங்கள் பறந்த போதும் அவளை இறக்கிவிட மனம் தான் வரவில்லை! அவள் வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த காயத்தை இப்போது அவன் வருடிக் கொடுக்க, மலரோ அவனது கழுத்தைக் கட்டியவாறே நித்திரையை மேற்கொண்டிருந்தாள்!

மகளின் மேலிருந்த அதே பாசம், நடு நிசியில் தனக்காக விழித்து, உணவு தயாரித்துக் கொண்டிருக்கும் தந்தையின் மேலும் இருந்தமையால் மலரை படுக்கையில் விட எண்ணிக் குனிந்தவன், படுக்கையில் அவளை படுக்க வைத்த கையோடு, உச்சியில் இதழ் பதித்து நிமிர முற்பட்டான். ஆம் அவனால் முயலத் தான் முடிந்தது. முயற்சியில் வெற்றி தான் கிட்டவில்லை! ஏனென்றால் அவனது டீ-ஷர்ட் காலரை அவனது செல்லப் புதல்வி மிக இறுக்கமாய் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தாள்.

அவளோடு அங்கேயே படுக்க முடியாமல் கீழே காத்திருக்கும் தந்தை இழுக்க, அவளைத் தூக்கிக் கொண்டே கீழிறங்கிச் சென்றான் நல்லானந்த்!

பேத்தியுடன் வந்த மகனிடம் "மகளை விட்டு நகர மனசு வரலையாக்கும்?" என வினவிய பெத்தபெருமாளின் குரலில் பெருமிதமே பிரதானமாய் இருந்தது. "ம்ம், தூக்கத்தில கூட நான் தான் வந்திருக்கேன்னு சரியா புரிஞ்சுக்கிட்டாப்பா! செம ஸ்மார்ட்" என்ற நல்லானந்தின் குரலிலும் அதே பெருமிதம் தாண்டவமாடியது!

மகனின் வாக்கை வார்த்தைகளால் ஆமோதிக்காமல் பேத்தியின் பட்டு தலையை வருடிக் கொடுத்து தன் ஒப்புதலை வெளியிட்டார் பெரியவர். "தோசைக்குத் தொட்டுக்க காரமா மிளகாய் சட்னி செஞ்சிருக்கேன்! வேகமா அது தான் கண்ணா செய்ய முடிஞ்சது... அட்ஜஸ்ட் பண்ணிக்க" என்ற தந்தையிடம், "எதுக்கு இப்போ சட்னி எல்லாம் செஞ்சீங்க? தோசைப்பொடி இருந்தாலே போதுமப்பா" என்ற மகன் உணவுண்ண அமர்ந்தான். மகளுடன் தான்! மகளை மடியில் போட்டுக் கொண்டு உணவுண்ண ஆரம்பித்தவன், கேட்ட இரண்டு தோசைகளுக்கும் இரு மடங்கு மேலாகவே உண்டு களித்தான்!

ஆறாவது தோசையை மகனின் தட்டில் வைத்த பெத்தபெருமாள், அடுத்த தோசை ஊற்றவென அடுப்பு பக்கம் திரும்பவே வேண்டாமென தடுத்த நல்லானந்த், "தோசை - சட்னி சூப்பர்! ரொம்ப தேங்க்ஸ்பா!" என்றான் எழுந்து கொண்டே!

அதுவரை தந்தையின் மாரில் தலை சாய்த்து, ஒரு கையை அவனைச சுற்றிக் கொண்டு போய் முதுகில் வைத்திருந்த மகள் லேசாய் அசைந்தாள்! "சீக்கிரம் படுக்கப் போ கண்ணா! குழந்தை தூக்கம் களைந்து எழுந்தா புரியாம அழுவா!" என்ற பெத்தபெருமாள், அவன் கையில் ஒரு டம்பளர் பாலைக் கொடுத்து மேலே அனுப்பினார்.

"ம்ம், நான் பார்த்துக்கிறேன்! நடு ராத்திரியில் எழுந்தது...உங்களுக்கும் பசி எடுத்திருக்கும்! கொஞ்சமா பால் குடிச்சிட்டு படுங்க! நான் இதெல்லாம் எடுத்து வைச்சிட்டு ரூம்க்குப் போறேன். சொல்றதை கேளுங்க!" என அவருக்கும் மேலாய் பாசமும், அழுத்தமும் கொடுத்து அவரை மேலே செல்ல வைத்தான்.

இரு படிகளைக் கடந்த பெத்தபெருமாள், "மலரை தா! நான் எங்க ரூம்ல படுக்க வைச்சுக்கிறேன்" என்றார். "இல்லப்பா, என் கூட இருக்கட்டும்!" என்றதோடு அவரும் விட்டுவிட, நல்லாவும் உணவு மேஜையை சுத்தம் செய்துவிட்டு, தனக்குத் தந்தை காய்ச்சி வைத்திருந்த பாலை மகளின் மிக்கி சிப்பர்ரில் ஊற்றி எடுத்துக் கொண்டு மேலே சென்றான்.

தன்னறைக்குள் சென்றவன், தோளிலிருந்த மகளை மடிக்கு இடமாற்றி அவளுக்குப் பாலைப் புகட்டியவாறே தன் எண்ண அலைகளை அன்பரசியிடம் பறக்கவிட்டான்.

"எப்படி கண்ணம்மா இருக்கிறாய்? கண் வலி சரியாகிடுச்சா?" என அவள் உடல்நிலை விசாரித்தவன், "உன்னைப் பார்க்கப் பறந்து வந்துட்டேன்! ஏன் வந்தேன்? எதுக்கு வந்தேன்? என்பதற்கு நிறைய காரணம் சொல்ல முடிந்தாலும் உன்னைப் பார்க்கணும், உன்னோட பேசணும் என்பது தான் முக்கியக் காரணம்! அதை நீ எப்படி எடுத்துப்பே என்பது ஒரு பக்கம் இருக்க, உன்கிட்ட என்னோட மனசை, முக்கியமா அதில மலருக்கு இருக்கிற இடத்தை சொல்லியே ஆகணும்" என அவளிடம் தன் மனநிலையை விளக்கிக் கொண்டிருந்தான்! மானசீகமாக!

அவனது எண்ண அலைகள் தறிகெட்டு மிக வேகமாக ஓடிக் கொண்டிருந்த வேளையில், தந்தை புகட்டிக் கொண்டிருந்த பாலைக் குடித்து முடித்திருந்த கன்று, தூக்கத்திலேயே சிப்பரை ஒரு கையால் தட்டிக் கீழே விழ வைத்தது. சிறு சத்தத்தோடு விழுந்த அந்த சிப்பர் அவனது கவனத்தைக் களைக்க,
"குடிச்சு  முடிச்சுட்டீங்களா! என் தங்கக்குட்டி!" என மகளைக் கொஞ்சிக் கொண்டே படுக்கைக்கு இட்டுச் சென்றான் நல்லா!

தன் நெஞ்சத்தை மகளது மஞ்சமாக்கியவனின் இதயத்தை அரசாண்டு கொண்டிருந்தாள் அன்பு!

அதிகாலை ஆறு மணியளவில் மதிமலர் தன் மலர் விழிகளை மலர்த்தி, அருகில் தன் தந்தை இருப்பதைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ அவனை எழுப்பாமல் அருகிலேயே அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். நடு நடுவே "நல்லப்பா, ஆஆ சொல்லு! பாத்தீ பப்பு மம்மம் தரா... ஆ சாப்து" என அவனது திறவாத வாய்க்குள் தன் பிஞ்சு விரல்களால் உணவு கொடுக்க முயன்றாள்! தனது விளையாட்டில் தந்தை லேசாக அசைய, அவனது கண்ணில் தட்டி "தாச்சு நல்லாப்பா.... தாச்சுக்கோ" எனத் தாலாட்டிக் கொண்டிருந்தவளின் குரல் கேட்டு நல்லாவின் அறைக்கு விரைந்தார் வளர்மதி.

நல்லா கனடாவில் இருந்த நாட்களிலும் தந்தையின் நியாபகம் அதிகமானால் அவனது அறைக்குள் சென்று அவன் உடமைகளோடு விளையாடுவது மதிமலரின் செயல்களில் ஒன்று என்பது அந்த குடும்பத்தில் இருக்கும் அனைவரும் அறிந்த விஷயமே என்ற போதிலும், வளர்மதி மகனின் அறைக்குள் பேத்தியை நாடி சென்றார்.

"மலர்" என்ற அழைப்போடு உள்ளே நுழைந்த வளர்மதி, கட்டிலில் துயில் கொண்டிருந்த மகனைக் கண்டதும் "நல்லா" எனப் பாய்ந்து சென்றார்.

பாட்டியின் குரல் கேட்டதும் தன் உதட்டில் விரல் வைத்து "ஷ்" என அடக்கினாள் பேத்தி! "அடேங்கப்பா" என்ற சொல்லோடு பேத்தியைத் தூக்கிக் கொண்ட வளர்மதி, "கண்ணா" என அவனது சிகையை வருடி, உச்சி முகர்ந்து பேத்தி உறங்க வைத்த மகனைத் தாயார் எழுப்பினார்.

"நல்லாப்பா தாச்சு... தாச்சு" என மகள் அவனை உறங்க வைக்க முயன்றாலும், தாயின் ஸ்பரிசத்தில் கண் விழித்த நல்லானந்த் அருகில் அமர்ந்திருந்த தாயின் மடிக்குத் தன் தலையை மாற்றி, அவரது இடுப்பைக் கட்டிக் கொண்டு "அம்மா" எனச் செல்லம் கொஞ்சினான்.

தான் அமர்ந்திருக்கும் மடிக்குத் தந்தையின் சிரம் வரவே, அதை ஒரு கையால் தள்ளி "நல்லாப்பா போ.போ.. மலர் பாப்பாவோத பாத்தீ" எனத் தனது உரிமை நிலைநாட்ட முயன்று, "அப்பா கொஞ்சமா படுத்துக்கிறேன்டா செல்லம்... ப்ளீஸ்... ப்ளீஸ்" எனத் தந்தையைக் கெஞ்ச வைத்தாள்.

அதன் பின்னர் அங்கே அன்பான உறவுகளின் அழகான சங்கமம் அரங்கேறியது! இரு மகன்களும் தாயிடம் செல்லம் கொஞ்சி, தங்களது கேலியில் அவரைக் கோபம் கொள்ள வைத்து, அவர் கொண்ட கோபத்தை முத்தத்தால் துடைத்து, அவரது பாசத்தை உணவிலும் பேச்சிலும் உணர்ந்தனர்.

ஆனால், "நல்லா, மீன் வாங்கிக் குழம்பு வைக்கிறேன் கண்ணா! இன்னைக்கு ஒரு நாள் அம்மாக்காக சாப்பிடு ராஜா!" என வளர்மதி அவனிடம் கெஞ்சி, மிஞ்சி, கடைசியில் மிரட்டியபோதும் நல்லானந்த் அசைவம் உண்ணமாட்டேன் என்ற தன் கொள்கையிலிருந்து சற்றும் இறங்கி வரவில்லை.

கடைசியில் வளர்மதி, "ரொம்ப பண்றேடா, இனிமேல் உனக்குத் தயிரும் ஊறுகாயும் தான்! பாவம் பிள்ளை, மூணு மாசமா அவன் சமைச்சதையே சாப்பிட்டு நாக்கு செத்து போய் இருப்பானேன்னு கேட்டா... பெரிய இவன் எவன்... போடா ராஸ்கல்" எனத் தன் ஆதங்கத்தை எரிச்சலாய் வெளியிட்டார்.

"என்ன வளர் இது? நீங்க சமைச்சதை நீங்களே சாப்பிடறதால உங்க நாக்கு செத்து போச்சு. வேற யாராவது சமைச்சுப் போடுங்கன்னு கேட்க வேண்டியது தானே! அதை விட்டுட்டு என் சமையலை ஏன் குறை சொல்றீங்க?" என நல்லா சீண்ட,

"ஏய் நல்லா, ஒருவேளை இரண்டாவது மருமக கையால சாப்பிடற ஆசை வந்து வளர் அப்படி சொல்றாங்களோ?" என்ற தேவ், "முதல் மருமக கீரையும், கோதுமையுமா போட்டு அவங்களை ஓவர் கொடுமை பண்றா போல! அதனால இரண்டாவது மருமகளைத் தேடுறாங்க போல" என்றும் கூடச் சேர்த்துக் கொண்டான்.

"ஆஹா, இவனா அப்பாவி! சரியான அடப்பாவி!" என்றெண்ணிய நல்லா, "ஹய்யோ இந்த வளர் வேற இரண்டாவது மருமக புராணத்தை ஆரம்பிச்சுடுவாங்களே! அன்புகிட்ட பேசாம இவங்ககிட்ட என்னோட காதலைச் சொன்னா, அடுத்த அரை மணி நேரத்தில் தாலியோட ஹாஸ்பிடல்லுக்கே போய்டுவாங்களே! கடவுளே, என்ன பண்றது! டேய் தேவ்! துரோகி" எனப் பல்லைக் கடித்தான் நல்லானந்த்!

மகன்களின் எதிர்பார்ப்பை வீணாக்காமல் "ஆமாடா நல்லா! எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே? என் சித்தியோட நாத்தனாரோட கொழுந்தன் மகள் வயிற்று பேத்தி ஒரு பொண்ணு இருக்காளாம்! அவங்களுக்கு மலர் விஷயம் கூட தெரியும்...நான் சொல்லிட்டேன்! நாளைக்கு... ம்ம்... இன்னைக்கே கூட பொண்ணு பார்த்து, பத்து நாளைக்குள்ள கல்யாணத்தை முடிச்சிடலாம்" என வளர்மதி பெரிதாய் திட்டம் போட, தேவநந்தன் நல்லாவைப் பார்த்து கமுக்கமாய் சிரித்தான்.

"ஹய்யோ ஹய்யோ!காமெடி பண்ணாதீங்க வளர்! போய் எல்லாருக்கும் காபி போடுங்க! ஒரு குடும்பத் தலைவி மாதிரி நடந்துக்கோங்க... எல்லாம் ஒரு ஆள் சொல்லிக் கொடுத்துட்டே இருப்பாங்களா?" என அவர் பேசிய முக்கிய விஷயத்தை காமெடியாக்கி அவரைக் குழப்பிவிட்டான்.

"நல்லா, நான் சொல்றதை... " என அவர் மீண்டும் ஆரம்பிக்க, "பசிக்குது வளர்! ஒடுங்க ஒடுங்க!" என அவரைக் குழந்தைகளுடன் அனுப்பி வைத்தவன், சகோதரனிடம் மேல் பாய்ந்தான்.

மருத்துவமனையில் இருக்கும் திலோத்தமையை வீட்டிற்கு அனுப்பி வைப்பதற்காக தேவ் மருத்துவமனைக்குக் கிளம்பவும், தான் போவதாகக் கூறிய நல்லா, தமையன் மற்றும் தந்தை மர்மமாய் சிரித்ததை ஒதுக்கிக் கிளம்பினான்.

அவன் வெளியே கிளம்புவதைக் கண்ட மதிமலர் தானும் வருவதாய் கூறி அழ ஆரம்பித்தாள்! அவளது அழுகையைக் கண்ட தந்தையின் மனம் சட்டெனெ இளகிவிட, அவளை அள்ளிக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். நல்லானந்த் மருத்துவமனைக்குச் செல்கிறான் என்பதை வளர்மதியிடம் சொன்னால், "திலோவோட தோழியைப் பார்க்க இவன் எதற்கு செல்கிறான்?" என்ற கேள்வி உடனே எழும் என்பதால், மலர் மருத்துவமனையைப் பார்த்தால் அழுவாள் என்பதை வீட்டில் சொல்லித் தடுக்க முடியவில்லை!

மகளை முன்னே அமர வைத்துக் கொண்டு, பைக்கை அன்பரசி அனுமதிக்கப் பட்டிருக்கும் மருத்துவமனைக்கு விட்டான்! பல்லக்கில் பவனி வரும் இளவரசியின் பூரிப்போடு தந்தையுடன் பயணம் செய்த மகளோ, மருத்துவமனையைக் கண்டதும் மிரண்டு அழ ஆரம்பித்தாள்.

அவளது அழுகையை "அப்பாக்குத் தான்டா குட்டிம்மா ஊசி போடப்போறாங்க! பாப்பாக்கு இல்லை" எனக் கூறியவன், தொடர்ந்து "அப்பாக்கு ஊசி போட்டா வலிக்குமில்லை! பாப்பா தேச்சு விடுறீங்களா? பாப்பா தேச்சு விட்டு, ஒரு முத்தா கொடுத்தா அப்பாக்கு வலியெல்லாம் பறந்து போய்டும்! சரியா? செய்றீங்களா?" எனக் கரையாய் கரைத்து உள்ளே கூட்டிச் சென்றான்.

அன்பரசி அனுமதிக்கப் பட்டிருக்கும் அறையை நோக்கி நடந்த நல்லானந்திடம் "நல்லாப்பா, அங்கல்ல ஊச்சி! இதா ஊச்சி போடுவா..." என மருத்துவரின் அறையைக் கை காட்டினாள் மகள்.

"அச்சோ, என் பிள்ளைக்கு எவ்வளவு அறிவு! என் பட்டு" என அவளது கவனிப்பைப் பாராட்டிய நல்லா, "இங்கேயும் ஊசி போடுவாங்கடா! அந்த ரூம்-ல குட்டி "ஆ"க்கு மருந்து.... இந்த ரூம்ல பெரிய "ஆ"க்கு மறுத்து! அப்பாக்கு ரொம்ப அடிடா! இங்கேயே போவோமா?" எனக் கூறி உள்ளே அழைத்துச் சென்றான்.

அன்பரசியின் அறைக்கதவை லேசாக தட்டிய நல்லானந்த், அடுத்த தட்டலுக்காக கை எடுத்தப்போது, கதவு திறந்து திலோ வெளிப்பட்டாள்! கணவனை எதிர்பார்த்து கதவைத் திறந்தவளின் கண்கள் தன் நண்பனைக் கண்டதும் பெரிதாய் விரிந்தன!

"ஹே திலோ! எப்படி இருக்கே!" எனத் தோழியின் முகத்தின் முன்னால் கைகளை ஆட்டி, நல்லா நலம் விசாரிக்க, "அம்மா" என அவளிடம் தாவினாள் மதிமலர்.

மகளைக் கைகளில் வாங்கியவாறே "என்னடா இது? திடுதிப்புன்னு இந்தியா வந்து குதிச்சிருக்கே!" எனத் தன் வியப்பிலிருந்து மீண்டாள் திலோ! "சும்மா தான்! போர் அடிச்சது" என்ற நல்லானந்தின் கண்கள் தோழியின் தலையைத் தாண்டி, உள்ளிருக்கும் அறையைத் துழாவியது!

"சும்மா போர் அடிக்காம கிளம்புன்னு சொல்றீயாக்கும்! நீ வாயால சொல்றதுக்கு முன்னாடி உன் கண் சொல்லிடுச்சு!" என்ற திலோ, லேசாக சிரித்தாள்.

அவள் கூறியதை மறுக்கும் எண்ணம் கூட இல்லாமல் நல்லா சிரிக்கவும், "அடப்பாவி! ஃபிகரைப் பார்த்ததும் ஃபிரண்டை கழட்டிவிடுறியேடா" எனக் கேலி பேசினாள் திலோ!

அவளது கேலிக்குப் பதில் சொல்லாமல், "அன்பு எங்க திலோ?" என வினவினான் நல்லா. "பாத்ரூம் போயிருக்கா...சரிடா நான் கிளம்புறேன்! மலரையும் கூட்டிட்டுப் போகட்டுமா?" என்றவளிடம், "மலர் இருக்கட்டும்! இன்னைக்கு ஸ்கூல் போகாதே திலோ! உன்கிட்ட நிறைய பேசணும்! என்ன?" என அவசரமாய் உத்தரவு போட்டான் நண்பன்.

"முடியாது போ" என சிலிர்த்துக் கொண்ட தோழியை, "என் செல்ல திலோ-இல்ல! ப்ளீஸ்டா!" எனக் கெஞ்சலில் சமாதானப்படுத்தியவனிடம் "சரி... சரி வந்த வேலையை வெற்றிகரமா முடிச்சிட்டு வா, பேசலாம்" என்றாள் அவள். அன்பரசியின் அறையை விட்டு வெளியே நடந்தவாறே, "ஆல் தி பெஸ்ட்! அன்புகிட்ட உன் அருமை பெருமையெல்லாம் ஒன்னுவிடாம சொல்லியிருக்கேன்... உன் கூட இருக்கும் உன் மனைவி பத்தி கூட!!" என அவனுக்கு வாழ்த்து தெரிவிக்கும் போக்கில் ஒரு குண்டையும் போட்டுவிட்டுப் போனாள்.

"மனைவியா?! அடிப்பாவி! புருஷன்-பொண்டாட்டி ரெண்டு பெரும் சேர்ந்து என் வாழ்க்கையை ஒரு வழி பண்ணாம விடமாட்டீங்க போலவே!" என வாய் விட்டுப் புலம்பியவாறேஅறைக்குள் சென்ற நல்லா, மகளை மடியில் வைத்தவாறே நோயாளின் கட்டிலின் அருகே இருந்த மற்றொரு கட்டிலில் அமர்ந்தான்.

அவளைக் கண்களால் முழுதாய் கூட காணாமல், வெறும் குரலையும் அவளுக்கும் மலருக்கும் இருந்த ஒற்றுமையையும் அடிப்படையாக வைத்து வளர்ந்த காதலை அடிப்படையாக பல்லாயிர மைல்கள் பயணித்து பறந்து வந்தவனின் மனம் - அவளது சில வினாடி தாமதத்தில் படபடவென அடித்துக் கொண்டது.

காதல் என அவன் உறுதியாய் தீர்மானித்த இந்த இரு தினங்களாய், குழுவாய் எடுக்கப் பட்டிருந்த படத்தில் முன் வரிசையில் நின்றிருந்தவர்களின் பின்னே மறைந்து நின்று, முகத்தின் சொற்பமான பகுதியை மட்டும் காட்டியிருந்தவளின் மேல் அடக்கமாட்டாமல் கோபம் வந்தவண்ணம் இருந்தது உண்மை!
"கொஞ்சமாய் முகத்தைக் காட்டினா என்னவாம்? ஃபோட்டோ பிடிச்சா ஆயுசு குறைஞ்சிடும்ன்னு யாராவது சொல்லி இருப்பாங்க, இந்த பட்டிக்காட்டு பைங்கிளியும் அப்படியே முடிஞ்ச அளவு பின்பற்றி நம்மளை இம்சை பண்றா" என அவளை வாய் விட்டே பலமுறை திட்டிக் கொண்டவன், "நாகர்கோயில் சென்னை அளவு சிட்டி இல்லை தானே! சோ பட்டணப்பட்டிக்காடுன்னு வச்சுக்கலாம்" என அவளைப் பட்டிக்காடு என்று சொன்னதற்கு சப்பைக்கட்டும் கட்டிக்கொண்டான்.

ஆனால் அந்த கோபத்திற்கு வடிகால் ஏற்படும் தருணம் வர, அறுபது... ஐம்பத்தொன்பது... ஐம்பத்தியெட்டு என வினாடிகளில் கவுன்ட்டவுன் நடத்த வேண்டியதாய் இருந்தது!

தாய், தந்தை, சுற்றம், நட்பு என ஒருவரும் துணைக்கு இல்லாத நிலையில், பலத்த அடியுடன் தனியாக அவள் போராடிய நாட்களை எண்ணி எண்ணித் துடித்துக் கொண்டிருந்தவனுக்கு இப்போது அவளையும், அவளது உடல் நிலையையும் பிறரது வாக்கு மூலமாக இல்லாமல் கண்ணெதிரேயே காணப்போகிறோம் என்பது ஒரு எதிர்பார்ப்பைக் கிளப்பிவிட்டது.

அவளுக்குக் கை மற்றும் கண்ணில் பலத்த அடி எனப் பிறர் சொல்லி அறிந்து கொண்டிருந்தான் தான் என்றாலும் கண்ணால் பார்த்து அவளது உடலின் ஒவ்வோர் அங்கமும் சேதாரமின்றி இருப்பதைக் காண நெஞ்சம் துடித்தது! கையிலும் கண்ணிலும் கூட அவளுக்குப் பட்டிருக்கும் காயங்களைக் கண்களால் முதலில் வருடி, பின்னர் கைகளால் வருடி...அதன் பின்னர்... அவனது கற்பனைக் குதிரை வேகமாய் ஓடுவதை உணர்ந்தவள் போல் அன்பரசி வெளியே வரும் சத்தம் கேட்டது!

ஐந்தே நிமிடத்தில் குளியலறையிலிருந்து வெளியே வந்த அன்பரசி, கட்டிலில் அமர்ந்திருந்த ஆடவனைக் கண்டு ஒரு நிமிடம் திகைத்த அன்பரசி, அவன் மடியில் அமர்ந்திருந்த மதிமலரைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்!

தன் தாயாரே மலர்ந்த முகத்துடன் தன்னைக் காண வந்திருப்பது போல் நெஞ்சம் சந்தோஷத்தில் திளைத்தது. தாயின் அச்சாய் இருந்த மதிமலர், தன்னைக் கண்டாலே அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறாள் என்ற நடப்பே அவளை இரு தினங்களாய் சோர்வுற செய்து கொண்டிருந்தது. பட்டிருந்த காயங்களையும் மீறி, மனம் அவளது புன்சிரிப்பிற்காக மனம் வெகுவாய் ஏங்கிப் போயிருந்ததால் இப்போது லேசாகிப் பறந்தது!

உடம்பில் பட்டிருந்த காயங்கள் ஏற்படுத்திய வலியுடன் இந்த ஏக்கமும் சேர்ந்து கொள்ள, மதிமலர் தன்னிடம் பேசாமல் இருப்பதற்கு அற்ப காரணங்களைத் தேடி, முடிவில் நல்லானந்தும் அவனது மனைவியும் மலரை விட்டுச் சென்றதையே காரணமாய் ஜோடித்து, அவர்களைத் திட்டித் தீர்த்துக் கொண்டிருந்தவளுக்கு இப்போது மலரின் அழுகை மறைந்த நிலை பெரும் வியப்பையே ஏற்படுத்தியது.

மலர் அழுது அடம் செய்வதற்காக மட்டும் தான் நல்லானந்த் மற்றும் அவனது மனைவி மேல் தனக்குக் கோபமா என்றால் அதற்கும் அன்பரசியால் சரியான பதிலை சொல்ல முடியவில்லை. நல்லானந்த், ஒரு குழந்தையின் தந்தை என்ற விஷயம் தான் அவளைக் கோபம் கொள்ள வைத்திருக்கிறதோ என்பதையும் அவளால் முழுதாய் ஒத்துக் கொள்ள முடியவில்லை!

கண்ணால் பார்க்காமல், சொந்த விஷயங்கள் பேசாமல், குடும்பம் - நட்பு என ஒன்றுமே தெரியாமல் இருக்கும் நிலையில் அவன் மேல் கோபப்பட உனக்கென்ன உரிமை இருக்கிறது? என ஒரு மனம் இடித்துரைத்தாலும், மறுமனமோ தன் தாயின் மறுபிறவியாய் இருந்த மதிமலரை காட்சிக்குள் அழைத்துவந்து அவளை எரிச்சல் கொள்ள வைத்திருந்தது.

இரண்டு நாட்களாக இந்த அறைக்குள் நுழைவதற்கே அழுது அடம் பிடித்தவள், இன்று ஓர் புதியவனின் மடியில் அமர்ந்து சிரித்துக் கொண்டிருப்பதை பார்ப்பதற்கு அவளுக்குள் நிம்மதி பரவியது! நிம்மதி பரவிய அதே வினாடி, அந்த ஆடவன் யார்? என்ற எண்ணமும் தோன்றி, ஒரு வேளை நல்லானந்தோ என்ற கேள்வியுடன் அவர்களை நோக்கி நடந்தாள்.

நல்லானந்தாக இருந்தால் கனடாவிலிருந்து எப்போது? எப்படி? இவ்வளவு சீக்கிரம் வந்தான்? ஆனால் ஏன் வந்தான்? தன்னைப் பார்க்கவா? பெண்ணை மட்டும் அழைத்து வந்திருக்கானே... இவன் மனைவி எங்கே? மகாராணிக்கு கனடாவை விட்டு நகர மனம் வரவில்லையாக்கும்? எனத் தறிக்கட்ட பரந்த எண்ணங்கள், கடைசி வாக்கியத்தில் சுரணை பெற்று நின்றன. அவனது மனைவி வரவில்லை என்று உனக்கு எப்படி தெரியும்? அப்படியே வரவில்லை என்றாலும் உனக்கென வந்தது? தாயார் மட்டும் இருந்திருந்தால், தேவையில்லாமல் அடுத்தவரைப் பற்று அவதூறாய் பேசியதற்கு நாலு நாட்கள் தன்னுடம் பேசாமல் இருந்திருப்பார்கள்! ஆம், அவளது தாயார் கோபத்தைக் கட்டும் விதம் அது தான்! அடிக்காமல், முறைக்காமல், திட்டாமல் தன் கோபத்தைக் கட்டிவிடுவார்கள்... இந்த மதி குட்டியும் அப்படி தானோ? சரியான அழுத்த அழுமூஞ்சி...

மதின்னு கூப்பிட்டாலே ஹாஸ்பிடல்-ல படுத்திருக்கும் எல்லாருக்கும் காசில்லாமல் அலாரம் வைத்து எழுப்பிவிட்டுவிடுவாள்... ஹப்பாடா என்ன தொண்டை? இது ஒன்னு தான் அம்மாவிற்கு இவளுக்கும் இருக்கும் ஒரே வித்தியாசம்...ஒருவேளை, பிறக்கும் போதே மைக்கை முழுங்கி இருப்பாளோ? என எண்ணங்கள் மலரின் தாயிடமிருந்து

அவளிற்குப் பயணித்து, கடைசியில் "அச்சோ...என் செல்லப் பட்டு... சாரிடா கண்ணாட்டி... இனிமேல் சொல்லமாட்டேன் சரியா? என்கிட்டே பேசு.. ப்ளீஸ்" என மானசீக மன்னிப்பிற்கு வந்து சேர்ந்தது.

அவளது சில வினாடி நேர நிம்மதியையும், கேள்வியையும் சிற்சில வினாடி தாமதத்திற்குப் பின்னர் கண்ட நல்லானந்த், மகளுடன் எழுந்தான்!

தூங்கி எழுந்ததில் கலைந்திருந்த கூந்தல் நவீன ஓவியத்தின் மென் சாரலாய் தெளித்திருக்க, சிவந்திருந்த கண்கள் பழுக்கக் காத்திருக்கும் கோவைப் பழத்தை நினைவு படுத்த, உதட்டின் மேலிருந்த தண்ணீர் படிமம் பனி காலை புது மலராய் விரிந்திருக்க, குளியலறை கதவைப் பிடித்திருந்த இடது கை தேர்ந்த ஓவியனின் துரிகையாக மாறியிருக்க, அதைப் பார்த்திருந்த நல்லானந்தின் நெஞ்சம் ஒரு நிமிடம் நின்று, பின்னர் துடித்தது.

"அன்பு..." எனக் குழைய ஆரம்பித்த குரல், சிறு செருமலின் பின்னர் "அன்பரசி" என மெல்லிதாய் வெளிவந்தது.

அவனது அழைப்பில், குழந்தை அவனிடம் பொருந்தியிருந்த பாங்கில், அவனுக்கும் தேவ்விற்கும் இருந்த ஜாடை ஒற்றுமையில் "நல்லா சார்?" என்றாள் அன்பரசி கேள்வியாக!

"ம்ம் நல்லானந்த் தான்! கால் மீ நல்லா அன்பரசி!" என்றவன், "எப்படி இருக்கே அன்பு?" என்றான் அக்கறை நிறைந்த குரலில்.

இரண்டாம் முறையாக "அன்பு" என அவன் அழைத்ததில் ஒருவிதமான உரிமை வெளிப்படவும், அவனது அக்கறையும் குழைவும் சற்றே உள்ளே சென்றிருந்த கோபத்தைக் கிளப்பிவிட்டது! கல்யாணம் முடிந்து, ஒரு குழந்தைக்கும் தந்தையாகிவிட்ட நிலையில் என்ன குழைவு வேண்டிக் கிடைக்கிறது? இவனும் ஒரு சராசரி ஆண்மகன் தான் போலவே! என்ற எண்ணம் அவளை மேலும் எரிச்சலடைய வைத்தது.

"ம்ம் இருக்கேன்!" என்றதில் அவள் குரல் அடக்கிய கோபத்தைக் காட்டவே, நல்லானந்த் திகைத்தான்! "ஏன் கோபம்? இளகியிருந்த முகம் கடுத்துவிட்டதே! இந்த திலோ மனைவி... கினைவி என்றாளே அந்தக் கோபத்தில் இருக்கிறாளோ?" என அவனது திகைப்பை

உறுதிப்படுத்துவது போல் வந்தன  அடுத்த கேள்விகள்!

அவனிடமிருந்த கோபத்தில் அவன் பக்கமே திரும்பாமல் "மதி பாப்பா, என்கிட்டே வரியா?" எனக் குழந்தையைக் கேட்டாள் அன்பரசி.

"மதி சொல்லக் கூதாது.... நல்லாப்பா ஆ அச்சுவா" என மதிமலர் சிணுங்க ஆரம்பிக்க, "ஹோ! மலர் அடம் பண்ணும் போது, நான் "மதி"ன்னு சொல்லி அதட்டுவேன்! அது தான் அழறா" என நல்லா விளக்கம் கொடுத்தான்.

"ஒ, இவ்வளவு தூரம் அவளைத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க... அப்புறம் எதுக்கு அவளை விட்டுட்டு ரெண்டு பெரும் கனடா போனீங்க?" என உள்ளிருந்த கோபத்தை வார்த்தையாக வெளியிட்டே விட்டாள் அன்பரசி!

"யாரு ரெண்டு பெரும்?" என நல்லா குழம்ப, "நீங்களும் உங்க மனைவியும்" என்ற போது அன்பரசியின் பார்வையிலிருந்த எரிச்சலில் மதிமலரின் மேல் அவள் கொண்டிருந்த அக்கறை தெரிந்தது.

அவளது பதிலில் இறுக்கம் தளர்ந்து, குழப்பம் மறைந்து, சிரிப்புப் பீறிட்டது நல்லானந்திற்கு!

"ஏன் சிரிக்கிறீங்க?" என அன்பு குழம்ப, நல்லானந்திற்கு மேலும் சிரிப்புப் பொங்கியது! தந்தை முகமலர்ந்து சிரிப்பதைப் பார்த்த மதிமலரோ அவனுடன் சேர்ந்து தானும் சிரித்து, தாயாகப் போகும் அன்பரசியைக் குழப்பத்திலும் சிறு புன்னகை பூக்க வைத்தாள்!!

முகமலர்ந்து மதிமலர் சிரித்ததை கண்களில் நிறைத்துக் கொண்டிருந்த அன்பரசியைப் பார்த்ததும், நல்லானந்தின் சிரிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து சிறு புன்னகைக்கு வந்து நின்றது.

தந்தையின் சிரிப்பொலி நின்றதும், அவனை நிமிர்ந்து பார்த்த மதிமலர், அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு தன் சிரிப்பையும் புன்னகைக்கு மாற்றினாள். அதே நேரத்தில், தன் சின்ன கரங்களால் அவனது உதட்டை இழுத்து சிரிக்க வைக்கவும் முயன்றவளின் கன்னத்தில் ஒரு அழுத்தமான முத்தம் வைத்தான் தந்தை!

தந்தையின் தங்க முத்தம் தனது தந்த கன்னத்தில் விழுந்ததும், வெட்கமும் பூரிப்பும் ஒருங்கே வந்து சேர கிளுக்கிச் சிரித்தது கன்று! அவள் முகத்தில் தோன்றிய உணர்வுகளைக் கண்ட தந்தையின் மனம் பெருமையில் மலர, அன்பரசியின் முகமோ ஏக்கத்தில் வாடியது.

"நல்லாப்பா... சிரி.. 'ஆ' காணா போச்சா?" என அவனை மீண்டும் சிரிக்க வைக்க மலர் முயன்றபோது தான், நல்லானந்தின் சிரிப்பே அன்பரசிக்கு நினைவு வந்தது.

மனைவியைப் பற்றி கேட்டால் ஒழுங்காய் பதில் சொல்லாமல் என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது? என மனம் கடுத்தது. அவளது கடிப்பைக் கண்டுகொள்ளாமல், "அப்பாக்கு 'ஆ' சரி ஆகலைடா... ஊசி போட்டா தான் சரியாகும்" என மகளிடம் கொஞ்சினான் அந்த கல்லூளிமங்கன்

"யாரு ஊச்சி போதுவா...?" என ஒரு விரலால் தாடையில் தட்டியவாறே சிறியவள் யோசிக்க, அவனோ அவளை விடப் பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு அன்பரசியின் பக்கம் கை நீட்டினான்.

"என்ன விளையாட்டு இது?" என்பது போல் அன்பரசி பார்த்திருக்க, நல்லாவின் உதடுகள் சிரிப்பில் துடித்தன.

"ஒ" என அன்பரசியைப் பார்த்த மதிமலருக்கோ, அவளிடம் கேட்க வெட்கம், தயக்கம், கூச்சம் என எல்லாமுமாய் இருந்தது அவளது ஒதுக்கத்தில் தெரிந்தது.

"பாருடா அப்புக்குட்டி அவங்க ஊசியே போடமாட்டேன்றாங்க... நீ போய் அவங்ககிட்ட "ப்ளீஸ்.. ப்ளீஸ் , எங்கப்பாக்கு ரொம்ப "ஆ"..ஒரே ஒரு ஊசி போடுங்கன்னு சொல்றியா? அப்பாக்கு ரொம்ப வலிக்குதுடா.... சீக்கிரம் சொல்லுடா... ஆ...ஆ வலிக்குதே..." என போலியான வலியும், துடிப்புமாய் அவன் சுருள, "ஏன் இந்த வேலை செய்கிறான்? ஒரு கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்லாமல் என்ன வேலை இது?" என அன்பரசி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, மதிமலர் அவனது கைகளிருந்து இறங்கி அன்பரசியிடம் வந்திருந்தாள்.

வந்த வேகத்தில், "ஆன்த்தீ... நல்லாப்பாக்கு 'ஆ' வந்துச்சு... ஊச்சி போங்க... பீஸ்" என அவளது இரவு உடையைப் பிடித்து இழுத்தவாறே, தன் கோரிக்கையையும் முன் வைத்தாள்.

சின்னவள் பேச ஆரம்பித்த வினாடியே, நல்லானந்த் செய்த வேலையின் காரணம் அன்பரசிக்கு விளங்கியது. விளங்கியது மட்டுமில்லாமல், கனன்று கொண்டிருந்த எரிச்சல் மட்டுப்பட்டு, அவன் மேல் ஓர் நன்றி பார்வையை செலுத்த வைத்தது.

அவனிடம் நன்றி பார்வையை செலுத்திக் கொண்டே, தன்னைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்த மதிமலரின் உயரத்திற்கு ஏற்றது போல் குனிந்தவள், அவளது பட்டுக் கன்னத்தை இடது கையால் வருடி "ஆன்ட்டிக்கு ஒரு கிஸ் தரீங்களா?" என மகளிடம் வினவினாள்.

ஆனால் மகளோ முகத்தைச் சுளித்து தன் விருப்பமின்மையை செவ்வனே காட்டவே, "ஒன்னே ஒன்னுடா, மதி பாப்பா ஆன்ட்டிக்கு ஒரே ஒரு கிஸ் தந்தா... ஆன்ட்டி உங்க நல்லாப்பாவுக்கு இரண்டு ஊசி போடுவேன்" என்ற பேரத்தை முன்வைக்க வேண்டியதாய் போனது. இவை அனைத்தையும் மர்மச் சிரிப்புடன் பார்த்திருந்தான், நல்லானந்த்.

"மதி சொல்ல கூதாது...நல்லாப்பா.." என மீண்டும் ஆரம்பிக்கவும், "சரி..சரி... மதி சொல்லலை! ஆன்ட்டி "மதிமலர் பாப்பா"ன்னு சொல்லிட்டேன்... " என அவளை உடனே சமாதானப்படுத்தினாள்  பெரியவள்.

"ம்ம் சரி" எனப் பெரிய மனுஷி பாணியில் அதை ஒப்புக் கொண்ட மதிமலரோ, தன் தந்தைக்காக அவளது கன்னத்தில் வேகமாக ஒரு முத்தத்தைப் பதித்துவிட்டு, மீண்டும் தந்தையிடம் ஓடி வந்து ஒட்டிக் கொண்டாள்!

தன் வலது கன்னத்தில் அவள் வைத்த முத்தத்தை ஆசையுடன் வருடிக் கொடுத்தவாறே, எழுந்த அன்பரசியின் பார்வை எரிச்சலை மறைத்து நன்றியைப் பூசியிருந்தது.

அன்பரசியின் முகத்தில் பூத்திருந்த மகிழ்ச்சியைக் கண்ட நல்லானந்திற்கோ, மதிமலரின் மேல் அவள் கொண்டிருந்த ஈடுபாட்டைப் பார்க்க வியப்பாய் இருந்தது! பார்க்கும் அனைவரையும் கவரும் வசீகரம் மதிமலருக்கு இருக்கிறது தான் என்றாலும், அன்பரசியின் முகத்தில் இருந்தது வெறும் ஈர்ப்பு மட்டுமல்ல, அதையும் தாண்டி எதோ ஓர்

பிணைப்பு தெரிந்தது நல்லாவிற்கு! அது என்னவாக இருக்கும் என்ற எதிர்பார்ப்பும் காதலைப் போலவே பெருகிக்கொண்டிருந்தது!

ஓடி வந்த மகளை அவன் வாரிக் கொள்ளவும், "எதுக்கு சிரிச்சீங்க?" என நிதானத்தை வரவழைத்துக் கொண்டு அன்பரசி வினவ, "இல்ல... என்னோட மனைவியைப் பத்தி சொன்னதும் சிரிப்பு வந்துடுச்சு" என்றான் நல்லா, பூடகமாக.

மனைவியைப் பத்தி சொன்னால் சிரிப்பு வருகிறதா? அதில் சிரிக்க என்ன இருக்கிறது? ஒருவேளை ..." கண்டதையும் கற்பனை செய்து, களைத்துப் போன மனம், ஒரு கட்டத்தில் சோர்வுற்றது. அவனது குடும்பம், குழந்தை, அவர்களுள் நிகழும் உறவு என எண்ணி எண்ணி மூளை களைத்துப் போயிருக்க, மனமும் உடலும் அதே நிலைக்குத் தள்ளப்பட்டு அவளை சோர்வுடன் கட்டிலில் அமரவைத்தது.

அதை அறியாத (உணரத் தெரியாத) மதிமலரோ, "ஆன்த்தீ... நல்லாப்பாக்கு ஊச்சி" எனத் தன் தந்தையின் நலத்தை நாடி, அன்பரசியை நச்சரித்தாள்!
சொன்னதையே அவள் ஐந்து முறைக்கும் மேலாக திருப்பிப்படிக்கவும், "உங்கப்பாக்கு ஒரு ஊசியில்லை பத்து ஊசி போடறேன், வரச் சொல்லு" என சோர்வை சிறு எரிச்சலில் கலந்து வெளியிடவும், குழந்தை மிரண்டு போய் தந்தையிடம் சரண் புகுந்தது.

அவளது சோர்வும், எரிச்சலும் வெகு துல்லியமாய் புரிந்ததும், அதற்கு மேல் அவளைச் சோதிக்க விரும்பவில்லை நல்லானந்த்! "என்ன அன்பு? எதுக்கும்மா இவ்வளவு கோபம்? எனக்குத் தெரிந்த அன்பரசி இப்படியில்லையே? தனக்குத் தெரிய வேண்டியதை பட்டுன்னு கேட்டுத் தெரிஞ்சுக்கிற ராகமாச்சே அவங்க? இப்பவும் உன் மனதில் இருக்கிறதை உடைச்சு கேளுமா" என்றான் மென்மையாக.

"அதான் கேட்டேனே? நீங்க தான் சொல்லலை" என்றபோது குரல், லேசாக கரகரத்திருந்தது.

"நான் சிரிச்சதை வச்சே நீ கண்டுபிடிசிருப்பேன்னு நினைச்சேன்." எனத் தான் வாய் திறந்து பதில் சொல்லாததற்கான காரணத்தைக் கூறியவன், "இப்போ என்ன... பதில் தானே வேணும்! சொல்றேன்...கேட்டுக்கோ!" என்றான் அதன் தொடர்ச்சியாய்.

அவனது பதிலிற்காக, குனிந்திருந்த முகத்தை நிமிர்த்தி அவனது கண்களை நோக்க முயன்றவளுக்கு அவனது கண்கள் கூறிய செய்தி பெரும் திடுக்கிடலை ஏற்படுத்தியது. அவனது பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் அவள் தலை குனியவே, மென்புன்னகை பூத்த நல்லானந்த் பேசத் துவங்கினான்.

"என் மனைவி என்ற இடத்தில் இப்போதைக்கு யாருமில்லை. இனிமேல் தான் வரவேண்டும்... கூடிய சீக்கிரமே அந்த இடம் நிரம்பிவிடும்ன்னு நினைக்கிறேன்" என்றான் மிகத் தெளிவாய்.

ஆனால் மிகத் தெளிவாய் சொல்லிவிட்டோம் என நல்லானந்த் எண்ணிக் கொண்டிருக்க, அன்பரசியோ "அப்படின்னா?" எனக் கேட்டு அவனைத் தலையில் அடித்துக் கொள்ளவைத்தாள், மானசீகமாகத் தான்! அவன் தலையில் அடித்துக் கொண்ட அதே வேளையில் அன்பரசிக்கோ தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் தோன்றியது. அதற்கான காரணம் - "மனைவி என்ற இடத்தில் இப்போதைக்கு யாருமில்லை என்றால் முன்னாடி இருந்தார்களா? ஒரு வேளை காலமாகி விட்டார்களோ? மலர் பிறக்கும் நேரத்தில்..." என மீண்டும் கற்பனை மிக வேகமாக இயங்கியது.

அவள் அங்கே குழம்பித் தவிக்க, நல்லாவோ "அறிவுக் கொழுந்து! நீயெல்லாம் எப்படி தான் 5 on CGPA எடுத்தியோ?" என மனதிற்குள் சீராட்டிக் கொண்டே, "அப்படின்னா எனக்குக் கல்யாணம் ஆகலைன்னு அர்த்தம்...என் மனைவி என்று யாரும் இதுவரை இல்லைன்னுஅர்த்தம்" என்றான் சிரிப்புடன் கூடிய அழுத்தத்துடன்.

"ஹோ" என்ற அன்பரசியின் பார்வை மதிமலரின் மேல் படிந்து, அங்கேயே நிலைத்தது.

"ஹ்ம்ம் அடுத்த கேள்வியைக் கேட்டால் பதில் சொல்லுவேன்" எனக் கேள்வி தாளைக் கேட்டுவாங்கும் முதல் மாணவனானான் நல்லானந்த்!

"அப்போ மதி..." என ஆரம்பித்தவள், ஏற்கனவே சிணுங்கிக் கொண்டிருந்த மதிமலர் தன் அழ எத்தனிப்பதைப் பார்த்து, "அப்போ மதிமலர் யாரு? உங்க பொண்ணுன்னு திலோக்கா சொன்னாங்க?" என முடித்தாள். முடித்த நிமிடம்,ஒருவேளை தான் அதிகப்பிரசங்கித் தனமாக நடந்து கொள்கிறோமோ என்ற குற்ற உணர்வை மனதைக் குடைந்தது.

அந்த குற்ற உணர்ச்சியின் விளைவாக, "சாரி. உங்க குடும்ப விஷயத்தைப் பற்றி பேசறதுக்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை. என்னை மன்னிச்சிடுங்க" என்றாள் தடுமாற்றத்துடன்.

அவள் கேள்வியை முடித்ததுமே, பதிலைத் தயார்படுத்திக் கொண்டிருந்த நல்லாவிற்கு முடிவில் அவள் கேட்ட மன்னிப்பு கோபத்தை உண்டு பண்ணுவதற்குப் பதிலாக, அவள் மேல் தான் வைத்திருந்த மதிப்பை அதிகரித்தது. மனதில் வைத்திருக்க முடியாமல், தான் எண்ணியதைக் கேள்வியாய் வெளியிட்டு விட்டாலும், அதை தவறோ என்றுணர்ந்த வினாடி மன்னிப்பை வேண்டிவிட்டாளே என்ற வியப்பும் சேர்ந்து கொள்ள, சிறு புன்னகை மலர்ந்தது அவனுக்கு!

"நீ கேட்டதை நான் தப்பா நினைக்கலை... மேலும் அதை பத்தி உன்கிட்ட சொல்றதில் எனக்கு எந்த பிரச்சனையுமில்லை. வீணா குழம்பாதே!" என்றவன், தன் சட்டையைப் பிடித்து இழுத்தவாறே சிணுங்கிக் கொண்டிருந்த மகளைக் கண்களாலும் கைகளாலும் ஒரு முறை வருடிவிட்டான்.

தான் செய்வது தவறோ என்றுணர்ந்த வினாடி, மன்னிப்பை வேண்டிய அன்பரசிக்கும் மலரைப் பற்றி அறிந்து கொள்ள மனம் துடிக்கத் தான் செய்தது. அவன் மணமாகாதவன் என்பது வேறு பெரும் குறுகுறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அவனே சொல்கிறேன் எனும்போது அதை கேட்டால் என்ன தப்பு? எனத் தோன்றிவிடவே, அவன் முகத்தைக் கூர்ந்து கவனிக்கலானாள் அன்பரசி!

"அன்பரசி, இப்போ நான் உன்கிட்ட சொல்லப் போற விஷயம் எக்காரணத்தைக் கொண்டும் வெளியாள் யாருக்கும் தெரியக்கூடாது! அது மட்டுமில்லாம, எந்த ஒரு சந்தர்ப்பத்திலையும் மலர்குட்டிகிட்ட இதை பத்திப் பேசக் கூடாது. இந்த ரெண்டு வாக்குறுதியையும் நீ எனக்குக் கொடுக்கிறதா இருந்தா, நாம மேலே பேசலாம்" என்றவனின் குரலில் தெரிந்த தீர்மானம், அவளையும் அறியாமல் தலையாட்ட வைத்தது. அது மட்டுமில்லாமல் "கண்டிப்பா சொல்லமாட்டேன்" என்ற வாக்குறுதியும் கூடவே வந்து விழுந்தது!

"தேங்க்ஸ்" என்ற நல்லா, "போவாம்... போவாம்" எனத் துடித்த மகளை மீண்டும் தன் கட்டுபாட்டுக்குள் கொண்டுவர முயன்றான். அவனையும் மீறி அவள் படுத்தவே, "மதி" என ஓங்கி ஒலித்தது ஓர் அதட்டல்.

"அதட்டாதீங்க! பாவம் குழந்தை உள்ளதே அழறா... நீங்களும் அதட்டினா எப்படி?" என உருகிய அன்பரசி, "குட்டிமா, இங்க வாடா" எனக் குழந்தையின் புறம் கை நீட்டினாள். ஆனால் தந்தையின் அதட்டலில் வந்த அழுகை உள்ளே சென்றுவிட, பரிதாபமாய் நின்றிருந்த மதிமலரோ அவள் புறம் கண்ணைக் கூடத் திருப்பவில்லை. தன்னைத் தீர்க்கமாய் பார்த்துக் கொண்டிருந்த தந்தையையே பரிதாபமாய் பார்த்துக் கொண்டிருந்தது மான் விழி கொண்ட மலர்!

அவளது பார்வையைக் கண்டு மனம் மேலும் இளக, நல்லாவின் மேல் கோபம் கோபமாய் வந்தது அன்பரசிக்கு.

குழந்தையின் அழுகையை நியாயப்படுத்தும் நோக்கத்துடன் "ஒருவேளை...அவளுக்குப் பசியோ என்னவோ?" என்றவள், "குட்டிம்மா... பிஸ்கட் சாப்பிடுறீங்களா? மில்க்பிக்கீஸ் தரவா?" என வினவினாள். வினவளோடு நிறுத்திக் கொள்ளாமல், அவள் கைப்பிடித்து தன் புறம் திருப்பவும் செய்தாள்.

அதில் கோபம் கொண்ட மதிமலரோ "வேணாம் போ..." என அலறி, அவளது வலது கையில் ஓங்கி அடித்தாள். குழந்தை தான் என்றாலும், எலும்புகள் முறிந்திருந்த கையில் அவளது மென்கரங்கள் வேகமாய் விழுந்ததும் "சுர்"ரென வலி எடுத்துவிட "ஆ" என லேசாக முனங்கினாள் அன்பரசி!

வலியைக் காட்டிய அன்பரசியின் முகத்தைக் கண்டதும், "மதி" என்ற அடுத்த அதட்டல் மலரின் தந்தையிடமிருந்து பிறந்து வந்தது. மேலும், "என்ன பழக்கம் பழகியிருக்கே? அவங்ககிட்ட சாரி கேளு" என்றான் அவன், முகம் மாறாமல்.

அன்பரசி "ஆ" என முனங்கியதுமே, தான் செய்தது தப்போ என எண்ணிக் கொண்டிருந்த குழந்தை, தந்தையும் அதட்டவே "சாரி" என்ற சொல்லை வேகமாய் உதிர்த்துவிட்டு, அறைவாசலுக்குச் சென்று கதவைத் திறக்க முயன்றாள். அவளது பிஞ்சு கரங்களால் அது முடியாமல் போகவே, அறையின் ஒரு பக்க மூலையில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"அச்சோ... மதி குட்டி, இங்க வாங்கடா! அங்க ஒரே அழுக்கா இருக்கும்டா" எனத் துடித்த மனதுடன் அன்பரசி எழ, அவளது கைகளைப் பிடித்து தடுத்த நல்லானந்த் "உட்கார் அன்பு. அவ வருவா" என்றான் அதே தீர்க்கமான முகத்துடன்.

அவனை முறைத்தவாறே அமர்ந்த அன்பரசி அவனது ஸ்பரிசத்தை உணரும் நிலையில் கூட இருக்கவில்லை. அவளுக்குக் கோபமாய் அமர்ந்திருக்கும் மதிமலரின் மீதே கவனம் இருந்தது.

"அன்பு" என இரு முறை அழைத்த நல்லானந்த், மூன்றாவது முறை "அன்பரசி" என்றான் அழுத்தமாக.

"என்ன?" என்றபோது குரலில் கோபம் அவளையும் மீறி தெரிந்தது. மலரின் கோபமும் அன்பரசியின் கோபமும் ஒரே ரகமாய் இருக்க, நல்லானந்திற்கு சிரிப்பு வந்தது. ஆனால் அதை காட்டினால் மலரைப் போல் இவளும் இன்னொரு மூலையில் அமர்ந்து கொள்வாளோ என்ற எண்ணமும் சிரிப்பையே வரவழைக்க, அதை அடக்குவது பெரும்பாடாய் இருந்தது.

"எப்போ பார்த்தாலும் உங்களுக்கு என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கு? பிள்ளை பாவம்... அழறாளே!!" எனத் தாயாய் தவித்தது மனம்.

"நீ உடனே போய்  கெஞ்சினா திரும்பவும் இதே தப்பை பண்ணுவா... கொஞ்ச நேரம் பேசாம இருந்து பாரு, அவளே வருவா" என மகளை அறிந்தவன் போல் அவன் கூறவும், "ஹுக்கும்" எனத் தலையை சிலுப்பியவளைப் பார்க்க, மதிமலரின் அம்மாவாய் - தன் மனைவியாய் இருக்க அவளது சம்மதம் உடனே கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை அவனுக்குத் தோன்றியது.

"சரி, மலரைப் பத்தி தெரியணுமா வேண்டாமா? அதற்கு அப்புறம் இன்னொரு முக்கியமான முடிவும் எடுக்கணும். அதனால நான் சொல்றதை முதல கேளு... அப்புறம் மலரைப் பார்க்கலாம்" என்றவனை மறுத்துப் பேசத் துணிவில்லாமல், மலரைப் பற்றிய உண்மை அறிய மனம் துடித்தது.

மலரைப் பார்த்த நிலையிலேயே அமர்ந்தவள், "சொல்லுங்க" என்றாள் கண்ணை மட்டும் நல்லாவின் புறம் திருப்பி.

அதற்கும் அவன் சிரிக்க, "இன்னொரு தடவை சிரிச்சீங்க...." என்றபோது அவளது

பொறுமை போவது புரியவே, அதற்கு மேல் வம்பு வளர்க்காமல் பேச ஆரம்பித்தான் நல்லானந்த்.

அவன் "நான் மதிமலரை தத்து எடுத்தேன்" என்றபோது மதியை விட்டு நல்லானந்திடம் நகர்ந்த அன்பரசியின் முகம், அவன் தொடர்ந்து கூறிய "இரண்டு வருஷம் முன்னாடி... இந்தோனேசியாவில்" என்ற தகவல் அவளது பார்வையை நிலைகுத்தி நிற்க வைத்தது.

"இந்தோனேசியாவில் தத்து எடுத்தேன்" என்ற தகவல், அன்பரசியின் முகத்தில் பெரும் வியப்பு , தாய்க்கும் மதிக்கும் இருக்கும் ஒற்றுமையால் வெளிப்பட்ட கணக்கிடல், இது எப்படி சாத்தியமாகும்? ஒருவேளை...ஒருவேளை...அவர்களோ? என்பதுபோன்ற அதிர்ச்சி என எல்லாவற்றையும் காட்டியது.

அவளது முகத்தில் தோன்றிய அதிர்ச்சியின் அளவு நல்லானந்தை லேசாக வியப்படைய செய்தாலும், தான் ஒரு குழந்தையின் தகப்பன் என்ற செய்தி அவளை அதிர்ச்சியுற செய்துவிட்டதோ? இவ்வளவு நேரம் மதிமலரின் பால் தோன்றிய பிரியம் பொய்யா? தனது கணிக்கும் திறமை குறைந்துவிட்டதா? என்றெல்லாம் மனம் நோகச் செய்தது.

ஆனால் தொடங்கிவிட்டதை பாதியில் நிறுத்த மனமின்றி அவன் அவள் முகம் பார்த்திருக்க, அங்கேயும் தொடங்கிவிட்டதை முடித்துவிடேன் என்ற உணர்வே தென்பட்டது.

தன் கடமைக்கு சொல்ல வந்ததை சொல்லிவிட வேண்டும் என்ற முடிவிற்கு வந்த நல்லானந்த், முகத்தில் சோர்வை விலக்கி மலரின் வரவை விவரிக்க ஆரம்பித்தான்.

இரண்டு ஆண்டுகள் முன்னரிருந்த தனக்கும், இப்போதிருக்கும் தனக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தவன், அதிலிருந்தே தொடங்கலாம் என்றெண்ணினான். மேலும் அன்பரசியிடம் மறைக்க வேண்டிய விஷயமென்று தன் வாழ்வில் ஏதுமில்லை என்ற எண்ணமும் அதற்கு ஒத்தூதியது.

"மலர் என் வாழ்விற்குள் நுழைந்ததை பார்கிறதுக்கு முன்னாடி அந்த நேரத்தில் என்னோட வாழ்க்கை முறையைப் பத்தி நீ தெரிஞ்சுக்கணும் அன்பு!" என்றவன், அவளது "ம்" என்ற சம்மதம் வரவும் தடையற்ற நதியாய் வார்த்தைகளை ஓடவிட்டான்.

"இப்போ இருக்கும் எனக்கும் அப்போ இருந்த எனக்கும் நிறைய வித்தியாசங்கள். அப்போவும் நான் வாழ்க்கையை அனுபவிச்சு தான் வாழ்ந்தேன்! இளமை கால அனுபவம்...இப்போவும் வாழ்க்கையை ரசிச்சு தான் வாழ்றேன்! ஆனால் அந்த லயிப்பிற்கும், இப்போதிருக்கும் ரசிப்பிற்கும் நிறைய வித்தியாசங்கள். அது ஒரு மாயை... இது நிலையான சந்தோஷம்" என அன்றிற்கும், இன்றிற்கும் ஆறு வித்தியாசம் தேடினான்.

தனது தாய்க்கும் மகளுக்கும் உள்ள ஒற்றுமையை தனக்குத் தெரிந்த தகவல்களைக் கொண்டு இணைத்து, தன்னால் முடிந்த அளவில் ஒரு கதையை கோர்த்து வைத்திருந்தவள், நல்லாவின் பேச்சைக் காது கொடுத்து கேட்க துவங்கினாள்.

தன் வாழ்வின் ஆறு வித்தியாசங்களைத் தானே தேடுவதற்குப் பதிலாக தன் இளமை காலத்தைச் சுருக்கமாக சொல்லிவிட்டு, அவளையே வித்தியாசம் கண்டுபிடிக்கச் சொல்லலாம் என்றெண்ணினான்.

ஆனால் என்ன எண்ணினாலும், என்ன முடிவு செய்தாலும் எங்கிருந்து, எப்படி துவங்குவது என்றே அவனுக்குத் தெரியவில்லை! ஐந்து நிமிட அமைதிக்குப் பின்னர் திலோவிடமிருந்தே துவங்கலாம் என்ற நோக்கத்துடன், "அன்பு, உனக்குத் தெரியுமான்னு எனக்குத் தெரியல. நானும் திலோவும் கிளாஸ்மேட்ஸ். அவ மட்டுமில்லைன்னா முழுசா கேட்டுக் கழுதையாகிப் போயிருப்பேன்!" என்றான் நல்லா.

"ஸ்கூல்-லேவா?" எனக் கேள்வி கேட்டு, "இல்ல காலேஜ்மேட்ஸ்" என்ற நல்லா, தன் இளமை காலத்தை விவரிக்கத் தொடங்கினான்.

பிறப்பிலேயே பணம் படைத்த் குடும்பத்தில் பிறந்த அவன் ஒன்று கேட்டு, அதற்கு "இல்லை" என்ற சொல்லே வெளிவந்ததில்லை. கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்து அவனையும் அவனது அண்ணனையும் ராஜகுமாரர்கள் போல் தான் வளர்த்து வந்தனர் அவனது பெற்றோர். தந்தையேனும் அவ்வப்போது கண்டிப்பார் என்றாலும் தாயிடமிருந்து ஒரு சுடு சொல் கூட உதிர்ந்ததில்லை.

இருவருமே பணத்தின் மதிப்பறியா கன்றுகளாய் சுற்றி கொண்டிருக்க, தந்தையின் கணக்காய்வாளர் தொழிலில் புகும் ஆர்வத்தில் அகில இந்திய அளவில் கணக்காய்வாளர்கள் அமைப்பின் கல்வி நிறுவனக் கிளைகளுள் ஒன்றான பூனே

கிளையில் சேர்ந்தான் தேவநந்தன்.

ஆனால் நல்லானந்தோ படிப்பை விட விளையாட்டிலும் நண்பர்களுடன் ஊர் சுத்துவதிலும் முனைப்பாய் இருக்கவே, சென்னையில் இருக்கும் ஓர் பொறியியல் கல்லூரியில் பணம் கொடுத்து இடம் வாங்கும்படி ஆயிற்று.

இந்த இடத்தில ஓர் இடைவெளி விட்ட நல்லானந்த், "அப்போ கூட அப்பா என்னையும் தேவ்வையும் கம்பேர் பண்ணினதில்லை தெரியுமா? யாராவது ஏதாவது சொன்னா கூட - இரண்டு பசங்களையும் ஒருத்தரோட ஒருத்தர் ஒத்துப் பார்த்தா அவங்க ரெண்டு பேரும் எப்படி ஒத்துமையா இருப்பாங்க? நாமளே அவங்களுக்குள்ள போட்டியையும் பொறாமையையும் தூண்டிவிடக் கூடாதுன்னு சொல்லிடுவார்... இப்போ நாங்க ரெண்டு பேரும் ஃபிரண்ட்ஸ் மாதிரி இருக்கோம்ன்னா அதுக்கு முக்கியக் காரணம் அப்பா தான்" எனத் தந்தையின் பங்கை அழுத்தமாய் எடுத்துரைத்தான்.

அதை கேட்டிருந்த அன்புவோ, தன் தந்தை என்ற பொறுப்பில்லாத மனிதனிடம் பயணித்தாள். உலகத்திலிருக்கும் ஆண்கள் அனைவரையும் தந்தை மற்றும் நித்யாவின் தாத்தா போன்றவர்களின் அச்சாகப் பார்த்திருந்தவளுக்கு, சத்யசேகரன் மற்றும் அவளது நண்பர்களே விதிவிலக்காய் இருக்க, இப்போது தன் நினைப்பில் மாற்றம் வந்துவிடுமோ என்ற சந்தேகமும் கூடவே இருந்தது.

அவளது எண்ணத்தை முகம் கண்ணாடியாய் காட்டிவிட, "என்னம்மா?" என்றான் நல்லா, அன்பைக் கண்ணில் தேக்கி!

"ம்ம்...ஒண்ணுமில்லை. என் அப்பா..." என்றவளுக்கு பேச்சு தடைபெற்று, குரல் கரகரத்தது. "சாரிமா, என்னைப் பற்றி சொல்றேன்னு உன்னோட துன்பத்தைத் தூண்டிவிட்டுட்டேனா? அப்பா நியாபகம் வந்துடுச்சா?" என நல்லா வருத்தம் கொள்ள,

"இல்ல, அப்பா நியாபகம் வரலை. அம்மா பட்ட கஷ்டம் தான் நியாபகம் வந்துடுச்சு" என்றபோது குரலில் அப்பட்டமான வெறுப்பு தெரிந்தது.

அவளது வெறுத்த குரலில் துணுக்குற்றாலும், அவளது துன்பம் நல்லாவை பாதிக்க, அவளது கையை மெல்ல அழுத்திக் கொடுத்து தன் ஆறுதலைக் கூறினான் நல்லானந்த்.

அவளது இளமை காலம் இனிக்கத் தக்கதாய் இருக்கவில்லை என்பது புரிந்தபோதிலும், அதை பற்றி கேட்டு அவளை மேலும் துன்புறச் செய்யவிரும்பாமல் வாளா இருந்தான் அவன்.

சில நிமிட அமைதிக்குப் பின்னர், "சொல்லுங்க" என அவனை மீண்டும் பேச வைத்த அன்பரசி, அவன் பேச ஆரம்பிக்கும் முன்னர் "குட்டியைக் கூப்பிடுங்களேன்! பாவமா இருக்கு" என்றாள் மீண்டும் ஓர் முயற்சியாய்.

அவளது சொல்லை மீள முடியாமல், மகளின் புறம் கண்களைத் திருப்பிய நல்லாவைக் கண்டதும், முகத்தை சுவற்றோடு ஒட்டிக் கொண்டு தன் கோபத்தை வெளிக்காட்டினாள் மகள். அவளது அந்த செய்கை சிரிப்பை வரவழைக்க, "இன்னும் அஞ்சே நிமிஷத்தில் மேடம் இங்க வருவாங்க. நீ கவனி" என மகளின் வரவிற்கு முன்னிருந்த தன் வாழ்வை விவரிக்கத் தொடங்கினான்.

இரண்டாண்டு வித்தியாசத்தில் பிறந்த சகோதரர்கள் இருவரும் கல்லூரி படிப்பைத் துவங்கியிருக்க,  கணக்காய்வாளர் படிப்பை தேவ்வும், பொறியியல் படிப்பை நல்லாவும் செவ்வனே படித்துவந்தனர். இருவருக்கும் இருந்த ஒரே வித்தியாசம் - தேவ் படிப்பில் கவனம் செலுத்தினான் என்றால் நல்லா தன் நண்பர்களிடம் கவனம் செலுத்தினான்.

பள்ளி காலம் வரை ஆண் நண்பர்களை மட்டுமே தன் வட்டத்திற்குள் வைத்திருந்த நல்லானந்திற்கு, கல்லூரியில் திலோவின் நட்பு ஒரு வரமாய் கிடைத்தது. ஆம் வரம் என்று தான் சொல்ல வேண்டும்!

வீட்டில் அவனுக்குக் கிடைக்காத கண்டிப்பை அவள் கல்லூரியில் காட்டினாள். முதலில் "இவள் என்ன என்னை ஏவுவது?" என்று திமிராய் இருந்த நல்லாவும், நாளிடைவில் அவள் கூறுவதில் இருக்கும் உண்மையை உணர்ந்து நடக்க ஆரம்பித்தான்.

நல்லானந்தின் கல்லூரி வாழ்வு இவ்வாறு செல்ல, பூனே-யிலிருந்த தேவநந்தனோ உலகை உணரத் தொடங்கியிருந்தான். கணக்காய்வாளர் படிப்பில் செலுத்த வேண்டிய கூடுதல் கவனமோ, அங்கே அவன் கண்ட வெளியுலகமோ, அவனுடன் பயின்ற ஏழை மாணவர்களோ, படித்த படிப்பின் மூலமாக அவன் புரிந்துகொண்ட தந்தையின் கஷ்டங்களோ - இவற்றுள் ஏதோ ஒன்று அவனை மெருகேற்றியது என்று தான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால், தன் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு தாய்வீடு திரும்பியவனோ, ஒரு வாரத்திற்கு ஆயிரத்திற்கும் மேலாக கை செலவிர்க்கென பணம் கேட்ட தம்பியை தட்டிக்கேட்டான். ஆனால் இளம் கன்றோ, மூத்த காளையை தாயின் உதவி கொண்டு ஏறி மேய்ந்தது.

ஆனால் பெரியவனின் கண்டிப்பால் தடித்து, துடித்த வாக்குவாதத்தை ஒரு நிலைக்குக் கொண்டுவந்தவளும் திலோ தான்!

நல்லாவின் தோழி என்ற முறையில் அடிக்கடி அவர்கள் வீட்டிற்கு வந்த திலோத்தமை தான், ஊரிலிருக்கும் அனைத்து கெட்டப் பழக்கங்களையும் சுவைத்திருந்த தம்பியை தன் சொற்களால் கட்டிப் போட்டிருக்கிறாள் எனத் தெரிந்ததும், அவளிடம் தன் காதலைச் சொல்லி, ஒரே  மாதத்தில் சம்மதமும் பெற்றான் தேவநந்தன்.

தேவநந்தன் - திலோத்தமை இருவரின் காதல் விஷயத்தைவிட, அவன் கெட்ட பழக்கம் எனக் கூறியது மட்டுமே மனதை வெகுவாக குடைய "கெட்டப் பழக்கம்ன்னா?" என்றாள் அன்பரசி, லேசான கோபம் கலந்த எதிர்பார்ப்புடன்.

அவளது எதிர்பார்ப்பை விட, கோபத்தில் மனம் லேசாக "தம், தண்ணி...பெட் கட்டி பைக்-ல ரேஸ்... அப்புறம் டேடிங்" என நல்லா தொடங்க, "கருமம்" என்றாள் அன்பரசி.
"நான் இன்னும் முழுசா சொல்லி முடிக்கல அன்பு! "களவும் கற்று மற" என்பதற்கு ஏற்ப, எதையுமே ஒரு முறை செய்து பார்த்தால் என்ன? என்ற எண்ணத்தோட தான் முன்னாடியிருந்தேன். the same applies to dating as well. ஆனா அந்த தப்பையும் என் லிஸ்டில் சேர்க்கவிடாமல் செய்தது திலோ தான்! என்னோட ஒரு வாரம் பேசாம இருந்து, அண்ணன்-அப்பா ரெண்டு பேருகிட்டயும் போட்டுக் கொடுத்து, கடைசியா நான் டேட் பண்ண இருந்த பொண்ணோட சுய ரூபத்தை எடுத்துக் காட்டி... ரொம்ப கஷ்டப் பட்டு என்னை வெளிய கொண்டுவந்தா..." என அவன் முடித்தப் போது, அன்பரசியின் மனம் திலோத்தமைக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்தது.

தனது கல்லூரி நாட்களைப் பற்றின விவரிப்பை நல்லா முடித்தப்போது, அவனது மகள் தன் பிஞ்சு கால்களால் பூனை நடையிட்டு, தந்தையின் பின்புறம் வந்து அவன் முதுகை ஒட்டி நின்றுகொண்டாள்.

"மலர் குட்டிக்கு கோபம் போயாச்சா?" என்ற சொல்லோடு, இரு கைகளையும் பின்னே கொண்டு சென்று அவளைத் தன் மடிக்கு இடமாற்றினான் தந்தை.

மகளைப் பற்றிய நல்லானந்தின் கணிப்பை உள்ளுக்குள் மெச்சியவாறே அன்பரசி அமர்ந்திருக்க, நல்லாவின் மடிக்கு வந்த மதிமலரோ அவள் புறம் திரும்பவே இல்லாமல், தந்தையின் பரந்த மார்பில் தன் முகத்தை மறைத்துக் கொண்டாள். அவளது சின்னச் சின்ன அசைவுகளும் தனக்குள் ஓர் மாற்றத்தை உண்டு பண்ணுவதை உணர்ந்த அன்பரசியின் கைகளோ, மதிமலரை ஆரத் தழுவிக் கொள்ளத் துடித்தன! துடிப்பை அடக்கும் வழி தெரியாமல், மலரைத் தன் புறம் திருப்ப அவள் முயல, அவளோ 'போ' என உதறினாள்.

"உன்னைப் புதுசா பார்க்கிறா இல்ல, அதுதான் கொஞ்சம் hesitate பண்றா! சீக்கிரம் சரியாகிடும்" என்ற நல்லா, மகளையும் கூடவே அன்பரசியையும் உணவுண்ணுமாறு கூறினான்.

அன்பரசிக்கோ மதிமலரின் வரவைப் பற்றிய உண்மை பசியை அடக்கியிருக்க, மதிமலரோ தன் கோபத்தை உணவின் மேல் காட்டி, இடமும் வலமுமாய் தலையசைத்தாள். ஐந்து நிமிடநேரம் அவளைச் சாப்பிடுமாறு கெஞ்சிய தந்தை, அதன் பின்னர் அவள் போக்கிலேயே விட்டுவிட்டு, காத்திருந்த அன்பரசியிடம் வந்தான்.

கல்லூரி படிப்பு முடிந்தவுடன் திலோவிற்கும் அவனுக்கும் ஒரே நிறுவனத்தில் கிடைத்த வேலை, அதன் பின்னர் ஒரே மாதத்தில் நடைபெற்ற திலோ-தேவ் திருமணம், ஒரே ஆண்டில் பிறந்த அகிலன், அகிலன் பிறந்த இரண்டாம்வருடம் திலோவிற்குக் கிடைத்த வெளிநாட்டு வாய்ப்பு, எல்லாவற்றிற்கு நடுவிலும் வாழ்வில் ஓர் பிடிப்பின்றி சுற்றி கொண்டிருந்த தான் என வேகமாய் பயணித்து வந்தான் நல்லானந்த்!

"நல்ல வேலை, கை நிறைய சம்பளம், அன்பான குடும்பம், நிரம்பி வழிந்த நண்பர்கள் - இப்படி எல்லாம் இருந்தபோதும் எனக்கு வாழ்க்கையில் ஓர் பிடிப்பே இல்லை! என் போக்கிற்கு சுற்றி திரிஞ்சிருக்கேன்! எனக்குன்னு ஒரு லட்சியம், அதை நிறைவேற ஏதாவது ஓர் முயற்சி - இப்படி எதுவுமே இல்லை! ஏன்னா நான் நினைச்சதை என்னால எந்த தடையுமில்லாம நிறைவேத்திக்க முடிஞ்சதால தான் போல!" எனத் தன் வாழ்க்கை முறையை அன்பரசியிடம் பகிர்ந்துகொண்டவன், முடிவில் தனக்கு இரண்டாண்டுகள்

முன்னர் "தமிழரசி" என்ற பெண்ணுடன் நிச்சயம் நடந்ததாக கூறி, அன்பரசியை அதிர்ச்சியில் ஆழ்த்தினான்.

அவனேக்கென்று ஒரு குடும்பம் வந்துவிட்டால் அவனது பொறுப்பற்ற தன்மையை மாற்றிவிடலாம் என்ற எண்ணத்தில் அவனது குடும்பம், இந்த ஏற்பாட்டை செய்ததாக கூறியது எதுவுமே அன்பரசியின் மனதில் பதியவில்லை.

"அன்பு" என அவன் இரண்டாம் முறையாக அழைத்தப்போது தான், தனக்கு மனைவி என்று யாருமில்லை என அவன் கூறியது நினைவு வந்து அன்பரசியை ஒழுங்காக மூச்சு விட வைத்தது. ஆனாலும் மனதை ஏதோ ஒன்று பிசைய, "ஹோ, இப்போ அவங்க எங்க? கல்யாணம் ஆகலைன்னு சொன்னீங்களே?" எனத் தன் அரைகுறை சந்தேகத்தையும் தீர்த்துக் கொள்ளும் எண்ணத்தில் அவனை வினவினாள் அன்பரசி!

"ஹ்ம்ம், ஆமா நடக்கலை" என்றவன், "அது ஏன்னு தெரியனும்ன்னா நான் மலரைப் பார்த்ததை நீ தெரிஞ்சுக்கனும்" என்றுரைத்து மீண்டும் பின்னோக்கி நகர்ந்தான்; எண்ணத்தினால் பின்னோக்கி!

"கல்யாணத்திற்கு ஒரு மாசம் முன்னாடி ஃபிரண்ட்சோட தெற்காசிய நாடுகளுக்கு ஒரு ட்ரிப் போயிருந்தேன். எங்களோட ட்ரிப்-பின் கடைசி இடம் இந்தோனேசியா. அங்க ஒரு வாரம் தங்கி, ஊர் சுத்திப் பார்த்திட்டு இந்தியா திரும்புறதா இருந்த எங்க திட்டத்தை அடியோடு தகர்த்தது - இந்தோனேசியாவை ஆட்டி வச்ச சுனாமி" என நல்லானந்த் அறிவித்தப் போது, அன்பரசியின் மூச்சு நின்று போனது.

இம்முறை அவளது அதிர்ச்சியை கவனிக்காத நல்லானந்த், தன் போக்கில் பேசிக் கொண்டே சென்றான்.
"சுமத்ரா island -ல ஒரு பீச்ல நாங்க இருந்தபோது தான் சுனாமி வந்தது. கொஞ்சமும் எதிர்பார்க்காத நேரத்தில் அலையடிக்க, நிமிஷத்தில் நிறைய விஷயங்கள் நடந்திடுச்சு!" என்ற நல்லாவின் கண்கள், அந்த கோர காட்சியை மீண்டும் கண்டன.

ஆயிரமாயிரம் அடி உயரத்தில் படையெடுத்து வந்த அலைகளை எதிர்பார்க்காத மக்கள், தத்தம் உயிரைக் காத்துக் கொள்ளும் முயற்சியில் தத்தளித்தது மனதை இப்போது புரட்டிப் போட்டது. ஆண்டு கணக்காய் உள்ளுக்குள் வைத்துப் புகைந்து கொண்டிருந்த கடல் தாய், இறுக்கம் தாளாமல் தன் வெறுப்பை அலையாய் வெளியிட்டதை எண்ணி மனம்

பதைத்தது. இது போல் ஒரு துன்பம் தன் எதிரிக்கும் வரக்கூடாது என்ற எண்ணத்துடன், தன்னிலை விளக்கத்தைத் தொடர்ந்தான் நல்லானந்த்.

"ஒரு பெரிய அலை... அடுத்து என்ன செய்றதுன்னு நினைக்கிறதுக்கு முன்னாடி நான் எங்கேயோ போயிட்டு இருக்கேன்... சில நிமிடத்தில் கண்ணெல்லாம் இருட்டிட்டு வந்தது... ஆனா என்னோட கை மட்டும் எதையோ இருக்கப் பிடிச்சிருந்தது. அது என்னன்னு உணருவதற்கு முன்னாடி மயக்கம் வந்துடுச்சு போல. என் குடும்பத்தை விட்டு எங்கேயோ ஓர் இடத்தில என்னோட உயிர் பிரிஞ்சுவிடப் போகுதுன்னே நினைச்சிட்டே மயக்கத்திற்குப் போயிட்டேன்" என்றவன் சிறு இடைவெளி விட்டான்.

"ஒரு நாளோ...அரை நாளோ கழிச்சு நானா முழிச்சுப் பார்த்தப்போ என் இடது கையில் ஒரு குழந்தை...அன்பு! கண்கள் மூடி...உதட்டில் சிரிப்போட...கடவுளே! அந்த நொடி நான் கதறின கதறலை என்னால மறக்கவே முடியாது" என்றபோது அவன் கண்களிலிருந்து இரு பெரிய நீர் மணிகள் உருண்டோடின.

"என் உயிரை எடுத்துக்கிட்டு அந்த குழந்தையை காப்பற்றியிருக்கக் கூடாதான்னு மனம் என்னமா தவிச்சது தெரியுமா? கை ரெண்டும் நடுங்க, கண்ணில் தண்ணி ஆறாய் ஓட, குழந்தையை நெஞ்சோடு சாய்த்தால் ரொம்ப லேசா கேட்டது அவளோட இதயத் துடிப்பு" என்றவன், இப்போதும் அதே நிலையில் தன் மீது சாய்ந்திருந்த மகளை இறுக அணைத்துக் கொண்டான்.

தன்னை மீண்டும் பிறக்க வைத்த தன் மகளை உச்சி முகர்ந்தவன், "பொதுவா... பெண்களுக்குத் தான் பிரசவம் மறு ஜென்மம்-ன்னு சொல்வாங்க! ஆனா ஒரு ஆணா நான் மறு ஜென்மம் பெற்ற வினாடி எனக்கொரு பெண் பிறந்திருந்தாள்" என்றபோது கண்ணில் வடிந்த கண்ணீர், ஆனந்தமாய் தித்தித்தது நல்லாவிற்கு.

குழந்தையின் மெல்லிய இதயத் துடிப்பைக் கேட்டதும், தான் தூக்கி எறியப்பட்ட ஓர் உயரமான கட்டிடத்திலிருந்து பெருமுயற்சி செய்து வேகமாக வெளியே வந்தது, அங்கிருந்த சொற்ப மருத்துவர்களை ஒவ்வொருவராய் கெஞ்சி... குழந்தையை அவர்களிடம் ஒப்படைத்தது, அவர்கள் குழந்தையின் உயிருக்கு ஆபத்தில்லை என சொல்வதற்கு எடுத்துக் கொண்ட இரு தினங்களையும் தூக்கமின்றி கழித்தது என ஒவ்வொன்றையும் விளக்கியவனின் கண்களில் அன்றைய தினத்தின் வலி அப்பட்டமாய் தெரிந்தது.

அவனது வலியை போக்கும் வழி தெரியாமல், அதே வலியை தானும் அனுபவித்தவாறு அவனையே பார்த்திருந்தாள் அன்பரசி! ஆம், அவன் அனுபவித்த ஓரோர் துளியையும் அவளும் கடந்து வந்திருக்கிறாளே! அந்த துயரத் துளிகளை எப்படி மறக்க முடியும்?

"குழந்தையோட உயிருக்கு எந்த ஆபத்துமில்லைன்னு தெரிஞ்சது ஒரு சின்ன சந்தோஷத்தைக் கொடுத்தாலும்...என்னோட வந்த யாரையுமே என்னால திரும்பப் பார்க்க முடியல! அங்க இருந்த எல்லா மருத்துவ முகாமிலும் அவங்களைத் தேடித் தேடி மனம் நொந்து போனது தான் மிச்சம்... அவங்க கிடைக்காதது மட்டுமில்லாம... எத்தனை உயிர்கள்...எத்தனை காயங்கள்...உயிர் போகும் அழுகைகள்.... உயிர் தொலைத்த கதறல்கள்..." என்றவனின் குரல் உடைந்து போயிருந்தது.

"குழந்தையை கையில வச்சுக்கிட்டு அவங்களைத் தேடி அலைஞ்ச வினாடிகள் நரகம் அன்பு! பசியில் அழும் குழந்தைக்கு பால் கூட கிடைக்கல... பால் கிடைச்சா அதை கொடுக்க பாட்டில் இல்லை... கப்பில் கிடைக்கும் பாலை கொஞ்சம் கொஞ்சமா புகட்டி முடிக்கிறதுக்குள்ள அதில முக்கால் வாசி கீழ சிந்தியிருக்கும்... திரும்ப வாங்குறதுக்குள்ள அந்த முகாமில் உணவு காலியாகியிருக்கும்... கடையில் வாங்கித் தரலாம் என்றால் கையில் காசுமில்லை... காசு இருந்திருந்தாலும் அதை வாங்க கடையும் இருக்கல... கொடுமையான சூழல். அவள் அடுத்து அழுவதற்குள் வேற ஏதாவது முகாமிற்குப் போய் ஏதாவது வாங்கி வைக்கணும்... கூட வந்தவங்களைத் தேடனும்... அதுக்கும் மேலா, கையிலிருக்கும் குழந்தையின் அடையாளங்களைச் சொல்லி யாராவது புகார் கொடுத்திருக்காங்களான்னு விசாரிசிட்டே இருக்கணும்... இதுக்கு நடுல இந்தியாவிற்கு என்னால எந்த வகையிலும் தகவல் சொல்ல முடியல... வாழ்வில் நான் பட்ட முதல் அடி - மரண அடியா இருந்து என்னை மீட்டெடுத்தது" என அவன் முடித்தப் போது, மலரின் மலர் கரங்கள் தந்தையின் கண்ணீரை மெல்லத் துடைத்துக் கொண்டிருந்தன.

அவனிடமிருந்து இன்னும் சில விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டுமென துடித்த மனதை அடக்கி, "மதிமலரோட அப்பா-அம்மா வரலையா?" என்றபோது அன்பரசியின் குரலில் பெரும் தவிப்பிருந்தது.

அந்த தவிப்பை மதிமலரின் மேல் அவள் கொண்ட பாசத்தால் விளைந்தது என்று நினைத்த நல்லானந்த், அங்கிருந்த காவல் துறையினர், தனித்து செயல்பட்ட பாதுகாப்பு அமைப்பு மற்றும் அரசு அலுவலர்கள் என அனைத்து அமைப்புகளிடமும் தான் புகார் கொடுத்ததாகவும்,  அதற்கும் மேலாக தினம் இருவேளை மலரைத் தேடி யாரும்

வந்தார்களா எனத் தெரிந்து கொள்வதற்காக அங்கிருக்கும் முகாம்களுக்குச் சென்றதாகவும் கூறினான்.

"கிட்டத்தட்ட பதினைந்து நாள் நானும், என் பெண்ணும் அந்த அவலத்தில் இருந்தோம்... ஒருத்தருக்கு ஒருத்தர் துணையா! சாப்பிட சாப்பாடில்லாம, தூங்க இடமில்லாம, எப்போ அலையடிக்குமோ என்ற பயத்தில்... ஹப்பா!" என்றவனிடம்,

"இங்கிருக்கவங்க பதறி துடிச்சுப் போயிருப்பாங்களே!" என்றாள் அன்பரசி, வேதனையுடன்.

"ஆமா! அம்மா, அப்பா, தேவ் - எல்லாரும் ஒரு விதத்தில் கஷ்டப்பட்டாங்க என்றால்... ஒரு ப்ராஜெக்ட்காக சிகாகோ போயிருந்த திலோ ரொம்பவே கஷ்டப்பட்டுட்டா" எனக் குடும்பத்தாரின் நிலையையும் எடுத்துரைத்தான்.

மேலும், அந்த துயரமான நேரத்தில் நல்லானந்தின் நலத்தை அறிந்து கொள்ளமுடியாமல் போகவே, விஞ்ஞான வளர்ச்சியின் மேல் கோபம் கொண்டு, உடனே தாய் நாடு திரும்பிய திலோ, தன் மென்பொருள் வேலையை விட்டதையும், கூடவே ஈமெயில்... சாட்... மொபைல் போன்ற விஞ்ஞானம் முன்னேற்றங்களை முற்றிலுமாய் தவிர்த்ததையும் கூறியவன், முடிவில் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டின் வாயிலாக பாடம் சொல்லிக் கொடுக்கும் "the school" பள்ளியில் வேலைக்குச் சேர்ந்ததையும் சேர்த்துக் கொண்டான்.

"விஞ்ஞானம் வளர்ச்சிக்கும் இயற்கை உபாதைகளுக்கும் என்ன சம்பந்தம்ன்னு வாதாடினால்... விஞ்ஞான வளர்ச்சியால் தான் பல இயற்கை சீரழிவுகள் நடக்குதுன்னு அவளும் சளைக்காம வாதாடுவா! அதனால் அதைப் பற்றி பேசுறதை நான் விட்டுட்டேன்" என்றபோது, திலோ மற்றும் நல்லாவின் நட்பின் ஆழம் அன்பரசிக்கு விளங்கியது!

தன் நண்பன் மேல் எத்தனை அன்பிருந்தால், அவனுக்கு ஒன்று என்றதும் வாழ்க்கையின் சுகங்களை ஒருத்தி துறப்பாள்? என மனம் வியக்க, அதையே அவனிடமும் பகிர்ந்தாள் அன்பரசி!

"அது மட்டுமில்லை! திலோவும் தேவ்வும் எனக்குப் பண்ணியிருக்க உதவியை உயிரிருக்க வரைக்கும் மறக்க முடியாது" எனக் கூறி, அந்த உதவியை விவரிக்கத் தொடங்கினான்.

"இருபது நாளுக்கு அப்புறம்... யாரும் மலரைத் தேடிவராம இருக்கவே, நான் அவளை இந்தியா கூட்டிட்டு போறேன்னு இந்தோனேசியா கவர்மென்ட்கிட்ட எழுத்து மூலமா

அனுமதி கேட்டேன்! ஆனா, எந்த வித உறவுமில்லாம ஒரு குழந்தையை அவர்களது நாட்டை விட்டு வெளியே விட மறுத்துட்டாங்க. அதுவும், சுற்றுலா வந்திருந்தவர்களின் குழந்தையா? இல்லை அவர்களது நாட்டின் குடிமகளான்னு தெரியாத நிலையில் அவங்களுக்கும் ஒரே குழப்பம்" என்றவன் மேலே பேசுமுன்,

"ஹய்யோ அப்புறம் எப்படி தத்து எடுத்தீங்க?" என்றாள் அன்பரசி அவசரமாக.

"மேலும் ஒரு பத்து நாள் காத்திருக்க சொன்னவங்க... யாரும் உரிமை கொண்டாடி வரலைன்னா என்கிட்டே தரதா உறுதி கொடுத்தாங்க! ஆனா பத்து நாள் கழிச்சு போய் கேட்டா, திருமணமானவங்களுக்குத் தான் தத்து கொடுப்போம்ன்னு சொல்லிட்டாங்க" என்றவன், அன்று தான் அனுபவித்த சோர்வை தன் மடியிலிருந்த மகளின் ஸ்பரிசத்தால் போக்கிக் கொண்டான்.

"அச்சச்சோ" என அன்பரசி பதற,

"நான் முன்னாடியே அப்பா-அம்மாக்கு கால் பண்ணி, நான் பத்திரமா இருக்கிரதாவும், அவங்களுக்கும் ஒரு பேத்தியைக் கூட்டிட்டு வரதாவும் சொல்லிட்டேன்! இப்போ இந்தோனேசியன் கவர்மென்ட் இப்படி சொல்லவும், மனசு நொந்து போய் வீட்டிற்கு ஃபோன் பண்ணி சொன்னா, அப்பா அவரே வந்து தத்தெடுத்துக்கிறதா சொல்ல... தேவ்வும் - திலோவும் அவரை நிறுத்திட்டு அடுத்த ஃபிளைட்ல இந்தோனேசியா வந்து...மலரை அவங்க பொண்ணா தத்தெடுத்துக்கிட்டாங்க" என்றான் நல்லா, பெரும் பரவசத்தோடு!

"ஹோ" என அவன் கூறிய பெரிய விஷயத்தை, ஒரு பெருமூச்சோடு உள்வாங்கிய அன்பரசி - தமிழரசியிடம் வந்து சேர்ந்தாள்.

தன்னைப் பற்றிய எல்லாமும் தன்னவளிடம் கொட்டிவிட்டத் திருப்தியில் நல்லா, மகளை முகர்ந்திருக்க "தமிழரசி என்ன ஆனாங்க?" என்ற அவளது கேள்வியில் அவனிற்கு சிரிப்பு மிதமாய் மலர்ந்தது.

"இந்தியா திரும்பிவந்து கொஞ்ச நாளில் கல்யாணம் பத்திப் பேசினாங்க! ஆனா நான் போட்ட கண்டிஷன்ல தமிழரசி அரண்டு போயிட்டாங்க!" என்றான் நல்லானந்த், அடக்கிய சிரிப்புடன்!

அவனது சிரிப்பை ரசிக்கும் மனநிலை முற்றிலுமில்லாமல், "அவங்களோட திருமணம் நடக்கணும்ன்னா... கல்யாணம் முடிந்த அடுத்த நிமிஷம் - மலரை நானும் அவங்களும் முறையா தத்து எடுத்துக்கணும்ன்னு நான் சொன்னது தான்!" என்றான் நல்லானந்த் அழுத்தமாக.

"ஹோ" என அதையும் உள்வாங்கிய அன்பரசிக்கு உள்ளுக்குள் ஏதோ இனிப்பாய் சுவைத்தது.

"தமிழரசி - தமிழை மட்டும் ஆட்சி செய்யட்டும்... நம்மளோட அன்பை ஆள ஒரு அன்பரசி வருவாடான்னு திலோ சொன்னது பலிக்குமான்னு தெரியல...நீ என்ன சொல்ற அன்பு?" என்றவனை விழிவிரித்துப் பார்த்திருந்தாள் அன்பரசி!

நல்லா தனது காதலை பட்டென்று வெளிப்படையாக சொல்லிவிட, அதை கேட்டிருந்த அன்பரசிக்குத் தான் அதை ஆச்சிரியமாய் இருந்தது!

தன் மீது அன்பு கொண்டு அவன் செய்த செயல்களை எல்லாம் ஒரு வித எதிர்பார்ப்புடன் உள்வாங்கிக் கொண்டவளுக்கு, அவன் மணமானவன் என்ற செய்தி பெரும் எரிச்சலையும், கோபத்தையும் உண்டு பண்ணியது நிஜம் தான் என்றபோதிலும், அவனைப் பற்றிய அவளது கணிப்பு முற்றிலும் தவறு என்று தெரிந்த பிறகு மனது லேசானதை மூளையிடமிருந்து மறைக்க முடியவில்லை!

தன்னைப் போலவே சுனாமி எனும் பெரும் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவன் என்பதும், அதற்கும் மேலாக மதிமலரேனும் அழகியமொட்டை, மகளாக்கி மலராய் பூஜிக்கிறான் என்பது அவளை முற்றிலுமாய் உருக்கிக் கறைத்திருந்தது நிஜம்.

ஆனால் பார்த்த சில மணி நேரங்களிலேயே காதலை சொல்லிவிட்டானே? ஒரு வேளை விளையாடுகிறானோ? கண்ணால் பார்த்து, முகம் கொடுத்து பேசியே முழுதாய் இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லையே? அதற்குள் எப்படி காதல் முளைக்கும்? தன்னைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? எதுவுமே தெரியாமல் எப்படி காதலைக் கூறினான்? திலோ அக்கா சொன்னதை தன்னிடம் ஓர் செய்தியாய் பகிர்ந்து கொண்டிருப்பானோ? - இப்படியாக ஓடிய எண்ணங்களின் முடிவில், "ஹ்ம்ம் அப்படி தான் இருக்க வேண்டும்! அது தனக்கு ஒரு செய்தி தான் போல!" எனத் தானாகவே ஒரு முடிவிற்கு வந்தாள்.

ஆனால், நல்லானந்தோ தன்னைப் பற்றிய அனைத்தையும் காதல் உட்பட பகர்ந்தாகிவிட்டது. இனி முடிவு அவள் கையில் என்பது போல் அவள் முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.அவளது முகத்தில் தோன்றிய அனைத்து கேள்விகளும் வாய் மொழியாய் வெளிவராமலே நல்லானந்திற்குப் புரிந்தது! ஆனால் கடைசியில் அவள் எடுத்த முடிவைத் தான் அவனால் என்னவென்று உணர முடியவில்லை.

இருவரது எண்ண ஓட்டத்தையும் முடிவிற்கு அழைத்துவரும் பொருட்டு, மலர் தன் சிணுங்கலை ஆரம்பித்திருந்தாள்.

"நல்லாப்பா... வீட்டுக்குப் போவாம்... வீட்டுக்குப் போவாம்" எனத் தன் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டு, காதோடு சிணுங்கிய மகளின் வயிற்றில் கை வைத்து "மலர்குட்டிக்குப் பசிக்குதா?" என்றான் நல்லா.

இத்தனை நேரம் அவன் உணவுண்ணுமாறு அழைத்தப்போதெல்லாம் கோபமாய் வேண்டாமென தலையசைத்த குழந்தை, இப்போது பசியைத் தாங்க முடியாமல் "ம்ம்..." என மெல்லச் சிணுங்கித் தன் பசியை எடுத்துரைத்தாள்.

"ஓகேடா செல்லம், நாம உடனே மம்மம் சாப்பிடலாம் சரியா? பாப்பாக்கு என்ன மம்மம் வேணும்?" என்றவன், சட்டென அன்பரசியிடம் திரும்பி, "இந்த பாப்பாக்கு என்ன மம்மம் வேணும்?" என்றான் அதே குரலில்.

குழந்தை சிணுங்க ஆரம்பித்தவுடனேயே தன் எண்ணங்களிலிருந்து வெளியே வந்திருந்த அன்பரசி, தந்தை - மகளின் உரையாடலை மௌனமாய் பார்த்திருக்க, இப்போது ஒலித்த நல்லாவின் குரல் மனதை மிதமாக்கியது.

"நா ஒன்னும் பாப்பா இல்லை" என அன்பரசி சிலிர்க்க, மலரோ "நா தான் பாப்பா...அது...ஆன்த்தீ..." என்றாள் கோபமாக. அவளுக்குத் தந்தை தன்னை விட்டு இன்னொருத்தியை பாப்பா என்பதா என்ற கோபம்.

"நீங்களும் பாப்பா... அவங்களும் பாப்பா... சரியா?" என நல்லா குழந்தையின் கன்னத்தில் முத்தம் வைத்து கொஞ்சினாலும், அவனது கண்கள் அன்பரசியிடமே நிலைத்திருந்தன.

அவனது பார்வையிலும், மகளுக்கும் அவன் வைத்த முத்தத்திலும் நெஞ்சுக்குள் ஏதோ புதிதாய் தகிக்க, இமைகளைத் தாழ்த்தி அவனிடம் வெட்க கவிதை வாசித்தவளின் மனம் - அவன் தன்னிடம் கேட்டது / சொன்னது செய்தி அல்ல போலவே? நிஜமாகவே மணந்து கொள்ளக் கேட்டிருப்பானோ? என மீண்டும் எண்ண வைத்தது. எல்லா ஊகங்களையும் தானே எண்ணி எண்ணி மனம் குழம்புவதை விட, அவனிடமே கேட்டு விடுவது மேல் எனத் தோன்றிய வினாடி, அவனைப் போல தானும் தனது கடந்த காலத்தைத் தடையின்றி அவனிடம் பகிர்ந்து கொண்டுவிட வேண்டும் எனவும் மூளையைக் கேட்காமலே மனம் முடிவு செய்தது.

தான் ஏன் இந்த முடிவை, அதாவது தன் கடந்த காலத்தை அவனிடம் பகிர்ந்து கொள்ளும் முடிவை எடுத்தோம் என்ற குழப்பம் மீண்டும் தலை தூக்க, அதை ஒரே அமுக்காய் அமுக்கி உள்ளே தள்ளினாள் அன்பரசி!

அன்பரசி இங்கே தன் குழப்பத்தை உள்ளே தள்ளிக் கொண்டிருக்க, அங்கே மதிமலரோ வேறு யாரையோ பாப்பா என்று சொன்னதற்குத் தன் தந்தையைக் கூண்டில் ஏற்றி கொண்டிருந்தாள்.

"நா தா பாப்பா... நா தா...நா தா" என அவளது சிணுங்கலின் ஒலி அளவு கொஞ்சம் கொஞ்சமாய் கூட, சட்டென எழுந்த அன்பரசி "நீ தான்டா ராஜாத்தி பாப்பா...அப்பா தெரியாம சொல்லிட்டாங்க! அழாதீங்கடா" என்றாள் கொஞ்சலாக.

அன்பரசி "அழாதே" என்று சொன்னதுமே மலரின் அழுகை நின்று விட்டது. அதற்கு காரணம் அன்பரசி சொன்னதை மனதில் ஏற்றல்ல! பிறர் முன்னிலையில் அழுது, அவர்கள் தன்னை அழுகிறேன் எனக் கூறியதால். "நா அதலை... போ" என்றவள், அதற்கு மேல் பேச விரும்பவற்றவள் போல் தந்தையின் கழுத்தை இறுக்கமாக கட்டிக் கொண்டாள்

"என்னமா கோபம் வருது என் அப்புகுட்டிக்கு...என் செல்லம்டா குட்டி நீங்க" என மீண்டும் மகளின் உச்சியில் முத்தமிட்ட நல்லானந்த், "காலை டிபனுக்கு இது தான் சாப்பிடனும்னு ஏதாவது restriction இருக்கா அன்பு?" என்றான் அன்பரசியிடம்.

"அப்படி ஒண்ணுமில்லை" என்ற அன்பரசி, அவனை மேலும் மேலும் தொந்தரவு செய்ய விரும்பாமல் "உங்களுக்கு எதுக்கு வீண் அலைச்சல்? இன்னைக்குத் தானே கனடாலிருந்து

வந்திருக்கீங்க...உங்க வீட்டில இருக்கிறவங்களோட நேரம் செலவு செய்ங்க" எனக் கூறி சிறு இடைவெளிவிட்டாள். தொடர்ந்து "நான் ஹாஸ்பிடல் கான்டீன்-லேயே சாப்பிட்டுக்கிறேன். நீங்க மதியைக் கூட்டிட்டு வீட்டுக்குப் போங்க" என்றாள் மென் குரலில்.

ஆனால் அவளது மெல்லிய குரலில் நல்லாவின் தேகம் இறுகிப் போனது. சில நிமிடக் காத்திருப்புக்குப் பின்னரும் அவனிடமிருந்து பதில் வராமலிருக்கவே, அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்த அன்பரசி திகைத்தாள்.ஏனென்றால் நல்லாவின் முகம் இறுகி, கண்கள் கூரிய அம்பாய் அவளைத் துளைத்துக் கொண்டிருந்தது!

அதை கண்ட அடுத்த நொடி, அவளையுமறியாமல் "சாரி" என்ற வார்த்தைகள் வேகமாய் வந்து விழுந்தன.

அதன் பின்னரும் பதில்லாமல் போகவே, "நேத்திக்கு இட்லி சாப்பிட்டேன். இன்னைக்கும் அதே சாப்பிடுறேன்" என்றாள் கூடவே. அவன் அப்போதும் பதில் ஒன்றும் சொல்லாமல் அறையை விட்டு நகரவே, மனம் ஏனோ வாடியது. அவன் வாசலைக் கடந்து வெளியே சென்றதும், வேகமாக அவன் பின்னே சென்றவள், "திரும்ப வருவீங்க தானே?" என வேகமாய் தொடங்கி, "கொஞ்சம் பேசணும்" என்றாள் மெதுவாக.

"ம், அரை மணி நேரத்தில் வரேன்" என்றவனின் குரல் தேய்ந்து மறைந்தது.

வேக நடையுடன் அவன் வெளியே செல்வதையும், அவனது தோள் வளைவில் முகம் வைத்திருந்த மதிமலர் சில வினாடிகள் நிமிர்ந்து தன்னைப் பார்த்துவிட்டு, உடனே குனிந்து கொண்டதையும் பார்த்தவள் ஒரு பெருமூச்சுடன் அறைக்குள் நுழைந்தாள்.

அவன் கூறிய அரை மணி நேரத்திற்கு இருபது நிமிடங்கள் முன்பே அவனைத் தேட ஆரம்பித்த மனதை அடக்குவதிலேயே குறியாய் இருந்த அன்பரசியை, மேலும் தவிக்க விடாமல் சொன்ன நேரத்திற்கு பத்து நிமிடங்கள் முன்னரே அங்கே வந்து சேர்ந்தான் நல்லானந்த்!

போனது போலவே திரும்பி வந்தவனின் கையில் மலருக்குப் பதிலாக காலை உணவு அடங்கிய சிறு கூடை இருந்தது.

உள்ளே வந்தவனை கண்களால் தொடர்ந்து கொண்டே "மதி எங்கே?" என்ற அன்பரசியின் குரலில் ஆவலை விட, என்னிடம் ஏதாவது பேசேன் என்ற வேண்டுதலே கூடுதலாய் இருந்தது போல் அவளுக்கே தோன்றியது.

"திலோகிட்ட விட்டுட்டு வந்திருக்கேன்" என்றவன், கொண்டு வந்த உணவை சிறு தட்டில் எடுத்து வைத்தான். உணவிருந்த தட்டை அவளிடம் கொடுத்தவன், அவளது வலது கையில் கண்ணைப் பதித்து "ஸ்பூன் கொண்டு வரேன் இரு" என்றவாறே திரும்பினான்.

அவன் ஓரடி எடுத்து வைத்ததும் "எனக்கும் இடது கை பழக்கமிருக்கு. கையிலேயே சாப்பிட்டுக்கிறேன்" என்ற சொல்லில் அவனது பழக்கம் தனக்கும் தெரியும் என்பதை உரைத்தவள், தட்டைக் கட்டிலில் வைத்துவிட்டு இடது கையால் எடுத்து உண்ண ஆரம்பித்தாள்.

அவளது சொல்லில் நின்ற நல்லா, எதிரே இருந்த படுக்கையில் அமர்ந்து கைகளைக் கட்டிக் கொண்டு அவள் உண்பதையே பார்த்திருந்தான். இரண்டு வாய் உணவு உள்ளே போகும் வரை பொறுத்த அன்பரசி, "என்ன?" என்றாள் கேள்வியாக.

பதில்லாமல் தலையை வெறுமே அசைத்து அவளை உண்ணுமாறு கண்ணால் கூறிய நல்லாவிடம், "என்ன கோபம் உங்களுக்கு? நான் ஹாஸ்பிடல்-ல சாப்பிட்டுக்கிறேன்னு சொன்னதுக்கா? இப்படி சின்ன விஷயத்துக்கெல்லாம் இவ்வளவு கோபப்பட்டா நானும் மதியும் என்ன பண்ணுவோம்?" என்றவள், சட்டென நாக்கைக் கடித்து பேச்சை நிறுத்தினாள்.

அவளுக்காக வேலைகள் அனைத்தையும் விட்டுவிட்டு, கடல் கடந்து வந்து வந்திருக்கும் தன்னை வெளியே போ என அவள் கூறியபோது நல்லாவின் மனம் இறுகிப் போய் கடுமை பெற்றிருந்த போதிலும், அவள் பசியில் இருப்பாளே என்ற எண்ணத்தில் வழியில் உணவு கொண்டு வந்த திலோவிடம் பிள்ளையைக் கொடுத்துவிட்டு, உணவை எடுத்துக் கொண்டு மீண்டும் மருத்துவமனைக்குள் வந்திருந்தான். ஆனால் இப்போது வெளிவந்த அவளது வாக்கியத்தில் இறுக்கம் தளர்ந்து பெரிதாய் சிரிப்பு மலர்ந்தது.

"என்ன பண்ணுவீங்க?" என யோசிப்பது போல் பாவனை செய்தவன், "ம்ம்... எனக்குக்

Pro-vty-fB-va

கோபம்ன்னு தெரிஞ்சா மலர்குட்டி அழகா ஒரு முத்தா கொடுத்து 'நல்லாப்பா, மலர் சாரி சொல்லிட்டேன்ல...சிரி"ன்னு என் தாடையை பிடிச்சு செல்லம் கொஞ்சுவா..நீ வேணும்னா அவ முதல்-ல செய்றதை மட்டும் செய்யேன்! உடனே மன்னிச்சிடுவேன்!" என்றான் பெருந்தன்மையாக.

வாயில் வைத்த உணவை மெல்லவும் முடியாமல், முழுங்கவும் முடியாமல் விழித்துக் கொண்டிருந்த அன்பரசி அவனை சற்று நேரம் முன்னர் பார்த்தது போலவே விழி விரித்து பார்த்தாள்.

"எப்போ பார்த்தாலும் என்ன பார்வை இது?" எனப் புன்னகை மாறாமலே அவளிடம் எழுந்து வந்த நல்லா, கட்டிலிலிருந்த தட்டைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, உணவை அவளுக்குப் புகட்ட ஆரம்பித்தான்.

"வேணாம்...நானே" என்றவளின் வார்த்தை உணவோடு சேர்த்து உள்ளே சென்று செரிக்கத் தொடங்கியது.

அவளது வாய்க்குள் வைத்த ஒரொரு வாய் உணவிற்கும், அன்பரசி ஈசக்கியப்பன் என்ற பெயரை NDA ஃபார்மில் பார்த்த நாளிலிருந்து தொடங்கி, அவளைப் பார்க்கவென்று நேற்று நள்ளிரவு இந்தியா வந்திறங்கியது வரை சொல்லி முடித்த நல்லானந்தை இமைக்காமல் பார்த்திருந்தாள் அன்பரசி!

கண் கொண்டு பார்க்காமல், தன்னை யாரென்று அறியாமல், தன்னிடம் சொந்த விஷயமாய் துளியும் உரையாடாமல் - இவனால் எப்படி இவ்வளவு காதலைத் தேக்கிவைக்க முடிந்தது? தனக்கு உடம்பு சரியில்லை என்றதும் ஆயிரமாயிரம் மைல்கள் கடந்து பற எப்படி மனசு வந்தது? காதல் வந்தால் எதுவும் சாத்தியமாகிவிடுமோ? ம்ம் இப்போது அவன் சிறிதாய் முகம் திருப்பியதற்கே தனக்கு வலித்ததே... அது போல தானே அவனுக்கும் இருந்திருக்கும்... என பலவாறாய் அவள் மனம் எண்ணங்களில் பவனி வந்தது!

"என்ன யோசனை? மனசில ஓடற ட்ரைலரை எங்களுக்கும் படம் பிடிச்சு காட்டுறது!!" என நல்லா சிரிக்க, தன் சந்தேகத்தை மறைக்காமல் அவனிடம் கேட்டுவிட்டாள். அவள் அதை கேட்பதற்காகவே காத்திருந்தவன் போல "ஹ்ம்ம் உன் பேரை பார்த்ததுமே... திலோ

சொன்ன வசனம் தான் நியாபகம் வந்தது... அப்போவே மனசில ஒரு சிலிர்ப்பு ஓடி மறைஞ்சது! ஆனா மலரை மனசில் கொண்டு வந்து, ஒரு குழந்தைக்குத் தகப்பனான நான் இதை பத்தி நினைக்கிறதே தப்புன்னு முடிவு பண்ணி என்னை நானே கட்டுப்படுத்திக்கிட்டேன்!" என ஆரம்பித்த நல்லா,

"ஆனா உன்கிட்ட பேசினதும், உன்னோட பணிவு... குரலில் தெரிந்த தெளிவு... பயமில்லாமல் உன் தேவைகளை நீ எடுத்துச் சொன்னது எல்லாமே எனக்குப் பிடிச்சிருந்தது... எல்லாத்துக்கும் மேலா உன்னோட நல்லா சார்" எனத் தொடர்ந்தான் சிறு சிரிப்புடன்.

"உனக்கு அப்பா-அம்மா இல்லைன்னு சொன்ன அன்னைக்கு எனக்குத் தூக்கமே வரலை அன்பு! மலரையும் உன்னையும் நினைச்சு மனசு ரொம்பத் தவிச்சுப் போச்சு" என்ற வாக்கியத்தை அவன் முடிக்கும் முன்னர், "என்னையும் மதி குட்டியையும் ஒண்ணா மதிப்பிடாதீங்க! அவ என்னை மாதிரி இல்லை" எனப் பட்டென கூறியவள், "அவளுக்கு ஒருத்தருக்கு ரெண்டு அப்பா இருக்காங்க. ஒரு அம்மாக்கு இரண்டு அம்மா வரப்போறாங்க! யாருமே இல்லாத நானும் அவளும் ஒண்ணா?" என்றாள் கோபத்துடன்.

அவள் பேச ஆரம்பித்ததும், "ஏன் இப்படி சொல்கிறாள்? அன்பரசிக்கு மலரைப் பிடிக்கவில்லையா? ஹய்யோ?" என நூறு காத தூரம் ஓடிய மனம், அவளது அடுத்த வாக்கியத்தில் லேசாகி, உருகிப் போனது!

"என்னமா இது? உனக்கும் அப்பா-அம்மா இருக்காங்க! நீ தான் என் மனைவின்னு வீட்டில் கொண்டு போய் நிறுத்தினா... இன்ஸ்டன்ட்டா அப்பாவும் அம்மாவும் ரெடி ஆகிடுவாங்க. ஏற்கனவே அப்பா ரெடி தான் போல! அம்மாவையும் சீக்கிரமே ரெடி பண்ணிடலாம். அப்பாவை விட அம்மா செம இன்ஸ்டன்ட்!" என்றான் கண்களைச் சிமிட்டி.

அவனது பேச்சில் சிரிப்பு மலர்ந்தாலும், தாய்-தந்தையை..முக்கியமாக தாயை எண்ணி மனம் துடித்தது! அவனிடம் தன் கடந்த காலத்தைப் பற்றி சொல்லத் துடித்துக் கொண்டிருந்தவளுக்கு, இதற்கு மேல் பொறுக்க முடியாமல் போகவே "எங்க அம்மா எப்படி இறந்தாங்க தெரியுமா?" என்றாள் கண்களில் நீர் திரையிட.

அவளது கண்கள் மென்மையாய் துடைத்துவிட்ட நல்லா, வார்த்தையால் இன்றி ஜாடையால் அவளைப் பேசுமாறு தூண்டினான். "சுனாமி-ல" என்றபோது நல்லாவின் மனம் துடித்து துவண்டது! அன்பு கொண்டவள் அன்று பட்ட வேதனைக்காக இன்று மனம் துடிக்க, தன் வலது கையால் அவளது இடக்கையை இறுகப் பிடித்துக் கொண்டான்!

மௌனமாய் கழிந்த இரு வினாடிகளில் - "மலரிடம் அன்பரசிக்குத் தோன்றிய பாசத்திற்கு இது தான் காரணமோ என சில வினாடியில் ஓடிய எண்ணத்திற்கு, அதற்கு முன்னரே அவள் முகத்தில் பாசம் பொங்கி வழிந்ததே!" என்றெல்லாம் எண்ணிய நல்லா, கண்களில் நீருடன் எதிரே அமர்ந்திருப்பவளை விட்டுவிட்டு எண்ணத்தால் விலகி ஓடியதற்கு மானசீக மன்னிப்பைக் கேட்டுவிட்டு, அவள் முகத்தை நிமித்தி "உங்க அப்பா எங்க கண்ணம்மா?" என்றான் கேள்வியாக.

"அப்பா... அப்பா...என்னோட சின்ன வயசிலேயே இறந்து போய்ட்டார்" என்றபோது குரலில் கசப்பு வெளிப்படையாய் தெரிந்தது.

"என்னம்மா?" என்ற அவனது உருகலில் முழுதாய் உடைந்த அன்பரசி, "அவர் ஏன் அவ்வளவு நாள் உயிரோட இருந்தார்ன்னு நான் நினைக்காதே நாளே இல்லை தெரியுமா?" என்றாள் அழுகையின் ஊடே!

"ச்சே, என்ன வார்த்தை அன்பு!" என நல்லா கண்டிக்க, "அவரால நானும் அம்மாவும் பட்ட கஷ்டம்...ரோடு-ல போற வரவங்க கூட எல்லாம் அம்மாவை சேர்த்து பேசுவாரு. தினம் திட்டு, அடி, சண்டை, அழுகை தான்! அவர் இறந்த அப்புறம் தான் நானும் அம்மாவும் ரொம்ப நிம்மதியா இருந்தோம்... அம்மா நிம்மதியா இருந்தாங்களான்னு தெரியாது! எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது" என்றவளின் குரலில் உணர்ச்சிகள் துடைக்கப்பட்டிருந்தது!

"அம்மா எனக்காக பட்ட கஷ்டங்கள்... ஸ்கூல்-ல ஆயா வேலை பார்த்து, முறுக்கு சுத்திக் கொடுத்து, உப்பளத்திற்கு வேலைக்குப் போயின்னு என்னை ரொம்ப நல்லா பார்த்துக்கிட்டாங்க! ஆனா என்னால தான் அவங்களுக்கு ஒண்ணுமே பண்ண முடியல. கடைசியா அவங்க முகத்தைக் கூட என்னால பார்க்க முடியல" என்றபோது நல்லாவிற்கு அவளின் வேதனை தனதாய் வலித்தது.

"நாகப்பட்டினம் முழுசும் அம்மாவைத் தேடி பைத்தியம் மாதிரி சுத்தி சுத்தி வந்தேன்... காலையில உப்பளத்திற்குப் போன அம்மா வரவே இல்லை நல்லாப்பா" என்றபோது அவனது கைகள், அன்பரசியின் தலையை வயிற்றோடு அணைத்துக் கொண்டான்.

சற்று நேரம் அவளை அழ விட்டவன், "உன்னோட கூட பிறந்தவங்க!" என்றான் மெதுவாக. அவளைத் திசை திருப்பவென அவன் கூறியது, அவளை மேலும் அழ வைத்தது.

"அன்பு!" என அவனது அன்பு அதட்டலில் சுயநிலை பெற்ற அன்பரசி, "யாருமில்லை" என்றாள் கசப்புடன்

பள்ளி செல்லும் வயதில் தாயை இழந்து, ஒற்றை பெண்ணாய், அனாதையாய் அவள் அலைந்தது மனதை அலைக்கழித்தது. படிப்புக்கு எப்படி தொடர்ந்திருப்பாள்? கடவுளே! என நடந்து முடிந்த விஷயத்திற்காக உருகி மருகினான் அவன்.

சற்று நேரம் மௌனத்தில் கழிய, "எப்படி கண்ணம்மா படிச்சே?" என அவன் கேட்டுவிட, "அனாதை இல்லத்தில சேர்த்து விட்டாங்க. அங்க தான் படிச்சேன். இன்ஜினியரிங்க்கு நிறைய தொண்டு நிறுவனம் ஹெல்ப் பண்ணினாங்க. கொஞ்சம் லோனும் கொடுத்தாங்க. அதில தான் படிச்சேன்"

"ம்ம், சொந்தக்காரங்க யாருமில்லையா அன்பா?" - இந்த கேள்வியை கேட்க கூடாது என மனம் நினைத்தாலும், முழுதாய் அறிந்து கொண்டுவிட வேண்டுமென நினைத்தான் நல்லானந்த்.

"அப்பா இறந்தப்பவே யாரும் சீண்டலை! அம்மாவும் இல்லை... பெண் பிள்ளை வேற... யாரால உதவ முடியும்?" என்ற அன்பரசியின் மனதில், "ஏன் நல்லா இல்லை? யாரென்றே தெரியாத மலரைத் தன் மகளாய் பூசிக்கவில்லை! அதே போல் திலோ இல்லை" என்ற வாதம் அரங்கேறியது.

"ம், உங்கம்மாவோட கூட பிறந்தவங்க?" என்றவனிடம், "அம்மாக்கு ஒரே அக்கா தானாம்! ஆனா அவங்க சின்ன வயசிலேயே சத்யாண்ணனோட பெரியப்பாவை காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டு மலேசியா போய்ட்டாங்கன்னு அம்மா சொன்னாங்க! அதுனால தான்

சத்யாண்ணா தாத்தாக்கு எங்களைப் பிடிக்காது" என்றாள் அன்பரசி செய்தி வாசிப்பது போல்.

ஆனால் நல்லாவிடம் அந்த செய்தி மற்றதை உண்டு பண்ணியதோ இல்லையோ, அன்பரசியை புரட்டிப் போட்டது. வேகமாய் அவனிடமிருந்து விலகி, அவன் முகம் பார்த்தவள் - "உங்ககிட்ட..உங்ககிட்ட ஒன்னு சொல்லணும்! மதி குட்டி அச்சு அசலா எங்கம்மா மாதிரியே இருக்கா. ஒருவேளை..ஒருவேளை..எங்க பெரியம்மா வீட்டுப் பொண்ணா..." என அவள் வாக்கியத்தை முடிக்கும் போதே நல்லாவின் மனதிலிருந்த புதிர்கள் மெல்ல விலகின!

மதிமலரைக் கண்டதும் அன்பரசியின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சி, மகளின் மேல் அவள் கொண்டிருந்த அபரீதமான பாசம், அவளை அணைத்துக் கொள்ளத் துடித்த அன்பரசியின் கரங்கள் என எல்லாவற்றுக்கும் மூலக் காரணம் என்னவென்று நல்லாவிற்குப் புரிந்தது.

அன்பரசியின் வார்த்தைகளைக் கேட்டிருந்த நல்லானந்தின் புதிர்கள் மெல்ல விலகினாலும், புதிரிருந்த மனதை இனம் புரியா பயம் ஆக்கிரமதித்தது.

பிறந்தது முதல் மனதில் பதியவைக்கப் பட்ட நியாயப்புத்தியுடன், எந்தவொரு பிரச்சனையையும் பார்த்து பயப்படுவதை விட அதை தைரியத்துடன் எதிர்கொள்வதே மேல் என்ற எண்ணமும் சேர்ந்து கொள்ள, நல்லா தன் அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"அன்பா, அவங்க...அதான் உன் பெரியம்மா, அவுங்க வீட்டில யாராவது மலேசியாவில் இருக்காங்களா? அவங்க அட்ரஸ் தெரியுமா?" என்ற அவனது கேள்வியில் நியாயம் இருந்தாலும், நெஞ்சம் பிளந்து விடும் போல் வலித்தது. அப்படி யாரும் இருந்து, மலரைப் பிரிய நேர்ந்தால் உயிர் வரை வலிக்குமே! உயிர் வரை வலிக்கும் என்பதை விட அவனால் உயிர் வாழ முடியுமா என்பதே பெரும் கேள்வியாய் இருந்தது.

அந்த கேள்வியை நியாயப் புத்தியின் விளைவாக கேட்டுவிட்டாலும் அவள் பதிலுக்காகக் காத்திருந்த இரு வினாடி நேரம் கூட இரு யுகமாய் தெரிந்தது. இரு ஆண்டுகளாய் தன் உதிரத்தில் கலந்துவிட்ட பாசத்தைத் தூர நிறுத்திவைக்க வேண்டிவந்துவிடுமோ என்ற பயம் நெஞ்சை அரிக்க, அன்பரசியின் முகத்திலிருந்து பார்வையை இம்மியளவும் அகற்றாமல் நின்றிருந்தான் நல்லானந்த்.

தாய்க்கும் மலருக்கும் இருந்த உருவ ஒற்றுமையை உணர்ந்த அன்பரசியோ, அவனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நிலையில் இருக்கவில்லை. ஏனென்றால் தன் பெரியம்மா வீட்டைப் பற்றி நித்யாவின் தாத்தா கூறிய தகவலிலேயே உறைந்து போயிருந்தாள், அவள்.

காதல் திருமணம் முடித்த மகனின் மீது மட்டுமல்லாமல் அவனது மனைவியின் மேலும் பெரும் வெறுப்பை வளர்த்து வைத்திருந்த சத்யசேகரனின் பாட்டனார், அவர்களை ஆண்டுகள் பல கடந்தபின்னரும் மன்னிப்பதாய் இல்லை. நாட்டை விட்டே சென்ற அவர்களுடனும் யாருக்கும் பெரிதாய் தொடர்பிருக்கவில்லை. மலேசியா சென்ற இரண்டாண்டுகள் - தமக்கையும் தங்கையும் கடிதம் மூலமாக தொடர்பில் இருந்தனர் என்றாலும், அதன் பின்னர் கடிதப் போக்குவரத்து மெல்ல குறைந்து, சில ஆண்டுகளில் நின்றே போய்விட்டது.

மாதம் ஒரு முறை, தன் குடும்பத்தின் நலத்தை தொலைப்பேசி மூலமாக அறிந்துகொள்ளும் சத்யசேகரனின் பெரியப்பாவை, அன்பரசி புகைப்படத்தில் கூட கண்டதில்லை. இப்படியாக துண்டிக்கப்பட்டிருந்த உறவிடமிருந்து அழைப்புகள் ஏதும் வராமல் போகவே, அதை ஆறு மாதம் கழித்தே பெரிதாய் உணர்ந்த குடும்பத்தினர் - மலேசியாவில் அவரது எண்ணை அழைத்து விவரமறிய முற்பட்டபோது, அவர்களது குடும்பத்தில் யாரும் உயிருடன் இருக்கவில்லை என்றும், அங்கிருக்கும் அவர்களது சொத்துகள் சிலவற்றை என்ன செய்வது என்றும் அழைத்தவர்களையே கேள்விகேட்டனர் அங்கிருந்தவர்கள்.

உறவே இல்லை என்றான பின்னர், சொத்தையும் வேண்டாமென்று சொன்ன சத்யசேகரனின் தந்தை அதை அங்கேயே தர்ம நிறுவனங்களுக்கு எழுதி வைக்குமாறு கூறி, லேசாய் தொங்கிக் கொண்டிருந்த உறவை சொத்தின் மூலம் தொடராமல், முற்றிலுமாய் ஓர் முற்றுப்புள்ளி வைத்தார்.

இவையனைத்தையும் மனதில் கோர்வையாய் கொண்டு வந்து, மதிமலரும் தன்னைப் போல் குடும்பத்தை இழந்து நிற்கும் இளம்சிட்டுத் தான் என்ற முடிவிற்கு அன்பரசியை, நல்லானந்தின் இந்தக் கேள்வி நினைவுலகிற்கு மீட்டுவந்தது.

"ஏன் கேட்கிறீங்க?" எனத் தொடங்கிய அன்பரசியும், அவனது நாணென இறுகிய உடம்பிலும், உணர்ச்சிகள் துடைத்த முகத்திலும் அவன் நிலையை உணர்ந்து, அவனது அழுந்த மூடியிருந்த கைவிரல்களை மெல்ல வருடியவாறே தனக்குத் தெரிந்த தகவலை எடுத்துக் கூறினாள். அன்பரசி கூறிய விஷயத்தின் சராம்சமோ அல்லது அவளது மெல்லிய வருடலோ நல்லாவின் இறுக்கத்தை மெல்ல தளர்த்தியது.

"அன்பு! எனக்கு என்னோட உணர்வுகளை எப்படி சொல்லிப் புரிய வைக்கிறதுன்னு தெரியல... மலர் எனக்கு எவ்வளவு முக்கியம் என்பதை இப்போ கடந்து போன இரண்டே நிமிஷத்தில நான் உணர்ந்தேன்..."

"எல்லாரும் நான் அவளைத் தத்து எடுத்ததை பெரிய காரியமா பேசுறாங்க...ஆனா, எனக்குன்னு ஒரு அடையாளமில்லாமல், உருக்குலைந்து போயிருந்த என்னை ஒரு மனுஷனா மாத்துறதுக்கு வந்த பொக்கிஷமா தான் நான் மலரைப் பார்க்கிறேன் அன்பா!"

"நான் இந்த உலகத்தை விட்டு போயிட்டேன்னு நினைச்சிட்டே கண் திறந்தப்போ, கையில மலரைக் கொடுத்து "உனக்கு உயிரை இந்த குழந்தையின் மூலமா திரும்பக் கொடுத்திருக்கேன். அதை போற்றி பாதுக்காக வேண்டியது உன் கடமை"ன்னு கடவுள் சொன்ன மாதிரி இருந்தது"

"நான் இப்படி சொல்றது - உனக்கு மிகைப்படுத்தி பேசுறமாதிரி கூட இருக்கலாம்! ஆனா, நான் மலரைப் பத்தி சொல்ற ஒரொரு வார்த்தையும் அப்பட்டமான நிஜம் கண்ணம்மா!"

"என் கையில் மலராத மொட்டாய் ஒரு குழந்தையைக் கொடுத்து..."இவள் உன் பொறுப்பு...உனக்கு இன்னொரு பிறவி கிடைத்ததே இவளைப் பார்த்துக்கத் தான்"ன்னு ஒரு குரல் எனக்குள்ள ஒலிச்சிட்டே இருந்தது!"

"அந்தக் குரலோட பாதிப்பா... இல்லை இயல்பா எனக்குள்ள தோன்றிய பாசமா ஏதோ ஒன்னு மலரை என் மகளாக்கிக்க ஆனதெல்லாம் செய்ய வச்சது!"

"அவளை என்னோட பொண்ணா அந்த நாட்டை விட்டுக் கூட்டிட்டு வர வரைக்கும் நான் நானாவே இல்லைம்மா...எங்க அவளை விட்டுட்டு வர மாதிரி ஆகிடுமோ? அப்படி ஏதும்ன்னா...அந்தச் சின்னக் குழந்தை என்ன பாடு படும்?ன்னு ஒரொரு நிமிஷமும் உள்ளுக்குள்ள நடுங்கிப் போயிருக்கேன் தெரியுமா?

"எல்லா பிரச்சனையும் ஒரே வழியா முடிஞ்சு, திலோவும் தேவ்வும் இந்தோனேசியா வந்தபோது, இனி இந்த குழந்தை என் பொறுப்பு - யாருக்காகவும், எதுக்காகவும் இவளை என் வாழ்க்கையை விட்டு விலக்கிவைக்கமாட்டேன்ன்னு உறுதி எடுத்துட்டு தான் திலோ-தேவ் ரெண்டு பேரையும் எனக்காக அவளைத் தத்து எடுத்துக்க சொன்னேன்!"

"அதுமட்டுமில்லாம. மலரைக் கையில் தூக்கிட்டு சென்னை ஏர்போர்ட்-ல நான் இறங்கின நிமிஷம் - நான் அடைஞ்ச நிம்மதிக்கு அளவே இல்லை, அன்பு!"

இவ்வாறாக தன் உணர்வுகளை அன்பரசிக்கு உணர்த்திவிடும் வேகத்தில், பேசிக்கொண்டே சென்ற நல்லானந்த், தானாகவே நிதானித்து "அவ என்னோட உயிர் கண்ணம்மா!" என்ற ஒரே வாக்கியத்தில் தன் எண்ண ஓட்டத்தை இனிதே முடித்தான்.

மலரின் உறவு  என்று யாரும் இருந்து, அவர்கள் அவளை சொந்தம் கொண்டாடி வந்து விடுவார்களோ என்ற எண்ணம்,  நல்லானந்தை வாட்டி வதைப்பது வெகு துல்லியமாய் புரிந்தது அன்பரசிக்கு!

"என்ன நல்லாப்பா இது? நிச்சயமே இல்லாத ஒன்றை நினைச்சு யாராவது இவ்வளவு வருத்தப்படுவாங்களா? ஹ்ம்ம்..." என அவனைத் தேற்றியவள்,

"மதி என்னோட அம்மா மாதிரியே இருக்கா என்ற ஒரே காரணத்தை வச்சிட்டு, அவ என்னோட பெரியம்மா வீட்டுப் பொண்ணா இருக்கலாம்ன்னு எப்படி நாமளே முடிவு பண்ண முடியும்? அப்படி இல்லாமல் இருக்கலாம் இல்லையா?" எனக் கூறவும், நல்லானந்த் பேச முற்பட்டான்.

ஆனால் அன்பரசியோ "அப்படியே இருந்தாலும், அவங்க குடும்பத்தில் யாருமில்லை இந்த உலகத்தில் இல்லைன்னும் போது, நீங்க எதுக்கு வருத்தப்படுறீங்க?" என அழுத்தமாய் பேசி அவனது வாயை அடைத்தாள்.

அவள் தேறுதல் கூறியபோதும், அழுத்தமாய் பேசி அடக்கியபோதும் நல்லானந்த் அடங்குவதாய் இல்லை. "சத்யாவோட தாத்தா... மலரை சொந்தம் கொண்டாட நினைக்கலாம் இல்லையா அன்பு?" என அவனது சந்தேகத்தைக் கேட்டே விட்டான்.

"ஆமா, மகன் வேண்டாமாம்.... பேரனும் பேத்தியும் வேண்டாமாம்...தெரியவே இல்லாத கொள்ளுப் பேத்தி மட்டும் அவருக்கு இனிப்பாளாக்கும்! நடக்கிற கதையைப் பேசுங்க!"

"எல்லாத்துக்கும் மேலா... எங்க பெரியம்மாவுக்குப் பையன் இருந்தானா? பொண்ணு இருந்தாளா? அவங்களுக்குக் கல்யாணம் ஆச்சா? குழந்தை பிறந்ததா?ன்னு எதுவுமே தெரியாம...நீங்க பாட்டுக்கு ஏதேதோ கற்பனை செய்யாதீங்க! அப்படியே சொந்தம் - பந்தம்ன்னு யாராவது இருந்திருந்தா இந்நேரம் வந்திருக்க மாட்டாங்களா?" என ஆயிரம் எதிர்கேள்வி கேட்டு, அவனை மடக்கியவள், கடைசியாக கேட்ட அடுத்த கேள்வியில் நல்லானந்த் முழுதாய் தெளிந்தான்.

"இந்த உலகத்தில் இருக்கிற ஒரொரு அனாதை குழந்தைக்கும் சொந்தமே இல்லைன்னு சொல்ல முடியாது நல்லாப்பா. ஏதாவது ஒரு வகையில் இந்த உலகத்தில் இருக்கும் இன்னொருத்தரோடு கண்டிப்பா சம்பந்தப் பட்டிருப்பாங்க! ஆனா, அந்த சொந்தங்களுக்கு இவங்களைத் தெரியாததலோ...இல்லை அந்த சொந்தங்களுக்கு இவங்க மேல அக்கறை இல்லாம போனதாலையோ தான் அவங்க அனாதை ஆக்கப்பட்டிருக்காங்க. புரிஞ்சுக்கோங்க" என அவனைத் தெளிய வைத்தவள், அவனது தெளிந்த முகத்தைக் கண்ட சந்தோஷத்தில் தொடர்ந்து பேசினாள்.

"என்னையே எடுத்துக்கோங்க... எனக்கு மாமா, அத்தை, பெரியம்மா, சித்தப்பா, அவங்களோட பசங்கன்னு நிறைய சொந்தமிருக்கு. ஆனா அவங்களுக்கு நான் சுமையா தெரிஞ்சதால தானே நான் அனாதை ஆகிட்டேன்" என அவள் பட்டிருக்குப் பேசிக் கொண்டே போக, நல்லானத்தின் கைகள் அவளது வாயை அழுத்தி மூடின.

"இனி ஒரு தடவை - நான் அனாதை, எனக்கு சொந்தம்ன்னு யாருமில்லைன்னு ஏதாவது கிறுக்குத் தனமா உளறின... எங்க இருக்கோம்ன்னு கூட பார்க்காம அடி பிச்சிடுவேன்" என்றான் நல்லானந்த், மிரட்டல் நிறைந்தகுரலில்.

அவனது மிரட்டலில் உடல் சிலிர்த்தாலும், அன்பரசியின் மனம் இனிக்கவே செய்தது. அகத்தின் அழகை பளிங்கு போன்ற முகம் எடுத்துக்காட்ட, "சரிங்க நல்லா சார்" என்றாள்

அன்பரசி, சிறு சிரிப்புடன்.

அவளது "அனாதை" என்ற அறிமுகத்தில் கொதித்துப் போயிருந்த நல்லானந்த், இப்போது அவள் தன்னை விளித்த விதத்தில் முகம் மலர்ந்து சிரித்தான்.

அவன் இறுக்கம் தளர்ந்து சிரிப்பதை மனதில் நிறைத்துக் கொண்டிருந்த அன்பரசியின் கண்களில் உணவிருந்த தட்டு பட, "நல்லாப்பா...நீங்க இன்னும் சாப்பிடலையே! வீட்டுக்குப் போய் சாப்பிட்டிட்டு மதியை கூட்டிட்டு வரீங்களா?" என்றாள் அவன் மேல் கொண்ட அக்கறையின் விளைவாக.

"ஹ்ம்ம் போகணும்! நீ தனியா இருந்துப்பியா அன்பா?" என்றவனிடம், "இவ்வளவு நாள் எப்படி இருந்தேனாம்?" எனக் கேட்டு, அவனை வாட வைக்க மனமில்லாமல், "நான் இருந்துப்பேன். காலையில போட வேண்டிய மாத்திரை-ல வலி மாத்திரையும் இருக்கு. அதைப் போட்டா நல்ல தூக்கம் வரும். நீங்க வீட்டுக்குப் போயிட்டு வர சரியா இருக்கும். போங்க... போய் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறமா வாங்க!" என அவனைக்  கிளப்ப முயன்றாள்.

"ரெஸ்ட் எடுக்கிறதா? எவ்வளவு வேலை இருக்குத் தெரியுமா? இருக்கப் போற பத்து நாளில எல்லா வேலையையும் செஞ்சு முடிக்கணும்"

அதைக் கேட்டிருந்த அன்பரசியோ , "பத்து நாள் தானா?" என்றபோது முகத்திலும் குரலிலும் பெரும் ஏமாற்றம் தெரிந்தது.

"ம்ம் ஆமாடா! இந்த பத்து நாள் லீவே பெரிய போராட்டத்துக்கு அப்புறம் தான் தந்தாங்க!" என்ற வாக்கியத்தை அவன் முடிப்பதற்குள்,

"எப்போ திரும்ப வருவீங்க?" என அடுத்த கேள்வியைக் கேட்டாள் அன்பரசி.

"திரும்ப வரதா? அது சமீபத்தில முடியும்ன்னு தோணலை. அதனால உன்னையும் மலர்குட்டியையும் அங்க கூட்டிட்டுப் போகலாம்ன்னு பார்க்கிறேன்" என்ற அவனது பதிலில் நெஞ்சம் படபடத்தது.

எல்லாம் படு வேகமாய் நடப்பது போல் ஓர் பிரமை தோன்ற, "இப்போவேவா?" என்ற கேள்வியை உதடுகள் உதிர்ப்பதற்கு முன்னர் கண்கள் உதிர்த்துவிட்டன.

கலங்கியிருந்த அவளது முகத்தைக் கையில் ஏந்தி, "உன்னை இந்த நிலைமையில தனியா விட்டுட்டு போவேனா அன்பா? நான் விட்டாலும் திலோவும், அம்மாவும் என்னைக் கொன்னு கூறு போட்டிருவாங்க" என அவன் கேட்க,

"இப்போவே கூட்டிட்டுப் போய்டுவீங்களா? விசா எல்லாம் வாங்க வேண்டாமா? மதி பாப்பாவையுமா? திலோ அக்காவை விட்டுட்டு இருப்பாளா?" எனக் கேள்விகளை அவள் அடுக்க,

"உடனேயே இல்லை கண்ணம்மா! உன் கை சரியாகிற வரைக்கும் உன்னை அம்மாவோட கவனிப்பிலிருந்து கூட்டிட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை... திலோவும் ஒத்துக்கமாட்டான்னு நினைக்கிறேன்." என அவளது உடல்நிலையை முன்னிறுத்தி தான் வரைந்து வைத்திருக்கும் திட்டத்தை எடுத்துக் கூறியவன்,

"கல்யாணம் முடிஞ்சவுடனே உனக்கும், மலருக்கும் விசாக்கு அப்ளை பண்ணிடலாம். விசா வரதுக்கும், உன் கை சரியாகிரதுக்கும், மலர் உன்கிட்ட ஒட்டிக்கிறதுக்கும் சரியா இருக்கும்ன்னு நினைக்கிறேன்" என்றான். அவன் திட்டம்மிட்டப்படி அனைத்து காரியங்களும் நிறைவேறுமா? பொறுத்திருந்து பார்க்கலாம்!

அவனது திட்டத்தின் பிற்பாதியை காற்றில் விட்ட அன்பரசி, "கல்யாணமா?" என்றாள் வெளிப்படையான வியப்புடன்.

"அடேங்கப்பா! எவ்வளவு பெரிய கண்ணு! நானும் என் பொண்ணும் சேர்ந்தே விழுந்துவிடலாம் போலிருக்கே!" என்றவன், கேட்டிருந்த அன்பரசியின் முகத்தைப் பார்த்துவிட்டு, கேலியைக் கைவிட்டான்.

"என்னமா? இவ்வளவு ஆச்சிரியம்? கொஞ்ச நேரம் முன்னாடி தானே கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட்டேன். நீயும் மறைமுகமா சரின்னு சொன்னே? இப்போ எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி?" என அவன் மென்மையாய் கேட்க,

"ம்ம்...சொன்னீங்க. ஆனா...ஆனா...எல்லாமே ரொம்ப சீக்கிரம் நடக்கிற மாதிரி இருக்கு நல்லாப்பா" என்றாள் அன்பரசி மெதுவாக.

"ம்ம்..எனக்கும் உன்னை இந்த நிலைமையில கல்யாணம் பண்ணிக்கக் கஷ்டமாதானிருக்கு! ஆனா, எனக்கு வேற வழி தெரியல!" என்றவன், தன் நிலைமையை எடுத்துக் கூறத் தொடங்கினான்.

"இந்த பத்து நாள் லீவ் தந்தப்போ... ப்ராஜெக்ட் ரிலீஸ் ஆகும்போது சப்போர்ட்க்கு onsite-ல இருக்கணும்ன்னு சொல்லித் தான் கண்ணம்மா, லீவ் கொடுத்தாங்க. எனக்கு உன்னையும் மலரையும் பார்த்தே ஆகணும் போல இருந்ததால, சரின்னு சொல்லிட்டு வந்துட்டேன்! அதிலிருந்து இப்போ மாற முடியாதுடா... அங்க இருந்தே ஆகணும்! நடுலையும் லீவ் போட்டுட்டு வர முடியாது. இந்த பத்து நாளிலேயே கல்யாணம் முடிச்சிட்டா, விசா அப்ளை பண்ணிட்டுப் போய்டுவேன். நீயும் மலரும் சீக்கிரமே கனடா வந்துடலாம்"

நல்லாவின் நிலைமை நன்றாக புரிந்தாலும், அன்பரசியின் முகம் தெளிந்த பாடாய் இல்லை. "ப்ராஜெக்ட் சீக்கிரம் முடிச்சிட்டு வர முடியாதா? நாம இங்கேயே இருக்கலாம் நல்லாப்பா" என்றாள் பரிதாபமாய்.

"ஆறே மாசத்தில முடிஞ்சிடும். ஆனா, அது வரைக்கும் உங்களை விட்டுட்டு என்னால தனியா இருக்கமுடியாதும்மா. ப்ளீஸ்டா! எனக்காக... ப்ளீஸ்!" என அவன் கெஞ்ச, அன்பரசி முழுதாய் இளகிப் போனாள்.

"தேங்க்ஸ் அன்பா!" என அவள் சம்மதத்திற்கு நன்றியுரைத்த கையோடு, அப்புறம் உன்னோட வேலை, வீடு எல்லாம் பார்க்கணும். எத்தனை நாள் லீவ் சொல்லி இருக்கேமா? இல்லை இன்னும் சொல்லலையா?" என அடுத்த செட் கேள்விகளைத் தொடுத்தான், அவன்.

"விஜய்கிட்ட(அவர்களது மேலாளர்) எனக்கு விபத்து நடந்த விஷயத்தை அருண் சொல்லிட்டான். இருந்தாலும், நான் வேலைக்குப் போக மாட்டேன்" என்றாள் அன்பரசி, தீர்மானமாய்.

"ஹே, என்னதிது?" என்று வியப்பது இப்போது நல்லானந்தின் முறையானது.

"ஆமா. எனக்கு வீட்டில இருக்கணும். மதியோட முழு நேரமும் இருக்கணும். அவளுக்கு அம்மாவா...உங்களோட மனைவியா...உங்க வீட்டு மருமகளா..."

"வேலைக்குப் போனாலும், இதெல்லாம் சாத்தியம் தான் அன்பா"

"ம்ம் இருக்கலாம்! ஆனா, எங்கம்மா என்னைப் படிக்க வைக்கிறதுக்காக முழு நேரமும் வேலை செஞ்சாங்க. காலையில நாலு மணிக்குக் கிளம்பிரவங்க ராத்திரி ஒன்பது, பத்து மணிக்குத் தான் வீட்டுக்கு வருவாங்க. அதனாலேயே நான் அம்மாவோட நிறைய நேரம் இருந்ததில" எனத் தொடங்கியவள், சிறுது இடைவெளி விட்டு

"மதி...எங்கம்மா மாதிரி இருக்கா நல்லாப்பா! எங்கம்மாவோட இருக்கமுடியமா போன நேரத்திற்கு சேர்த்து நான் அவளோட இருக்கணும்!" எனக் கரகரக் குரலில் முடித்தாள்.

"சரிம்மா, உன்னிஷ்டம்!" என்ற நல்லாவின் குரலும் மிருதுவாய் அவளை வருடியது.

"அப்புறம்...ஒரு விஷயம். இதை எப்படி சொல்றதுன்னு தெரியலை! தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?" எனப் பலத்த பீடிகையுடன் அன்பரசி கூறிய விஷயம் இதோ - அவள் சாம்பாதிக்கும் பணத்தில் பெரும் பகுதியை "அகரம்" அமைப்பின் மூலமாக, இரு ஏழை குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குப் பயன்படுத்துவதாகவும், இப்போது அவள் வேலைக்குச் செல்லாத பட்சத்தில் என்ன செய்வது என்றும் வருங்காலக் கணவனைக் கேட்டாள் அன்பரசி.

"நான் நினைச்சதைவிட என்னோட அன்பரசி...அன்பில் உயர்ந்தவள் தான்!" என நல்லா, தன் மனதில் எண்ணியதை பெருமித வார்த்தைகளின் வாயிலாக வெளியிடவே,

"உங்களை விட இல்லை" எனத் தன் பெருமிதத்தை அன்பரசியும் வெளியிட்டாள்.

"அப்பா, அப்பாவோட ஃபிரண்ட்ஸ் மூணு பேர், தேவ், திலோ, நான் எல்லாரும் ஒரு டிரஸ்ட் மாதிரி அமைச்சு, சில பேரோட படிப்புக்கு உதவி பண்றோம். இவங்க ரெண்டு பேரையும் அதில சேர்த்துக்கிறதில் எந்த பிரச்னையும் இருக்கக் கூடாது. எதுக்கும் அப்பாக்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கலாம். என்னடா?" என அதற்கும் ஓர் தீர்வு கண்டவனை, கண்களில் நன்றியுடன் நோக்கியிருந்த அன்பரசிக்கு, இதை விட முக்கியமான விஷயத்திற்கு அவன் இன்னமும் வீட்டில் அனுமதி வாங்கவில்லையே என யோசனையாக இருந்தது.

அவளது மனதைப் படித்தவன் போல், "சரி அன்பு! நான் வீட்டுக்குக் கிளம்புறேன். வளரை வேற போய் தாஜா பண்ணனும்! அப்புறம் உன் ஆருயிர் சகோதரி - திலோ மேடம் வேற ஆயிரம் கேள்விகள் கொண்ட கேள்வித்தாளோட காத்திட்டு இருப்பாங்க! ரெண்டு பெரிய தலையையும் சரிகட்டி, இங்க கூட்டிட்டு வரேன் சரியா?" எனத் தான் செய்யப் போகும் வேலையை விவரித்தவன்.

"ஹ்ம்ம், நீ கொஞ்ச நேரம் படுத்து ரெஸ்ட் எடு! டாக்டர் அங்கிள் ரவுண்ட்ஸ் வர நேரமாகிடுச்சு. என்னைப் பார்த்தா...உன்னைத் தூங்கவிடாம தொல்லை பண்றேன்னு திட்டுவார்.சோ, நான் கிளம்புறேன் என்னடா? சமத்துப் பொண்ணா படுத்து தூங்குடா செல்லம்" என அன்பு கொண்டவளின்  கன்னத்தைத் தட்டிவிட்டு வெளியேறினான், மனம் நிறைய சந்தோஷத்துடன்!!

மனம் கவர்ந்தவளின் அன்பை அவளது வாய் மொழியாக பெற்றிருந்தவனுக்கு, அதுவும் ஒரே நாளில், இரண்டே மணி நேரங்களில் பெற்றிருந்தவனுக்கு வானில் பறப்பது போன்ற உணர்வு தோன்றியது.

மருத்துவமனையிலிருந்து வீடு செல்லும் பத்து நிமிட நேரத்தை, இனிய கற்பனைகளின் ஊடே பயணித்தவனை வீட்டு வாசலில் நின்றிருந்த திலோவும் - மதிமாளரும் வரவேற்றனர்.

"என்னடா? வாயெல்லாம் ஒரே பல்லா இருக்கு..கண்ணு ரெண்டும் சிறகில்லாம கனவு காணுது... என்ன விஷயம்? அன்பரசி சரி சொல்லிட்டாளா?" எனத் தன் அக்மார்க் கேள்விகளுடன் திலோ எதிர்கொள்ள, மகளோ வண்டியை விட்டு இறங்கிக் கொண்டிருந்த தந்தையிடம் தாவினாள்.

"ஹ்ம்ம்... வாய்ல தான் திலோ பல்லிருக்கும்! மூக்கு-ல பல்லிருந்தா பார்க்க நல்லாவா இருக்கும்!?! லூசு மாதிரியே கேள்வி கேட்பியே!"

"மலர் குட்டி...அம்மா லூசு ஆகிட்டாடா! குட்டியோட சின்ன வாய்க்குள்ள தானே டீத் இருக்கு! அம்மாக்கு இது கூட தெரியல பாரேன்!" எனத் தோழியிடம் பதில் சொல்லத் தொடங்கி, மகளிடம் சிபாரிசுக்கு நின்றான்,

அவனது கூற்றிற்கு ஒத்து ஊதாமல், "அம்மா லூசு சொன்னா... அச்சுவேன்" என அவனையே மிரட்டினாள் மகள்.

"அடேங்கப்பா!" எனப் பயந்தவன் போல் நல்லா நடிக்க, "நல்லா வேணும்! இப்படி திமிர் தனமா பதில் சொன்னா... நான் மட்டுமில்ல என் பொண்ணும் சேர்ந்து உன்னை அடி பிச்சிடுவோம்" என அவனது காதை வலிக்கத் திருகியவாரே உள்ளே அழைத்துச் சென்றாள்.

"ஆ...ஆ...ஹே வலிக்குது திலோ!" என அவன் கத்தியதை திலோ மதிக்கவில்லை என்றால், அவன் வலிக்கிறது என்று சொல்வதை 'விளையாட்டு' என்று நினைத்திருந்த மலர் சிறுது நேரம் சிரித்துக் கொண்டே வந்தாள். ஆனால் வீட்டிற்குள் நுழைந்த பின்னரும், தாய் தன் தந்தையின் காதை விடுவதாக இல்லை என்றதும், "அம்மா விது... நல்லாப்பா பாவம்" எனத் தந்தைக்காக பரிந்து வந்தது அந்த வெள்ளை மனம் கொண்ட மலர்!

"உங்கப்பா ரொம்பத் தான் பாவம்! அவனைப் பார்த்ததும் எங்களையெல்லாம் உனக்குப் பத்தாதே! போடி" என சிலிர்த்துக் கொண்ட திலோ, அவளது கோரிக்கையை நிறைவேற்றவும் தவறவில்லை.

திலோவிடமிருந்து விடுதலை பெற்ற காதை வேண்டுமென்றே தடவி விட்டுக் கொண்ட நல்லானந்த், முகத்தில் பெரும் அப்பாவித் தோற்றத்தைக் கொண்டு வந்து "ரொம்ப தேங்க்ஸ்டா குட்டி!" என மகளிடம் நன்றியுரைத்தான்.

அதை நடிப்பென்று உணராத மகளோ, பெரிய காரியத்தை சாதித்து விட்டது போல் வாய் கொள்ளா சிரிப்புடன் கிளுக்கிச் சிரித்தாள்! மகளின் வெள்ளை சிரிப்பில் மனதை பறிகொடுத்த பெற்றோர் இருவரும், தங்களை மறந்து ரசித்திருந்தனர்.

ரசிப்பினூடே, "ஹே மலர்குட்டி, நல்லாப்பா உனக்கு தேங்க்ஸ் சொல்லி இருக்காங்களே! நீங்க அதுக்கு என்னடா பதில் சொல்லணும்? அம்மா சொல்லித் தந்தேனே..." எனத் திலோ நினைவூட்டியதும், "வெல்கம் சொல்லணும்" என்ற செல்லச் சிட்டு, "வெல்கம் நல்லாப்பா" என்றது முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டு!

"அச்சோ... தேங்க் யூ டா செல்லம்" என நல்லா மீண்டும் கொஞ்ச, மகள் "வெல்கம்" எனப் பதிலுரைக்க, அவன் மீண்டும் "தேங்க்ஸ்" என்றான்.

இப்படியாக இருவரும் மாறி மாறி சொல்லிக் கொண்டிருக்க, ஐந்தாவது "வெல்கம்" சொல்வதற்கு வாய் திறந்த மதிமலர், "போ நல்லாப்பா... உனக்கு வெல்கம் கிதையாது. சும்மா...சும்மா... தேங்க்ஸ் சொல்த" என அலுத்துக் கொண்டவாறே அவனிடமிருந்து கீழிறங்கமுற்பட்டாள்

"சரிடா...சரிடா...அப்பா இனிமேல் தேங்க்ஸ் சொல்லலை. அப்பா மடில உட்கார்ந்துக்கோங்க" என்றவன், "திலோ, வளர் எங்க?" என்றான் கிசுகிசுப்பான குரலில்.

"எதுக்கு இப்போ நீ ஹஸ்கி வாய்ஸ்ல பேசுற?" என்றாள் அவளும் கிசுகிசுப்பாகவே.

"சும்மா ஒரு எஃபெக்ட்க்குத் தான்" எனத் தன் கிசுகிசுப்பை அவன் தொடர, அவன் மடியிலிருந்து கீழே இறங்கிய

மலர் தன் பாட்டியிடம் சென்று, "பாத்தீ! நல்லாப்பா கூப்தா" என்றாள் அவளும் கிசுகிசுப்பாகவே!

"அப்படியாடா தங்கம். வாங்க போய் பார்க்கலாம்!" - பேத்தியுடன் மகன் அருகில் வந்தவர், மகனும் மருமகளும் அதே கிசுகிசுப்பைத் தொடர்ந்து கொண்டிருக்க, பேத்தியின் வாயில் விரல் வைத்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"வளர், உனக்கு மதிய சாப்பாடு செய்றாங்க! மட்டன், மீன், முட்டை...தடபுடலா நடக்குது"

"ஹய்யோ ஹய்யோ! வளராத வளர்ன்னு தினம் ஒரு நூறு தடவை நிரூபிக்கணுமா உங்க மாமியாருக்கு! கொஞ்சம் எடுத்துச் சொல்றது!"

"அச்சோ, என் மாமியார்கிட்டயா? ரொம்ப திட்டுவாங்களேடா நல்லா... அவங்க திட்டினா எனக்கு ஒரே அழை அழையா வருமே! நான் அழுதுட்டே எங்கம்மா வீட்டுக்குப் போய்ட்டா புருஷன் என்னடா செய்வார்? அவருக்கு வேற நான் ஒரே பொண்டாட்டி!! ஹோ மை கடவுளே…எனக்கு ரொம்ப பயமாயிருக்கே!! " எனத் தன் கிசுகிசுக் குரலில் மேலும் பயத்தைக் கொண்டு வந்த திலோவின் காதுகள் வளரின் பிடிக்குச் சென்றன.

"அடி கழுதைகளா! எப்போ பார்த்தாலும் என்னை வச்சு என்ன கேலி?" எனத் தன் அர்ச்சனையை ஆரம்பித்து,

"என் இரண்டாவது மருமக வரட்டும்.உங்களையெல்லாம் ஒரு கை பார்க்கிறேன்! ஹ்ம்ம் அவ எப்போ தான் வருவாளோ... இவனும் அசைஞ்சே கொடுக்க மாட்டேங்கிறான். கடவுள் தான் என்னை உங்ககிட்டிருந்து காப்பாத்தணும்" எனப் புலம்பலில் முடித்தார்.
"ச்சே ச்சே! எங்க அம்மா இப்படி புலம்புறதை பார்த்துட்டு சும்மா இருந்தா, இந்த உலகம் அவங்களோட தவப்புதல்வனை தப்பா பேசாது!" என நல்லானந்த் தொடங்க,

யாருடா அந்தத் தவப்புதல்வன்?" என யோசிப்பது போல் பாவனை செய்த திலோ, "ஹோ நீயா? அப்போ கண்டிப்பா பேசுமடா நல்லா "என மிகப் பரிதாபமாய் ஒத்து ஊத,

"அப்படி ஒரு அவச்சொல்லை நான் எடுத்தா, அது என்னைப் பெற்ற தாய்க்கு எவ்வளவு அவமானம்? அந்த அவமானம் என் தாய் பட விடலாமா திலோ?" என்ற நல்லாவின் கேள்விக்கு

"கண்டிப்பா விடக் கூடாது" என்ற பதில் சட்டென வந்து விழுந்தது திலோவிடமிருந்து.

"கரெக்ட்! அதனால, அவங்களுக்கு இரண்டாவது மருமகளைக் கொண்டுவரதா நான் முடிவு பண்ணிட்டேன்!" - சந்தடி சாக்கில் நல்லா, தன் காதலை மெல்ல கோடி காட்ட,

"அப்போ, அத்தையை பொண்ணு பார்க்கச் சொல்லலாம்ன்னு சொல்லு" என்ற திலோவின் குரலில் குறும்பு கூத்தாடியது.

வளருக்கும், மலருக்கும் தெரியாத வண்ணம் அவளை முறைத்த நல்லா, "அந்தச் சின்ன வேலையைக் கூட என் அம்மாவை செய்யவிட்டா நான் எப்படி நல்லப்பிள்ளை கூட்டணியில் சேர்வது?" என்றான் நல்லவனின் முகத்தோடு.

"ஹ்ம்ம்...ஆமாமில்லை! நீயும் எப்ப தான் நல்லவனாகிறது..." எனத் திலோ "ஆமா" சாமி போட, அதற்கும் ஓர் மறைமுக முறைப்பு பரிசாகியது.

"ஹே நீ சும்மா கிட, எங்கம்மாவுக்கும் நான் நல்லவன் ஆகணும்கிற எண்ணம் இருக்குமில்லை. என்னம்மா இருக்குத் தானே!" என வளர்மதியிடம் திரும்பி ஒப்புக்கு ஓர் கேள்வியைக் கேட்டவன், அவரது வியந்த பார்வையைக் கண்டுகொள்ளாமல் சட்டென திலோவின் புறம் திரும்பி,

"அப்படித் தானாம்!! பெண் பார்க்கிற சின்ன வேலையைக் கூட எங்கம்மா செய்யக் கூடாது என்ற எண்ணத்தில்...நானே ஒரு அருமையான பொண்ணை நானே பார்த்துட்டேன்! அவங்க வந்து, "அழகுடா அன்பரசி!"ன்னு சொன்னா மட்டும் போதும்" என ஒருவாறாய் அன்பரசியைப் பற்றி சொல்லி முடித்தே விட்டான் நல்லானந்த்.

"யாருடா அன்பரசி?" என வளர் விழித்துக் கொண்டு வினவ,

"உங்க இரண்டாவது மருமக அம்மா! கொஞ்ச நேரம் முன்னாடி நீங்க தேடினீங்களே! அவளே தான்" என்றான் நல்லா, முகத்தில் திவீரத்துடன்!

"ஹான்" எனப் பிளந்த வாய் பிளந்த வண்ணம் வளர் நின்றிருக்க, "ஒரு பெரிய பலாப்பழமே வாய்க்குள்ள போய்டும் போலிருக்கே!" என்றவாறே தாயின் தாடையைப் பிடித்துக் கொஞ்சிய நல்லாவை இமைக்காமல் பார்த்தார் வளர்மதி.

"என்ன வளர் இது? எவ்வளவு முக்கியமான விஷயம் சொல்லியிருக்கேன்... எப்படியா ரீயாக்ஷன் கொடுக்கிறது? எங்கடா என் இரண்டாவது மருமக? வா உடனே பார்த்துட்டு வரலாம்ன்னு இந்நேரம் கிளம்பியிருக்க வேண்டாம்... வேஸ்ட் வளர் நீங்க?" என மகன் சிரிக்க, தாய் கோபித்துக் கொண்டார்.

"நீ ஏன் பேசமாட்டே! தோளுக்கு மேல வளர்ந்துட்டீங்க இல்லை! அதான்! இப்போ பார்த்து வச்சிருக்க என் சொந்தக்காரப்பொண்ணு வீட்டில என்ன பதில் சொல்லுவேன்?" என அவர் முகத்தைத் திருப்பிக் கொள்ள, திலோவை ஒரு வினாடி திரும்பப் பார்த்த நல்லானந்த், மீண்டும் தாயிடம் வந்தான். !!

"அவங்ககிட்ட கண்டிப்பா கல்யாணம் நடக்கிற மாதிரியெல்லாம் சொல்லலையேம்மா. அவங்களும் மலரை முழுமனசோட ஏத்துக்கிட்ட மாதிரி தெரியலையே! அப்புறம் என்ன?" எனத் திலோ சமாதானப்படுத்த முற்பட்டாள்

"அது சரி தான்! அவங்களைப் பத்தி பிரச்சனையில்லை! ஆனா என் கோபமெல்லாம் இவன் மேல தான்! இதென்ன இவன் இஷ்டத்திற்கு பெண் பார்க்கிறது?" என வளர்மதி தன் கோபத்தை வெளிப்படையாகவே வெளியிட்டார். !!

அதை கேட்டிருந்த நல்லா "ஹோ வளர் பேபி! என்னடா கோபம்... சாரிமா, என்னை மன்னிச்சிடுடா ப்ளீஸ்... நான் உன் செல்லப்பையன் தானே! ப்ளீஸ் ப்ளீஸ் மன்னிச்சுடேன்! என் செல்லமில்ல... நோ கோபம்டா...என் புஜ்ஜூம்மா... என் தங்கம்" எனத் தாயைக் கொஞ்சியே சமாதானப்படுத்த முயன்றான்.

அவன் கொஞ்சலில் இறங்கியதைக் கண்ட மலர், "என் செல்லமில்ல..." எனத் தன் பங்கிற்கு பாட்டியின் தாடையைப் பிடித்துக் கொஞ்சினாள்!

மகளின் கொஞ்சலில் சிரித்த நல்லா, தாயின் கன்னத்திலும் மகளின் கன்னத்திலும் மாறி மாறி முத்தமிட்டான்.

"ச்சி..விடுடா!" எனக் கன்னத்தைத் துடைத்துக் கொண்ட வளர்மதியின் முகத்தில் கோபம் இருந்திருந்தால் நல்லா அவரைப் புரிந்து வைத்திருப்பது பொய்யென்று ஆகிவிடாது?!

அவனது புரிதல் மெய்யாக்கும் வண்ணம், "அன்பரசி எங்க இருக்கா? ஹாஸ்பிடல்-ல இருக்க திலோவோட ஃபிரண்ட் தானே! "எனக் கேட்டு, நல்லாவின் கண்கள் விரியவும், "ஹை என்னை ஏய்க்க முடியாதாக்கும்" எனச் சிரிப்பில் முடித்தார் அன்னை.

"கிரேட் வளர்ம்மா நீங்க!" என திலோ ஒரு புறமும், "தேங்க்ஸ் வளர்" என நல்லா மறு புறமும், "என் தங்கப் பாத்தீ" என மலர் நடுவிலும் என அவரைக் கொஞ்சித் தீர்த்தனர்.

"திலோ அவளுக்கு கை, கண்ணுல அடி பட்டிருக்குன்னு சொன்னாளே! மலருக்கு உடம்பு முடியாததால என்னால அந்தப் பொண்ணை...சை அன்பரசியைப் போய் பார்க்கவே முடியல! இப்போ போய் பார்த்துட்டு வரலாமா?" என்றபோது தாயை நினைத்து, நல்லாவின் மனம் பூரித்தது.

அவர் கூறியதில் திலோவும், நல்லாவும் நெகிழ்ந்து போயிருக்க, மலரோ அவர் கூறியதில் தனக்கு உடம்பு முடியாததை மட்டும் புரிந்துகொண்டவளாய் "பாத்தீ...பாப்பாக்கு ஆ... வாய்-ல ஆ.." எனத் தன் தாடையிலிருந்த பிளாஸ்டரை மெதுவாய் தடவிக் கொடுத்தாள்.

"வலிக்குதாடி ராஜாத்தி! சரியாகிடும்டா குட்டு" எனப் பாட்டி கொஞ்ச, அவரிடமிருந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டான் நல்லானந்த்.

"என் மருமகளைப் பார்க்க எப்படா போகலாம்?" என மகனிடம் வளர்மதி வினவ, மகனோ "கண்டிப்பா சாயங்காலம் போகலம்மா, சரியா?" என்றவாறே மகளின் காயத்திற்கு மருந்து போட உள்ளே நடந்தான்.

அவன் பின்னாலேயே வந்த தாயார், "நல்லா, மலரைப் பத்தி...அந்தப் பொண்ணுகிட்ட சொல்லிட்டே தானே!" என்றார் மெதுவாக.

"சொல்லிட்டேன்மா. அவளுக்கு மலரை ரொம்பப் பிடிச்சிருக்கு!" என வெண்பற்கள் தெரிய சிரித்து, தாய்க்கு நம்பிக்கை கொடுத்தவன்,

“பாப்பாக்கு மருந்து போட்டு, தூங்க வச்சுட்டு வந்து உங்ககிட்ட எல்லா விஷயமும் சொல்றேன் வளர். பத்தே நிமிஷத்தில வரேன்! சாப்பாடு எடுத்து வைங்க" என அவரை அனுப்பியவன், திலோவிடம் மலரின் உணவைப் பற்றி கேட்டுத் தெரிந்து கொண்டு, மகளுக்கு மருந்திட்டு உறங்க வைத்தான்.

மகளின் உறக்கத்தை உறுதி செய்து கொண்டு நல்லா கீழே இறங்கிவர, அடையும் தேங்காய் துவையலுமாய் அவனை எதிர்கொண்டனர் மாமியாரும், மருமகளும்.

சூடாய் தட்டில் விழுந்த ஒரொரு அடைக்கும் ஒரொரு தகவல் என்ற கணக்கில், உணவு உண்டு முடித்தப்போது அன்பரசியைப் பற்றிய தகவல் அனைத்தும் பகிரப்பட்டிருந்தது.

தன் மகனின் மனம் கவர்ந்தவள் என்றதிலேயே அன்பரசியின் பால் அன்பு செலுத்த ஆரம்பித்திருந்த வளர்மதிக்கோ, அன்பரசியின் பின்னணியைக் கேட்டதும் ஒரேடியாக உருகிவிட்டதோ.

அவரே இப்படி என்றபோது, திலோவை பற்றி கேட்கவும் வேண்டுமா என்ன? அன்பரசியின் அடிப்பட்ட தோற்றத்திலும், அன்றைய நிலையிலேயுமே பாகாய் கரைந்திருந்தவள் இப்போது கண்களில் காவிரியை கொண்டு வந்து, தன் உருக்கத்தையும் நெருக்கத்தையும் எடுத்துரைத்தாள்.

ஆனால் அவளே, நல்லானந்த் மலரையும் அன்பரசியையும் கனடா கூட்டிச் செல்வதாக கூறவும் "என்னது?" என மிகுந்த அதிர்ச்சியை முகத்தில் காட்டி, அவனை முறைத்தாள்!

தான் அன்பரசியையும், மலரையும் கனடாவிற்கு அழைத்துச் செல்கிறேன் என்ற விஷயத்தை, திலோ ஒத்துக்கொள்ள மாட்டாள் என அறிந்தே இருந்த நல்லானந்திற்கு அவளது அதிர்ச்சி புதிதாய் இருக்கவில்லை.

"திலோ, எனக்கு நீ என்ன நினைக்கிறன்னு புரியுது. ஆனா...என்னோட நிலைமை..."

"என்ன உன்னோட நிலைமை? பெரிய மண்ணாங்கட்டி நிலைமை! அவங்க ரெண்டு பேரையும் கனடாக்கு அனுப்ப முடியாது. வேணும்னா நீ இங்க வா" என்றதோடு பேச்சு முடிந்தது என்பது போல், உணவு மேசையிலிருந்து எழுந்து மலர் படுத்திருந்த அறைக்குச் சென்றவள், கதவை அறைந்தும் சாற்றி கொண்டாள்.

"திலோ...திலோ..." என நல்லா கத்த, அது அவளது காதில் விழுவது போலவே தெரியவில்லை.

இளைய மகனும், தன் அருமை மருமகளும் சண்டை போடுவதை மௌனமாய் பார்த்திருந்த வளர்மதி, மகனின் கையில் ஒரு கப் காபியைக் கொடுத்து "அவகிட்ட கொஞ்ச நேரம் கழிச்சு பேசிப்பாரு. புரிஞ்சுப்பா!" என்றார் மெதுவாக.

"ம்ம் சரிம்மா" என்ற மகனின் முகம் தெளியாமல் இருப்பதைக் கண்ட தாய்க்கு வருத்தம் மேலோங்க, அவனது தலையைக் கோதிக் கொடுத்து "இங்கேயே வந்திடேன் நல்லா! இந்த பத்து நாள் முடிஞ்சு திரும்பப் போனா தானே இந்தியா வரவிட மாட்டாங்க? நீ போக வேண்டாம். இங்கேயே இருந்திடு கண்ணா. எல்லாரும் ஒண்ணா ஒரே வீட்டில இருக்கலாம்" என்றார்.

முந்தைய இரவு தன் தாயைப் பற்றிய எண்ணியதை நினைத்த நல்லானந்திற்கு, அந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது. "ஹய்யோ வளர், சமத்து வளர் நீங்க! என்னோட கணிப்பைப் பொய்யாக்காம நான் நினைச்சதையே பேசுவீங்களே! செல்லச் சக்கரை கட்டி" என தாயின் இரு கன்னத்தையும் இப்படியும் அப்படியுமாக ஆட்டி, குழப்பங்கள் விலகிய மனதுடன் எழுந்து சென்றான்.

"நான் என்ன சொல்றேன்? நீ என்ன பதில் சொல்ற?" என வளர்மதி விழித்துக் கொண்டிருக்க, நல்லானந்த் சீட்டியடித்தப்படியே தொலைக்காட்சி பெட்டியின் முன்னர் அமர்ந்தான்.

"என்ன லுக்கு? போய் சமையலைப் பாருங்க வளர்! அங்க உங்கச் சின்ன மருமக வேற பசியோட இருப்பா...போங்க போங்க" என அவரை விரட்டி, முதுகில் இரு பெரும் அடிகளை வாங்கிக் கொண்ட பின்னரும், நல்லாவின் புன்னகை மாறவே இல்லை.

புன்னகை மாறாதது மட்டுமில்லாமல், தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்த காதல் பாடலைப் பார்த்தவாறே கண்களில் கனவு வேறு மிதக்க ஆரம்பித்தது.

சரியாக பத்து நிமிடத்தில், அவன் பின்னால் வந்து நின்ற திலோத்தமை, பின்னந்தலையில் ஒரு தட்டு தட்டி, "திமிரு, திமிரு, உடம்பு முழுக்க திமிரு" என்றாள் கடித்தப்பற்களின் ஊடே.

தன் தாய் தனது கணிப்பைப் பொய்யாகாமல் போனதில், தன் தோழியைப் பற்றிய தனது கணிப்பும்( "அவளது கோபத்தை ஆதரித்தே பேசினால் தான் அவளது கோபம் கூடும், அதை அப்படியே கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டால் அவளாகவே வருவாள்" என்ற கணிப்பு தான்அது) பொய்யாகாது என சர்வ நிச்சயமாய் நம்பிய நல்லானந்த், கோபித்துக் கொண்டு சென்ற திலோவை உடனேயே சமாதானம் செய்யமாலிருந்தான்.

அதே போல் அவளும் வந்துவிடவே, அவளது வரவை எதிர்பார்த்தே இருந்த நல்லானந்த், "வாங்க மேடம்! எப்படி இருக்கீங்க? கோபமெல்லாம் போயாச்சா? கொஞ்ச நேரம் பேசலாமா?" என இதம் பதமாக பேசியவாறே, திலோவின் கைப்பிடித்து முன்னே இழுத்து அமர வைத்தான்.

"கோபம் இன்னும் இருக்கு. இப்போதைக்கு போகாது" என்ற அறிவிப்பை, அவனைக் கண்களால் எரித்தவாறே கூறினார் நல்லாவின் அண்ணியார்.

"ம்ம் சரி! போகாம அங்கேயே இருக்கட்டும். எனக்கென்ன வந்தது?" என நல்லா தோளைக் குலுக்க, "ஆமா நான் கோபப்பட்டா உனக்கென்ன? அழுதா உனக்கென்ன? செத்தா தான் உனக்கென்ன?" என வார்த்தைகள் தடித்துவிழுந்த அதே சமயம், திலோவின் கண்கள் கண்ணீரில் துடித்து சிவந்துபோயின.

Property

"லூசு மாதிரி பேசாதே திலோ!" என்ற அவனது அதட்டல் அங்கே வேலை செய்யாமல் போகவே, மடை திறந்த வெள்ளமாய் கண்ணீர் அங்கே ஓடியது.

மருமகளை அழுவதை கண்டு திடுக்கிட்ட வளர்மதி, போட்டது போட்டபடி சமையலறையிலிருந்து ஓடி வந்தார். "என்ன நல்லா இது?" என மகனைக் கடிந்தவாறே வந்த மாமியாரை பாய்ந்து கட்டிக் கொண்ட திலோ, "பாருங்கம்மா, மலரை கூட்டிட்டுப் போறானாம். நான் எப்படி அவளை விட்டுட்டு இருப்பேன்? கூட்டிட்டுப் போகக் கூடாதுன்னு சொல்லுங்க வளர்ம்மா" என அவள் குலுங்க,

"நான் மட்டும் மலரை விட்டுட்டு எப்படி இருப்பேன்? உன்னை மாதிரி தானே நானும்?" எனத் தன் நிலையும்அவளுடையதைப் போலத் தான் என்பதை மென்மையாகவே எடுத்துக் கூற முயன்றான், அவளது தோழன்.

"பெரிய பாசம்? இத்தனை நாள் இருந்தான் தானே? இப்போவும் அப்படியே இருக்கட்டும்! அவளை அனுப்ப முடியாது" என்றாள் திலோவும் தீர்மானமாக.

"இத்தனை நாள் இருந்தா...இனிமேலும் இருக்கனும்ன்னு என்ன சட்டமா?" என நல்லா நிதானமாய் எதிர்க்க,

"அப்படி கூடவே இருக்கணும்ன்னா அவனை இங்க கிளம்பி வரச் சொல்லுங்க. நான் வேண்டாம்ன்னு சொல்லலையே!" என்றபோது திலோவின் குரலில் பெரும் பிடிவாதம் இருந்தது.

"வரமுடியாத சூழ்நிலை என்றுதானே திலோ சொல்றேன். புரிஞ்சுக்கொயேன்! ப்ளீஸ்டா, திலோ! சீக்கிரமே வந்துடுறேன்! ஜஸ்ட் ஆறு மாசம்மா... ரெண்டு பேரையும் கூட்டிட்டு திரும்ப வந்துடுறேன்" என அவன் எதிர்ப்பை விட்டுவிட்டு, நிதர்சன கெஞ்சலுக்கு மெதுவாக வந்தான்.

"அதே ஜஸ்ட் ஆறு மாசத்தை நீ தனியா இருக்கிறது? நான் ஏன்டா என் பொண்ணை விட்டுத் தனியா இருக்கணும்?" என மேலும் அவள் சண்டைக்கோழியாய் அவள் சிலிர்க்க,

"இப்போ என்ன? மலரையும் அன்பரசியையும் நான் என்னோட கூட்டிட்டுப் போகக் கூடாது! அவ்வளவு தானே! சரி விடு, நான் மட்டும் போய்க்கிறேன்" என்ற நல்லானந்த்,

மலர் படுத்திருந்த அறைக்குள் நுழைந்து கொண்டான். ஆனால் திலோவைப் போல் கதவை அறைந்து சாற்றவில்லை. கோபமாய் கத்தவில்லை. நிதானம் குறையாத நடையுடனும், பேச்சுடனுமே உள்ளே சென்று மறைந்தான்.

அவனது திடீர் சரணடைதலில் திலோ சற்று வியந்து தான் போனாள். வடிந்த கண்ணீர், வியப்பில் நின்றுவிட அவன் சென்ற அறையையே பார்த்திருந்த திலோ, "என்னம்மா இவன்? டக்குன்னு சரின்னுட்டான்?" என்றாள் மாமியாரிடம்.

"இது நல்ல கதையா இருக்கே! இவ்வளவு நேரம் அவன் குழந்தையையும் அன்பரசியையும் கூட்டிட்டுப் போகக் கூடாதுன்னு அந்த அடம் பிடிச்சே? ம்ம்?" என மாமியாரே கேலியில் இறங்கியதும், பதிலேதும் பேசாமல் உணவு மேஜை அருகே இருந்த நாற்காலியில் அமர்ந்தவள், மேஜையின் மீது  தலை வைத்துப் படுத்துக் கொண்டாள்.

அருகே வந்து தலையை வருடிக் கொடுத்த வளர்மதி, அவளைத் தொந்தரவு செய்யாமல் தன் சமையலைக் கவனிக்கச் சென்றுவிட்டார்.

வீட்டிலிருந்த நால்வரில் பிரச்சனைக்கு மூல காரணமான மலரைத் தவிர்த்து மூவருமே, ஓரோர் துருவத்தில் இருக்க, நேரம் நிற்காமல் பறந்தோடியது.

ஒரு மணி நேரத்திற்குப் பின்னரும் வீட்டில் பலத்த அமைதி நிலவ, அதைப் பொறுக்க முடியாத திலோ, மகள் படுத்திருந்த அறைக்குச் சென்றாள்! அங்கே, கட்டிலில் நல்லானந்த் கால் நீட்டிப் படுத்திருக்க, அவனது மார்பை மெத்தையாக்கி மலர் தூங்க, நல்லானந்த் அவளை அரவணைப்பாய் அணைத்திருந்தான். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்து துயில் கொண்டிருந்ததைப் பார்பதற்கே அழகாய் இருந்தது.

அதுமட்டுமல்லாமல், உறங்கிக் கொண்டிருந்த குழந்தை லேசாக அசையவே  நல்லா விழித்துவிடுவானோ என்ற பதட்டத்தில், திலோ அவளைத் தூக்க முற்பட, மலர் நல்லாவின் பனியனை இறுகப்படித்துக் கொண்டு வரமாட்டேன் என்றாள். அவளது கைகளில் தெரிந்த இறுக்கத்தையும், குழந்தையை அணைத்திருந்த நல்லாவின் கைகளில் தென்பட்ட அழுத்தத்தையும் பார்த்த திலோவிற்கு, உள்ளுக்குள் ஏதோ அசைந்தது.

மெலிதான பெருமூச்சை வெளியேற்றியவாறே வெளியே வந்த திலோத்தமை, அங்கே மருத்துவமனையிலிருக்கும் அன்பரசிக்கு உணவு தயாரிக்கும் வேளையில் மாமியாருடன்

ஈடுபட்டாள், அமைதியாகத்தான்!

உணவு செய்து முடித்ததும், "அம்மா, நல்லாவை எழுப்புறீங்களா? அன்புக்கு சாப்பாடு கொடுத்துட்டு வந்துடலாம்" என்ற மருமகளிடம் ஒன்றும் சொல்லாமல், மகனை எழுப்பச் சென்றவர் பேத்தியையும் எழுப்பிக் கூட்டிவந்தார்.

தாய் எழுப்பியதும், எழுந்து குளியல்றைக்குள் சென்றவன், ஐந்தே நிமிடத்தில் வீட்டின் கூடத்திற்கு வந்திருந்தான். "போகலாமா திலோ! அம்மா நீங்களும் வரீங்களா? பாப்பாவையும் கூட்டிட்டுப் போகலாமா திலோ?" என ஒன்றுமே நடக்காதது போல் நல்லானந்த் கேள்விகளைத் தொடுத்து, அவர்களைக் கிளப்பினான்.

"ம்ம், நானும் மலரைக் கூட்டிட்டு வரேன்!" என வளர்மதி அறிவிக்க, பைக்கை விடுத்து காரை எடுத்தான் நல்லா. நால்வருமாய் மருத்துவமனைக்குள் நுழைய, அன்பரசியின் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்ததுமே, காலையில் தந்தை கடிந்து கொண்டதை சட்டென மனதில் கொண்டுவந்த மதிமலர், தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, கால்களை உதைத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

தந்தை, தாய், பாட்டி என யாரது சமாதானமும் அங்கே செல்லுபடியாகாமல் போகவே, "நீங்க ரெண்டு பெரும் அன்புவைப் பார்த்துட்டு வாங்க! நான் குட்டியை வச்சுக்கிட்டு வெளியே நிற்கிறேன்" என்ற நல்லா, மருத்துவமனையை விட்டு வெளியேறினான்.

திலோவும், வளர்மதியும் அன்பரசியின் அறைக்கதவை மெல்ல தட்டிவிட்டு, உள்ளே சென்றபோது உடல் தளர்ந்து, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் நல்லானந்தின் வருங்காலத் துணைவி.

தளர்ந்த அவளது முகத்தில் தெரிந்த நிம்மதியும், ஆழ்ந்த சந்தோஷமும், இதழ் கடையில் பூத்திருந்த சிறு சிரிப்பும், மலரத் துடித்த இமைகளின் ஈரமும் பார்த்திருந்த இரு மங்கையரையும் நெகிழ்த்தியது.

திலோவிற்கு, முதல் நாள் அன்பரசியின் முகத்தில் தெரிந்த குழப்பமும் ஆத்திரமும் சுத்தமாய் வடிந்ததோடு நில்லாமல் அதில் நிம்மதியும், சிரிப்பும் குடி வந்திருப்பதில் சந்தோசம் என்றால்,

வளர்மதிக்கோ தன் இரு மருமகள்களும் அழகு என்ற பூரிப்பு, இரு மகன்களின் வாழ்வும் செழிப்புடன் சந்தோஷமாய் இருக்கும் என்ற நிம்மதி! தாயுள்ளம் அல்லவா? மகன்களை முன்னிறுத்தியே நடக்கும் சம்பவங்களைப் பார்த்தது அவர் மனம்!

மாசுமருமவற்ற அன்பரசி, மாசில்லாத தன் மகனது வாழ்வில் மேலும் பிரகாசமாக்கி, தூய்மையே உருவான மலரை தன் அன்பால் மலர வைத்து, தானும் தாய் மலர்வாள் என்ற எண்ணம் அவளைக் கண்ட ஒரே நொடியில் வளர்மதிக்கு வந்துவிட்டது.

மெல்ல அவள் அருகில் சென்றவர், அவளது நெற்றியில் கைவைத்து அவளையே பார்த்திருந்தார். அவரது தொடுகையில் அசைந்த அன்பரசி, சில வினாடிகளில் கண் விழித்து, தன் அருகே நின்றிருந்தவரை குழப்பத்துடன் பார்த்தாள்.

ஆனால் இரண்டே நிமிடத்தில், அவளுக்கு இடப்பக்கமிருந்த திலோவைக் கண்ணுற்றவள், இருவரது முகத்திலும் தெரிந்த மகிழ்ச்சியை உள்வாங்கி, "அத்தே" என்றாள் மென்குரலில். "அத்தே" எனக் கூறிய அதே நாவு, சட்டென உதடுகளின் நடுவே கடிப்பட்டு நின்றது.

அவள் கன்னத்திலிருந்த காயத்தை மென்மையாய் தடவிக் கொடுத்த வளர்மதி, "அத்தை இல்லைடா, அம்மா!" என்றார் வாஞ்சையுடன்.

எதிர் பக்கமிருந்து மாமியார் அருகில் வந்த திலோத்தமை, "மை ஸ்வீட் வளர்ம்மா! அவங்களை அம்மான்னே கூப்பிடு அன்பு. she is so kind!" என அவரைக் கட்டிக்கொண்டாள்.
தன் தோள்மீது சாய்ந்திருந்த மூத்த மருமகளின் தலை மேல் லேசாக முட்டி, தன் பாசத்தை வெளியிட்டவர், "எழுந்துக்கோ அன்பா. சாப்பாடு சாப்பிட்டு அப்புறம் தூங்கலாம்" என்றவரை அன்பரசி விழி விரித்துப் பார்க்க, "என்ன இவ்வளவு ஆச்சரியம்?" என்றாள் திலோ.

"ம்ம்...அது...அது வந்து, நல்லாப்...நல்லா சா...ம்ம் மதியோட அப்பா, என்னை அப்படித் தான் கூப்பிட்டாங்க!" என ஒருவாராக திக்கித் திணறி, வெட்கத்தில் முத்தெடுத்து, உச்சரிப்பில் தடுமாறி, தன் விழி விரிப்பிற்கு காரணம் கூறினாள் அன்பரசி!

"சரி சரி, நடக்கட்டும்!" என திலோவும், "அழகுடா அன்பரசி நீ!" என வளர்மதியும் வியந்து முடித்தப்பின்னர், அன்பரசிக்கு உணவு எடுத்துக் கொடுக்க முற்ப்பட்டனர்.

"நீங்க சாப்டீங்களா அத்...அம்மா? " எனக் கேட்டு, "இனிமேல் தான்மா, நீ சாப்பிட்டதும் நாங்க வீட்டுக்குப் போய் சாப்பிட்டுக்கிறோம்!" என்ற பதிலைப் பெற்றவள், "மதி...மதியைக் கூட்டிட்டு வந்திருக்கீங்களா அக்கா?" என மகளைப் பற்றி வினவினாள், சிறு தயக்கத்துடன்.

"ஹ்ம்ம், ஆமா...நல்லாவும் மலரும் வெளியே நிக்கிறாங்க. அவளுக்குத் தான் ஹாஸ்பிடலை பார்த்தா, தொண்டை பெருசா திறந்துடுமே! ரொம்ப அழுததால நல்லா வெளியே வச்சிட்டு இருக்கான்" எனத் திலோ கூறவும், அன்பரசியின் முகத்தில் பெரும் இழப்பு தென்பட்டதை பார்த்திருந்த இருவருமே கண்கூடாய் கண்டனர்.

"அவ என்னைப் பார்த்து தான் பயப்படுறாளா? மதி குட்டிக்கு என்னைப் பிடிக்கலை போலேயே திலோக்கா!" என அன்பரசி மருக, அதில் உண்மையான தாயின் தவிப்பை இரு தாய்மாரும் உணர்ந்தனர் என்பதால்,

"ச்சே ச்சே, கண்டதையும் நினைச்சு கலங்காதே அன்பரசி! அவளுக்கு ஹாஸ்பிடலை பார்த்தாலே பயம். சும்மா நை..நைன்னுட்டே இருப்பா. நீ வீட்டுக்கு வந்ததும் உடனே ஒட்டிப்பா பாரேன்" என்ற திலோவைத் தொடர்ந்து,

"மலர் ரொம்ப சமத்து! முதல தான் கொஞ்சம் சுனங்குவா. பழகிட்டா போதும், ரொம்பப் பாசமா இருப்பா! நீ வீட்டுக்கு வா...எல்லாம் சரியாகிடும்." என்றார் வளர்மதியும் ஆறுதலாக.

"ஆமா, நீ எப்போ வீட்டுக்கு வர? ஹாஸ்பிடல்-ல எப்போ டிஸ்சார்ஜ் பண்றதா சொல்லியிருக்காங்க?" எனத் திலோவிற்குப் பதிலாக இப்போது வளர்மதி தன் கேள்விகனைகளைத் தொடர்ந்தார்.

டிஸ்சார்ஜ் பற்றிய விவரங்களை திலோ கூறவும், திருமணம் பற்றிய விவரங்களை கணவருடனும், மகனுடனும் பேச வேண்டும் என்ற முடிவுடன் அன்பரசியின் உணவு நேரம் முடிந்தது.

கடைசி வாய் உணவை உண்டு முடித்த மறு நிமிஷம், "மதியைக் கூட்டிட்டு வரீங்களா அக்கா? அஞ்சு நிமிஷம் ப்ளீஸ்..." என அன்பரசி கெஞ்ச, திலோ நெக்குருகிப் போனாள்!

"அம்மா நீங்க போறீங்களா? நான் போகட்டா?" எனக் கேட்டதிலேயே, நான் போகவில்லை என்ற செய்தி பொதிந்திருந்தது வளருக்குப் புரிந்ததோ இல்லையோ, இயல்பிலேயே புத்தி கூர்மையான அன்பரசிக்குப் புரிந்தது.

அவள் தனக்குப் புரிந்ததை வெளியே காட்டிக்கொள்ளாமல் வீற்றிருந்த அன்பரசியின் மனம், தன் வருங்காலக்கணவனுக்கும், அவனது ஆருயிர் தோழிக்கும் என்ன பிரச்னை?

ஒரு வேளை தன்னைத் திருமணம் செய்து கொள்வதைக் கூறியதும், அவர்களுக்குள் ஏதும் வாக்குவாதம் வந்திருக்குமோ? ஆனால் திலோ தன்னிடம் ஒழுங்காக தானே பேசுகிறாள்? என்ன பிரச்னை? என்ன பிரச்னை? என வெகுவாய் அடித்துக் கொண்டது.

அவள் அங்கே தவித்திருக்க, அவளது தவிப்பைத் தொடரவிடாமல், மலரின் பிடிவாதக் குரல் ஓங்கி ஒலித்தது.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்த நல்லா, அவளைக் கைகளுக்குள் அடக்க முற்பட, அவளோ திமிறி, துள்ளி, தந்தையை உதைத்து, கையால் குத்தி எனப் பல வகையில் படுத்திக் கொண்டிருந்தாள்.

அவளது பலவகை படுத்தலுக்குப் பதிலாக, "மதி! அடி கேட்குதா உனக்கு?" என ஒரே ஒரு அதட்டல் மட்டும் வந்தது, நல்லானந்திடமிருந்து. ஆனால் அந்த ஓர் அதட்டலே போதுமானதாய் இருக்க, மலர் சற்றே அரண்ட தோற்றத்தை தன் முகத்தில் பூசிக்கொண்டாள்.

"சும்மா, சும்மா, மதின்னு பேர் சொல்லி அவளை அதட்டாதீங்க! அதான் நான் அவளை மதின்னு கூப்பிட்டா கத்துறா!" என அன்பரசி, சட்டென உயர்ந்த குரலில் வருங்காலக் கணவனை அடக்கியதும்,

"அடேங்கப்பா, என் பையனை அடக்கி ஆழ அன்பரசி வந்துட்டாப்பா" என வளர்மதி குதூகலித்ததில், அங்கே பெரும் சிரிப்பலை எழுந்து அடங்கியது.

அந்த சிரிப்பலையில், மலரின் முகத்தில் தோன்றி மனதிற்கு இடமாறிய எரிச்சலும் கோபமும் பின்னுக்குத் தள்ளப்பட்டது அடுத்து வரவிருக்கும் பிரச்சனைகளுக்கு வித்தாகப்போகிறது என்பதை யாரும் அறிந்தாரில்லை.

மதிமலரின் ஒதுக்கத்தை அறியாத வீட்டினர் அனைவரும் நல்லானந்த் - அன்பரசி திருமணத்தைப் பற்றிய முடிவுகளை வேகமாய் எடுத்து, அதை விட வேகமாய் செயல்படுத்த தொடங்கினர்.

ஏற்கனவே, அன்பரசியின் நல்ல குணங்களை நேரடியாக கண்ணுற்றிருந்த பெத்தபெருமாள், அவளது பின்புலம் தெரிந்த மறுநொடியே மகள் என்ற பதவியை அவளுக்குக் கொடுத்துவிட்டார்.

நல்லா, கனடா சென்று திரும்பிய பின்னர் திருமணத்தை வைத்துக்கொள்ளலாம்.. அப்போது அன்பரசியின் உடல்நிலையும் சரியாகிவிடும் என பெத்தபெருமாள் எவ்வளவோ எடுத்துக் கூறியும், தான் கனடா போவதற்குள் திருமணத்தை முடித்தாக வேண்டுமென்று பிடிவாதமாய் நின்றான் மகன்!

திலோ அவனை யோசனையாய் பார்த்தாளே ஒழிய, குறுக்கு விசாரணை எதுவும் நடத்தவில்லை. அவளுக்கோ, மலரையும் அன்பரசியையும் உடன் அழைத்துச் செல்வது பற்றி நண்பன் அதன் பின்னர் வாயே திறக்கவில்லையே என வியப்பாய் இருந்தது. தானே சென்று கேட்கலாம் என்றாலும், தாய் மனம் இடம் கொடுக்கவில்லை.

தேவ்வும், வளர்மதியும் நல்லாவின் பக்கம் நிற்க, மஜோரிட்டியின் அடிப்படையில் நல்லானந்த் - அன்பரசியின் திருமணம், அன்பரசி மருத்துவமனையிலிருந்து வரும் தினத்தன்று என முடிவானது.

நடுவில் அன்பரசியின் நண்பர்கள் - அருண், ரகு, நித்யமேகலை - சத்யசேகரன் ஆகியோருக்கு விஷயம் சொல்லப்பட்டு, அவர்களது வியப்பு லிஸ்டில் சட்டென விழுந்து, பின்னர் வாழ்த்து லிஸ்டிற்கு மெல்ல வந்தது.

அருண், ரகு இருவரும் தயங்காமல் வாழ்த்தை தெரிவித்தனர் என்றால், நித்யாவும் அவளது கணவனும் அன்பரசியை கேள்வி மேல் கேள்வி கேட்டு குடைந்து எடுத்து விட்டனர்.

தன் மேல் அக்கறை கொண்டு அவர்கள் கேட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் பொறுமையாய் பதில் சொல்லிக்கொண்டே வந்த அன்பரசி, கடைசியில் "எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு நித்யா! அதுக்கும் மேலா மதியை ரொம்பப் பிடிச்சிருக்கு! அம்மா மாதிரியே இருக்க அவ எனக்கு வேணும் நித்யா... ப்ளீஸ்" என இறைஞ்சவும், உயிர் தோழி

சட்டென உடைந்து போய் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

என்ன தான் மனைவி சம்மதம் கூறியிருந்தாலும், அண்ணன் என்ற முறையில் சென்னைக்கு வந்து நல்லாவின் வீட்டைப் பற்றி விசாரிக்க வந்தான் சத்யசேகரன். ஆனால் வந்த இரு மணிக் கூறுகளிலேயே அவர்களது குடும்பத்தை அன்பரசிக்கும் மேலாக அவனுக்குப் பிடித்துப் போனது நிஜம்.

அக்கம்-பக்கத்தில் அவர்களுக்கு இருந்த நற்பெயர், மதிமலரிடம் அவர்கள் காட்டிய குறையா பாசம், தங்களைப் பற்றி விசாரிக்க வந்திருக்கிறான் என்று தெரிந்தும் அவனை மரியாதையாய் நடத்திய பாங்கு, அவர்கள் அளித்த மரியாதையிலும் எதையும் அதீதம் என்று கூற முடியாத வண்ணம் தென்பட்ட கண்ணியம், திலோ அன்பரசியிடம் கொண்டிருந்த பிணைப்பு, வளர்மதியின் வெள்ளை மனம், எல்லாவற்றுக்கும் மேலாய் அன்பரசிக்கு மலர் மீது தோன்றி விட்டிருந்த பாசம் - என அவனது பிடித்தம் பட்டியலில் நிறைய விஷயங்கள் இருக்கவே, அவனது சம்மதமும் அன்பரசிக்கு வெகு சுலபமாய் கிடைத்தது.

அனைவரது சம்மதமும், வாழ்த்தும் புடை சூழ, அன்பரசியின் மணநாள் இனிதே வந்தது.

வண்ண மயில் மீதமர்ந்து, வெற்றி திரு நீறணிந்து வலம் வரும் ஷண்முகன் சந்நிதியில், தன் மனமெனும் பீடத்தில் அரசியாய் வீற்றிருந்தாலும், அந்த கர்வம் சற்றுமில்லாது, அன்பை மழையாய் பொழியும் அன்பரசியை, தன் வாழ்வை அரசாளும் முடி சூடா ராணியாக்கினான் நல்லானந்த்!!

பனி படர்ந்த முன்காலை வேளை இளம்சிவப்பு ரோஜாவாய் பூத்திருந்த அன்பரசியின் மேனியை, அடர்சிவப்பு பட்டு அலங்கரிக்க, பச்சை வண்ணத்தில் அடர்ந்திருந்த ஜரிகை சந்தோஷ நறுமணம் வீசிக் கொண்டிருந்தவளின் அழகை மென்மேலும் மெருகேற்றி காட்டவே, நல்லானந்தால் அவளிடமிருந்து கண்ணை எடுக்கவே முடியவில்லை.

அவளது பளிங்கு முகத்தைத் தாங்கியிருந்த வெண்சங்கு குழலான கழுத்தைச் சுற்றி சென்ற நல்லாவின் வலிய கரங்கள், அவளது தேகத்தைத் தீண்டியதும் அவனைச் சிலிர்த்தெழ வைத்தது. பவளமென சிவந்திருந்த மேனி வெட்கத்தில் மேலும் சிவப்பாக, இமை தாழ்த்தி, சிரம் பணிந்து அவன் அணிவித்த தாலியை வாங்கிக் கொண்டவளின் கன்னக் கதுப்பை ரசித்தப்படியே திரு நாண் பூட்டிய அன்பரசியின் அரசன், மூன்று முடிச்சுகளையும் தானே

போட்டக் கையோடு, வெட்கம் தகித்திருந்த மேனியில், வண்ணமில்லா மொட்டுக்களாய் பூத்திருந்த வேர்வை முத்துக்களை சுண்டிவிட்டு அவளை சிலிர்க்க வைத்தான்!

"சும்மா இருங்க, நல்லாப்பா!!" மெல்லிய குரலில் வெளிவந்த அவளது அதட்டல், நல்லாவை அடக்கி ஆண்டிருந்தால் அன்பரசியின் பெயரிலிருக்கும் அன்பிற்கு அர்த்தமில்லாமல் போய்விடுமல்லவா?! அதனால் அவளது அந்த முனுமுனு அதட்டல், நல்லானந்தின் திகு திகு தீண்டலை ஸ்வரமாக்கி, இனிய சங்கீதமாய் காதலைப் பொழிந்தது.

"போதும்டா, கண்ணை அங்க இங்க நகற்றி சுத்தி இருக்கவங்களையும் பாரு!" என தேவநந்தன், தம்பியின் தோளில் தட்ட,

"தோ டா, வந்துட்டார் சார்! நீ திலோ கழுத்தில தாலியைக் கட்டிட்டு, மூணு மணி நேரத்திற்கு தாலி கட்டின கையை யாருக்கும் கொடுக்க மாட்டேன்னு அடம் பிடிச்சதெல்லாம் மறந்து போச்சா?" என தம்பியார் கண்ணை சிமிட்ட,

"அடம் பிடிச்சேன்னா? நானா? திலோவோட அருமை கணவனா? கண்டிப்பா இருக்காது! வேணும்னா உன்னோட அண்ணனா இருக்கும்டா தம்பி! மரமண்டையைத் தட்டி யோசிச்சுப் பாரு! புரியும்!" என்றார் தமையனாரும் அதே குறும்புடன்.

"திலோகிட்ட பாடம் படிக்கிறது நல்லாவே தெரியுது" என நல்லானந்த் மீண்டும் கேலியில் இறங்க, அவனது கையைப் பிடித்து இழுத்து, கண்களால் வாளா இருக்கும்படி கூறினாள் அன்பரசி!

"என் பெண்டாட்டி உன்னைக் கேலி பண்ணக் கூடாதுன்னு சொல்லிட்டாடா தேவ்! அதனால இன்னைக்கு நீ பொழைச்சு போ!" எனக் கைகளை வீசி, பெருந்தன்மையாய் நல்லானந்த் பேசியதில், கூடியிருந்த அனைவருக்குமே சிரிப்பு விரிந்தது.

தன் தாய்மையையும் பொருட்படுத்தாமல், தோழியின் திருமணத்திற்கு நாகப்பட்டிணத்திலிருந்து வந்திருந்த நித்யாவிற்குத் தன் தோழியின் முகத்தில் தெரிந்த தேஜஸைப் பார்க்க பார்க்க மனம் பூரித்தது. தன் பூரிப்பைக் கணவனிடம் பகிர்ந்து கொண்டவள், அவனது காதுகளை ஒட்டையாக்கியது பத்தாது என்ற முடிவுடன், அவனை இழுத்துக் கொண்டு மணமக்களிடம் வந்து சேர்ந்தாள்!

தன் பரிசாக, அன்பரசிக்கு ஓர் முத்து மாலை செட்டை பரிசாய் கொடுதவளின் கண்களில் ஆனந்தமாய் நீர் நிறைந்ததைக் கண்டு, நெகிழ்ந்த அன்பரசி தோழியை அணைத்து தன் மகிழ்ச்சியை வெளியிட்டாள்.

சத்யசேகரனோ, "வாழ்த்துக்கள் நல்லானந்த்! எங்க அன்பரசிக்கு இப்படி ஒரு அன்பான குடும்பத்தை அமைச்சுக் கொடுத்ததற்கு என்னோட மனப்பூர்வமான நன்றிகள்!" என உள்ளதிலிருந்த நன்றியை வார்த்தையில் கொண்டு வர முயன்றான்.

"நன்றியெல்லாம் வேணாம் மச்சான்! உங்க தங்கச்சிக்கிட்ட என்னை ரொம்ப திட்ட வேண்டாம்ன்னு மட்டும் சொல்லிட்டுப் போங்க! அது தான் இந்த மச்சினனுக்கு செலுத்துற உயர்ந்த நன்றி கடன்!" என கேலி பேசி, அங்கே நிலவியிருந்த அழகிய இறுக்கத்தைத் தளர்த்தினான்.

"ரொம்ப பயந்தவர் தான்! எங்க அன்பு உங்களைத் திட்டுறாளா? அவளுக்கு அதிர்ந்தே பேசத் தெரியாதே! நீங்க தான் அவளுக்கும் சேர்த்து பேசுறீங்க" என அருகில் வந்திருந்த ரகு கூற, "நன்றாக வேண்டும்" எனக் கண்களாலேயே அவனிடம் கவி பாடினாள் மனைவி.

"அடேங்கப்பா! என்ன சப்போர்ட்! என்ன சப்போர்ட்! வாழ்க எமது அன்பரசியாரின் ஆட்சி!" என்ற கணவனும், அவளை ஆதரித்து தோள்களில் கை போட்டுத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

அன்பரசியின் நண்பர்கள் - அருண், ரகு, கிருத்திகா மற்றும் சில பெண்களும் அந்த திருமணத்திற்கு விஜயம் செய்திருக்க, கல்யாணக் கலாட்டாக்களும், அலுவலக பரிமாறல்களும் தங்குதடையின்றி அரங்கேறின.

நல்லா மற்றும் அன்பரசியின் ப்ராஜெக்ட்-டில் வேலை செய்யும் மேலும் சிலபேர் திருமணத்திற்கு வந்திருக்க, அங்கே வாழ்த்தும், வாரலும் மாறிமாறி நடைபெற்றன.

இப்போது அங்கே விஜயம் செய்த அகிலன், "நல்லாப்பா, என்ன கெக்கே பிக்கேன்னு சிரிப்பு! இரு அம்மாகிட்ட சொல்றேன்" எனப் பெரிய மனிதனாய் மிரட்டினான்.

"வாங்க சார்! நீங்க மட்டும் தான் என்னை அதட்டாம இருந்தீங்க! அந்த குறையை இன்னைக்குத் தீர்த்துட்டீங்க போல...ரொம்ப நன்றி சார்!" என்றவன், தன் மகனாய் நினைக்கும் அகிலனைத் தூக்கித் தட்டாமாலை சுற்றினான்.

சற்று தொலைவில் நின்றிருந்த திலோத்தமையின் இடுப்பில் வீற்றிருந்த மதிமலர், "நல்லாப்பா, என்னை" எனக் கையை நீட்டிக் கொண்டு திலோவிடமிருந்து தாவ முற்பட்டாள்!

"இருடா ராஜாத்தி! அண்ணாவை இறக்கி விட்டதும் பாப்பாவை சுத்துறேன், அப்பா!" என்ற நல்லானந்த் கையிலிருந்த அகிலனை, இரண்டு சுற்று சுற்றிவிட்டு கீழிறக்கிவிட, மதிமலர் அங்கே ஆவலுடன் காத்திருந்தாள்.

அகிலனை இறக்கிவிட்டு நல்லா நிமிரும் முன்னர், பெதபெருமாளின் அலுவலக பணியாளார்கள் அனைவரும் வந்துவிட, அவர்களது வாழ்த்தை நிறைந்த மனதோடு வாங்கிக் கொண்ட தம்பதியரின் கவனத்தில் பாதி, "நல்லாப்பா, தூக்கு... தூக்கு..." எனத் திலோவின் கைகளில் துடித்த மதிமலரிடமே இருந்தது.

அலுவலக நண்பர்கள் சென்றதும் அன்பரசியின் நண்பர்கள் வர, இப்போதைக்கு விருந்தினரின் வருகை நிற்காது என்றறிந்த அன்பரசி, "பாப்பாவைத் தூக்கிட்டுவந்து வச்சுக்கோங்க! இன்னும் கொஞ்ச நேரத்தில அழுதுடுற மாதிரி இருக்கா!" என்றாள் தாயாக.

மனைவியின் சொல்லோ, மகளின் அழுகையோ, மனைவி சொன்னதை செய்யத் தூண்டிடவே, மகளைத் தன் கையில் ஏந்தியவாறே விருந்தினரிடம் பேச ஆரம்பித்தான், நல்லானந்த்.

"அப்பா... பெச்சா தூக்கு" என்ற மதிமலரின் கோரிக்கையை காற்றில் விடும்படி எல்லாமே நடந்து கொண்டிருக்க, அந்த நேரத்தில் அன்பரசியின் இடது கை, மதிமலரின் இறங்கிவிட்டிருந்த பாவாடையை சரி செய்ய முனைந்தது.

தந்தையின் கழுத்தை சுற்றியிருந்த இரு கைகளில் இடது கை சட்டென கீழிறங்க, தந்தையின் தோளில் சாய்ந்திருந்த முகம் வெடுக்கென உயர்ந்திட, அன்பரசியின் கைகளைத் தள்ளிவிட்டாள் மதிமலர்.

"சட்டை இறங்குதும்மா! அம்மா ஒழுங்கா போட்டு விடுறேன்!" என அன்பரசி மீண்டும் முயல,

"அம்மா அங்க இதுக்கா.... " என்ற மதிமலர், திலோவின் பக்கம் கை காட்டிவிட்டு, மீண்டும் தந்தையின் தோளிற்கு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அந்த வார்த்தையில் அன்பரசியின் உயர்ந்த கைகள் அப்படியே நின்றுவிட, மனம் விம்மி தவித்தது. மகளுக்கும் மனைவிக்கும் நடந்த உரையாடலைக் கவனிக்காத நல்லாவோ, வந்திருந்தோரிடம் பேசுவதில் கவனமாய் இருந்தான்.

"அன்பா, இவர் பெயர் சந்தானம், அப்பாவோட நெருங்கிய நண்பர். டிரஸ்ட் கூட வச்சிருக்கிறதா சொன்னேனே!" என மனைவியிடம் திரும்பியவனின் பார்வை, அவளது அதிர்ந்த தோற்றத்தில் வியந்து, அவளது கையைப் பிடித்து வந்தவரிடம் பேசி அனுப்பிவைத்தான்.

அவர் நகர்ந்து சென்றதும், "என்னமா?" என அவன் மென்குரலில் விளம்ப, "ஒண்ணுமில்லை" என்ற அன்பரசியின் முகம் தெளிந்ததாகவே தெரியவில்லை.

"ஷ், அன்பா! என்னன்னு சொல்லு! எதுனாலும் வெளிப்படையா சொல்லிடுமா" என்றவனிடம், மதிமலர் தன்னிடம் ஒட்டாமல் இருப்பதை சொல்வதற்கு இது தருணமில்லையோ எனத் தோன்றியது அன்பரசிக்கு.

"உங்ககிட்ட மறைக்கிறதுக்கு ஒண்ணுமில்லை நல்லாப்பா! வீட்டுக்குப் போனதும் பேசலாம்" என மனைவி முடித்துவிட, கணவன் அவளை யோசனையாய் பார்த்தானே ஒழிய மீண்டும் துருவவில்லை! கணவன் அவளது அதிர்ச்சியின் காரணத்தை ஊகிக்கவில்லை என்றாலும், கவனிக்க வேண்டிய கண்கள், அதை அழுத்தமாய் நெஞ்சில் பதித்துக் கொண்டு, யோசனையில் ஆழ்ந்தது.

அவர்களை மேலும் யோசிக்கவிடாமல், கல்யாண சடங்குகள் செவ்வனே நடந்து முடிந்தன.

என்ன தான் திருமணத்தில் ஈடுபட்டிருந்தாலும் அன்பரசியின் மனமோ, உடைந்திருந்த வலது கை செயற்கை தொட்டிலில் தொங்கிக் கொண்டிருக்க, தன்னிடம் வராமலிருந்த மலருக்கு மலர் தொட்டிலைக் கொண்டு, அவள் வந்து வாசம் செய்வதற்காக ஏங்கித் தவித்தது. கையிலிருந்த கட்டு மலரைக் கையில் ஏந்தவிடாமல் தடுக்க, நெஞ்சமோ அவளைத் தீண்டி, மாரோடு அணைத்து பால்லூட்டி சீராட்ட வெகுவாய் ஏங்கியது.

கண்டதையும் நினைத்து மருகிய மனம், "பார்த்து ஒரு வாரமே நிரம்பியிருக்கும் தன்னை "அம்மா" என மதிமலர் ஒத்துக்கொண்டால் தானே அது ஆச்சிரியம் ?! இயல்பிலேயே பெற்றோர் மற்றும் நெருங்கிய உறவு தவிர, யாரிடமும் அவ்வளவு எளிதில் சென்றுவிடாதவள் என்றபோது வருந்தி என்ன பயம்?" என்ற விவாதத்தில் சற்றே அமைதியடைந்தது.

"சீக்கிரமே அவள் தன்னிடம் இயல்பாய் ஒட்டிக் கொள்வாள்" என்ற நம்பிக்கையை,மதிமலரின் தீண்டலுக்காக தவித்துக் கொண்டிருந்த தன் மனதிற்குள் பெரும் முயற்சிக்குப் பின்னர் புகுத்தி, வெற்றியும் கண்டாள் அன்பரசி!

கோவிலில் திருமணம் முடிந்த கையோடு, திருமணப் பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்றவர்கள், நல்லானந்த் - அன்பரசி இருவரது திருமணத்தை பதிவேட்டில் ஏற்றிவிட்டு வந்தனர். பெத்தபெருமாளின் நண்பர்களுள் ஒருவர் பதிவாளர் அலுவலகத்தில் உயர்பதவியில் இருந்ததால், நல்லாவின் குறுகிய விடுமுறையையும், திருமணத்தின் அவசரத்தையும், மலரை - சட்டப்படி நல்லாவின் மகளாய் தத்து எடுப்பதற்கு இந்த திருமணப் பதிவு தேவை என்பதையும் எடுத்துக் கூறி, மணநாள் அன்றே சட்டப்படி பதிவு செய்வதற்கு நல்லாவின் தந்தை ஏற்பாடு செய்திருந்தமையால் எல்லாம் நன்றாகவே நடந்தேறியது.

கோவிலில் திருமணம் முடிந்ததுமே, திருமணத்திற்கு வந்திருந்த அனைவரையுமே அழைத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்கு பெரியவர்கள் இருவரும் குழந்தைகளோடு சென்றுவிட, இளையவர்கள் நால்வரும் சில நண்பர்களுடன் பதிவாளார் அலுவலகத்திற்குச் சென்றுவிட்டு வீடு திரும்பினர்.

அன்றைய தினம் இளம் தம்பதியரைக் கேலி செய்வதிலும், வந்த விருந்தினரை உபசரிப்பதிலும் சென்றுவிட, மாலையில் வீட்டினர் மட்டும் அமர்ந்து பேசிக்

கொண்டிருந்தனர். சென்னையிலிருந்து வந்திருந்தோர் அனைவரும் அப்படியே விடைபெற்று சென்றதும், நித்யாவும் சத்யசேகரனும் அவர்களது பாட்டனார் மற்றும் நித்யாவின் உடல்நிலையை முன்னிறுத்தி "இப்போ கிளம்பினா தான்,மெதுவா கார் ஓட்டிட்டு நாகப்பட்டிணம் போறதுக்கு கரெக்ட்டா இருக்கும்" என்ற செய்தியோடு அன்பரசியிடமும், அவளது புகுந்த வீட்டினரிடமும் விடை பெற்றிருந்தனர்.

சின்ன மருமகளிடம் "மாத்திரை சாப்பிட்டியா அன்பு?" என்று கேட்டக் கேள்வி, பதிலளிக்கப்படாமலே ஐந்து நிமிடம் கழிந்து போனது!

"அன்பம்மா" என திலோ இரு முறையும், "அன்பரசி" என பெத்தபெருமாள் ஒரு முறையும் கூப்பிட்டப் பின்னரும் அவளது கவனம் கலையாமல், பார்வை அறையின் ஓர் மூலையில் நிலைகுத்திப் போயிருந்தது.

தோழி மற்றும் தந்தையின் குரல் கேட்டு உள்ளறையிலிருந்து வெளிவந்த நல்லானந்த், மனைவியின் தோள் தொட்டு "அன்பா" என்றான்.

"ஹான்...என்ன...என்னங்க! என்ன வேணும்?" என அன்பரசி சுயநினைவு பெற்றதும், "எனக்கு ஒன்னும் வேண்டாம், அம்மா நீ மாத்திரை சாப்பிட்டியான்னு கேட்டாங்க!" என கணவன் தாயின் கேள்வியை எடுத்துக் கூற,

"சாரிம்மா, நான் ஏதோ யோசனையில இருந்துட்டேன்! வேணும்னே பண்ணலை! சாரிம்மா!"

"எதுக்குடா இவ்வளவு பதட்டம்? மாத்திரை சாப்பிட்டியா இல்லையா?" என மாமியார் மருமகளின் பதட்டத்தை மட்டுப்படுத்தி, உடல்நிலையை முன்னிலை படுத்தினார்.

"ஹ்ம்ம் சாப்பிட்டேன்னு தான்ம்மா நினைக்கிறேன்"

"அப்போ இன்னும் சாப்பிட்டிருக்க மாட்டா! வா அன்பு! மாத்திரை எடுத்து தரேன்" எனத் திலோ, அன்பரசியின் மாத்திரைகளை எடுத்து வந்தவள் தங்கைக்கு அவற்றை கொடுத்து, "உள்ள போய் கொஞ்ச நேரம் படுத்துக்கோ அன்பு. காலையிலிருந்து நின்னுட்டே இருந்தது சோர்வா தெரியிற" என அவளை ஓய்வெடுக்குமாறு கூறி, நல்லானந்தின்

அறைக்குள் அனுப்ப எத்தனித்தாள்.

"கை வலிக்குதா அன்பா? ரொம்ப ஸ்ட்ரெயின் ஆகிடுச்சா?" என மனைவியின் கைகளை இதமாய், பதமாய் வருடிய வாறே கணவனும் வினவ,

"இல்லைங்க, அப்படி ஒண்ணுமில்லை..."

அவளது மெல்லிய குரலில், "இதுக்கு தான் அவளுக்கு உடம்பு முழுசும் சரியானதும் கல்யாணத்தை வச்சுக்கலாம்ன்னு சொன்னேன். சொல்றதை புரிஞ்சுக்கவே மாட்டே நல்லா!" எனப் பெரியவாராய் கடிந்து கொண்டார் பெத்தபெருமாள்.

"என்னப்பா இது? கல்யாணம் நடந்து முடிஞ்சதும் இப்படி ஒரு பேச்சு?" - தேவ்வின் குரல் லேசாய் உயர்ந்தாலும்,

"அப்பா, நான் அன்பை கனடா கூட்டிட்டுப் போகணும். அதுக்கு இப்போ விசா அப்ளை பண்ணியே ஆகணும். நான் இந்த காரணத்தை ஆயிரம் தடவை உங்ககிட்ட சொல்லியாச்சு. இனியும் என்னப்பா? " என நல்லாவும் தன் பக்க நியாயத்தை அழுத்தம் திருத்தமாய் எடுத்துரைத்தான்.

"மலரைக் கூட்டிட்டுப் போகலைன்னு ஆயாச்சு! இப்போ அன்பரசியை கூட்டிட்டுப் போறேன்னு அடுத்த சண்டையை ஆரம்பிக்காத!" என திலோ, தன் மாமனாரை நண்பன் எதிர்த்ததில் சிலிர்த்து எழுந்தாள்.

"திலோ! சும்மா இரு!" என நல்லா, அடக்கியதற்கு வேலையே இல்லாமல் அன்பரசியின் முகம் திகைத்துப் போயிருந்தது.

"என்னது? நாம ரெண்டு பெரும் மட்டுமா கனடா போகப்போறோம்? நீங்க சொல்லவே இல்லையே?" என அன்பரசி வெளிப்படையாய் அதிர்ந்ததும் தான் அவளுக்கு அவர்களது பயண விவரமே பகிரப்படவில்லை என்பது மற்றவர்களுக்குப் புரிந்தது.

இந்தக் கேள்விக்கு எந்த பதில் சொன்னாலும் தனது நிலைமை அந்தோ பரிதாபம் ஆகிவிடும் என்றெண்ணிய நல்லானந்தால் "அது.. அன்பா.. அதுடா..." என அவன் திணற,

திலோவிற்கு நண்பனைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"மதி வரலைன்னா நானும் வரலை" என அன்பரசி உடனே தீர்மானித்துவிட, நல்லா அங்கிருந்தோர் அனைவரின் மீதும் பார்வையை ஓட்டவிட்டு, திலோவின் மீது நிறுத்தினான்.

திலோவிடம் பத்து வினாடிகளுக்கு கூடதலாய் பார்வை நிலைத்திருக்க, "சரி, யாருமே வரவேண்டாம். நான் மட்டும் போய்க்கிறேன்!" என்றவன், அறையின் வாயிலில் நின்றிருந்த அன்பரசியைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்று மறைந்தான்.

எல்லாருமே ஒருவரை ஒருவரைப் பார்த்துக் கொண்டிருக்க, மீண்டும் அன்பரசியைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தவன், அகிலனும் மதிமலரும் விளையாடிக் கொண்டிருந்த திசை நோக்கிக் குரல் கொடுத்தான்.

"மலர், அகில்! ரெண்டு பெரும் அப்பா ரூம்க்கு வாங்க! இங்க வந்து விளையாடுங்க" என்றவன், நின்றிருந்தோர் யார் முகத்தையும் பாராமல் மீண்டும் உள்ளே சென்று மறைந்தான்.

தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கேற்ப, மலர் குடுகுடுவென தந்தையின் அறைக்குள் நுழைய, பாசக்கார அண்ணனாய் அகிலன் பின்தொடர்ந்தான்.

நல்லாவின் செயல்கள் யாருக்கும் புரியவில்லை என்றால் அன்பரசியின் முகத்தில் தெரிந்த குழப்பம் கூடிய அதிர்ச்சி பெரும் பாரத்தை ஏற்றியது. திலோவிற்கோ, "மனைவியையும், குழந்தையையும் தன்னுடன் அழைத்துச் செல்வதற்கு அவனுக்கில்லாத உரிமையா?" என மனதின் நியாயப் பாதி கேள்வி எழுப்பினாலும், மலர் மீது அவள் கொண்ட பாசம் மற்றொரு பாதியை குறுகலாய் யோசிக்க வைத்தது. அன்பரசியின் முகத்தில் தோன்றிய அதிர்ச்சியும், அவளது திடீர் அறிவிப்பும், நல்லா சட்டென ஒத்துக்கொண்டதில் தோன்றிய ஏமாற்றமும் என திலோவின் இளகிய மனதை மேலும் இளக்கியபோதும், அவளால் ஓர் முடிவிற்கு வரமுடியவில்லை.

யாரது யோசனையையும் மதிக்காமல், "அன்பா! தூங்கலையா? கொஞ்ச நேரம் படுத்து ரெஸ்ட் எடுன்னு திலோ சொன்ன இல்லையா? வந்து படு!" என்ற நல்லாவின் குரலில்,

மற்றவர்கள் யோசனையிலிருந்து விடுபட, அன்பரசி தான் நின்றிருந்த இடத்திலிருந்து விடுதலை பெற்று அறைக்குள் நுழைந்தாள்.

கட்டிலில் அமர்ந்து "puzzle game" விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் அருகே நல்லா படுத்திருக்க, அவன் அருகில் வந்து நின்ற அன்பரசி,

"கோபமா நல்லாப்பா?" என்றாள் பரிதாபமாக.

"இல்லையே! நீ உன் பொண்ணோட இருக்கிறேன்ன்னு சொன்னதில் எனக்கு சந்தோஷம் தான்" என்றவன், "டேய் மலர், குதிரையோட வாய் பக்கத்திலையா வால் வரும்? ஒழுங்கா வை" என மகளின் மேல் கவனத்தைத் திருப்பிக் கொண்டான்.

"இல்லை, பொய் சொல்றீங்க" - இப்படியாக வந்த அன்பரசியின் பதிலில் "பொய்யா? நானா?" என்றான் நல்லா, பெரும் வியப்புடன்.

"ஆமா, கோபமில்லைன்னு பொய் சொல்றீங்க. உங்களுக்குக் கோபம் எனக்குத் தெரியும்" என்ற அன்பரசி, "பாப்பாவை நம்மளோட கூட்டிட்டுப் போகப் போறதில்லையா? இந்த விஷயத்தில தான் உங்களுக்கும் திலோக்காவுக்கும் சண்டையா? நீங்க கனடாலிருந்து வந்த அன்னைக்கே சண்டையா? அதான் அன்னைக்கு அக்கா ஒரு மாதிரி இருந்தாங்களா? நீங்க ஏன் இந்த விஷயத்தை என்கிட்டே இந்த நாலு நாளா சொல்லலை?" எனத் தன் கேள்விகளை முன்வைத்தாள்.

"ஷ், ஷ், ஷ், பேசாதேன்னு சொல்லிட்டே இருக்கேனே! குழந்தைங்க முன்னாடி எதுவும் பேசாத அன்பரசி! பேசாம படு! அப்புறமா பேசிக்கலாம்" என்றவனிடமிருந்து வேறு எந்த விஷயமும் வாங்க முடியாது போய்விடவே, பேசாமல் கட்டிலின் மறுபுறத்தில் படுத்தாள் நல்லானந்தின் மனைவி!

திருமண நாளன்று அதிகாலையில் விழித்ததும், அன்றைய தினத்தின் அதிகப்படி சுகமும், சட்டென மனதில் புகுத்தப்பட்ட அதிர்ச்சியும் அன்பரசிக்குப் பெரும் அயர்ச்சியை ஏற்படுதியிருக்கவே, இரவு உணவு நேரம் கடந்த பின்னருமே அவள் கண் விழிக்கவில்லை.

எட்டு மணியளவில் நல்லாவின் அறைக்குள் நுழைந்து, அசைந்து உறங்கிக் கொண்டிருந்த அன்பரசியின் முகத்தை சிறுது நேரம் பார்த்திருந்த வளர்மதி, வெளியே மதிமலருக்கு உணவூட்டிக் கொண்டிருந்த மூத்த மருமகளிடம், "திலோம்மா, அன்பு ரொம்ப ஓய்ஞ்சு

போயிருக்க மாதிரி இருக்காளே! உங்கப்பா சொன்ன மாதிரி நாம கொஞ்ச நாள் பொறுத்திருக்கணுமோ? இவன் வேற சொல்றதை கேட்கவே மாட்டேங்கிறான்" என்ற கவலையை பகிர்ந்துகொண்டார்.

"காலையிலிருந்து நின்னுட்டே இருந்தா இல்லையாம்மா? அது தான் சோர்வா தெரியுறா! நாளைக்குக் காலையில இயல்பாகிடும்!" என்றவள், சிறு இடைவெளிவிட்டு " கவலை படாதீங்கம்மா! எல்லாருக்கும் சாப்பாடு எடுத்துவைங்க. நான் பசங்களுக்கு ஊட்டிட்டு வரேன்!" என அவரை வேறு திசையில் பயணிக்க அனுப்பினாள்.

அனுப்பியதோடு தன் வேலை முடிந்தது என்று நினையாமல், அவர் கை பிடித்து நிறுத்தி, " ரொம்ப முக்கியமான விஷயம், அப்பாக்கிட்ட இதைப் பத்தி பேசாதீங்க! அப்பாக்கும், நல்லாக்கும் இதில ஏற்கனவே வாக்கு வாதமா இருக்கு! நீங்க ஏதாவது சொல்லப் போய் இன்னும் பெருசாகிடப் போகுது" என்றும் அறிவுறுத்தினாள்.

மருமகள் என்ற நிலையில்லாமல் மகள் என்ற ஸ்தானத்திலிருந்த திலோத்தமையிடம் வளர்மதிக்கு என்றுமே பற்று அதிகம் தான் என்பதால், இப்போதும் மருமகள் கூறினால் சரியாகத் தான் இருக்கும் என்றெண்ணிய அந்த தாயும் மக்களுக்கும், மணாளனுக்கும் உணவு பரிமாற சென்றார்.

மௌனமாய் கழிந்த உணவு நேரத்திற்குப் பின்னர், அன்பரசி எழுந்த பின்னர் கொடுக்குமாறு இரவு உணவை ஹாட் பாக்ஸில் இட்டு நல்லானந்திடம் கொடுத்த திலோ, அன்பரசி உண்டபின்னர் மாத்திரை மருந்துகளை ஒழுங்காய் கொடுக்கமாறு கொழுந்தனுக்கு கட்டளையிட்டு உள்ளே அனுப்பினாள்.

"இதெல்லாம் உனக்கே கொஞ்சம் ஓவரா தெரியல? எல்லார் வீட்டிலையும் கல்யாணப் பெண்ணுக்கு அட்வைஸ் பண்ணி, புருஷன் இருக்க ரூமுக்குப் போகச் சொல்லுவாங்க, நீங்க என்னடான்னா எனக்கு... கல்யாண மாப்பிள்ளைக்கு உட்கார்ந்து அட்வைஸ் மேல அட்வைஸ் பண்ணிட்டு இருக்கீங்க?" என நல்லானந்த், வாய் விட்டே புலம்ப, பெத்தபெருமாள் ஏதோ சொல்ல வாய் எடுத்தார்.

"அப்பாபாபாபாபா... ஸ்டாப் தி மியூசிக். "இதுக்குத் தான் நான் அன்பரசிக்கு உடம்பு குணமானதும் கல்யாணத்தை வச்சுக்கலாம்ன்னு சொன்னேன். நீ கேட்டியா? இப்போ

அனுபவி"ன்னு ஆரம்பிக்காதீங்க! அன்பரசி எழுந்துக்கிற வரைக்கும் தூங்காம இருக்கிறது உங்க அட்வைஸ் கேட்கிறதை விட சுலபமா காரியம் தான்! நான் அதையே பண்ணிக்கிறேன்!" என்றவன், சிரித்துக் கொண்டிருந்த அனைவரையும் முறைத்துவிட்டு (செல்லமாய்) தன் அறைக்குள் சென்றான்.

ஆனால் சென்றவன், பத்தே நிமிடத்தில் வெளியே வந்து "திலோ, நான் அகிலையும் மலரையும் எங்க ரூம்-ல படுக்க வச்சுக்கிறேன்" என்ற சொல்லோடு அகிலனைத் தூக்க முயன்றான்.

"அகில் இருக்கட்டும்! மலரைக் கூட்டிட்டு போ!" என்ற திலோவிடம் ஏனென்று கேள்வி கேட்காமல், அவள் சொன்னதை செய்தவனை நந்தனுமே ஆச்சிரியமாய் தான் பார்த்தான்.

தழுவக் காத்திருந்த தூக்கம் லேசாய் தடைப்படவே, மலரின் சிணுங்கல் லேசாய் ஸ்ருதியில் ஏறியது. ஏறிக் கொண்டிருந்த ஸ்ருதியைத் தாளத்தால் கட்டுப்படுத்தும் வண்ணம், மலரின் முதுகில் மெல்ல தட்டிக் கொடுத்தவாறே தங்கள் அறைக்குள் சென்ற நல்லானந்த், அவளை அன்பரசியின் அருகே படுக்க வைத்தான்.

மகளும், மனைவியும் இரு செல்வக் குழந்தைகளாய் துயில் கொண்டிருக்க, அவர்களுக்குத் தாயுமானவனாகியவன் அவர்கள் அருகே அமர்ந்து பத்திரிக்கையைப் புரட்ட ஆரம்பித்தான்.

பத்திரிக்கையில் ஓர் கண்ணும், அருகிலிருக்கும் அன்பு கொண்டவர்கள் மேல் ஓர் கண்ணுமென இருந்தவன், சற்றே அதிகப்படியான நேரம் பத்திரிக்கையில் கவனத்தை வைத்திருந்த போது கண் விழித்த அன்பரசி, தன் அருகே படுத்திருந்த மகளைக் கண்டதும் சட்டென மகிழ்ந்து, அவள் புறம் திரும்பிப் படுத்து மகளின் பட்டு வண்ண மேனியை மெல்ல வருடிக் கொடுத்தாள்.

தலையில் துவங்கி, கன்னம், கழுத்து, நெஞ்சம், வயிறு, கை, கால்கள் என அவளது வருடல் பயணம் நடக்க, மலரும் அதன் மென்மையில் விழித்துக் கொள்ளாமல் சுகத்தாய் உறங்கிக் கொண்டிருந்தாள்! இரு முறைக்கும் மேலாக, மகளின் வெளியழகை தன் மிருதுவான வருடலால் அளந்த தாய், அவளது பிறை நெற்றியில் இதழ் ஒற்றி "என் செல்ல மதிப் பாப்பா" எனக் கொஞ்சியபோது தான் நல்லானந்த், பத்திரிக்கையிலிருந்து கண்ணை நகர்த்தினான்.

"ஹ்ம்ம் எழுந்தாச்சா அன்பரசி மேடம்? போதுமா தூங்கினது?"

"ஷ், சும்மா இருங்க! பாப்பா எழுந்துக்கப் போறா!" எனப் பட்டென அடக்கிய மனைவியைப் பார்த்து, பெரும் வியப்பும் சிரிப்பும் ஒருங்கே வந்தது நல்லானந்திற்கு. பெண்ணென்று வந்துவிட்டால் கணவன் கூட தூரம் தான் என்றிருக்கும் மனைவியைப் பார்த்துக் கோபம் கொள்வதற்குப் பதிலாக, நல்லானந்திற்குப் பெருமையாகவே இருந்தது. பின்னே, மகளை உயிரினும் மேலாய் எண்ணும் மனைவி கிடைத்ததில் அந்த தந்தைக்கு சந்தோஷம் இருக்காதா என்ன?

"மலர், ரொம்ப சீக்கிரம் தூக்கத்திலிருந்து எழுந்துக்க மாட்டா அன்பா! அவளுக்கா முழிப்பு வந்தாதான் எழுந்துப்பா. அப்படியே லேசா சிணுங்கினாலும், மெதுவா தட்டிக் கொடுத்தா உடனே தூங்கிடுவா" என மகளைப் பற்றி தான் அறிந்த தகவல்களை மனைவியிடம் கூறினான் நல்லா.

"ம்ம் சரி! ரொம்ப நேரம் தூங்கிட்டேனா? ஹய்யோ, வந்த முதல் நாளே இப்படி தூங்கிட்டேனே? அம்மா என்ன நினைச்சாங்களோ?" எனத் தன் புலம்பலை அன்பரசி மென்குரலில் ஆரம்பிக்க,

"உங்க மாமியாரும், அக்காவும் உன்னை ஒன்னும் சொல்லலை. எனக்குத் தான் பெரிய அறிவுரை பட்டியலும், கூடவே உனக்கு சாப்பாடும் கொடுத்து அனுப்பி இருக்காங்க!" எனத் தன் தாய் தன் தாரத்தை ஒன்றும் சொல்லவில்லை, தன்னைத் தான் வேலை வாங்கினார் என்ற விவரத்தை அதே மென்குரலில் புட்டு புட்டு வைத்தவன், "போய் முகம் கழுவிட்டு வா அன்பா! சாப்பிடலாம்! மதியம் சாப்பிட்டது. பசி வந்திருக்கும்" எனக் கூறி, அன்பரசியை குளியலறைக்குள் அனுப்பிவைத்தான்.

கணவன் சொன்ன விஷயத்திலும் விதத்திலும் முகம் மலர்ந்து வசிகிக்க, குளியலறைக்குள் சென்ற அன்பரசி, ஐந்தே நிமிடத்தில் உடுத்தியிருந்த அதே பட்டு சேலையுடன் வெளியே வந்தாள்.

காலையில் திருமணத்திற்கு உடுத்தியிருந்தது போலில்லை என்றாலும், அதன் பின்னர் அன்பரசி உடுத்தியிருந்த மயில் கழுத்து வண்ணப் பட்டுப் புடவையும் சற்று கனமானது தான் என்பதால் "டிரஸ் மாத்தலையா அன்பா?" என்றான் கணவன்.

"அது... அது... எப்படி மாத்துறது? திலோக்காவை கூப்பிடுறீங்களா?"

"தூங்கிருப்பாளே! ஆனாலும் அவளை ஏன் அன்பா?" எனத் தன் நிஜ மரமண்டையை தட்டி யோசித்த நல்லானந்த், "ஆஹா, நல்லா! நீ இவ்வளவு ட்யூப் லைட்டா இருக்க வேண்டாம்" எனத் தானே தெளியவும் செய்தான்.

"டிரஸ் மாதி விடுறதுக்கு எதுக்கு திலோக்கா? நானே வரேண்டி செல்லம். காலையில சேலை கட்டி விடுறதுக்குத் தான் தாலி கட்டலை அது இதுன்னு சொல்லி என்னைத் திட்டினே! இப்போ என்ன?" என்றவன்,

அவளது "ஹய்யோ வேண்டாம்! நான் பட்டு சேலையோடவே தூங்கிக்கிறேன்!", "வராதீங்க நல்லாப்பா! சொல்றதை கேளுங்க!", "ஹய்யோ, பாப்பா வேற இருக்கா! அநியாயம் பண்ணாதீங்க" என இடைவிடாமல் தடுத்ததை மனதிலேயே ஏற்காமல், மெல்ல மெல்ல முன்னேறி குளியலறையை அடைந்து, மனைவியையும் உள்ளே இழுத்துச் சென்று, கதவை இறுக மூடினான்.

இருபது நிமிடங்கள் கழித்து குளியலறை கதவு திறந்த போது, அன்பரசி நல்லானந்தின் கையில் துவண்டிருக்க, குளியலறைக்குள் செல்வதற்கு முன்பாக அவளது மேனியைத் தழுவியிருந்த பட்டுப் புடவை இப்போது அன்பரசியின் கைகளில் இருக்க, அவளது மேனியை மெல்லிய இரவு உடை தழுவி சுகம் கண்டது.

கட்டில் அருகே வந்ததும் "இறக்கி விடுங்க" எனக் கிறங்கிய குரலில் கூறிய மனைவியை, வேறு நாளாய் இருந்தால் நல்லானந்த் தரையிலேயே விட்டிருக்க மாட்டான். ஆனால், இன்று அவளது உடல் இருந்த நிலைமையும், கைகளில் தொங்கிக் கொண்டிருந்த தொட்டிலும், அதற்கும் மேலாய் அருகே உறங்கிக் கொண்டிருந்த மகளும், மெல்ல மெல்ல அவனை சுய நினைவு பெற வைத்துக் கட்டிலில் விட வைத்தது.

கட்டிலில் விடப்பட்ட அன்பரசி, மலரின் புறம் திரும்பி "ரொம்பக் கோபம் வருதில்லைங்க இந்த குட்டிக்கு! உங்களை மாதிரியே தான்!" என்றான் மகளின் கன்னத்தில் முத்தமிட்டு.

"என்னோட கோபத்தை அன்பரசி மேடம் எப்போ பார்த்தீங்க? நீங்க பார்க்கிறது நான் கோபப்பட்டிருக்கணுமே! எப்போ கோபப்பட்டேன்?" என நல்லானந்த், உதட்டிற்குள் புதைந்த சிரிப்புடன் வினவ,

"ஆமா, ஆமா! இன்னைக்கு சாயங்காலம் நீங்க சிரிச்சிட்டே பேசினீங்க இல்லை. நான் தான் நீங்க கோபப்பட்டதா தப்பா நினைச்சுட்டேன்!" எனக் கணவனுக்குப் பதில் சொன்ன கையோடு, "அம்மாக்கு அப்பாவை பத்தி ஒண்ணுமே தெரியலை இல்லைடா மதிகுட்டி! உங்களுக்குத் தான் நிறைய தெரியுமே... அம்மாக்குச் சொல்லித் தரீங்களா?" என மகளது மூக்கோடு மூக்குரசி கொஞ்சினாள் மனைவி.

"போதும், உன் பொண்ணை கொஞ்சிக் கவி பாடினது. வா சாப்பிட!" என உணவுத் தட்டிக் கையில் ஏந்தியவாறே, மனைவி உணவுண்ண அழைத்தான் அன்பு கணவன்.

"கொஞ்சம் நேரம் இருங்க! அவ தூங்கும் போதுதான் கொஞ்சவே முடியுது. மிச்ச நேரத்தில எல்லாம் என்னைக் கண்டாலே தூர ஓடிப்போய்டுது சின்னக்கழுதை!" எனத் தன் போக்கில் அவனுக்குப் பதில் சொன்னவள், மகளின் பக்கம் முற்றுமாய் திரும்பிக் கொண்டாள்.

மனைவி தன் மனதில் இருந்ததை வெள்ளியோடையாய் பொழிந்துவிட, அணை போட்டவனாய் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டான் நல்லானந்த்! ஒரே நாளில் மகள் மனைவியின் பக்கம் சாய்ந்துவிடுவாள் என்ற எண்ணம் அவனுக்கில்லை என்றாலும் மனைவி மகளின் அருகமைக்காக ஏங்குவது கூரிய வாளாய் அவனைத் தாக்கியது.

அவளது அறியா தாக்குதலில் அவன் அசையாது நின்றிருக்க, மலரின் மேலிருந்த பார்வையை கணவன் மேல் திருப்பிய அன்பரசி, அவனது உடையைப் பிடித்து இழுத்து, "சாப்பிடலாமா? பசிக்குது" என்றாள்.

"ம்ம் வா" என்றவாறே அறையிலிருந்த சிறு மேஜையின் பக்கம் அவன் செல்லவே "இங்கேயே நல்லாப்பா! ப்ளீஸ்" எனப் புத்தம் புது மனைவி கொஞ்சிய பின்னர் மேஜைக்கு செல்ல அவனுக்கு என்ன பைத்தியமா? மகளின் மீது ஒரு கையை வைத்தவாறே, கணவனை நோக்கியிருந்த புதுமலரோ அவனை ஆர்வமாய் பார்த்திருந்த போது அவனால் நகரவே முடியாமல் போக, கையிலிருந்த உணவை மனைவிக்குப் புகட்டத் துவங்கினான்.

அவன் அளித்த உணவை மறுபேச்சின்றி வாங்கிய அன்பரசி, "நீங்க சாப்பிட்டீங்களா?" என்றாள் ஐந்து நிமிடங்கள் கழித்து.

"ரொம்ப சீக்கிரம் கேட்டுட்டே! ரொம்பத் தான் காதல்!" என நல்லானந்த் கேலி பேசியதும், மனம் துணுக்குற அவனை மிரண்டு போய் பார்த்திருந்தாள் அன்பரசி.

"சும்மா விளையாட்டுக்குடா! எதுக்கு இப்படி ஒரு லுக் கொடுக்கிறீங்க மேடம்!"

அவனது சமாதானத்தின் விளைவாக "தேங்க்ஸ் நல்லாப்பா" என்ற வார்த்தைகளை அன்பரசி உதிர்க்க, அவளைத் தன் இடுப்போடு கட்டிக் கொண்டு காதலை வெளியிட்டான் கணவன்.

"எதுக்குடா?" என அவன் உருக, "எல்லாத்துக்கும் தான்! இப்படி ஒரு குடும்பத்தை எனக்குக் கொடுத்ததுக்கு! அழகான குழந்தைக்கு என்னை அம்மாவாக்கினதுக்கு! அதுவும் கல்யாணத்தன்றே!" என்றாள் மிக மிக நெகிழ்ந்த குரலில்.

"சும்மா சும்மா நன்றி சொல்றதை நிறுத்து அன்பா! நம்மளோட உறவை எதுக்கு இவ்வளவு ஃபார்மலா எடுத்துட்டுப் போற. என்கிட்டே சாதரணமா பேசிப் பழகு!" எனக் கணவன் கடிந்து கொள்ளவும், "சரி நல்லாப்பா! நீங்க சாப்பிட்டீங்களா?" என நெகிழ்ந்த நிலையிலிருந்து வெளிவர அவனது உணவைப் பற்றி மீண்டும் வினவினாள்.

அவன் பதில் சொல்லும் முன்னர் "சாயங்காலம் நான் உங்களோட வரலைன்னு சொன்னதில் உங்களுக்குக் கோபம் தானே? இந்த நேரத்தில மலரை விட்டு விலகிப் போய்ட்டா...அப்புறம் அவ கிட்ட ஒட்டுறது ரொம்ப கஷ்டம் நல்லாப்பா! அதான் வரலைன்னு சொன்னேன்!" என அடுத்தக் கேள்வியை மனைவி விடுக்க,

"எல்லாரும்... மலர் உட்பட எல்லாரும் சாப்பிட்டாச்சு! எனக்குக் கோபம் எதுவும் மிச்சமில்லை! நீ என்னோட இருக்கிறதை விட மலரோட இருக்கிறது தான் முக்கியம்ன்னு எனக்குத் தெரியும். அதனால நீ முதல சாப்பிடு" என அவளை சமாதானப்படுத்தி உண்ண வைத்து, உறங்க வைத்தான்.

மறுநாள் காலை வெகு அழகாய் விடிய, தன் மேல் கரம் பதித்து படுத்திருந்த அன்பரசியை விநோதமாய் பார்த்த மதிமலர், அவளது பிடியிலிருந்து வெளிவந்து, தந்தையின் மார்பின் மீதேறி படுத்துக் கொண்டாள்.

அவனது கண்ணையும் கன்னத்தையும் வருடியவள், முயல்களாய் துள்ளிக் குதித்த தன் கண்மணிகளை உருட்டி, தன்னை யாரும் பார்க்கிறார்களா எனக் கண்காணித்துவிட்டு,

தந்தையின் அடர்ந்த மீசையை பிடித்து இழுத்துவிட்டு, அட்டகாசமாய் கை கொட்டிச் சிரித்தாள்.

"ஆ, ஆ" என்ற அலறலோட எழுந்த நல்லானந்தின் அன்றைய தினம், மலரின் சிரிப்பைப் போலவே அட்டகாசமாய் இருந்தது!

அவனது அலறலில் விழித்த அன்பரசிக்கும் அன்றைய தினம் நன்றாகவே சென்றது, மிக நன்றாக எனக் கூறியிருக்க வேண்டுமோ - ஏனென்றால் மதிமலர் என்ற அழகு குவியலை தனதென்று சட்டம் தீர்மானித்த தினம் அல்லவா?

அந்த அழகு குவியலின் மேல் அன்பைப் பொழிந்து, அழகில் பதுமையாய், அறிவில் செழித்தவளாய், பண்பில் உயர்ந்தவளாய், பாசத்தில் ஊறியவளாய், எல்லாவற்றுக்கும் மேலாக மனிதாபிமானத்தில் - சக மனுஷ துக்க நிவாரணத்தில் தந்தைக்கு ஈடாய் என அவளை வளர்க்கும் பொறுப்பைத் தனதாய் ஏற்கும் நாள் - அன்பரசிக்கு இனிப்பானதாய் இருப்பதில் என்ன சந்தேகம்?

ஆனால் நல்லானந்திற்கு அட்டகாசமாகவும், அன்பரசிக்கு நன்றாகவும் அமைந்த அன்றைய தினம் திலோவிற்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது. தனக்கென்று இருந்த ஓர் அறிய பொக்கிஷத்தை, ஒரே குடும்பத்தில் என்றாலும் வேறொருவர் உரிமை கொண்டாடுவதை அந்த தாய் மனம் ஏற்கவில்லை.

ஆயினும், மலர் வந்த தினம் முதல் அவள் தனக்கு உரியவள் அல்ல, என்றோ ஒரு நாள் நல்லானந்த் மற்றும் அவனது மனைவிக்கு அவளைத் தத்து கொடுத்துவிட வேண்டும் என்ற நிதர்சனம் புரிந்திருந்தமையால், மௌனமாகவே தன் தாய் ஸ்தானத்தை அன்பரசிக்கு இடமாற்றி கொடுத்தாள்.

திலோவின் முகத்தில் தென்பட்ட வாட்டத்தைக் கவனிக்காமல் இருந்தால், ஓர் நல்ல புரிதல் மிகுந்த இல்லறத்திற்கும், உயரிய நட்பிற்கும், சிறுது நாட்களே என்றாலும் இணை பிரியாமல் தோன்றிவிட்ட சகோதரப் பாசத்திற்கும் இழுக்காய் அல்லவா முடிந்திருக்கும்?

பாசத்தைப் பொழிந்து தாயிற்கும் மேலாக மலரை வளர்த்தவள், சட்டப்படி தன் தங்கையை மகளுக்குத் தாயாக்கி விட்டு வெளியே வந்ததும், கணவனின் மார்பில் முகம் புதைத்து குலுங்க ஆரம்பித்தாள்.

பொது இடம் என்றும் பாராமல் மனைவி உடைய, தேவநந்தன் அவளது உள்ளம் உணர்ந்து "என்ன திலோம்மா இது? மலர் எப்பவும் நம்மளோட தான்டா இருக்கப் போறா! சட்டப்படி நல்லாவிற்குத் தத்து கொடுத்ததால நம்மளோட உரிமை குறைஞ்சு போய்டலை! புரியுதா?" என அவன் தேற்ற, அவளது அழுகை குறையாமல் தொடர்ந்தது.

முகத்தை மறைத்துக் கொண்டு அழுது வடிந்த திலோத்தமையை, தன் பக்கம் திருப்பிய அன்பரசி "அக்கா, இப்போ எதுக்கு இப்படி அழறீங்க? என்னை ஒரு வில்லி ரேஞ்சுக்கு கற்பனை பண்ணி வச்சிருக்கீங்க போல! உங்களையும் மலரையும் பிரிச்சு பெரிய கொடுமையெல்லாம் பண்ண மாட்டேன் திலோக்கா. நானும் ஒரு ஓரமா அம்மா என்ற ரோலை ப்ளே பண்ணிக்கிறேனே! ப்ளீஸ்! நீங்க இப்படி அழுதா என்னைப் பார்த்து எனக்கே பயமா இருக்கே!" எனக் கெஞ்சுவது போல், திலோவைத் தேற்றவும் அங்கே இறுக்கம் தளர்ந்து சிரிப்பலை படர்ந்தது. அதில் திலோவின் சிரிப்பும் இருந்தது இன்னமும் இருக்கதைக் குறைத்து, மனதை லேசாக்கியது!

"நீ, நல்லாவோட சேர்ந்து ரொம்ப கெட்டுப் போயிட்டே! வீட்டுக்கு வா என் பொண்ணுக்கிட்ட சொல்லி ரெண்டு அடி போடச் சொல்றேன்!" என திலோவும் கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு, அன்பரசியின் காதுகளை மெல்ல முறுக்கியதும்

"நீங்க சொல்லவே வேண்டாம். இன்னும் கொஞ்ச நாளில அவளே கம்பெடுத்துக்கிட்டு என்னை அடிக்கத் தான் போறா" என அன்பரசி மீண்டும் கேலி பேச, அங்கே கண்ணீர் மறைந்து சிரிப்பு மெல்ல படர்ந்தது.

சிரிப்பும் சந்தோஷமுமாய் மேலும் இரு தினங்கள் கழிய, நல்லானந்த் ஊருக்குக் கிளம்புவதற்கு இரு தினங்கள் முன்னர் தன் நண்பர்கள் சிலரைப் பார்த்துவிட்டு வருவதாக கூறி வெளியே கிளம்பினான்.  உடன் வருகிறாயா என அன்பரசியை அவன் அழைக்க, உடம்பு முடியாமல் இருப்பவளை அலைய வைக்காதே எனக் கடிந்து கொண்ட வளர்மதியின் அதட்டலில் தான் மட்டுமாய் வெளியே சென்றான். "என் பொண்டாட்டியை...என் பைக்ல... என் ஃபிரண்ட்சைப் பார்க்க...நான் கூட்டிட்டுப் போறதுக்கு இந்த வளர்கிட்ட அனுமதி வாங்கவேண்டியிருக்கு! என்ன கொடுமை மதிமலர் இது?" என எல்லா "என்"களிலும் அழுத்தம் கொடுத்துப் பேசியவன், முடிவில் மலரிடம் நியாயம் கேட்டுவிட்டே வெளியே கிளம்பிச் சென்றான்!

மதிய உணவை முடித்துக் கொண்டு வெளியே சென்ற நல்லானந்த் வீடு திரும்ப, மாலை நான்கு மணியானது. அதே நேரத்தில் திலோவின் பள்ளி நேரமும் முடிவடையும் என்பதால் திலோவையும், அகிலையும் வரும் வழியில் அழைத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்த நல்லானந்தையும், அவனது தோழியையும் மலர் மற்றும் அன்பரசியின் சம்பாஷணை வரவேற்றது.

நண்பர்களுடன் விளையாடிய களைப்பிலும், அதில் பட்ட லேசான காயம் உண்டுபண்ணிய வலியிலும் உறங்கிவிட்டிருந்த அகிலனைத் தோளில் சாய்த்துக் கொண்டு மாடியேறிய நல்லானந்தை, பின்தொடர்ந்தாள் அவனது தோழி.

மாடியிலிருந்த கூடத்திற்குள் அவர்கள் அடியெடுத்து வைத்தப்போது, மாடி கூடத்தை ஒட்டியிருந்த வரண்டாவிலிருந்து பேச்சு குரல் கேட்கவே, நண்பர்கள் இருவரும் நடையில் தடையிட்டு, நடந்த உரையாடலை ஊன்றி கவனிக்க ஆரம்பித்தனர்.

பிரெஞ்சு விண்டோ மாடலில் அமைக்கப்பட்டிருந்த வெளி மாடத்தில், தனது சின்ன நாற்காலியில் மலர்… கால் மேல் கால் போட்டு அமர்ந்திருக்க, அன்பரசி அங்கிருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்தாள். இப்படியாய் ஒருவரை ஒருவர் பார்த்தப்படி அமர்ந்திருந்த நிலையில் நடந்த பேச்சுவார்த்தைகள் இதோ,,

"உன் பேர் என்ன்ன?"

"அன்பரசி"

"குட்டியோட பேர் என்ன?"

"உக்குத் தெயியாதா? என் பேர் மதிமலர்"

"ம்ம் த்தப்பு த்தப்பு... மதிமலர் நல்லானந்த்"

"அப்போ என்னோட பேரும் அன்பரசி நல்லானந்த்!"

"இப்ப தா வேய(வேற) பேர் சொன்னே?"

Preview Only

"மறந்துட்டேன்டா மதி குட்டி!"

"மதி கூப்ப்தா அச்சுவ்வேன்"

"தப்பு, தப்பு! கன்னத்தில போட்டுக்கிட்டேன்! இனிமேல் மதி கூப்பிட மாட்டேன் சரியா?"

"குத் கேர்ள்!"

"தேங்க் யூ!"

"வெல்கம்... அப்தம் உக்கு கையில் "ஆ"வா"

"ஹ்ம்ம்...ஆமா "ஆ""

"ஹோ! எப்பி வந்துச்சு? டொம் விதுந்துட்டியா?"

"நான் பஸ்-ல போயிட்டே இருந்தேனா? அந்த பஸ் ஒரு லாரி கூட டொம் மோதிடுச்சு. அதான் எனக்கு அடி பட்டிடுச்சு!"

"பெத்த பஸ்ஸா?"

"ஹ்ம்ம் ரொம்ப பெருசு"

"ஹோ, பஸ் தானே டொம் விழுந்துச்சு? உக்கு ஏன் ஆ வந்துச்சு?"

"நானும் பஸ் கூடவே டொம் விழுந்துட்டேன். அதான்"

"ஹோ! எக்கும் ஆ வந்துச்சு..மலர் பாப்பாவும் டொம் விதுந்துடா"

"அச்சச்சோ! பாப்பாக்கு இப்போ எப்படி இருக்கு? வலிக்குதா?"

"இல்லையே! ஊச்சி போத்தாவா...(போட்டாங்களா)... அப்தம் நல்லாப்பா முத்தா வச்சாவா... போச்சே!"

"நீயும் ஊச்சி போத்துக்கோ! அப்தம் நல்லாப்பா முத்தா வச்சா... ஆ காணாம் போய்தும்",

"அப்படியாடா ராஜாத்தி! நீங்க அம்மாக்காக நல்லாப்பாகிட்ட சொல்றீங்களா? ஒரே ஒரு முத்தா கொடுக்கச் சொல்லுங்க!"

"நீ ஆன்த்தீ! அம்மா இல்ல! அம்மா ஸ்கூல் போய்த்தாளே!"

அவர்களது சம்பாஷணை அங்கே தொடர்ந்து கொண்டே இருக்க, அதை கேட்டிருந்த திலோவிடமிருந்து "நல்லா, அன்புக்கும் மலருக்கும் விசா ஏற்பாடு பண்ணிடுடா" என்ற வார்த்தைகள் வந்து விழுந்தன!

அன்புக்கும் மலருக்கும் விசா ஏற்பாடு செய்யும்படி திலோத்தமை கூறியதும், "திலோ!" என்றான் நல்லா மெதுவாக. மெதுவாய் வெளி வந்த குரலே என்றாலும், அதில் சிறுது வியப்பு, சிறிது பெருமை, சிறுது கவலை, சிறுது நிம்மதி என எல்லா விதமான உணர்வுகளும் கலந்திருந்தது.

"ஹ்ம்ம், ஆமா நல்லா! மலர் என்கிட்டயே இருந்தா அன்புகிட்ட ஒட்டமாட்டா. அன்புவும் மலருக்காக ரொம்பவே ஏங்குறா... அது பொய்யான ஏக்கமோ பாசமோ இல்லை! அடி மனசிலிருந்து வரது. ஒரு தாயா என்னால அன்பரசியைப் புரிஞ்சுக்க முடியுது. அதனால தான் சொல்றேன். ரெண்டு பேரையும் கனடா கூட்டிட்டுப் போ! அன்போட தனியா இருக்கும் போது மலர் கொஞ்சம் கொஞ்சமா மாற வாய்ப்பிருக்கு!" என்றாள் மிகத் தெளிவான குரலில்.

"நீ... மலரை...விட்டு" என நண்பன் தன் தடுமாற்றத்தை வெகு தெளிவாய் அரங்கேற்ற,

"ஆறு மாசம் தானே! அதுக்குள்ள மலர் அன்புக்கிட்ட சகஜமா பேச ஆரம்பிச்சு...அம்மான்னு கூப்பிட தொடங்கிடுவா! அவங்களுக்குள்ள ஒரு புரிதல் வந்திருச்சுன்னா எங்க வேணும்னாலும் இருக்கலாமே! பரவாயில்லை நல்லா, எனக்காக பார்க்காதே! அன்புவும் மலரும் தான் இப்போ முக்கியம்" என்ற தோழியைத் தோளோடு

அணைத்து "இது தான் எனக்குத் தெரிஞ்ச திலோ! நான் மட்டும் முக்கியமில்லை...என்னை சுத்தி இருக்கவங்களும் சந்தோஷமா இருக்கணும்ன்னு நினைக்கிற என்னோட ஃபிரண்ட் திலோத்தமை திரும்ப வந்துட்டாங்க! தேங்க்ஸ்டா" என்றான் குரலில் பெரும் நிறைவுடன்.

"இதுக்காக தானே சார் எல்லாத்துக்கும் "சரி, சரி"ன்னு மண்டை ஆட்டினீங்க! இவ தானே...சரி சொல்லாம எங்க போய்ட போறா என்ற நினைப்பு தானே!" எனத் திலோத்தமை, தன் நண்பனது சில நாள் செயல்களை கணிக்க,

அவளது இலகு மனிநிலையை உணர்ந்து "திலோ சொன்னா தப்பாகுமா? நூறு பெர்சென்ட் கரெக்ட்!" என அண்ணியின் கணிப்பை முற்று முதலாய் ஒப்புக்கொண்டு அவளிடம் பணிந்தவன்,

"நீ போகக்கூடாதுன்னு சொல்லும் போது நானும் அதே பிடியில் இருந்தா...உனக்குக் கோபம் ஜாஸ்தியாகும். கோபம் ஜாஸ்தியாகி இன்னும் பிடிவாதத்தை கூட்டும்! இதெல்லாம் எதுக்கு, சொல்லு? நான் சட்டுன்னு சரண்டைஞ்சேன்னு வச்சுக்கோ, நீ "என்னடா இவன்?"ன்னு யோசிக்க ஆரம்பிச்சு நல்ல முடிவுக்கு வருவ! அதான் விட்டுட்டேன்! எப்படி நம்ம ஐடியா?" எனத் தன் முழுக்கையில் சட்டையிலிருந்த காலரை ஒரு கையால் தூக்கிவிட்டுக் கொண்டான்.

"போதுமே! அகிலைக் கொண்டு போய் கட்டிலில் படுக்க வை. ஆனா, கை-கால் கழுவாமலே தூங்கிட்டானே..."

"ஒரு நாள் தானே திலோ! அதுவும் அடி வேற பட்டிருக்கு. கொஞ்ச நேரம் தூங்கட்டும். எழுந்ததும் டி.டி இன்ஜெக்ஷன் ஒன்னு போட்டுட்டு வந்துடுறேன்" எனத் தோழியின் கட்டளையை கட்டளை என்று நினைக்காமல், சிரம் தாழ்த்தி செய்து முடித்தான்.

நல்லானந்த் அகிலனைப் படுக்க வைக்கச் சென்றிருந்த போது, அன்பரசியிடம் தான் நடத்திக் கொண்டிருந்த குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டு தாயைத் தேடி ஓடிவந்தாள் மதிமலர்.

"அம்மா" எனத் தாவிய கன்றை, அதே ஆவலோடு அணைத்துக் கொண்ட திலோத்தமை "என்ன பண்ணிட்டிருந்தீங்க அப்புக்குட்டி?" என்ற கேள்வியை உதிர்த்தாள்.

"இந்த ஆன்த்தீ கூத பேசித்து இயுந்தேன்... அகில் அண்ணா எங்க... காணோம்...அம்மா...அவாக்கும் "ஆ"வாம்... பஸ் இதுக்கிள்ள...பெத்த பஸ் அது டொம் விதுந்தியிச்சு... ஆன்த்தீயும் டொம் விதுந்துதா. பாப்பாவும் டொம் விதுந்தேன்ல...அப்பியே அவாவும்..." என அன்பரசியிடம் பேசிய விஷயங்கள் அனைத்தையும் தன்னால் முடிந்த அளவு கோர்வையாக கூறி ஆரம்பித்தாள்.

தன் சிறு தலையை இப்படியும் அப்படியுமாய் ஆட்டி அவள் பேசியது வெகு அழகாய் இருந்ததாலும், அவள் கூறிய விஷயங்களை ஏற்கனவே அறிந்திருந்ததாலும் "அவங்க ஆன்த்தீ இ..." என்ற வாக்கியத்தை திலோ முடிப்பதற்குள்,

"திலோக்கா, கை கால் கழுவிட்டு சாப்பிட வாங்க! அகில் குட்டி எங்க?" எனத் தங்கை பேச்சை மாற்றிவிடவே, மறு வார்த்தையில்லாமல் அவள் வழியே சென்றாள் பெரியவளும்.

கீழிருக்கும் கூடத்தை நோக்கி அன்பரசியின் பயணம் தொடங்கும் போது, "உங்க வீட்டுக்காரரும் வெளியிலிருந்து வந்துட்டேன் அம்மணி! எங்களையும் கொஞ்சம் கவனிக்கிறது?" எனப் பின்னோடு வந்த நல்லானந்த், அன்பரசியிடம் வம்பு செய்ய,

"பொண்டாட்டியையும், பொண்ணையும் விட்டுட்டு ஊர் சுத்திட்டு வர உங்களை நல்லாவே கவனிச்சிட வேண்டியது தான்!" என்ற அன்பரசிக்கு "ஹை-பை" (ஒரு கையில் தான்) கொடுத்து, சிரித்தாள் அவளது சகோதரி.

"என்னமோ, நீங்க வரேன்..வரேன்னு தவிச்சு தண்ணி குடிச்ச மாதிரியும், நான் கூட்டிட்டுப் போகமாட்டேன்னு சொல்லி கொடுமை பண்ண மாதிரியும் நீங்க போன்ற சீன் இருக்கே! தாங்கலைடா சாமி! எல்லாம் இந்த வளர் கொடுக்கிற இடம்! எங்க வளர்? பண்றதையும் பண்ணிட்டு நல்லா குப்புற படுத்து தூங்க வேண்டியது..." என்றவனை சிரிப்பலைத் தொடர்ந்தாலும், அதை பொருட்படுத்தாமல் மகளைத் தூக்கிக் கொண்டு தாயைக் காணச் சென்றான்.

அதன் பின்னர், அகிலனின் மருத்துவமனை பயணம், குழந்தைகளுடன் விளையாட்டு, லேசான மாலைப் பலகாரம் என மாலைப் பொழுது மயக்கத்துடன் கழிய, வேலை முடிந்து வீடு வந்த தேவநந்தன் மனைவியின் முடிவை அறிந்து, அவளைக் கண்களில் காதல்

பொங்க பார்த்ததில் அவர்களது இனிய இல்லறம் வார்த்தைகளின்றி மேலும் இனித்தது.

கணவனின் பெருமை பார்வையில் வெளிப்பட்டது என்றால், "தேங்க்ஸ் அக்கா" என நெகிழ்ந்த, உருகிய குரலில்

அன்பரசியும் மதிமலரும், அன்பரசியின் கை சரியானதும் கனடா செல்வது என்றும், அவர்களது பயணத்திற்கான விசா மற்றும் பயணச்சீட்டு போன்ற விவகாரங்களை இப்போதிலிருந்தே ஆரம்பிப்பது என்றும் ஒரு மனதாக முடிவு செய்யப்படவே, வீட்டினர் அனைவரும் அருகிலிருக்கும் திருவான்மியூர் கடற்கரைக்குச் சென்று, கையில் எடுத்துச் சென்றிருந்த உணவை முடித்துக் கொண்டு நிறைந்த மனதுடன் வீடு திரும்பினர்.

வரும் வழியிலியே குழந்தைகள் இருவரும் உறங்கிவிட, தந்தைமார் இருவரும் தத்தம் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு தங்கள் அறைக்குள் நுழைந்தனர்.

மதிமலரின் ஆழ்ந்த உறக்கத்திற்காக நிமிடங்கள் மௌனத்தில் கழிய, தங்கள் தேவதையின் துயிலை உறுதி செய்துகொண்ட நல்லானந்த், அலமாரியின் முன் நின்று கொண்டிருந்த மனைவியை பின்னாலிருந்து அணைத்தான்.

"மலர்கிட்ட ஏதோ சிபாரிசு பிடிச்சியாமே? உனக்கு வேணும்னா என்னை நேர கேட்க வேண்டியது தானே? எதுக்கு இப்படி சுத்தி வளைக்கிற? எனக்கு இந்த சிபாரிசு...சுத்தி வலிக்கிறது எல்லாம் சுத்தமா பிடிக்காது தெரிஞ்சுக்கோ?"

"சிபாரிசா? என்ன சிபாரிசு? அதுவும் மதிகிட்ட? என்ன நல்லாப்பா?"

"ஹ்ம்ம், ஆமா! நீ சிபாரிசு மூலமா கேட்டதை நான் தாராளமா அள்ளி அள்ளிக் குடுத்திட்டு, உன்கிட்ட பேசிக்கிறேன்! என் நல்ல பேருக்கு ஒரு இழுக்கு வரக் கூடாது பாரு...அதுக்காக சொல்றேன்"

அவனது பெரிய மனித் தோரணையிலும், அப்பழுக்கற்ற சிங்கம் போன்ற அவனது பேச்சிலும் ஏதோ புரிவது போலிருந்தது அன்பரசிக்கு. ஆனால் அது என்னவென்று அவள் உணரும் முன்பாகவே பலமான பல முத்தங்கள் அன்பரசியின் கன்னத்தைப் பதம் பார்த்தன.

"ஷ்...அப்பா...என்ன வேகம்...கொஞ்சம் மெதுவா" என்ற அன்பரசியின் அதிர்வு, வாய் மொழியாய் வெளிவந்த போதும் நல்லானந்த் வெகுநேரம் தன் வேட்கையை நிறுத்தவில்லை.

"இன்னும் இரண்டு மாசத்திற்குத் தாங்கனுமே! உன் கை இப்படி இருக்கிறதால என்னைக் கட்டுப்படுத்திக்கிட்டு இருக்கேன்...இல்லைன்னா" என கணவன் கிறக்கமாய் இழுக்க,

"என்ன பண்ணுவீங்களாம்?" - அவன் என்ன செய்வான் என்பதைத் தெரிந்துகொண்டே கேள்விகேட்டாள் மனைவி.

அவளுக்குத் தெரியும் என்பது அவளது கன்னங்களின் சிவப்பே எடுத்துரைக்க, "அதை இரண்டு மாசத்திற்கு அப்புறம் செஞ்சே காண்பிக்கிறேன். இப்போதைக்கு செய்யமுடிஞ்சதை செய்யலாம்ன்னு பார்க்கிறேன். மேடம் என்ன சொல்றீங்க?" என அவளிடம் அனுமதி கேட்டவன், அவளது பதிலுக்குக் காத்திராமல் அவளைக் கைகளில் ஏந்திக் கொண்டு குளியலறை நோக்கிச் செல்லத் தொடங்கினான். கையில் இரவு உடையோடு!

பிரிவாற்றாமையும், காதலும், பாசப் பரிமாறலுமாய் இரு தினங்கள் பறந்தோடிய நிலையில் நல்லானந்த் வான்கூவர் செல்லும் தினமும் வந்து சேர்ந்தது. அதிகாலை நான்கு மணிக்கு சென்னையிலிருந்து கிளம்பும் விமானத்திற்கு, இரவு ஒரு மணி சுமாருக்கு வீட்டிலிருந்து கிளம்பலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

குழந்தைகள் மற்றும் அவர்களது மெய்காப்பாளர் திலோத்தமையைத் தவிர்த்து அனைவருமே நல்லாவை வழியனுப்ப வருவதாய் இருக்க, அன்பரசியின் முகம் டன் டன்னாய் சோகத்தைப் பொழிந்தது. குழந்தைகள் இருவரும் திலோவிடம் இருக்கவே, தங்களது அறையில் தனித்து விடப்பட்ட புது தம்பதிகள் - தங்களது காதலைப் பிரிவாற்றமையுடன் கலந்து தேன் மழையாய் பொழிந்தனர்.

"என்னடா, நீ இவ்வளவு சோகமா இருந்தா என்னால எப்படி அங்க நிம்மதியா இருக்க முடியும்?" என மணாளன் உருக,

"நீங்க இங்கேயே இருந்திடுங்க நல்லாப்பா! நாம மட்டும் தனியா எனக்குப் பிடிக்கவே

இல்லை..." என்றாள் மணம் புரிந்தவள் விடையாக.

"இந்த வார்த்தையை இதோட நூறாவது தடவை சொல்றே கண்ணம்மா! நானும் அதே நூறாவது தடவையா... ஆறே ஆறு மாசம் தான் கண்ணம்மா..திரும்ப வந்திடலாம்ன்னு சொல்லப்போறேன். என்னடா சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிட்டு"

"நீங்களும் சொன்ன பதிலையே திரும்பத் திரும்ப சொல்லாம... 'சரிடா அன்பா இங்கேயே இருந்திடுறேன், கனடா போகலை'ன்னு சொல்றீங்காளா என்ன? மதி எல்லாரையும் விட்டுட்டு என்னோட எப்படி நல்லாப்பா இருப்பா? முதல...ஃபிளைட்ல என்னோட ஒழுங்கா வருவாளா? எனக்குப் பயமா இருக்கே... கனடா போறதுன்னு முடிவாகிடுச்சு... நீங்களே என்னையும் மதியையும் கூட்டிட்டுப் போயிடுங்களேன்! நாங்க தனியா வரலை" என அழா குறையாக அன்பரசி கெஞ்ச,

"ஷ், மலர் குட்டி எந்த பிரச்னையும் பண்ணாம ஒழுங்கா வருவா. நீ கவலைப்படாம இரு" எனத் தேற்றிய நல்லானந்திற்கும் அவர்களது பயணத்தை நினைத்துப் பயமாகவே இருந்தது. என்னதான் அன்பரசியிடம் சகஜமாய் பேசிப்பழகினாலும், மதிமலர் அவளிடம் ஓட்டுவதாய் இல்லை.

உணவு கொடுப்பதையும் கூட திலோவே செய்யவேண்டும் என அடம் பிடிப்பவள், அன்பரசியுடன் செய்யப்போகும் பயணத்தை எண்ணினால் நல்லானந்திற்கு கதி கலங்கியது. கலங்கிய மனதை மனைவியிடம் காட்டி, மேலும் அவளைக் கலங்கவிடாமல் மெல்ல மெல்ல அவளைத் தேற்றி சகஜ நிலைக்குக் கொண்டுவந்தான்.

மனைவியின் கவலை முகத்தை அடியோடு மாற்றுவதற்காக "உனக்குக் கவலைப்பட விஷயம் வந்துட்டே இருக்கும் போலவே! ஆனா, எனக்கெல்லாம் அப்படியில்லைப்பா. நான் கிளம்புறதில எனக்கு ஒரே ஒரு கவலை தான். ஜஸ்ட் ஒன் தான்" என்றான் நல்லானந்த்.

"என்ன கவலை?" என அதையும் அவள் கவலையுடனே கேட்க,

"நான் ஊருக்குப் போய்ட்டா உனக்கு யாரு டிரஸ் மாத்திவிடுவா. உனக்கு ரொம்பக் கஷ்டமில்லை அன்பா... அதான் ஒரே கவலை!" என அவன் ஏகமாய் வருத்தம் கொள்ள,

Property fb.../

"எப்போ பார்த்தாலும் அதே நினைப்பு தான்! கொஞ்சம் கூட சீரியஸ்னஸ் புரியாம"என அன்பரசி கவலை மறந்து சிணுங்க,

"ஏதே நினைப்பு அன்பா?" என மேலும் கேள்வி கேட்டு, அவளை மலர வைத்தவன், அவளது தேகத்தைத் தொட்டு தொட்டு, தெவிட்ட தெவிட்ட இன்பத்தை வாரி வழங்கிவிட்டே விமான நிலையம் பறந்தான்.

தந்தையின் ஆசியும், தாய் நெற்றியில் பதித்த முத்தமும், தமையனின் இறுகிய அணைப்பும், மனைவியின் கண் வழியே கரை புரண்டோடிய காதலும், மகன் மற்றும் மகளது வெண்பட்டு கன்னங்களில் அவன் பதித்த முத்தமும், தோழியிடம் கண்ணால் விடைபெற்ற நட்பு வெளிப்பாடும் என நல்லாவின் வான்கூவர் பயணம் இனிதே தொடங்கியது.

தனது உறக்கம் களைந்து அதிகாலையில் விழித்த மலர், தன்னருகே தந்தையில்லாமல் போனதில் சிறிது ஏமாற்றமடைந்தாள். அணைத்திருந்த தாயின் (திலோவின்) பிடியிலிருந்து மெல்ல நழுவி கீழே இறங்கியவள், தன் தந்தையின் அறைக்கதவை மெதுவாகத் திறந்து கொண்டு அவன் உறங்கும் கட்டிலின் அருகே சென்றாள்.

அங்கேயும் தந்தையில்லாமல் போனதோடல்லாமல் , அவனது இடத்தில் புது ஆன்ட்டி படுத்திருக்கவே, மதிமலரின் முகம் மாறியது. தன் பிஞ்சு விரல்களால் புதியவளைத் தள்ளியவள் "நல்லாப்பா காணோம்... என்தி... நல்லாப்பா தாச்சுவா...நல்லாப்பா" என அழ ஆரம்பித்தாள்.

கணவன் கடல் கடந்து சென்ற துயரிலிருந்த அன்பரசி, அதுவரை புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்துவிட்டு சிறுது நேரம் முன்பு தான் உறங்கவே ஆரம்பித்திருந்தாள். மகளின் சின்னக் கைகள் மேனியில் பட்டதுமே, சட்டென இமைகள் விரிய எழுந்தவள் "குட்டிம்மா! என்னடா?" என்ற விசாரிப்போடு மகளைத் தன் பக்கம் இழுக்கவும் முயன்றாள்.

அதற்க்கெல்லாம் மசியாத மலரோ, "நல்லாப்பா காணோம்" என்ற இரண்டு வார்த்தைகளோடு அரை முழுதும் அவனைத் தேடிக் களைத்தாள்.

"நல்லாப்பா ஊச்சி போடப் போயிருக்காங்கடா! வந்திடுவாங்க" என வாய்க்கு வந்ததைக் கூறி, அன்பரசி சமாதானம் செய்ய முயல, அதைக் காதிலேயே வாங்காமல் கட்டிலுக்குக் கீழே குனிந்து பார்த்த மதிமலர், அங்கேயும் தன் அன்பு தந்தையைக் காணாமல் தவித்துப் போய், குளியலறை அருகே சென்று, சாற்றியிருந்த கதவைத் தட்டி "நல்லாப்பா வா..." என அழைக்கவும் செய்தாள்.

"அச்சோ குட்டி, அப்பா இங்க இல்ல கண்ணம்மா" எனத் தாயாக துடிப்பவள், கூறிய சமாதானம் எதையும் ஏற்காமல், அந்தப் பிஞ்சு மனது வெம்பிப் போனது.

அவளது அழுகையைப் பொறுக்க முடியாமல், அதற்கும் மேலாய் அதை அடக்கும் வழி தெரியாமல் வெளியே விரைந்த அன்பரசி, தன் காலை நடை பயணத்தைத் துவக்கிக் கொண்டிருந்த பெத்தபெருமாளைக் கண்டதும், "அப்பா, மலர் எங்க ரூம்-ல அவங்கப்பாவைக் காணலைன்னு ரொம்ப அழறா! வந்து பாருங்களேன்" எனக் கெஞ்சினாள்.

மருமகள் கூறியதைக் கேட்ட மாமனாரும், அழுது கொண்டிருக்கும் பேத்தியிடம் "மலர் ராஜாத்தி! நல்லாப்பா ஆபிஸ் போயிருக்கான். சீக்கிரம் வந்திடுவான். இப்போ, பாப்பா அழுதுட்டே இருந்தீங்கன்னு வை...அப்புறம் ரொம்ப லேட்டா தான் வருவான். அப்பா சீக்கிரம் வரனுமா? வேண்டாமா?" எனக் கூறி, அவளையே விடை கேட்டார்.

"தத்தா...நல்லாப்பா காணோம்" என அவள் கை விரித்து மீண்டும் சொல்ல, பெத்தபெருமாள் தன் சமாதானத்தை மீண்டும் உரைக்க, இதுவே பத்து முறைக்கும் மேல் தொடர்ந்தது.

முடிவில், "நல்லாப்பா ஆபிஸ் போய்தாவா?" என ஒருவாறாக ஒத்துக்கொண்டாள் மலர். "ம்ம், ஆமா! நாம இப்போ பீச் போவோமா? தண்ணில போலாம்... ஜில் தண்ணி" என ஆசை காட்டி, பேத்தியை வெளியே அழைத்தும் சென்று விட்டார்.

மகளும், அவளது பாட்டனாரும் வெளியே சென்றதும் தான், "தனக்கு மகளை சமாதானம் செய்யக் கூடத் தெரியவில்லையே! அவளோடு இப்படி தனியாக இருப்பது?" என்ற பயம் விஸ்வரூபம் எடுத்தது.

அந்த பயம், மாமியார் மற்றும் சகோதரியுடன் நடந்த உரையாடல்களில் வெளிவரவே, தங்களுக்குத் தெரிந்த விதத்தில் அவளைத் தேற்றினர் இருவரும்.

திலோ, மதிமலரின் குறும்புகளின் வாயிலாக அவளது குணத்தை எடுத்துரைத்து அன்பரசியின் பயத்தைப் போக்கினாள் என்றால் வளர்மதியோ தன் மகனின் பெருமைகளைப் பேசி மருமகளின் கவனத்தை மகனின் மீதும் விழ வைத்தார்.

திலோவின் பேச்சு மதியின் மேலிருந்த பாசத்தைப் பெருக்க, வளர்மதியின் பேச்சோ கணவனின் மேலிருந்த காதலையும், அவனை அடைந்ததில் அவள் கொண்டிருந்த பெருமையையும் பன்மடங்காய் பெருக்கியது.

அதிலும் தடை செய்யப்பட்டிருந்த சில புகைப்படங்களை அவனது அலமாரியிலிருந்து எடுத்துப் பார்த்தபோது, அதில் அவன் அணிந்திருந்த உடைகள், கையில் மாட்டியிருந்த செம்பு வளையல், காதில் தொங்கிக் கொண்டிருந்த சிறு வளையம், அங்கங்கே கிழிந்திருந்த (ஃபாஷன்) ஜீன்ஸ் பான்ட், திறந்தே இருந்த சட்டையின் முதல் பட்டன், இவை தவிர அவன் கையில் இல்லை என்றாலும் நண்பர்கள் சிலரது கையில் துளிர்த்திருந்த சிகரட், கண்களில் தென்பட்ட மிதமான போதை என அவன் கூறிய "மலரைப் பார்க்கிறதுக்கு முன்னாடி என்னோட வாழ்க்கை குப்பை மாதிரி இருந்தது" என்ற வாக்கியத்தை மெய்ப்பித்தது. அதிலேயே மனம் சென்றுவிடாமல் தடுப்பது போல், மதிமலர் வந்த பின்னர் அவனது வாழ்க்கை முறை மாறியதை வளர்மதி எடுத்துக் கூறவே அன்பரசியின் மனம் கணவனுக்காக தவித்தது.

"மதிமலரைத் தத்து எடுத்துக்கிறேன்னு அவன் ஃபோன் பண்ணினபோது, எங்களுக்கு மகன் உயிரோட இருக்கான்...அவன் என்ன செஞ்சாலும் சரி என்ற மாதிரி தான், அன்பு இருந்தது. ஆனா மலர் குட்டியை ஊருக்குக் கூட்டிட்டு வந்தவனிடம் தெரிஞ்ச மாற்றங்களைப் பார்த்து, எங்களுக்கு மதிமலர் மேல ரொம்ப பிணைப்பாகிடுச்சு"

"முன்னாடியெல்லாம் வேலை முடிஞ்சா ஃபிரண்ட்சோட டிஸ்கோ, பார்ட்டி, ஊர் சுத்துரதுன்னு இருந்த பிள்ளை...அப்படியே அடியோட மாறிப் போய்ட்டான். வேலை விட்டா வீடு...வீடு வந்தா குழந்தைங்க... அவனோட உலகமே மாறியதில் எங்களுக்கு ரொம்ப சந்தோசம் தெரியுமா?"

"இந்தோனேசியா போறதுக்கு முன்னாடி...அவன் சாப்பிடாத அசைவமே கிடையாது, அன்பு! தினம் ஏதாவது ஒரு வகை அசைவம் செஞ்சே ஆகணும். அது இல்லைன்னா ஒரு வாய் சோறு கூட உள்ள இறங்காது. ஆனா, என்னைக்கு மலரைக் கூட்டிட்டு வந்தானோ...அன்னையிலிருந்து முட்டை கூட சாப்பிடுறதில்லை."

"ஏன்டான்னு கேட்டா..."சுனாமில, என் கண் முன்னாடி எவ்வளவு உயிர் போச்சு தெரியுமாம்மா? அப்படி போன அவ்வளவு உயிர்-ல ஒன்னே ஒன்னை மட்டும் தான் காப்பாத்த முடிஞ்சது. ஆனா, காப்பாத்த முடியாம போன மித்த உயிர்களை நினைச்சா நெஞ்சே வலிக்குதும்மா! என் மனசை அரிச்சிட்டு இருக்க உறுத்தலை கொஞ்சமேனும் போக்கிறதுக்கு.. இனிமேல் உயிரைக் கொல்ற எந்த செயலையும் நான் செய்ய மாட்டேன்...அசைவம் சாப்பிடறது உட்பட"ன்னு சொல்லிட்டான். அவங்க அப்பாவும் அவனை அவன் போக்கில் விட்டுட சொல்லிட்டாங்க"

"அவன் தான் அப்படி... ஆனா மலர் இருக்காளே.... சிக்கன் ரொம்பப் பிடிக்கும்! ச்சில்லி...ச்சிக்கன்-ன்னு சப்பு கொட்டி சாப்பிடும்..." எனத் தோழனின் புராணத்தைக் கேட்டிருந்த திலோ இடைப்புகுந்து, தன் மகளின் பெருமையைப் பாடினாள்.

அவரவர் தத்தம் மக்களைப் பற்றி பெரும் புகழைப் பாட, அன்பரசிக்குத் தான் புகழுக்குரிய இருவரையும் நெருங்க முடியாமல் போனது. கணவனை நெருங்குவது தூரத்தின் காரணமாய் முடியாமல் போக, அருகிலிருந்த மகளை அவளது மனதின் தூரத்தால் நெருங்க முடியவில்லை.

அன்பரசியை "ஆன்த்தீ" என அழைத்து உறவாடினாள் தான் என்றபோதும், அவளிடம் உண்ணவோ, உறங்கவோ, ஏன் விளையாடக் கூடப் பெரிதும் யோசித்தாள். திலோ இருக்கும் சமயங்களில் அன்பரசியையும் உடன் வைத்துக் கொண்டு, தன் வேளைகளில் அவளுக்கும் பங்கு கொடுத்தமையால் மதிமலரிடம் சற்றே நெருங்க முடிந்தது என்றாலும், எல்லா நேரங்களிலும் திலோத்தமையால் உடன் வரமுடியவில்லை.

"மலர் குட்டி" "டேய் செல்லம்" "புஜ்ஜிம்மா" என எந்த வகையில் அழைத்தாலும், இரண்டு வினாடிகள் திரும்பிய மலரின் கவனம் சட்டென வேறுபுறம் திரும்பிக் கொண்டது.

ஆனால், தந்தையின் குரலைத் தொலைப்பேசியில் கேட்டாலே "நல்லாப்பா" என இளித்துக் கொண்டு, ஈஷியது செல்லச் சிட்டு. அவர்களது கொஞ்சலை கொஞ்ச காலம் பொறுத்த அன்பரசி, மகள் கணவனிடம் கொஞ்சுவதில் செல்லப் பொறாமை கொண்டு, ஒரு நள்ளிரவு நேரத்தில் கணவனின் கைப்பேசி எண்களை அழுத்தி, அவன் எடுத்ததும் மனப்பாடம் செய்து வைத்திருந்த பாட்டைப் பாடலானாள்.

"ஹலோ மிஸ்டர் எதிர்க்கட்சி கேள்விக்குப் பதிலும் என்னாச்சு
காத்து காத்து நாளாச்சு பதினெட்டு நாளாச்சு
ஹலோ மிஸ்டர் எதிர்க்கட்சி கேள்விக்குப் பதிலும் என்னாச்சு
காத்து காத்து நாளாச்சு பதினெட்டு நாளாச்சு
காதலா காதலா உனைநான் விடமாட்டேன்"

"ஹே...என்னடி? நா உனக்கு எதிர்கட்சியா?"

"ஹ்ம்ம் ஆமா! மலருக்கு என்னை விட உங்களைத் தானே ரொம்ப பிடிக்குது! என்கிட்ட பேசிட்டு இருக்கும் போது அசந்து மறந்து உங்க பேரை சொல்லிட்டா போதும்... உடனே "நல்லாப்பா...அப்பா...சோப்பா"ன்னு உங்களைத் தேடிடுது. ஓவரா அவ மேல பாசத்தைப் பொழிஞ்சு...அவளுக்கு வேற யாரையுமே பிடிக்கவிடாம செஞ்சுட்டீங்க. நீங்க தான் என்னோட எதிர்கட்சியே! டெபாசிட் இல்லாம உங்களைக் காலி பண்ண வைக்கிறேனா இல்லையா பாருங்க"

"இதெல்லாம் அநியாயம் அன்பா... பாசம் வைக்கிறது ஒரு குத்தமா?" என நல்லானந்த் ஏகமாய் வருத்தப்பட,

"கண்டிப்பா, நீங்க வச்ச பாசம் என்னை நெருங்க விடாம பண்ணுதே!" - விளையாட்டாய் ஆரம்பித்தவளின் குரல் சட்டென கரகரத்து, உடைந்து போனது.

அவளது அழுகையைக் கண்ட கணவன் "ஹே குட்டிம்மா என்னடா?" எனப் பதற

"எங்க அவ என்கிட்ட ஒட்டவே மாட்டாளோன்னு எனக்குப் பயமா இருக்குங்க! என்ன செய்றது நல்லாப்பா?"

"முதல அழுகையை நிறுத்துறது! இப்போ தான் எதிர்க்கட்சி...ஆளுங்கட்சின்னு மேடம் பாட்டெல்லாம் பாடி என்னைக் கலாய்ச்சீங்க... அந்த ஜோஷ், டெபாசிட் இல்லாம காலி பண்ண வைக்கிறேன்கிற சூளுரை எல்லாம் எங்க போச்சு?? ஹ்ம்ம்? இவ்வளவு தானா உங்க வீரத்தோட அளவு?"

அவனது சீண்டலில் சிலிர்த்தெழுவதற்குப் பதிலாக, அவனது சீண்டலுக்கு ஒத்து ஊதும் வகையில் "ரொம்ப சத்தமா பேசிட்டேனோ? மலர் உங்ககிட்ட பேசும்போது மட்டும்...கண்ணெல்லாம் விரிஞ்சு, மண்டையை மண்டையை ஆட்டி அழகா பேசுதா! என்கிட்ட சாதாரணமா கூட பேசுறதில்லை. அதான் கொஞ்சம் பொறாமை வந்துடுச்சு" என அழுது வடிந்த குரலில் பதில் கூறினாள் அவனது அருமை மனைவி.

"ஹே...நான் உன்னை சீண்டுறதுக்கு சொன்னா அதை போய் சீரியஸா எடுத்துகிட்டு. என்னை எப்படி ஆட்சியை விட்டு இறக்கிறதுன்னு மட்டும் யோசி. புரியுதா? நான் ஆட்சில இருக்கிறதைவிட என்னோட எதிர்க்கட்சி ஆட்சியைப் பிடிச்சா எனக்கு ரொம்ப சந்தோசம் தான். ஆட்சியை பிடிக்க என்ன பண்றதா உத்தேசம்? ஏதாவது உதவிவேணுமா?" என்றான் கணவன், ஆழ் மனதின் ஒப்புவிப்பாக.

அவனது சீண்டல் சற்றே புரிய "ஹ்ம்ம் உங்க உதவி ஒன்னும் தேவையில்லை. நானே பிடிக்கிறேன் பாருங்க! சரி...என்ன பண்றீங்க? தூங்கியாச்சா? சாப்பிட்டீங்களா?" எனத் தனது தீர்மானத்தைத் தீர்க்கமாய் கூறிவிட்டு,

"அடிப்பாவி! தூங்கிட்டு இருக்கவனை எழுப்பி...பாட்டு பாடி...எதிரின்னு முத்திரை குத்திட்டு... தூங்கிட்டீங்களான்னு கேள்வி வேற கேட்குற நீ? இங்க வா... எல்லாத்துக்கும் சேர்த்து வைச்சு... உனக்கு இருக்கு" என்றவன், மேலும் மனைவியிடம் வம்பு செய்து அவளைச் சிவக்க வைத்துவிட்டு, உறங்கச் சென்றான்.

அன்பரசி மதிமலரிடம் நெருங்கத் துடிப்பதும், தவிர்க்கிறோம் எனத் தெரியாமலே மலர் அவளைப் புறக்கணிப்பதும் எனக் கழிந்த நாற்பது நாட்களில் நடந்த மூன்று முக்கியமான விஷயங்கள் இதோ.

முதலாவதாக, நல்லா கிளம்பிச் சென்ற பதினைந்தாவது நாள் மதிமலரின் பாஸ்போர்ட் வந்துவிட, அடுத்த பத்து தினங்களில் அன்பரசி மற்றும் மதிமலருக்கு கனடா விசா வந்து சேர்ந்தது.

இரண்டாவதாக, அன்பரசியின் கை கட்டு அவிழ்க்கப்பட்டு,கை முன்பு போல் இயல்பாக இயங்குவதற்காக சில பிஸியோதெரப்பி பயிற்சிகள் கொடுக்கப்பட்டன.

மூன்றாவதாக, அன்பரசி தன் உடல்நிலையை முன்னிறுத்தி எடுத்திருந்த விடுமுறையை ரத்து செய்து, "e-separation" மூலமாக தான் பணிபுரிந்த நிறுவனத்திற்குத் தன் ராஜினாமாவைத் தெரிவித்தாள். அவளது உடல்நிலை, அவசரமாய் நடந்தேறிய திருமணம், இத்தனை நாட்கள் அவள் எடுத்திருந்த விடுமுறை என எல்லாவற்றையும் மனதில் கொண்டு அவளது ராஜினாமாவை நிறுவனம் ஏற்று கொள்ளவே, அன்பரசி தன் பணியிலிருந்து விடுபட்டாள்.

அன்பரசியின் கைகளுக்குப் பலம் வந்துவிட்டது என்பதை இரு வேறு மருத்துவர்களின் கூற்றாக கேட்டப்பின்னரே, அவளது பயணத்தைக் குறித்து அந்த வீட்டினர் பேசத்தொடங்கினர்.

தன் கை சரியானதில் கடல் தாண்டி வசிக்கும் கணவனைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், சிங்காரச் சீமாட்டியாய் அனைவரையும் ஆட்டி வைக்கும் மலரை, அணைத்துத் தூக்க முடிந்தது தான் அன்பரசியை இன்பக் கடலில் தள்ளியது.. மலரின் உணவு நேரத்தின் போது, திலோத்தமை உணவு கொடுப்பதற்கு ஏதுவாக அவளைத் தூக்கிவைத்துக் கொண்டு தனது தீராத ஆசையை நிறைவேற்றிக் கொண்டாள்.

மகள் தன்னிடம் ஆசையுடன் வாரதபோதும், அவளைத் தன்னோடு சேர்த்தணைக்கும் வேளைகளை பெரும் பரவசத்தோடு எதிர்கொண்டவளைக் கவனித்த குடும்பத்தினர் அனைவரது பிரார்த்தனையும் அன்பரசி மற்றும் மதிமலரின் இணைப்பிற்காகவே பிரத்யேகமாய் வைக்கப்பட்டது.

ஒருவாராக அனைவரும் எதிர்பார்த்த பயண தினம் வந்துசேர, அன்பரசியின் மனதில் சற்றே பின்னே சென்றிருந்த பயம் முன்னே வந்து பெரும் ஆட்டமாய் ஆடி அவளைக் கலக்கியது.

அவளது அரண்ட தோற்றத்தைப் பார்த்த பெத்தபெருமாள், "அன்பரசி, நீ பயப்படுற அளவுக்கு மலர் அழுது ஆர்ப்பாட்டம் செய்யமாட்டேன்னு நினைக்கிறேன். பாதி நேரம் தூக்கத்தில் போய்டும். மீதி நேரம், நல்லாவைப் பார்க்கப் போறீங்கன்னு சொல்லி சமாளிச்சுக் கூட்டிட்டுப் போய்டு. அப்படியே எதுவும் நடந்தாலும், நீ அவளோட அம்மா அன்பரசி...ரெண்டு அடி போட்டு பேசாம இருக்கச் சொல்லு" என்றார் பெரியவராய்.

"அடிக்கிறதா?!!?!!" எனத் திரு திருவென முழித்த மருமகளின் கன்னத்தில் தட்டிய பெத்தபெருமாள், "மலர் உன்னை அடிக்காம இருந்தா சரி!" என்றதோடு அவளை மனைவியிடம் விட்டுவிட்டு, அங்கே பிரிவுத் துயரால் அவதிப் பட்டுக்கொண்டிருந்த பெரிய மகளைப் பார்க்கப் போனார்.

ஒருவழியாக அன்பரசியை சரிகட்டி, மலரிடம் அவர்கள் ஊருக்குச் செல்வதை மறைத்து, வளர்மதியின் அறிவுரைப் பட்டியலை வாசித்து முடித்து, அகிலனை உறங்க வைத்து, தேவ்வின் பயணக் குறிப்புகளை உள்வாங்கி முடித்ததும் கடைசியாக திலோவிடம் சென்றனர்.

உறங்கிக் கொண்டிருந்த மலரை மடியில் சாற்றி, அவளது பட்டு உடலை மென்மையாக வருடிக் கொடுத்தவளின் கண்கள் மகளை விட்டு இம்மியும் அசையவில்லை. மௌனமே உருவாய், கண்கள் மகள் மேல் நிலைத்திருக்க, மனம் ஊமையாய் அழ, கவனம் முழுதும் மகளை விட்டுத் தனித்திருக்கப் போகும் நாட்களிலேயே உழன்றிருக்க - உருக்கி வார்த்தைச் சிலையாய் அமர்ந்திருந்த திலோவின் அருகே வந்து, மண்டியிட்டு அமர்ந்த அன்பரசி, அவளது மறு தொடையில் தலைவைத்துக் கொண்டாள்.

ஒரு புறம் மகளும், மறு புறம் மகளின் தாயுமென - தன்னை உருக வைத்துக் கொண்டிருந்த இருவரின் தலை மீதும் இரு கைகளையும் வைத்த திலோத்தமை, "நேரமாகிடுச்சே அன்பு! கிளம்புடா... இந்தா மலரைத் தூக்கிக்கோ" எனக் கூறிய போது, கலங்கிய குரலை சரி பண்ணத் துடித்து, அதில் தோற்றாள்!

"ம்ம்... இன்னும் அரை மணிநேரம் கழிச்சு கிளம்பினா போதும்க்கா. நீங்களும் வரீங்க தானே?"

"இல்லைடா! அகில் தனியா இருப்பான்மா"

"ம்ம்...ஆனா..." என்றவளின் மனநிலைப் பெரியவளுக்குப் புரியாமல் இல்லை.

"இல்லைடா, எங்க நான் ஏர்போர்ட் வந்தா, மலரை என்னோடவே கூட்டிட்டு வந்திடுவேனோன்னு... எனக்கே என்னைப் பார்த்துப் பயமா இருக்கு! அதான் வரலைன்னு சொன்னேன். நீ தப்பா எடுத்துக்காதே! எந்தவித உறுத்தலும் இல்லாம கிளம்பிப் போ! எல்லாம் நல்லதாவே நடக்கும்! நல்லா பார்த்துப்பான்" என இறுக மூடிய கண்களின் வழியே இரு பெரிய நீர் மணிகள் உருள, தன் நிலையை திலோத்தமை எடுத்துரைத்தப் போது, அன்பரசி எழுந்து நின்று பெரியவளின் தலையை வயிற்றோடு அணைத்துக் கொண்டு "ரொம்ப ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் அக்கா! எனக்கு வேற என்ன சொல்றதுன்னே தெரியலை" என்றாள் அதே கண்ணீரோடு.

"போதும் நன்றி சொன்னது! சீக்கிரம் கிளம்புங்க... குழந்தையை வேற கூட்டிட்டுப் போகணும். நிறைய ஃபார்மாலிடீஸ் இருக்கும்" எனக் கண்களைத் துடைத்துக் கொண்டு, மகளை அன்பரசியின் கையில் கொடுத்தவளின் உதடுகள் அழுத்தமாய் கடிப்பட்டன.

"சரிக்கா" என்ற ஒற்றை சொல்லோடு, மதிமலரை தன்னிடம் இடமாற்றிக் கொண்டவளிடம், "மலரை...மலரை...பத்திரமா பார்த்துக்கோ அன்பரசி! இதை சொல்றதுக்காக என்னை மன்னிச்சிடு...மனசு கேட்காம சொல்லிட்டேன்" எனக் கூறிய திலோத்தமையைப் பார்க்கப் பார்க்க, அன்பரசிக்கு நல்லானந்தின் மேல் கோபமாய் வந்தது.

"எல்லாம் இவனால் வந்தது? ஒழுங்காய் இங்கேயே வேலை செய்தால் என்னவாம்? திலோவை நோகடிக்காமல் எல்லோரும் இங்கேயே இருந்திருக்கலாமே!" எனக் கணவனை மனதிற்குள் திட்டித் தீர்த்த அன்பரசி, "உங்களைத் தப்பா நினைச்சா எனக்கு மனசுன்னு ஒன்னு இல்லைன்னு அர்த்தம்! அப்புறம், மலரை உங்க அளவுக்கு இல்லைனாலும் என்னால முடிஞ்சா அளவுக்கு நல்லா பார்த்துக்கிறேன்" என்ற வாக்கோடு, மகளைத் தூக்கிக் கொண்டு விமான நிலையம் வந்து சேர்ந்தாள்.

பேத்தியை உச்சி முகர்ந்த பெரியவர்கள் இருவரும், மருமகளுக்கு ஆசியும் தைரியமும் கூறி வழியனுப்ப, மதிமலரின் குண்டு கன்னத்தில் முத்தம் வைத்து, தம்பி மனைவியிடம் தலையசைவால் விடைபெற்றான் தேவநந்தன்.

தோளில் தூங்கிய மகளைத் தாங்கியவாறே, விமானநிலைய சடங்குகள் அனைத்தையும் முடித்துக் கொண்டு, காத்திருப்போர் இருக்கையில் அமர்ந்த போது அவளது கைப்பேசி சிணுங்கியது.

நல்லானந்தின் கனடா எண் கைப்பேசியில் ஒளிரவே, அதை எடுத்துக் காதில் வைத்தவளிடம் "டிக்கெட் எடுத்துட்டியா? பாஸ்போர்ட் பத்திரமா வச்சுக்கோ! நான் சொன்ன பேப்பர்ஸ் எல்லாம் கையில வச்சிருக்கியா? பாப்பாவோட பால், அவளுக்குத் தேவையான சாப்பாடு, பிஸ்கட், அவசரதுக்கான மருந்து எல்லாம் ஹான்ட்பேகில் வச்சிருக்கியா?" என விடாமல் கேள்விகேட்டான் கணவன்.

சற்று நேரம் முன்னர் அழுத திலோவின் முகம் கண்ணில் வர, "ரொம்பத் தான் அக்கறை! அப்படி அக்கறையுள்ளவர் இங்கேயே வரவேண்டியது தானே? உங்களால தான் எல்லாருக்கும் கஷ்டம்" எனத் தன் ஆதங்கத்தைக் கோபமாய் வெளியிட்டாள் மனைவி.

"சாரி கண்ணம்மா! என்ன கோபம்னாலும் இங்க வந்து என்னோட நேருக்கு நேரா போடலாம். சரியா? ட்ராவல் பண்ணும் போது மனசை லேசா வச்சிட்டு ட்ராவல் பண்ணு. ட்ரான்சிட் வேற இருக்கு! எனக்காகடா, மனசைப் போட்டுக் குழப்பிக்காம ஒழுங்கா வா" என்றவன், அவளது அரைகுறை "சரி"யைப் பெற்றதும் கைப்பேசியைத் துண்டித்தான்.

பயணிகளுக்கான அழைப்பில் குழந்தைகள் வைத்திருப்போருக்கு முன்னுரிமை கொடுக்கப்பட, அன்பரசி தான் கேட்டு வாங்கிய ஜன்னல் சீட்டில் குழந்தையுடன் போய் அமர்ந்தாள். அதுவரை லேசான அசைவும், தட்டிக்கொடுத்ததும் உறக்கமுமாய் இருந்த மதிமலர், அன்பரசி இருக்கையில் அமர்ந்ததும் அரைக்கண்ணில் விழித்து, அன்பரசியின் முகத்தைப் பார்த்து திகைக்கவே, அன்பரசியின் மனம் தடதடவென அடித்துக் கொண்டது.

ஆனால், அன்பரசியின் எண்ணம் ஓடிய வேகத்தைப் பார்த்து பரிதாபப்பட்டது போல் மதிமலர் தன் கண்களை மூடிக் கொண்டு மீண்டும் உறக்கத்தைத் தொடர்ந்தாள். அதுவும் தாயின் கழுதை இருக்கக் கட்டிக் கொண்டு!!

அவளது தூக்கம் தொடர்ந்ததற்கும் மேலாக, மகள் தன் கழுத்தை அவளாகவே கட்டிக் கொண்டதில் அன்பரசியின் மனம் லேசானது. வாழ்க்கையின் முதல் விமானப்பயணமும் மகளது விலகலால் ஏற்பட்டிருந்த பயமும் இதில் சற்றே குறைய, விமானப்பணிப்பெண் கூறியது போல் மலரைத் தன்னோடு இணைத்து பெல்ட் மாட்டிக் கொண்டவள், மலரினும்

மென்மையான மகளுடன் தன் முதல் பயணத்தைத் துவங்கினாள்.

சென்னையிலிருந்து ஃபிரான்க்பார்ட் செல்லும் அந்த விமானம், தன் இயக்கத்தைத் தொடங்கியதுமே, அன்பரசி மகளை ஆராயத் துவங்கிவிட்டாள். இதுநாள் வரை, அவளும் மகளும் தனித்திருந்த சமயங்கள் வெகுகுறைவு என்பதால், இருவருக்குமான இந்தப் பயணம் அவளுக்குப் பயத்துடன் கூடிய சந்தோஷத்தைக் கொடுத்திருந்தது.

தன்னைத் தழுவியிருந்த பிஞ்சு கரங்களை எடுத்து உதட்டில் வைத்துக் கொண்டு, "யாரைப் பார்த்தும் நான் இந்த பயம் பயந்ததில்லை. எதுனாலும் தைரியமா முடிவெடுத்து, நானே அதை செஞ்சும் முடிச்சிருக்கேன்! ஆனா, நீ தான்...என்னை என்னமா ஆட்டி வைக்கிற? குட்டிப் பிசாசு! அழகு குட்டிப் பிசாசு!"

"அப்பாவை மட்டும் தான் மேடதிற்குப் பிடிக்கும் இல்லையா? உங்கப்பா கிட்ட தான் போறோம்! அழாம வரணும்...என்னடா புஜ்ஜி?"

"ரொம்ப அழுதா அம்மா பயந்து போய்டுவேன்? அப்புறம் அம்மாவும் உன்னோட அழ ஆரம்பிச்சிடுவேன்...ரெண்டு பெரும் ஊ...ஊ...அழுதுட்டே இருக்க வேண்டியது தான்" எனத் தன் பாட்டிற்குப் பேசிக் கொண்டிருந்தவளை, அருகிலிருந்த பெண் சற்று விநோதமாய் பார்த்தாள். அவளது பார்வையை உணர்ந்ததும், சற்றே குரலைத் தனித்த அன்பரசி, அவளிடம் லேசாய் அசடு வழிந்துவிட்டு மீண்டும் பெண்ணிடம் திரும்பிக் கொள்ளவே, அந்தப் பெண்ணும் பேசாமல் இருந்துவிடவே, அதுவுமே அன்பரசிக்கு வசதியாய் போய்விட்டது.

"என்னை லூசுன்னு நினைச்சிட்டாங்க போலடா குட்டி! ச்சு...பரவாயில்லை! அவங்ககிட்ட போய் என்னன்னு சொல்லி விளக்க முடியும் சொல்லு? அப்படியே விளக்கினாலும் என்னை முழு பைத்தியம்ன்னு நினைக்க மாட்டாங்க?" என மீண்டும் மகளுடன், அவளது பேச்சு வார்த்தை தொடர்ந்தது. மிக மிக மெல்லிய குரலில்.பின்னே, மகளின் தூக்கம் கலைந்துவிட்டால் யார் அவளைக் கட்டி மேய்ப்பது?

இந்த அலும்பெல்லாம் விமானம் பாதி தூரம் செல்லும் வரை தான் நீடித்தது. பயணத்தின் பாதியிலேயே விழித்த மதிமலர் சுற்றும் முற்றும் பார்த்தப்போது, அன்பரசியின் இதயம் தொண்டை வரை வந்துவிட்டது.

முன்னர், அவளது பயத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்ட மகளோ இப்போது அதை மதிப்பதாகவே இல்லை என்பதை "அம்மா காணோம்?" எனக் கையை அகல விரித்துக் காட்டி நிரூபித்தாள்.

அவளது "அம்மா காணோம்" என்ற வாக்கியத்தில் அன்பரசி அதிர்ந்தாலோ இல்லையோ, அருகிலிருந்த பெண் அதிர்ந்தது அவளுக்கு வெகு துல்லியமாய் புரிந்தது. அதிர்ந்த அவளைப் புறம் தள்ளிவிட்டு, "அம்மா...அம்மா" என அழைத்து, அழ காத்திருக்கும் மகளைக் கவனித்த அன்பரசி "குட்டிம்மா, நாம bird மாதிரி பறக்கிறோம் பாரேன்! நல்லாப்பா பார்க்க பறந்து போறோம்...இப்படி இப்படி...பறந்து போறோம். நாம முன்னாடி போகலாம்...அம்மா அடுத்த ஃபிளைட்ல நம்மளை மாதிரி பறந்து வருவாங்கடா!" எனக் கைகளைப் பறவை போல் விரித்து, பறந்து காட்டினாள்.

"நல்லாப்பா" என்ற வார்த்தையில் மலர்ந்த மலரோ, "நல்லாப்பா, ஆப்பிஸ் போய்தா...பாப்பாவும் ஆன்த்தீயும் அங்கவா போதா?" என்றாள் கண்களை விரித்து.

"ஆமாடா குட்டு! நல்லாப்பா பார்க்க...ஷூக்...பறந்து போறோம்"

"அம்மா?"

"பின்னாடியே வராங்க...இந்த bird ல இடமில்லையாம்? பாரேன்... எல்லா இடத்திலையும் ஆளுங்க இருக்காங்க...அதனால பின்னாடி வர bird ல வராங்க!

"அகி அண்ணா..."

"அகில் அண்ணாவைக் கூட்டிட்டு தான் அம்மா வராங்க! சீக்கிரம் வந்திடுவாங்க!"

"டாடி..."

"எல்லாரும்"

"பாத்தீ...தத்தா?"

"அவங்களும் தான்!"

"ஆன்த்தீ... அம்மா வந்துவாளா?" எனப் பெண் தலை சாய்த்துக் கேட்க, "கண்டிப்பா! நாம போய் நல்லாப்பவைப் பார்த்ததும் வந்திடுவாங்க" என அன்பரசியும் அவளைப் போலவே தலை சாய்த்துப் பதில் சொன்னாள்.

"பாப்பா மாதியே செய்தீங்க" என்ற மலர், அன்பரசி எதிர்பாராத போது பட்டென ஒரு முத்தம் வைத்துவிட்டு, திரும்பிக் கொள்ளவே அன்பரசியால் தன் நிலையை நம்பவே முடியவில்லை.

அழுது கரைவாள் என அன்பரசி நினைத்திருக்க, தன் சமாதானத்தை ஏற்று கொண்ட பிள்ளை "ஆன்த்தீ, குச்சு டீ.வி பாரு... டோரா வருமா?" எனக் கேட்கவும், சற்றே மலைத்துப் போனாள் என்றே சொல்லலாம்! அழும் பிள்ளையை சமாதானம் செய்யும் அளவிற்குத் தனக்குத் திறமை வந்துவிட்டதை எண்ணிப் பெருமையாகக் கூட இருந்தது, அன்பரசிக்கு.

"அவ அடம் பண்ணும் போது, ஒழுங்கான காரணம் ஏதாவது சொல்லிட்டா போதும்...அழுகையை நிறுத்திடுவா. நீ சொல்ற காரணம் சின்னப் பிள்ளைக்குச் சொல்ற மாதிரி சப்பையா இருந்தாதான் ஒத்துக்காம அடம் பண்ணுவா அன்பா! அதனால கொஞ்சம் ரியல் மாதிரி ஏதாவது காரணம் சொல்லிப் பாரேன்... ஷி வில் பி குட்!" எனக் கணவன் சொல்லிக் கொடுத்த சூட்சமத்தை பயன்படுத்தியதில் வெற்றியும் கிட்டிவிடவே, மகள் கேட்ட கார்டூனை போட்டுவிட்டு, தானும் அவளுடன் இணைந்து படம் பார்க்கத் துவங்கினாள்.

அரை மணி நேரப் பயணத்தைத் தாண்டிய பின்னர், பிள்ளையின் உணவை எடுத்து அவளுக்குப் புகட்ட முயன்ற அன்பரசியின் கைகளைத் தட்டிவிட்டது பிள்ளை.

"கொஞ்சம் டா" என அவள் கொஞ்ச, "வேணாம்...டோரா பாக்கணும்" என மகள் முகத்தைத் திருப்ப, மீண்டும் கொஞ்சல் நடக்க, முடிவில் மதிமலரே எப்போதும் போல் வென்றாள்.

பட்டினியாய் கிடக்கும் பிள்ளையால் தாயும் உணவைத் தேடாமல் வெறும் பழரசத்தை மட்டும் குடித்துவிட்டு இருந்தாள். பழரசத்தைப் பார்த்த மகளோ, "ஹாய் ஜூஸ்... பாப்பாக்கு" எனக் கேட்டு, சப்புக் கொட்டி குடித்து முடித்தால். இவ்வாறாக பயணம்

முழுவதும், பழரசமும், சாக்லேட்டும், பாலுமாய் இருவரும் உண்டு முடிக்க, ஃபிரான்க்பார்ட் விமான நிலையமும் இனிதே வந்து சேர்ந்தது.

ஃபிரான்க்பார்ட் விமான நிலையத்தில் காலடி எடுத்து வைத்ததுமே, தந்தையைத் தேடத் தொடங்கிவிட்டாள் மதிமலர். அவள் வாய் திறந்து, நல்லாப்பாவையும் அம்மாவையும் கேட்கும் முன்னர், தானாகவே "குட்டிம்மா, நல்லாப்பா அடுத்த ஸ்டாப்ல வெயிட் பண்றாங்கடா. இந்த bird அந்த ஸ்டாப்புக்குப் போகாதாம். இன்னொரு bird ல போய் நாம நல்லாப்பாவைப் பார்க்கலாம் சரியா?" என்றாள்.

"ஏன் போவாது?"

"அதுக்கு டையர்ட் ஆகிடுச்சாம், மலர் கண்ணா!"

"ஏன்?"

"அது சாப்பிடவே இல்லையாம். பாப்பா மாதிரியே மம்மம் சாப்பிட மாட்டேன்னு அடம் பண்ணிச்சாம். அதான் டையர்ட் ஆகிடுச்சு"

"bird மம்மம் சாப்பவே இல்லையா? பாப்பா தா மம்மம் வேணா சொன்னா இல்ல... bird -க்குக் கொடுக்காலம்"

"அப்புறம் பாப்பா என்ன சாப்பிடுவீங்க? சாப்பிடாம வரதா உத்தேசமா? சாப்பிடாம வந்தா நல்லாப்பா திட்டிடுவாங்க"

"நல்லாப்பா...நல்லாப்பா...ஹ்ம்ம் அப்பாக்கிட்ட போவாம்..அப்பா....அப்பா..."

"போலாம்...போலாம்...அடுத்த ஸ்டாப்-ல போலாம். பாப்பா சமத்தா இருந்தா நல்லாப்பா அடுத்த ஸ்டாப்-லேயே இருப்பாங்க. இல்லைன்னா, இன்னும் இரண்டு ஸ்டாப் தள்ளிப் போய்டுவாங்க"

"மலர்...சமத்து தா..." என மகள் கர்வமாய் தலையாட்ட, "சமத்து சக்கரைக் கட்டி!" எனக் கட்டிக் கொண்டாள் தாயார். தந்தையைக் காணவில்லை என்பதில் சமாதானம் அடைந்த மகள் அடுத்து "அம்மா"வைத் தேட ஆரம்பிக்க, "உங்க நல்லாப்பாவும், திலோ அம்மாவும்

குடுத்து வச்சிருக்க செல்லத்துக்கு நான் இங்க கிடந்து அல்லாண்ட வேண்டியிருக்கு. வான்கூவர்ல இறங்கினதும், உங்க அப்பாவை ஒரு கை பார்க்கிறேன்" எனக் கறுவியவள், (மனதிற்குள் தான்! வெளியே சொல்லி இருந்தால் ஃபிரான்க்பார்ட் விமான நிலையமே அதிர்ந்திருக்காது?) அடுத்தப் பறவைக் கதையை மகள் நம்பும் விதமாக எடுத்துவிட்டு, ஒருவாராக சமாளித்து வைத்தாள்.

வான்கூவர் செல்லும் அடுத்த விமானத்திற்கு நான்கு மணி நேரங்கள் இருக்கவே, மகளை அழைத்துக் கொண்டு விமான நிலையம் முழுதும் வலம் வந்தவளை, மலரின் கேள்விகள் மட்டுமே நிறைத்திருந்தன. பெத்தபெருமாளின் "குழந்தையோட பயணம் செய்யும் போது நிறைய லகேஜ் வேண்டாம்மா. அவளையும் பார்த்திட்டு, சாமானையும் பார்த்துக்க முடியாது. மலரோட கிட் பாக் தவிர உன்னோட ஹான்ட் பாக் மட்டும் எடுத்துக்கோ, போதும்!" என்ற அறிவுரை இப்போது அவளுக்கு நன்றாகவே கைகொடுத்தது.

ஒரு மணி நேர உலாவலுக்குப் பின்னர், "உட்காரலாமா மலர்?" என அன்பரசி வினவ, பெரிய மனது செய்து ஒப்புக்கொண்டாள் மதிமலர்.

அடுத்து வந்த மூன்று மணி நேரத் தை, காத்திருப்போர் இருக்கையில் மகளுடன் அமர்ந்த அன்பரசி, அவளைப் பக்கத்தில் விளையாடவிட்டு அதை ரசிப்பதிலும், மேலும் ஓர் முக்கியமான காரியத்தை சாதிப்பதிலும் கழித்தாள்.

அப்படியென்ன முக்கியமான காரியம் எனக் கேட்கிறீர்களா? மகளது ஆன்த்தீ என்ற அழைப்பைப் புறம் தள்ளியது தான் அது! அந்த காரியம் நடந்த முறை இதோ,

அமர்ந்திருந்த கூடத்தில் அமைந்துள்ள கண்ணடித் தடுப்பு வழியாக, வெளியே நின்று கொண்டிருந்த விமானங்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கொண்டிருந்த மகள், "ஆன்த்தீ, அங்க ஒரு bird நிக்குதா...அதித போவாமா? நல்லாப்பா இப்பா"

"மலர் குட்டி... ஆன்ட்டி பேர் தெரியுமா உங்களுக்கு?"

"ஹோா...தெயுமே! அபு... "

"அபு இல்லைடா...அன்பரசி"

"அம்மா...அபு தா கூப்தா"

"ஹ்ம்ம் அப்படியா? அம்மா அன்பு கூப்பிடுவாங்கடா"

"ஆமாமாமா...பாப்பாவும் அபு தா சொன்னா... கதெக்ட் ச்சொல்லிதா....ஹை...ஜாலி..." எனப் பெண் கைகளைத் தட்டித் தன்னைத் தானே தட்டிக் கொடுக்க, அன்பரசிக்குச் சிரிப்பாக வந்தது.

ஆனால் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, "நல்லாப்பா ஆன்ட்டியை எப்படி கூப்பிடுவாங்க? பாப்பாக்குத் தெரியுமா? குட்டிக்குத் தெரியாதுன்னா பரவாயில்லை...அகில் அண்ணாவுக்குத் தெரியும்! அவன் கிட்ட கேட்டுக்கிறேன்" என அன்பரசி விட்டேறியாய்கூறவும்.

"பாப்பாக்கு தெய்யும்"

"என்னன்னு?"

"அம்பா"

"பாப்பாவும்...அப்படியே கூப்பிடுறீங்களா?"

"பெத்சு அக்கா ல்லாம் ஆன்த்தீ கூப்தணும்...நல்லாப்பா சொன்னா...."

"ஆமா, உங்க நல்லாப்பாக்கு வேற வேலையில்லை. எனக்கு எதிராவே காய் நகர்த்தி வைக்கிறது...அப்புறம் நான் எப்படித்தான் விளையாடுறது!" என மனதிற்குள் மீண்டும் கணவனைவைதவள்

"பரவாயில்லைடா... ஆன்ட்டி வேண்டாம் கண்ணம்மா.. அம்பாவே கூப்பிடு"

"நல்லாப்பா திட்டுவா..."

"திட்ட மாட்டாங்கடா! குட்டியை உயர தூக்கிப் போட்டு  பிடிச்சு, முத்தா தருவாங்க! அப்புறம்...அம்பாவும் ஆன்த்தீ மாதிரி தான்..."

"ஹோ... அப்பியா.. சரி அம்பா"

"சமத்துக் குட்டி!!" என மகளை ஓடிச் சென்று கட்டிக் கொண்டவள், அவளைத் தூக்கித் தட்டாமாலை சுற்றி, இறுக முத்தமிட்டாள்!

அதன் பிறகு, மலரின் அம்பா...ஆன்த்தீ என மாறி மாறி வந்த அழைப்புகளில் திளைத்திருந்தவளை, மதிமலரின் "bird வயுதுக்குள்ளவா அம்பாவும், பாப்பாவும் வந்தா... பாவாம் bird...அதுக்கு வச்சுமா(வலிக்குமா)?", "bird க்கு எதுக்கு குச்சு சைக்கிள் மாதியி(மாதிரி) வீல் இதுக்கு?" என வந்த ஆயிரமாயிரம் கேள்விகள் மேலும் திளைக்கவைத்தன. மகளின் கேள்விகள் அனைத்திற்கும் சளைக்காமல் பதில் கூறியவளை, பயணிக்களுக்கான அழைப்பு கலைக்க, மகளுடன் கணவனை நோக்கிச் சென்றாள்.

முந்தைய பயணம் முழுதும் தூங்கியே பொழுதைக் கழித்த மலரோ, இந்தப் பயணம் முழுதும் அன்பரசியை பெண்டு நிமித்தினாள்! முதலாவதாக, தனக்குத் தனி இருக்கை வேண்டும்மென அடம் செய்தவள், தன் இருக்கையை அவளுக்குக் கொடுத்துவிட்டு அன்பரசி நின்று கொண்டே சிறிது தூரம் பயணம் செய்யவும், "நீயும் உக்கா..." என ஒரு ஓரமாய் அன்பரசியை அமரவிட்டாள்.

மீண்டும் சிறிது நேரத்திலேயே, இருக்கையில் அமரமாட்டேன் என்றவள் விமானம் முழுதும் நடந்து களைத்தாள். உறங்கிக் கொண்டிருந்த ஒரொருவர் முகத்தையும் அவள் உற்று பார்த்தப் போது, தாயிற்கு அது அழகாய் இருந்தாலும், மற்றவர் ஏதும் சொல்லிவிடுவார்களோ என்ற பயமும் கூடவே இருக்கவே, அவளைத் தடுத்து நிறுத்துவதே பெரும் பாடாய் இருந்தது.

சற்று நேரம் அமர்ந்து சின்னத் தொலைகாட்சியை பார்த்தவள், மீண்டும் தன் அட்டகாசத்தை ஆரம்பித்து, அன்பரசியை ஆட்டிவைத்தாள்! "இதென்ன, அதென்ன?" என ஓயாத கேள்விகளும், அதை விட ஓயாத நடையும், உள்ளேயே செல்லாத உணவும் ரொம்பவே அன்பரசியை அலக்கழித்தன! எல்லாவற்றுக்கும் மேலாக, விமானம்

தரையிறங்கும் போது, தன் மடியில் அமர்ந்து பெல்ட் மாட்டிக் கொள்ள மாட்டேன்...தான் மட்டுமே சீட்டில் அமர்ந்து கொள்வேன்... நீ நில் என்றவளை விமானப் பணிப்பெண் வந்து மிரட்டும் வரை அடங்கவில்லை.

ஒருவாறாய் வான்கூவர் மாநகரத்தை அவர்கள் அடைந்து, விமானநிலைய பரிசோதனைகள் அனைத்திற்கும் ஆட்பட்டு, கொண்டு வந்த பெட்டிகளை எடுத்துக்கொண்ட போது மலர் அசந்து போய் அன்பரசியின் தோளில் சாய்ந்துகொண்டாள்.

தள்ளுவண்டியில் பெட்டிகளுடனும், ஒரு தோளில் பைகளுடனும், மறு கையில் தூங்கத் தயாராய் இருந்த பிள்ளையுடனும், கண்கள் இரண்டும் அலைபாய, கணவனைத் தேடிக் கொண்டிருந்த அன்பரசியை, விரிந்த கரங்களுடன் வரவேற்றான் அவளது அருமை கணவன் - நல்லானந்த்!

அலைந்த கண்களில் நீங்கா படமாய் அவனது பிம்பம் பதிய, விரைந்தோடி வந்து அவனிடம் தஞ்சம் புகுந்தாள் மனைவி!

"அன்பரா" என்றவனின் குரலும் குழைந்து, நெகிழ்ந்து பிரிவின் துயரை ஒற்றை வார்த்தையில் பறைசாற்றியது.

"ஜெர்னி எப்படி இருந்ததுடா? சின்னக் குட்டி ரொம்பப் படுத்திட்டாளா?"

"ஹ்ம்ம்...அதெல்லாமில்லை. சமத்தா வந்தா!" என மகளை விட்டுக் கொடுக்காமல் மனைவி பேச,

"பரவாயில்லையே! என்னோட டெபாசிட் சீக்கிரமே காலியாகிடும் போலவே!" எனக் கேலியாய் உரைத்தான் நல்லானந்த்.

"ஆமா...சீக்கிரமே!" என்றாள் அன்பரசியும் வெற்றி குரலில்.

"சுபஸ்ய சீக்கிரம்! குட்டி மேடம் சோர்ந்து  போயிட்டாங்களே! என்ன விஷயம்? ரொம்ப ஆட்டமோ?"

"ஆமா... செம ஆட்டம்! என்னையும் சேர்த்து ட்ரில் வாங்கிவிட்டாள்! ஒழுங்கா சாப்பிடவும் இல்லையா...அதான் சோர்ந்து போய்டா"

"ஏன்மா? சரி...சரி...நீ சாப்பிட்டியா?" என்று முதலில் மகளின் உணவு உண்ணாமையை பற்றி கேட்டவன், காரணத்தைத் தெரிந்து கொள்வதால் பெரிதாய் ஒன்றும் நடந்துவிடப் போவதில்லை என்பதை உணர்ந்து கொண்டு, மனைவியின் உணவைப் பற்றி கேட்டான்.

"அவ சாப்பிடாத போது... நான் மட்டும் எப்படி சாப்பிடறதாம்?" என்ற மனைவியின் கேள்வியில் வெளிப்பட்ட பாசம், நல்லானந்தை மலைக்க வைத்தது.

தன் மலைப்பை அழுத்தமான ஓர் தோள் அணைப்பால் வெளியிட்டவன், குழந்தை உட்பட அவள் வைத்திருந்த அனைத்து உடைமைகளையும் தன் பால் எடுத்துக் கொண்டு, கார் நிறுத்தும் இடத்திற்கு அழைத்துச் சென்றான்.

சோர்ந்து உறங்கிய மகளை மெல்ல கார் சீட்டில் சாற்றிவிட்டு, விரைவாக வீடு நோக்கி விரைந்தவனின் தோள்களில் மெல்ல தலை சாய்த்துக் கொண்டாள் அன்பரசி. சென்னைக்கு கைப்பேசியில் அழைத்து, அவர்களது பயண விவரம் கூறியவர்கள், அடுத்த நாள் காலை விரிவாக பேசுவதாகக் கூறி அழைப்பை வைத்தனர்.

வீட்டிற்குள் நுழைந்ததுமே மலர் முழித்துவிட, நல்லாப்பாவைக் கண்ட குஷியில் சில பல நிமிடங்கள் கழிந்தது. அதன் பின்னர் அன்பரசியை குளித்துவிட்டு வருமாறு கூறியவன், அவள் வந்ததும் மகளைக் குளிக்க வைத்து அழைத்து வைத்தான்.

இருவரும் இரவு உடைமாற்றி வர, அன்றைய இரவு உணவிற்கு நல்லானந்த் தயார் செய்து வைத்திருந்த உணவைப் பார்த்ததும், அன்பரசிக்குப் பெருமை பிடிவடவில்லை! பின்னே, பிள்ளைக்குப் பிடித்த சில்லிச் சிக்கன், மற்றும் அன்பரசிக்குப் பிடித்த முட்டைக் குருமா, அவனுக்குத் தனியாக கத்திரிக்காய் கூட்டு என அவனது மெனுவிலேயே அவள் அசரவேண்டாமோ?

குடும்பமாய் அமர்ந்து உணவை முடித்தவர்கள் படுக்கையை நாடிச் செல்லும் போது, "நீங்க ரெண்டு பெரும் படுங்க. நான் இந்த பாத்திரத்தைக் கழுவி வச்சிட்டு வந்திடுறேன்" என்ற அன்பரசி, தன் வேலைகளை முடித்துவிட்டு படுக்கையறையை நாடிச் சென்றாள்.

அங்கே நல்லானந்தின் இடது பக்கம் மதிமலர் அமர்ந்திருக்க, கட்டிலின் நடுவே (கிட்டத்தட்ட) அவன் படுத்திருந்தான். கட்டிலின் மீதேறி அவனை ஓட்டிப் படுத்த அன்பரசி, அவனை முதுகோடு அணைத்துக் கொண்டு தன் நெருக்கத்தைக் காட்டியதும், "பாப்பா நல்லாப்பாக்கு இங்க...அம்பா நல்லாப்பாக்கு அங்க" எனச் சொல்லிச் சிரித்தாள் மகள்.

"அம்பாவா" என நல்லானந்த், வாயைப் பிளக்க, கணவனின் வாயை இறுக மூடிய மனைவி, மேலும் அவனை அடக்கும் வண்ணம், கன்னத்தில் அழுத்தமாய் முத்தம் வைத்து "உங்க திருவாயை வச்சுக்கிட்டு சும்மா இருங்க" என்றாள் கண்டிப்புடன்!

"வர வர, மலரை விட உன் அட்டகாசம் ஜாஸ்தி ஆகிடுச்சு! அவ தூங்கட்டும் உன்கிட்ட வரேன்" என்ற நல்லானந்த், மனைவியின் அன்பு தாக்குதலில் நிலை தடுமாறி தான் போயிருந்தான். ஆனால் தன் தடுமாற்றம் எல்லை கடந்து அலையென பாய்ந்துவிடும் அபாயம் இருந்ததால், மலரை உறங்கவைக்கும்மாறு ஆணையிட்டது மனம்!

அருகில் அமர்ந்து தந்தை புதிதாய் வாங்கிக் கொடுத்த ட்வீட்டி பொம்மையுடன் விளையாடி மகிழ்ந்து கொண்டிருந்த மகளை மார்பிற்கு இடமாற்றுவதற்கே இருபது நிமிடங்களுக்கு மேல் பிடிக்க, அவளை மெல்ல மெல்ல உறக்கத்திற்கு அழைத்துச் செல்ல மேலும் அரை மணி நேரம் பிடித்தது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் சென்று, தன்னைக் கழுத்தைக் கட்டிக் கொண்டு படுத்திருக்கும் சிறு குழந்தையை மெல்ல படுக்கைக்கு இடமாற்றி விட்டு, தன் தோள்களில் முகம் புதைத்து, தான் மகளை சீராட்டும் அழகை ரசித்த பெரிய குழந்தையை கவனிக்கத் திரும்பினான்.

ஆனால் அந்தக் குழந்தையோ மலருக்கு முன்னரே உறக்கத்திற்குச் சென்றிருக்க, மெலிதாய் சிரித்த நல்லானந்த் தன் தோளிலிருந்த அவளது தலையை எடுத்து தலையணை மீதுவைத்துவிட்டு, அவளது வலது கையை அமுக்கி விடத் தொடங்கினான். அவனது செயல் கொடுத்த இதத்தில் "ம்ம்" என்ற முனங்களுடன், கணவனின் பக்கம் திரும்பினாள்.

"என்னடா கண்ணம்மா, வலிக்குதா?" என உருகியவன், மீண்டும் கையை பிடித்துவிட்டான். இதம் கூடிய சந்தோஷத்தில் கணவனை நெருங்கிப் படுத்தவள் அவனது மார்பில் அழுத்தமாய் புதைந்தாள்.

மனைவி மகளுடன் நடத்திய பயணம், அவளை ரொம்பவே சோர்வடைய செய்திருப்பது புரிய "ரொம்ப கஷ்டப்பட்டுடியா அன்பா? சாரிடா! " என்றான் உண்மையான வருத்தத்துடன்.

"எதுக்கு சாரி?" என்றவளின் தூக்கம் லேசாய் கலைந்துவிட்டது என்பது புரிய, "கை ரொம்ப வலிக்குதாடா? பாப்பாவைத் தூக்கியே வச்சிருந்தியா? மருந்து ஏதாவது தடவிவிடவா அன்பா?" என நல்லானந்த் கேட்க, "ரொம்ப வலிக்கலை நல்லாப்பா! கொஞ்ச நேரம் தான் பாப்பாவைத் தூக்கிவச்சிருந்தேன். ஃபிரான்க்பார்ட் ஏர்போர்ட்ல பாப்பா நடந்து தான் வந்தா. சென்னையிலயும், இங்கயும் தான் கொஞ்ச நேரம் தூக்கியிருந்தேன்! அதுவும் இடது கையில தான். அம்மாவைப் படுத்தாம வந்தாளே…சமத்து குட்டிங்க!" எனத் தன் கைவலியில் ஆரம்பித்து, மகளின் புராணத்தில் வந்து நிறுத்தினாள்.

"ஹ்ம்ம்…சரி, தூங்கு!" என்றவன் அவளது கைகளை மீண்டும் தடவிக் கொடுத்தான். "தூங்க முடியாது! உங்க பொண்ணை மட்டும் தான் தாச்சு செய்வீங்களா? என்னையும் செய்ங்க" என அடம் பிடித்த மனைவியைப் பார்க்க நல்லானந்திற்கு சிரிப்பாக இருந்தாலும், அவளது ஆணையை சிரம் தாழ்த்தி, அவளது இதழ் மூடி, அவளது இடுப்பை வளைத்து நிறைவேற்றினான்.

கணவனின் நெருக்கத்தில் அன்பரசியின் கண்கள் மெல்ல மூடிக் கொள்ள, நல்லானந்தும் மனைவி மற்றும் மகளின் நெருக்கத்தில் சீக்கிரமே உறங்கிப் போனான். என்னதான் விமானப்பயணம் சோர்வுற செய்திருந்தாலும், இத்தனை காலம் உலகின் முக்கால் பாக வாசிகளுக்கு வெகுமுன்பாகவே சூரியனின் தரிசனத்தைப் பெற்றுவிட்டிருந்த அன்பரசியால் ரொம்ப நேரம் உறங்க முடியவில்லை.

இரவு இரண்டு மணிக்கு உறக்கம் கலைந்துவிட, எழுந்து அமர்ந்து கொண்ட அன்பரசி தன்னருகே படுத்திருந்த நல்லானந்தின் தலையை மெல்ல கலைத்துவிட்டாள். கொஞ்சம் கூட
அசைந்து கொடுக்காமல் அவன் அசந்து உறங்கிக் கொண்டிருந்த கணவனின் நெற்றியில் முட்டி, கன்னத்தைக் கிள்ளி, காதை வருடி, மூக்கோடு மூக்கு உரசி, பின்னங்கழுத்தில் குறுகுறுப்பு ஊட்டி, அவனது கைகளில் சொடுக்கு எடுத்து என அவனது தூக்கத்தைக் கெடுக்க பெரிதும் முயன்றாள்.

"என்ன-டி, படுத்தாதே அன்பா...தூக்கம் வருதுடீ!" என நல்லானந்த் சிணுங்க, "எனக்குத் தூக்கம் வரலை. எழுந்திருங்க!" என அவனை உலுக்கினாள்.

"படு... நான் தூங்க வைக்கிறேன்" என அவன் மீண்டும் படுக்கவைக்க முயல, "இல்லை, நீங்க எழுந்திருங்க. என்னோட கொஞ்ச நேரம் பேசிட்டு இருங்க" என அவனை இழுத்தவள், அறையை விட்டும் கூட்டிச் சென்றாள். "கொஞ்ச நேரம்" என ஆரம்பித்த உரையாடல், காலையில் ஆறு மணி வரை அவர்களது இன்றைய பயணம், அம்பா என்ற மகளின் அழைப்பு, அதைத் தான் வெளிக்கொண்டு வந்த விதம், திலோவின் கஷ்டம், அவளது தவிப்பு, அகிலனின் தனிமை, வளர்மதி மற்றும் பெத்தபெருமாளின் தவிப்பு, தேவ்வின் சொல்லா பாசம் என பலவாறாக உலா வந்து அதற்க்கெல்லாம் என்ன தீர்வு என்றும் முடிவு செய்யப்பட்டது.

நல்லானந்தின் முடிவைக் கேட்டு அன்பரசி மகிழ்ந்து கொண்டிருக்கும் போதே மதிமலர் "அம்மா" என்ற அழைப்புடன் அறையை விட்டு, கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்து சேர்ந்தாள்.

"அய்யயோ...அம்மாவைத் தேடுறாங்க" என அன்பரசி பதற, "ஷ், நீயே அவளுக்குச் சொல்லிக் கொடுக்காதே!" என மனைவியை அடக்கிவிட்டு, மகளிடம் திரும்பிய நல்லானந்த் ஐந்தே நிமிடத்தில் மகளின் கவனத்தைத் தன் மேல் (தன் மேல் மட்டுமாய்) திருப்பி விட்டிருந்தான்.

"ஹய்யோ, கெட்டிக்காரங்க நல்லாப்பா நீங்க" என்ற மனைவியின் மெச்சுதலில் சிரித்த நல்லானந்த், "சரிங்க மக்குப் பொண்டாட்டி! போய் எனக்கும் என் பெண்ணிற்கும் பால் கலந்து கொண்டு வாங்க" என்றான்.

"ஹ்க்கும்ம்" எனக் கழுத்தை நொடித்துக் கொண்டு சமையலறை சென்றவள், இரண்டே நிமிடங்களில் "இந்த அடுப்பை எப்படி "ஆன்" பண்றது?", "இது தான் பாலா? இவ்வளவு தண்ணியா இருக்கு? உவ்வே!", "பாப்பாவோட கஞ்சிப்பொடி பெட்டியில் இருக்கு, எடுத்துக் கொடுங்க!", "அதை போட்டாலும், கரையுமோ என்னவோ? திக்கான பாலே கிடைக்காதா?", "அப்புறம் இதென்ன இத்தனை சிப்ஸ் பாக்கெட் வாங்கி வச்சிருக்கீங்க? மலரை கெடுக்கிறதே நீங்க தான்! முதல சென்னை கிளம்புற வேலையைப் பாருங்க" என நிமிடத்திற்கு நூறு கேள்விகளை எடுத்து வைக்க,

"அம்மா...பரதேவதை! நானே பால் கலந்துக்கிறேன். நீ நகரு! திலோ உனக்கு என்ன சொல்லித் தந்தாலோ இல்லையோ நல்லா கேள்வி கேட்க சொல்லிக் கொடுத்திருக்கா" என்றவன், மனைவியை சமையலறையை விட்டு வெளியே இழுத்து, அவளது கைகளில் மகளைக் கொடுத்துவிட்டு, தானே காபி போடச் சென்றான்.

"நல்லாப்பா திட்டினா...அச்சுவேன்" என மிரட்டிய மகளிடம் வெளிப்படையாய் ஒன்றும் சொல்ல முடியாமல், கணவன் காபி போடும் அழகை ரசிக்க ஆரம்பித்தாள். தன் இரு குழந்தைகள் கைகளிலும் அவர்களது காலை பானத்தைக் (கஞ்சி) கொடுத்தவன், தனக்குக் காபியை எடுத்துக் கொண்டு ஹால் சோபாவில் அமர்ந்தான்.

"உங்களுக்கு எத்தனை மணிக்கு ஆபீஸ்? டிபன் செய்யணுமே?" என மனைவியாய் அன்பரசி உருமாற, "கல்யாணத்திற்கு அப்புறம் உன்னோட மூளையை மியூசியதிற்குக் கொடுத்திட்டியா அன்பா? இன்னைக்கு ஞாயிற்றுகிழமை... அன்பரசி மேடம். எனக்கு ஆபீஸ் கிடையாது"

"எனக்கு ஒன்னும்...." என ஆரம்பித்த அன்பரசி, "ஹோ, எனக்கு இன்னும் இங்க இருக்க நேரம் பிடிபடல...அதனால கேட்டுட்டேன்! ரொம்பத் தான் பண்ணிக்கிறீங்க" என நொடிக்கவும் செய்துவிட்டு, கணவன் கலந்து கொடுத்த கஞ்சியை சொட்டு விடாமல் குடித்து முடித்தாள்.

அதன் பின்னர் சென்னைக்கு அழைத்தவர்கள், அனைவரிடமும் பேசிவிட்டு அழைப்பைத் துண்டிக்க ஒரு மணி நேரம் பிடித்தது. அந்த ஒரு மணி நேரத்தில் பாதி நேரம், திலோ மற்றும் மலரின் உரையாடவே, அதன் முடிவில் "அம்பா... அம்மா வத birdக்கு ஆ வந்துச்சாம். அம்மா அப்தம் வதுவா சொன்னா" என்ற வார்த்தைகளை மதிமலரிடமிருந்து வரவழைத்திருந்தாள், திலோத்தமை.

அப்போதும், "அம்மா, வதும் போ அகி அண்ணா கூத்திட்டு வா... ஓகே?" என்ற கேள்வியைக் கேட்டு அதற்கு திலோத்தமையின் "சரிடா அப்புக் குட்டி" என்ற பதிலைப் பெற்ற பின்னரே அழைப்பு வைக்கப் பட்டது.

அன்றைய மீதி பொழுது முழுதும், அன்பரசி கொண்டு வந்த பொருட்களைப் பிரித்து அடுக்குவதிலும், தூங்கி வழிந்த பெண்கள் இருவரையும் "இப்போ தூங்கினா... நைட்

தூக்கம் வராது கண்ணா. முழிச்சுக்கோங்க!" எனக் கெஞ்சுவதிலும், அருகிலிருந்த இந்திய பொருட்கள் கிடைக்கும் கடைக்குச் சென்று அன்பரசியின் நள பாகத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதிலும், அந்தக் கடைக்கு எதிரிலிருந்த பார்க்கில் மதியை விளையாடவிடுவதிலும், வீட்டிற்கு வந்து இரவு உணவை முடித்துக் கொண்டு அவர்களது குடியிருப்பைச் சுற்றி காலாற நடப்பதிலுமாய் செல்ல அந்த நாள் இனிமையாய் கழிந்தது.

இரவு நேர நடை முடிந்து வீட்டிற்குள் வந்ததும், "மலர் குட்டி, பைஜாமா போட்டுக்கலாம் வாங்க" என அழைத்து, அவளுக்குப் பிடித்த நீல வண்ண இரவு உடையை அணிவித்துவிட்டாள். இரவு உடையை தாயிடம் அணிந்து கொண்ட பெண்ணோ, இரவு உறக்கத்தை மட்டும் தந்தையின் துணையுடன் தான் தழுவுவேன் என முகம் சுளிக்க, நல்லானந்த் அவளை உறங்க வைத்தான்.

பெண்ணின் உறக்கத்தை உறுதி செய்து கொண்டவன், "அன்பு குட்டி, நைட்டி போட்டுக்கலாம் வாங்க" என மனைவியை அழைக்கவே, "என்னது?" என ஒரு நிமிடம் குழம்பிப் பின்னர் தெளிந்தாள். "அய்யே, ஆசை தான்! எனக்குக் கை சரியாகிடுச்சு! நானே டிரஸ் மாத்திப்பேன்.... நீங்க ஒன்னும் வரவேண்டாம்" எனப் பழிப்பு காட்டியவளை, இழுத்து இறுக அணைத்து "கை சரியான டிரஸ் மாத்திவிடக் கூடாதுன்னு ஏதாவது சட்டம் இருக்கா அன்பா? அப்படியிருந்தாலும் என் ஆட்சியில் அதுக்கு தற்காலிகத் தடை விதிக்கப்படுகிறது" என்றவன், தான் தடை விதித்த சட்டத்தை முற்று முழுதாய் உடைத்தும் எறிந்தான். அவனது தடைக்குத் தடையாய் இருந்த அன்பரசியின் கெஞ்சல், கொஞ்சல், மிரட்டல், அடிகள் என எதுவுமே வேலைக்கு ஆகவில்லை என்பது அன்பரசியின் தோல்வியா? அல்லது நல்லாவின் வெற்றியா?

"இரண்டு வயசில ஒரு பொண்ணை வச்சுக்கிட்டு நீங்க பண்ற அலும்பு இருக்கே? ரொம்ப மோசம் நல்லாப்பா!" என அன்பரசி செல்லமாய் சிணுங்க, ,

"நான் இன்னும் ஒண்ணுமே பண்ண ஆரம்பிக்கலைடி! அதுக்குள்ளே மோசம்ன்னு முத்திரை குத்திட்டீங்க மேடம்..." என ராகத்தோடு இழுத்த நல்லானந்த், "என் பெண்ணிற்கு இரண்டு வயசு ஆகிடுச்சேன்னு தான் நானும் அல்லாடுறேன்... என் பெண்ணும் எத்தனை நாளுக்குத் தான் அண்ணனோடவே விளையாடுவா? சீக்கிரமா ஒரு தம்பியை ரெடி பண்ணலாமா அன்பரசி!" என முடித்தப் போது

"தம்பி இல்லை... தங்கச்சி" என்ற அன்பரசியின் குரலில் வெட்கத்தை விட, மாறுபட்ட அழுத்தம் தென்பட்டது.

"எதுவோ ஒன்னு... எனக்குக் காரியமானா சரி தான்" என சிரித்த கணவனின் கன்னத்தில் லேசாய் தட்டியவள், "பெட் ரூம்ல பொண்ணு இருக்கா நியாபகம் இருக்கட்டும். பேசாம அவ பக்கத்தில போய் படுங்க" என்றாள் சிறு சிரிப்புடன்.

அவனுக்கும் நடைமுறையின் தீவிரம் புரியவே, "எனக்கும் ஒரு காலம் வரும். அப்போ பார்த்துக்கிறேன்" என்றவன், பெயருக்கு ஏற்றார் போல் நல்ல பிள்ளையாக படுத்து உறங்கினான்.

அடுத்த நாளும், நல்லா அலுவலகம் செல்லாமல் வீட்டிலிருந்தே வேலை செய்ததால் பெரிய பிரச்சனைகள் ஏதும் இருக்கவில்லை. அன்றைய தினம் முழுதும் குளியல், சாப்பாடு, உறக்கம் என முக்கிய காரியங்கள் அனைத்திற்கும் தந்தையையே சார்ந்திருந்தாள் மதிமலர். அன்பரசியும் அவளது கவனத்தை ஒரே நாளில் திருப்ப முடியாது என்பதால், தடாலடி முயற்சிகள் எதிலும் இறங்காமல் மகளின் போக்கிலேயே அவளை விட்டுப் பிடித்தாள்.

மகளுக்குப் பிடித்த பீன்ஸ் பருப்பு உசிலியும், பால்கறியும் செய்தவளின் நளபாகத்தை நல்லானந்தும் மறைமுகமான கேலியில் புகழவே செய்தான்! அவனது பாராட்டை விட மகளின் "அம்பா...பாப்பாக்கு கொஞ்சம் பீன்ன்ஸ் காய் தாவேன்..." என மகள் இரண்டாம் முறை தன்னிடம் கேட்டது பெரும் சந்தோஷத்தை அளித்தது.

அவள் கேட்டதை மகிழ்வுடன் கொடுத்துவிட்டு, தந்தையிடம் அவள் உணவு உண்ணும் அழகை ரசித்தவாறே எதிரில் அமர்ந்திருந்த அன்பரசியிடம் "உனக்கு?" எனக் கையால் ஊட்டுவது போல் செய்கை செய்தான் கணவன். தன் ஆசையை புரிந்து கொண்டு கணவன் கேட்டதில் மீண்டும் மகிழ்ந்த அன்பரசி "ம்ம்...ஒரு வாய்" என ஒப்புதல் கூறி, ஊட்டிய உணவை ரசித்து, ருசித்து உண்டாள்.

அடுத்த நாள் புலர்ந்த போதே அன்பரசிக்கு நெஞ்சுக்குள் லேசாய் சில்லிட்டது! உறக்கத்திலிருந்த கணவன் புறம் திரும்பி, "கொஞ்சமே கொஞ்சம் பயமா இருக்கு நல்லாப்பா" என்றாள் அவனது காதிற்குள்.

Property of ...

அவள் கூறியது கேட்டு தேற்றுவதற்காக அணைத்தானோ அல்லது அவளது ஸ்பரிசத்தில் தன்னைத் தொலைத்ததால் அணைத்தானோ, நல்லா தன் வலிய கரங்களால் அன்பரசியை தன்னுடன் இறுக்கிக் கொண்டான். அவனது அணைப்பு, வார்த்தைகளைத் தாண்டிய தைரியத்தை அள்ளி, அள்ளிக் கொடுக்க அன்பரசியின் மனம் சற்றே அமைதியுற்றது.

கணவனின் சமாதானத்தில் திருப்தியுற்ற அன்பரசி, கடமை மனைவியாய் எழுந்து, குளித்து முடித்து, கணவனுக்குக் காலை உணவைத் தயாரித்தப்போது நல்லானந்த் எழுந்து வந்திருந்தான். வந்தவன், சில பல சில்மிஷங்களுக்குப் பின்னரே குளிக்கப் போனான். அவன் குளித்து வெளியே வந்தபோது மகள் விழித்திருக்க, மனைவி கலந்து வைத்திருந்த பாலை அவளுக்குப் புகட்டியவாறே தானும் காலை உணவை முடித்துவிட்டு, அலுவலகம் செல்ல தயாரானான்.

தந்தை வெளியே செல்லப் போவதை உணர்ந்த மதிமலரோ, தானும் வருவேன் என அடம் பிடிக்க, அவளை ஒருவாறு அலுவலகத்தைக் கை காட்டி சமாதானம் செய்தவன் வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் தான் அன்பரசிக்கு, ஆரம்பானது கச்சேரி!

சற்று நேரம் தொலைகாட்சியின் முன்னர் அமர்ந்திருந்த மலர், அன்பரசி கொடுத்த காலை உணவை கண் கொண்டு கூட பார்க்கவில்லை. அவளது தொடர் கெஞ்சலுக்கு "வேணாம்...மம்மம் வேணாம்..." என்ற ஒரே பதிலே வந்துவிழுந்தது. ஒரு மணி நேரத்திற்கும் மேலான அவளது கெஞ்சலுக்குப் பதிலில்லாமல் போகவே, வெறுத்துப் போய் மதிய உணவைத் தாயிரிக்க ஆரம்பித்தாள் அன்பரசி. அன்பரசி உணவு தாயரித்த நேரத்தில் பாதியை தன் பொம்மைகளுடன் விளையாடியும், மீதியை பால்கனியில் நின்றும் வேடிக்கை பார்த்தும் கழித்தாள் செல்வமகள்.

மதிய உணவான - தக்காளி சாதத்தை நெய் ஊத்தி பிசைந்து கொண்டு, தொட்டுக் கொள்ள ஸ்டார் வடிவ வடகம் வறுத்துக் கொண்டு மதிமலரை அணுகினால், அவளோ வடகத்தை மட்டும் "ஹாய்...ஸ்டார்...பூ ஸ்டார்... தேட் ஸ்டார்...கீன் ஸ்டார்" எனக் கண்களை உருட்டி, உருட்டி உள்ளே தள்ளினாளே ஒழிய ஒரு வாய் உணவைக் கூட வாங்கவில்லை.

"குட்டி...ஒரு வாய்டா...ஒரே வாய்டா...ப்ளீஸ்" என அன்பரசியின் எந்த கெஞ்சலுக்கும் "வேணாம்" என்ற ஒரு வார்த்தையே பதிலாய் வந்தது.அவளிடம் தன் பப்பு வேகாது என்ற

முடிவிற்கு வெகு விரைவில் வந்த அன்பரசி, கணவனின் கைப்பேசிக்கு அழைக்க முற்பட்ட போது, அழைப்பு மணி அடித்தது.

பெரும் நிம்மதியுடன் கதவை அன்பரசி அடைவதற்கு முன்னரே, வெளிவாயிலுக்கு சென்றிருந்த மதிமலர் எக்கியபடியே "நல்லாப்பா...வந்தாச்சு...ஹை...ஹை" எனக் குதிக்கத் தொடங்கிவிட்டாள்.

லென்ஸ் வழியே பார்த்த தாய் "கொஞ்சம் நகரு...அப்போ தான் கதவைத் திறந்து உங்கப்பாவை உள்ள விட முடியும்" என்றாள் சற்றே எரிச்சலுடன். அந்த எரிச்சலை மதிமலர் உணர்ந்தாலோ இல்லையோ உள்ளே வந்த நல்லானந்த் நன்றாகவே உணர்ந்தான். "என்ன கோவம் அன்பா?" என்ற கேள்வியுடன் அவள் உள்ளே வர, "என்ன கோவம்...கோவம் ஒண்ணுமில்லை...மலர் காலையிலிருந்து ஒண்ணுமே சாப்பிடலை... சீக்கிரமா ஊட்டுங்க" என்ற பதிலோடு சேர்த்து உணவுத் தட்டையும் கணவனிடம் கொடுத்து விட்டு உணவு மேசைக்குச் சென்று அமர்ந்து கொண்டாள்.

அன்பரசியின் எரிச்சலை விட காலியாய் இருக்கும் மகளின் வயிறு முக்கியமாய் பட்டது நல்லாவிற்கு! எனவே, மகளிற்கு உணவு கொடுத்து முடித்தவன், தனக்கும் மனைவிக்கும் ஒரே தட்டில் உணவு வைத்துக் கொண்டு அவளிடம் வந்தான். அவன் கொடுக்க கொடுக்க மறு பேச்சின்றி உண்டவள், "உங்ககிட்ட மட்டும் அடம் பண்ணாம ஒழுங்க சாப்பிடுறா பாருங்களேன்! காலையிலிருந்து தொண்டை தண்ணிப் போகக் கத்துறேன்... இம்மி கூட மதிக்கவே இல்லைங்க!" என்றாள் ஆதங்கத்துடன்.

"சீக்கிரம் சரியாகிடும் கண்ணம்மா! சின்னக் குழந்தை தானே! உன்னோட அன்பு அவளுக்குப் புரிய ஆரம்பிச்சிட்டா போதும்...எல்லாம் சரியாகிடும்" எனத் தேற்றிய நல்லானந்திற்கும் "எல்லாம் சீக்கிரம் சரியாக வேண்டும்" என்ற எண்ணம் ஓங்கி நின்றது.

பெரியவர்கள் இருவரது எண்ணத்தையும் உணராத இளம்தளிரோ, தன் போக்கில் தந்தையிடம் மட்டுமே தன் உணவையும் உறக்கத்தையும் முடித்துக் கொண்டது. அவளது விருப்பம் அது தான் என்று தெரிந்து விட்டதால் அன்பரசியும் அவளுக்கு ஏற்ற மாதிரி தன்னை மாற்றிக் கொண்டாளே ஒழிய, மகளைக் காட்டயப்படுத்த வில்லை.

அடுத்து வந்த பத்து நாட்களும் இதே பழக்கம் இதே தொடர், மதிய உணவு இடைவேளைக்கு வீடு வரும் நல்லா, தானும் உண்டு மகளுக்கும் ஊட்டிவிட்ட பின்னரே திரும்ப அலுவலகம் சென்றான். அன்பரசி வான்கூவர் வந்து சரியாக பத்து நாட்கள் ஆகியிருக்க, மாலை வேலை முடிந்து வீடு திரும்பிய நல்லாவின் கண்களில், ஹால் காரப்பேட்டை  சுத்தம் செய்து கொண்டிருந்த அன்பரசி படவே "என்னாச்சு அன்பா? ஏதாவது கொட்டிடுச்சா? கார்பெட் கிளீனிங் சோப் வேணுமா?" என்றான் ஆராய்தலுடன்.

"ம்ம்...அதெல்லாம் எடுத்துக்கிட்டேன் நல்லாப்பா! இன்னும் கொஞ்ச நேரத்தில முடிஞ்சிடும்" என்றாள் அன்பரசி, லேசாய் இடுப்பைப்  பிடித்துவிட்டவாறே!

"நீ நகரு! நான் கிளீன் பண்றேன்" என அவன் உதவ முன்வர, "அவ்வளவு தான்...முடிஞ்சுட்டேன்" என்றவள் சுத்தம் செய்யும் வேலையைத் தானே செய்தாள்.

"என்ன ஊதிச்சு?"

"எதுவும் ஊத்தலை...மலர் குட்டி தான் டூத் பேஸ்ட் வச்சு படம் வரைஞ்சிருக்கா!! நான் அசதில கொஞ்ச நேரம் படுத்திட்டேனா...அந்த நேரத்தில் இந்த வேலை செஞ்சிருக்கா"  எனப் பதில் கூறிய மனைவி அதோடு நிறுத்தாமல்,
"நாலு கொடும், ஒரு வட்டமும் போட்டுட்டு... நான் வந்ததும் "அம்பா... பாப்பா பாரு"ன்னு காட்டிச்சு...அழகா இருந்திச்சுங்க! ஆனா என்ன இடுப்பு தான் ரொம்ப வலிக்குது!" எனப் பெருமை வேறு பேசினாள்.

ஆனால் அவளது பெருமையை ரசிக்க அங்கே கணவன் நின்றிருக்கவில்லை. "மதி, இங்க வா!" என அழைத்தவரே மகளைத் தேடிச் சென்றவன், அவனது அழைப்பிலேயே அரண்டு போய் பால்கனி பக்கம் ஓடியிருந்த  மதிமலரின் முதுகில் சுள்ளென்று இரண்டு அடி வைத்தான்.

"என்ன வேலை பண்ணி வச்சிருக்கே? வர வர அடம் ரொம்ப ஜாஸ்தி ஆகிட்டே போகுது! கொஞ்சமாவது மனசில பயம் இருக்கா?" என்றவனின் கை மீண்டும் மகளின் முதுகில் விழும் முன்னர்,  "அய்யோ...பாவம் பாப்பா! அடிக்காதீங்க நல்லாப்பா!" என்ற அன்பரசியின் குரல் ஒலித்தது.

ஆனால் மகளின் மேல் பாவப்பட்ட அன்பரசியின் சப்த நாடியையும், நல்லானந்த் திரும்பிப் பார்த்த  ஒற்றை பார்வை அடக்க, அங்கே பெரும் அமைதி நிலவியது!

நல்லானந்தின் அதட்டலிலும், கணிவில்லாது நிலைத்திருந்த அவனது பார்வையிலும் அன்பரசி ஒரு புறமும், மதிமலர் ஒரு புறமும் அரண்டு போயிருக்க "அவ பண்ற எல்லாத்துக்கும் நீ என் மேல பாயறதை முதல நிறுத்து! அவ செய்றது தப்புன்னு சொன்னா தான், அதே தப்பை இன்னொரு தடவை செய்ய மாட்டா" என்றான் நல்லானந்த், கடுமையேறிய குரலில்.

"உங்க ஊர்-ல கையாலா தான் பேசுவீங்களா? நாங்கெல்லாம் வாயால தான் பேசுவோம்" என மெல்லிய குரலில் என்றாலும் தெளிவாக முணுமுணுத்த அன்பரசி, அவனைத் தள்ளிக் கொண்டு மகளைக் காணச் சென்றாள்.

அவள் செல்ல எடுத்துக் கொண்ட அரை நிமிடத்தில், மதிமலரின் கண்களில் மடை திறந்தது போல் கண்ணீர் அருவி பொழியத் தொடங்கியிருக்க "ராஜாத்தி, எங்க வாடா" என மகளைத் தூக்க முயன்ற அன்பரசியிடம் பிடிபடாமல், பால்கனியின் மூளைக்குச் சென்று அமர்ந்து கொண்டது  குழந்தை!

"உடனே போய் அவளைக் கொஞ்சாதே! அவளே வருவா விடு" என்ற நல்லானந்த், "எனக்கு ஒரு கப் காபி போட்டு எடுத்துட்டு வா, அன்பா! பசிக்குது!" எனக் கட்டளையும் பிறப்பித்தாள்.

"இத்தனை நாள் நீங்க தானே போட்டுக்கிட்டீங்க? இப்பையும்..." என மனைவி முடிக்கும் முன்னர், "சரி, நானே போட்டுக்கிறேன்" எனக் கத்தரித்த கணவனின் குரலில் அவனது கோபம் புரிய, அவனை முந்திக் கொண்டு சமையலறை சென்றவள் காபிக்காக பால் சூடு பண்ணினாள்.

அடுப்பில் பாலை வைத்தவளின் ஒரு கண் அடுப்பில் இருக்க, மனமும் மறு கண்ணும் பால்கனியில் முடங்கியிருக்கும் குழந்தை மீதே இருந்தது.

ஐந்தே நிமிடத்தில் கணவனின் காபி தயாராகிவிட, அவன் கையில் அதை திணித்தவள், குழந்தையிடம் ஓடி மறைந்தாள்.

"மதிகுட்டி, அம்பாவும் பாப்பாவும் டாட்டா போலாமா? குருவி பார்த்திட்டு வரலாம்! வாரீங்களா?" என கை விரித்து அவள் அழைத்தப்போது, மதி என்ற அழைப்பு

மதிமலருக்குப் பிடிக்காது என்பது மறந்து போயிருந்தது.

அன்பரசியின் மறதிக்கு ஆளான அதே அழைப்பு, மதிமலரின் அழுகைக்கு ஆளாகி, காலை உதைத்துக் கொண்டு அவளைக் கத்த வைத்தது.

"அம்பா வேணாம்...அம்மா...அம்மா...வேணும்...டாடிகித போவாம்..." என்றவள், "தத்தா...பாத்தீ காணோம்..." என அங்கில்லாத நபர்கள் அனைவரையும் தேடிக் களைத்தாள்.

"இதுக்குத் தான்... இதுக்குத் தான் அடிக்காதீங்கன்னு சொன்னேன்! ஹய்யோ இப்ப என்ன செய்றது?" என அன்பரசி, தனக்குள் புலம்பிக் கொண்டிருக்கும் போதே,

"என்ன சத்தம் அங்க?" என்ற நல்லானந்தின் குரலில், அன்பரசி தன் புலம்பலை நிறுத்தினாலோ இல்லையோ மதிமலர் அரண்ட தோற்றத்தைப் பூசிக் கொண்டு அமைதி காத்தாள்.

அவளது தேடலை விட அமைதியே மனதை பயங்கரமாய் தாக்க, அன்பரசியும் குழந்தையுடனே பால்கனியில் அமர்ந்து கொண்டாள்.

மாலை ஆறு மணிக்கு வாங்கிய அடியின் தாக்கம் ஏழு மணி வரை நீடிக்க, தான் முடங்கியிருந்த பால்கனி மூளையை விட்டு நகர்வதாய் இல்லை மதிமலர்! பால்கனி நிலைவாசலில் சாய்ந்திருந்த அவளது தாயும் அந்த இடத்தை விட்டு நகர்வதாகவோ, மேலும் பெண்ணை விட்டுக் கண்ணை எடுப்பதாகவோ இல்லை!

மணி ஏழு அடித்ததும், மகளின் வயிற்றில் பசிக்கான மணி அடித்திருக்குமோ என்ற எண்ணம் அன்பரசியின் மனதில் எச்சரிக்கை மணியை அடிக்க, வெள்ளிமணி கொலுசுகள் கிண்கினியாய் இசையெழுப்ப மெல்ல நடந்து போய், பொன்னான நெற்மணிகளின் அழகிய உருமாற்றத்தில் உருவான பச்சரசி சாதத்தில் பருப்பும், வெண்டக்காய் பொரியலும் பிசைந்து, மகளின் மணி வயிறை நிரப்ப எத்தனித்தாள்.

"அப்புகுட்டிக்கு வயிறு பசிக்கலையா? மம்மம் வேண்டாமா?" என்றவளின் பேச்சு காதில் விழுந்ததற்கு அறிகுறியாய், மதிமலர் கால்களை உதைத்துக் கொண்டு மீண்டும் சுவரோடு உறவாடினாள்.

"அப்பா அடிச்சுட்டாங்கன்னு கோபமா இருக்கீங்களா? அப்பா ஏன் தெரியுமா குட்டியை அடிச்சாங்க...." என அன்பரசி இழுத்து அப்படியே நிறுத்த, அவள் எதிர்பார்த்தது போலவே மதிமலரும் தாயை நோக்கினாள், கண்களில் கேள்வியுடன்.

இந்த சின்ன வயசிலேயே கண்ணால என்ன கேள்வி? என மகளைச் செல்லமாய் மனதிற்குள் சீராட்டியவள் , மேலும் தொடர்ந்தாள்.

"பாப்பா வரைஞ்ச பிடிக்காம எல்லாம் அப்பா திட்டலை... மலர் குட்டி கார்பெட்-ல வரைஞ்சீங்க இல்லையா? அதை தரையில வரைஞ்சிருந்தா குட்டியே அதை மிதிச்சு டொம் விழுந்துடுவீங்க இல்லையா? அப்புறம் அன்னைக்கு வந்த மாதிரி "ஆ" வந்திடும்! ரத்தமா ஊத்தும்...ஊச்சி போடுவாங்க...அது வேற "ஆ" வலிக்கும்... அப்புறம் டென் டேஸ் டாக்டர்கிட்ட போய் ஊச்சி...ஊச்சியா போடணும்...கசப்பு டானிக் குடிக்கணும்... அப்புறம் புண்ணு-ல வேற மருந்து போடுவாங்க...அதுவேற வலிக்கும்..." என்றவளின் மேல் முழுதாய் கவனம் திரும்பியிருப்பதை உணர்ந்ததும்,

"பாப்பாக்கு ஆ வந்திடும்னு அப்பாக்கு ஒரே பயம்டா...அதான் திட்டிட்டாங்க!" என்றாள் முடிவு போல.

சில நிமிடங்கள் மதிமலர் அன்பரசியையே பார்த்திருக்க, அன்பரசியும் அவளது பார்வையை தயங்காமல் தாங்கி நின்றாள். (உள்ளுக்குள் உதறத் தான் செய்தது...குழந்தையின் மனது தான் சொன்ன விளக்கங்களை ஏற்காமல்...ஏடாகூடமாய் ஏதாவது கேள்வி வந்துவிட்டால் என்ன செய்வது...குழந்தைகளின் எண்ண ஓட்டத்தை கணிப்பது என்பது பெரிய விஷயம் அல்லவா... நமக்குத் தோன்றாத பல விதமான எண்ணங்களும், வாதங்களும் அவளுக்குத் தோன்றலாமே என்ற பயம் தான் அந்த உதறலுக்குக் காரணம்!)

அன்பரசியின் விளக்கத்தைக் கேட்டிருந்த மதிமலருக்கு ஏதோ புரிந்ததன் அறிகுறியாய் "அம்பா... நல்லாப்பா அச்சா...இங்க அச்சா... அதும் "ஆ" வதிக்குது" என்ற குற்றப்பத்திரிக்கையோடு, இடது கையால் வலது தோளின் பின்புறம் தேய்த்துவிட்டுக் கொண்டே தாயிடம் தாவினாள்.

மகள் கேட்ட கேள்வியின் நோக்கம் - "எனக்கு "ஆ" வரக்கூடாதுன்னு அப்பா அடிச்சாங்க சொன்னியே! இப்போ அவங்க அடிச்சதே எனக்கு "ஆ" வர வச்சிடுச்சே" என்பதுதான் என்று புரிந்தபோதிலும், அதற்குப் பதில் தேடுவதை விட்டுவிட்டு "இந்த "ஆ"க்கு ஊசியெல்லாம் வேண்டாம் அப்புக்குட்டி! குட்டியா ஒரே ஒரு முத்தா போதும்...அம்பா முத்தா வைக்கட்டுமா? ராஜாத்தி வாங்க...அம்பாகிட்ட வாங்க" என்றவளின் மடிக்குக் கன்று தன்னை இடமாற்றிக் கொண்டது.

தனது கால்களுக்குள் முகம் புதைத்திருந்த மகளை மெல்ல நிமிர்த்தி, மடியில் அமர வைத்துக் கொண்டவள், மகளின் அழுத கண்களை மெல்ல துடைத்துவிட்டு, கண்களில் விழுந்த சிறு கூந்தல் கற்றையை ஒதுக்கிவிட்டு, அழுததில் சிவந்திருந்த மூக்கு நுனியில் சின்ன முத்தம் வைத்து, அவள் வலிக்கிறது எனக் கூறிய இடத்தில் மெதுவாய் பிடித்துவிட்டு, முடிவில் "கீழ போய் குருவி பார்த்திட்டு வரலாமாடா?" என்றாள்.

"பாப்பா... கார்துன் தர வஞ்சா...நல்லாப்பா அச்சுட்டா" என மேலும் நல்லாப்பவின் மேல் குற்றமே கண்டாள் மகள்.

"சரி...சரி... நாம போய் குருவி பார்க்கலாமா வேண்டாமா? குருவியெல்லாம் பாப்பா பார்க்கிறதுக்காக மம்மம் கூட சாப்பிடாம உட்கார்ந்து இருக்காம். பாவமில்ல குருவி... நாம போய் அதை சாப்பிட சொல்லிட்டு வரலாம்டா...ப்ளீஸ்...ப்ளீஸ்" என மகளுக்கு உற்சாகமூட்டி, "போவாம்" என்ற வார்த்தையை அவளிடமிருந்து வாங்கிய வினாடி, அவளை வாரி அணைத்துக் கொண்டு எழுந்தாள்.

அவர்களது பேச்சுவார்த்தையை பால்கனி கதவில் தலை சாய்த்து, அன்பரசியின் முதுகில் கால் சாய்த்து கேட்டிருந்த நல்லானந்த், மனைவி எழுந்தவுடன் அதிவேகமாய் ஒரு முத்தம் வைத்து நிமிர்ந்தான். அதே வேகத்துடன், மனைவியின் இடுப்பில் அமர்ந்திருந்த மகளிடம் அவன் குனிய "ச்சீ போங்க" எனத் தள்ளிவிட்டாள் அன்பரசி. தாயையே பார்த்திருந்த மலரும், "ச்சீயிஈ போங்க" எனத் தந்தையைத் தன்னிடமிருந்து தள்ளினாள்.

"சமத்து பொண்ணு! நாம கீழ போகலாம்!" என்ற கொஞ்சலுடன், உணவுத் தட்டை எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிய மனைவியை சிரிப்புடன் பார்த்திருந்தான் நல்லானந்த்.

"ப" வடிவிலிருந்த அவர்களது குடியிருப்பு வளாகத்தின் உட்புறம், ஒரு பெரிய தோட்டமும்,

சுற்றி நடைபாதையும் இருந்தது. அங்கே மகளுடன் சென்றவளின் மனமோ "கடவுளே! அங்க ஏதாவது குருவி இருக்கணுமே!" என்ற வேண்டுதலில் நிறைந்திருந்தது.

அவளது வேண்டுதலுக்கு ஏற்ப தோட்டத்தில் இரு குருவிகள் இருக்க, "நன்றி கடவுளே!" என உளமார நன்றி சொன்னவள், மகளிடம் குருவியின் பசியைப் பற்றி விலாவாரியாய் எடுத்துக் கூறி, அதற்கு உணவு கொடுப்பது போல் பாசாங்கு பண்ணிவிட்டு, மகளுக்கு உணவூட்டி முடித்தாள்.

"அம்பா பாது...குவ்வி....குச்சு...குவ்வி! மம்மம் வேணுமா...அம்பா... குடு" என்ற மதிமலரும் குருவிகளுடன் இணைந்து கொண்டாள்.

உணவு கொடுக்கும் போதே, "அப்புக்குட்டி...கார்டூன் எதில வரைவாங்கடா?" என்றாள் அன்பரசி, தெரியாதவள் போல.

"கையாண்ல...அகி அண்ணா... நைய கையாண் வச்சுக்கான்! பாப்பாக்கும் இதுக்கே... பூ கையாண்...தெட் கையாண்...கீன் கையாண்...அப்தம்... எல்லோ...வைத்... ம்ம்...எல்லாமே!"

"அடேயப்பா! எவ்வளவு க்ரையான் வச்சிருக்கா என் பாப்பா! சூப்பர்டா...! பாப்பாக்கு யாரு க்ரையான் வாங்கித் தந்தா?"

"நல்லாப்பா..."

"ஹ்ம்ம்... வேற எதிலடா கார்டூன் வரைவீங்க?"

"கையாண்ல தா வதையணும்"

"அப்புறம் ஏன் குட்டி...டூத் பேஸ்ட்ல வரைந்தீங்க? க்ரையான் இல்லைன்னா? அம்பா வாங்கித் தரவா?" என்றாள் அன்பரசி மகளின் உணவு படிந்த வாயைத் துடைத்துவிட்டவாறே!

"ஆமா...கையாண் இல்ல..." எனக் கையை விரித்த மதிமலரோ, "அம்பா...கையாண் வாங்கித் தவியா? ஹை ஜாலி... எக்கு எல்லா கதர் கையாணும் வேணும்" என்றாள் புது பொருள் கிடைக்கப் போகும் ஆர்வத்துடன்.

"எல்லா கலர்-லையும் வாங்கிக்கலாம்! க்ரையான் வாங்கினதும் டூத் பேஸ்ட்-ல வரையக் கூடாது...சரியா? டூத் பேஸ்ட்-ல வரைஞ்சதுக்கு தான் அப்பாக்குக் கோபம்...அப்பாக்கிட்ட ஒரே ஒரு சாரி கேட்டுடலாமா?" எனத் தாய் கேட்க, புது கலர் பென்சில் வரப்போகும் குஷியிலிருந்த மகளோ "சாரி..." எனத் தலையைப் பலமாய் ஆட்டினாள்.

அவளது குஷியான மனநிலையைக் கெடுக்க விரும்பாமல் மகளைக் கூட்டிக் கொண்டு வேகமாய் வீடு வந்து சேர்ந்த அன்பரசி, கதவைத் திறந்த கணவனைக் கை காட்டி "அப்பாக்கிட்ட சாரி கேட்கணும் சொன்னீங்களே! கேட்டுடுரீங்களா? நாம போய் தாச்சு பண்ணலாம்...சீக்கிரம் தாச்சுக்கிட்டா தான்...நாளைக்கு க்ரையான் வாங்க முடியும்" என உரைக்கவும், "சாரி...நல்லாப்பா" என்றது குட்டி மலர்.

"சரிடா....இனிமேல்..." என கணவன் கூறியதைக் கேட்க மனைவியோ, அவளது செல்வ மகளோ அங்கே நின்றிருக்கவில்லை. மின்னலென விரைந்து படுக்கையறையை அடைந்தவர்கள், படுக்கையில் விழுந்தும் இருந்தனர்.

"அம்பா...நாளைக்கு...நியைய கையாண் வாங்கித் தவுவியா? எக்கு டென் பூ கையாண் வேணுமே!" என்ற மகளிடம் "கண்டிப்பா..." என உறுதி கொடுத்தாள் தாய்

"அம்பா...இப்போ ஹனுமான் கதை சொல்லுவேனாம்... பாப்பா தாச்சுக்கணும்... ஓகே?" என தாய் வினவ, மகளோ "சீதா ஆன்த்தீக்கு மோதம் கூடுதாங்களே...ஹனுமான் அங்கிள்...அவங்க கதையா..?" என்றாள் கண்களை விரித்து.

"ஆமாடி... அப்புக்குட்டி! பாப்பாக்கு நிறைய தெரிஞ்சிருக்கே! அம்பா சொல்லவா வேண்டாமா?" என சொல்ல விரும்பாதவள் போல் அன்பரசி யோசனை செய்ய

"சொல்லு...சொல்லு...அம்பா...பீஸ்" எனக் கெஞ்சினாள் மகள். மகள் சாதாரணமாய் கேட்டாலே, அந்தக் காரியத்தைத் தலையால் நடந்தேனும் நடத்திவிடும் தயார், கதை சொல்வதையா செய்யாமல் இருந்திருப்பாள்.

ஆஞ்சிநேயரின் கதையை உரிய ஏற்ற இறக்கங்களுடன் அவள் சொல்லிக் கொண்டே போக, சரியாக ஐந்தே நிமிடத்தில் மதிமலரிடமிருந்து சீரான மூசுக் காற்று புறப்பட்டு, அவளது உறக்கத்தை உறுதி படுத்தியது.

தன் மேல் மகள் போட்டிருந்த காலை மெதுவாய் விலக்கிய அன்பரசி, பெரிய விளக்கை அணைத்துவிட்டு, கதவை ஓசைபடாமல் சாற்றிக் கொண்டு வரவேற்பறைக்கு வந்தாள்.

வந்தவளின் கண்களில் சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சியில் தன்னைத் தொலைத்திருந்த கணவனைக் கண்டதும் பெரும் கோபம் மூண்டது. சோபாவின் பின்னாடி பக்கம் சென்றவள், இரண்டு கைகளாலும் அவனது தோளில் வேகமாய் ஒரு அடி வைத்தாள்.

அவன் சுதாரித்து எழுமுன்னர் மின்னல் வேகத்தில் பல அடிகள் விழுந்தன. "ஹே...ஹே... வலிக்குதுடீ...அம்மா...விடு" என்ற அலறலுடன் எழுந்த நல்லானந்தை "நல்லா வலிக்கட்டும். என் பெண்ணிற்கும் இப்படித் தானே வலிச்சிருக்கும்! பெரிய இவர் மாதிரி அவளை அடிக்கிறீங்க.... திமிர்...திமிர்... உங்களைத் தட்டிக் கேட்க திலோக்கா, அப்பா யாருமே இல்லையில்ல...அதான், என்னையும் என் பெண்ணையும் கொடுமை படுத்துறீங்க" எனக் கடித்துக் குதறினாள் அன்பரசி.

"கொடுமை படுத்துறேனா? இது உனக்கே கொஞ்சம் டூ மச்சா தெரியல... தப்பு செய்றதைக் கண்டிக்கிறது கொடுமை படுத்துறதா?" என்றவனின் பதிலை விட, அவனது சிரிப்பில் கடுப்பான மனைவி "வாயால கண்டிக்க வேண்டியது தானே! எதுக்கு அடிக்கிறீங்க? பாவம் பிள்ளை... எனக்கே ரொம்ப கஷ்டமா இருந்தது தெரியுமா?" என்றாள் மனைவி.

"எனக்கும் தான்! அவளை அடிக்கிறது எனக்கு மட்டும் இஷ்டப்பட்ட காரியமா என்ன?" என்றவன் அன்பரசியை தன் பக்கம் இழுக்கப் பார்த்தான்.

அவனிடம் சிக்காமல் (சிக்கப் பிடிக்காமல்) விலகி, சமயலறைக்குச் சென்ற மனைவியின் பின்னே சென்றவன் "அவ பேஸ்ட் எடுத்து கார்பெட்ல வரைஞ்சது கூட எனக்குக் கோபமில்லை அன்பா... அதுவே தரையில வரைஞ்சிருந்தா? அவளே அதில் வழுக்கி விழுந்திருப்பா... இல்ல தூங்கி எழுந்து வெளிய வர நீ விழுந்திருப்பே!"

"வெளிநாட்டுல...கூட யாருமே இல்லாம இருக்கும் போது ஒன்னு கிடக்க ஒன்னு நடந்தா...என்னம்மா பண்றது?"

"அப்படி ஒரு நிலையில உங்க ரெண்டு பேரையும் ஏற்கனவே ஒரு தடவை இருத்தி வச்சுப் பார்த்திருந்த எனக்கு எப்படி இருக்கும், சொல்லு? ஒரு நிமிஷம் மூச்சே நின்னு போச்சு!"

"ஒரு தடவை கொஞ்சம் கடுமையா சொன்னா தான்...அவளுக்குப் புரியும்! இப்போ வாங்கின அடி இன்னொரு தடவை இதே தப்பை செய்யவிடாது இல்லையா?" என அவன் விளக்க, விளக்க அன்பரசிக்கு உண்மை நிலை உரைத்தது.

ஆனால் கணவனின் விளக்கத்தை விட மகளின் கண்ணீரே பெரிதாய் பட "உங்க நிலை புரியுது! இருந்தாலும்..." என இழுத்தாள் மனைவி.

"இருந்தாலும், பொண்ணோட அழுகையை தாங்கிக்க முடியலையாக்கும்" என்றான் நல்லானந்த் உதட்டில் புதைந்த சிரிப்புடன்.

"ஆமா" என்ற மனைவியை ஒரு வாராய் சமாளித்து, இருவருமாய் உணவு உண்டு முடித்தப் போது "நீங்க நாளைக்கு ஆபீஸ் லேட்டா போங்க! பாப்பாக்கு க்ரையான் வாங்கணும். எங்க ரெண்டு பேரையும் வெளிய கூட்டிட்டு போயிட்டு வந்துட்டு...அப்புறம் வேலைக்குப் போங்க" என்றாள் அன்பரசி!

"என்ன விளையாடுறீயா? எனக்கு நாளைக்குக் காலையில எட்டு மணிக்கு ஸ்டேடஸ் கால் இருக்கு... என்னால வரமுடியாதுடீ! சாயங்காலம் கூட்டிட்டுப் போறேன்...என்னடா?" என்றான் கணவன் தன்மையாக.

"ம்ஹூம்... சாயங்காலம் வரைக்கும் மலர் குட்டி பேசாம இருக்க மாட்டாளே!" என அன்பரசி சோர்வுற, "வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு சைனீஸ் மால் இருக்கு. நீயே போய் வாங்கிட்டு வாயேன்!" என்றான் துணைவன்.

"ம்...சரி" என்றவளின் தயக்கத்திற்கு நேர்மாறாக அடுத்த நாள் வெகு இனிமையாக சென்றது. எப்போதும் தந்தை வேலைக்குச் செல்லும் வரை அவனுடனே அலையும் மலர், அடுத்த நாள் காலை அவனைச் சீண்டவே இல்லை என்பதோடல்லாமல் அன்பரசியின் இடுப்பை விட்டு இறங்கவே இல்லை.

நல்லானந்தின் "சாரிடா அப்புக்குட்டி! பாப்பா தப்பு செஞ்சததால தான் அப்பா அடிச்சேன்! இனிமேல் பாப்பா குறும்பு பண்ணாம இருந்தா அப்பாவும் அடிக்காம இருப்பேன்! அப்பாகிட்ட வாங்கடா" என விதவிதமாய் கெஞ்சியபோதும் மதிமலர் மசியவே இல்லை.

இருபது நிமிடங்களுக்கும் மேலாய் அவளிடம் கெஞ்சியவன், முடிவில் "பார்த்துப் போயிட்டுவாங்க அன்பா!" என்ற சொல்லோடும், குழந்தைகளுக்கு இரு முத்தங்களோடும் அலுவலுக்குக் கிளம்பிச் சென்றான்.

கணவனை அலுவலகம் அனுப்பிய கையோடு பெண்ணைக் குளிக்க வைத்து, பால் பருக கொடுத்து கடைக்குக் கூட்டிச் சென்றாள். கடை வளாகத்தில் நுழைந்ததுமே, கணவன் சொல்லியிருந்த அடையாளங்களைக் கொண்டு குழந்தைகளுக்கான பொருள் விற்கும் கடையை கண்டுபிடித்தவள், அங்கே சென்று பெண்ணிற்கு கலர் பென்சில் மட்டுமல்லாது அவள் பார்த்து ஆசைப்பட்ட பலவற்றை வாங்கிக் கொண்டு, வெளியே வந்தாள்.

கணவன் கொடுத்திருந்த பணத்திற்கு மேல் வந்தவற்றை பெண் கேட்டால் "அப்புக்குட்டி, அம்பாகிட்ட காசில்லைடா! காசு கொடுக்காம பொம்மை வாங்கினா பாப்பாவையும் அம்பாவையும் அந்த பிக் அங்கிள் அடிச்சிருவாங்க... அதனால, நாம நிறைய காசு சேர்த்து வச்சுப் பிறகு வருவோமா?" எனக் கூறி சமாளித்தாள்.

மகளும் "ஹோ...சரி! நம்ம தத்தாகித்த காசு கேக்காம்...தத்தா நியைய நியைய காசு வச்சுக்கா!" என யோசனை கூறவே, சந்தோஷமாய் வெளியே வந்தனர் இருவரும். மேலும் ஒரு மணி நேரம் அந்த வளாகத்திற்குள்ளே சுற்றியவர்கள், மதிய உணவிற்கு ஒரு மணிநேரம் முன்னர் வீடு வந்து சேர்ந்தனர்.

பெண் வரைவதற்கு ஏதுவாக பேப்பர், பேனா, பென்சில், கலர் பென்சில் போன்றவற்றை எடுத்துக் கொடுத்த அன்பரசி, தன்னால் முடிந்தளவு விரைவாக மதிய சமையலை முடித்தாள். படு மும்மரமாய் வரைந்து கொண்டிருந்த மதிமலரின் அருகே அமர்ந்து, அவளுடன் பேச்சு கொடுத்தவாறே உணவையும் அவள் ஊட்டி முடித்து, அன்றைய நாளின் அடுத்த சாதனையை அன்பரசி நிகழ்த்தியிருந்த போது நல்லானந்த் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அழைப்பு மணியின் சத்தம் கேட்டதும், "அப்புக்குட்டி, நல்லாப்பா வந்தாச்சு! நீங்க வரைஞ்சதை அப்பாக்கிட்ட காண்பிச்சா "சூப்பர்டா குட்டி!" சொல்லி, மில்க் சாக்லேட்

தருவாங்க அப்பா! அப்பாக்கிட்ட காண்பிக்கிரீங்களா?" என்றாள் நயமாக.

"பாப்பா...கார்தூன் போத்தா நல்லாப்பா அச்சுவாங்க" என மதிமலர் கண்ணை உருட்ட, "நீ தரையில போட்டா தான் அடிப்பாங்க! பேப்பர் போட்டா கொஞ்சத் தான் செய்வாங்க...அடிக்கவேமாட்டாங்க! நீ சொல்லிப்பாரேன்... அப்பா கொஞ்சுவாங்க பாரேன்" எனச் சொல்லிக் கொண்டே, வாசல் கதவைத் திறந்துவிட்ட அன்பரசி, மகளிடம் மீண்டும் ஜாடை காட்டினாள்.

தயங்கித் தயங்கித் தந்தையிடம் வந்த மதிமலர், "நல்லாப்பா...கார்தூன் பாரு!" எனக் காட்டிய வினாடி, அவனது கைகளுக்குள் ஏதோ ஒன்று அன்பரசியால் திணிக்கப் பட்டது.

"சூப்பர்ரா இருக்குடா அப்புக்குட்டி! அழகா வரைஞ்சிருக்கீங்களே!" என்ற நல்லானந்தும், மனைவியின் செயலைப் புரிந்து கொண்டது போல் "சூப்பர் கார்ட்டூன் வரைஞ்ச என் செல்லத்துக்கு சூப்பர் சாக்லேட்! இந்தாங்க" எனக் கூறி, மனைவி மறைவில் கொடுத்த மிட்டாயை மகளிடம் கொடுத்தான்.

"ஹை சாக்கி..." எனத் துள்ளிய இளஞ்சிட்டை தோளில் தூக்கி அவன் சீராட்ட, "அப்பா சாக்கி கொடுத்ததுக்கு தேங்க்ஸ் சொல்லவேண்டாமா ராஜா? தேங்க் யு சொல்லு" எனத் தாயாய் நல்வழிபடுத்தினாள்!

நல்லானந்தின் பாராட்டிலும், அவன் அதன் பின்னர் கேட்ட மன்னிப்பிலும், பெண்ணின் தவறை எடுத்துரைத்த அழகிலும், அவன் மேல் மதிமலர் கொண்டிருந்த கோபம் அன்றே இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட, நல்லானந்தை விட அவனது மனைவி அதில் அகமகிழ்ந்து போனாள்.

கோபமும் தாபமும் வருடக் கணக்கில் நிலைத்திருக்க அது பெரியவர்கள் மனதல்லவே! குழந்தையின் பால் மனமல்லவா? கோபத்தைச் சட்டென கைவிட்டு, தந்தையின் தோள்களில் சிங்காரமாய் உஞ்சாலடியது பச்சைக்கிளி!

அதன் பின்னர் வந்த தினங்கள் யாவும், உணவு, உறக்கம், குளியல் போன்ற முக்கியமான காரியங்களை தாய் - தந்தை என இருவரிடமும் செய்து கொண்ட மதிமலர், படம் வரைதல், கார்ட்டூன் பார்த்தல், கடைக்குச் செல்லுதல், குருவியுடன் பேசுதல், பால்கோவா சாப்பிடுதல் என அதி முக்கியமான காரியங்களுக்கு தாயை மட்டுமே சார்ந்திருந்தாள்.

பெண்ணின் மனதில் இடம் பெறத் துடித்த அந்த தாயோ, பெண்ணை விட ஆர்வமாய் அவளுடன் விளையாடினாள். எல்லாவற்றுக்கும் மேலாய் தந்தையிடம் மட்டுமே உணவு உண்ணுவேன் என அடம் செய்யும் குழந்தை, தந்தை கண்ணில் படாதபோது தாய்க்கு அந்த உரிமையை விட்டுக் கொடுத்ததே பெரும் சாதனையாய் இருக்கவே, அன்பரசியும் புதிதாய் அந்த மாற்றத்தையும் உருவாக்காமல் / உருவாக்க விரும்பாமல் மதியுடனே ஒத்துப்போனாள்.

"அம்பா, மிக்கியோட கைக்கு என்ன கதர் கையான் போதணும்? பூ கையாண் போதாவா...சூப்பர்ரா இக்கும்..." எனக் கண்களை விரித்து, கைகளை ஆட்டி, தலையயை இப்படியும் அப்படியுமாக அசைத்து, மகள் கேட்டபோது

"பாப்பாவோட கை என்ன கலர்? ப்ளூ கலராவா இருக்கு?" எனத் தாயும் கண்ணை உருட்டினாள்.

"ம்ம்...ம்ம்ம்..." என ஒற்றை விரலை, தாடையில் தட்டித் தட்டி மகள் யோசித்த அழகை மனைவியுடன் சேர்த்து நல்லானந்தும் ரசித்துக் கொண்டிருக்க, அவனிடம் ஓடிய மகள் "நல்லாப்பா... பாப்பாவோட கை என்ன கதர்? கதெகட்தா சொன்னா...அம்பா சாக்கி ததுவா" என அவனுக்கு ஆசை காட்டினாள்.

"நல்லாப்பா... பாப்பாவோட கை என்ன கதர்? கதெகட்தா சொன்னா...அம்பா சாக்கி ததுவா" என அவனுக்கு ஆசை காட்டினாள்.

"அடிக்கழுதை! இப்பவே என்ன சாமர்த்தியம் பாருங்க...நல்லாப்பா" - தாயின் பெருமைக்கு ஆளான மகளை, "மலர் குட்டிக்குத் தெரியலையா? அதுக்கு இப்படி ஒரு பிட்டா? அப்பாவை மிஞ்சிடுவீங்க போலவே!" எனக் கொஞ்சிய நல்லானந்த், "குட்டியோட கை... அழகான பிங்க் கலர்டா! அம்பாவோட கை...ம்ம்...வெண்ணிலா ஐஸ் கீம் கலர், அப்பாவோட கை..." என்ற வாக்கியத்தை முடிக்கும் முன்னரே "ப்ளாக்... ப்ளாக்" எனக் கத்தினாள் மகள்.

"சூப்பர்டா மலர்! அம்பாக்கு ஹை-பை தாங்க" என அன்பரசி மகளிடம் இணைத்து குதூகலிக்க, "ரெண்டு பேருக்கும் ரொம்ப கொழுப்பு ஜாஸ்தியாப் போச்சு! இரு இரு... எங்க அப்பாகிட்ட சொல்லிக் கொடுக்கிறேன்" என்றான் நல்லானந்த் சிறு குழந்தையின்

குரலில்.

ஆனால் அவனது மிரட்டலுக்கு அங்கே மதிப்பில்லை என்பது "தத்தா... பாப்பாவைத் தித்தவே மாத்தா... நல்லாப்பா தா தித்துவா" என்ற  மலரின் பெருமையில் ஊருக்கே தெரிந்தது!

இப்படியாய் பொழுதுகள் இனிமையாய் கழிய, இரு மாதங்கள் வேகமாய் உருண்டோடின. ஒரு வெள்ளியன்று மாலை வீடு திரும்பிய நல்லானந்த், "அன்பா...பக்கத்தில ஒரு முருகன் கோவில் இருக்காம். போய்ட்டு வரலாமா?" என வினவவே, அன்பரசியும் சரியென்று கிளம்பினாள்.

முத்துக் குவியலின் ஊடே சிவப்பு வண்ண ரோஜாக்கள் அங்கே அங்கே பூத்திருப்பது போல் வடிவமைக்கப்பட்ட புடவையை தான் உடுத்தவென தேர்வு செய்தவள், பெண்ணிற்கு வெண்பட்டில் சிவப்பு கரையிட்டு, நடு நடுவே ரோஜாக்கள் எட்டிப் பார்த்த பட்டுப் பாவாடையை அணிவித்துவிட்டு, தன்னுடன் ஜோடி சேர்த்தாள்.

ஒற்றை முத்தை பதக்கமாய் கொண்டு வடிவமைக்கப் பட்டிருந்த மெல்லிய தங்கச் சங்கலியை மகளின் கழுத்தில் போட்டவள், அவளுக்கிருந்த சிறு முடியை இரு பாகமாய் பிரித்து, சின்னதாய் கொண்டை போட்டுவிட்டாள்.

"அம்பா... இந்த கிப் மாத்துவேன் பீஸ்" என்று மகள் எடுத்துக் கொடுத்த வெண்ணிற ஹேர் கிளிப்பைக் குத்திவிட்டவள், மான் விழி மகளின் நெற்றியில், மானை அச்சாக்கி மையில் தோய்த்துப் பொட்டிட்டாள். அலங்காரத்தின் விளைவாக, அழகு குவியலாய் இருந்த மகள் அழகு பெட்டகமாய் ஜொலிக்க, தன் கண்ணே அவள் மேல் படும்முன்னர் திருஷ்டி பொட்டிட்டு, "நல்லாப்பாகிட்ட போங்க! அம்பா ரெண்டு நிமிஷத்தில கிளம்பி வரேன்" எனக் கணவனிடம் அனுப்பிவைத்தாள்.

பட்டுப் பாவாடை சரசரக்க வெளியே ஓடிய மகள், கணவனை எட்டுவதற்குள் "நல்லாப்பா, பாப்பாக்கு சிப்பர்ல இருக்கப் பாலைக் கொடுத்திடுங்க! போயிட்டு வர எவ்வளவு நேரமாகுமோ...பசி வந்திட்டா பாப்பா புரியாம அழுவா!" காரணக் காரியங்கள் கொண்ட கட்டளை அவனை எட்டியது.

மனைவியின் கட்டளையை கணவன் சிரம் தாழ்த்தி நிறைவேற்ற எண்ணினான் தான் என்றாலும், மகளோ "வேணாம்... வேணாம்" என முகத்தை இப்படியும், அப்படியுமாக திருப்பி ஒரு சொட்டுப் பாலைக் கூட பருக மறுத்துவிட்டாள்.

"குடிக்க மாட்டேங்கிறா, அன்பரசி! கையில் வச்சுக்கலாம்...பசின்னு அழுதா அப்போ கொடுத்துக்கலாம்" என்ற நல்லானந்தின் வார்த்தைகள் அப்படியே தடைப்பட்டு நின்றன. பின்னே, கைதேர்ந்த ஓவியனான பிரம்மனின் படைப்பில் உருவான அழகோவியம் அவன் முன்னே சேலையை நீவிக் கொண்டு நிற்கையில், இன்பத்தில் திளைத்து, அழகில் பிரம்மித்து, மூச்சு தடைப்பட்டு நிற்பது இயற்கை தானே!

பிரம்மனின் படைப்புகள் யாவையும் ஓரோர் விதத்தில் அழகு என்பதால் தான், மனிதர்களின் வியந்த பார்வைக்கு "பிரம்மிப்பு" எனப் பெயரிட்டு, பிரம்மனுக்கு மரியாதை தருகின்றனரோ?!

"கிளம்புங்க நல்லாப்பா! இங்க எங்கேயாவது பூ கிடைக்குமா? கிடைக்காதோ... என்ன ஊர் இது? இதுக்குத் தான்... இந்தியா போகணும்ன்னு சொல்றது!" என அங்கே சுத்தி, இங்கே சுத்தி இந்தியா கிளம்ப வேண்டும் என்ற புலம்பலில் வந்து நிறுத்தினாள்.

அவளது புலம்பலில் பிரம்மிப்பு விலக, தலையைக் குலுக்கிய நல்லானந்த் "சரி சரி! போகலாம்..." என்று எழுந்தான். ட்வீட்டியுடன் கொஞ்சிக் கொண்டிருந்த மகளிடம் "மலர் குட்டி! அப்பா கார் சாவியை பெட்-ரூம்ல குட்டி டேபிள் மேல வச்சிட்டேன்டா! ஓடிப் போய் எடுத்திட்டு வாங்க" என வேலை ஏவினான்.

குழந்தையும் தந்தையின் ஆணையை செவ்வனே நிறைவேற்றும் பொருட்டு உள்ளே ஓட, ஜன்னல் திரைகளை இழுத்துவிட்டுக் கொண்டிருந்த மனைவியை பின்னாலிருந்து அணைத்தான். "ஹையோ..." என்று ஆரம்பித்த அன்பரசியை, வேகமாய் தன் புறம் இழுத்த நல்லானந்த் அதி வேகமான முத்தங்களை மனைவியின் முகத்தில் வாரியிறைத்தான்.

"திருட்டு ராஸ்கல்!" எனக் கொஞ்சிய அன்பரசியும் கணவனின் கழுத்தில் கைகளால் மாலையிட்டாள்.

"சொந்த மங்காவையே திருடித் திங்க வேண்டியிருக்கு! எல்லாம் உன்னால தான்..." என குழைந்த குரலில் நல்லானந்த் இழுக்க, அவனது கால் சட்டையை இழுத்துக் கொண்டிருந்தாள் மகள்.

தன் இழுவையிலேயே குறியாக இருந்த தந்தைக்கு மகளின் இழுப்பு உறைக்கவேயில்லை என்றாலும், கணவனின் தோள் வளைவில் பெண்ணைக் கண்ட அன்பரசி அவனைப் பிடித்து தள்ளிவிட்டாள்.

"ஹே...ஒன்னே...ஒன்னு" என அவன் ஏதோ சொல்லத் தொடங்க, "மலர் குட்டி ரூம்ல இருந்து வந்துட்டா... சும்மா இருங்க" என்ற அன்பரசியின் முகத்தில் கூச்சத்தைவிட மகளின் முன் இப்படி நடந்துகொண்டோமே என்ற சங்கடமே இருந்தது. அவளது சங்கடத்தைப் பார்த்தும் பார்க்காதது போல் விட்ட நல்லானந்த், பெண்ணிடம் திரும்பினான்.

கார் சாவியை நீட்டிய மகளைத் தோளில் தூக்கிக் கொண்டு, கோவிலுக்குப் பயணமாயினர் இருவரும்!

காரின் பின் சீட்டில் மகாராணியைப் போல் மதிமலர் தன் இருக்கையில் அமர்ந்திருக்க, மகாராணி பவனி வரும் பல்லக்கின் சாரதியாய் அவளது தந்தையும், சாமரம் வீசும் பணிப்பெண்ணாய் தாயும் உடன்வர பயணம் இனிதே தொடங்கியது.

கோவிலுக்குச் செல்லும் வழியில், மகளின் கவனம் காரில் விளையாடவென நல்லானந்த் வாங்கிக் கொடுத்திருந்த குரங்கு பொம்மையின் மேலிருக்க, கணவன் பக்கம் திரும்பிய அன்பரசி "இனிமேல்...குழந்தை முழிச்சிட்டு இருக்கும் போது இப்படியெல்லாம் பண்ணாதீங்க" என்றாள் மெல்லிய குரலில்.

"எப்படியெல்லாம் அன்பா?" என ஒன்றும் தெரியாதவன் போல் கணவன் இழுக்க, "ரொம்ப நடிக்காதீங்க... கொஞ்ச முன்னாடி வீட்டில... அது...அதாங்க...அப்படி பண்ணாதீங்க" கோபமாய் தொடங்கிய அன்பரசியின் குரல் தடுமாற்றத்தில் வந்து நின்றது.

"எது...எதாங்க... எப்படிங்க பண்ணுங்க கூடாதுங்க..."

"படுத்தாதீங்க நல்லாப்பா! எனக்கு குழந்தை முன்னாடி அப்படி நிக்கிறது சங்கடமா இருக்கு! சின்னக் குழந்தையோட மனசு... இதை எப்படி எடுத்துக்கும்ன்னு தெரியாது. நான் சொல்றதை சொல்லிட்டேன்...இனியும் புரியாத மாதிரி கேலி பண்ணுவேன்னு நீங்க நினைச்சா...பண்ணுங்க" என்றவளின் கையைப் பிடித்து தனக்குள் வைத்துக் கொண்ட நல்லானந்த், "எனக்குப் புரியுதுடா. இனிமேல் பார்த்து நடந்துக்கிறேன்! உனக்கு சங்கடம இருக்க விஷயம் எதுவும் நடக்காது... ஓகே!" என்றான் சமாதானக் குரலில்.

"தேங்க்ஸ் நல்லாப்பா" என்ற மனைவியின் நன்றி நல்லானந்தை அடையும் முன்னர், "நல்லாப்பா...வெல்கம் சொல்லு" என்ற மகளின் அதட்டல் அவனை எட்டவே அங்கே சிரிப்பிற்கும் சந்தோஷத்திற்கும் குறைவில்லாமல் போனது.

முகத்தில் மலர்ச்சியுடன் அவர்கள் கோவிலுக்குள் நுழைந்தபோது, அங்கே பூஜை தொடங்கிவிட்டிருந்தது. தன் இடது கையை ஒற்றை விரலால் பிடித்துக் கொண்டு முன்னே நடந்த மகளை, இடுப்பிற்கு இடமாற்றிய அன்பரசி பெண்கள் பகுதியில் அமர்ந்தாள்.

தன் தமையனை இடது புறத்திலும், தந்தையை வலது பக்கமும் இருத்தி, முருகப்பெருமான் அவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்க, அந்த ஆலயத்தின் புரோகிதரோ "உனையின்றி வேறு யார் எனைக் காப்பார்...அம்மா" உற்சவ மூர்த்தியாய் அருள் பாலிக்கும் முருகக் கடவுளின் தாயார் - பார்வதி தேவியைப் பூஜித்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாளைக்கு ஒரு வேளை (அதுவும் காலையில்) கடவுளுக்கு 'குட் மார்னிங்' சொல்லி, சல்யூட் அடித்துச் செல்லும் நல்லானந்திற்கோ அவரது நீண்ட பூஜையில் அமர முடியாமல் கால்கள் பரபரத்தன.

பெண்கள் பக்கம் அமர்ந்திருந்த மனைவியைத் திரும்பிப் பார்த்தால், அவளோ ஐயருக்கும் மேலாய் பக்தியில் திளைத்திருந்தாள். மடியிலிருந்த மகள் எழுந்து ஓடிவிடாமல் இருக்க, அவளை இறுக்கமாய் வேறு பிடித்திருந்தாள்.

பூஜையில் பெரியவர்கள் சிலர் பக்தி பாடல்களைப் பெரும் பரவசத்துடன் பாடி மகிழ, அவர்கள் பாடி முடித்ததும் ஐயரிடம் சென்ற அன்பரசி மென் குரலில் எதையோ கூறி அனுமதி வாங்கினாள். கண்களில் கேள்வியாய் நோக்கியிருந்த நல்லானந்திடம் கவனம் செலுத்தாமல், குழந்தையிடம் ஏதோ கூறியவளின் கண்கள் பிடித்த அபிநயத்தைப் பார்க்கப் பார்க்க, நல்லானந்தின் கேள்வி தானாய் மறைந்து லயிப்பு கூடிக்கொண்டே

Property of Luva

போனது.

கேள்வியிலிருந்து லயிப்பிற்குத் தாவிய அவனது பார்வையை பெருமைக்கு மற்றும் பொறுப்பு - மலரின் மழலை குரல் வெளிவந்த அபிராமி அந்தாதிக்கு உரித்தானது.

இரண்டு வயதிற்கும் உட்பட்ட சிறுமி, தாமரை மொட்டாய் கரன் குவித்து, ஒரு கண்ணை அம்பாளிடமும் மறு கண்ணை அம்பாவிடமும் வைத்து, சிற்சில உச்சரிப்பு தவறுகளுடன் அபிராமி அந்தாதியின் "தனம் தரும் கேள்வி தரும்" பாடலைப் பாடி முடித்தப்போது அங்கிருந்த அனைவருக்குமே வியப்பாய் இருந்தது. அவள் பாடியதில் நெகிழ்ந்த புரோகிதரோ "அம்பாளின் சிறு உருவே பாடியது மாதிரி இருந்தது அம்மா! பிள்ளையை மிக நன்றாகவே வளர்த்திருக்கிறீர்கள்!" என மனமார வாழ்த்தி, அம்பாளின் பிரசாதமான கல்கண்டை மதிமலருக்குக் கொடுத்தார்.

கல்கண்டைக் கண்ட மலருக்குப் பெருமாள் கோவிலில் கொடுக்கப்படும் கல்கண்டு நியாபகம் வந்துவிட்டது என்பது அவளது"அம்பா... கிஷன் சாமி மித்தாய்" என்ற வாக்கியத்தில் வெளிப்பட்டது.

பெண்ணின் பக்திப் பாடலிலும், சூழ இருந்தோரின் பாராட்டிலும், புரோகிதரின் ஆசியிலும், கடைசியாய் பெண்ணின் நியாபக சக்தியிலும் பெருமையே உருவாய் இருந்த பெற்றோரின் மனதை சுனங்க வைப்பது போல் சில செயல்களும் நடக்கத் தான் செய்தன!

மதிமலர் பாடி முடித்தப்பின்னர் பூஜையும் முடியவே, கற்பூர ஆரத்தி எடுக்கும் வேளையில் அங்கிருந்த சில சிறார்களுடன் விளையாடி மகிழ்ந்தாள், அவள். ஆரத்திக்குப் பின்னர் விபூதி, குங்குமம் வாங்குவதற்கு வரிசையில் நின்றசமயம், மதிமலருடன் விளையாடிக் கொண்டிருந்த ஒரு பையனின் தாயார் அன்பரசியிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

ஊர், பெயர், எவ்வளவு காலமாக இங்கே இருக்கிறார்கள், வான்கூவரில் எங்கே வீடு?, வேலைக்குச் செல்கிறாளா போன்ற விசாரிப்புகள் நடந்து கொண்டிருக்க, "மலர், சாமிகிட்ட விபூதி வச்சுக்கோ... வா..." என்றழைத்தான் நல்லானந்த்.

"எங்க நல்லாப்பா கூப்புதாங்க நான் போதென்...பாய்" எனத் தன் தோழனிடம் கூறிய மதிமலரும் மின்னல் வேகத்தில் தந்தையிடம் சரண்புகுந்தவள், தாயிடம் திரும்பி "அம்பா...

யாதவ்..." தன் குறுகிய காலத் தோழனைப் பற்றி பேசத் தொடங்கினாள்.

அன்பரசியும் நல்லானந்தும் அவளது பேச்சை ரசித்துக் கொண்டு, அவளுக்கு ஏற்ற மாதிரி பேசிக் கொண்டிருக்க, யாதவ்வின் தாயோ "பெண்ணிற்கு எத்தனை வயசாகுது...இன்னும் அம்மான்னு சொல்ல வரலை போலவே!" என அன்பரசியிடம் வினவினார். அவருக்கு என்ன கடுப்போ?

பதில் சொல்ல முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்த தாயை விட்டு மகளிடம் திரும்பிய அந்தப் பெண்மணியோ "கண்ணு...அம்பா சொல்லக் கூடாது! அம்மா சொல்லும்மா...அம்மா...அம்ம்ம்மா சொல்லு...யாதவ் அழகா சொல்லுவான்" என்று உரைக்க, மதிமலரோ "இது அம்மா இல்ல...அம்பா தா... அம்மா bird ல வதுவா... அகி அண்ணா, டாடி, அம்மா எல்லா வதுவாங்க..." என்றாள் பெரிய மனுஷியாய்.

கேட்டிருந்த பெண்மணியின் வியந்த பார்வையைவிட, பெண்ணின் மனதில் தன்னக்கென்று இருக்கும்  இடமே அன்பரசியை வெகுவாய் பாதித்தது என்பதை அவளது கண்களில் படர்ந்த ஏமாற்றம் மற்றும் நிராசையே தெள்ளத் தெளிவாய் எடுத்துக் காட்டின! பெண்ணை விட பார்த்து சில நிமிடங்களே ஆனா பெண்மணியைப் பெரிதாய் எண்ணியிருந்தால் அவளது முகத்தில் சங்கடமோ அல்லது கோபமோ அல்லவா படர்ந்திருக்க வேண்டும்? அப்படியின்றி கண்களில் வலியும், கூடவே கண்ணீரும் எட்டிப் பார்ப்பது போலிருக்க, "பாப்பாவைக் கூட்டிட்டு முன்னாடி போ...அன்பா" என மனைவியை முன்னே விட்டுத் தான் பின்னாடி வந்து நின்று கொண்டான்.

சற்றுமுன்னர் காரில் வரும்போது கூட பெண்ணை முன்னிறுத்தி கணவனை அவள் கண்டித்தது நினைவு வர, அவளின் தவிப்பு வார்த்தைகளால் வடிவம் பெறுவதற்கு முன்னரே நல்லானந்தின் மனதைத் தொட்டது.

"அம்பா, மம்மம் வேணும்... ம்ம்...மம்மம் தா" என அனத்த ஆரம்பித்த மகளை சாமாளித்து, பிரசாதம் வாங்கிய அன்பரசி இரண்டு பிரகாரம் முடிப்பதற்குள்ளாகவே மதிமலரின் அனத்தல் அழுகையாய் வடிவம் பெற காத்திருந்தது.

"அன்பா...குழந்தை அழறாளே!அவளை என்கிட்டே கொடு.சிப்பர்-ல இருக்கப் பாலை கொடுக்கிறேன்" என மகளை மனைவியிடமிருந்து வாங்கப் பார்த்தான்.

"அவளுக்கு நான் அம்மாவோ இல்லையோ, எனக்கு அவள் மகள் தான்! அதனால என் பெண்ணைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்! நீங்க ஒன்னும் சொல்லத் தேவையில்லை..." - ப்ராஜெக்ட் மேனேஜரின் மேலிருக்கும் கோபத்தைத் தன் கீழிருக்கும் ஊழியர்கள் மேல் காட்டும் ப்ராஜெக்ட் லீடை போல், யார் மேலோ இருக்கும் கோபத்தைக் கணவனிடம் காட்டினாள் அன்பரசி!

"அன்பா" எனக் கணவன் அதட்டியத்தை பொருட்படுத்தாமல், "மலர், சாமி கும்பிட்டு முடிச்சதும் அம்பா மம்மம் தரேன். அஞ்சே நிமிஷம் இரு!" என மகளிடம் பேசிப் புரிய வைக்க முயன்றாள் அன்பரசி.

ஆனால் புரிந்துகொள்ள முடியாத வயதிலிருந்த மதிமலரோ கால்களை உதைத்துக் கொண்டு அழ ஆரம்பிக்கவே, கோவில் போன்ற பொது இடத்தில் மகளின் அழுகை பெரும் கவனப் பிசகை ஏற்படுத்துவதை உணர்ந்த நல்லானந்த், அன்பரசியின் கோபத்தையும் மீறி மகளை அவளிடமிருந்து வலுக்கட்டாயமாய் பிரித்தெடுத்துக் கொண்டு காருக்குச் சென்றான்.

ஐந்தே நிமிடத்தில் வெளியே வந்த அன்பரசி, "பிள்ளையைக் கொடுங்க, நான் பால் கொடுக்கிறேன்! ப்ளீஸ் நல்லாப்பா!" என்றாள் கண்களில் பெரும் கெஞ்சலுடன்.

மறுபேச்சில்லாமல் பெண்ணை அன்பரசியிடம் கொடுத்த நல்லானந்த், தான் அமர்ந்திருந்த இடத்தை மனைவிக்குக் கொடுத்துவிட்டு எழுந்து கொண்டான். கார் கதவைத் திறந்துவைத்து அதில் கணவன் சாய்ந்திருக்க, பெண்ணை மடியில் போட்டு பாலூட்டினாள், மனைவி!

தன்னுள் சுரக்கும் பாலை மகளுக்குப் புகட்டமுடியவில்லையே என்ற வருத்தத்தில் தன்னுள் சுரக்கும் பாசத்தை அளவிற்கு அதிமாகவே மகள் மேல் பொழிந்த அன்பரசிக்கு, பால் சுரந்திருக்கும் வேளையில் பிள்ளை அதை குடிக்காமல் போனால் உண்டாகும் மார்வலியைப் போலவே, தன் பாசத்திற்கு உரிய எதிரொலி இல்லை என்றானதும் நெஞ்சம் கனத்தது.

நெஞ்சத்தின் கனத்தைக் குறைக்கும் வகையறியாமல் மகளின் தலையைக் கலைத்துவிட்டு, கன்னம் வருடினாள் துன்புற்றவள். அவளது துன்பம் புரியாமல், சிப்பரைத் தட்டிவிட்ட

மதிமலர் "பாப்பா..குடுமி எதுத்தா அச்சுவ்வேன்... வைத் கிப் காணா போச்சுதா... அச்சோ...." எனத் தன் வெள்ளைக் கிளிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கவும் "ரொம்பப் பண்ணாதேடி! உன் தலையை இனிமேல் தொடவே இல்லை...பாலைக் குடிச்சு முடி" என்ற அன்பரசி, "பாருங்க நல்லாப்பா! எனக்கு மனசுக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு...அதெல்லாம் புரியாம குடிமியைக் கலைக்காத... க்ளிப் எங்கன்னு கேள்வி கேட்குறா" என்றாள் கோபமாய்.

"நீயே சொல்ற மாதிரி அவளுக்கு உன் கோபத்தைப் பத்தி என்ன புரியும்? சின்னக் குழந்தைடா அன்பா..."

"ஹ்ம்ம் ஆமா... ஆனா நானும் பாவம் தானே!" என முகத்தில் கண்ணீர் வழிந்தோட மனைவி வினவியபோது நல்லானந்திற்கு, மதிமலர் குழந்தையா? அல்லது அன்பரசி குழந்தையா? என்ற சந்தேகம் படுவேகமாய் முளைத்தது.

"எல்லாம் சீக்கிரமே சுகமா வேண்டும்" என்ற வார்த்தைகளை வேண்டுதலாய் கடவுளிடமும் வைத்துவிட்டு நல்லானந்தின் குடும்பம் வீடு திரும்பியபோது, மதிமலரின் நித்திரை நேரம் துவங்கி அரை மணி நேரமாகியிருந்தது.

மகளின் பட்டாடையை களைந்து இரவு உடை அணிவித்த அன்பரசி, உடைமாற்றாமலே அவள் அருகே படுத்துக் கொண்டு

"அப்புக்குட்டி... நான் அம்மா இல்லையா? நான் உன்னை அம்மா மாதிரி பார்த்துக் கொள்ளலையா? "

"ஏன்டா உனக்கு என்னைப் பிடிக்கலை....?"

"ம்ம்ம்.. உனக்குப் பிடிக்குதோ இல்லையோ...எனக்கு நீ தான் உயிர்!"

"எனக்கு உன்னை எவ்வளவு பிடிக்கும் தெரியுமா? எங்கம்மாடா நீ... உன்னை நான் ஏன் "மதி"ன்னு கூப்பிடுறேன் தெரியுமா? உன் பாட்டி பேரு இந்துமதி... நீ பாட்டி மாதிரியே இருக்கியா...அதான் "மதி" சொல்றேன்!"

"எனக்கு நீ ரொம்ப முக்கியம்டா...சொல்லப் போனா உங்க அப்பாவைவிட ரொம்பவே முக்கியம்! உன்னை விட்டுட்டு அப்பா என்னை மட்டும் கனடா வரச் சொன்னதுக்கு நான்

வரமாட்டேன்னு சொல்லிட்டேன் தெரியுமா?"

"உன்னை விட்டு ஒரு நிமிஷம் கூட பிரிஞ்சிருக்க கூடாதுன்னு தான் வேலையை விட்டேன்...உன்னைத் தூக்கிட்டு இங்க வந்தேன்!"

"என்னை ஒரு தடவை 'அம்மா' கூப்புடு கண்ணம்மா! இதை நீ முழிச்சிருக்கும் போது சொன்னா "நீ அம்மா இல்ல...அம்மா பிர்ட்ல வருவா..."அது இதுன்னு சொல்வே... உனக்கு நான் அம்மா ஆகணும்னா திலோக்கா அம்மா இல்லைன்னு இல்லைடா...

"உனக்கு ரெண்டு அம்மா... திலோக்காவும் அம்மா, நானும் அம்மா சரியா?"

"அம்மாவைப் புரிஞ்சுக்கோ கண்ணம்மா! உனக்காக...உன் பாசத்திற்காக நான் தவிக்கிறது புரியலையா?"

இப்படியாய் அன்பரசியின் வாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்க, அரை வாயிலில் நின்று அதை கவனித்துக் கொண்டிருந்த நல்லானந்திற்கு மெய் சிலிர்த்தது. பெண்ணின் மேல் அவள் கொண்ட கட்டுக்கடங்கா பாசம், முன்னை விட இன்று புதிதாய் தாக்கியது. அவளது இத்தவிப்பை எப்படியாவது தீர்த்தே ஆகவேண்டும் என உறுதிகொண்டவன், மனைவியை மெல்ல நெருங்கினான்.

உறங்கிக் கொண்டிருக்கும் மகளின் உருகிக் கொண்டிருந்த மனைவியை அள்ளி அணைக்கத் துடித்த நல்லானந்தின் கைகள், அவளது நெற்றியில் விழுந்து "சாப்பிடலாம் அன்பா...எழுந்துவா" என்றான் கரகரத்தக் குரலில்.

---

மலர் போன்ற மகளின் பூவிதழ் மேனியை மெல்ல வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த அன்பரசியின் கைப்பிடித்து எழுப்பிய அவளது கணவன், அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டு வரவேற்பறை நோக்கி நடந்தான்.

அவளும் தன் வேதனை மறக்க, கணவனது தோளில் தலை சாய்த்து, இடுப்பில் கையிட்டு நெருங்கி வந்தாள்.

மனைவியை வரவேற்பறை சோபாவில் அமரவைத்த நல்லானந்த், உணவு எடுப்பதற்காக சமையலறை நோக்கித் திரும்பினான். அவனைப் போகவிடாமல் இறுக பற்றிய அன்பரசியின் கரங்கள், அவளது வேதனை மற்றும் வீரியத்தை எடுத்துரைக்க, அவளையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு உணவறைக்குச் சென்றான். சாதத்தை நன்றாக மசித்து, குளிர தயிர் விட்டுப் பிசைந்தவன், மகளிடம் மறுகித் தவித்த மங்கையை மடியில் சாய்த்து உணவூட்டினான்.

கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் கொடுத்த உணவை மறுபேச்சில்லாமல் உட்கொண்ட அன்பரசியும் சரி, அவளது அன்புள்ளம் பட்டுக்கொண்டிருக்கும் காயத்தை உணர்ந்த நல்லானந்தும் சரி மௌனத்தையே தங்களது மொழியாக்கினார்.

நீண்ட நேரம் நீடித்த மௌனத்தின் அழுத்தத்தைத் தாள முடியாமல், "அன்பா...நீ இவ்வளவு கவலைப்படற அளவுக்கு எதுவும் பெருசா நடந்திடலைடா! யாரோ ஏதோ சொன்னாங்கன்னு நீ ஏன் இவ்வளவு வேதனை படுறே?" என்றான் கணவன், மெல்லிய கண்டிப்புடன்.

"அவங்க சொன்னதற்காக வருத்தப்படலை...."

"சரி, அப்படியே இருந்தாலும்...மலர் சின்னக் குழந்தைடா! இரண்டு வருஷமா திலோவை 'அம்மா ' ஸ்தானத்தில் வச்சே வளர்ந்த குழந்தையால...எப்படி கண்ணம்மா ரெண்டே மாசத்தில தன்னோட நினைப்பை மாத்திக்க முடியும்?"

கணவனின் கூற்றில் நியாயம் இருந்த போதும் அன்பரசியின் தாயுள்ளம் அதை ஒத்துக்கொள்ள முடியாமல் தவித்துத் திண்டாடியது.

"மலர்குட்டிக்கு உன்னைப் பிடிக்காம எல்லாம் இல்லை, அன்பா! சொல்லப் போனா ரொம்ப பிடிச்சிருக்கு...அவ வயசுக்கு ஏற்ற மாதிரி நீ பேசிப் பழகுறது அவளை இன்னும் உன்கிட்ட நெருக்கமா தான் கொண்டு வந்திருக்கு... சரியா? இப்போ இருக்க அந்தப்

பிடித்தம் கூடிய சீக்கிரமே தாய் பாசமா மாறிடும் கண்ணம்மா!" என்றான் பெரும் நம்பிக்கையுடன்.

"ஹ்ம்ம்...எனக்கும் புரியுது நல்லாப்பா. நான் "அம்மா" இல்லன்னு அவ சொன்னதில வருத்தம் தான் என்றாலும், உங்க மேலேயும் திலோக்கா மேலேயும் அவ வச்சிருக்க நெருக்கத்தை என்னால ஏற்படுத்திக்க முடியாதோன்னு பயம் வந்துடுச்சு! அதான் உடைஞ்சு போயிட்டேன்!"

அவளது வருத்தம் வருந்த வைத்தாலும், அது நீடிப்பது நல்லதில்லை என்றெண்ணிய நல்லானந்த் "எல்லாம் நல்லபடியா நடக்கும்! மனசைப் போட்டு வருத்திக்காம சந்தோஷமா இரு...சரியா?" என்றான் அவள் கன்னத்தில் முத்தம் வைத்தப்படி.

"சரி" என இழுத்தவள், கணவனிடம் மேலும் ஒட்டி அமர முற்பட, அவனும் அவளை ஆறுதலாய் அணைத்து துன்பம் போக்க முயன்றான்.

வெகு நேரம் சென்றபின்னரும் அன்பரசியின் முகம் தெளியாமல் இருப்பதைக் கண்டவன், "சும்மா சும்மா சோக கீதம் வாசிக்கக் கூடாது அன்பா... எனக்கு போர் அடிக்குது இல்லையா" என்றதோடு நில்லாமல், "இதென்ன... கோவிலுக்குக் கட்டிட்டுப் போன சேலையோடவே இருக்கே! வா வா டிரஸ் மாத்திவிடுறேன்!" என்றான் குறும்புடன்.

"இந்த நேரத்தில என்ன விளையாட்டு? சும்மா இருங்க!" என்ற மனைவியின் அதட்டலில் அடங்கியிருந்தால் அவன் மலரின் தந்தையாக இருப்பதில் நியாயமே இல்லையே! தந்தை - மகள் இருவருமே, தங்கள் தந்தையைத் தவிர வேறு யாரும் அவர்களை அதட்டினால், அதட்டப்பட்ட காரியத்தைத் தலைகீழாக நின்றேனும் சாதிக்கும் ரகமல்லவா. அந்த ஒரு காரணத்தினாலேயே, நல்லானந்த் தொடர்ந்து பேசிக்கொண்டே போனான்.

"நேரத்திற்கு என்ன குறைச்சல் வந்தது இப்போ? வெளியே வெள்ளி நிலா காய்கிறது... உள்ளே என் பால் நிலா சூடாய் தகிக்கிறது... என் சுட்டி வளர்பிறையோ உள்ளே துயில்கிறது... வெள்ளிநிலவின் குளிரில் நடுங்கும் என்னை, பால் நிலவு அணைத்தால்

இன்னொமொரு வளர்பிறை உருவாகுமே என நான் எண்ணினால்... நீ நேரம் என்கிறாய்! காலம் என்கிறாய்!" என கணவன் கவிபாட, "போதும்...போதும்...கவிதை என்ற பெயரில் நீங்க பேசுறதை என்னால தாங்க முடியலை..." என்றாள் அன்பரசி, கவலை மறந்த சிரிப்புடன்.

"எனக்குள் இருக்கும் கவிஞனை சிலிர்த்தெழ வைத்த அன்பரசியாரே...உம்மை யாம் தாங்குவோம்! நீ என்னை எதிர்க்கட்சியாய் எண்ணினாலும், என்னுள்ளமும் உடலும் உனை தாங்கும் அரசியே! நீர் எம்மை தாங்கத் தேவையில்லை! " என்றவனின் வாயை அடைக்க வழி தெரியாமல், அவனது உதடுகளுக்குத் தன் உதடுகளைப் பூட்டாக்கினாள் அன்பரசி!

மனைவியே அச்சாரம் வைத்து அவர்களது கூடலை உறுதி செய்ய, அதை செழுமையாகவே பயன்படுத்திக் கொண்டான் நல்லானந்த்! அந்த ஒற்றையறை வீட்டிலிருக்கும் ஒரே அறையில் மகள் துயில் கொண்டிருக்க, அவர்களது கூடலும் ஊடலும் இனிய தாம்பத்தியத்தின் ஆரம்பம் வரவேற்பறையில் துவங்கியது. 'ஒற்றையறை' என்ற காரணத்தை முன் வைத்து, கணவனிடம் மறுத்துக் கொண்டிருந்த அன்பரசியின் கெஞ்சல் கொஞ்சம் கூட ஏற்கப்படாமல், வெள்ளி நிலவின் வெள்ளி கதிர்களுடன் வெளியே தூக்கியெறியப் பட்டது என்பதை அன்பரசி வெட்கத்துடனும், நல்லானந்த் மோகத்துடன் சொல்லிக் கொள்கின்றனர்!

என்ன தான் மயக்கம் சூழ்ந்திருந்தபோதும், கணவனின் கைகள் தன்னை இறுக்கியிருந்தபோதும், மனமும் உடலும் அவனை விட்டு நகர மறுத்தப்போதும், மனதிற்குள் தோன்றிய மகளின் முகம் அன்பரசியை வெகு காலையிலேயே எழ வைத்தது. குளித்து முடித்து வெளியே வந்தவள், கணவனையும் எழுப்பி குளியலறைக்குள் தள்ளிய பிறகே நிம்மதி அடைந்தாள்.

முகத்தை சுளித்து, அவளைத் தன்னிடம் இழுக்கத் துடித்து, முடிவில் "ஒரே ஒரு கிஸ்டா ப்ளீஸ்... நீ கொடேன்... நான் உடனே எழுந்துப்பேன்" எனக் கெஞ்சி, வரமாட்டேன் என அடம் பிடித்தவளிடம் ஆசை வார்த்தை பேசி, முடிவில் ஒன்றும் நடக்கப் போவதில்லை என்பதைப் புரிந்து கொண்டு, "போய்த் தொலை!" என்ற எரிச்சல் வார்த்தையுடன்

குளியலறை நோக்கிச் சென்றான் கணவன்.

அன்பரசியின் மறுப்பை ஆதரிப்பது போல், மதிமலரும் "அம்பா" என்ற சிணுங்கலுடன் வெளியே வந்து சேர்ந்தாள்!!

"என் செல்ல புஜ்ஜு... ஏன்டா கன்னுக்குட்டி இவ்வளவு சீக்கிரம் எழுந்திட்டீங்க? கொஞ்ச நேரம் தூங்கறது தானே! அம்பா தாச்சு பண்ணவா? குட்டி தூங்குங்கடா!" என மகளை இடுப்பில் அமர்த்திக் கொண்டு, அன்பரசி கொஞ்சோ கொஞ்சென்று கொஞ்சித் தள்ள,

"ஹ்ம்ம் எழுந்தவளைத் தூங்கச் சொல்லு! தூங்குறவனை எழுந்துக்கச் சொல்லு! என்ன பொண்ணு நீ" என அலுத்துக் கொண்டது நல்லானந்தே தான்!!

அதன் பின்னர் வந்த தினங்களில், சில சமயம் அன்பரசிக்குத் தெரிந்தும், பல சமயம் அவளுக்குத் தெரியாமலும், மலர் மீது வைத்திருந்த தன் இரு வருட ஆட்சியை அன்பரசிக்கு இடம்மாற்றும் வேலையில் மும்மரமாய் ஈடுபட்டான், அவளது கணவன்.

அவனது முயற்சிகளில் சில இங்கே உங்கள் கவனத்திற்கு,
முதலாவதாய் மதிய உணவு வேளையில் வீட்டிற்கு வருவதை, "அதிக வேலை" எனக் காரணம் சொல்லிக் குறைத்துக் கொண்டான்.

அடுத்ததாய் கடைக்குச் செல்லும் வேலைகள் யாவற்றையும் அன்பரசியிடமே விட்டு, மதிமலரை அவளுடன் போகச் செய்தான்.

மற்றொரு வேலையாய், மனைவியும் மகளும் இணைந்து படம் வரையும் வேளையில், மகளின் படங்களைக் கேலி செய்து அவளது புகார்களை அன்பரசிக்கு இடமாற்றினான் என்றால் அன்பரசி சொல்லும் எல்லாவற்றையும் கேலிக்கு உண்டாக்கி அவளது துணைக்கு மகளை வரவைத்தான். தன் "அம்பா"வை கேலி செய்வது அப்பாவே என்றபோதிலும், அதை பொறுக்காத மலரோ தந்தையை அடி பின்னி எடுத்தாள்.

ஒரு நாள் "என்ன கலர் போட்டிருக்கீங்க? மரமெல்லாம் கிரீன் கலர்லையா இருக்கும்? வெளிய பாரு...பிரவுன் கலர்ல தானே இருக்கு... கண்ணோ தெரியாதா அன்பா உனக்கு!

அச்சோ பாவம்... கண் டாக்டர்கிட்ட கூட்டிட்டு போகவா... ஏன் மலர் குட்டி, அம்பா கூட சேருறீங்க? அப்பா உனக்கு சூப்பர்ரா கலர் பண்ணச் சொல்லித் தரேன்" எனக் கூறி மகளைத் தன்னிடம் கூட்டிக் கொண்டவன், அன்பரசி வரைந்து, மலர் அழகாய் வண்ணம் தட்டி வைத்திருந்த படத்தை வேண்டுமென்றே கர்ண கொடூரமாக்கினான்!

அவன் செய்து வைத்த அலங்கோலத்தைப் பார்த்த மகளோ, தாயின் மேல் இரக்கம் கொண்டு "எங்க அம்பா கேலி பண்ணா... அச்சுவேன் நல்லாப்பா! நீ வதவே வேணாம்...நாங்க தெண்டு பேதும் கையாண் போதுப்போம்... போ...போ" எனப் பல்லைக் கடித்தாள். அந்த நாளுக்குப் பிறகே, தன் கேலிகளைக் குறைத்தான் தந்தை!

இப்படியாய் மேலும் மூன்று மாதங்கள் தன் நற்பணியைத் தொடர்ந்த ஆளுங்கட்சி, ஒரு பௌர்ணமி நன்னாளில் "டேய் அப்புகுட்டி! அகில் அண்ணா, அம்மா, டாடி எல்லாரும் பாப்பாவைப் பார்க்க bird-ல பறந்து வராங்க! பாப்பா வந்த அதே bird-la...ஷூக் பறந்து வராங்களே!" என்றான் அபிநயத்துடன்.

அதை கேட்டிருந்த பெண்களுள் சிறியவளுக்கு அது புது தகவல் என்றாலும் பெரியவளுக்கு அது ஏற்கனவே தெரிந்த விஷயம். கனடா வந்த முதல் நாள், தூங்கிக் கொண்டிருந்த கணவனை அதி காலை வேளையில் எழுப்பி, அவனிடமிருந்து வாங்கிய விஷயம்!

அன்பரசியும் மலரும் கனடா வருவதாக தீர்மானிக்கப் பட்டதுமே, அகிலனின் தனித்துவிடப்பட்ட நிலை தான் நல்லானந்தை பெரிதாய் தாக்கியிருந்தது. மதிமலர் அவன் வாழ்விற்குள் வருவதற்கு முன்னரே, வீட்டின் முதல் பேரக் குழந்தை என்பதாலும், தன் இனிய தோழியின் ஒற்றை செல்வம் என்பதாலும் அன்பைப் பொழிந்தவன் தான் நல்லானந்த்! மதிமலரின் வருகை, இருவர் மேலும் அவன் கொண்ட பாசத்தை மிகப் பெரிய நிலைக்கு ஈட்டுச் சென்று "அகிலனும் என் மகனே!" என்ற எண்ணத்திற்குக் கொண்டுவந்து விட்டிருந்ததால், மலரை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொள்வதற்கு அவன் மனம் ரொம்பவுமே தயங்கியது. அன்பரசியின் ஏக்கமும், மதிமலரின் விலகலும், அகிலனின் படிப்பும், திலோவின் அறிவுரையும் - எல்லாமுமாய் சேர்ந்து அகிலனின் வருகையை தடை செய்து வைத்திருக்க, அவனது விடுமுறை துவங்கியதுமே அண்ணன்

மற்றும் அண்ணியாரின் துணையுடன் அகிலனின் பயணத்தை உறுதி செய்துவிட்டான் நல்லானந்த்.

இப்படியாய் உறுதி செய்யப்பட்ட பயணத்தை தந்தை பகிர்ந்ததுமே, ரப்பர் பந்தாய் துள்ளிக் குதித்தாள் மகள்! "ஹை ஜாலி! ஹை ஜாலி! அம்மா வதா...அகி அண்ணா... டாடி...எல்லா bird ல...குச்சு டி.வீ  பாதுதே வதுவாங்க... ஜாலி!" என ஆர்ப்பரித்தவள், "அம்பா, அகி அண்ணாவுக்கும் கையாண் சொல்லித் தாவேன்...பீஸ்...எக்கு மாதியே த்தீ (tree) எல்லா போது சயியா? அகி அண்ணாக்கு ஒன் பதம்... பாப்பாக்கு ஒன் பதம்... அப்தம் கையாண் கடைக்குப் போவோமா? எக்கு வாங்கித் தந்த மாதியே அகி அண்ணாவுக்கும் வாங்காம்...டென் பூ கையாண்... வைத்...தேட்... எல்லோ...கீன்..." என அடுக்கிக் கொண்டே செல்ல, அதற்கு "சரிடா செல்லக் குட்டி" என்ற ஆமோதிப்பு தாயிடம் வந்த வேளையில்,

"ஹே குட்டி, அம்மாவும் அகி அண்ணாவும் இங்க வரும்போது அம்பா இருக்கமாட்டாடா! தாத்தாவும், பாட்டியும் தனியா இருப்பாங்க இல்லையா...அதனால அம்பா சென்னைக்குப் போய்டுவா!" என்றான் நல்லானந்த், தீர்மானமாய். அதிர்ந்து போய் அமர்ந்திருந்த அன்பரசியிடம் அவன் காட்டிய கண் ஜாடையைக் காணாத மதிமலரோ, "ஹான்...அம்பா போய்துவாவா? ஹ்ம்ம்...ம்ஹூம்... போவ கூதாது... தத்தாவும் பாத்தீயும் இங்கவே வததும்...அம்பா போவ கூதாது..." என்றாள் அவனை விட தீர்மானமாய்.

"தாத்தாவுக்கு நிறைய வேலையிருக்காம்! அதனால தாத்தாவால வர முடியாதாம்... இவ்வளவு நாள் அம்மாவும் டாடியும் அங்க இருந்தாங்க இல்லை... இப்போ அவங்க வந்தப்புறம் அம்பா போய் இருப்பா... பாவமில்லடா பாத்தீ! தாத்தா வேலைக்குப் போய்ட்டா அவங்களோட பேச யாருமே இருக்க மாட்டாங்க இல்ல... அதனால அம்பா போகட்டும்டா ப்ளீஸ்!" என்றான் நல்லானந்த், வெளியே கெஞ்சலும், உள்ளே நடுக்கமுமாய். பின்னே, மகள் "சரி போகட்டும்" என்று விட்டால் மனைவியின் கண்ணீர் கடலில் யார் நீந்தித் தவிப்பது?

"ம்ஹூம்... போவக் கூதாது" எனத் தந்தையிடம் அழுத்தமாய் மறுத்த மகளிடம் "நீ வேற ரொம்ப அடம் பண்றியா...அதான் அம்பாவை பாட்டி கிட்ட அனுப்பிடலாம்ன்னு பார்க்கிறேன்!" என நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றினான் நல்லானந்த். அவனது வார்த்தைகளைக் கேட்ட மகள், தந்தையிடம்  பேசுவது உசிதமில்லை

என்றெண்ணினாளோ என்னவோ "அம்பா...பாப்பா வித்து போவியா... போவதா அம்பா! பாப்பா கூதவே இக்கியா... பீஸ்... நான் அடம் பண்ணாம மம்மம் சாப்புவேன்! பிட்ஜ் எல்லாம் சும்மா சும்மா துவக்க மாத்தேன்... வெயிய (வெளிய) போய் கத்த மாத்தேன்... கையாண் தூக்கி வெயிய போத மாத்தேன்... பாப்பி பொம்மையை அக்கவே (அடிக்கவே) மாத்தேன்... இங்கவே இக்கியா?" என்றாள் பெரும் கெஞ்சலுடன்.

மகளின் கெஞ்சலை கண்டதும், கணவனின் கண் மட்டுமல்லாது எல்லா உறுப்புகளும் செய்த ஜாடையை கிடைப்பில் போட்ட அன்பரசி "அச்சோ...என் செல்ல அப்புக்குட்டி! அம்பா எங்கேயும் போகலைடா... பாப்பாவோட தான் இருக்கப்போறேன்" என்ற வார்த்தையுடன், தன் முத்த மழையை பெண்ணின் மேல் வாரி இறைத்தாள்.

மெல்ல மெல்ல மலர்ந்த அன்பரசியின் மலர்ச்சியை சடாரென அதள பாதாளத்தில் தள்ளும் வகையில் அமைந்தது - நல்லானந்தின் சியாட்டல் பயணம்! நல்லானந்தின் குடும்பம் வான்கூவருக்குப் பயணமாவதற்கு சரியாக ஒரு வாரம் முன்னர், "அதி முக்கியமான வேலை... சியாட்டல் போகவேண்டும்" என்ற தகவலுடன் வீடு வந்து சேர்ந்த நல்லானந்த், "கவனமா இரு அன்பா! பாப்பாவைப் பார்த்துக்கோ...ரொம்ப செல்லம் கொடுக்காதே!" என மனைவியிடமும், "அப்புக்குட்டி, அப்பா ஆபீஸ் போறேன்! அம்பாகிட்ட சமத்தா இருக்கணும்...சரியா?" என்று மகளிடமும் கூறியவன், கிளம்பியே விட்டான்.

"தனியாகவா..." என அன்பரசி அதிர்ந்ததை அவன் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை! அவன் கண்டு கொள்வதற்கு அவனது கவனம் அங்கே இருக்க வேண்டுமே! அதை தான் உயிர் அதிகாரிகள் பலர் தங்களுக்கே தங்களுக்கென்று எடுத்துக் கொண்டு, கைப்பேசியிலேயே ஆணைகளை வாரி வழங்கிக் கொண்டிருந்தனரே!

நல்லானந்த் கிளம்பிச் சென்ற தினத்தின் இரவு நேரம் நெருங்கும்வரை, பெரிதாய் ஏதும் பிரச்னை இருக்கவில்லை! வேலைக்குச் சென்ற தந்தை வீடு திரும்பிவிடுவான் என்ற எண்ணத்தில் மலர், தன் அம்பாவிடம் உண்டு விளையாடிக் கொண்டிருக்க, "தாச்சு பண்ணலாம்" என்ற சொல்லோடு படுக்கையறையை நோக்கி அன்பரசி நகர்ந்ததுமே, "நல்லாப்பா... காணோம்! நல்லாப்பாகித தாச்சு பண்ணுதேன்...பீஸ் அம்பா!" என்றாள் மகள்.

"நல்லாப்பாக்கு நெறைய வேலையாம் குட்டிம்மா! நீ இப்போ தூங்குவியாம்... அப்பா வந்ததும் குட்டி பக்கத்தில வந்து தாச்சுப்பாங்களாம், ஓகேடா?" என அன்பரசி சமாதானப்படுத்த, "நல்லாப்பா வததும்....அப்தம் தாச்சு..." என்றாள் மகள்.

"அச்சச்சோ, நல்லாப்பா வீடு ப்ளாக்(இருட்டு) ஆனதும் தான் வருவாங்க! பாப்பாக்கு இருட்டுன்னா பயமில்லையா? பயம் போயிடுச்சா? குட்...குட்..வெரி குட்... அப்போ இருக்கலாமே!" என வேறுவகையில் முயன்றாள் அன்பரசி.

"ப்ளாக் அஆன தா வதுவாவா நல்லாப்பா? ம்ம்...ம்ம்...சரி அம்பா...தாச்சு பண்லாம்... ஹனுமான் அங்கிள் கதை சொல்தியா நீ?" என ஒரு வாராய் வழிக்கு வந்த மகளை மடியில் சாய்த்து, உறங்க வைத்தாள் அன்பரசி!

கதை சொல்ல ஆரம்பித்த ஐந்தே நிமிடத்தில் மதிமலர் உறங்கிவிட, மகளை அணைத்துக் கொண்டு அருகே படுத்த அன்பரசிக்கு அடுத்த நாள் காத்திருக்கும் சோதனைகளின் அளவு தெரிய வாய்ப்பிருக்கவில்லை!

அம்பாவின் சொல்படி, அருகே தந்தை படுத்திருப்பான் என்ற நம்பிக்கையில் கண் விழித்த மதிமலர், அருகே அவனைக் காணாததில் சிணுங்க ஆரம்பித்தாள். அப்போது ஆரம்பித்த சிணுங்கல், ஒரே மணி நேரத்தில் பெரும் அழுகையாய் உருமாறியது. அன்பரசி கூறிய எந்த சமாதானமும் மகளை சரி செய்யவே இல்லை என்பதால், தந்தையிடம் பேசினாலாவது மலர் அமைதியடைவாள் என்ற எண்ணத்தில் "நல்லாப்பாகிட்ட ஹலோ பேசுறீங்களா?" என்றாள் அன்பரசி.

மலரும் சரியெனவே, நல்லானந்தின் கைப்பேசி எண்களை அழுத்தியவளுக்குப் பெரும் ஏமாற்றமே மிச்சமானது. அவள் தொடர்ந்து செய்த பத்து அழைப்புகளும் நேராக வாய்ஸ் மெயிலுக்குச் செல்ல, அவள் அனுப்பிய "மலர் ரொம்பவே அழுகிறாள். அஞ்சே அஞ்சு நிமிஷம் அவகிட்ட பேசுங்க, ப்ளீஸ்" என்ற குறுந்தகவலுக்குப் பதிலே இல்லாமல் போனது.

தந்தை வீட்டிலில்லை என்பதிலேயே அழுது கரைந்து கொண்டிருந்த மதிமலர், அவன் தன்னிடம் பேசவுமில்லை என்றதும் ஓங்கி அலற ஆரம்பித்துவிட்டாள். என்னதான் தன்னிடம் ஒட்டி உறவாடினாலும், மகளின் மனதில் அவளது தந்தைக்குத் தான் முதலிடம் என்ற எண்ணத்தைவிட மதிமலரின் தற்போதைய அழுகை வேதனையை அளித்தது.

அதை நிறுத்தும் வகையறியாமல், "குருவி பார்க்கலாமா...", "க்ரையான் போடலாமா...", "டோரா பார்ப்போமா?", "கடைக்குப் போய் சாக்கி வாங்கலாமா?", "பாப்பாக்குப் பிடிச்ச பீன்ஸ் காய் பண்ணவா அம்பா...?", "அம்மாகிட்ட பேசுவோமா? அகி அண்ணா கிட்ட?" என விதவிதமாய் அவளிடம் சமாதானக் கொடியைப் பறக்கவிட்டாள் அன்பரசி.

ஆனால் மதிமலரோ "அப்பா...வேணும்...அப்ப்பா...அப்ப்பா... காணோம்..." என்றே அரற்றினாள்.

அரை மணி நேரப் போராட்டத்திற்குப் பின்னரும் கூட மதிமலரின் அழுகை நிற்காமலே இருக்க, ஓய்ந்து போய் அமர்ந்து விட்டாள் அன்பரசி! தான் சொல்வதைப் புரிந்து கொள்ளும் நிலையில் பிள்ளை இல்லை என்பது அவளுக்குப் புரிந்தபோதிலும், புரியாமல் அழும் அவளைக் காண சகிக்கவில்லை அன்பரசிக்கு.

பால்கனியில் போய் நின்றுகொண்டு "அப்பா...அப்பா..." என அழுத மகள், சற்று நேரத்தில் உள்ளே வந்து அன்பரசியின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள். தன்னுள் புதைந்திருக்கும் மகளின் பசியுணர்வை வார்த்தையின்றியே புரிந்து கொண்ட அன்பரசி, அவளது தலையை மெல்ல வருடியவாறே, "குட்டிக்குப் பிடிச்ச வடை செஞ்சு தரட்டா அம்பா! நேத்து சாப்பிட்டோமே... ஓட்டை வடை... பாப்பா விரல்ல மாட்டிப்பீங்களே... அந்த வடை... செய்யலாமா?" என்றாள்.

அத்தனை நேரம், தாய் கூறிய அனைத்தையும் மறுத்துக் கொண்டிருந்த மகளோ அதற்கு சரியென இணங்கினாள்.

அவளது "ம்ம்ம்...சயி" என்ற ஒற்றை வார்த்தையில் சிறிதாய் சந்தோசம் பூக்க, மின்னல் வேகத்தில் சமையலறையை அடைந்தவள், நேற்று செய்தது போக மீதமிருந்த வடை மாவை குளிர்சாதனப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வைத்தாள்.

வடை சட்டியை அடுப்பில் ஏற்றியவள், அதில் முதல் வடையைத் தட்டிப்போடும் நேரத்திற்குள், மதிமலர் மீண்டும் பால்கனியை அடைந்திருந்தாள். இங்கே வடை வெந்து கொண்டிருக்க, அங்கே தன் கண் பார்வையிலிருந்து லேசாய் மறைந்து கொண்டிருக்கும் பெண் மீதே கவனமிருந்தது அன்பரசிக்கு.

வடையைத் திருப்பிப் போடவேண்டும்...அதற்கு அரி கரண்டி வேண்டும்....எங்கே போட்டேன்... ஹய்யோ இந்த பெண் எங்கே போனாள்?.... அரி கரண்டி டிஷ் வாஷேரில் இருக்கோ... ஈரமாய் இருக்குமே...மதி குட்டி இங்க வா...என எண்ணங்கள் மாறி மாறி வந்து கொண்டிருக்க, அன்பரசியின் கண்ணிலிருந்து மறைந்திருந்த மதிமலர் "நல்லாப்பா...வா...வா... இது நா வதென்...பாப்பா வதென்" எனக் கத்தியதும், பதற்றம் வேகமாய் அதிகரிக்க, என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், கருகிக் கொண்டிருந்த வடையைக் கரண்டியால் அல்லாமல் கையால் திருப்பிவிட்டாள் அன்பரசி!

---

கொதிக்கும் எண்ணையில் கைகளை விட்டதும்தான், தான் செய்த மடத்தனம் புரிந்தது அன்பரசிக்கு. ஆனால் புத்திக்குப் புரிந்ததால் உடம்பில் காயம் ஏற்படாமல் இருக்குமா என்ன? காயத்தின் வீரியத்தைத் தாங்க முடியாத அன்பரசியோ "அஅம்மா...அஅம்மா" என கதறி துடித்தாள்.

நல்லானந்தின் காரைப் போலிருந்த வேறொரு காரைப் பார்த்து, அவன் தான் வந்துவிட்டான் என்றெண்ணி கத்திக்கொண்டிருந்த பிள்ளை, தாயின் அலறலில் பயந்து, "அம்ம்பா...அம்ம்பா" எனத் தானும் கத்திக் கொண்டு உள்ளே ஓடி வந்தது.

இடது கையில் வடையைத் தட்டிப் போட்டுவிட்டு, வலது கையைக் கரண்டியாக்கி வடையைத் திருப்பியிருந்தவளின் வலது கை விரல்கள் யாவும் எண்ணையில் குளுப்பாட்டப்பட்டு, தக தகவென நெருப்பு கங்குகளாய் எரிந்து கொண்டிருக்க, அதைக் கண்ட மலர் குட்டியோ "ஐயோ...அம்பா "ஆ-ஆஅ"வா" எனத் தானும் அழத்

தொடங்கினாள்.

கையிலிருந்த பெருத்த காயம் யோசிக்கும் திறனை மழுங்கடித்து இருந்தாலும், எண்ணையில் விழுந்த கைகளை சில்லென்று இருக்கும் தண்ணீரில் காட்டவேண்டும் என்ற அடிப்படை அறிவு தலை தூக்க, அதை குளிர் நீரில் காட்டியவளால் அதிக நேரம் நிற்க முடியவில்லை. அதற்கு மேல் என்ன செய்வது என்று தெரியாமல் நின்ற இடத்திலேயே சரிந்து அமர்ந்தவள், வலது மணிக்கட்டை இடது கையால் அழுத்தினாள்.

"அம்பா... அம்பா... ஆ-ஆ வந்துச்சா..." என மீண்டும் பதறிய சிறு பிஞ்சு, காயத்தின் வீரியம் புரியாமல் தன் பிஞ்சு விரல்களால் காயத்தைத் தொட்டாள். வெந்து போயிருந்த விரல்களில், பிஞ்சு கைகளின் அழுத்தம் பெரும் வலியை உண்டு பண்ண மீண்டும் அலறினாள் அன்பரசி.

இதுநாள் வரை அன்பே உருவாய் தன்னிடம் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த அம்பா, வலியில் துடிப்பதைக் கண்டதும் மலருக்கும் அழுகையாய் வந்தது. அவளது "ஆ"-வை போக்கும் வண்ணம், அதை தடவிக் கொடுக்கலாம் என்று பார்த்தால் அதற்கும் தாய் அழவே, சின்னவளுக்கு ஒன்றுமே புரியாமல் போனது.

புரியாத நிலையிலும் தாயின் கண்களில் வழிந்த நீரைக் கண்ட மதிமலர், தன் மலர் கரங்களால் தாயின் கன்னத்தைத் துடைத்து விட்டு, "அம்பா... மலர் பாப்பா முத்தா வச்சவா? ஆ சரியா போய்தும்..." எனக் கூறி, அவளது கன்னத்தில் மெல்ல முத்தமிட்டாள். கன்னத்தில் வைத்த முத்தம் தாய்க்கு இனித்தாலும், அதை அனுபவிக்க முடியாமல் கைகள் காந்தின. இனிப்பும் காந்தலும் உருங்கே தாக்கிய நிலையில் அன்பரசி அமர்ந்திருக்க, மதிமலரோ கன்னத்தில் வைத்த முத்தத்தை, கையிலும் வைத்தால் அம்பாவின் காயம் குணமாகுமோ என்றெண்ணி, தன் பூவிதழ்களை சட்டென அம்பரசியின் விரல்கள் மேல் பதித்துவிட்டாள்.

பெண்ணின் விரல்கள் நடத்திய மெல்லிய வருடலிலேயே வலி பொறுக்க முடியாமல் கதறிய அன்பரசி, இப்போது அழுத்தமாய் விழுந்த முத்தம் ஏற்படுத்திய வலியில் சுருண்டு போனாள்.

தன் முத்தம் தாயின் வலியைக் குறைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன் இருந்த மலருக்கு, தன் முத்தத்தால் தாய் துடிக்கிறாள் என்பது தெரிந்ததுமே அழுகை அழுகையாய் வந்தது.

மேலும் சற்று நேரம் வலது கை மணிக்கட்டை அழுத்திப் பிடித்திருந்த அன்பரசி, வலி தாங்க முடியாமல் அப்படியே சுருண்டு படுத்துக் கொண்டாள். "அம்பா...அம்பா" என அழுது கொண்டிருக்கும் மகளைத் தன்னுடன் சேர்த்து இழுத்துக் கொண்டவள், "அம்பாக்கு ஒன்னுமில்லைடா..." என்றாள் ஈன சுவரத்தில்.

"இல்ல...ஆ...பெரிய ஆ வந்திச்சு..." என அழுத மகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், தீ புண்ணின் எரிச்சல் வேறு நமநமவென்று அவளைப் படுத்தியது. சமயலறையில் சுருண்டு படுத்திருந்த அன்பரசியின் அருகே அமர்ந்திருந்த மலர், தாயின் கண்ணீரை பொறுக்க முடியாமல் அவளது கண்ணீரை துடைத்துவிட்டாள். அவள் துடைக்கத் துடைக்க கண்ணீர் பெருகிக் கொண்டே இருக்க, அந்த சிறு குழந்தைக்கு சட்டென தந்தையின் எண்ணம் வந்தது.

"அம்பா...நல்லாப்பாபா...ஹலோ பேசாமா" என்ற குழந்தை அந்த நேரத்திலும் தந்தையைத் தன் தேடுகிறாளோ என்ற எண்ணம் அன்பரசிக்கு வேதனையை உண்டுபண்ணினாலும், "சரிடா...போய் ஃபோன் எடுத்திட்டு வாங்க. அப்பாக்கிட்ட பேசலாம்" என்றாள் தாயாய்.

மகள் எடுத்துவந்த தொலைப்பேசி கருவியில் "ரி-டயல்" எண்ணை அமுக்கிவிட்டு அன்பரசி காத்திருக்க, மீண்டும் அது வாய்ஸ் மெயிலுக்கே சென்றது.

ஆனால் அதை அன்பரசி மகளிடம் பகிரும் முன்னர் தாயின் கையிலிருந்து தொலைப்பேசியை வாங்கிய மதிமலர், "நல்லாப்பா...அம்பாக்கு ஆ-ஆஅ வந்துச்சு... ", "பெயிய ஆ-ஆ", "அம்பா... அதுதா (அழுகிறாள்)", "பாப்பா முத்தா வச்சுவேன் (வைத்தேன்)...ஆனா அம்பா அப்தம் அதுதா (அழுகிறாள்)", "நல்லாப்பா சீக்கம் வா....", "அம்பா...முத்தா....", "அம்பா ஆஆ வந்துச்சு...ஆஆ...அதுதா" எனத் தனக்குத் தெரிந்த வகையில் பேச ஆரம்பிக்க, கைகளில் பட்டிருந்த காயத்திற்கு மாறாய் தாயின் உள்ளம் குளிர ஆரம்பித்தது.

குளிர்ந்த மனது சுற்றுபுறத்தை நினைவு படுத்த, பல்லைக் கடித்துக் கொண்டு வலியைப் பொறுத்த அன்பரசி மெல்ல எழுந்து, இடது கையால் எரிந்து கொண்டிருந்த அடுப்பை

அணைத்தாள். அதன் பின்னர், அதே கையால் அழுது கொண்டிருந்த பெண்ணைப் பிடித்துக் கொண்டு படுக்கையறை நோக்கி நடந்தவளிடம் பேசாமல், இன்னமும் அந்த பக்கம் வந்திராத தந்தையிடம் தாயின் உடல் நலக் குறைவைத் தன் மழலை அழுகையால் எடுத்துரைத்துக் கொண்டிருந்தாள் மதிமலர்.

பிள்ளை அழுது தவிப்பதைக் காண சகிக்காமல் "மலர் குட்டி...அப்பா வேலையா இருப்பாங்கடா! வேலை முடிஞ்சதும் அவங்களே கூப்பிடுவாங்க!" எனக் கூறி, தொலைப்பேசியை பெண்ணிடமிருந்து வாங்கிய அன்பரசி அதை அணைத்துப் போட்டாள். அங்கே போட்டாள் என்பது தான் கேள்விக்குரிய விஷயம்!

ஒரு கையின் உதவியுடனே, டிரெஸ்ஸிங் டேபிள் அறைகள் ஒன்றில் தான் அடுக்கி வைத்திருந்த மருந்துகளைத் துழாவி, பர்னால் மருந்தை எடுத்தாள். ஆனால் அதிலிருந்து ஒரு சொட்டு மருந்தைக் கூட புண்பட்ட கையின் மீது அவளால் போடமுடியவில்லை என்பது பரிதாபத்திற்குரிய விஷயமானது. என்னதான் குளிர் நீரில் காட்டியிருந்தாலும், கொதிக்கும் எண்ணையில் மூழ்கி வெளிவந்த கைகள், வடையை விட அதிகமாய் வெந்து, தோல் வழண்டு, நீர் கொப்பளங்கள் உருவாகி, பார்க்கவே பயங்கரமாய் இருந்தது. அப்படியிருக்கும் புண்ணில் பலமான மூச்சுகாற்று பட்டாலே, உயிர் வரை வலித்தது என்றால் அதில் கைகளின் ஸ்பரிசம் பட்டப்போது உயிர் போய் வந்தது.

காயத்தைக் குணமாக்க மருந்திடுவதை விட, அதை அப்படியே விட்டால் மரண வலி இருக்காதே என்ற எண்ணம், முக்கால்வாசி நோயாளிகளைப் போல் அன்பரசிக்கும் தோன்றவே, அப்படியே படுக்கையில் சாய்ந்தாள்.

அதுவரை தாய் செய்யும் அனைத்து வேலைகளையும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த மதிமலரும், தாயின் அருகே படுத்துக் கொண்டாள்.

"அம்பா... ஆ வைக்குதா (வலிக்குதா?)" எனப் பரிதாபக் குரலில் மகள் வினவ, "கொஞ்சமா குட்டிமா..." என்ற அன்பரசி பிள்ளையைத் தன்னிடம் இழுத்துக் கொண்டு உறங்க முற்பட்டாள்.

உறங்க முயன்றாளே தவிர, கைகளிலிருந்த காயம் கொடுத்த நமச்சல் அவளை ஒரு நிமிடம் கூட உறங்கவிடவில்லை என்பது தான் நிஜம். மேலும் அரை மணி நேரம் இப்படியே கழிய, அன்பரசியின் வலி அதிகமானதே ஒழிய குறையவே இல்லை.

வலியையும் மீறி கண்கள் தாமாக மூடிக் கொள்ள, மருந்து அலமாரிக்குள் பர்னால் மருந்துக்குப் பதிலாக போடப்பட்ட தொலைப்பேசி கருவி விடாமல் கத்தியது அன்பரசிக்குக் கேட்க வாய்ப்பு மிக கம்மியாய் இருந்தது.

குறையாத வலி குறைவில்லா கண்ணீரை உண்டுபண்ண, அன்பரசியின் தைரிய முயற்சிகள் அனைத்தையும் மீறி அவள் கன்னத்தில் ஆறாய் ஓடியது கண்ணீர். தாயின் மாரில் ஒண்டிக் கொண்டு, அவளது வேதனையில் தானும் சுருண்டிருந்த மதிமலரின் நெற்றியில் கண்ணீர் துளி விழுந்ததுமே, தாயின் நிமிர்ந்து பார்த்தாள் அன்பரசியின் தாயுமானவள்.

தாயின் மூடிய இமைகளின் வழியே கண்ணீர் வடிவதைக் கண்டதும், மெல்ல அதைத் துடைத்துவிட்டவள், எழுந்து அமர்ந்து கொண்டு "அம்பா... அவாதே (அழாதே!)... நா உக்கு ஐஸ்கீம் வாங்கித் ததவா? சாக்கி? நல்லாப்பா வந்தா... எல்லா வாங்காம் (வாங்கலாம்) சயியா? அவாதே அம்பா...பீஸ்" என்றாள் சமாதானமாய்.

காலையில் தாய் தன்னிடம் சொன்ன சமாதானங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாய் கூறிக் கொண்டே வந்த மதிமலர், எதற்குமே அன்பரசியின் கண்ணீர் நிற்காமல் இருப்பதைக் கண்டு, தன் நல்லாப்பா சில தினங்கள் முன்னர் சொன்னதை நிறைவேற்ற எத்தனித்தாள்.

---

இரண்டு தினங்களுக்கு முன்னர்....

நல்லானந்த் வேலையிலிருந்து ஆறு மணி அளவில் வீடு திரும்பியபோது, மதிமலர் டூத்பேஸ்ட்டால் படம் வரைந்த தினத்தைப் போல் அன்பரசி வீட்டைத் துடைத்துக் கொண்டிருந்தாள். மதிமலரோ, முகத்தை எலிக்குஞ்சு போல் சுருக்கிக் கொண்டு சோபாவில் கை கட்டி, வாய் பொத்தி அமர்ந்திருந்தாள்.

தன்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் முகத்தைத் தாழ்த்திக் கொண்ட பிள்ளையை யோசனையாய் நோக்கியவன் "என்னாச்சு அன்பா?" என்றான் மெல்ல.

அவன் வீட்டிற்குள் நுழைந்ததுமே அந்த கேள்வி வரும் என எதிர்பார்த்திருந்த அன்பரசி, மடமடவென ஒப்பிக்க ஆரம்பித்தாள்.

"இன்னைக்கு இட்லிக்கு அறைக்கலாம்ன்னு அரிசியும் பருப்பும் ஊற வச்சிருந்தேன் நல்லாப்பா..." என அன்பரசி ஆரம்பித்ததுமே, "நான் என்ன கேட்கிறேன்...நீ என்ன சொல்றே?" என்றான் நல்லானந்த், சிறு எரிச்சலுடன்.

"நீங்க கேட்டதுக்குத் தான் பதில் சொல்றேன். நான் சொல்லி முடிச்சதும் பேசுங்க" என அவளும் அவனது கோபத்தைப் பின்பற்றவே, அங்கே சிறு மணித் துளிகள் அமைதி நிலவியது.

மனைவியின் முகத்தில் கோபத்தை விட சோர்வு அதிகமாய் தெரிய, "நான் துடைக்கிறேன். நீ கொஞ்ச நேரம் உட்காரு" என்றவன் அவளிடமிருந்து வலுக்கட்டாயமாய் மாப்பை வாங்கிக் கொண்டான். அங்கங்கே அரசியும் பருப்பும் தெளித்திருப்பதைக் கண்டவன் "ஹ்ம்ம் சொல்லு" என மனைவியைத் தூண்டினான்.

மலர் அமர்ந்திருந்த சோபாவிற்கு எதிர் சோபாவில் போய் அமர்ந்த அன்பரசி, "ம்ம்... மதியம் சாப்பிட்டதும் பாப்பா தூக்கம் புரியாம அழுதாளா...சரி...அவளைத் தூங்கப் பண்ணிட்டு அப்புறம் வந்து அறைக்கலாம்ன்னு நினைச்சிட்டு ரெண்டு பெரும் படுக்கப் போனோம். அவளைத் தூங்க வைக்கிறேன்னு நானுமே கொஞ்ச நேரம் கண் அசந்துட்டேன். கொஞ்ச நேரம் கழிச்சு, "அம்பா... காலியா போச்சு... அச்சி தா... பாப்பாக்கு வேணும்"ன்னு பாப்பா ஒரே கத்து. முழிச்சு வெளிய வந்து பார்த்தா... ஊற வச்சிருந்த அரிசி, பருப்பு எல்லாத்தையும் வீடு பூரா இறைச்சு வச்சிருக்கா... பாத்திரம் காலியானதும் என்னை எழுப்பியிருக்கு கழுதை" என ஒரே மூச்சில் அவள் சொல்லி முடிக்க, பிள்ளை தந்தையைப் பரிதாபமாய் பார்த்தது.

மனைவியின் முகத்தில் கோபமில்லை என்றாலும் அங்கே சிறு எரிச்சலிருந்ததை அவனால் புரிந்து கொள்ள முடிந்தாலும், தன்னிடமிருந்து அடி விழுமே என்ற பயத்தில் பிள்ளை இருப்பது அதை விட அதிவேகமாய் புரிய, மனைவியின் எரிச்சல் பின்னுக்குத் தள்ளப்பட்டு பிள்ளையின் பயம் முன்னுக்கு வந்தது.

பிள்ளை செய்தது தப்பு தான் என்றாலும், முன் ஒரு முறை அவளை அடித்ததும், அதன் பின்னர் பிள்ளை இரு தினங்கள் தன்னிடம் பேசமாலிருந்ததும், மனைவி அவளைக் கொஞ்சி இளைந்ததும் நினைவு வர, இப்போது மனைவியும் கோபமாய் இருக்கும் போது தானும் கோபம் காட்டினால் பிள்ளை தாங்கமாட்டாள் என்று தோன்றிவிடவே,

Property of BH

மனைவியை ஆதரித்து ஏதும் பேசாமலிருந்தான் நல்லானந்த்.

"இனிமேல் இப்படி பண்ணக் கூடாதுன்னு சொல்லுங்க நல்லாப்பா! எவ்வளவு அரிசி தெரியுமா? வீடு முழுசும்...பால்கனியைக் கூட விட்டுவைக்காம இறைச்சிருக்கா" என்ற மனைவியிடம்,

"என்னை என்ன லூசுன்னு நினைச்சியா? நீ சொல்றதைக் கேட்டு அவளை நான் அடிச்சேன்னு வை... அவ திருப்பிக்கிட்டு அடிக்கிறாளோ இல்லையோ...நீ என்னை அடி பின்னிட மாட்டே? எதுக்கு வம்பு? நான் அவளை அடிக்க மாட்டேன்பா" என்றான் நல்லானந்த், சிரிப்புடன்.

அவனது சிரிப்பில் எரிச்சல் அதிகமாக "உங்களை யாரும் அடிக்கச் சொல்லலை. இனிமேல் இப்படி பண்ணக் கூடாதுன்னு வாயால சொல்லுங்க" எனக் கூறிப் பல்லைக் கடித்தாள் அன்பரசி.

"ம்ஹூம் நான் மாட்டேன்ப்பா! நீ வேணும்னா சொல்லு" என்றான் நல்லானந்த், அதே சிரிப்புடன். அந்த சிரிப்பால் மனைவியின் முறைப்பிற்கு ஆளான போதும், "பேஸ்ட்ல கார்டூன் போட்டப்ப வராத கோபம்...இப்போ அரிசியை இறைச்சதும் வருதே! அதன் ரகசியம் என்னவோ?" என்றான் நல்லானந்த், குறும்பாக.

ஆனால் அதற்கும் சரியான பதில் வைத்திருக்கிறாள் மனைவி என்பதை "பாப்பாக்கு வரையிறதில் ஆர்வம் அதிகம். வரையிறதுக்கு கலர் பென்சில் இல்லாம பேஸ்ட்ல போட்டிருக்கா. ஒழுங்கான பொருள் வாங்கிக் கொடுத்திருந்தா அந்த மாதிரி பண்ணியிருக்கவே மாட்டா. சோ, அதில கோபப்பட ஒண்ணுமே இல்லை. ஆனா, இப்போ செஞ்சு வச்சிருக்கிறது அப்பட்டமான குறும்பு. கண்டிங்க" என்றாள் அன்பரசி, தீர்மானமாய்.

"ம்ஹூம். நீ என்ன சொன்னாலும்... நான் மாட்டேன்ப்பா!" என்றவன், தன் துடைக்கும் வேலையும் முடிந்திருக்கவே பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியே சென்றான்.

பக்கத்திலிருக்கும் பார்க்கிற்கு கூட்டிச் சென்றவனின் கழுத்தைக் கட்டிக் கொண்ட மதிமலரிடம், மெல்ல மெல்ல பேச்சுக் கொடுத்தான் தந்தை.

அவன் கேட்ட கேள்விக்கெல்லாம் ஒழுங்காய் பதில் சொன்ன பிள்ளை, "நல்லாப்பா... அம்பா பாப்பாத்த பேச்சாவே இல்ல... பாப்பா பாவம்" என்றது. அது தான் சமயம் என்றெண்ணியது போல் "அம்பாவை பாப்பாகிட்ட பேசவைக்கிறதுக்கு, நல்லாப்பா ஒரு ஐடியா தரவா? நல்ல ஐடியா" எனத் தந்தை போட்டத் தூண்டிலில் சிறு பிள்ளை சட்டென விழ, "பாப்பா... ஒரே ஒரு தடவை...அம்பாவை அம்மா சொன்னா...அம்பாவோட கோபமெல்லாம் போயே போய்டும்" என்றான் அவன், கண்கள் இரண்டையும் பலமாய் உருட்டி.

"ஒ... அம்மா சொன்னா அம்பா பேச்சுவாவா?"

"ஆமா... அம்மா சொன்னா... அம்பாவோட கோபம் காணாம போய்டும். அப்புறம் அம்பா பாப்பா கூட பேசுவா! சாக்கி வாங்கித் தருவா! பாப்பாவை கொஞ்சிட்டே இருப்பா"

" ம்ம்... ஆனா.. அம்மா பாத்தீ வீத்தில இக்கா... இது அம்பா... அம்மா இல்லையே... அம்மா அகி அண்ணா கூத இக்கா!" என்றது பிள்ளை பெரும் குழப்பத்துடன்.

குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது என்பது இந்த விஷயத்தில் சரிவராது என்றெண்ணிய நல்லானந்த், அதன் பிறகு அதை அதிகமாய் வலியுறுத்தாமல் அப்படியே விட்ட கையோடு, பிள்ளையை ஊஞ்சலுக்கு அழைத்துச் சென்று அதில் ஆடவைத்து, தான் கூறியதை தற்காலிகமாய் மறக்க வைத்தான்.

பிள்ளையும் அதை அப்போதைக்கு மறந்திருந்தபடியாலும், அவர்கள் வீடு வந்த போது அன்பரசி சமநிலைக்கு வந்திருந்தமையாலும் அந்தப் பேச்சு மீண்டும் எடுக்கப்படவே இல்லை.

**************

இரு தினங்கள் முன்னர் தந்தை கூறிய விஷயத்தைத் தற்காலிகமாய் மறந்திருந்த மதிமலருக்குத் தாயின் மௌனம் அதை மீண்டும் நினைவுபடுத்த, தந்தை கூறியது போல் செய்ய முடிவு செய்தது அந்த சிறு மனது.

அதன் படி "அம்மா" என மெல்ல அழைத்து, அன்பரசியின் கன்னத்தில் முத்தம்மிட்டவள், "பாப்பா... அம்மா சொல்லித்தேன்... பாப்பா கூத பேசு அம்பா..." என்றாள்

பிள்ளையின் "அம்மா" என்ற அழைப்பில் அன்பரசியின் உறக்கம் சட்டென கலைய, இமைகள் விலுக்கென திறந்து கொண்டன. வலியால் நிறைந்த கண்ணீர் இப்போது பாசத்தால் நிறைய, அவளது வார்த்தைகள் செவியில் தேனை வார்த்தாலும், அதை நம்ப முடியாமல் "என்ன சொன்னே கண்ணம்மா?" என்றாள் பாசமும், ஆர்வமும் சரி பாதியாய் கலந்திருக்க.

"அம்மா...சொன்னேன்"

"அம்மாவா?"

"ஆமா...அம்ம்மா....அம்ம்மா... என் கூத பேசுதியா? பீஸ்...பீஸ்"

அவளது அழுத்தமான அழைப்பில் நெஞ்சம் கனிய, "ரொம்ப தேங்க்ஸ்டா... தேங்க்ஸ்டா குட்டி... தேங்க்ஸ்...தேங்க்ஸ்" என வார்த்தைகள் திக்கித் திக்கி வெளியே வந்து விழுந்ததோடு அல்லாமல், தன் கன்னத்தை வருடிக் கொண்டிருந்த பிள்ளையின் கழுத்தை தன்னிடம் இழுத்து, முத்தமழை பொழிந்தாள்.

"ஹய்யா... அம்பா பேசித்தா... ஜாலி...ஜாலி!! அம்பா... ஆ...சயியா போச்சா?" என மகள் குதூகலிக்க, "சரியா போச்சுடா...நீ அம்மா கூப்பிட்டதில  சரியாவே போச்சு..." என்றாள் அன்பரசி சந்தோஷமாக.

"பாப்பா...இம்மே அம்மா கூப்தேன்... அவாதே! பீஸ் அவாதே!!" என்றாள் மகளும்.

இருவரும் பாசத்தில் கரைந்து கொண்டிருந்த நேரம், கதவு வேகமாய் திறக்க, அதை கவனிக்கும் மனநிலையில் இருக்கவில்லை தாயும் சேயும்.

"அன்பா...அன்பா...என்னாச்சுடி...எங்க இருக்க?" எனப் பதட்டத்தோடு உள்ளே வந்தவன், நல்லானந்தே தான்!

அவன் அழைத்தது காதில் விழுந்ததால் அல்லவா பதில் உரைப்பதைப் பார்க்க முடியும்? மகளின் பாசத்தில் உருகிக் கொண்டிருந்த அன்பரசிக்குத் தான் கணவனின் குரல் கேட்கவே இல்லையே!

கையிலிருந்த பெட்டியையும், லேப்டாப் பாக்கையும் ஷூ வைக்கும் இடத்திலேயே போட்டவன், நெஞ்சம் பரபரக்க படுக்கையறைக்குள் நுழைந்தான் அங்கே அம்மாவும் பெண்ணும் கொஞ்சிக் கொண்டிருந்தனர். படுக்கையறை வாயிலிலிருந்து பார்க்கும் போது, அன்பரசியின் காயம் தெரியாமல் போகவே, "என்ன பண்ணிட்டு இருக்கீங்க ரெண்டு பேரும்? ஃபோனை என்ன பண்ணி வச்சிருக்கீங்க? எத்தனை தடவை கால் பண்றது? பாப்பா வேற வாய்ஸ் மெயில்ல அழுது வச்சிருக்கா... நீ வேற ஆயிரம் தடவை ஃபோன் பண்ணியிருக்கன்னு பதறி அடிச்சு ஓடிவந்தா...ரெண்டு பேரும் சிரிச்சிட்டு இருக்கீங்க" என ஒரு மணி நேர அலைப்புருதலை அவன் கோபமாய் கொட்ட, கணவனின் குரல் கேட்டுத் திரும்பிய அன்பரசி "நல்லாப்பா... உங்களுக்கு ஒன்னு தெரியுமா? பாப்பா என்னை அம்மான்னு கூப்பிட்டா... மலர் குட்டி, அப்பாக்கு ஒரு டைம் சொல்லிக் காண்பிங்கடா" என்று தனது சந்தோஷத்தை மழையாய் கொட்டினாள்.

அதை கேட்டிருந்த நல்லானந்திற்கு மகிழ்ச்சியே என்றபோதும், அவனால் சட்டென கோபத்தைக் கை விடமுடியவில்லை. முக்கிய மீட்டிங் காரணமாக செல்ஃபோனை அணைத்து வைத்திருந்தவன், மீட்டிங் முடிந்து, production issue வின் மூலக் காரணம் தங்கள் செய்த வேலையல்ல என்பதை மற்றவர்களுக்கு ஆதரங்களுடன் காட்டியபின்னரே கைப்பேசியை உயிர்ப்பித்தான்.

வந்திருந்த வாய்ஸ்மெயில்களை ஒவ்வொன்றாய் பார்த்துக்கொண்டே வந்தவன், அதில் ஒன்றில் பிள்ளையின் அழு குரலைக் கேட்டதும் உள்ளம் பதற விமானம் ஏறி கனடா பறந்துவந்தான். (வந்த வேலை முடிந்துவிட்டதால் அவனது அலுவலகமே அவனது கோரிக்கையின் பேரில் அடுத்த விமானத்திற்கு பயணச் சீட்டு வாங்கிக் கொடுத்து, அனுப்பி வைத்தது).

ஆனால், வீட்டிற்கு வந்தால் மனைவியும் மகளும் வேண்டுமென்றே அவனை வரவைத்தது போல் தோன்றவே கோபம் தலைதூக்க, அவர்களைத் திட்ட வாய் எடுக்கும் போது, "நல்லாப்பா...அம்மாக்கு ஆ... பாப்பா அம்மா கூப்தேன்...ஆ சயியா போச்சு" என்றாள் மலர் சந்தோஷத்துடன்.

அவள் கூறியதில், "ஆ" என்ற சொல் மீண்டும் உறுத்த, "அன்பா...என்னாச்சு?" என்றவனின் கண்களில் படுக்கையை விட்டு எழுந்து கொண்டிருந்த அன்பரசியின் விரல்கள் பட, உறைந்து போனான் அவளது அன்பு கணவன்.

"என்னடி... விரல் இப்படி வெந்து போயிருக்கு...பாப்பா ஏதாவது பண்ணாளா?" என அவன் பதறி துடிக்க, "அது ஒண்ணுமில்லை நல்லாப்பா... வடையைக் கையால் திருப்பிட்டேன்... அதை விடுங்க, பாப்பா சொன்னதை கேட்டீங்களா...அம்மான்னு" என சாவதானமாய் பேசினாள் அன்பரசி.

"என்னது... வடையைக் கையால திருப்பினியா? அறிவில்லை உனக்கு?" என ஒரு நிமிடம் அதிர்ந்தவன், கொப்பளங்கள் கீரடமாய் வீற்றிருந்த அவளது வெந்த விரல்கள் அவளது வலியைப் படம்பிடித்துக் காட்ட, "எழுந்திரு... டாக்டர்கிட்ட போகலாம்!" என்றதோடு பேச்சை முடித்து, அன்பரசியை மருத்துவரிடம் கூட்டிச் சென்றான்.

மருத்துவரிடம் காட்டிவிட்டு வெளியே வரும்வரை நல்லானந்தின் நொந்த மனது மனைவியை வருடிக் கொண்டே இருந்தது. கையிலிருந்த மகளின் மழலை மொழியால் மனைவியின் வலியின் வீரியத்தைக் கண்டறிந்தவனின் மனம், மேலும் உருகிக் கரைந்தது. அதன் பின்னர், கணவனின் கவனிப்பும், மகளின் பாசமும் அன்பரசியின் வலியை மறக்க வைத்து, மறையவும் வைத்தது.

ஏழு நாட்களுக்குப் பின்னர்....

விமான நிலையத்தில் வந்திறங்கிய தேவநந்தன் குடும்பத்தை வரவேற்க, நல்லானந்தின் குடும்பம் காத்திருந்தது. அங்கிருந்த கடைகளை தாயும் மகளும் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்க, நல்லாவோ நுழைவு வாயிலிலேயே கண் பதித்துக் காத்திருந்தான்.

திலோ-தேவ்வை பின்னே விட்டு, முன்னே ஓடி வந்த அகிலன் "நல்லாப்பா" என்ற கூவலுடன் நல்லானந்திடம் தாவியதும், அன்பரசியும் மதிமலரும் தங்களது வேடிக்கையை அந்தரத்தில் விட்டுவிட்டு வேகமாய் வந்துசேர்ந்தனர்.

அகிலனின் பின்னே வந்த திலோவிடம் தாவிய மதிமலரோ "அம்மா...அம்மா" என முத்தமழை பொழிந்தாள். பெண்ணைப் பிரிந்திருந்த அந்தத் தாயுள்ளமும் "அப்புக்குட்டி! என் செல்ல அப்புக்குட்டி!" எனக் கண்ணீருடன் சேர்ந்து, முத்தத்தையும் மாரியாய் பொழிந்தாள். அதன் பின்னர் "டாடி", "அகி அண்ணா" என இருவருடமும் செல்லம் கொஞ்சிவிட்டு, மீண்டும் தாயிடமே சரண்புகுந்தாள் சிறியவள்.

ஐந்து நிமிடம் நடைபெற்ற பாசமழையில் அனைவருமே நனைந்திருக்க, உதட்டில் புன்முறுவலுடன் நின்றிருந்த அன்பரசியின் புறம் திரும்பிய மதிமலர், "அம்பா... அம்மா வந்தாச்சுது" என்றாள் முகம் நிறைந்த சிரிப்புடன்.

"ஆமாடா கண்ணம்மா! என் செல்லக் குட்டியோட அம்மா வந்தாச்சு! பாப்பாக்கு ஒரே ஜாலி தான்" என்றாள் அன்பரசியும் அதே சந்தோஷத்துடன். அதன் பின்னர் அன்பரசியின் உடல்நிலை பற்றிய விசாரிப்பும், கண்டிப்புமாய் சில நிமிடங்கள் சென்றன.

அம்பாவிடம் பேசிவிட்டு அம்மாவிடம் திரும்பியவள், "அம்மா... உக்குத் தெயும்மா? (தெரியுமா?) எக்கு டூ அம்மா... நீ அம்மா...அது அம்பா..." என மகள் தன் இரு தாய்களையும் மாறி மாறி பார்க்க,

"அம்பாவையும் அம்மா கூப்பிடுடா" என்றாள் திலோ.

"அம்பா தா...அம்பா சொல்லச் சொன்னா..."

"ஆமா அக்கா, ரெண்டு பேரையும் அம்மான்னு சொன்னா அவளுக்கு குழப்பமா இருக்குமில்லையா... ரெண்டு பேரையுமே அவ அம்மாவா நினைக்கும்போது, கூப்பிடற விதத்தில என்ன இருக்கு?" என்றாள் அன்பரசி, கசடுகள் எதுமே இல்லாத தூய மனதுடன்.

எதுவும் பேசத் தோணாமல், கண்களில் கண்ணீர் நிறைய கன்னத்தில் தட்டிய திலோ, தேவ்வின் தோள் மீது சாய்ந்து கொண்டாள்.

நல்லானந்தின் தோளில் அமர்ந்திருந்த அகிலன், "அன்பு சித்தி..." என ஆரம்பித்ததும், "அகி அண்ணா...நீயும் அம்பா சொல்லு..." என ஆணையிட்டாள் அவனது தங்கை.

"ஆமாடா கண்ணா! அம்பான்னு கூப்பிடு!" என்ற அன்பரசியின் கன்னத்தில் முத்தம் வைத்த அகிலனோ "ம்ஹூம்... அம்மா "சித்தி" தான் சொன்னாங்க" எனக் கூற,

"டேய்...நீ வேற ஆரம்பிக்காத! இப்போ தான் எதிர்கட்சியிலிருந்து கூட்டணி கட்சியா அட்லீஸ்ட்... மாறியிருக்கேன்! நீ வேற "அம்பா"ன்னு கூப்பிடமாட்டேன்னு ஆரம்பிச்சு, திரும்ப எதிர்கட்சியிலேயே தள்ளிவிட்டுடுவ போலிருக்கே!" என நல்லானந்த் பயந்தவன் போல் நடிக்க, அங்கே பெரும் சிரிப்பலை எழுந்து அடங்கியது.

சிறு மன உறுத்தல் கூட இல்லாமல், தன்னிடமிருந்த ஆட்சியை எதிர்க்கட்சியிடம் விட்டுக் கொடுத்த ஆளுங்கட்சியை கைவிடாமல், தனது கூட்டணியில் சேர்த்துக் கொண்ட எதிர்க்கட்சி, பெரும் வல்லரசை ஏற்படுத்தி அரசாண்டு கொண்டிருப்பதைக் காண கண் கோடி வேண்டாமோ? கோடி கண்கள் நம்மிடம் இல்லாததால் பார்த்தது போதுமென முடிவு செய்து நாம் விடைபெறுவோம்!

*எதிர்க்கட்சி ஆட்சியைப் பிடித்தது - ஆளுங்கட்சியின் கூட்டணியால்!!*

## Epilogue

"வணக்கம்! வாங்க, வாங்க!"

"இப்படி இருக்கீங்க ஆன்ட்டி? வீட்டில பசங்கெல்லாம் நல்லா இருக்காங்களா?"

"பயப்படாம வாங்க, இது பெத்தபெருமாள் - வளர்மதியோட அறுபதாம் கல்யாண விழா தான்!"

"இந்தாங்க சந்தனம்! இதில கல்கண்டு இருக்குப் பாருங்க...எடுத்துக்கோங்க. ரோஸ் கூட இருக்கு...உங்களுக்குப் பிடிச்ச கலரை எடுத்துக்கோங்க!"

"என்னடா ஒரு சின்னப் பொண்ணு மட்டும் நின்னு வரவேற்குதேன்னு தயங்காதீங்க! எங்க அக்கா, அண்ணா, அப்புறம் என்னோட தம்பி எல்லாரும் உள்ளே ரெடியாகிட்டு இருக்காங்க. சீக்கிரம் வந்துடுவாங்க!"

"ஏன் ஆன்ட்டி இப்படி முழிக்கிறீங்க? என்னை யாருன்னு தெரியலையா? நான் தான் பூங்குழலி!"

"ஹ்ம்ம்... இருங்க இருங்க. எங்க அப்பா பேர் - தேவநந்தன். அம்மா பேர் - திலோத்தமை! இப்போ என்னைத் தெரியுதா?"

"சரி...சரி உள்ளே வாங்க! இந்த இடத்தில உட்கார்ந்திங்கன்னா... கல்யாணம் சூப்பர்ரா தெரியும்"

"ஹான்...நான் என்ன படிக்கிறேன்னா கேட்டீங்க? நான் 3rd standard படிக்கிறேன். இங்க தான் "The School"-ல. எங்க அம்மாவும் அங்க தான் வேலை செய்றாங்க... உங்களுக்குத் தெரியும் தானே? நாங்க எல்லாருமே அங்கே தான் படிக்கிறோம்"

"ஹான்...அதோ போறான் பாருங்க...குட்டி வேஷ்டி கட்டிக்கிட்டு... அவன் தான் என்னோட தம்பி - ஆதித்தன். செல்லமா 'ஆதி'!! செம வாலு! சத்யம் ஆன்ட்டி...என்னை விட செம செம செமமமமமமமமம வாலு! நல்லாப்பாக்கு மட்டும் தான் பயம்! நல்லாப்பா தெரியும் தானே?"

"ஹே குயயி... குண்து குயயி!" - இது பூங்குழலி உங்களுக்கு அறிமுகம் செய்த ஆதித்தனின் குரல்.

"டேய் என்ன கொழுப்பா? என்னை குண்டு குழலி சொன்னா அடி பின்னிடுவேன். அம்மா பாருங்கம்மா... என்னை குண்டு குழலி சொல்றான்" என்ற பூங்குழலி, உங்களை விட்டுச் சற்றே நகர்ந்து அவளது தாயைத் தேடிச் செல்லும் வேளையில் நாம் சற்று பின்னோக்கிச் செல்லலாம்.

தேவநந்தனின் குடும்பம் கனடாவிலிருந்து கிளம்பும் போது அவர்களுடன் தாய் நாடு திரும்பிய நல்லானந்தின் குடும்பம் - இன்றுவரை இந்தியாவிலேயே தங்களது ஜாகையை வைத்துக் கொண்டுள்ளது.

ஒரு கூட்டுக் குருவிகளாய் சகமித்து வாழ்ந்தவர்களின் அழகிய வாழ்வில் - மேலும் வண்ணம் சேர்க்க, மதிமலரின் இரண்டாவது பிறந்தநாளின் போது அன்பரசி கருவுற்றாள்.

அன்புக்கரசியாய் விழங்கிய இளையவளின் நல்லாட்சியில் அந்த வீடே சுபிட்சமாய் செழித்திருக்க, அவள் இருயிராய் இருந்த வேளையாவும் ஆட்சி செய்யும் சிரமம் கூட அவளுக்கிருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், தங்களது குறும்புகளை எல்லாம் குறைத்துக் கொண்டதோடு மட்டுமல்லாமல் அவளை உள்ளங்கையில் தாங்கினர் - அவளது ஆட்சியில் கட்டுண்டிருந்த வீட்டு மக்கள்.

அவளது பேறு காலம் வரை அவளைத் தாங்கிய குடும்பத்திற்கு, முக்கியமாய் அவளது உற்ற தோழியும், சகோதரியுமான திலோத்தமைக்கு அன்பரசி கொடுத்த பரிசு

எல்லாரையும் மலைத்து நிற்கச் செய்தது, செய்கிறது, செய்யும்!

அப்படியென்ன பரிசா? தன் மணி வயிற்றை சிப்பியாக்கி, ஒற்றை வெண்முத்தென அவள் போற்றி பேணிய பெண் முத்து தான் அப்பரிசு!!

அதிர்ந்து மறுத்த திலோவிடம், "திலோக்கா, நான் கேட்காமலேயே என்னோட மனசைப் புரிஞ்சுகிட்டு மலரை என்கிட்டே கொடுத்தீங்க! அந்த நல்ல மனசுக்கு, இந்த பரிசை விட வேற எதுவுமே ஈடாகாதுக்கா! என்னைக்கு என்கையில மதி குட்டியைத் தாரை வார்த்துக் கொடுத்தீங்களோ, அந்த நிமிஷமே எனக்குப் பிரிக்கிற முதல் குழந்தை பெண்ணா தான் இருக்கணும், அதை உங்களுக்கு மனசார கொடுத்துடணும்ன்னு முடிவு பண்ணிட்டேன்." என்றாள் அன்பரசி, மனதில் சிறு சலனம் கூட இல்லாமல்!!

"ஹே நல்லா, நீயாவது சொல்லுடா" என தேவன், தம்பியைத் துணைக்கு அழைக்க,

"நீ வேற ஏன்டா? ஆட்சியே என்கிட்டே இல்லையாம்...இவன் பில் ரிலீஸ் பண்ணச் சொல்றான். போடா...போடா! நானே செம சந்தோஷத்தில இருக்கேன்" என்றான் நல்லானந்த் குறும்பும் சிரிப்பும் சமபங்காய் கலந்திருக்க.

இரண்டே நிமிடத்தில் குறும்பைக் கைவிட்டு, பொறுப்பைக் கைப்பிடித்தவன் (அன்பரசியின் முறைப்பினால் வந்த மாற்றம் இது) "நானும் அன்பரசியும் கலந்து பேசி, நிறைஞ்ச மனசோட எடுத்த முடிவு இது! திலோவோட ஆசையை பாசத்தை நிறைவேத்தனும்ன்னு நாங்க நினைச்சதில் என்ன தப்பிருக்கு?" என்றான் உள்ளார்ந்த குரலில். மீண்டும் பொறுப்பின் இடத்தைக் குறும்பு நிரப்ப, "உன்னோட குட்டி ராணி அழறா பாரு...அவளைப் போய் கொஞ்சுற வழியைப் பாரு! என்னோட அரசியார் முறைக்கிறா...நான் அவளைப் போய் கொஞ்சு...ச்சே ச்சே கெஞ்சுறேன்!" என்றவன் கேலியின் போர்வையிலேயே தன் சந்தோஷத்தை வெளியிட்டு முடித்தான்.

"என்னக்கா? ஒண்ணுமே சொல்லாம இருக்கீங்க? தயவு பண்ணி வேண்டாம்ன்னு மறுத்துடாதீங்கக்கா?" என அன்பரசி கண்ணீரின் விளிம்பில் தள்ளாடி நிற்க, "மறுக்கக் கூடிய பரிசா நீ எனக்குக் கொடுத்திருக்கே?" என வார்த்தைகளால் தாங்கி!

அன்பரசியின் முகம் தெளிவானதை மனதில் நன்றி மண்ட கண்டிருந்தவள்,"ஆனா, நான் பத்து மாசம் உயிரும் உணர்வுமா பெற்ற குழந்தையை..." என்ற வாக்கியத்தை திலோ முடிப்பதற்குள் "நான் உடலில் சுமந்தேன் என்றால்...நீங்க மனசில சுமந்தீங்க!

ரெண்டுக்கும் பெரிய வித்தியாசமில்லை! சொல்லப்போனா, நான் இவளைப் பத்து மாசம் தான் சுமந்திருக்கேன்! உங்களைவிட எட்டு மாசம் கம்மி தான்" என்றாள் அன்பரசி, அழுத்தமாக.

அதை கேட்டிருந்த திலோவோ "இவ்வளவு அன்புக்கும் நான் என்ன புண்ணியம் பண்ணினேன்னு தான் யோசிச்சிட்டு இருக்கேன்!" என்றாள் மிக வேகமாய் உடைந்த குரலில்.

இப்படியாய் பூங்குழலி - தேவநந்தன் மற்றும் திலோத்தமையின் செல்வப் புதல்வியாக பதவியேற்க, அங்கே கூடியிருந்த சந்தோஷம் பெருகிக் கலைந்ததே ஒழிய, சிறு துளி கூட குறையவே இல்லை!

நல்லானந்த் தான் செய்து கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு, தனது சொந்த முயற்சியில் தொடங்கிய மென்பொருள் நிறுவனத்தால் அவர்களது சந்தோஷத்துடன் இணைந்து வளமும் இனிதே வளர ஆரம்பித்தது. அவர்களது சொந்த நிறுவனத்தை - சந்தோஷத்திற்கும் வளத்திற்கும் மட்டுமல்லாது தனது திறமைக்கும் ஏணியாய் பயன்படுத்திக் கொண்டாள் அன்பரசி! ஆம், நல்லானந்துடன் இணைந்து அந்த நிறுவனத்தில் மென்பொருள் வல்லுனராய் பணியாற்றி, வீட்டில் அமைத்த அதே நல்லாட்சியை வேலையிடத்திலும் நிலைநாட்டினாள் மதிமலரின் தாய்! மதிமலரும் வளர்ந்துவிடவே, அன்பரசியின் திறமையை இனியும் வீட்டிற்குள்ளே முடக்கிவைப்பது சரியில்லை என்றெண்ணிய நல்லானந்த் தான், அவள் வேலைக்கு வந்தாளே ஆச்சு எனப் பிடிவாதமாய் நின்று அவளை இட்டுச் சென்றான். அன்பரசியும் வேறொரு நிறுவனமாய் இருந்தால் சென்றிருப்பாளோ என்னவோ... அவர்களது நிறுவனம் என்ற காரணத்தாலும், வேலையிடமும் வீட்டிற்கு அருகே இருந்ததாலும் ஒத்துக் கொண்டு வேலைக்குச் சென்று வருகிறாள்.

வேலை, வீடு, கணவன், மதிமலர், சொந்தங்கள் என வாழ்வு சுகமாய் சென்று கொண்டிருக்க, "நீ சொன்ன மாதிரியே பெண் குழந்தை பிறந்திடுச்சு...என் நீண்ட நாள்

ஆசையான பையன் சார் தான் வரவே இல்லை" என சோக கீதத்தைத் தவறாமல் வாசித்த நல்லாவின் வாயை அடைக்கும் பொருட்டு, அன்பரசி மீண்டும் கருவுற்றாள்.

நல்லானந்தின் ஆசையை வீணடிக்காது, அவனை நிறத்திலும், முகவடிவிலும், ஏன் குணத்திலும் அச்சுவார்த்தது போல் பிறந்தான் - ஆதித்தன் என்ற ஆதி!

எல்லோரையும் பார்த்தாகிவிட்டது - மதிமலரைப் பற்றி ஒன்றுமில்லையா என்று எண்ண வேண்டாம்! கடந்தகாலத்தில் அல்லாது நிகழ்காலத்திலேயே அவளைப் பற்றி பார்க்கலாம்!

"அம்பாபாபாபாபாபாபாபாபாபா" என ஓங்கி ஒலிக்கிறதே ஒரு குரல் - அந்தக் குரல் உங்களுக்கு மிக பரிச்சியமான குரல்! ஆம், மதிமலரின் குரலே தான்! ஆனால், அது உங்கள் அருகே அல்ல. மாடியில் அவளது அறையில் அவள் அலறும் அலறல் - ஹாலில் இருக்கும் உங்களுக்குத் துல்லியமாய் கேட்கிறது. அவள் உங்களைக் காண இங்கே வருவதற்கு சிறிது அல்ல நிறையவே தாமதமாகலாம் என்பதால், நான் உங்களை அங்கே அழைத்துச் செல்கிறேன்! (இன்னும் என்ன "அம்பா" என்கிறீர்களா? மதிமலருக்குப் பத்து வயதானதும் (ஓரளவு விவரம் புரியும் என்ற எண்ணத்தில்) "அம்மா" என்றழைக்கும் படி அனைவருமே பரிந்துரைத்தப் போது "அம்மா + அப்பா ரெண்டு பேருமே கொடுக்கிற செல்லத்தை என் அம்பா தருவாளே! சோ ஷி இஸ் ஆல்வேஸ் மை அம்பா! நாட் ஜஸ்ட் மைன், ஆல் யூர்ஸ்!" என மறுத்த மதிமலரின் கண்டுப்பிடிப்பிற்கு பின்னர் யாருமே அவளைத் தொந்தரவு செய்யவில்லை)

"என்ன மதிம்மா வேணும்? குழலி, ஆதி எல்லாரும் ரெடியாகி வெளியே வந்தாச்சு! நீ என்னடான்னா இன்னும் என்னைப் படுத்திட்டு இருக்கே!"

"கண்ணில போட்ட இந்த மையை துடைச்சு விடுங்க அம்பா! பெயிண்ட் அடிச்ச மாதிரி இருக்கு! அகில் அண்ணா பார்த்தா "காளி, சூலி, நீலி, பத்த்த்த்ர காளி"-ன்னு கேலி பண்ணுவான்!" என்றாள் மகள், காரண காரிய விளக்கங்களுடன்.

"ஹ்ம்ம்... நிஜமா துடைக்கணுமாடா? உன் பெரிய கண்ணை இந்தக் கண்மை அழகா எடுத்துக் காட்டுதுடா! இன்னைக்கு மட்டும் போட்டுக்கோ செல்லம்...அம்பாக்காக! ப்ளீஸ்டா" எனத் தாய் கெஞ்ச,

"ம்ம்...ம்ஹூம்... சரி" என இழுத்த மகளிடம் "சரி வா, துடைச்சுவிடுறேன்!" என அன்பரசி குரலில் சோர்வை போலியாக கொண்டுவந்து நாடகமிட, "சரி சரி! போட்டுக்கிறேன். அதான் போட்டுக்கிறேன்னு சொல்லிட்டேனே...சிரியேன் அம்பா! என் செல்ல அம்பா" எனக் கன்னத்தில் முத்தம் வைத்து, சம்மதம் தெரிவித்தாள் அன்பரசியின் தாயுமானவள்.

ஆறாம் வகுப்பில் இருக்கும் செல்வ மகளின் அறிவு, புத்திக்கூர்மை, படம் வரையும் திறமை, பாட்டு என எல்லாவற்றையும் போற்றி வளர்த்த தாயார், அவளது அழகையும் ஆதரித்து, அழகிற்கு அழகு சேர்க்கும் வண்ணம் விதவிதமாய் அலங்காரமும் செய்து மனம் பூரித்தாள்.

அவளது அகண்ட விழிகளில் இன்னமும் மின்னும் குழந்தைத்தனமும், கன்னக்கதுப்பில் தேங்கி நிற்கும் குறும்புத்தனமும், தந்தையுடன் சேர்ந்து கொண்டு பாட்டியை கேலி செய்யும் விளையாட்டுத்தனமும், தம்பி-தங்கையிடம் அவள் காட்டும் சண்டைகள் சூழ்ந்த பாசமும், படிப்பில் காட்டும் ஆர்வமும், பாட்டு - படம் வரைதல் இவற்றை சமாளிக்கும் விதமும் என எல்லாமுமாய் தன் பெயரிலிருக்கும் மலருக்கு மட்டுமல்லாது மதிக்கும் பொருத்தமாய் பொருந்திய மதிமலரின் அழகில் பூரித்துப் போய் நின்று கொண்டிருந்த அன்பரசி, மகளின் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

"இப்ப மட்டும் லேட் ஆகலையா? விடு அம்பா! நான் கீழ போறேன்!" என்ற கண்டிப்போடு, தாயின் முத்தத்திலிருந்து வளைந்து நெளிந்து விடுப்பட்ட மதிமலர், மானின் துள்ளலோடு வெளியே ஓட, அவளது தந்தையும் அதே துள்ளலோடு உள்ளே நுழைந்தான்.

அவன் வந்ததை கவனிக்கத அன்பரசியோ மக்கள் நால்வரும் வாரி இரைத்திருந்த பொருட்களை, ஓரளவிற்கு பார்க்கும் படியேனும் எடுத்து வைக்க எண்ணி, நாற்காலியின் காலடியில் தன் தலையைக் கொடுத்திருந்த ட்வீட்டி பொம்மையை எடுக்கக் குனிய, அவளை பின்னாலிருந்து அணைத்த கணவன், அவளைத் தன் ஆளுமைக்குள் நிமிடத்தில் கொண்டுவந்தான்.

"விடுங்க நல்லாப்பா! கீழ விருந்தாளிகள் வர ஆரம்பிச்சுட்டாங்க. நீங்க என்னடான்னா இங்க நின்னு ரொமான்ஸ் பண்ணிட்டு இருக்கீங்க. தள்ளுங்க... தள்ளுங்கன்னு சொல்றேன்!"

"நீ குளிச்சிட்டு வெளிய வந்ததிலிருந்தே கையும் வாயும் துறுதுறுன்னு இருந்துச்சு! அப்போ நம்ம குட்டி மாஸ்டர் என்னையே குறுகுறுன்னு பார்த்துட்டே இருந்தானா... அதான் ஒன்னும் பண்ணமுடியல"

கணவனின் வருத்தமான பாவனையில் சிரிப்பு வந்தாலும், "யாரு இருந்தா உங்களுக்கு என்ன? உங்களுக்கு வேணும்னா அப்பவே செஞ்சிருக்கணும். இப்போ யாருமில்லாதப்போ வந்து காரியம் சாதிக்கப் பார்க்கிறீங்களா? இது கள்ளாட்டம்! நான் ஒத்துக்கமாட்டேன்! வேவேவே" என அவனுக்கு அழகு காண்பித்தவள், கணவனின் பிடியிலிருந்து நழுவி கீழே விரைந்தாள் - பின் வரும் விளைவுகளைப் பற்றிய யோசனையே இல்லாமல்!!

படியிறங்கிக் கொண்டிருந்த அன்பரசியின் கண்களில் - நித்யா தன் குடும்பத்தோடு உள்ளே நுழைந்து கொண்டிருப்பது பட, விரைந்தோடி அவர்களை அடைந்தவள், அவளையும் அவளுடன் வந்திருந்த சத்யசேகரன், அவனது பாட்டனார், அவர்களது பெண் நதியா என அனைவரையும் மனதார வரவேற்றாள்.

சத்யசேகரனின் பாட்டனார் - அன்பரசி வீட்டு விழாவிற்கா? என உங்கள் எண்ணத்திற்குப் பதில் இதோ - மதிமலரின் ரிஷிமூலம் பற்றிய நல்லானந்தின் கலக்கம் சற்றே அடங்கியிருந்ததே ஒழிய முற்றிலும் குறையவில்லை என்பதை மகள் உறங்கியதும் அவளது முகத்தை வெறித்துக் கொண்டே நல்லானந்த் அமர்ந்திருந்ததிலும், மன அழுத்தம் தாள முடியாமல் அன்பரசியிடம் மனம் விட்டுப் புலம்பியதிலும் அறிந்துகொண்ட அன்பரசி, தைரியமாய் ஒரு முடிவெடுத்து, மதிமலரைத் தூக்கிக் கொண்டு நாகப்பட்டினம் கிளம்பினாள்.

நேராக சத்யசேகரன் வீட்டிற்குச் சென்றவள், பெரியவரின் முகத்தை நேருக்கு நேராக பார்த்து - மதிமலர் நல்லானந்தின் வாழ்விற்குள் எப்படி வந்தாள்? அது தன் கணவனின் வாழ்வை எப்படி நல்வழி படுத்தியது? தன் தாய்க்கும் மதிமலருக்கும் உள்ள உருவ ஒற்றுமை, இறந்து போன தன் தாயே தனக்கு மகளாக வந்திருக்கும் விந்தை, அவள் மேல் தான் கொண்ட பாசம், அவளிடம் தான் நெருங்கத் துடித்த தருணங்கள் என அனைத்தையும் ஒரே மூச்சில் சொல்லி முடித்தாள்.

அதன் பின்னர் அவள் விட்ட சிறு இடைவெளியை பயன்படுத்திக் கொண்ட பெரியவர், "இந்தோனேசியாவில் நடந்த சுனாமியில் என் பெரிய மகன் குடும்பம் இறந்துவிட்டதால், உன் பெண் அவர்களது வாரிசாய் இருக்கலாமோ என்ற எண்ணத்தில் அவளை உங்களிடமிருந்து பிரித்து விடுவேனோன்னு பயந்துட்டியா அன்பரசி?" என்றார் நிதானமாக.

தான் கேட்க வந்ததை அவரே சொன்னதில் லேசாய் குழம்பிய அன்பரசி, தலையை மட்டும் அசைக்கவும் "மகனும், பேரப் பிள்ளைகளுமே வேண்டாம் என்று இவ்வளவு காலம் வீம்பாய் இருந்துவிட்டு, கொள்ளுப் பேத்தி என்று உன் பெண்ணை நான் உறவு கொண்டாடினால் ஊரே என்னைக் காரித் துப்பாது? அப்படியே நான் நினைத்தாலும் அவள் என் கொள்ளுப் பேத்தி தான்னு என்ன நிச்சயம்? அப்படியே நிச்சயமா இருந்தாலும் அவள் என்னிடம் ஒட்டுவாளா? உன் கல்யாணம் நடந்து முடிந்ததுமே சத்யன் என்கிட்டே எல்லா விஷயமும் சொல்லிட்டான்... உன் புருஷன் உன் மேலும் அவள் மேலும் வைத்திருக்கும் பாசம் உட்பட" என அவர் முடிக்க,

"தாத்தா, நீங்க?" என்ற அன்பரசியின் முகத்தில் அதிர்ச்சியும் கேள்வியும் சம அளவில் குவிந்திருந்தன

"ஆமாம்மா! வயசு போன காலத்தில தான் புத்தி வருது! முழுசா இருந்த பையனை என் வறட்டு கௌரவத்தால தூர நிறுத்தி வைச்ச மாதிரியோ, என் மருமகளின் தங்கை மகள் என்ற ஒரே காரணத்திற்காக உன் மேல் வெறுப்பை உமிழ்ந்த மாதிரியோ இனிமேல் நடக்காது! சுடுகாடு தேடும் வயசிலாவது என்னால மித்தவங்க வருத்தப்படாம இருக்கட்டும்! மதிமலர்...அதான் உன் பெண்ணை உன்னிடமிருந்து நான் பிரிக்க மாட்டேன். இந்த ஐயனைப் பார்த்துப் பயப்படாம போ மக்கா! சந்தோஷமா இரு!" என்றவரிடம் கை கூப்பி நன்றி கூறியவள், அவர் கூறியதை அச்சுப் பிசகாமல் கணவனிடம் பகிர்ந்து அவனது துன்பம் போக்கினாள்.

அதன் பின்னர், தோழிகள் இருவரும் எந்தத் தடையுமில்லாமல் ஒட்டி உறவாட, அந்த உறவிலும் அமைதியும் சந்தோஷமுமே நிறைந்திருந்தது. இந்தப் பதில் உங்களுக்குத் திருப்தியை அளித்திருக்கும் என்ற நம்பிக்கையில், மீண்டும் நடப்பிற்கு வருவோம்!

விழா தினத்தன்று காலை வந்திறங்கிய நித்யாவிடம், "நேத்திக்கே வந்திருக்கலாம் இல்ல! வெளியாள் மாதிரி காலையில வரீங்களே!" எனக் குறைப்பட்டாள் அன்பரசி. "தாத்தாக்கு கொஞ்சம் மூச்சிரைப்பா இருந்தது... அதான் நேத்தே வரமுடியலை. அதான் இப்போ வந்துட்டேனே! விடு மக்கா...நான் போய் அத்தை - மாமாவைப் பார்த்திட்டு வரேன்" என அங்கிருந்து நகர்ந்து, அன்பரசியின் மாமனார் மாமியாரிடம் சென்றாள் நித்யமேகலை.

"உடம்பு முடியாதப்ப இவ்வளவு தூரம் பயணம் செஞ்சு வந்திருக்கீங்களே! ரொம்ப தேங்க்ஸ் தாத்தா. நீங்க இங்கேயே உட்காருங்க. நான் டிபன்...காபி எல்லாம் இங்கேயே கொண்டு வரச் சொல்றேன்" என அன்பரசி பரபரக்க, அவளிடம் வாஞ்சையாய் புன்னகைத்த பெரியவர் "சரி" எனத் தலையசைத்து விடை கொடுத்தார்.

தன் பின்னே வந்து நின்ற மதிமலரிடம் "மதி குட்டி, தாத்தாவை வாங்கன்னு கேளு!" எனப் பிள்ளைக்கு மரியாதை சொல்லிக் கொடுத்த கையோடு "நதியாவை சாப்பிட கூட்டிட்டுப் போடா! அவளையும் உங்ககூடவே வச்சுக்கோ" எனத் தோழியின் மகளை மகளுக்குத் தோழியாக்கினாள்

தாய் கூறுவதற்கு முன்னரே "ஹே நதி? இந்த டிரஸ் உனக்கு சூப்பர்ரா இருக்கு... வா வா... அகில் அண்ணா, குழலி, ஆதி எல்லாரும் டைனிங் ஹால்ல இருக்காங்க. நாமளும் போய் சாப்பிடலாம்" எனக் கைப்பிடித்து சிறகில்லாமல் பறக்க எத்தனித்தாள், மதிமலர்! பறக்கத் துடித்த சிட்டின் தலை முடியைப் பின்னாலிருந்து இழுத்து நிறுத்திய கைகள் - அன்பரசியின் நண்பன் ரகுவின் கைகள்.

அவன் இழுத்தது மதிமலருக்கு வலிக்க ஆரம்பிக்கும் முன்னர், பிள்ளையின் வலியை தானே ஊகித்து "அச்சோ பிள்ளைக்கு வலிக்கும்...விடு ரகு...ப்ளீஸ்...ப்ளீஸ்" எனக் கெஞ்சியது அன்பரசியே தான்.

தாயின் கெஞ்சலின் ஊடே "ஆ" என அலறிய மதிமலரோ, பிடித்தது ரகு எனத் தெரிந்ததும் "எப்போ பார்த்தாலும் என் முடியயே ஏன் இழுக்கிறீங்க? சுஜா ஆன்ட்டி முடியை இழுக்கிறது தானே? ஒ..ஒ.. அவங்க முடியை இழுத்தா உங்க முதுகில டின் கட்டிடுவாங்கன்னு பயமா? இல்லை ஏற்கனவே கட்டிட்டாங்களா? அச்சோ பாவம் அன்பா...ரகு அங்கிள்! பரவாயில்லை...இன்னொரு தடவை வேணும்னா

இழுத்துக்கோங்க... நான் அட்ஜீஸ் பண்ணிக்கிறேன்... இந்த காமெடி அங்கிள்க்காக இதைக் கூட செய்ய மாட்டாளா இந்த மலர்!" என்றாள் இளையவள் கண்கள் இரண்டையும் அதிவேகமாய் உருட்டி.

ரகுவின் அருகில் நின்றிருந்த அவனது மனைவி சுஜாதாவோ, வாயில் கை வைத்து சிரிப்பை அடக்க, "இதுவா பிள்ளை? சரியான ரங்கா! என்னை வச்சு காமெடி பண்ணிக்கிட்டு இருக்கு...நீங்களும் சிரிக்கிறீங்க!" என்றான் ரகுவும், சிரிப்புடன்!

மனதார சிரித்துவிட்டு அன்பரசி மகளை அவளது தோழியுடன் உள்ளே அனுப்பிவைக்க, நண்பனையும் அவனது மனைவியையும் உள்ளே அழைத்துச் சென்று அமரவைத்தாள். "கிருத்திகாக்குப் பத்திரிக்கை வச்சிருந்தேன். வரேன்னு தான் சொன்னா...அருணை வேற காணோம்...உனக்கு ஏதும் போன் பண்ணாங்களா?" எனத் தனது மற்ற நண்பர்களைப் பற்றி அன்பரசி வினவ, "அவளும் அருணும் ஒன்னா தான் வராங்க! ஃபன்க்ஷன் முடிஞ்சதும் ஆபீஸ் போக வசதியா இருக்கும் இல்லையா?" என்ற ரகுவும் நல்லானந்தின் நிறுவனத்திலேயே பணிபுரிகிறான். (அருணும் கிருதிக்காவும் முந்தைய நிறுவனத்திலேயே தங்களது பணியை தொடர்கின்றனர்)

தன் நலன் விரும்பிகள் அனைவரது வருகையும் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்க, குவிந்திருந்த மற்ற வேலைகளைக் கவனிக்கச் சென்றாள். குழந்தைகள் அனைவருக்கும் உணவு கொடுத்துவிட்டு, திலோத்தமையும் அவளுடன் இணைந்து கொள்ள, தங்கள் வீட்டின் இரு மகாலட்சுமிகளும் சண்டைகள் இன்றி, அதற்கான சமாதானங்கள் இன்றி, புரிதலும் பாசமுமாய் வேலை செய்வதைக் காணக் காண பெத்தபெருமாள்-வளர்மதி தம்பதியருக்கு நெஞ்சம் விம்மியது. அறுபதாம் கல்யாணம் காணும் அந்தத் திருநாளில் இதை விட அழகான பரிசு வேறென்ன இருக்க முடியும்?

சுற்றமும் நட்பும் நிறைந்த மனதுடன் வாழ்த்த, தன் இருபதாவது வயதில் கைப்பிடித்த வளர்மதியை மீண்டும் தன் அறுபதாவது வயதில் கைப்பிடித்து, அவரோடான இந்த வாழ்விற்கு நன்றி கூறினார் பெத்தபெருமாள்.

சாந்திக் கல்யாண சடங்குகள் முடிந்ததும், "உங்க பசங்க குடும்பத்தைக் கூப்பிடுங்க. கும்பம் செரியணும்!" என்றழைத்தார் ஐயர்.

பூங்குழலியைத் தோளில் ஏந்தியவாறே தேவநந்தன் முன்னே வர, அவனைப் பின் தொடர்ந்த திலோத்தமையின் கைகளைப் பிடித்திருந்தான் அகிலன். தேவநந்தனுக்கும் அவனது குழந்தைகளுக்கும் மாலையிட்ட ஐயர், மற்றொரு மாலையை தேவனின் கைகளில் கொடுத்து "தர்மபத்தினி கழுத்தில் போடுங்கோ" என்றார். பிள்ளையை இறக்கிவிட்டு மாலையை மனைவியின் போட்ட நந்தன், மீண்டும் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு, தாய்-தந்தையை சுற்றி வந்து, கும்பத்திலிருந்த தண்ணீரை பெற்றோருக்கு அபிஷேகம் செய்தான்.

அவர்கள் அபிஷேகம் செய்து முடிக்கும்வரை பேசாமலிருந்த நல்லானந்தும், மதிமலரும் "ஹே...குழலி...குண்டு குழலி" (ஹே குருவி...சிட்டுக் குருவி மேட்டில்) எனப் பாடவே, "அம்மா" என அழ ஆரம்பித்தது திலோவின் குழந்தை.

"அப்பாக்கும் பொண்ணுக்கும் உதை கேட்குதா? இன்னொரு தடவை இந்தப் பாட்டைப் பாடினீங்க...அப்புறம் இருக்கு" எனத் திலோ, ஒரு விரல் நீட்டி மிரட்ட,

"என்ன இருக்கு? லட்டா? பூந்தியா? ஜிலேபியா?"

"ஹ்ம்ம்... வரட்டி!" எனக் கிண்டல் செய்தவர்களை அடக்கிய திலோத்தமை பெண்ணிடம் திரும்பும் முன்னர் "பூக்குட்டி...அழக் கூடாதுடா! பாட்டி அவங்க ரெண்டு பேரையும் அடிச்சிடுறேன்" என்றார் வளர்மதி.

அவரது சமாதானத்தில் பூங்குழலி நல்லாப்பாவுக்கும், தமக்கைக்கும் அழகு காண்பிக்க, "தோ பாருடா...வளராத வளர் வளர்ந்த நம்மளை அடிக்கப் போறாங்களாம்.." எனக் கன்னத்தில் கைவைத்து வியந்தது நல்லானந்தே தான்!

"டேய்! என் பொண்டாட்டியை யாருடா இங்க கேலி பண்றது? வா திலோம்மா...நீயும் நானும் சேர்ந்தே அவங்களை அடிக்கலாம்" என அங்கே நிலவியிருந்த கலகலப்பைப் பெரிதாக்கினார் பெத்தபெருமாள்.

பெரிய மகனின் குடும்பம் அவர்களது கடமையை செய்து முடித்ததும், இளைய மகனின் பக்கம் திரும்பிய பெரியவர்கள் "ஆதி எங்க அன்பு?" என்றனர் அன்பரசியிடம்.

"இங்க தானே இருந்தான்" என அன்பரசி சுற்றும் முற்றும் தேட, "இங்க இருக்கான்" என்ற நல்லானந்த், தன் கால்களுக்கு நடுவே, பட்டு வேஷ்டிக்குள் ஒளிந்திருந்த மகனை வாரி எடுத்துக் கொண்டு முன்னே வந்தான்.

"சரியான வாலு" என மெச்சிக்கொண்ட அவனது தமக்கை முன்னே வர, அவனது கழுத்தில் மாலையிட்ட ஐயர், அன்பரசியின் கழுத்தில் போடச் சொல்லி மற்றொரு மாலையை அவனிடம் கொடுத்தார். தேவநந்தனைப் போல் திலோத்தமையின் கழுத்தில் மாலையை மட்டும் போட்டிருந்தால் அவன் நல்லானந்த் அல்லவே! மாலையைப் போட்டக் கையோடு, அன்பரசியின் கன்னத்தில் பச்சென முத்தமிட்டவன் "மன்னிச்சுக்கோங்க சாமி!" என ஐயரிடம் தவறாமல் மன்னிப்பும் கேட்டான்.

அவனது அச்செயலில் அனைவரும் ஓஹோவென சிரிக்க, அன்பரசிக்குத் தான் வெட்கமாய் போனது.

தன் முன்னே நின்றிருந்த பெண்ணின் உடையே சீர் செய்து கொண்டிருந்த அன்பரசி, தன் மேல் விழுந்த முத்தத்தில் அதிர்ந்து, கணவனின் சீண்டலில் சிவந்து, அனைவர் முன்னிலையிலும் அவன் செய்ததில் நெளிந்து ஒருவாறாக சமாளித்து "கொஞ்ச கூட வெட்கமே இல்லை, நல்லாப்பா உங்களுக்கு!" எனக் கடிந்து கொண்டாள்.

கணவனோ கூச்சமே இல்லாமல், "நீ தானே எல்லார் முன்னாடியும் பண்ணாத்தான் நான் வீரன்..இல்லைன்னா நான் சூரனில்லைன்னு சொன்னே! அதனால தான்! எப்படி நம்ம வீரம்?" எனக் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள, "சூப்பர்" என்றாள் அவர்களது பெண்ணரசி!

அதன் பின்னர் வந்திருந்த அனைவரும் தங்களது பரிசைக் கொடுத்துவிட்டு, பெரியவர்களின் ஆசியை வாங்கிச் செல்ல, மதிமலர் தனது பரிசாய், அவர்களது குடும்பத்தைப் படமாய் வரைந்து தாத்தாவையும் பாட்டியையும் மட்டுமல்லாது அனைவரையும் தன் ஓவியத் திறமையில் பெருமை கொள்ள வைத்தாள்!

அவளது ஓவியத் திறமையை இந்தப் படம் வெளியிட, அவளது பாடல் ஞானத்தை அன்று மாலை நடைபெற்ற சிறு கச்சேரி வெளிக்கொணர்ந்தது. பெண்ணின் திறமையில் அகமகிழ்ந்திருந்த தாய்மார் இருவரையும் ஆனந்த கண்ணீரில் கரைய வைக்கும் வண்ணம்,

மதிமலர் பாடப்பாட அங்கே பெரும் சந்தோசம் நிறைந்த அமைதி நிலவவே, அந்த நிலையை ரசித்தவாறே நாமும் வெளியே வரலாம்!

என்ன தவம் செய்தனை யசோதா
எங்கும் நிறை பர பரும்ம் அம்மா என்றழைக்க
என்ன தவம் செய்தனை!

சனகாதியர் தவ யோகம் செய்து வருத்தி
சாதித்ததை புனிதமதை எளிதில் பெற
என்ன தவம் செய்தனை!

இரேழு புவனங்கள் படைத்தவனை
கையில் ஏந்தி சிராட்டி பாலூட்டி தாலாட்ட
என்ன தவம் செய்தனை!



Preview